வெளியீடு 24-2-1993 Issued 2 .-2-1993

813/93

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 25, 1992 - தொகுதி 30 எண். 2
Friday, the 25th September 1992 - Volume 30 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

[Price Rs. 3-00.

## உள்ளடக்கம்.

25—9—1992.


பக்கம்

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 137–658

2. அறிவிப்புகள்—

(அ) கைது செய்யப்பட்ட உறுப்பினர் விடுதலையானது குறித்து .. .. .. 659

(ஆ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆ.செ.) .. .. 861

3. விதி 110-ன்கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்—

(அ) பெட்ரோலியப் பொருள்கள் மற்றும் இரசாயன உரவிலை உயர்வை மத்தியஅரசு மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் குறித்து முதலமைச்சரின் அறிக்கை .. .. .. 659–662

(ஆ) வடசென்னை அனல் மின்நிலையத்திற்குக் கருவிகள் வாங்க ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்ட நடைமுறை குறித்து பொதுப் பணித்துறை அமைச்சரின் அறிக்கை. .. 811–812

4. கவன ஈர்ப்பு—

(அ) அம்பாசமுத்திரம் பகுதியிலுள்ள இனாம் கோடாரங்குளம் கிராம சாகுபடியாளர்கள் நிலைகுறித்து. .. .. .. 662–665

(ஆ) நாகைகாயிதே மில்லத் மாவட்டத்தில் காலரா நோய் பரவியுள்ளது குறித்து. .. 665–671

(இ) கோவை மாவட்டத்தில் பஞ்சாலைத் தொழிலாளர்கள் போனஸ் கேட்டு போராட்டம் நடத்துவது குறித்து .. .. .. 671–675

(ஈ) லால்குடி வட்டம், குமுளூரில் உள்ள வேளாண்மைக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றுவது குறித்து .. .. .. 675–678

5. அறிக்கை அளித்தல்—

மனுக்கள் குழு .. .. .. .. 678


டி2 53–287—1

164978
600



பக்கங்கள்

6. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1992. .. .. .. .. 678–754

(ஆ) நிதி ஒதுக்க (எண். 5) சட்டமுன்வடிவு, 1992 755–756

(இ) எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992 .. .. 756–776

(ஈ) அடகு பிடிப்போர் (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 .. .. .. .. 776–781

(உ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 .. .. .. .. 781–785

(ஊ) கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலிப்பதைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 1992 .. .. .. .. 785–822

(எ) நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992 .. .. 822–859

(ஏ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1992 859–861

(ஐ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 .. .. .. .. 861–873

(ஒ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1992 873–894

(ஓ) வேளாண்மைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992 .. 894–899

(ஔ) வேளாண் பல்கலைக் கழக (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992 .. .. 900–901

7. பஹாமாசில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பார்லிமெண்டரி மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லும் பேரவைத் தலைவருக்கு பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் .. .. 901–905

8. அரசினர் தீர்மானம்—

மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் பேரவையை ஒத்திவைத்தல். .. .. 905–906

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 906–910

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 10, ஆங்கிரச, திருவள்ளுவர் ஆண்டு- 2023

1992 செப்டம்பர் 25, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்.''

ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி பல துன்பங்கள் வந்தபோதிலும், அவற்றைக் கண்டு மனம் கலங்காதவரை அடைந்த துன்பம் தானே துன்பப்பட்டு மறைந்தொழியும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

#### கரூரில் வணிகவரி அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 5275—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம், கரூரில் வணிகவரி அலுவலகக்கட்டிடம் கட்ட அரசு முறைப்படி அனுமதி அளித்தும் பத்து ஆண்டுக் காலமாக கட்டிடம் கட்டப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

திருச்சி மாவட்டம், கரூரில் இயங்கி வரும் வணிகவரி அலுவலகங்களுக்கு கட்டிடம் கட்டும் பணி, 1991-ல் தொடங்கப்பட்டு, முடியும் தருவாயில் உள்ளது.

[1992 செப்டம்பர் 25

2—

## தனியார் சர்க்கரை ஆலை

வினா எண். 8629—திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) லால்குடி வட்டம், காட்டூர் தனியார் சர்க்கரை ஆலை, அரசு புறம்போக்கு நிலம் சுமார் மூன்று ஏக்கரை ஆக்கிரமித்து இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த புறம்போக்கு நிலத்தை கையகப்படுத்தி வீடில்லாத ஆதிதிராவிட அருந்ததியர் மக்களுக்கு வீட்டு மனை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்பிலுள்ள அரசு புறம்போக்கு நிலத்திற்குப் பதிலாக, பரிவர்த்தனை முறையில், அந் நிறுவனம் தர இருக்கும் பட்டா நிலத்தில், 1.54 ஏக்கர் நிலம் மட்டும் வீட்டுமனை பட்டா வழங்க தகுதியாக உள்ளது. இந் நிலத்தை நத்தம் புறம்போக்காக மாற்றி, வீடில்லாத ஆதிதிராவிட அருந்ததியர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3—

## சாலியர் ஆறுமுகா துவக்கப்பள்ளிக்கு அங்கீகாரம்

வினா எண். 3776—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராஜபாளையம் நகரில், ஆவரம்பட்டியில் தொடங்கப்பட்டுள்ள சாலியர் ஆறுமுகா துவக்கப் பள்ளிக்கு அரசு அங்கீகாரம் அளிக்குமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

காமராசர் மாவட்டம், இராஜபாளையம் சாலியர் ஆறுமுகா தொடக்கப் பள்ளி நிர்வாகத்தின் மனு, ஆய்வுசெய்யப்பட்டு, 1991-92 முதல், நிதியுதவியின்றி அங்கீகாரம் வழங்க தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.



1992 செப்டம்பர் 25]

4—

## நூலகங்களுக்கு சொந்தக் கட்டிடம்.

வினா எண் 6074—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் அனைத்து நூலகங்களுக்கும் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனைக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

(இ) எங்கெங்கு இதுவரை நூலகத்திற்கென சொந்தக் கட்டிடம் கட்டும் பணி செயல்படுத்தப்பட்டு முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன ?

(ஈ) இவற்றிற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் , கல்வி அமைச்சர்:

(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) : விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டுள்ளது.

## விவர அறிக்கை.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஒவ்வொரு நூலகத்தையும் சொந்தக் கட்டிடத்தில் செயல்படச் செய்தல் என்ற நூலகத் துறையின் குறிக்கோளின் அடிப்படையில் திண்டுக்கல் - அண்ணா மாவட்டத்திலும், பொது மக்கள், ஊராட்சி நிறுவனம் வருவாய்த் துறையிடமிருந்து இலவசமாகக் காலிமனைகள் பெறப்பட்டு, சொந்தக் நூலகங்களுக்கு நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

திண்டுக்கல்-அண்ணா மாவட்ட நூலகக் கட்டடங்களின் விவரம்.

| | |
|---|---|
| சொந்தக் கட்டடங்கள் .. .. | 5 |
| வாடகைக் கட்டடங்கள் .. .. | 34 |
| வாடகை அற்ற இலவசக் கட்டடங்கள் (RENT FREE BUILDING) . | 12 |
| மொத்தம் | 51 |

வாடகைக் கட்டிடம் 34 மற்றும் வாடகை அற்ற இலவச கட்டடங்களில் செயல்படும் 12 (மொத்தம் 46) நூலகங்களில், 31 நூலகங்களுக்கு புதிய நூலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆக திண்டுக்கல்-அண்ணா நூலக ஆணைக் குழுவில் மொத்தமுள்ள 51 நூலகங்களில் (5+31)=36 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களில் செயல்படுவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 நூலகங்களுக்கும் இலவசமாக காலிமனைகள் பெறப்பட்டு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறதெனத் தெரிவிக்கப்படுகிறது.

திண்டுக்கல்-அண்ணா நூலக ஆணைக்குழுவில் மொத்தமுள்ள நூலகங்களின் எண்ணிக்கை 51. இவற்றில் தற்போது 5 சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

5 சொந்தக் கட்டடங்களின் விவரம் :

1. கணக்கன்பட்டி.
2. கன்னிவாடி.
3. இடையக்கோட்டை.
4. சின்னாளப்பட்டி.
5. வத்தலக்குண்டு.

நூலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளவை:

1. அய்யம்பாளையம்.
2. பட்டிவீரன்பட்டி.
3. பள்ளப்பட்டி.
4. எழுவனம்பட்டி.
5. என். பஞ்சப்பட்டி.
6. சிறுவாயக்கன்பட்டி.
7. செந்துரை.
8. சித்தரேவு.
9. வடமதுரை.



10. கணக்கன்பட்டி.
11. வி. சத்திரப்பட்டி.
12. அமரப்பட்டி.
13. மஞ்சநாயக்கன்பட்டி.
14. காவலப்பட்டி.
15. பெரியகலையம்புதூர்.
16. பாலசமுத்திரம்.
17. மார்க்கம்பட்டி.
18. வேடசந்தூர்.
19. சிறுகுடி.
20. ஆத்தூர்.
21. சித்தையன்கோட்டை.
22. தாண்டிக்குடி.
23. அம்மையநாயக்கனூர்.
24. கிறுக்குவார்பட்டி.
25. எரியோடு.
26. பாப்பம்பட்டி.
27. புது ஆயக்குடி.
28. நத்தம்—கோவில்பட்டி.
29. பழைய வத்தலக்குண்டு.
30. ஒட்டன்சத்திரம்.
31. பண்ணைக்காடு.

தற்போதுள்ள ஐந்து சொந்த நூலகங்களுக்கு செலவிடப்பட்ட தொகை ரூ. 13.69 லட்சம். புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட கட்டடங்களுக்கு செலவிடப்பட்ட தொகை ரூ. 37.70 இலட்சம்.

[1992 செப்டம்பர் 25

ஆக மொத்தம் திண்டுக்கல்-அண்ணா நூலக ஆணைக்குழுவிற்கு நூலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு 51.39 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

5—

பேராவூரணி ஒன்றியத்தில் ஓராசிரியர் பள்ளிகள் தொடங்குதல்.

வினா எண் 7229—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருப்பூரணிக் காட்டில் ஓராசிரியர் பள்ளி ஒன்று தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

6—

பேராவூரணி ஒன்றியத்தில் ஓராசிரியர் பள்ளிகள் தொடங்குதல்.

வினா எண் 7367—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பாலத்தளி ஊராட்சி எழுத்தனிவயலுக்கு ஓராசிரியர் பள்ளி ஒன்று தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

7—

அய்யம்பட்டி கிராமத்தில் ஆரம்பப்பள்ளி.

வினா எண் 7961—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டைத் தொகுதி, முள்ளூர் பஞ்சாயத்து, அய்யம்பட்டி கிராமத்தில் புதிதாக ஆரம்பப்பள்ளி உருவாக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?



1992 செப்டம்பர் 25]

(ஆ) ஆம் எனில் எப்போது பள்ளி துவக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

8—

பரமக்குடியில் நகர்ப்புற தொழுநோய் சிகிச்சைப் பிரிவு.

வினா எண் 1708—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் நகர்ப் புற தொழுநோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9—

இரத்த சேமிப்பு வங்கிகள்.

வினா எண் 2251—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்ட மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வசதிகள் இல்லாதிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

[1992 செப்டம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்ட தலைமை மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு வங்கி இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

10—

## இரத்த சேமிப்பு வங்கிகள்.

வினா எண் 8190—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குடி அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

11—

## இரத்த சேமிப்பு வங்கிகள்.

வினா எண் 9653—திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாலூகா அரசு மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு வங்கி அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) அப்படி இல்லாத மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு வங்கி அமைக்க அரசு முன் வருமா ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

(அ) தற்போது 137 தாலுகா மருத்துவமனைகள் மருத்துவப்பணி மற்றும் ஊரகநல இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. அவைகளில் 44 தாலூகா மருத்துவ மனைகளில் இரத்த சேமிப்பு வங்கி அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) தேவைக்கேற்பவும், நிதி நிலைமைக்கேற்பவும் மற்ற மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு வங்கி அமைக்க ஆவன செய்யப்படும்.

12—

## ஆரணியில் வட்டாரப் போக்குவரத்துப்பிரிவு.

வினா எண் 5834—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆரணி நகரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலக பிரிவு ஒன்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 10—10—91 நாளிட்ட உள்துறை அரசாணை (நிலை) எண் 1510-ன்படி, 17—2—1992 முதல் மோட்டார் வாகன பகுதி அலுவலகம் ஆரணியில் இயங்கி வருகிறது. எனவே, இங்கு வட்டார போக்குவரத்து அலுவலகம் திறப்பதற்கு தற்போது வாய்ப்பில்லை.

13—

## தாமரைக்கரை முதல் தேவர் மலை வரை ரோடு சீரமைத்தல்.

வினா எண் 6939—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், தாமரைக்கரை முதல் தேவர் மலை வரை உள்ள ரோட்டினை தார்ச் சாலையாக மாற்ற 1991-92-ல் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1992 செப்டம்பர் 25

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) பெரியார் மாவட்டம், தாமரைக்கரை முதல் தேவர் மலை வரையுள்ள சாலையை தார்ச்சாலையாக மாற்ற 1991-92-ல் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

14—

சேலம் இரயில்வே கோட்டம்.

வினா எண் 8092—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலத்தில் ரயில்வே கோட்டம் (Division) ஏற்படுத்த மத்திய அரசிடம் மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பரிந்துரை செய்யும்.

15—

கூலி விவசாயத் தொழிலாளிக்கு இலவச வேஷ்டி, சேலை வழங்கல்.

வினா எண் 282—திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்திலுள்ள கூலி விவசாயத் தொழிலாளர்களுக்கு தீபாவளி, பொங்கல் திருநாளில் இலவச வேஷ்டி, சேலை வழங்கப்படும் திட்டத்தைத் துவக்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் :



1992 செப்டம்பர் 25]

1992 ஆம் ஆண்டு, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நில மற்ற ஏழை விவசாயிகளுக்கும், நகர்ப்புற ஏழை எளிய மக்களுக் கும், இலவசமாக வேஷ்டி, சேலை வழங்க அரசால் முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் நிலமற்ற ஏழை விவ சாயிகளுக்கும், நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கும், 120 இலட்சம் நபர்களுக்கு ரூ. 42.00 கோடி செலவில் வழங்கப்பட் டுள்ளது.

16—

கூட்டுறவு நூற்பாலையில் உற்பத்தியாகும் நூல்.

வினா எண் 8040—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்ச்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூல் இன்னும் நெசவாளர்களின் தேவைக்கு போதுமானதாக உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில் ஒவ்வொரு மாதமும் சுமார் 16,000 பேல்கள் நூல் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் கூட்டுறவு அமைப்பில் உள்ள நெச வாளர்களுக்கு, அவர்களது தேவைக்கேற்ப மாதம் ஒன்றுக்கு, 5,000 முதல் 6,000 பேல்கள் விநியோகம் செய்யப்பட்டு, மீத முள்ள நூல்கள் கூட்டுறவுச் சங்கத்திலுள்ள விசைத்தறி நெச வாளர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. கைத்தறி தொழிலுக்குத் தேவைப்படாத கோன் நூல் இதர மாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது.

17—

புயல் பாதுகாப்பு இல்லங்கள்.

வினா எண் 2738—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பிள்ளையார் திடலில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்ட இனாமாக இடமளித்தும் இதுவரை கட்டப்படாமல் உள்ள புயல் பாதுகாப்பு இல்லத்தை விரைவாகக் கட்டி முடிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

18—

புயல் பாதுகாப்பு இல்லங்கள்.

வினா எண் 3145—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு பொதுப் டணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி புதுத்தெருவில் ஒரு புயல் பாதுகாப்பு கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை.

19—

அந்தியூர் தொகுதியில் சாலைகள் புதுப்பித்தல்.

வினா எண் 4880—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

அந்தியூர் தொகுதியில் மாத்தூரிலிருந்து வெள்ளித் திருப்பூர் வரையிலும், அந்தியூரிலிருந்து மறவாபாளையம் வரையிலும் தார்ச்சாலையினை புதுப்பித்து அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

மாத்தூரிலிருந்து வெள்ளித்திருப்பூர் என்கிற





சாலையின் சரியான பெயர் வெள்ளித்திருப்பூர் ஆனம்பாளை
யம் சாலை கி. மீ. 0/0—1/0 ஆகும். இச்சாலை நெடுஞ்
சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் பராமரிப்பிலுள்ள
இதர மாவட்டச் சாலையாகும். இது ஒரு தார்ச் சாலை
யாகும். இச்சாலையில் தார் தளம் புதுப்பிக்கும் வேலை,
பராமரிப்பு நிதியைக் கொண்டு 1992-93 ஆண்டு மேற்கொள்
ளப்படவுள்ளது. அந்தியூரிலிருந்து மறவா பாளையம் எனக்
குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் சரியான பெயர் அந்தியூர் ஆதி
ரெட்டியூர் சாலை கி. மீ. 0/0-3/8 ஆகும். இச்சாலையும்
நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறையின் பராமரிப்
பிலுள்ள இதர மாவட்ட சாலையாகும். இது ஒரு தார்ச் சாலை
யாகும். இச்சாலையில் கி. மீ. 0/0—1/0 வரை 1991-
92-ல் தார் தளம் புதுப்பிக்கப்பட்டு தற்பொழுது நல்ல
நிலையில் உள்ளது. கி. மீ. 1/0—2/6 வரை 1992-93 ஆண்டு
தார் தளம் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரு
கிறது. மீதமுள்ள கி. மீ. 2/6—3/6 வரை தார் தளம் புதுப்
பிக்க ரூ. 1.00 இலட்சம் தேவைப்படும். இது 1992-93 ஆம்
வருட நிதி நிலையைப் பொறுத்து சிறப்புப் பராமரிப்புப்
பணியின்கீழ் மேற்கொள்ளப்படும். அதுவரை இச் சாலை
யில் உள்ள பழுதுகள் சரி செய்யப்பட்டு பராமரிப்பு செய்யப்படும்.

20—

புன்னக்காயல் ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா எண் 6127—திரு. ஆ. செல்லதுரை : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்செந்தூர் தொகுதியில் உள்ள ஆத்தூர் புன்னக்காயல் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

இச்செயற்குறிப்பு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணித் தொகுப்பு பட்டியலில் இடம் பெற்றிருப்பினும் நிதிநிலை காரணமாக அண்மைக் காலத்தில் மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் இல்லை.

21—

புயல் பாதுகாப்பு இல்லம்.

வினா எண் 6886—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி, சோமநாதபட்டினத்திற்கு புயல் பாதுகாப்பு கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் :

இல்லை.

22—

புதுக்கோட்டையில் அரசு அலுவலகங்களுக்கு கட்டிடம்.

வினா எண் 8217—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டையில் அரசுக்குச் சொந்தமான மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிறைய இடங்கள் இருந்தும் அரசு அலுவலகங்கள் பெரும்பாலானவை வாடகைக் கட்டிடத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடங்கள் கட்ட எப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நிதி நிலைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்டப்படும்.

23—

திருவரங்குளம் ஒன்றியத்தைப் பிரித்தல்.

வினா எண் 2091—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?





விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) திருவரங்குளம் ஒன்றியத்தைப் பிரிப்பது குறித்து தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

24—

ஊமத்தக்காடு ஆதிதிராவிடர்களுக்கு வசதிகள்.

வினா எண். 2980—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தக்காடு ஆதிதிராவிடர்களுக்கு மயானச்சாலை அமைத்துத் தரவும் தகரக் கொட்டகை போட்டுத்தரவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

1.2 கி.மீ. நீளமுள்ள ஊராட்சியில் மயானச் சாலையை சீர் செய்திட ஊராட்சி நிதிநிலை போதுமானதாக இல்லை. வேறு திட்டங்களிலும் இவ்வாண்டில் செய்து கொடுக்க வாய்ப்பு இல்லாததால், வரும் நிதியாண்டில் இவ்வேலைகளை மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

25—

ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்.

வினா எண் 4016—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் மிக அதிகமான ஊராட்சிகளை உள்ளடக்கியதாக உள்ளதால் இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஒமலூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை. கருத்துரு வரப்பெற்றால் பரிசீலனை செய்யப்படும்.

26—

சேந்தரக்கிள்ளையில் பஞ்சாயத்துக் கட்டிடம்.

வினா எண் 4137—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியில் பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியம் சேந்திரக்கிள்ளையில் பஞ்சாயத்துக் கட்டிடம் கட்டித் தர அரசு ஏற்பாடு செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும்

(ஆ) தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், சேந்திரக்கிள்ளை கிராமத்தில் ஊராட்சி மன்றக் கட்டிடம் வாடகை இல்லாத கட்டிடத்தில் இயங்கி வருகிறது. புதிதாக ஊராட்சி மன்றக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 70,000தேவைப்படுகிறது. சேந்திரக்கிள்ளை ஊராட்சியில் நிதி பற்றாக்குறை காரணமாக மேற்கூறிய பணியை எடுத்துச் செய்ய தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

27—

நாவலூர் கிராமத்திற்கு வானொலிப் பெட்டி.

வினா எண் 5406—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதி, நாவலூர் கிராம மக்களுக்கு வானொலி பெட்டி, வானொலி மன்றம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆம்.

28—

கீழ்ஜவனூர் கிராமத்தில் தொகுப்பு வீடுகள்.

வினா எண் 5656—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதியில் கீழ்ஜவனூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் வட்டத்தில் 1991-92-ம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 203 தொகுப்பு வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1992-93-ம் நிதியாண்டில் கீழ்ஜவ்னூர் கிராமத்தில் வீடுகட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

29—

ஆதனகோட்டை முத்துராஜா வானொலி நிலையம்.

வினா எண் 6308—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், ஆதனகோட்டை முத்துராஜா தெருவில் உள்ள வானொலி நிலையம் நீண்ட நாட்களாக இயங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது சீர் செய்யப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

30—

சின்னகுமட்டி பள்ளியைச் சீர் செய்தல்.

வினா எண் 7693—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள சின்னகுமட்டி பள்ளியைச்சீர் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், சின்னகுமட்டி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டிடத்தை சீர் செய்ய ரூ. 5,000 மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலை நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

31—

துவக்கப்பள்ளிகளுக்கு நடத்தாட்டிகள் நியமனம்.

வினா எண் 8865—திரு. கா.பூ. முனுசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாகளுக்கு விடையளிப்பாரா :

(அ) துவக்கப்பள்ளியில் பணிபுரியும் நடத்தாட்டிகள் ஓய்வு பெறின் மீண்டும் அக்காலியிடங்களை நிரப்ப புதிய நடத்தாட்டிகள் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) தற்போது பணியிலிருக்கும் நடத்தாட்டிகள் ஓய்வு பெற்றாலோ அல்லது வேறு காரணங்களுக்காக பணியைத்துறந்து சென்றாலோ, அதனால் ஏற்படும் காலி இடங்களை நிரப்ப, புதிய நடத்தாட்டிகள் நியமனம் செய்யப்படமாட்டார்கள்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

32—

நியாயவிலைக் கடைகள் கண்காணிப்பு.

வினா எண் 5062—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மேலதிகாரிகள் சரியாக கண்காணிக்காததால் நியாயவிலைக் கடைகளில் முறைகேடுகள் நடைபெறுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நியாயவிலைக் கடைகளில் நடக்கும் முறைகேடுகளைக் கண்டறிந்து அவற்றைக் களையும்பொருட்டு அதிகாரிகளுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

33—

கோவில்நத்தம் பகுதியில் ரேஷன்கார்டு வழங்கல்.

வினா எண் 6870—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாகளுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், கோவில்நத்தம் என்ற பர்கூர் ஊராட்சியைச் சேர்ந்த ஊரில் சிந்தாமணி மூலம் ரேசன்

கடையைத் திறந்த பின்னரும் அரசு, அப்பகுதியில் 17 கிராம மக்களுக்கு ரேசன் கார்டு வழங்காமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அப் பகுதியைச் சேர்ந்த அனைத்து கிராமங்களுக்கும் ரேசன் கார்டுகளை வழங்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) பெரியார் மாவட்டம், பர்கூர் மற்றும் அதனைச் சார்ந்த 17 குக்கிராம மக்களுக்கும் ஏற்கனவே குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு விட்டன. கடந்த ஆண்டு மட்டும் 643 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பங்கள் வரப்பெற்றால் துரித நடவடிக்கை எடுத்து அட்டைகள் வழங்கப்படும்.

34—

தலைவாசல் பகுதியில் காய்கறி விற்பனை.

வினா எண் 8973—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம், தலைவாசல் மிகப் பெரிய காய்கறி மார்க்கெட்டாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, இங்கே ஆத்தூர் வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்ககிளையினைத் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், காய்கறி விற்பனைக்காக தனது கிளை ஒன்றினைத் தலைவாசல் பகுதியில் பரிட்சார்த்த முறையில் அமைத்து, விற்பனைக்கு வரும் காய்கறிகளை முகவரி அடிப்படையில் விற்க உத்தேசித்துள்ளது.





35—

அரசு அலுவலகங்களில் பதிவுரு எழுத்தர் நியமனம்.

வினா எண் 5075—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தற்போது அரசு அலுவலகங்களில் இளநிலை உதவியாளர்களுக்குப் பதிலாக தினக்கூலி அடிப்படையில் பதிவுரு எழுத்தர்கள் (Section writers) மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் பரிந்துரையின்படி நியமிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பட்ட மேற்படிப்பு முடித்தவர்கள் மற்றும் வயது வரம்பு தாண்டியவர்களுக்கு சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) அரசு அலுவலகங்களில் இளநிலை உதவியாளர்களுக்குப் பதிலாக தினக்கூலி அடிப்படையில் பதிவுரு எழுத்தர்கள் பொதுவாக நியமிக்கப்படுவதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

36—

மணலியில் தொழிலாளர் நலவாரியம் நிலம் கையகப்படுத்தல்.

வினா எண் 8254—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தொழிலாளர் நல வாரியத்தால் மணலியில் நிலம் ஏதேனும் வாங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

(இ) எந்தத் திட்டத்திற்காக மேற்படி நிலம் வாங்கப்பட்டது?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) மணலி புதுநகர் குடியிருப்பில் குழந்தைகள் காப்பகம், தையற் பயிற்சி நிலையம், படிப்பகம் மற்றும் சமுதாயக் கூடம் உள்ளிட்ட வசதிகளை தொழிலாளர் பயன் பெறும் வகையில் ஒருங்கிணைப்புக் கட்டிடம் கட்டுவதற்கு சர்வே எண் 331-332-ல் 4 கிரவுண்ட் 1,230 சதுர அடி நிலம் ரூ.2,25,000 செலுத்தி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கென வாங்கப்பட்டுள்ளது.

37—

வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் அனுமதி அளிக்கும் தேர்வு முறையில் சீர்திருத்தம்.

வினா எண் 4533ஏ—திரு. தேனி பன்னீர் செல்வம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேளாண்மைக் கல்வி நிறுவனங்களில் நுழைவுத் தேர்வு மூலம் செய்யப்படும் தேர்வு முறையில் 10 சதவீதம் அரசு ஒதுக்கீடு வைத்து பொருளாதாரத்தில் நலிந்த பிரிவு மாணவர்களும் பயன்பெறும் வகையில் சீர்திருத்தம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், கருணை அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப்படுமா?

(இ) கிராமப்புறங்களில் மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுமா?

விடை—

மாண்புமிகு கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) தற்போது உத்தேசம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

(இ) விவசாயிகளின் குழந்தைகளுக்கு 65 இடங்கள் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன.



38—

மானிய விலையில் பழக்கன்றுகள்.

வினா எண் 6011—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழங்கள் உற்பத்தியில் ஈடுபடுவோருக்கு அரசு தோட்டக்கலை அலுவலகம் அல்லது தோட்டக்கலை பண்ணையிலிருந்து எத்தனை சதவிகித மானிய அடிப்படையில் பழக்கன்றுகள் வழங்கப்படுகின்றன.

(ஆ) திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் ஒன்றிய வாரியாக 1988–89 முதல் 1990–91 வரை மேற்கண்ட மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட மரக்கன்றுகள் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அவற்றைப் பெற்ற பழ உற்பத்தியாளர் எண்ணிக்கை விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

(அ) தோட்டக் கலைத்துறையின் மூலமாக பழச்செடிகள், சாகுபடி செய்பவர்களுக்கு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித்திட்டம் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் போன்ற தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் 50% மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும் ஒருங்கிணைந்த ஆதி வாசிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் பழங்குடி மக்களுக்கு முழு மானிய விலையில் பழச்செடிகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

(ஆ) திண்டுக்கல்–அண்ணா மாவட்டத்தில் ஒன்றிய வாரியாக 1988–89 முதல் 1990–91 வரை மானியத்தில் விநியோகம் செய்யப்பட்ட மரக்கன்றுகளின் விவரம் பின்வருமாறு :

| எண் | வட்டாரம் | பழச்செடிகள் வழங்கப்பட்டது (எண்ணிக்கையில்) | | |
|---|---|---|---|---|
| | | 1988–89 | 1989–90 | 1990–91 |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | திண்டுக்கல் .. | 26,000 | 3,340 | 6,140 |
| 2 | சாணார்பட்டி .. | 3,800 | 13,290 | 16,580 |
| 3 | ஆத்தூர் .. | 10,785 | 47,025 | 54,745 |
| 4 | ரெட்டியார்சத்திரம். | 850 | 9,700 | 6,775 |
| 5 | பழனி .. .. | 9,200 | 3,935 | 19,155 |
| 6 | தொப்பம்பட்டி .. | 1,900 | 3,210 | 2,780 |
| 7 | ஒட்டன்சத்திரம் .. | 1,390 | 1,800 | 3,575 |
| 8 | நிலக்கோட்டை .. | .. | 4,700 | 10,460 |
| 9 | வத்தலக்குண்டு .. | .. | 800 | 4,100 |
| 10 | நத்தம் .. | .. | 7,380 | 11,800 |
| 11 | கொடைக்கானல் | 3,12,200 | 3,40,500 | 3,32,119 |
| | மொத்தம் .. | 3,66,125 | 4,47,700 | 4,68,229 |

(இ) மரக்கன்றுகள் பெற்ற பழ உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை கீழ் வருமாறு :—

| என் | 1988–89 | 1989–90 | 1990–91 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. தாழ்த்தப்பட்டோர் | 92 | 145 | 195 |
| 2. இதர பிரிவினர் .. | 486 | 682 | 909 |
| மொத்தம் .. | 578 | 827 | 1,104 |



39—

## துரிசனாம்பாளையத்தில் குழந்தைகள் மையம்

வினா எண் 6371—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், பர்கூர் ஊராட்சிக்குச் சேர்ந்த துரிசனாம்பாளையத்தில் 1991–92-ல் குழந்தைகள் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை குழந்தைகள் உள்ளனா என அரசு கணக்கெடுத்து உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், துரிசனாம்பாளையத்தில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் மூலம் புதியதாக மையம் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்த கிராமத்தின் மக்கள் தொகை 1,067 என்றும், ஒரு மையம் துவக்கப்படும் அளவுக்கு குழந்தைகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40—

## சத்துணவுப் பணியாளர்களின் மானியம் உயர்த்துதல்

வினா எண் 7452—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்துணவுப் பணியாளர்களுக்கு விலைவாசிக்கு ஏற்றவாறு அரசு வழங்கும் மானியத்தை அவ்வப்போது உயர்த்தித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

தற்சமயம் காய்கறி, விறகு, மளிகை சாமான் ஆகியவற்றுக்கு வழங்கப்படும் மானியம் 0.13 காசு அளவை மேலும் உயர்த்தும் கருத்துரு அரசிடம் இல்லை.

41—

குடும்பக்கட்டுப்பாடுத் திட்டத்திற்கு சத்துணவுப் பணியாளர்கள் பயன்படுத்துதல்.

வினா எண். 7457—திரு. ஆர். சிங்காரம : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்துணவுப் பணியாளர்களை அவர்களுக்கு தொடர்பில்லாத குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஈடுபடுத்தாமல் இருக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் சத்துணவுப் பணி
யாளர்கள் கட்டாயமாக ஈடுபடுத்தப்படுவதில்லை. இருப்பினும்
இவர்களுக்கென்று தனிப்பட்ட முறையில் இலக்குகள் எதுவும்
நிர்ணயிக்காமல் இந்த மாபெரும் தேசியத் திட்டத்தில் அவர்களின்
சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கருதிய அரசு ஒவ்
வொரு சத்துணவுப் பணியாளரும் (மாதந்தோறும்) குறைந்த பட்
சம் ஐந்து தகுதியான தம்பதியினரை இத்திட்டத்தில் ஈடுபடு
மாறு ஊக்கப்படுத்த வேண்டும் என்று, தேவையான அறிவுரை
களை சமூகநலம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை இயக்குனர்
களுக்கு வழங்கியுள்ளது.

42—

சத்துணவுத்திட்டத்தின் தணிக்கை.

வினா எண். 7459:— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

சத்துணவுத் திட்டத்தில் தணிக்கையால் ஏற்படும் பொருளின் குறைபாடுகளுக்கு விதிக்கப்படும் இருமடங்கு தண்டனையை ரத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?





விடை—

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

சத்துணவு திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்
களின் பொறுப்பின்மை காரணமாகவும் இதர காரணங்களாலும்
ஏற்படும் பொருட்கள் குறைபாடுகளுக்கு விதிக்கப்படும் இரு
மடங்கு தண்டனையை ரத்து செய்யும் உத்தேசம் அரசுக்கு
இல்லை. சமீபத்தில் வெளியிடப்பட்ட உத்தரவின்படி பொருட்
கள் குறைபாடுகளுக்கு விதிக்கப்படும் இருமடங்கு சந்தை விலை
கள் என்ற அளவு குறைத்து, ஒன்றரைமடங்காக நிர்ணயிக்கப்
பட்டுள்ளது.

43—

பம்பாய் சிகப்பு விளக்குப்பகுதியிலிருந்து மீட்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு.

வினா எண் 7948—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

The details of the steps taken by the Government to rehabilitate girls rescued from Bombay red-light area during May, 1990?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

பம்பாயைச் சேர்ந்த ஒரு சமூக நிறுவனம் (சவுதான்) தமிழக
அரசினருக்கு பம்பாய் சிகப்பு விளக்குப் பகுதிகளில் தமிழ்நாட்
டைச் சேர்ந்த பெண்கள் விபசாரத்தில் ஈடுபடுத்தப்படுவதாக
வும் இவர்கள் தங்களை இந்த இழி நிலையிலிருந்து மீட்டு
பெற்றோர் மற்றும் உறவினரிடம் ஒப்படைக்கவும் கோரியதன்
அடிப்படையில் தமிழக அரசு இவர்களை விடுவிக்க எடுத்த நட
வடிக்கையின் விளைவாக 30—5—1990 அன்று 859 மகளிர்
மற்றும் குழந்தைகள் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

வறுமை மற்றும் ஏனைய பிற காரணங்களுக்காக பேற்
குறித்த நிலைக்கு தள்ளப்பட்ட இப்பெண்களை, அவர்களது
பெற்றோர் மற்றும் உறவினரிடம் ஒப்படைப்பதற்கு முன்னர்

அவர்களது நிலை குறித்து விசாரிக்கவும் மற்றும் தேவையான
மருத்துவ உதவிகளைச் செய்யவும் அரசு தீர்மானித்தது. முதற்
கட்டமாக பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 37
பெண்கள் மற்றும் குழந்தைகள் அம்மாநிலத்திற்கு அனுப்பப்பட்ட
னர். எஞ்சிய 822 மகளிர் மற்றும் குழந்தைகளில் முதற்கட்ட
மருத்துவ பரிசோதனைக்குப் பின்னர் 178 மகளிர் மற்றும் குழந்
தைகள் தங்கள் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 599
மகளிர், 45 குழந்தைகளுக்கு ''எச்.ஐ.வி. பாஸிடிவ்'' அறிகுறிகள்
இருந்தமையால் இவர்களைத்தொடர்ந்து மருத்துவ சிகிச்சைக்
கெனவும சுகாதாரக் கல்விக்கெனவும் இத்துறையின் கீழ் இயங்கும்
இல்லங்களில் தற்காலிகமாக இருத்திவைக்கவும் வழிவகை
செய்யப்பட்டது. இந்த வகையில் அரசுக்கு ஏற்பட்ட செல
வினம் ரூ. 11.25 இலட்சம் ஆகும்.

மேற்குறித்த மகளிர் குறித்து பூர்வாங்க விசாரணைகள் மேற்
கொள்ளப்பட்டதில் பெரும்பாலோர் (52 சதவீதம்) தங்கள் பெற்
றோர் மற்றும் உறவினரிடம் சென்று சேரவே விருப்பம் தெரி
வித்தனர். ஏனையோர் தங்கள் பெற்றோர் மற்றும் உறவின
ரிடம் செல்ல விரும்புவதாகவும், எனினும் தங்களது பொருளா
தார நிலையைக் கருத்தில் கொண்டு தங்களுக்கு மறுவாழ்வு வசதி
கள் (நிதியுதவி போன்ற) செய்து கொடுக்குமாறும் கேட்டுக்
கொண்டனர். ''எச்.ஐ.வி. பாஸிடிவ்'' என கருதப்பட்ட
மகளிருக்கு மருத்துவ உதவிகளுடன் சுகாதார கல்வியும் மருத்துவ
நிபுணர்களால் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் இவர்
கள் வீடேறிய பின்னர் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க
வேண்டிய வழிமுறைகளைப்பற்றியும் தொண்டு நிறுவனங்கள்
மூலமாக அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.
மேற்குறித்தவாறான நடவடிக்கைகளுக்குப்பின்னர் தங்கள் வீடேற
விருப்பம் தெரிவித்த மகளிர் மற்றும் குழந்தைகள் கீழ்க்குறிப்
பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அனுப்பி வைக்கப்பட்
டனர்.

(1) அடையாள அட்டையுடன் வழங்கப்பட்ட மருத்துவச்
சீட்டின் உதவியுடன் தேவைப்படும்போது அருகிலுள்ள மருத்துவ
மனையில் மருத்துவம் செய்து கொள்ள வேண்டும்.

(2) மேற்குறித்தவாறான ஏற்பாட்டிற்கு கட்டுப்பட்டு
நடந்துகொள்வதற்கான உறுதிப்பத்திரத்தில் பெற்றோர் அல்லது
உறவினர் கையொப்பமிடவேண்டும்.

(3) தங்களது இடமாற்றம் குறித்து உடனடியாக சம்பந்
தப்பட்ட நன்னடத்தை அலுவலருக்கு தகவல் தெரிவிக்க
வேண்டும்.





மேற்குறிப்பிட்ட மகளிர் மற்றும் குழந்தைகளில் பெற்றோர்/உறவினரிடம் ஒப்படைக்க இயலாத பெண்களுக்கு மறுவாழ்வு ஏற்பாடுகள் செய்ய கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(1) அரசினர் தாமாகவோ அல்லது தனியார் தொண்டு நிறுவனம் மூலமாகவோ இவர்களுக்கென தனியாகஒருஇல்லம் துவங்கி அதன்மூலமாக தொழிற்கல்வி அளித்து மறுவாழ்வு ஏற்படுத்துதல். இதன் அடிப்படையில் சென்னையில் தனியார் நிறுவனமாக ''ஜோண்டா ரிஸோர்ஸ் சென்டர்'' ''Zonda Resource Centre'' என்னும் தொண்டு நிறுவனத்திற்கு 43 மகளிர் கல்வி/தொழிற் கல்வி பெறுவதற்கு அனுப்பப்பட்டு உள்ளனர்.

(2) தகுதியுள்ள இனங்களில் திருமணம் மற்றும் வேலைவாய்ப்புக்கு வழி வகுத்துக் கொடுத்தல்.

பெற்றோர் மற்றும் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்ட மகளிரில் இதுகாறும் சுமார் 43 மகளிருக்கு சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூபாய் 1.61 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு மறுவாழ்வு ஏற்பாடுகள் செய்து தரப்பட்டுள்ளன. மேலும் தகுதியுள்ள இனங்களில் இவ்வகை மகளிருக்கு ஐ. ஆர். டி. பி. மற்றும் எஸ்சி/எஸ்டி சிறப்புத் திட்டங்களின் கீழும் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது இரண்டாவது கட்டமாக சுயவேலைவாய்ப்பு நிதி உதவிகோரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தமிழ்நாடு நலவாழ்வு நிதியின் கீழ் மேலும் கூடுதலான மகளிருக்கு நிதி உதவி வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

44—

## சத்துணவுப் பணியாளர்கள்.

வினா எண்: 8078—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்துணவுக் கூடங்களில் வேலை செய்யும் பணியாளர்களை தங்களுடைய சொந்த ஊருக்கு 3கி.மீ. சுற்றுவட்டாரத்திற்குள் பணியமர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

சத்துணவுப் பணியாளர்கள் மையம் அமைந்துள்ள இடத்திலிருந்து 3 கி.மீ. சுற்றுவட்டாரத்திற்குள் வசிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இயன்ற அளவு பணியில் அமர்த்தப்படுகின்றார்கள்.

45—

## கொள்ளிடத்தில் திருமண மண்டபம்.

வினா எண்: 8400—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சீர்காழி தொகுதி, கொள்ளிடத்தில் சமூக நலத்துறையின் மூலம் ஒரு திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : சமூக நலத் துறை அமைச்சர் :

இல்லை.

46—

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்-மாணவியர் உதவித் தொகை உயர்த்தல்.

வினா எண். 4994—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்-மாணவியர் உதவித் தொகை பெறுவதற்கு பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 15 ஆயிரமாக இருப்பதை ரூ. 24 ஆயிரமாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

47—

## ஆதி திராவிடர் நல உயர்மட்ட ஆலோசனைக்குழு.

வினா எண். 5955—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடா நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதிதிராவிடர் நலத் துறை சம்பந்தப்பட்டவற்றில் பிற மாநிலங்களில் உள்ளதுபோல் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு ஒரு உயர்மட்ட ஆலோசனைக் குழு அமைக்க வேண்டுமென அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் முடிவு என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

48—

## மீன் பதப்படுத்தும் நிலையங்கள்.

வினா எண்; 3569—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளததுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீன்பிடித் தொழில் அதிகம் உள்ள சீர்காழி தொகுதியில் பிடிக்கப்படும் மீன்களை பதப்படுத்தி மீனவர் நலன் காக்க மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஏதும் இல்லை.

49—

மீன் பதப்படுத்தும் நிலையங்கள்.

வினா எண். 4940—திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விளாத்திகுளம் தொகுதியில் பிடிக்கப்படுகின்ற மீன்களை பதப்படுத்தி விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் :

விடை—

விளாத்திகுளம் தொகுதிக்கு அருகில் தூத்துக்குடியில் தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தில் பனிக்கட்டி மற்றும் மீன்பதப் படுத்தும் நிலையங்கள் உள்ளன. விளாத்திகுளம் தொகுதியில் பிடிக்கப்படும் மீன்களை பதப்படுத்த மற்றும் தூத்துக்குடியில் உள்ள மீன் பதப்படுத்தும் நிலையத்தை பயன்படுத்திக் கொள்ள லாம். எனவே விளாத்திகுளம் தொகுதிக்கு என தனியே பதப்படுத்தும் நிலையம் அமைக்க அவசியம் இல்லை.

50—

நத்தம் தாலுகாவில் சிறு தொழில் வளர்ச்சி.

வினா எண். 5546—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தாலுகா தொழிலில் பின்தங்கிய தாலுகா வாக அரசினால் அறிவிக்கப்பட்டு நாலைந்து ஆண்டுகளுக்கு மேலாகியும் அங்கு கிராமங்களில் சிறு தொழில் வளரப் போது



மான முனைப்பு, உரிய அதிகாரிகள் காட்டவில்லை என முறை யீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) இதுகுறித்து முறையீடு ஏதும் அரசுக்கு வரவில்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

51—

குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் இருப்பதைத் தவிர்க்க நடவடிக்கை.

வினா எண். 4475—திரு. செ. து வரதராஜன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகள் வருடக் கணக்கில் நிலுவையில் இருப்பதை தவிர்க்க வழக்குகள் குறிப்பிட்ட காலத் திற்கு மேல் நீட்டிக்காமலிருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். அரசின் செயற்பிரிவு மற்றும் நிருவாகப் பிரிவினின்றும் இது தனித்து செயல்படுகிறது. வழக்கு நிலுவைகளை அகற்ற, அவசியமான இடங்களிலெல்லாம் உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை யின் பேரில் புதியதாகவும், கூடுதலாகவும் நீதிமன்றங்கள் ஏற் படுத்த அரசு ஒப்புதல் வழங்குகிறது.

52—

## பாதாள சாக்கடை வசதி.

வினா எண். 5554—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாதாளச் சாக்கடை வசதி அமைந்து பல ஆண்டாகியும் மதுரை, கோவை, சேலம், திருச்சி, கடலூர், வேலூர் பாளையங்கோட்டை மத்திய சிறைகளில் இன்னமும் பழைய முறை கழிப்பறைகளே நீடிப்பதை மாற்றி நவீன கழிப்பறைகள் கட்ட அரசிடம் கருத்துரு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், அரசு அதன் மீது எடுத்துள்ள முடிவு என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) கோவை மத்திய சிறையில் நவீன கழிப்பறைகள் இல்லாத இடங்களில் அத்தகைய கழிப்பறைகள் அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அச்சிறையில் உள்ள ஏனைய அனைத்துத் தொகுதிகளிலும், மற்ற அனைத்து மத்திய சிறைகளிலும் பழைய கழிப்பறைகள நீக்கப்பட்டு நவீன கழிப்பறைகள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

53—

## நீதிமன்றங்களில் தீர்ப்பு தமிழில் அறிவித்தல்.

வினா எண். 6658—திரு. உ. பலராமன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முப்பது ஆண்டுகளாக மொழிபெயர்ப்பு ஆணையம் இயங்கியும் அனைத்து நீதிமன்றங்களிலும் தீர்ப்பு தமிழில் அளிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்போது குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்குகளில் அனைத்து குற்றவியல் உரிமையியல் சார்நிலை நீதிமன்றங்கள் தமிழிலேயே தீர்ப்பு மற்றும் ஆணைகளை வழங்கி வருகின்றன.

54—

## கணிப்பொறி பயன்படுத்த அனுமதி

வினா எண் 6115—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நில ஆவணங்களைப் பாதுகாக்க கணிப்பொறி ( Computer ) யைப் பயன்படுத்தும் முன்னோடித் திட்டத்தை ( Pilot Scheme ) மத்திய அரசு மாநில அரசுக்கு அனுமதி அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை அமுல்படுத்தும் மாவட்டங்கள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம் மட்டும்.

55—

## விற்பனை வரிவிதிப்பில் விலக்கு

வினா எண் 6250—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விற்பனை வரி விதிப்பில் விலக்கு மற்றும் சலுகை அளிக்கப்படும்போது அதற்குரிய பலன் மக்களுக்கு கிடைக்கிறதா என்பதைக் கண்காணிக்க வணிக வரித்துறை எவ்வகையான நடவடிக்கை எடுத்துள்ளது ?

(ஆ) அதன் மூலம் என்னென்ன வகையில் மக்களுக்கு உரிய பலன் கிடைத்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) இதற்கென தனிப்பிரிவு ஏதும் வணிகவரித் துறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால், வணிகவரித்துறையில் வரிவிலக்கோ (அல்லது) வரிச் சலுகையோ அரசால் ஒரு பொருளுக்கு வழங்கப்படும்போது அப்பொருள் மீது விற்பனை வரியோ அல்லது அனுமதிக்கப்பட்ட விற்பனை வரிக்கு மேலேயோ வணிகர்கள் வசூலிக்கக்கூடாது. இது சரியான முறையில் பின்பற்றப்பட்டுள்ளதா என்பதை வரிவிதிப்பு அலுவலர்கள் வணிகர்களின் கணக்குகளைப் பரிசீலிக்கும்போது கண்டுணர்வார்கள். தவறு செய்பவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவ்வாறாக அரசால் அறிவிக்கப்பட்ட (அல்லது) குறைக்கப்பட்ட வரிவிகிதம் மக்களைச் சென்றடைவதை இத்துறை கண்காணிக்கிறது.

(ஆ) குறைந்தவிலையில் பொருட்களைப் பெறும் பயன் ஒன்றே பொதுமக்கள் பெறும் நன்மையாகும்.

56—

## உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

வினா எண் 3911—திருமதி கவிநிலவு தர்மராஜ் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரி ஒன்றியம், அம்மன்கோவில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 23—9—1991 நாளிட்ட கல்வித் துறை அரசாணை (நிலை) எண் 921-ல் சிவகிரியிலுள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.



57—

## மேல்நிலைப் பள்ளி துவக்குதல்

வினா எண் 4330—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குடி தொகுதியில் மரமடக்கி கிராமத்தில் மேல்நிலைப் பள்ளி துவக்க பதிவு செய்யப்பட்டும் இன்றும் துவக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

(இ) பள்ளிக்குக் கட்டிடங்கள் எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) 1990—91 மற்றும் 1991–92 ஆம் கல்வி ஆண்டுகளில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

58—

## ஆய்வுக்கூடம் ஏற்படுத்துதல்.

வினா எண். 4821—டாக்டர் பெ. வீரபாண்டியன் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பௌதீகம், வேதியியல் ஆகிய கல்விப் பிரிவுகள் இருப்பதால் ஆய்வுக்கூடம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

59—

ஆசிரியர்கள் நியமித்தல் மற்றும் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 7107—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் உயர்நிலைப் பள்ளிக்கு போதிய ஆசிரியர் நியமிக்கவும், கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

60—

மருத்துவமனை விரிவுபடுத்துதல்.

வினா எண் 4038—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆரணி நகரில் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

61—

சுற்றுப்புறத் தூய்மை பாதுகாப்பு.

வினா எண் 4634— திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை நகரில் உள்ள ராணியார் மருத்துவமனையில் சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை நகரில் உள்ள ராணியார் மருத்துவமனையில் சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க தேவையான அனைத்து அறிவுரைகளும் அம்மாவட்ட மருத்துவப் பணிகள் இணை இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது. மருத்துவமனைகள் தூய்மையாக இருக்கும் பொருட்டு, தலைமை மருத்துவர்கள் மருத்துவமனையை தினமும் ஆய்வு செய்து வருகின்றனர். நகராட்சியினரிடமும் தொடர்பு கொண்டு சுற்றுப்புறத் தூய்மை குறித்து நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

62—

வரி குறைத்தல்.

வினா எண் 5886— திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆம்னி பஸ்களுக்கு மோட்டார் வாகன வரியை குறைத்தது போல வாடகை வேன்கள் டாக்சிகளுக்கும் வரியை குறைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

இல்லை.

63—

விரைவுப் பேருந்துகளின் எண்ணிக்கை.

வினா எண் 6292— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் தனியார் விரைவுப் பேருந்துகள் (Omnibus) எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவற்றின் மூலம் மோட்டார் வாகன வரி மூலம் அரசுக்குக் கிடைக்கும் ஆண்டு வருவாய் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) 208 வாகனங்கள் (இன்றைய தேதி வரை).

(ஆ) ரூ. 154.7 இலட்சம்.

64—

யூகலிப்டஸ் மரங்கள் ஒப்படைப்பு.

வினா எண் 8150— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் வன இலாகாவால் வளர்க்கப்பட்டுள்ள யூகலிப்டஸ் ஆயில் மரங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு ஒப்படைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

தமிழகத்தில் வன இலாகாவால் வனத்துறையின் நிலங்களில் வளர்க்கப்பட்டுள்ள யூகலிப்டஸ் ஆயில் மரங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு ஒப்படைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

65—

யானைகள் சரணாலயம் அமைக்கும் திட்டம்

வினா எண் 8276—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பேரணாம்பட்டு தொகுதி, மோர்தானா பகுதியில் யானைகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதி, மோர்தானா பகுதியில் யானைகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

66—

பழுதடைந்த பேருந்துகளை மாற்றுதல்.

வினா எண். 883—திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியகுளம் தொகுதியில் நகரப் பேருநதுகள் பழுதடைந்த பேருந்துகளாக இருப்பதை மாற்றி புதிய பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) பழுதடைந்த பேருந்துகளாக இருப்பின் பேருந்துகளின் வயதிற்கேற்ப மாற்றியும், பழுதுநீக்கம் செய்தும் நல்ல முறையில் இயக்க ஆவன செய்யப்படுகின்றது.

67—

பட்டு இறக்குமதி.

வினா எண். 8353—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கச்சாப்பட்டு பற்றாக்குறையால் விலை உயர்வு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) அதைத்தடுக்கவும், பற்றாக்குறையைப் போக்கவும் வெளிநாட்டிலிருந்து கச்சாப்பட்டு இறக்குமதி செய்யவேண்டுமென பட்டு நெசவாளர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்தனரா?

(இ) ஆம் எனில், இதன் மீது மத்திய அரசை வலியுறுத்த அரசு நடவடிக்கை எடுத்ததா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் :

(அ) கச்சாபட்டு பற்றாக்குறையால் விலை உயர்வு ஏற்பட்டுள்ளதை அரசு அறியும்.

(ஆ) ஆம்.

(இ) பட்டு இறக்குமதி செய்யும்படி மத்திய அரசு வலியுறுத்தப்பட்டு 200 மெட்ரிக் டன் கச்சாப்பட்டை சைனாவிலிருந்து இறக்குமதி செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இப்பட்டு பெங்களூர் மத்திய பட்டு வாரியம் மூலம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.



68—

கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்.

வினா எண் 8654—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், பூலாங்குளம் பகுதியில் கூட்டுறவு நூற்பாலை ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் :

(அ) பூலாங்குளம் பகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் கருத்துரு அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

69—

பனியன் தயாரிக்கும் மில் அமைத்தல்.

வினா எண். 8933—டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் பகுதியில் ஸ்வெட்டர் பனியன் தயாரிக்கும் மில்களை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் பகுதியில் ஸ்வெட்டர் பனியன் தயாரிக்கும் மில்களை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது ஏதும் இல்லை.

[1992 செப்டம்பர் 25

70—

## வரத்துக் கால்வாய் மராமத்து செய்தல்.

வினா எண். 1212—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

இராமநாதபுரம் மாவட்டத்தில் வரத்துக் கால்வாய் மராமத்து செய்ய சிறப்பாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் :— இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வரத்துக் கால்வாய்களை மராமத்து செய்ய சிறப்பு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

71—

## குண்டாற்றில் தூர் எடுத்தல்.

வினா எண். 4735—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதிக்கு அருகிலிருந்து முதுகுளத்தூர் வழியாக களரிக்கண்மாய் வரை செல்லும் குண்டாறு ஆக்கிரமிப்பதாலும், முற்புதர்கள் மூடியிருப்பதாலும், மண் உயர்ந்து விட்டதாலும், மழைக்காலங்களில் கண்மாய் களுக்கு தண்ணீர் தங்கு தடையின்றி செல்லாததால், பாக்கு வெட்டி ஓடை வழியாக மீண்டும் மலட்டாறுக்கே சென்று விடுகிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குண்டாற்றை தூர் வார அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1992 செப்டம்பர் 25]

72—

## குடிநீர்க் குழாய் பழுதுபார்த்தல்.

வினா எண். 3836—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ராதாபுரம் தொகுதி, திருமலாபுரம் பஞ்சாயத்தில் அம்மச்சி கோவில் ஆதிதிராவிடர் பகுதி குடிநீர்க் குழாயைப் பழுது பார்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் சட்டமன்ற தொகுதி திருமலாபுரம் ஊராட்சியில் அம்மச்சி கோவில் என்ற காலனி ஏதும் இல்லை. ஆனால் வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம் தெற்கு வள்ளியூர் ஊராட்சியில் அம்மச்சி கோவில் ஆதிதிராவிடர் காலனி ஒன்று உள்ளது. அங்குள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் சீரிய முறையில் குடிநீர் வருகிறது. எனவே அம்மச்சி கோவில் ஆதிதிராவிடர் பகுதி குடிநீர்க் குழாயைப் பழுது பார்க்கும் அவசியம் ஏற்படவில்லை இதுகுறித்த செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

73—

## ஊரணி தூர் எடுத்து, கிணறு ஆழப்படுத்துதல

வினா எண், 4906—திரு, எஸ். எஸ, ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி– கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், கருவந்தா கிராமம் கீழ்புறமுள்ள ஊரணி தூர் எடுக்கப்படாமலும், அதிலுள்ள கிணறு ஆழப்படுத்தப்படாமலும் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஊரணியை தூர் எடுக்கவும் கிணற்றை ஆழப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): ஆலங்குளம் ஒன்றியம், கருவந்தா கிராமம் ஊரணியிலுள்ள கிணற்றை வறட்சி நிவாரணத் திட்டத்தின் மூலம் சுமார் ரூ. 15,000 செலவில் ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஊரணியை ஆழப்படுத்தும் பணியினை 1992—93-ம் ஆண்டில் ரூ. 7,000 மதிப்பீட்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

74—

## மாநகராட்சி கவுன்சில் கூட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்தல்.

வினா எண். 4982— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி கவுன்சில் கூட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுலுக்கு வரும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மாநகராட்சி மன்ற கூட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்களை அழைப்பதற்கு விதிகளில் இடமில்லை.

75—

## டி. வி. வசதி செய்தல்.

வினா எண், 5581—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள எத்தனை ஆதிதிராவிடர் காலனிகள் டி.வி. வசதியில்லாமல் உள்ளன?

(ஆ) எப்போது இவ்வசதி அரசு செய்து கொடுக்கும்.?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் 48 ஆதிதிராவிடர் காலனிகளும் அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் 71 ஆதிதிராவிடர் காலனிகளும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வசதியில்லாமல் உள்ளன.

(ஆ) நிதி நிலையை அனுசரித்து இவ்வசதி செய்து தரப்படும்.

76—

## பாதாள சாக்கடைத் திட்டம்.

வினா எண். 5783—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாநகராட்சி எல்லைக்குள் இரண்டாவது பாதாள சாக்கடைத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கோவை மாநகராட்சி இரண்டாவது கட்ட பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் அனைத்தும் முழுமையாக முடிக்கப்பட்டு திட்டம் 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

77—

## டி. வி. மற்றும் ரேடியோ அமைத்தல்.

வினா எண் 6454—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொளக்குடி ஊராட்சி பணங்குளத்தில் டி. வி., ரேடியோ அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1991-92-ம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர் பட்டியல்கள் ஆண்டு வருவாய்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள்.

1991-92ஆம் ஆண்டில் இக்குடியிருப்பிற்குத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சிகளின் நிதிகளிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

78—

## தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பெட்டி.

வினா எண் 6460—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ருத்திரசிந்தாமணி ஊராட்சி, பழுக்காட்டிற்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும் வானொலிப் பெட்டியும் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1991-92-ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் ஆண்டு வருவாய்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள்.



1991-92-ஆம் ஆண்டில் இக்குடியிருப்பிற்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

வானொலிப் பெட்டிகளை தொடர்புள்ள ஊராட்சிகளின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

79—

## குட்டை, குளம் பராமரித்து படித்துறை கட்டுதல்.

வினா எண் 6574—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரம் பூந்தோட்டத்தில் ஊராட்சிக்குச் சொந்தமான குட்டை, குளத்தை பராமரித்து படித்துறை கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பெருமகளூர் பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் பெருமகளூர் நகரில் பூந்தோட்டத்தில் உள்ள குட்டை, குளத்தை பராமரித்து படித்துறை கட்டித்தர செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

80—

## படித் துறை அமைத்தல்.

வினா எண். 6822—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள வீரமுடையாநத்தத்தில் படித்துறை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வீரமுடையாநத்தம் ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் வீரமுடையாநத்தத்தில் படித்துறை கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்படவில்லை.

81—

தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்.

வினா எண். 9451—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதியில் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத ஊர்களுக்கு அவற்றை வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நிதி ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு தொலைக் காட்சிப் பெட்டிகள் இல்லாத ஊர்களுக்கு அவற்றை வழங்க அரசு ஆவன செய்யும்.

82—

சோதனைச் சாவடி மாற்றம்.

வினா எண். 707—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், குப்பதேவன் எல்லையில் வைக் கப்பட்டிருக்கும் சோதனைச் சாவடியை புதுக்கோட்டை மாவட்ட எல்லையான கட்டுமாவடியில் அமைக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. ஐ. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டத்தில் குப்பத் தேவன் சோதனைச் சாவடி உள்ளது. இது தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து நெல்/அரிசியை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கடத்திச் செல்ல இயலாத வகையில் தடை செய்யும் முகத்தான் அமைக்கப்பட்டுள்ளது. கட்டுமாவடி புதுக் கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்தில் உள்ளது. தஞ்சாவூர் மாவட்ட எல்லையில் அமைக்கப்பட்ட இச்சோதனைச் சாவடியை வேறு எல்லைக்கு மாற்றயியலாது. இதனால் தஞ்சாவூர் மாவட்டத்தில் விளையும் நெல்/அரிசி அண்டை மாவட்டத்திற்கு கடத்தப்பட்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசால் செயல்படுத்தப்படும் ஏகபோக கொள்முதல் திட்டத்தை பாதித்துவிடும். எனவே, மேற்படி சோதனைச் சாவடியை மாற்றியமைக்க இயலாது.

83—

உணவுப் பொருள் வழங்கல்.

வினா எண். 3470—திரு. பு. எம். ரங்கராஜன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் பல குடும்பங்களில் கணவன்-மனைவி இருவருமே பணிக்குச் செல்வதால் அவர்கள் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்து உணவுப் பொருள்களை வாங்க நகரில் உள்ள Re idence A soci tion மூலமாக பொருள்களை விநியோகிக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. ஐ. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

குடியிருப்போர் நலச் சங்கம் மூலமாக உணவுப் பொருள் விநியோகிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

84—

## பாதுகாப்புக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 4777—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அமராவதி பழைய ஆயக்கட்டு பகுதிகளான குமரலிங்கம், மடத்துக்குளம், கணியூர் போன்ற பகுதிகளில் உற்பத்தியாகும் நெல்லை பாதுகாப்பாக வைக்க கிருஷ்ணாபுரத்தில் ( Warehousing Corporation ) கட்டிடம் கட்டும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

அமராவதி பழைய ஆயக்கட்டுப் பகுதிகளான குமரலிங்கம், மடத்துக்குளம், கணியூர் போன்ற பகுதிகளில் சேகரிக்கப்படும் நெல் மற்றும் அரிசி, கிருஷ்ணாபுரத்திலிருந்து 15 கி. மீ. தொலைவில் உடுமலைப்பேட்டையில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளில் வைக்கப்படுகின்றது. மேலும், உடுமலைப்பேட்டையிலேயே மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம் (மைய அரசு நிறுவனம்) 3,539 டன் கொள்ளளவு கொண்ட வாடகை கிடங்குகளை கொண்டு செயல்பட்டு வருகிறது. கிருஷ்ணாபுரத்திலிருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ள பல்லடத்திலும் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் 4,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் கிருஷ்ணாபுரத்தில் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் கட்டிடம் கட்டும் உத்தேசம் ஏதும் இல்லை.

85—

## அத்தியாவசியப் பண்டங்களை விநியோகிக்கும் திட்டம்.

வினா எண். 5149—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பண்டங்களாக புளி, மிளகாய், பருப்பு போன்றவைகளை விநியோகிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருள்களான அரிசி, சர்க்கரை போன்ற பண்டங்கள் விற்பனை செய்யப்படுகிறது. கட்டுப்பாடற்ற பொருட்களான புளி, மிளகாய், பருப்பு போன்றவைகளை நியாயவிலைக் கடைகளின் மூலம் விநியோகிக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) இருப்பினும் புளி, மிளகாய், பருப்பு போன்ற முக்கியப் பொருட்களை கூட்டுறவுச் சங்க கடைகள் பலவற்றில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

86—

## ஒரு எஸ்டேட்டிற்கு ஒரு ரேஷன் கடை.

வினா எண். 5771—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வால்பாறை பகுதியில் ஒவ்வொரு எஸ்டேட்டிற்கும் ஒரு ரேஷன் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வால்பாறை பகுதியில் உள்ள 41 எஸ்டேட்டுகளுக்கும், 50 நியாயவிலைக்கடைகள் தற்போது உள்ளதால் புதிதாக நியாயவிலைக் கடை திறக்கும் வாய்ப்பு இல்லை.

87—

அமுத அங்காடியை நிரந்தரமாக்க.

வினா எண். 7210—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கல்லூர்ணிக் காட்டில் பகுதி நேரமாக செயல்படும் அமுத அங்காடியை நிரந்தரமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் கல்லூர்ணிக் காட்டல் பகுதி நேரமாக செயல்படும் நியாயவிலைக் கடையை முழுநேரக் கடையாக்கும் சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை

88—

ஓய்வூதியம் வழங்கும் திட்டம்.

வினா எண்.7472—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நுகர்பொருள் வகணிபக்கழக ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அமல்படுத்த அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர்களுக்கு தற்போது ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அமிலில் இல்லை. அமுல்படுத்த எவ்வித திட்டமும் தயாரித்து தமிழ்நா நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசுக்கு அனுப்பவில்லை.



89—

விடுப்புப் பயணச் சலுகை.

வினா எண். 7473—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நுகர்பொருள் வாணிபக் கழகத்தினருக்கு ''விடுப்புப் பயணச்சலுகையினை'' அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

90—

வாகன வசதி அதிகரிப்பு.

வினா எண் 4934—திருமதி என். கனகவல்லி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தனியார் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்களை ஏற்றிவரும் வாகனங்களில் நெரிசல் அதிகமாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இத்தொழிலாளர்களுக்கு கூடுதல் வாகன வசதி செய்துதர அரசு வலியுறுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) தொழிலாளர்களை ஏற்றிவரும் வாகனங்களில் நெரிசல் இருப்பதாக அரசுக்கு தகவல் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

[1992 செப்டம்பர் 25

91—

நிவாரணத் தொகை விவரம்,

வினா எண். 8253 திரு எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நலிவுற்ற தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில வழங்கப்பட்ட நிவாரணத் தொகை ஆண்டு வாரியாக எவ்வளவு?

(ஆ) எவ்வளவு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) நலிவுற்ற தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில் ஆண்டுவாரியாக வழங்கப்பட்ட நிவாரணத் தொகை—

| | ரூபாய் |
|---|---|
| 1990 .. .. .. | 97,800 |
| 1991 .. .. .. | 86,11,400 |
| 1992 .. .. .. | 1,72,400 |

(ஆ) 22,842 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

92—

பொட்டானிக்கல் கார்டன் அமைக்க நடவடிக்கை.

வினா எண் 8079—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வால்பாறையில் "Botanical Garden" அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?.

(ஆ) ஆம் எனில், எப்போது?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

93—

காப்பி வாரியம் மூலம் விவசாயிகளுக்கு விலை நிர்ணயம் செய்தல்.

வினா எண் 8951—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காப்பி வாரியத்தினால் (Coffee Board) உரிய காலத்திற்குள் காப்பி பயிரிடும் விவசாயிகளுக்கு உரிய விலை நிர்ணயம் செய்யாமலும், கொள்முதல் செய்யப்பட்டவற்றிற்குரிய தொகை பட்டுவாடா செய்யாமலும் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

94—

சமுதாயக் கிணறு செயல்படாமல் இருத்தல்.

வினா எண் 9227—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் வடக்கு கிராமத்தில் இருக்கும் சமுதாயக் கிணறு (விவசாயத் துறை) செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சமுதாய ஆழ்குழாய்க் கிணறு செயல்படுத்த எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) ஆழ்குழாய்க் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 20 எச்.பி. மோட்டார் இயங்கத் தேவையான 350 வோல்ட் மின்சாரம் கிடைக்கின்ற போதெல்லாம், மோட்டார் செயல்பட்டு வருகிறது.

(ஆ) வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கீரமங்கலம் வடக்கு கிராமத்தில் அமைக்கப்பட்டு இயங்கி வரும் ஆழ்குழாய்க் கிணற்றில், 20 எச்.பி. நீர்மூழ்கி இரவையின் மோட்டார் இயங்குவதற்கு குறைந்தது 350 வோல்ட் மின் அழுத்தம் தேவைப்படுகிறது. இக்குழாய்க் கிணற்றுக்கு பிப்ரவரி 1992 முதல் 250 வோல்ட்க்கும் குறைவாகவே மின் அழுத்தம் கிடைத்தது. பிப்ரவரி 1992 மற்றும் மார்ச் 1992 ஆகிய மாதங்களில் 350 வோல்ட் மின் அழுத்தம் கிடைக்கும் நேரங்களில் மட்டுமே தினசரி 5 அல்லது 6 மணி நேரம் இயங்கியது. இதனால் அனைத்து விவசாயிகளுக்கும் தண்ணீர் பகிர்ந்து வழங்க இயலவில்லை. பிப்ரவரி 1992-ல் 157 மணி நேரமும் மார்ச் 1992-ல் 176 மணி நேரமும் மட்டுமே ஆழ்குழாய்க் கிணற்றின் மோட்டார் இயங்கியது.

தற்பொழுது 1-4-1992 அன்று ஒரு ஸ்டெப் அப் டிரான்ஸ்பார்மர் வோல்டேஜ் பூஸ்டர் பொருத்தப்பட்டு மோட்டார் பம்ப்செட் நல்லமுறையில் தொடர்ச்சியாக இயங்கி வருகிறது.

95—

தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்தல்.

வினா எண். 9470—டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்புக்கு விலை நிர்ணயம் செய்ததுபோல் தேயிலைக்கும் விலை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?





விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) கரும்புக்கு விலை நிர்ணயம் செய்ததுபோல் தேயிலைக்கும் விலை நிர்ணயம் செய்ய அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

96—

வீடு இல்லாத சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.

வினா எண் 4843—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ஈரோடு, சென்னை, மதுரை போன்ற இடங்களில் கட்டப்பட்டுள்ள வீடுகளில் சிலவற்றை வீடு இல்லாத சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கி ஒதுக்கிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

இல்லை.

97—

மாடிக் கட்டிடத் திட்டத்தின் மூலம் நில உரிமை மறுக்கப்படுவதை நிறுத்த நடவடிக்கை.

வினா எண் 8138—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாடிக் கட்டிட திட்டத்தின் மூலம் நில உரிமை மறுக்கப்படுவதை நிறுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

98—

சத்துணவுப் பணியாளர்களை முழுநேரப் பணியாளர்களாக்க நடவடிக்கை.

வினா எண் 7454—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் சத்துணவுப் பணியாளர்களை முழுநேரப் பணியாளர்களாக்கி கோடை விடுமுறை நாட்களிலும் ஊதியம் வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

இல்லை.

99—

கால்நடை மருத்துவமனைகள்

வினா எண் 7743—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை மருத்துவமனைகள் கட்டப்பட சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் பங்கு எவ்வளவு?

(ஆ) அரசின் மானியமாக எவ்வளவு அளிக்கப்படுகிறது?



(இ) கால்நடை மருத்துவமனை கட்ட அரசே முழு மானியம் அளிக்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க ஆகும் செலவில் முதல் கால்நடை மருந்தகத்திற்கு 25 சதவீதமும் இரண்டாவது மருந்தகத்திற்கு 50 சதவீதமும், மூன்றாவது மருந்தகத்திற்கு 75 சதவீதமும், நான்கு மற்றும் அதற்கு மேலும் உள்ள மருந்தகத்திற்கு 100 சதவீதமும், சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் ஏற்க வேண்டும். மீதம் அரசின் மானியமாகும்.

(இ) நிரந்தர கட்டிடம் கட்ட அரசு மானியத் தொகை மட்டும்தான் வழங்க இயலும்.

100—

கால்நடை மருந்தகம் தொடங்குதல்.

வினா எண் 7810—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை ஒன்றியம், இ. வலையப்பட்டியில் கால்நடை மருந்தகம் ஆரம்பிக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1992 செப்டம்பர் 25

101—

சம்புவராயர் மாவட்டத்தில் முதன்மை நீதிமன்றம் அமைத்தல்.

வினா எண் 6818—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் முதன்மை நீதிமன்றம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: சட்டத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) விரைவில் அமைக்கப்படும்.

102—

ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 8250—திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர்:

(அ) கள்ளக்குறிச்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



1992 செப்டம்பர் 25]

103—

சார்பு நீதிமன்றத்திற்கு நிரந்தரக் கட்டிடம்:

வினா எண் 9407—திரு. என். ஜி. வேணுகோபால்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராணிப்பேட்டையில் அண்மையில் புதிதாக துவக்கப்பட்ட சார்பு நீதிமன்றத்திற்கு (Sub-Court) நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர்: வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம் ராணிப்பேட்டையில் புதிதாக துவக்கப்பட்ட சார்பு நீதிமன்றத்திற்கு நிரந்தரமாக கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

104—

சாதிச்சான்று வழங்கல்.

வினா எண் 3946—திரு. கே. சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

(அ) மலைசாதி மக்களுக்கு சாதிச்சான்று, கோட்ட வருவாய் அலுவலரால் வழங்கப்படுவதைத் தவிர்த்து வட்டாட்சியரால் வழங்க அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

(ஆ) மேற்படிச் சான்று அளிக்க 40 ஆண்டுகளுக்கு முன்புள்ள பத்திரப்பதிவு ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்கின்ற நிலை மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

(அ) வட்டாட்சியர்களிடமிருந்து பொய் சாதிச் சான்று பெறுவதை தடுக்கவும் உண்மையான பழங்குடி மக்கள் அரசு வழங்கும் சலுகைகளைப் பெறவும், பழங்குடியினருக்கான சாதிச் சான்றுகள்

[1992 செப்டம்பர் 25

பல நிலைகளில் தீர விசாரணை செய்ய வேண்டியது மிகவும் அவசியமானதாலும் தற்போது ஒரு நபருக்கு ஒரு நிரந்தர சாதிச் சான்று வழங்கப்படுவதால் இவை நன்கு விசாரணை செய்து வழங்க வேண்டியது அவசியமானதாலும், பழங்குடியினர் சாதிச்சான்று கோட்டாட்சியரால் வழங்கப்படுவதுதான் முறையானது. மேலும் இச்சாதிச் சான்று கோட்டாட்சியர் வழங்குவதைத்தான் மத்திய அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, பழங்குடியினருக்கு கோட்டாட்சியரால் சாதிச் சான்று வழங்கப்படுவதைத் தவிர்த்து வட்டாட்சியரால் வழங்க ஏற்பாடு செய்வது சாத்தியமாகாது.

(ஆ) பொதுவாக சாதிச் சான்றுகள் விசாரணையின் அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றன. சாதிச் சான்று வழங்கும் அலுவலர்களுக்கு சந்தேகம் ஏற்படும் சில நிகழ்வுகளில் மட்டுமே விண்ணப்பதாரர் மற்றும் அவரது பெற்றோரின் சாதியை அறிய நிலங்கள் மற்றும் வீடுகளில் விற்பனைப் பத்திரங்கள் சரிபார்க்கப்படுகின்றன. பழங்குடியினர் சாதிக்கான சலுகைகளை பெற தற்போது எழுதப்படும் விற்பனைப் பத்திரங்களில் (Sale deed) பொய்யான சாதி விவரங்கள் குறிப்பிடப்பட்டு எழுதப்படுவதால் 'பழங்குடியினர் என சாதிப் பிரிவினை செய்யப்பட்ட 1950-ம் ஆண்டிற்கு முன் உள்ள பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட சாதி சரியென சான்று வழங்கும் அலுவலர் முடிவெடுக்க வேண்டிய நிர்பந்தம் உருவாகிறது. எனவே இப்பத்திரங்கள் "சில நிகழ்வுகளில்" மட்டுமே கேட்கப்படுகிறது. ஆயினும், அவை கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வலியுறுத்தப்படவில்லை.

105—

## ஒய்வுபெற்ற இராணுவ வீரர் குடும்பங்களுக்கு விவசாய நிலம் ஒதுக்குதல்.

வினா எண் 6034—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒய்வு பெற்ற இராணுவ வீரர் குடும்பங்களுக்கு அரசு ஆணை 24426/2/7111, வருவாய்த்துறை 9–7–1968-ன்படி விவசாய நிலம் ஒதுக்கப்பட்டதை தனியார் பட்டா போட்டு விற்றுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

106—

## இனாம் ஒழிப்புச் சட்டம்.

வினா எண் 6299—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுததிரம் ஊராட்சி ஒன்றியப் பகுதி, கோடாரங்குளம் ஊராட்சிக்குட்பட்ட, இனாம் கோடாரங்குளம் கிராமம், இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு, இனாம் ஒழிப்புச் சட்டத்தின் பயன், பட்டா வழங்கப்பட்ட விவசாயிகள் அதனை அடைய முடியாமல் அவதிப்படுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :—

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்,அம்பாசமுத்திரம் வட்டம், கேடாரங்குளம் ஊராட்சி ஒன்றியப்பகுதி, இனாம் கோடாரங்குளம், கோடாரங்குளம் கிராமம், இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு விவசாயிகளுக்குப் பட்டா வழங்கப்பட்டது குறித்த வழக்கு ஒன்று டில்லியிலுள்ள இந்திய உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே உறுப்பினர் கேட்டுள்ள விபரங்களை இம்மாமன்றத்தில் தெரிவித்தால் நிலுவையில் உள்ள வழக்கின் தன்மையைப் பாதிக்கப்படும். எனவே, இது பற்றிய விவரங்களை இம்மாமன்றத்தில் தெரிவிக்க இயலாது.

107—

## எலக்ட்ரானிக் மற்றும் எலக்ட்ரிக் சாதனங்களுக்கு ஒரேவிதமான வரிவிதித்தல்.

வினா எண் 6652—திரு. உ. பலராமன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மின் சாதனங்களுக்கும் மின்னணு சாதனங்களுக்கும் மாறுபட்ட விற்பனை வரி விதிப்பினால் 'எலக்ட்ரிக்' என்ற பெயரில் 'எலக்ட்ரானிக்' சாதனங்கள் விற்கப்பட்டு வரி ஏய்ப்பிற்கான வாய்ப்புகள் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) எலக்ட்ரிக் சாதனங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் 'எலக்ட்ரானிக்' சாதனங்களுக்கும் 'எலக்ட்ரிக்' சாதனங்களுக்கும் ஒரே விதமான வரிவிதிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) எலக்ட்ரானிக் சாதனங்களைவிட எலக்ட்ரிக் சாதனங்களுக்கான வரிவிகிதம் அதிகமாக உள்ளதால் 'எலக்ட்ரானிக்' சாதனங்களை எலக்ட்ரிக் சாதனங்கள் எனக் கூறி விற்றால் வரி வசூல் அதிகமாகுமே தவிர வரி ஏய்ப்பு ஏற்படாது.

(ஆ) எலக்ட்ரிக் சாதனங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் 'எலக்ட்ரானிக்' சாதனங்களுக்கும், 'எலக்ட்ரிக்' சாதனங்களுக்கும் ஒரே விதமான வரி விதிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

108—

தருவைக்குளம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு மின்வசதி கிடைக்க நடவடிக்கை.

வினா எண் 4930—திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதூர் விளாத்திகுளம், தருவைக்குளம் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு மின் வசதி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மேற்கூறிய பள்ளிகளில் மின்வசதி குறித்து, பரிசீலனை செய்யப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.





109—

கல்வியாண்டின் துவக்கத்திலேயே பள்ளிகளைத் துவக்க நடவடிக்கை.

வினா எண் 6105—திரு. மா. சின்னசாமி : மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்வியாண்டின் துவக்கத்தில் (ஜூன், ஜூலை மாதங்களில்) புதிய உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் துவக்க அனுமதியளிக்காமல் காலதாமதம் செய்வதனால் மாணவர் சேர்க்கையில் சிரமம் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கல்வியாண்டின் துவக்கத்திலேயே பள்ளிகளை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மாணவர்கள் சேர்க்கையில் சிரமம் ஏற்படுவதை தடுப்பதற்காக, கல்வியாண்டின் துவக்கத்திலேயே பள்ளிகளைத் துவக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

110—

மகளிருக்கென தனி மேல்நிலைப்பள்ளி அமைத்தல்.

வினா எண் 8540—திரு. கே. கந்தசாமி. : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தலைவாசல் மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து மகளிருக்கென தனி மேல்நிலைப் பள்ளி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள நடைமுறைப்படி, மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து புதிய அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தப்பட வேண்டும். பின்னர்

மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட வேண்டும். மேல்நிலைப் பள்ளியை இரண்டாக பிரித்து மகளிர் மேல்நிலைப் பள்ளி ஏற்படுத்துவது என்பது நடைமுறையில் இல்லை.

111—

**ஒப்பந்த அடிப்படை ஆசிரியர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமித்தல்.**

வினா எண் : 8878—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களை நியமிப்பதை தடை செய்து வேலையில் அமர்த்தும் போதே நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படுபவர்கள் இரண்டு ஆண்டுகள் முடிந்த பின்பு ஊதிய விகிதத்திற்கு கொண்டு வரப்படுவதால் அவர்களின் நியமனம் நிரந்தரமாகவே கருதப்படுகிறது.

112—

**இளங்கலை வகுப்புகளில் உள்ள இடங்களை அதிகரித்தல்.**

வினா எண் 1081—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் இளங்கலை வகுப்புகளில் உள்ள இடங்களை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

கல்லூரியின் தேவைக்கு தக்கவாறு, பதிவாளரால் கூடுதல் இடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு வருகிறது. 1991–92-ல் 195 இடங்கள் கூடுதலாக இக்கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.



113—

**தமிழ்நாடு முழுவதும் உடல் பரிசோதனை முகாம் நடத்தும் திட்டம்.**

வினா எண் 2678—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு முழுவதும் மருத்துவத் துறை சார்பில் "உடல் பரிசோதனை" முகாம் நடத்தும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் முழு விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டத்தின்கீழ் உடல் பரிசோதனை முகாம்கள் தற்போது தமிழ்நாடு எங்கும் தொடர்ந்து நடந்து வருகிறது.

114—

**கோவை அரசு மருத்துவக் கல்லூரியும் அரசு மருத்துவ மனையும் ஒரே இடத்தில் அமைக்க நடவடிக்கை.**

வினா எண் 3731—திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மருத்துவக் கல்லூரியும், கோவை அரசு மருத்துவ மனையும் ஒரே இடத்தில் அமைத்து செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

இப்பொருள் பற்றி கருத்துரு ஏதும் இல்லை.

115—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 6191—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர் தொகுதி அத்திமூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்

விடை—

மாண்புமிகு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், போளூர் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக் கேற்ப, தற்போது ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே அத்திமூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வாய்ப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

116—

நகரப் பேருந்தை சீதாம்பாள்புரம் வரை நீடித்தல்.

வினா எண் 633—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டையிலிருந்து உதயசூரியபுரம் வழியாக பாலத்தளி துர்க்கையம்மன் கோவிலுக்குச் செல்லும் நகரப் பேருந்தை எண்ணானிவயல், மணவயல் வழியாக சீதாம்பாள் புரம் வரை நீட்டித்துத் தரவும் எட்டு சிங்கிள் ஆக மாற்றி அமைக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பாலத்தளியிலிருந்து சீதாம்பாள்புரம் வழி எண்ணானி வயல், மணவயல் வரையிலான 4 கி. மீ. தூரத்திற்கு சாலை மிகவும் குறுகலாக பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே, வினாவில் கோரியுள்ளதுபோல் பேருந்து இயக்குவது தற்போது இயலாது என்று கருதப்படுகிறது.

117—

கூடுதல் பஸ் வசதி செய்தல்

வினா எண் 4329—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குடி தொகுதியில் கொத்தமங்கலத்திலிருந்து பேராவூரணிக்கு பஸ் போக்குவரத்தும், கூடுதல் பஸ் வசதியும் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தடம் எண் 7 பேராவூரணி கொத்தமங்கலம் தடத்தில் தினசரி 10 நடைகள் தற்பொழுது இயக்கப்படுகிறது. புதிய நகரப் பேருந்துகள் இயக்கப்படும்போது இத்தடத்தில் கூடுதலாக சில நடைகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

118—

பிச்சாவரம் செல்ல தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்து.

வினா எண் 8234—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரத்திலிருந்து நற்கந்தன்குடி, ராதாவிளாகம் வழியாக பிச்சாவரம் செல்ல தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது ?

42 53-287—10

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்திலிருந்து சிதம்பரநாதன் பேட்டை, நற்கந்தன்குடி, ராதாவிளாகம் வழியாக பிச்சாவரம் சுற்றுலா மையம் வரை தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ஒரு நகரப் பேருந்தை நாளொன்றுக்கு 8 நடைகள் இயக்கி வருகிறது.

119—

தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்தல்.

வினா எண் 1135—திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) எட்டயபுரத்தில், 30 லட்சத்துக்கு மேற்பட்ட கைத்தறித் துணிகள் கோ-ஆப்டெக்ஸில் தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை உடனடியாக கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எட்டயப்புரத்தில் செயல்பட்டு வரும் 11 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 31–7–1991 அன்று ரூ. 23.63 லட்சம் மதிப்புள்ள சரக்குகள் இருப்பு இருந்தது, அவற்றில் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) ரூ. 22.03 லட்சம் மதிப்புள்ள சரக்குகளை 30–8–1991க்குள் கொள்முதல் செய்தது.

120—

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் விசைத்தறிக்கூடம் அமைத்தல்,

வினா எண் 8694— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் எங்கெங்கு விசைத்தறிக்கூடம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக ஆய்வு செய்யப்பட்டுள்ளன ?

(ஆ) நத்தம் தொகுதியிலும் இத்தகைய வாய்ப்புகள் உள்ளதாக கண்டறியப்பட்ட விவரம் என்ன ?

(இ) எப்போது விசைத்தறிக் கூடம் அங்கெல்லாம் அமைக்கப்படவிருக்கின்றன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் புதியதாக விசைத்தறிக்கூடம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நத்தம் தொகுதியில் விசைத்தறிக்கூடம் அமைப்பது தொடர்பாக பிரேரணை ஏதும் பெறப்படவில்லை.

(இ) விசைத்தறிக்கூடம் தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் புதிதாக ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை.

121—

பாபநாசம் நகரிலுள்ள பயணியர் விடுதியை புதுப்பித்தல்

வினா எண். 115—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாபநாசம் நகரில் அமைந்துள்ள பயணியர் விடுதி பழுதடைந்து பல வருடங்களாக உபயோகத்தில் இல்லாமல் பூட்டியே கிடப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விடுதியை புதுப்பித்துத் தர அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

[1992 செப்டம்பர் 25

122—

பணிமுத்தாறு நீர்த்தேக்கம்

வினா எண் 2448—திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தின் உள்ளே அமைந்துள்ள பெருங்கால் உடைந்து கிடப்பதை புதுப்பிக்க லைனிங் வேலை செய்வதற்கு ஆய்வு செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இது குறித்து விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள கண்காணிப்புப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு), திருச்சி அவர்கள் கேட்கப்பட்டுள்ளார்.

123—

மின்கம்பத்திலுள்ள பழுதடைந்த வயர்களை மாற்றுதல்

வினா எண் 4903—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தில் கருவந்தா கிராமத்தில் மின் கம்பத்திலுள்ள பழுதடைந்துள்ள வயர்களை மாற்றி புதிய வயர்களை போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் :

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம் கருவந்தா கிராமத்தில் பழுதடைந்த மின்கம்பிகள் ரூ. 38,630 என்ற மதிப்பீட்டில் ஏற்கனவே மாற்றப்பட்டு அதற்கான பணி அக்டோபர் 1991-ல் முடிக்கப்பட்டு விட்டது.



1992 செப்டம்பர் 25]

124—

வால்பாறையிலுள்ள பொதுப் பணித் துறை நிலங்களை வருவாய்த் துறைக்கு மாற்றுதல்

வினா எண். 5781—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வால்பாறையிலுள்ள மலைப் பகுதியில் எந்த ஒரு பயனும் இல்லாமல் உள்ள பொதுப் பணித் துறை நிலங்களை வருவாய்த் துறைக்கு மாற்றிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

125—

பி. ஏ. பி. பாசன வாய்க்காலை க. பரமத்தி பகுதிக்கு விரிவாக்கும் திட்டம்.

வினா எண். 2913—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வெள்ளக்கோவில் பகுதி குருக்கத்தியோடு நிற்கும் பி. ஏ. பி. பாசன வாய்க்காலை க. பரமத்தி பகுதிக்கு விரிவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கருக்கு விரிவாக்கப்படும்?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

126—

ஆதிதிராவிட மக்களின் கோவில்களுக்கு இலவச மின் இணைப்பு

வினா எண். 5824—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்திலுள்ள ஆதிதிராவிட மக்களின் கோவில்களுக்கு இலவச மின் இணைப்பு கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தமிழகத்திலுள்ள அனைத்து மதங்களைச் சார்ந்த கோவில்களுக்கும் சலுகை அடிப்படையில் மின்சாரம் அளிக்கப்படுகிறது. ஆதி திராவிட மக்களின் கோவில்களுக்கு இலவச மின் இணைப்பு கொடுக்க திட்டம் ஏதும் தமிழ்நாடு மின் வாரியத்தின் வசம் இல்லை.

127—

பஞ்சந்தாங்கி அணை.

வினா எண் 6275—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியத்தில் செந்துறை அருகில் பஞ்சந்தாங்கி அணை புதுக்கோட்டை அருகில் பெத்தாங்குழி அணை ஆகியவை கட்டும் பணிக்கான சர்வே முடிந்தும் கட்டுமானப் பணி துவங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் கட்டுமானப்பணி துவங்கிட செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:



(அ) மற்றும் (ஆ) பஞ்சந்தாங்கி அணைத் திட்டத்தின் சாத்தியக் கூறு அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. பெத்தாங்குழி அணைத் திட்டம் சிக்கனமற்றது என்பதால் அரசு அத்திட்டத்தைக் கைவிட்டது.

128—

ஜீவா நகரில் ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண். 6637—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரம் ஜீவா நகரில் ஒற்றை விளக்கு போட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப் பணித் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூர் ஜீவா நகரில் உள்ள குடிசை வீடுகள் நகர பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டிருப்பதால் தற்பொழுது உள்ள அரசு விதிகளின்படி இலவச குடிசை மின்விளக்கு பெற அவைகள் தகுதி இல்லை.

129—

மீனவர் காலனிக்கு ஒற்றை விளக்கு.

வினா எண் 6882—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மந்திரிப் பட்டினத்தில் புதிதாக கட்டப்பட்ட மீனவர் காலனிக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் மந்திரிப்பட்டினத்தில்புதியததாகக் கட்டப்பட்ட மீனவர் காலனிக்கு ஒனற்ற விளக்குகள் பொருத்தக் கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் பெறப்படவில்லை.

130—

## தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண் 6885—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி புதுத்தெரு வடக்கு அண்ணா நகரில் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி புதுத் தெருவில் 15 வீட்டு மின் இணைப்புக்கும், 5 தெரு விளக்குகளும் பொருத்தப்பட்டு ஏற்கெனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. அண்ணா நகரில் தெரு விளக்குகள் கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை.

131—

## காலனி வீடுசள்.

வினா எண் 1848—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஊராட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி புதுநகர் ஆதி திராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

132—

## குமரா குட்டையை புல்டோசர் வைத்துப் பராமரித்தல்.

வினா எண் 2966—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், காரங்குடா குமரா குட்டையை புல்டோசர் வைத்து பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றிய எல்லையிலுள்ள இக்குளம் பாசன குளமாகும். பாசனக் குளத்தை ஒன்றிய நிதியிலிருந்து புல்டோசர் வைத்து பராமரிக்க இயலாது.

133—

## ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித் தருதல்.

வினா எண் 3490—திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கட்டித் தரப்படும் வீடுகள், சென்னையில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மூலம் தொகுப்பு வீடுகள் ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் மட்டும் கட்டுவதற்கு விதிகள் உள்ளன. இதனை மாநகராட்சி எல்லையில் செயல்படுத்த தற்சமயம் விதிகளில் இடமில்லை.

134—

ஆதி திராவிடர்களுக்கு அதிக அளவில் தொகுப்பு வீடுகள் கட்டித் தருதல்.

வினா எண் 3804—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிவகாசி தொகுதியில், ஆதி திராவிடர்கள் தொகுப்பு வீடுகள் அதிக அளவில் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காமராஜர் மாவட்டம், சிவகாசி தொகுதியில் 1991-92 ஆம் ஆண்டில் ரூ 36.611 இலட்சம் செலவில் 205 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர விருதுநகர் மற்றும் வெம்பக்கோட்டை ஆகிய இடங்களில் 381 வீடுகள், ரூ. 67.209 இலட்சம் செலவில் கட்டப்பட உள்ளது. வரும் ஆண்டுகளில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப மேற்கூறிய வட்டத்தில் அதிக வீடுகள் கட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.



135—

தொகுப்பு வீடுகள் கட்டித் தருதல்.

வினா எண் 4122—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீழ்மணக்குடி கிராம காலனிக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) கீழ் மணக்குடி கிராம காலனிக்கு 1988—89 ஆம் ஆண்டில் 14 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1991—92 ஆம் ஆண்டில் மேற்படி காலனியில், தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் பற்றிய குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை

136—

தொகுப்பு வீடுகள் கட்டித் தருதல்.

வினா எண் 4147—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில், மணிக்கொல்லை கிராமத்திற்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மணிக்கொல்லை கிராமத்திற்கு 12 வீடுகள் கட்டிக் கொடுக்க 1991—92 ஆம் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு தற்சமயம் கட்டுமானப் பணிகளும் தொடர்பட்டு வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

[1992 செப்டம்பர் 25

137—

வானொலி மன்றம் அமைத்தல்.

வினா எண் 5398—திரு. ச. புரட்சிமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதி கொட்டாரம் கிராமத்தில் வானொலி மன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம்.

138—

நகராட்சிப் பெருந்தலைவர், மற்றும் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் ஆகியோரின் கீழ் பணிபுரியும் உதவியாளர்கள்.

வினா எண் 5928—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகராட்சிப் பெருந்தலைவர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் ஆகியோருடைய உதவியாளர்களாகப் பணி புரிந்த அரசு ஊழியரே அவர்களுக்கு தேர்தல் நடக்கும் வரை சட்டப் பேரவை உறுப்பினர்களின் உதவியாளர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) அது எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நகராட்சி பெருந்தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் ஆகியோர்களுக்கு தனியாக உதவியாளர்கள் கிடையாது. எனவே அவர்களை சட்டப்பேரவை உறுப்பினர்களின் உதவியாளர்களாக நியமிக்கும் கோரிக்கைக்கு இடமில்லை.



1992 செப்டம்பர் 25]

139—

பகுதி நேர அமுதம் அங்காடி அமைத்தல்.

வினா எண் 4727—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், படப்பனார் வயலில் ஒரு பகுதி நேர அமுதம் அங்காடி அமைக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், படப்பனார் வயலில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

140—

உணவு விடுதிகளில் குறைந்த விலையில் சாப்பாடு.

வினா எண் 9552—திரு கே. செல்வராஜ்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உள்ள உணவு விடுதிகளில் குறைந்த விலையில் சாப்பாடு கொடுக்க தனிச்சட்டம் கொண்டு வரப்படுமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே அமல் படுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டிலுள்ள உணவு விடுதியில் குறைந்த விலையில் சாப்பாடு கொடுக்க தனிச்சட்டம் கொண்டு வரப்படுவது தொடர்பான செயற்குறிப்பு எதும் அரசின் பரிசிலனையில் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1992 செப்டம்பர் 25

141—

கட்டிடத் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியம் மூலம் நிவாரணத் தொகை வழங்கல்.

வினா எண் 8648—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

மழைக்காலங்களில் வேலையின்மையால் பாதிக்கப்படும் கட்டிடத் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியம் மூலம் நிவாரணத் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

மழைக்காலங்களில் வேலையின்மையால் பாதிக்கப்படும் எந்தத் தொழிலாளருக்கும், தொழிலாளர் நல வாரியம் நிவாரணத் தொகை ஏதும் வழங்குவதில்லை.

142—

தொழிலாளர் நல மருத்துவமனை.

வினா எண் 8839—திரு. எம். பெரிய வீரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரிய குளம் நகரில் தொழிலாளர் நல மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

143—

புது கரும்பு ரகங்கள்.

வினா எண் 4460—திரு அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1992 செப்டம்பர் 25]

(அ) விவசாயிகளுக்கு அதிக விளைச்சல் தரக்கூடியதும் சர்க்கரை சத்து அதிகமுள்ளதுமான புது கரும்பு ரகங்களை கோவை ஆராய்ச்சிப் பண்ணையிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் என்னென்ன வகை கரும்புகள்?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

மாநில அரசின் நிர்வாகத்தின் கீழ் தமிழ் நாட்டில் மூன்று இடங்களில் கரும்பு ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. அவை கடலூர், சிறுகமணி மற்றும் மேலாணத்தூர். இம் மூன்று கரும்பு ஆராய்ச்சி நிலையங்களும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் நிர்வகிக்கப்படுகிறது. மேற் கண்ட மூன்று கரும்பு ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து கண்டு பிடிக்கப்படும் புதுரகங்கள், ரகங்கள் வெளியீட்டுக் குழுவின ரால் வெளியிடப்படுகின்றன. 1991 மற்றும் 1992 ஆம் ஆண்டு களில் வெளியிடப்பட்ட புது ரக கரும்புகளின் விவரம் கீழே வருமாறு :

1991—

இவ்வாண்டு கோ. க. 91061 (சி. 82059) என்ற ரகம் அதிக விளைச்சலும், அதிக சர்க்கரைத் சத்தும் உள்ள ரகமாக கருதி, ரகங்கள் வெளியீட்டுக் குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளது. அந்த ரகம் முன்பட்ட நடவிற்கு ஏற்ற ரகம் ஆகும்.

1992—

இவ்வாண்டிற்கு கோ. 8362 மற்றும் கோ. க. 92061 என்ற ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. கோ. 8362 ரகம் நடுபட்டம் மற்றும் பின்பட்ட சாகுபடிக்கு ஏற்ற ரகமாகும். இந்த ரகத்தில் சர்க்கரைச் சத்து மற்றும் மகசூல் கோ. 6304 என்ற ரகத்தைவிட அதிகமாக உள்ளது. கோ. க. 92061 என்ற ரகம், மிக குறைந்த வயதுடைய ரகமாக, ரக வெளியிட்டுக் குழுவினரால் வெளியிடப் பட்டுள்ளன.

(2) கோயமுத்தூரில் மாநில அரசின் கீழ் செயல்படும் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை ஏதும் இல்லை. தவிர மத்திய அரசினால் நிர்வகிக்கப்படும் தேசிய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் கரும்பு இனவிருத்தி நிலையம் ஒன்று கோயமுத்தூரில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்திலிருந்து புது ரக கரும்புகள் ஏதும் வெளியிடப்படுவதில்லை.

144—

வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்.

வினா எண் 8617—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி மாவட்டம், பையூர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தை மையமாகக் கொண்டு வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் துவக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு கு. ப. கிருஷ்ணன். வேளாண்மைத்துறை அமைச்சர்.

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

145—

சத்துணவு பணியாளர்களை முழுநேர ஊழியராக்கல்.

வினா எண் 451—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்துணவுத் திட்ட பணியாளர்களை அரசு முழுநேர ஊழியராக்கி பணி பதிவேட்டுடன் அடிப்படை சம்பளம் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்.

இல்லை.



146—

சத்துணவு மையங்களில் சமையலர் மற்றும் உதவியாளர் ஆகியோருக்கு ஒரே மாதிரியாக ஊதியம் வழங்கல்.

வினா எண் 7455—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்துணவுத் திட்டத்தின் பள்ளி மையங்களில் பணிபுரியும் சமையலர் உதவியாளர் என்ற வேறுபாட்டை நீக்கி ஒரே மாதிரியான ஊதியம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

இல்லை.

147—

உதவித்தொகை தொடர்ந்து வழங்கல்.

வினா எண் 8029—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் 8 ஆம் வகுப்பு வரை படித்த ஏழை பெண்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை ரூ. 5,000 தொடர்ந்து வழங்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்:

ஆம். எட்டாம் வகுப்பு வரை படித்த ஏழைப்பெண்களின் திருமணத்திற்கு இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின் கீழ் அரசு உதவித் தொகையான ரூ. 5,000 தொடர்ந்து வழங்கப்படும்.

148—

தமிழகத்திலுள்ள கால்நடை மருத்துவமனைகள்.

வினா எண் 7420—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 செப்டம்பர் 25

(அ) தமிழகத்தில் எங்கெங்கு கால்நடை மருத்துவமனைகளில் கால்நடை அறுவை சிகிச்சைக்கான வசதிகள் மற்றும் எக்ஸ்ரே வசதிகள் உள்ளன?

(ஆ) எந்தெந்த மருத்துவமனைகளில் இவ்வசதிகளுக்கான விரிவாக்கம் செய்ய அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழகத்திலுள்ள அனைத்து கால்நடை மருத்துவமனைகளிலும் அறுவை சிகிச்சைக்கான வசதிகள் உள்ளன. பெரிய அளவிலான அறுவை சிகிச்சைகள் பிரதம மருத்துவமனைகளில் நடைபெற்று வருகின்றன. தற்போது மதுரை மாவட்டம் தல்லாகுளம் பிரதம மருத்துவமனையில் எக்ஸ்ரே வசதிகள் உள்ளன. மற்றும் பிரதம மருத்துவமனை கோயம்புத்தூரில் எக்ஸ்ரே வசதிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**149—**

## அரசு இறால் பண்ணை.

வினா எண் 8781—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் எங்கெங்கு அரசு இறால் பண்ணை அமைக்கப்பட்டு செயல்படுகின்றன?

(ஆ) இறால் வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்களிடமிருந்து உவர் நீர் பரப்புகளை குத்தகைக்கு எடுக்க எத்தனை மனுக்கள் வந்தன?

(இ) அவற்றில் எங்கெங்கு யார் யாருக்கு எவ்வளவு பரப்பளவு இதற்காக 30—10—1989-க்குப் பிறகு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது?

(ஈ) அரசின் நெறிமுறைகளின்படி குத்தகைக்கு விடப்பட்டதா என்பதையும், குத்தகை எடுத்தவர்கள் முறையானபடி அங்கு இறால் வளர்ப்பு பணியினை அமைத்துள்ளனரா என்பது பற்றியும் அரசு விரிவான ஆய்வுக்கு உத்தரவிடுமா?



1992 செப்டம்பர் 25]

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:**

விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டுள்ளது.

## விவர அறிக்கை.

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் அரசு இறால் பண்ணை அமைக்கப்பட்டு செயல்படுகின்றன:—

| | |
|---|---|
| (1) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம். | பழவேற்காடு. |
| (2) செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம். | வாணியஞ்சாவடி. |
| (3) தென்னாற்காடு மாவட்டம் .. | பறங்கிப்பேட்டை. |
| (4) தென்னாற்காடு மாவட்டம் .. | கிள்ளை. |
| (5) தஞ்சாவூர் மாவட்டம் .. | தொண்டியக்காடு. |
| (6) தஞ்சாவூர் மாவட்டம் .. | ஏரிப்புறக்கரை. |
| (7) இராமநாதபுரம் மாவட்டம் .. | காரங்காடு. |
| (8) இராமநாதபுரம் மாவட்டம் .. | கண்ணாமுனை. |
| (9) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் .. | புன்னக்காயல். |
| (10) புதுக்கோட்டை மாவட்டம் .. | கட்டுமாவடி. |

(ஆ) இறால் வளர்ப்புக்கு உவர் நீர் பரப்புகளை குத்தகைக்கு எடுக்க மனுக்கள் பெறப்பட்ட விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| (1) முதல் கட்ட விளம்பரம் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் (டிசம்பர் 1989) | 548 |
| (2) 2-வது கட்ட விளம்பரம் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் (ஜூலை 1990) .. .. .. .. | 738 |
| (3) 3-வது கட்ட விளம்பரம் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் (டிசம்பர் 1990) | 1,407 |
| (4) மேற்கூறியவை தவிர காலதாமதமாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் .. .. | 96 |
| ஆக மொத்தம் .. | 2,789 |

(இ) 30—10—1989-க்குப் பிறகு அரசு உவர் நீர் நிலம் கீழ்க்கண்டவாறு இறால் வளர்ப்புக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது:

| மாவட்டம். | குத்தகைக்கு நிலம் பெறப்பட்டவர்களின் எண்ணிக்கை. | பரப்பளவு. (ஹெக்டேரில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. செங்கை-எம்.ஜி.ஆர். .. | 83 | 111 |
| 2. தென்னாற்காடு .. .. | 3 | 7 |
| 3. தஞ்சாவூர் .. .. | 14 | 38 |
| 4. இராமநாதபுரம் .. .. | 6 | 65 |
| 5. வ.உ. சிதம்பரனார் .. | .. | .. |
| 6. கன்னியாகுமரி .. .. | .. | .. |
| மொத்தம் .. | 106 | 221 |

(ஈ) இறால் வளர்ப்புக்கு அரசு நிலம் நீண்டகால குத்தகை அடிப்படையில் அரசு நில ஒதுக்கீடு குறித்து வகுத்துள்ள நெறிமுறைகளுக்குட்பட்டு குததகைக்கு விடப்பட்டது. அரசாணை எண் 510, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் துறை, நாள் 30—10—1989-ன்படி நிலத்தினைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்கள், நிலத்தைப் பெற்ற நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக இறால் வளர்ப்பு பணியினை துவக்க வேண்டும். வங்கிக் கடன் பெறுவதில் தேக்க நிலை காணப்படுவதால் பெரும்பாலான குத்தகைதாரர்கள் இன்னமும் இப்பணியினை துவக்கவில்லை. பணியினை துவக்காமைக்கு விளக்கங்கள் கோரப்பட்டு அவர்கள் தெரிவித்துள்ள காரணங்கள் சரியானவையா எனத் துறை ஆராய்ந்து வருகிறது.

(2) அரசு இறால் வளர்ப்பிற்காக தனியாருக்கு அரசின் உவர்நீர் நிலங்களை குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வது பற்றிய கொள்கையினை மறு பரிசீலனை செய்து இதற்கான





வழிமுறைகளை மறுவெளியீடு செய்து ஆணை வெளியிட்டுள்ளது. மேற்படி அரசு நிலங்களை ஒதுக்கீடு செய்யும் பொருட்டு செய்தித் தாள்களில் விளம்பரங்கள் மேற்கொள்ளப்படும். அவ் விளம்பரங்களின் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ள உயர் மட்டக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு தேர்வு செய்யப்பட்டு நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்படும். ஏற்கெனவே நில ஒதுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு நிலங்கள் விண்ணப்பதாரர்களால் தன்னகப்படுத்தப்படாமல் இருக்கும் இனங்களை ரத்து செய்யுமாறு ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பதாரர்கள் மீண்டும் புதிதாக விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலங்கள் ஒதுக்கப்பட்டு தன்னகப்படுத்தப்பட்ட இனங்களில் பணி முன்னேற்றத்தை ஆராய்ந்து சட்ட திட்டத்திற்குட்பட்டும் நிலங்களை மீண்டும் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கும்படி ஆணையிடப்பட்டுள்ளது.

150—

செயற்கை வைரத் தொழிற்சாலை அமைத்தல்.

வினா எண் 8959—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரில் குடிசைத் தொழிலாக செயல்படுத்தி வரும் செயற்கை வைரம் செய்யும் தொழிலை பெரிய தொழிற்சாலையாக அமைத்து அங்குள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரில் செயற்கை வைரம் செய்யும் தொழிற்சாலை அமைப்பதற்கான கருத்துரு எதுவும் அரசிடம் தற்பொழுது இல்லை. எனினும், தனியார் துறையில் இத்தகைய தொழிற்சாலை அமைக்க எவரேனும் முன்வருங்கால், அரசு தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்க தயாராக உள்ளது.

151—

வேதாரண்யத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.

வினா எண் 5422—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தாலுக்கா தலைநகரான வேதாரண்யத்தில் சப்-மாஜிஸ்திரேட் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தினை தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் :

வேதாரண்யத்தில் சப்-மாஜிஸ்திரேட் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களை அமைக்கும் செயற்குறிப்பு சென்னை உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

152—

போளூரை கோட்டமாக உயர்த்தல்.

வினா எண் 6802—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தின் மையப்பகுதியான போளூரை கோட்டமாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

153—

வீட்டு மனைப்பட்டா வழங்குதல்.

வினா எண் 7671—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி உத்தமசோழமங்கலம் கிராமத்திற்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?





விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) மேற்படி கிராமத்திற்கு 8—1—1991 அன்று வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டு விட்டது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

154—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்.

வினா எண் 7686—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள பெரியநற்குணத்திலுள்ளவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டு விட்டது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

155—

முதுகலைபட்ட வகுப்புகள் புதியதாகத் தொடங்குதல்.

வினா எண் 1079—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் எம்.ஏ., எம்.காம். மற்றும் எம்.எஸ்ஸி. வகுப்புகள் புதிதாக தொடங்க கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

156—

சட்டக் கல்விக்கு தனி பல்கலைக்கழகம்.

வினா எண் 1950— திரு. கே. மரியம்-உல் ஆசியா மற்றும் திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சட்டக் கல்விக்கான தனி பல்கலைக் கழகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வித் துறை அமைச்சர்:

சட்டக் கல்விக்காக தனியே பல்கலைக் கழகம் ஏற்படுத்த தற்போது உத்தேசம் இல்லை. அதுகுறித்த செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

157—

உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண் 3900— திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பொள்ளாச்சி அரசு பெண்கள் உயர்நிலைப் பளளியை மேனிலைப் பள்ளியாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

இல்லை.





158—

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண். 5746— திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேதாரண்யம் தொகுதி, வெள்ளப்பள்ளம் அரசு உயர் நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்ற முன்வைப்புத் தொகை, இடம், கட்டிட வசதிகள், தேவையான ஆவணங் களை உரிய அலுவலர் வாயிலாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மேல்நிலைப் பள்ளியாக எப்போது தொடங்கப்படும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1991–92 ஆம் கல்வியாண்டில் மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட பள்ளிகளின் பட்டியலில் இப்பள்ளி இடம்பெறவில்லை. வரும் ஆண்டுகளில் தேவையின் அடிப்படையில் தகுந்த கருத்துரு பெறப்படும்போது இப்பள்ளி யின் தேவைகள் கருத்திற் கொள்ளப்படும்.

159—

ஆசிரியர்கள் நியமித்தல்.

வினா எண். 5869— டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆரணி தொகுதி, தேவிகாபுரம் அரசு பெண்கள் உயர் நிலைப் பள்ளியில் தேவைக்கேற்ப ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

ஒவ்வொரு ஆண்டும் புதிதாகத் தோற்றுவிக்கப்படும் பணி யிடங்கள் பள்ளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் போது இப்பள்ளி யின் தேவை முறைப்படி ஆய்வு அலுவலர்களால் கருதப்படும்.

160— [1992 செப்டம்பர் 25

அரசு மருத்துவமனையை 20 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக உயர்த்தல்.

வினா எண் 1548— திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், குத்தாலம் பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையை 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

இல்லை.

161—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மின் இணைப்பு.

வினா எண். 3124—டாக்டர். மு. அம்மமுத்துப்பிள்ளை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி தொகுதியில் அழகப்பபுரம் கிராம ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மின் இணைப்பு வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





162—

பழனி அரசு பொது மருத்துவமனையை விரிவு படுத்தல்.

வினா எண். 3442—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி நகரில் அரசு பொது மருத்துவ மனையை மேலும் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

163—

மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையில் புதிய படுக்கை வசதி செய்தல்.

வினா எண். 3479—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையில் படுக்கை வசதிகள் போதிய அளவில் இல்லாததால் புதிய படுக்கை வசதிகள் செய்து தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து செய்து கொடுக்கப் படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1992 செப்டம்பர் 25

164—

## காவேரிப்பாக்கத்தில் அரசு மருத்துவமனை அமைத்தல்.

வினா எண். 5952—திரு. எம். முனிரத்தினம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கத்தில் அரசு மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

காவேரிப்பாக்கத்தில் அரசு மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

165—

## கும்பகோணம் சோழன் போக்குவரத்துக் கழகத் தலைமை நிலையம்.

வினா எண். 661—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சோழன் போக்குவரத்துக் கழகத் தலைமை நிலையத்தில் பேருந்து கட்டுமானம் செய்யும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) கும்பகோணம், சோழன் போக்குவரத்துக் கழகத் தலைமை நிலையத்தில் பேருந்து கட்டுமானம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



1992 செப்டம்பர் 25]

166—

## கோடிக்கரை வனவிலங்கு சரணாலயம்

வினா எண். 5386—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேதாரண்யம் தொகுதி கோடிக்கரை வனவிலங்கு சரணாலயத்தில் உள்ள பூநாரை இல்லத்திற்கு கூடுதலாக தங்கும் அறைகள் மற்றும் குடிநீர் வசதி மற்ற அடிப்படை வசதிகளைச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பூநாரை இல்லத்திற்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. மேற்படி இல்லத்தில் தற்சமயம் உள்ள தங்கும் அறைகளே போதுமானவை எனக் கருதப்படுகிறது.

167—

## முன்னூறுக்கும் மேற்படாத பேருந்துகளைக் கொண்ட போக்குவரத்துக் கழகங்கள் அமைத்தல்.

வினா எண். 8071—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிறப்பாக நிர்வகிக்க முன்னூறுக்கும் மேற்படாத பேருந்துகளைக் கொண்ட போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

168—

நிழற்குடை அமைத்தல்.

வினா எண். 8610—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் போக்குவரத்துத் துறை சார்பாக ' நிழற்குடை ' அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைத்துத் தரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

169—

ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு கைத்தறி நூற்பாலை அமைக்தல்

வினா எண் 8199—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகப்பட்டினம், காயிதே மில்லத் மாவட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு கைத்தறி நூற்பாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை.



170—

அரசு விசைத்தறிக்கூடம் அமைத்தல்.

வினா எண் 8905—டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அவிநாசி தொகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்பெறும்படி அரசு விசைத்தறிக்கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

171—

குன்னியூர் இணைப்புப் பாலம்.

வினா எண் 1542—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், குன்னியூர் இணைப்புப்பாலம் கட்டுவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

172—

கூவம் ஆற்றின் இரு கரையிலும் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம்.

வினா எண் 2490—டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை கூவம் ஆற்றின் இரு கரையிலும் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

173—

புதிய சாலை அமைத்தல்.

வினா எண் 3606—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் சட்டமன்ற தொகுதி, கள்ளிகுளம்—திருமலாபுரம் வழி மேல கள்ளிகுளம் ரோடு ஆறுபுளி—கள்ளிகுளம் 3 கி. மீ. தூரம் புதிய ரோடு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

கள்ளிகுளம்—திருமலாபுரம் சாலையைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஆறுபுளி—கள்ளிகுளம் சாலையினை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.



164978

174—

நிரந்தர பாலங்கள் அமைத்தல்.

வினா எண் 3915—திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தாம்பரம் தொகுதியிலுள்ள, பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் இந்த மூன்று இடங்களிலும் பக்கிங்காம் கால்வாயில் உள்ள மரப்பாலங்கள் மாற்றப்பட்டு நிரந்தரப் பாலங்கள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை.

175—

இராசிபுரம் நகரில் புறவழிச்சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 4213—திருமதி கே. பழனியம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராசிபுரம் நகரில் புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்போது முடிவடையும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

176—

கரங்கப்பாதை அமைத்தல்.

வினா எண் 5903—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாநகராட்சியில் காந்திபுரத்தில் மிக அதிகமாக உள்ள போக்குவரத்து நெரிசலைக் கருத்தில்கொண்டு டாக்டர் நஞ்சப்பா ரோடும் கிராஸ்கட் ரோடும் சந்திக்கிற இடத்தில் ஒரு சுரங்கப்பாதை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

திட்டம் ஏதுமில்லை.

177—

ஆத்தூருக்கு பைபாஸ் சாலை அமைத்தல்.

வினா எண் 6066—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆத்தூர், சேலம்-சென்னை தேசீய நெடுஞ்சாலையில் உள்ளதால் ஆத்தூருக்கு பைபாஸ் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

178—

கடலூர்—சித்தூர் சாலை.

வினா எண் 6853—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



(அ) கடலூர்—சித்தூர் சாலை தேசிய நெடுஞ்சாலையில் எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கடலூர்-வேலூர்-சித்தூர் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்குமாறு மைய அரசிடம் மாநில அரசால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

179—

ஊருக்கு ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 1632—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி தொகுதியில் குடிநீர்ப் பிரச்சனையைப் போக்க ஊருக்கு ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

180—

போர்வெல் அமைத்தல்.

வினா எண் 1833—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அனந்த கோபாலபுரம் தெற்குத் தெருவில் ஒரு போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஆம். ஒரு ஆழ்துளைக்கிணறு அமைத்துக் கொடுக்கும் பணி நடப்பு நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

181—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 2857—திரு. ஆர் சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், தொக்காலிக்காடு கீழ்பகுதியில் ரயில்வேகேட் அருகில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. இங்கு ஒரு விசைப் பம்பு திட்டம் அமைக்கப் பட்டுள்ளது.

182—

பகுதிநேர கூட்டுறவு அங்காடி திறத்தல்.

வினா எண் 6868—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூர் பகுதி பாக்மார்பேட்டையில் பகுதி நேர கூட்டுறவு அங்காடி திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் பகுதி பாக்மார்பேட்டையில் பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

183—

கூட்டுறவு மைய வங்கி ஏற்படுத்துதல்.

வினா எண் 6872—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் கூட்டுறவு மைய வங்கி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கென புதிய மத்திய கூட்டுறவு வங்கி ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

184—

கட்டிடத் தொழிலாளர்களுக்கு பயிற்சி மையம்.

வினா எண் 8751—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கட்டிடத் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான மையம் சென்னை நகரில் தொடங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

185—

பெண்களுக்கு தொழிற் பயிற்சி நிலையம் அமைத்தல்.

வினா எண் 8994—திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கை நகரில் பெண்களுக்குத் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

செங்கல்பட்டு நகரில் பெண்களுக்குத் தொழிற்பயிற்சி நிலையம் துவங்குவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

186—

சிறுமலை அரசு பழப்பண்ணை.

வினா எண் 8455—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிறுமலை அரசு பழப்பண்ணையில் என்னென்ன நாற்றுகள் உற்பத்தி செய்து மானிய விலையில் வழங்கப்படுகிறது?

(ஆ) மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அண்ணா மாவட்டத்தில் என்னென்ன நாற்றுகள் மானிய விலையில் எங்கெங்கு வழங்கப்படுகின்றன?



விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) சிறுமலை அரசு தோட்டக்கலைப் பண்ணையில், பலா, மாதுளை, எலுமிச்சை, காப்பி, மிளகு, பப்பாளி போன்ற தோட்டக்கலை பயிர்களின் நடவு செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்களின் மூலம் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

(ஆ) திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டமானது திண்டுக்கல், கோடைக்கானல் மற்றும் பழனி வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் 50 சத மானிய விலையில் பழவகைகளான மா, கொய்யா, மாதுளை, எலுமிச்சை, சப்போட்டா, மலை வாழை, கமலா, ஆரஞ்ச், பலா முதலியனவும் வாசனை திரவிய பயிர்களான மிளகு, கிராம்பு, ஏலக்காய் ஆகியவையும், தோட்ட பயிர்களான காப்பி, பாக்கு, ஆகியவையும் வழங்கப்பட்டு வருகின்றன.

187—

சதுப்பு நிலத்தில் காய்கறித் தோட்டம் அமைத்தல்.

வினா எண் 8541—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வால்பாறை மலைப்பகுதியிலுள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு இடையே உள்ள சதுப்பு நிலத்தில் காய்கறி தோட்டம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

188—

எண்ணெய்ப் பனை பயிரிடும் திட்டம்.

வினா எண் 9795—திரு என். ஆர். சிவபதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொட்டியம் தொகுதியில் பாமாயில் உற்பத்தி செய்யும் மரக்கன்றுகள் பயிரிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது திட்டம் செயல்படும்?

விடை.—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) தற்போது எண்ணெய்ப்பனை பயிரிடும் திட்டம் தொட்டியம் பகுதியில் இல்லை.

(ஆ) எழவில்லை.

189—

குடிசை மாற்று வாரியம் மூலம் குடியிருப்புத் திட்டம்.

வினா எண் 6504—திரு எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல் நகரில் குடிசைமாற்று வாரியம் மூலம் வாடகைக் குடியிருப்பு மற்றும் சொந்தக் குடியிருப்பு திட்டம் செயல்படுத்த உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை.—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



190—

குடிசை மக்களின் குடியிருப்புரிமையை மீண்டும் கொண்டு வருதல்.

வினா எண் 8137—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குடிசை மக்களின் குடியிருப்புரிமையை பாதுகாக்க முன்பிருந்த அரசாணையை மீண்டும் கொண்டு வருவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

இல்லை.

191—

பார்த்திபனூரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி.

வினா எண் 1626—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி தொகுதி பார்த்திபனூரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்ட நிலம் கையகப்படுத்தப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[1992 செப்டம்பர் 25

192—

### ஓராசிரியர் பள்ளி தொடங்க நடவடிக்கை.

வினா எண் 1859—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

193—

### ஆதிதிராவிடர் நலப்பள்ளி தொடங்க நடவடிக்கை.

வினா எண் 2202—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி(கி) ஆதி திராவிடர் தெருவில் ஆதி திராவிடர் நலப்பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

இல்லை.

194—

### பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பணிமாற்றம்.

வினா எண் 9606—திரு செ. பெருமாள்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படும் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும்



1992 செப்டம்பர் 25]

ஊழியர்களை பணிமாற்றம் செய்வது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படும் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களைப் பணிமாற்றம் செய்வது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

195—

### 1990-91 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் திறக்கப்பட்ட மாணவர் இல்லங்கள்.

வினா எண் 4099—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1990-91 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் திறக்கப்பட்ட மாணவர் இல்லங்கள் எவ்வளவு?

(ஆ) இவற்றில் எவ்வளவு மாணவர்கள் சேர்ந்துள்ளனர்?

விடை—

மாண்புமிகு திரு எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) 1990-91-ல் திறக்கப்பட்ட மொத்த விடுதிகள் 40, மாணவர் விடுதிகள் 30, மாணவியர் விடுதிகள் 10.

(ஆ) மாணவர்கள் 1,500, மாணவியர் 500.

196—

## கால்நடைத் தீவனங்கள் அரசு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை.

வினா எண் 5412—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கால்நடைத் தீவனங்களில் கலப்படம் கட்டுப்பாடற்ற விலை ஆகியவற்றைத் தவிர்க்க கூட்டுறவு அங்காடிகள் அல்லது அரசு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

197—

## கால்நடைப் பண்ணை அமைத்தல்.

வினா எண் 8266—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் ஒரு கால்நடை பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





198—

## பரங்கிப்பேட்டையில் மீன் பிடிக்கும் துறைமுகம் அமைத்தல்.

வினா எண் 7868—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டையில் மீன் பிடிக்கும் துறைமுகம் ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

199—

## மீனவர்களுக்கு கான்கிரீட் வீடுகள்.

வினா எண் 8197—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சீர்காழி தொகுதியில் கழையாறு, தொடுவாய், திருமுனை வரால் போன்ற பகுதிகளில் வாழ்கின்ற மீனவர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

இல்லை.

[1992 செப்டம்பர் 25

200—

அவினாசி தொகுதியில் அரசு தொழிற்பேட்டை அமைத்தல்.

வினா எண் 8904—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அவினாசி தொகுதியில் அரசு தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத்தொழிற் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

201—

உயர்நீதி மன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள்—

வினா எண். 6341—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உயர்நீதி மன்றத்தில் 1990-92 நிதியாண்டு முடிய தீர்க்கப்படாமல் நிலுவையில் (pending) உள்ள சிவில், கிரிமினல் வழக்குகள் எண்ணிக்கை விவரம் என்ன ?

(ஆ) அவற்றினைத் துரிதப்படுத்தி முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன ?

(இ) உயர்நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை நிர்ணயம் எவ்வாண்டில் செய்யப்பட்டது ?

(ஈ) அந்த நிர்ணயத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும், நீதிபதிகள் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்றும் மத்திய அரசை நமது மாநில அரசு கோரியுள்ளதா ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் :

(அ) 1990-91 ஆம் ஆண்டு மார்ச்சு 31 முடிய சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு :

உரிமையியல் வழக்குகள் :

| | | |
|---|---|---|
| 1. | அசல் தரப்பு வழக்குகள் (Original side) .. | 8,671 |
| 2. | மேல் முறையீட்டு வழக்குகள் (Appellate side) .. | 1,89,164 |
| | மொத்தம் .. | 1,97,835 |

குற்றவியல் வழக்குகள் :

| | | |
|---|---|---|
| 1. | குற்றவியல் அசல் மனுக்கள் (Criminal original petition) .. | 4,570 |
| 2. | குற்றவியல் வழக்கு மேல்முறையீடுகள் (Criminal Appeals) .. | 4,872 |
| 3. | குற்றவியல் மறுவிசாரணை மனுக்கள் (Criminal Revision Cases) .. | 2,959 |
| 4. | குற்றவியல் பலவகை வழக்குகள் (Criminal Miscellaneous petitions) .. | 11,989 |
| | மொத்தம் .. | 24,390 |

(ஆ) நிலுவையில் உள்ள வழக்குகளைத் துரிதப்படுத்தி முடிக்க உயர்நீதிமன்றம் தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். எனினும் வழக்காடும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவற்றை விரைவில் முடிப்பதற்காக உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்தவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(இ) உயர்நீதிமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கையை தலைமை நீதிபதியையும் சேர்த்து 28 என 1991 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.

(ஈ) உயர்நீதிமன்றத்தில் முடிவுறாமலுள்ள வழக்குகளைத் துரிதமாக முடிக்கும் நோக்குடன் தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 32 ஆக உயர்த்த மத்திய அரசு இசைவளித்துள்ளது.

**202—**

## பொதுமக்கள் குறைகளைத் தெரிவித்தல்

வினா எண். 4591—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒவ்வொரு திங்கட்கிழமையும் பொது மக்கள் தங்கள் குறைகளை நேரில் வந்து தெரிவிக்கும் வகையில் மாவட்ட அதிகாரிகள் முகாம் செல்லக் கூடாது என்ற அரசு ஆணையை மீறி அதிகாரிகள் முகாம் செல்வதைத் தடுக்கஅரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை.

பொது மக்கள் வருவாய்த் துறை அலுவலர்களை நேரில் சந்தித்துத் தங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்வதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு ஒவ்வொரு திங்கட்கிழமையும் குறை தீர்க்கும் நாளாக அரசு அலுவலகங்களில் அனுசரிக்கப்படுகிறது. அந்நாளில் மாவட்டாட்சியர்கள், கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளாமல் தங்கள் அலுவலகத்திலேயே இருந்து பொது மக்களின் குறைகளை நேரில் விசாரித்து தீர்த்து வைக்கவேண்டுமென்றும் மேலும் குறை தீர்க்கும் நாள் மனுக்களைப் (Grieveance Diary petition) பெற்று அவற்றுக்குத் தனி முக்கியத்துவம் கொடுத்து ஆய்வு செய்து பொது மக்களின் குறைகளை நீக்க வேண்டும் என்றும், அரசு, 28—2—1984 ஆம் நாளும் (நிலை) 315-ஆம் எண்ணும் கொண்ட அரசாணையில் ஆணையிட்டது. குறைதீர்க்கும் நாளை செவ்வனே நடைமுறைப்படுத்துவதற்கேற்ற வகையில் கோட்டாட்சியர்களையும், வட்டாட்சியர்களையும் திங்கள் கிழமைகளில் சாதாரணக் கூட்டங்களில் பங்கு பெறும்படி செய்யக் கூடாது என்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் 18-11-1986 ஆம் நாளும் (நிலை) 1514 ஆம்





எண்ணும் கொண்ட அரசாணையில் அரசு அறிவுரைகளை ஏற்கெனவே வழங்கியுள்ளது. மேற்சொல்லப்பட்ட அறிவுரைகளை மீண்டும் வலியுறுத்தி அனைத்து மாவட்டாட்சியர்கள், கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கும் அறிவுரைகள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் வழங்கப்பட்டுள்ளன.

**203—**

## புகைப்படத்துடன் பட்டா புத்தகம் வழங்கல்.

வினா எண். 9440—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலப்பட்டாதாரர்களுக்கு பட்டா புத்தகம் கொடுக்கும் பொழுது நிலத்தின் சொந்தக்காரர் மற்றும் வாரிசுதாரர்கள் புகைப்படமும் இணைத்து வழங்கப்படுமா ?

(ஆ) எப்போதிருந்து வழங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) நிலத்தின் உரிமைதாரருடைய புகைப்படம் மட்டும் பட்டா பாஸ் புத்தகத்தின் முதல் பக்கத்தில் இணைத்து வழங்கப்படும்.

(ஆ) செங்கல்பட்டு - எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் திருத்தணி வட்டத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்திலும் 1—10—1987 முதல் பட்டா பாஸ் புத்தகம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மாநிலம் முழுவதும் பட்டா பாஸ் புத்தகம் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**204—**

## இடைநிலை ஆசிரியர்களுக்குப் பதிலாக பட்டதாரி ஆசிரியர்கள் நியமித்தல்.

வினா எண். 5096—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்பொழுதுள்ள பாடத் திட்டம் கடினமாக உள்ளதால் கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்கும், விஞ்ஞான கொள்கைகள் தத்துவங்கள் ஆகியவற்றை உதாரணங்களுடன்

டி2 53 287—16

விளக்குவதற்கு ஏதுவாகவும் உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்புகளுக்கு இடைநிலை ஆசிரியர்களுக்குப் பதிலாக பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இல்லை. எனினும் தற்போதைய கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் எட்டாம் வகுப்பிற்கு கல்வியியல் பட்டம் (BEd.) படித்த ஆசிரியர்களைப் படிப்படியாக நியமித்திடும் கருத்துருவை அரசு பரிசீலிக்கும்.

205—

தரமான கல்வியை மாணவர்கள் கற்க அரசு எடுத்த நடவடிக்கை.

வினா எண். 8126—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்பொழுது தரமான கல்வியை மாணவர்கள் கற்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்னென்ன நடவடிக்கை என்பதை அரசு விளக்குமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) ஆம்.

ஆ) பாடத் திட்டங்கள் திருத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டதுடன் ஆசிரியர்களுக்குப் பணியிடை பயிற்சி அளிக்கப்பட்டு மாணவர்கள் தரமான கல்வி கற்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.





206—

சுற்றுப்புறச் சூழல் மாசு கட்டுப்பாட்டுத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சாலைகள்.

வினா எண். 8346—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சுற்றுப்புறச் சூழல் மாசு கட்டுப்பாட்டுத் துறையில் பதிவு செய்யத் தகுதி பெற்ற தொழிற்சாலைகள் எத்தனை ?

(ஆ) இது வரை எத்தனை தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1986 ஆம் ஆண்டு சுற்றுச் சூழல் (பாதுகாப்பு) சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் தொழிற்சாலைகளுக்கு ஒப்புதல் வழங்கப்படுவதைத் தவிர பதிவு செய்யப்படுகின்றன. நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் 9,186 தொழிற்சாலைகளுக்கும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தில்கீழ் 5,885 தொழிற்சாலைகளுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன.

207—

தேவாரம் நகரிலிருந்து சென்னைக்கு பேருந்து.

வினா எண். 4021—திரு. தேனி பன்னீர் செல்வம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போடிநாயக்கனூர் தொகுதி தேவாரம் நகரிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விட அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தேவாரம் போடி நாயக்கனூரிலிருந்து 19 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தற்போது சென்னையிலிருந்து திருச்சி, திண்டுக்கல், பெரியகுளம், தேனி வழியாக போடி நாயக்கனூருக்கு இரண்டு பேருந்துகள் இரண்டு ஒரு வழிப் பயணங்களுடன் நாள் தோறும் இயக்கப்படுகின்றன. தேவாரத்திலிருந்து சென்னைக்குப் பயணம் செய்ய விரும்பும் பயணிகள் இதனை நன்கு பயன்படுத்திக்கொள்ளலாம். தற்போதுள்ள வசதிகளே போதுமானவை என்று கருதப்படுகிறது.

208—

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை சீரமைக்க நடவடிக்கை.

வினா எண். 8246—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை சீரமைப்பதற்கு திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருநதுகளின் சராசரி வயது 5.78 ஆண்டுகள் ஆகும். பல்லவனில் இயங்கும 2,352 பேருந்துகளில் 10 ஆண்டிற்கு மேற்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை 257 ஆகும். தற்போது உலக வங்கியின் உதவியுடன் 400 புதிய பேருந்துகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் பயனாக பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை இயக்க இயலும். தவிரவும் சுமார் 204 பேருந்துகள் கூடு பழுது பார்ப்பதற்காக அடையாளம் காணப்பட்டு பழுது நீக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



1992 செப்டம்பர் 25]

209—

கைத்தறி நெசவாளர்கள்.

வினா எண். 5984—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவாளர்கள் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் பெற்றுள்ள கடன்களை விவசாயக் கடன் நிவாரணத் திட்டம் 1990-ன் கீழ், கடன் தள்ளுபடி செய்ய அத்திட்டத்தின் நெறிமுறைகளின் கீழ் இயலுமா ?

(ஆ) இனியேனும் அரசு பரிசீலித்து கைத்தறி நெசவாளர்களும் பயன்பெறும் வகையில் வழிவகை செய்ய முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் :

(அ) இயலாது.

(ஆ) விவசாயிகள் மற்றும் கிராமப்புற கைவினைஞர்களுக்கு அளிக்கப்பட்ட கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் மேற்படி கைவினைஞர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக கணிக்கப்பட்ட கடன்களுக்கு மட்டுமே நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் கைத்தறி நெசவாளர் வீட்டு வசதி மற்றும் தொழிற்கூட திட்டம் அரசு மான்யம் மற்றும் ஹட்கோ கடன் உதவியுடன் செயற்படுத்தப்படுகிறது. எனவே மேற்படி நிவாரணச் சட்டத்தின் கீழ் நெசவாளர்கள் வீடு கட்டும் திட்டத்தில் வழங்கப்பட்ட கடன்களை கொணர இயலாது.

210—

சாலை பராமரிப்பு.

வினா எண். 31—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை சாலைகளின் இரு ஓரங்களிலும் அரசு விதிப்படி கடைக்கால்கள் வெட்டி சாலையை பராமரிக்காதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைசசர் :

அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் கன்னியாகுமரி மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் 1,014.348 கிலோ மீட்டர் நீள சாலைகள் உள்ளன. அவை பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| மாநில நெடுஞ்சாலை | .. | 48.90 கிலோ மீட்டர். |
| பெரிய மாவட்டச் சாலைகள் | | 274.80 கிலோ மீட்டர். |
| இதர மாவட்டச் சாலைகள் | | 690.348 கிலோ மீட்டர். |
| மொத்தம் | .. | 1,014.348 கிலோ மீட்டர். |

நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள 1,014.348 கிலோ மீட்டர் நீளமுள்ள அரசு சாலைகளில் 42.90 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பகுதி நகராட்சி பகுதியிலும் 540.900 கிலோ. மீட்டர் நீளமுள்ள சாலைப் பகுதி நகரியம் மற்றும் பேரூராட்சி பகுதியிலும் செல்கின்றன. மீதமுள்ள 430.548 கிலோ மீட்டர் ஊரகப் பகுதியில் செல்கின்றன. சாலை ஓரங்களில் நகர்ப்புற கழிவுநீர் செல்ல வடிகால் கால்வாய்கள் கட்டித் தருவது நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பில் வரவில்லை. உள்ளாட்சி நிறுவனத்தின் பொறுப்பாகும். பேரூராட்சித் துறையைப் பொறுத்த வரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு நகரியம் உட்பட 67 பேரூராட்சிகள் அமைந்துள்ளன. இந்த 67 பேரூராட்சிகளில் ஆண்டொன்றுக்கு ரூபாய் 10.00 லட்சம் வீதம் வழங்கப்பட்ட மானியம் அனைத்து மாவட்டங்களுக்கும் பிரித்தளிக்கப்படும்போது கிடைக்கும் தொகையிலிருந்தும், பேரூராட்சிகள் பொது நிதியிலிருந்தும் இது வரை 34,030 மீட்டர் நீளத்திற்கு வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. இன்னமும் வடிகால் அமைக்கப்பட வேண்டியதன் நீளம் 73,570 மீட்டர் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளில் சில இடங்களில் வடிகால்கள் கட்டி பராமரிக்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் நகராட்சி நிதி நிலைமை சரி இல்லாததால் வடிகால் கட்டி பராமரிக்க இயலவில்லை.





211—

## கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்கல்.

வினா எண். 1311—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டப் பெரிய கல்ராயன் மலையில் ஆத்தூர் தொகுதியில் உள்ள அடியனூர், இரான்காடு, கிராத்தூர் ஆகிய ஊர்களைத் தவிர மீதி உள்ள 20-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மின் இணைப்பே இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றிற்கு விரைவில் மின் இணைப்பு தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், பெரியகல்ராயன் மலைப் பகுதியில் மொத்தமுள்ள ஏழு (7) பெரிய கிராமங்களில், மக்கள் வசிக்கும் ஆறு (6) பெரிய கிராமங்களுக்கும் ஏற்கனவே மின் வசதியளிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள ஒரு பெரிய கிராமம் மக்கள் வசிக்காதவையாதலால் மின் வசதியளிக்க தேவையில்லை.

மேலும், இம்மலைப் பகுதியில் 44 சிற்றூர்கள் உள்ளன. அவற்றுள் 27 சிற்றூர்களுக்கு ஏற்கனவே மின்வசதியளிக்கப்பட்டு விட்டது. ஒரு சிற்றூர் மக்கள் வசிக்காதது ஆகும். மீதமுள்ள 16 சிற்றூர்களுக்கு மட்டும்தான் மின் வசதியளிக்கப்பட வேண்டும்.

மேற்படி 16 சிற்றூர்களுக்கு மின் வசதியளிக்க ஆவன செய்யப்படும்.

212—

## இராமநாதபுரத்திற்கு குடிதண்ணீர்.

வினா எண் 1705—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயத்திற்கு பயன்படும் வைகை அணை தண்ணீரை குடிநீர் இல்லாத மாவட்டமாகிய இராமநாதபுரத்திற்கு பயன்படுத்த அரசு முன்னுரிமை அளிக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

வைகை அணையில் கிடைக்கப்பெறும் தண்ணீர் ஏற்கனவே உள்ள நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர்த் தேவைகளுக்கே பற்றாக் குறையாக உள்ளது. மேலும், ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வைகையாற்றுப் பாசனத்திற்கென வரையறுக்கப்பட்ட தண்ணீர் வைகை அணையிலிருந்து தரப்படுகிறது. இது இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆற்றங்கரையிலுள்ள ஊர்களுக்கு குடிநீர் தேவைக்கும் பயன்படும். இது தவிர ஏனைய தேவைகளுக்கு தண்ணீர் வழங்க வைகையாற்றில் போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தால் இராமநாதபுரத்திற்கு குடி தண்ணீர் தேவைக்கு முன்னுரிமை அளித்து வழங்க இயலாத நிலை உள்ளது.

213—

சொந்த இல்லங்களில் வசிக்கும் உயர்நீதிமன்ற நீதிபதிகள்.

வினா எண் 2821—திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) (1) எந்தெந்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் சொந்த இல்லங்களில் வசிக்கிறார்கள் ?

(2) எந்தெந்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் அரசு மாளிகைகளில் வசிக்கிறார்கள் ?

(3) எந்தெந்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் வாடகை வீட்டில் வசிக்கிறார்கள் ?

(ஆ) உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு வீட்டு வாடகைக்காக ஒவ்வொரு மாதமும் அளிக்கப்படும் தொகை எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டுள்ளது.



விவர அறிக்கை.

(அ) (1) கீழ்க்கண்ட உயர்நீதிமன்ற நீதிபதிகள் தங்களின் சொந்த இல்லங்களில் வசிக்கிறார்கள் :

உயர்திரு நீதிபதிகள்

1. திரு. எஸ். நயினார் சுந்தரம்
2. திரு. வி. ரத்தினம்
3. திரு. கே. வெங்கடசாமி
4. திரு. எம். சீனிவாசன்
5. திருமதி பத்மினி ஜேசுதுரை
6. திரு. டி. எஸ். அருணாசலம்
7. திரு. எஸ். ஜனார்த்தனம்
8. திரு. எம். மருதமுத்து
9. திரு. எஸ். கோவிந்தசாமி
10. திரு. கே. சாமிதுரை.
11. திரு. டி. சோமசுந்தரம்
12. திரு. ஜெ. கனகராஜ்
13. திரு. டி. ராஜு

(2) கீழ்க்கண்ட உயர்நீதிமன்ற நீதிபதிகள் அரசு மாளிகையில் வசிக்கிறார்கள் :—

உயர்திரு நீதிபதிகள்.

| | | | மாளிகை எண் |
|---|---|---|---|
| 1. | திரு. பி. எஸ். மிஸ்ரா | .. | 3 |
| 2. | திரு. கே. எம். நடராசன் | .. | 14 |
| 3. | திரு. ஈ. ஜே. பெல்லி | .. | 17 |
| 4. | திரு. எஸ். ராமலிங்கம் | .. | 21 |
| 5. | திரு. கே. எஸ். பக்தவச்சலம் | .. | 8ஏ |
| 6. | திரு. ஏ. அப்துல் ஹாடி | .. | 20 |
| 7. | திரு. என். ஆறுமுகம் | .. | 2 |
| 8. | திரு. ஏ. ஆர். லட்சுமணன் | .. | 22 |
| 9. | திரு. ஏ. தங்கமணி | .. | 16 |
| 10. | திரு. எஸ். பிரதாப் சிங் | .. | 12 |

[1992 செப்டம்பர் 25

(3) வாடகை வீட்டில் வசிக்கும் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கே. ஏ. தணிகாசலம் ஒருவர் மட்டுமே.

(ஆ) மாதம் ரூபாய் 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்).

214—

சாலையைப் பழுது பார்த்தல்.

வினா எண். 3671—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி விஜயாபதியில் இருந்து காடுதலா கொத்தளம், அரசன்குளம் வழியாக ராதாபுரம் போய் சேரும் சாலையை பழுதுபார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது கீழ்க்காணும் எட்டு சாலைகளை உள்ளடக்கியதாகும். அவற்றின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| வரிசை எண் மற்றும் சாலையின் பெயர் மற்றும் நீளம். | இனம். | தற்போதுள்ள நிலை. | தார்தளமாக மேம்பாடு செய்ய தேவைப் படும் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. விஜயாபதி கூத்தங்குளி சாலை கி.மீ. 0/0-1/2—1.20 கி.மீ. | இதர மாவட்ட சாலை. | நல்ல நிலையில் உள்ளது. | .. |
| 2. திருச்செந்தூர்-கன்னியாகுமரி சாலை முதல் விஜயாபதி கூத்தங்குளி சாலை (வழி) காடுதலா கி.மீ. 0/0—3.00 | ஒன்றிய சாலை. | சரள் மற்றும் ஜல்லி சாலையாக உள்ளது மேம்பாடு செய்ய வேண்டும். | 4.00 |



1992 செப்டம்பர் 25]

| | | | |
|---|---|---|---|
| 3. திருச்செந்தூர்-கன்னியாகுமரி கி.மீ. 56/4-58/0—1.60 கி.மீ. | மாவட்ட பெரிய சாலை | நல்ல நிலையில் உள்ளது. | .. |
| 4. கொத்தங்குளம் சாலை கி.மீ. 0/0-1/4—1.40 கி.மீ. | ஒன்றிய சாலை. | சரள் சாலை ஜல்லி சாலைகளை ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்தில் மேம்பாடு செய்யப்படுகிறது. | 1.50 |
| 5. கொத்தங்குளம்—அரசன்குளம் சாலை கி.மீ. 0/0-0/8 0.80 கி.மீ. | ஷை | ஷை | 1.00 |
| 6. கூடன்குளம் விலக்கு முதல் உதயத்தூர் சாலை கி.மீ. 0/0-2/0. | ஷை | ஷை | 2.00 |
| 7. உதயத்தூர் சாலை கி.மீ. 0/0 -1/0. | இதர மாவட்ட சாலை | நல்ல நிலையில் உள்ளது. | .. |
| 8. வள்ளியூர் விஜயாபதி சாலை கி.மீ. 17/4-23/4. | பெரிய மாவட்ட சாலை. | .. | .. |
| | | மொத்தம் | 8.50 |

மீதமுள்ள 1, 3, 7 மற்றும் 8-ல் உள்ள நான்கு சாலைப் பணிகள் முழுவதையும் 91-92ஆம் ஆண்டு திட்டம் பூர்த்தியாகி விட்டதால் இந்த வருடம் செயல்படுத்த இயலாது. எனவே அடுத்த ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் குறிப்பிட்ட நான்கு வேலைகளையும் எடுத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

215—

## பள்ளிப்பட்டு ஏரி பராமரிப்பு.

வினா எண் 4299—திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாநிலங்களிடையே உள்ள பாசன ஆதார (Inter State irrigation Sources) ஏரிகளான செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் பள்ளிப்பட்டு ஏரி மற்றும் வெளிகிராம் ஏரிகளின் பராமரிப்பு பணிக்காக ஒப்பளிப்பு பெற்ற மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(ஆ) பள்ளிப்பட்டு பொதுப்பணித்துறை ஏரியின் பணிக்காக ஆந்திர மாநிலத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய தொகை செலுத்தப்பட்டு விட்டதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் பள்ளிப்பட்டு ஏரியின் வரத்துக்கால்வாய் மற்றும் அணைக்கட்டின் பராமரிப்பு பணிக்காக ஆந்திர அரசால் ரூ. 9.90 லட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது. நிதி ஒதுக்கீடு செய்தபின் தேவையான பராமரிப்பு பணிகள் ஆந்திர அரசால் மேற்கொள்ளப்படும். வெளிகிராம் ஏரியை பொறுத்த மட்டில் பராமரிப்பு மதிப்பீடு ஆந்திர அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

216—

## தவிட்டுப்பாளையத்திலுள்ள சர்க்கரை ஆலை சாலை

வினா எண். 4850—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அந்தியூர் தொகுதியில் தவிட்டுப்பாளையத்தில் உள்ள சர்க்கரை ஆலை ரோட்டினை, கிணற்று கல்லில் உடைத்த பெரிய சல்லிக் கல்லில் போடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மாற்ற நடவடிக்கை எடுக்குமா?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) அந்தியூர் தொகுதியில் தவிட்டுப்பாளையத்தில் உள்ள சர்க்கரை ஆலை ரோடு, கிணற்றுக்கல்லில் உடைத்த பெரிய சல்லிக் கல்லில் போடப்பட்டது என்பது சரியானதல்ல. தவிட்டுப்பாளையம் ஆப்பக்கடல் சாலை நெடுஞ்சாலைத் துறை கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்யப் பட்டு, சேலம் கோட்டத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த சாலையின் மொத்த நீளம் 11.80 கி.மீ. இதில் 8.8 கிலோ மீட்டரில் தார் பரத்துதல் பணி நல்ல இயந்திர உடைப்புக் கற்களைப் பயன்படுத்தி செய்யப்பட்டது. மீதமுள்ள 3.00 கிலோ மீட்டரில் சாலை மிகவும் பழுதுபட்டிருந்ததால் 500 மீட்டர் நீளத்திற்கு மட்டும் கல்பரத்துதல் பணி நடைபெற்றது. இதற்கும் தரமான கற்சுரங்கக் கற்கள் பயன்படுத்தப்பட்டன. இப்பணி மார்ச் 1992-க்குள் முடிக்கப்படும்.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

217—

## கைப்பினாங்குளம் கிராமத்திற்கு மின்விளக்கு வசதி செய்தல்

வினா எண். 4900—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் ஒன்றியத்தில் கைப்பினாங்குளம் கிராமத்தில் மின்விளக்குகள் இல்லாமல் மக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மின்விளக்கு வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி— கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் நவநீதகிருஷ்ணபுரம் ஊராட்சியைச் சேர்ந்த கைப்பினாங்குளத்தில் ஏற்கனவே எட்டு (8) தெருவிளக்குகள் பொருத்தப்பட்டு அவற்றில் ஆறு

பட்ட உள்ளாட்சி நிறுவனம் மீதி இரண்டு விளக்குகளுக்கான உதிரி பாகங்களை தரவில்லையாதலால் 28—12—1991 முதல் இவ்விரு விளக்குகளும் எரியவில்லை. இந்த இரண்டு (2) தெரு விளக்குகள் எரிய தேவையான உதிரி பாகங்கள் (பல்ப் மற்றும் சோக்) ஊராட்சி மன்றத்திலிருந்து பெறப்பட்டவுடன் மேற்படி இரண்டு (2) விளக்குகள் எரிய வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இக்கிராமத்தில் புதிதாக ஒரு தெரு விளக்கு அமைத்திட விண்ணப்பம் பெறப்பட்டு அதற்கான பணிகள் முடிக்கப்பட்டு வருகின்றன. உரிய காப்புத் தொகையை செலுத்தும்படி ஊராட்சி மன்றத்திற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இத்தொகை செலுத்தப்பட்டதும் உடன் அந்த ஒரு தெரு விளக்கும் ஒளிரும்.

218—

## ஆதிதிராவிட காலனி வீடுகளுக்கு மின்வசதி

வினா எண். 4909—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தில் தெற்கு மாயமான்குறிச்சி ஆதி திராவிடர் காலனி வீடுகளில் மின் வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இலவச மின்சார இணைப்பு கொடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தில் தெற்கு மாயமான்குறிச்சி ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு மின்வசதி அளிக்கக் கோரி வரப்பெற்ற 39 விண்ணப்பங்களில் குடிசை மின் இணைப்புக்கு தகுதி பெற்ற 20 குடிசை வீடுகளுக்கு ஒற்றை விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 19 விண்ணப்பங்கள் குடிசை மின் இணைப்பு விதிகளின்படி இலவச மின் இணைப்புக்கு தகுதி பெறாததால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இக்காலனியில் நான்கு (4) குடிசை வீடுகளுக்கு மீட்டர் பொருத்திய வீட்டு உபயோகத்திற்கான மின் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) எழவில்லை.



219—

## வீடுகட்ட இடையூறாக உள்ள மின் கம்பங்களை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை

வினா எண். 4913—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தில் தெற்கு மாயமான்குறிச்சியில் ஆதிதிராவிடர் காலனி கட்டுவதற்கான இடத்தில் சில மின்சார கம்பங்கள் இருப்பதால் வீடுகள் கட்ட இடையூறாக உள்ளது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மின் கம்பங்களை அகற்றி வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் ஒன்றியத்தில் தெற்கு மாயமான்குறிச்சியில் ஆதி திராவிடர்களுக்கான தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இந்த தொகுப்பு வீடுகளில் இரண்டு வீடுகள் மட்டும் ஏற்கனவே இருக்கின்ற மின் பாதைக்கு கீழே கட்டப்பட்டுள்ளன மின்வாரிய விதிகளின்படி இம்மின்பாதையை அகற்றி வேறு இடத்திற்கு மாற்ற ஆகும் முழுச்செலவினை சம்பந்தப்பட்ட இலாகா அல்லது பஞ்சாயத்து அல்லது குடியிருப்புதாரர்கள் ஏற்க முன் வந்தால் இம்மின்பாதைகள் மாற்றி அமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

220—

## பர்கூர் மலையில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட கிராமங்களுக்கு மீண்டும் மின் இணைப்பு.

வினா எண். 5087—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பர்கூர் மலையில் தாமரைக்கரை முதல் செங்குளம் குட்டையூர் வரை உள்ள 17 கிராமங்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மின் இணைப்பு மீண்டும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பர்கூர் மலையில் தாமரைக்கரை முதல் செங்குளம், குட்டையூர் வரையுள்ள 17 சிற்றூர்களில், 9 சிற்றூர்களுக்கு மட்டும் உயர் அழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் பாதை காட்டு மரக்கிளைகளில் உரசுவதாலும், ஒரு பகுதி புயல் மற்றும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு விட்டதாலும் மின்தடை ஏற்பட்டு இருந்தது. தற்போது 17 சிற்றூர்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

221—

கூத்தன்கால் கால்வாயைத் தூர் எடுத்தல்.

வினா எண் 5179—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கமுதியிலிருந்து முதுகுளத்தூர் வழியாக செல்லும் குண்டாற்றிலிருந்து செல்வனூர் மற்றும் பல கண்மாய்களுக்குச் செல்லும் கூத்தன்கால் மராமத்து செய்யப்படாததால் மண் மூடி தண்ணீர் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கூத்தன்கால் தூர் வார அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், செல்வனூர் மற்றும் பல கண்மாய்களுக்கு ரெகுநாத காவேரி வரத்துக்காலிலிருந்து (குண்டாறு) பிரிந்து செல்லும் கால்வாய், சிக்கல் நடுகால் கால்வாயாகும். சட்டமன்ற வினாவில் கூறியதை போல் அது கூத்தன்கால் என்ற பெயரில் இல்லை.



(ஆ) சிக்கல் நடுகால் கால்வாய் வரும் ஆண்டுகளில் கிடைக்கப்பெறும் நிதி நிலைக்கேற்ப தூர் வாரும் மராமத்து வேலை செய்து கொடுக்கப்படும்.

222—

மின்விளக்கு விஸ்தரிப்பு வசதி வழங்க நடவடிக்கை.

வினா எண். 5184—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேதாரண்யம் தொகுதி, குரவபுலம் ஊராட்சிப் பகுதியில் தெரு மின் விளக்கு விஸ்தரிப்பு வசதி கோரி ஊராட்சி தீர்மானித்து அதற்கான காப்புத்தொகை ஒன்றியம் வாயிலாக செலுத்தப்பட்டு ஐந்து ஆண்டுகளாகியும் இதுவரை மின்விளக்கு விஸ்தரிப்பு வசதி வழங்கப்படாத நிலையில் உள்ளதை தவிர்த்து பணி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : (பொதுப்பணித்துறை அமைச்சர்) :

வேதாரண்யம் தொகுதி, குரவபுலம் ஊராட்சிப் பகுதியில் 80 தெரு விளக்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப் பட்டு காப்புத் தொகையாக ரூ. 1,600 செலுத்தப்பட்டுள்ளது. அரசின் தெரு விளக்குகளுக்கான சிறப்பு தன்னிறைவுத் திட்டத் தின் கீழ் இந்த ஆண்டு (1992-93) இதற்கு மின் இணைப்பு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

223—

பொன்னேரியை ஆழப்படுத்துதல்.

வினா எண். 5250—திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட சோழகங்கம் எனும் பொன்னேரியை ஆழப்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள பொன்னேரியை ஆழப்படுத்துவதற்கான மதிப்பீடு தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அவர்களால் தயாரிக்கப்பட்டு வருகிறது. மதிப்பீடு இறுதியாக்கம் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு கிடைக்கப்பெற்றதும், பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

224—

தார் சாலை அமைத்தல்.

வினா எண். 5492—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேரன்மகாதேவி தொகுதி கடையம் ஊராட்சி ஒன்றியம் ஏ.பி. நாடானூர் மற்றும் மடத்தூர் ஊராட்சிகளின் சாலைகள் நெடுஞ்சாலை (கிராமச் சாலைகள்) மூலம் தார் போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா :

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

ஏ.பி. நாடானூர், மடத்தூர் ஊராட்சிகளைப் பொறுத்த வரை அதில் உள்ள கிராமங்களில் 1000-க்கு மேல் ஜனத் தொகை உள்ள கிராமம் எதுவுமில்லை. எனவே, மேற்கண்ட ஊராட்சிகளில் சாலைகள் நெடுஞ்சாலை துறையின் கிராமச் சாலைத் திட்டத்தில் மேம்பாடு செய்ய இயலாது.

225—

நிலத்தடி நீர்வளம் குறைவதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண். 6251—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலத்தடி நீர்வளம் வேகமாகக் குறைந்து வருவது பற்றி ஏதேனும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதா ?



(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

(இ) நிலத்தடி நீர்வளம் பெருக நவீன விஞ்ஞான யுத்திகள் குறித்து அயல் நாடுகளின் உதவியைப் பெற மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நிலநீர் வளத்தினை விஞ்ஞான முறையில் கணக்கிட பொதுப்பணித் துறையில் நிலநீர் பிரிவினால் தமிழ்நாடு முழுவதும் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலநீர் ஏற்றத்தாழ்வு பற்றிய ஆய்வு, விண்வெளி மற்றும் தொலை உணர்வு புகைப் படங்களை பயன்படுத்தி நில அமைப்பு ஆய்வு, நிலவேதியியல் ஆய்வு, பௌதிக ஆய்வு, துளையிடும் பணி, செயற்கைமுறை நீர் பெருக்கத் கடல்நீர் ஊடுருவல் பற்றி ஆய்வு, செயற்கைமுறை நீர் பெருக்கத் திட்டப் பணிகள், கசிவுநீர் குட்டை அமைக்கும் பணி, நிலநீர் வளம் குறித்த ஆலோசனை பணி போன்ற பணிகளை நிலநீர்த் துறை செய்து வருகிறது.

(இ) தேவை ஏற்படவில்லை.

226—

நத்தம் நகரில் மின்வாரிய கோட்டப் பொறியாளர் அலுவலகம்

வினா எண். 6274—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் நகரில் (திண்டுக்கல்—அண்ணா மாவட்டம்) மின்வாரிய கோட்டப் பொறியாளர் அலுவலகம் இல்லாதது அரசு அறியுமா ?

(ஆ) தாலுகா தலைநகராக இருப்பதால், நத்தம் நகரில் அந்த அலுவலகம் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :</u>

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் தெற்கு, இயக்குதலும் பராமரித்தலும் பிரிவில் நத்தம் நகரம் இணைக்கப்பட்டுள்ளது. அது விதிமுறைகளுக்குட்பட்டு ஒரு பகுதியில் கோட்ட அலுவலகம் அமைக்கப்பட குறைந்தபட்சமாக 4 துணைக் கோட்டங்களாவது இருக்க வேண்டும். நத்தம் பகுதியில் ஒரே ஒரு துணைக் கோட்டம் மட்டுமே உள்ளது. அது நத்தம் அதிகார எல்லை மற்றும் அதன் சுற்றுப்புறங்களை உள்ளடக்கியுள்ளது. ஆகவே, நத்தத்தில் கோட்ட அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. இருந்த போதிலும் நத்தம் நகரில் தற்சமயம் இருக்கும் மின் வாரிய அலுவலகத்திலேயே பொதுமக்களுக்கு தேவையான குறைகளைத் தீர்க்கவும், மின் தடங்கல் ஏற்படாமல் கவனித்துக் கொள்ளவும் வசதி உள்ளது.

227—

<u>சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொரட்டூருக்கு பாசன வசதி</u>

<u>வினா எண். 6450—திரு. ஆர். சிங்காரம் :</u> மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம் கொரட்டூருக்கு பாசன வசதி பெற நெல்லியடிகாடு அணைக் கட்டு சப்ளை சானல் வேலையை துரிதப்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :</u>

தஞ்சை மாவட்டம், நெல்லியடிக்காடு கிராமத்தில் அம்புலியாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டத்தில் இடதுபுற வழங்கு வாய்க்கால் வெட்டும் பணி, நிலம் கையகப் படுத்துவதில் ஏற்பட்ட தாமதத்தால் தடைபட்டு உள்ளது. இத்திட்டத்தினால், பயனடையும் நான்கு ஏரிகளில் கொரட்டூர் பெரிய ஏரியும் ஒன்றாகும். விரைவில் நிலம் கையகப்படுத்தப் பட்டு நிலுவையில் இருக்கும் இடதுபுற வழங்கு வாய்க்கால் பணி மு க்கப்படும்.



228—

<u>வாய்க்கால் பராமரித்தல்</u>

<u>வினா எண். 6547—திரு. ஆர். சிங்காரம் :</u> மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் புதுப்பட்டினத்திற்கு நீர் ஏற்று தேக்கத்தில் இருந்து வரும் வாய்க்கால் பராமரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :</u>

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கொள்ளுக்காடு இறைவை பாசனத் திட்டத்திலிருந்து வரும் வழங்கு வாய்க்காலை தேவையான இடங்களில் தூர்வாரும் வேலைக்கு 1991-92-ல் குடி மராமத்துத் திட்டத்தில் ரூ. 2,700-க்கு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு வேலை செய்து முடிக்கப்பட்டுள்ளது.

229—

<u>மின்மாற்றியை புதிதாக மாற்றித்தர நடவடிக்கை</u>

<u>வினா எண். 6645—திரு. ஆர். சிங்காரம் :</u> மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பெரிய நாயகிபுரம் சிவன்கோவில் அருகில் உள்ள மின்மாற்றியை புதிதாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :</u>

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பெரிய நாயகிபுரம் சிவன் கோவில் அருகிலுள்ள 75 கிலோ வோல்ட் ஆம்பியர் திறன் கொண்ட மின்மாற்றி நன்றாக இயங்கி வருவ

துடன், அதில் இணைக்கப்பட்ட 20 வீட்டு மின் இணைப்புகள், 8 விவசாய மின் இணைப்புகள், 2 குடிநீர்த் தொட்டி மின் இணைப்புகள், 10 தெரு விளக்குகளின் மின் இணைப்புகள் மற்றும் ஒரு தொழில் மின் இணைப்பு யாவும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. மேற்கண்ட பளுக்கள் யாவும் இம்மின் மாற்றியின் திறனுக்கு உட்பட்டதாக உள்ளதால் இம்மின் மாற்றியை மாற்றத் தேவை எழவில்லை.

230—

## சாலையை செப்பனிட நடவடிக்கை

வினா எண். 6852—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூர்—ஜமுனா மருதூர் சாலை 9/4 கி.மீ.—12/6 கி.மீ. வரை இன்னமும் செப்பனிடப்படாதது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், சாலையை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூரிலிருந்து ஜவ்வாது மலைக்கும் அதை தொடர்ந்து ஆலங்காயம் வரைக்கும் சாலை அமைக்கும் பணியானது, மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டு தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றது. வினாவில் குறிப்பிட்டுள்ள கி. மீ. 9/4 முதல் கி. மீ. 12/6 வரையுள்ள பணி, இந்தப் பணியில் ஒரு பகுதியாகும். இந்தப் பகுதி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாதலால், புதிய வனம் அமைப்பு, மற்றும் மரங்கள் சேதமடைவதற்காக ரூ. 6,89,600 வனத்துறையிடம் செலுத்தப்பட்டு, பணி துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. கி. மீ. 9/4 முதல் 13/0 வரை மண் வேலை முடிந்து சாலை அமைப்புப்பணி (Formation work) முடிவடைந்துள்ளது. மேலும் ஜல்லி பரப்புதல் வேலைக்கான சரளைக் கற்கள் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஜல்லி பரப்பி முடிந்ததும் தார் வேலைக்கான பணி துவங்கப்படும்.





231—

## கடற்கரை ஓரத்தில் தெரு விளக்கு அமைத்தல்

வினா எண். 6883—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி, புதுத்தெரு மீனவர் சாலையில் கடற்கரை ஓரத்தில் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

திருவத்தேவன் ஊராட்சி புதுத்தெரு மீனவர் குடியிருப்பில் 5 தெரு விளக்குகள் மற்றும் 15 வீட்டு மின் இணைப்புகள் அமைக்கப்பட்டு ஏற்கெனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. அவையனைத்தும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. புதுத்தெரு மீனவர் சாலையில் கடற்கரை ஓரத்தில் தெரு விளக்குகள் பொருத்தக் கோரி விண்ணப்பம் ஏதும் மின் வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை.

232—

## தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண். 6894—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் திருவத்தேவன் ஊராட்சி வல்லவன் பட்டினத்தில் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி வல்லவன் பட்டினத்தில் நான்கு தெரு விளக்குகளும் ஆறு வீட்டு மின் இணைப்புகளும் கொடுக்கப்பட்டு ஏற்கனவே

[1992 செப்டம்பர் 25

மின் வசதியளிக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட பகுதியில் கூடுதல் தெரு விளக்குகள் கோரி மின்வாரிய அலுவலகத்தில் விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

233—

## ஆர்.எல்.ஜி.இ.பி. திட்டத்தின் கீழ் மாற்றப்பட்ட மெட்டல் சாலைகள்

வினா எண். 774—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதியில் கடந்த 3 ஆண்டுகளில் ஆர்.எல். இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் எந்தெந்த சாலைகள் மெட்டல் சாலைகளாக மாற்றி அமைக்கப்பட்டன ?

(ஆ) மேலும் எந்தெந்த சாலைகள் இத்திட்டத்தின் கீழ் மெட்டல் சாலைகளாக மாற்றி அமைக்க அரசின் பரிசீலனையில் உள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள நத்தம் தொகுதியில் கடந்த 3 ஆண்டுகளில் கீழ்க்கண்ட சாலைகளை ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின்கீழ் மெட்டல் சாலைகளாக மாற்றி தார் சாலைகள் அமைக்கப்பட்டன :

**சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் :**

1. வத்தலதொப்பம்பட்டி — சில்வார்பட்டி சாலையிலிருந்து பிரிந்து வலசு வரை கி.மீ. 0/0-2/1.

2. புது ஆவிளப்பட்டி சாலை கி.மீ. 0/0-2/4.

**நத்தம் ஊராட்சி ஒன்றியம் :**

1. பிள்ளையார் நத்தம்— புதூர் காலனி சாலை 0/0 0—8.

2. மதுரை-நத்தம் சாலையிலிருந்து பி. தேத்தாம்பட்டி செல்லும் சாலை கி. மீ. 0/0-2/0.



1992 செப்டம்பர் 25]

3. பாலப்ப நாயக்கன் பட்டி — இராஜகோபாலபுரம் சாலை கி.மீ. 0/0-2/4.

(ஆ) தற்போது இத்திட்டத்தின் கீழ் வேறு எந்த சாலைகளையும் மெட்டல் சாலைகளாக மாற்றி அமைக்கும் கருத்துருக்கள் ஏதும் பரிசீலனையில் இல்லை.

234—

## சாலைகளுக்கு மெட்டல் பரத்தும் திட்டம்.

வினா எண். 7774—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டைத் தொகுதி, கந்தர்வகோட்டை ஒன்றி
யத்தில் உள்ள அம்புக்கோவில் - துவார் சாலைக்கும் — மஞ்சம்
பேட்டை— தச்சங்குறிச்சி சாலைக்கும், பெரம்பலூர் -மானா
மதுரை சாலைக்கும் மெட்டல் பரத்தும் திட்டம் ஏதேனும்
அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணைப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள
முதல் இரண்டு ஊராட்சி சாலைகளான அம்புக்கோவில் சாலையி
லிருந்து துவார் செல்லும் சாலை மற்றும் மஞ்சப்பேட்டை-
தச்சங்குறிச்சி சாலை மேம்பாட்டு பணிகளுக்கு ரூ. 27.00
இலட்சங்கள் (15-12) தேவைப்படுகிறது. இவ்விரு சாலை
மேம்பாட்டுப் பணிகளும் இதுவரை அரசால் அங்கீகரிக்கப்பட்
டுள்ள திட்டப் பணிகள் எதிலும் இடம் பெறவில்லை. மேலும்,
எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஊராட்சி/ஊராட்சி
ஒன்றிய சாலை/பாலப் பணிகளை நெடுஞ்சாலைத் துறையின்
பகுதி -2 திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய வழி வகை செய்யப்
படவில்லை. எனவே இப்பணிகளை அண்மைக் காலங்களில்
இத்துறையால் பகுதி-2 திட்டத்தில் எடுத்துச் செய்யும் சாத்தியக்
கூறுகள் இல்லை.

**பெரம்பலூர்—மானாமதுரை சாலை :**

சட்டமன்ற வினாவில் மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்
டுள்ள நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த மாநில நெடுஞ்
சாலையான பெரம்பலூர்—மானாமதுரை சாலை நல்ல நிலையில்
தார் சாலையாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

235—

## தெரு விளக்கு அமைக்க மின் கம்பத்திற்கு விதிக்கப்பட்ட தொகையைக் குறைக்க நடவடிக்கை.

வினா எண். 8024—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சியில் தெரு விளக்கு அமைக்க ஒரு மின் கம்பத்திற்கு விதிக்கப்பட்ட தொகையைக் குறைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

தமிழ்நாடு மின்சார வாரியம் ஒரு தெருவிளக்கிற்கு மின் இணைப்பு வழங்க சராசரியாக ரூ. 2.00 செலவழிக்கிறது. வாரியம் தீவிரமாக பரிசீலனை செய்த பிறகே ஒரு தெரு விளக்கிற்கு மின் இணைப்பு வழங்க ரூ.300 மேம்பாட்டுக் கட்டணமாக வசூலிக்க வேண்டும் என்று நிர்ணயித்துள்ளது. மற்றைய மின்சார கட்டண பகுதிகளை விட (Electrical Tariff) தெரு விளக்குக்கு நிர்ணயிக்கப்பட்ட மேம்பாட்டுத் தொகை குறைவானது. இக்கட்டணத் தொகையைக் குறைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

236—

## தேசிய நெடுஞ்சாலைகளில் பராமரிப்பு பணிகள்.

வினா எண். 8046—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தேசிய நெடுஞ்சாலைகளில் பலவற்றில் பராமரிப்பு பணிகள் முறைப்படி செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



விடை—

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :**

(அ) அவ்வாறு இல்லை.

(ஆ) தமிழ் நாட்டில் மொத்தம் 10 தேசிய நெடுஞ்சாலை
கள் உள்ளன. இவற்றின் மொத்த நீளம் 2,002.464 கி.மீ. இவற்
றுள், நகர்ப்புற தேசிய நெடுஞ்சாலையின் நீளம் 129.62 கி.மீ.
கிராமப்புற தேசிய நெடுஞ்சாலையின் நீளம் சுமார் 1,873 கி.மீ
இந்த சாலைகளின் பராமரிப்புக்காக ஆண்டு ஒன்றுக்கு கிராமப்புற
தேசிய நெடுஞ்சாலைக்கு கி.மீ. ஒன்றுக்கு ரூ. 10,000 வீதம் ஏறக்
குறைய ரூ. 187 லட்சம் மைய அரசு அளிக்கிறது. நகர்ப்புற
தேசிய நெடுஞ்சாலைப் பராமரிப்புக்காக ஆண்டொன்றுக்கு கிலோ
மீட்டருக்கு ரூ. 16,000 வீதம் ஏறத்தாழ ரூ. 20 லட்சம் மைய
அரசு அளிக்கிறது. இந்த ஒதுக்கீடு தற்சமயம் நிலவி வரும்
விலைவாசி நிலவரப்படி கொஞ்சமும் போதாது. மைய அரசு
ஒதுக்கும் இத்தொகையினைக் கொண்டு இயன்ற வரை எல்லா
தேசிய நெடுஞ்சாலைகளையும் நல்லமுறையில்,போக்குவரத்துக்கு
ஏற்ற அளவில், பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகையை
கிலோ மீட்டருக்கு ரூ. 25,000 வீதம் ஆண்டொன்றுக்கு. ஏறத்
தாழ ரூ. 5 கோடி ஒதுக்கினால் சாலைகளை மிக நல்ல முறையில்
பராமரிக்க இயலும். மேலும் மிகவும் பழுதடைந்த தேசிய நெடுஞ்
சாலைப் பகுதிகளைப் புதுப்பிக்கும் வகையில் ஆண்டுக்கு ஏறக்
குறைய 300 கி.மீ. நீளம் வரை எடுக்கப்பட்டு ரூ. 5 கோடி செல
வழிக்கப்பட்டு வருகிறது. இதன் கீழ் பழுதடைந்த தார்ச் சாலை
கள் புதுப்பிக்கப்பட்டு, இரு பக்கங்களிலும் உள்ள மண் மேடை
களும் வலுப்படுத்தப்படுகின்றன. மைய அரசு இந்த
தொகையை ரூ. 10 கோடியாக உயர்த்தினால் மேன்மேலும் தார்
சாலைகளைப் புதுப்பித்து எல்லா தேசிய நெடுஞ்சாலைகளையும்
மேலும் மிக நல்ல முறையில் பராமரிக்க இயலும். இது சம்பந்த
மாக அடிக்கடி மைய அரசுக்கு பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை
விடுக்கப்படுகிறது. மைய அரசின் போக்குவரத்து அமைச்சர்
வருகை தரும்போதும், சாலை மேம்பாடு திட்டம் வகுக்கும்
போதும், கூடுதல் நிதி ஒதுக்குமாறு கோரப்பட்டு வருகிறது.
ஆனால், மைய அரசின் தரைவழி போக்குவரத்து அமைச்சகம்
தேசிய அளவில் இருப்பில் உள்ள நிதியை அனைத்து மாநிலங்
களுக்கும் பகிர்ந்து அளித்து வருவதாகவும் நிதி பற்றாக்குறை
காரணமாக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது எனவும்
தெரிவித்து வருகின்றது. இருப்பினும் தொடர் முயற்சி எடுக்கப்
பட்டு வருகிறது.

[1992 செப்டம்பர் 25

237—

## மின் இணைப்புத்தர மின் வாரியம் கேட்கும் ஆவணங்கள்.

வினா எண். 8296—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை மற்றும் அதன் புறநகர்ப்பகுதிகளில் மின் இணைப்புத்தர, மின்வாரியம் கேட்கும் ஆவணங்களில் இணைப்பு கேட்கப்படும் இடத்திற்கான பட்டா நகலும் இருக்க வேண்டும் என்று இருப்பதை மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) பட்டாவுக்குப் பதில் இணைப்பு கேட்பவர் வரி செலுத்துவதற்கான அத்தாட்சி தந்தால் இணைப்புத்தரும் வகையில் அரசு மாற்றம் செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் மின் இணைப்புத்தர கேட்கப்படும் ஆவணங்களில் இணைப்பு கேட்கப்படும் இடத்திற்கான பட்டா நகலும் இருக்க வேண்டும் என்று தமிழ்நாடு மின்வாரியம் எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை.

(ஆ) பட்டாவுக்குப் பதில் இணைப்பு கேட்பவர் வரி செலுத்துவதற்கான அத்தாட்சி தந்தால் அதனை இடத்தின் சொந்தத்திற்கு அத்தாட்சியாக எடுத்துக்கொள்ள இயலாததால், மின் இணைப்பு தரும் வகையில் மாற்றம் செய்ய உத்தேசமில்லை. ஏனெனில், வரி செலுத்துவதற்கான ரசீது (Tax Receipt) இடத்தின் சொந்தக்காரர் மட்டுமின்றி, வரி செலுத்துபவர்கள் பெயரிலும் அளிக்கப்படுவதால், வரி ரசீதில் குறிப்பிட்டுள்ள நபர் இடத்தின் உண்மையான சொந்தக்காரர் என்று முற்றிலுமாக எடுத்துக்கொள்ள இயலாது. சொந்தக்காரர் பெயரில் மட்டும் வழங்கப்படும் கேட்பு தாக்கீதை (Demand notice) உரிமைக்கு அத்தாட்சியாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. எனவே, சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வரி ரசீதை மட்டும் அத்தாட்சியாக எடுத்துக்கொண்டு இணைப்பு தரும் வகையில் மாற்றம் செய்ய உத்தேசம் இல்லை.



1992 செப்டம்பர் 25]

238—

## சீர்காழி நகராட்சியில் காலியாக உள்ள இடங்களில் அரசு அலுவலகங்கள் கட்ட நடவடிக்கை

வினா எண். 8399—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சீர்காழி தொகுதியில், நிறைய அரசு அலுவலகங்கள் வாடகை கட்டிடத்திலேயே இயங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) சீர்காழி நகராட்சியில் காலியாக உள்ள இடங்களில் அரசு அலுவலகங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து அலுவலகக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்குமாறு கோரிக்கை வரப்பெற்றால் நகராட்சி எல்லையில் காலியாக உள்ள இடங்கள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, அவற்றின் மீது அரசின் ஒப்புதல் பெற்று கட்டிடங்கள் கட்டுவதற்கான முயற்சிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்படும்.

239—

## வீடுகளுக்கு மின் இணைப்பு.

வினா எண். 8449—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராமங்களில் வீடுகளுக்கு மின் இணைப்பு கேட்டு 3 பேர் மனு செய்தால் கம்பம் நட்டு மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்பதால் நடைமுறையில் இரண்டு மனுக்களுக்கு மேல் பதிவு செய்வதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வீடுகளுக்கு மின் இணைப்பு பெற மூன்றுக்கு மேல் அளிக்கப்படும் மனுக்களையும் பதிவு செய்து கம்பம் நட்டு மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) விண்ணப்பங்கள் பெறுவதில் எண்ணிக்கையில் மின் வாரியம் எந்தவித கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. எனவே, கம்பம் நட்டு மின் இணைப்பு கொடுக்க வேண்டிய விண்ணப்பங்களில் இரண்டுக்கு மேல் பதிவு செய்வதில்லை என்பது சரியல்ல.

(ஆ) நடைமுறையிலுள்ள ஆணைகளின்படி, கம்பம் நட்டு மின் இணைப்பு வழங்க தேவையான விண்ணப்பங்கள் மூன்றிற்கு மேல் இருந்தாலும் பதிவு செய்யப்பட்டு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

240—

குன்னூர் மற்றும் இருபதுக்கும் மேற்பட்ட ஊர்களுக்கு மின் வசதியளித்தல்.

வினா எண். 8488—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரிய கல்வராயன் மலையில் குன்னூர் மற்றும் இருபதுக்கும் மேற்பட்ட ஊர்களுக்கு மின் வசதியளிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பெரிய கல்வராயன் மலையில் குன்னூர் உள்ளிட்ட மொத்த ஏழு (7) பெரிய கிராமங்களில் மக்கள் வசிக்கும் ஆறு (6) பெரிய கிராமங்களுக்கு (மண்ணூர், கோயில்புத்தூர், கரிய கோயில் வலவு, சூலாங்குறிச்சி, குன்னூர், ஆடியனூர்) மார்ச் 1992-இல் மின்வசதியளிக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள மண்ணூர் ஆர். எப். பெரிய கிராமத்தில் மக்கள் வசிக்காததால் மின்வசதியளிக்கத் தேவையில்லை.

மேலும் இம் மலைப்பகுதியில் மொத்தம் 44 சிற்றூர்கள் உள்ளன. அவற்றுள் 41 சிற்றூர்களுக்கு ஏற்கனவே மின் வசதியளிக்கப்பட்டுவிட்டது. ஒரு சிற்றூர் மக்கள் வசிக்காதது ஆகும். மீதமுள்ள இரண்டு (2) சிற்றூர்களுக்கும் மின் வசதி அளிக்க ஆவன செய்யப்படும்.



241—

பவானி ஆற்றின் மீது பாலம் அமைத்தல்.

வினா எண். 8567—செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டுப்பாளையம் தொகுதியில் உள்ள நெல்லித்துறை என்ற தீவு பகுதிக்கு பவானி ஆற்றின் மீது பாலம் அமைத்துந்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இப்பாலம் அமைக்கும் பணியானது தமிழக அரசால் மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள மத்திய சாலை நிதித் திட்டத்தில் ரூ. 60.00 இலட்சம் மதிப்பீட்டில் இடம் பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன், நெல்லித்துறை அருகே பவானி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

242—

பாலத்தை சீரமைக்க நடவடிக்கை.

வினா எண். 8705—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றியத்தில் நாஞ்சாக்குளம் அருகே நெடுஞ்சாலையில் குறுக்கே உள்ள பாலம் இடிந்த நிலையில் உள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பாலத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் பாலம், இரஸ்தா தெக்கலம் சாலை கி.மீ. 0/0-4/8 என்கின்ற சாலையில் கி.மீ. 3/8-ல் நஞ்சக்குளம் என்ற அருகில்

ஒரு ஓடையில் குறுக்கே தற்போதுள்ள தாம்போகிக்கு பதிலாக கட்டப்பட வேண்டும். இச்சாலை, நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பராமரிக்கப்படும் ஓர் அரசு இதர மாவட்ட சாலையாகும். இங்கு உயர்மட்ட பாலம் கட்ட சுமார் ரூ. 5.00 லட்சம் தேவைப்படுகிறது. இப்பணி அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை. ஆண்டு தோறும் திட்டப்பணிகளுக்கு மிகக் குறைந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதால் அண்மை ஆண்டுகளில் இப்பணியினை பகுதி 2 திட்டத்தில் எடுத்துச் செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை. எனினும், தற்போதுள்ள தாம்போகி பழுதுபார்க்கப்பட்டு வாகன போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

243—

## ஆதிதிராவிடர் காலனிக்கு மின் இணைப்பு.

வினா எண் 8712—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆலங்குளம் ஒன்றியம், நல்லூர் கிராமத்தில் நல்லூர் விலக்கிற்கு செல்லும் வழியில் உள்ள ஆதிதிராவிடர் காலனிக்கு மின்சார வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

ஆலங்குளம் ஒன்றியம், நல்லூர் கிராமத்தில் நல்லூர் விலக்கிற்கு செல்லும் வழியில் உள்ள இந்திரா நகர் ஆதி திராவிடர் காலனியில் மார்ச் மாதம் 1990-லேயே ஒன்பது (9) குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்புகள் மற்றும் மூன்று (3) வீடுகளுக்கு மீட்டர் பொருத்திய வீட்டு உபயோகத்திற்கான மின் இணைப்பும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் மேற்படி காலனிக்கு தெருவிளக்கு பொருத்தக்கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை.



244—

## மைய அரசின் அனுமதிக்காக காத்திருக்கும் தமிழ்நாட்டின் மின் திட்டங்கள்.

வினா எண் 8748—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது மைய அரசின் அனுமதிக்காக காத்திருக்கும் தமிழ்நாட்டின் மின் திட்டங்களின் விவரம் என்ன ?

(ஆ) அனுமதி பெறுவதில், காலதாமதத்திற்கான காரணம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) தற்போது மைய அரசின் அனுமதிக்காக காத்திருக்கும் தமிழ்நாட்டின் மின் திட்டங்களாவன :

1. பார்சன்ஸ் பள்ளத்தாக்கு நீர் மின் திட்டம் மின் நிலையம் எண். 6 (30 மெ. வாட்) (நீலகிரி மாவட்டம்).

2. பிள்ளைப்பெருமாள் நல்லூர் எரிவாயு மின் சுழலி திட்டம் (300 மெகாவாட்).

3. வடசென்னை அனல்மின் திட்டம், நிலை—2 (1/500 மெகாவாட்).

(ஆ) அனுமதி பெறுவதில் காலதாமதத்திற்கான காரணம் :—

1. பார்சன்ஸ் பள்ளத்தாக்கு நீர் மின் திட்டம் —மின் நிலையம் எண். 6 (30 மெகாவாட்)

இத்திட்டத்திற்கு ,திட்டக் குழுவின் ஒப்புதல் 1982-ம் ஆண்டு அளிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான வன பாதுகாப்பு சட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்படாததால் இத்திட்டமானது செயலாக்கப்பட இயலவில்லை. மத்திய அரசின் வனத்துறை மற்றும் சுற்றுப்புறச் சூழல் துறைக்கு தேவைப்பட்ட அனைத்து விபரங்களும் கொடுக்கப்பட்டு விட்டன.

வனமில்லா நிலத்தையும், வனம் உண்டாக்குவதற்கான கட்டணத்தையும் செலுத்தினால் 9.9463 ஹெக்டா வன நிலத்தை இத்திட்டத்தை செயலாக்குவதற்கு திருப்புவதாக மத்திய அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. தமிழ்நாடு மின்வாரியம் ஏற்கனவே இதற்காக பட்டா நிலத்தை வன இலாக்காவிடம் ஒப்படைத்து விட்டது. மேலும் மின்வாரியத்தால் ரூபாய் 9.95 இலட்சங்கள் ஏற்கனவே வனத் துறைக்கு வனம் உண்டாக்குவதற்காக கொடுக்கப்பட்டு விட்டது. மத்திய அரசிற்கு ஒப்புதல் அளிக்கக் கோரி இது தெரிவிக்கப்பட்டுவிட்டது. ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

2. பிள்ளைப்பெருமாள் நல்லூர் மின் சுழலி திட்டம் :

(அ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சுற்றுபுற சூழல் அனுமதி எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) போதிய நிதி பற்றாக்குறை காரணமாக மைய அரசு ஆழ்கடற்பகுதியில் பி.ஒய் 3 கிணறுகள் வளர்ச்சி திட்டத்தை 9-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு தள்ளி வைத்துள்ளது.

(இ) எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆணையத்தின் இயற்கை எரிவாயு வழங்கும் அட்டவணை இத்திட்டத்திற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஈ) தமிழ்நாடு நிலத்தடி நீர் துறையிடமிருந்து சீர்காழி பகுதியில் நிலத்தடி நீர் இத்திட்டத்திற்கு கிடைப்பதற்கான உறுதி ஆக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது.

3. வடசென்னை அனல் மின் திட்டம், நிலை— 2.

(அ) மைய அரசின் காடு மற்றும் சுற்றுப்புற சூழல் துறையிடமிருந்தும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்திடமிருந்தும் சுற்றுப்புறச் சூழல் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) மேற்படி மின் திட்டத்திற்கு நிலக்கரி வழங்குவதற்கான மைய அரசின் நிலக்கரி வாரியத்தின் அனுமதி எதிர்பார்க்கப்படுகின்றது.



245—

## திருவலம் மேம்பாலம் கட்டும் பணியின் தற்போதைய நிலை.

வினா எண் 8775— திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தேசிய நெடுஞ்சாலை-4-ல் சென்னை—சித்தூர் சாலையில் 1989ஆம் ஆண்டு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு திருவலம் மேம்பாலம் கட்டுவதாக அறிவிக்கப்பட்ட திட்ட பணியின் தற்போதைய நிலை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

தேசிய நெடுஞ்சாலை 4-இல் சென்னை—சித்தூர் சாலையில் கி.மீ. 122/4-ல் திருவலம் அருகே மேம்பாலம் கட்டுவதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி இன்னமும் முழுமையாக முடிக்கப்படவில்லை. நிலம் கையகப்படுத்தும் பணி முழுமையாக முடிந்தவுடன், மேம்பாலம் கட்டுவதற்கான மதிப்பீடு மைய அரசிற்கு அனுப்பப்பட்டு, ஒப்புதல் பெற்ற பின்பு மேம்பாலம் கட்டும் பணி துவக்கப்படும்.

246—

## கொடைக்கானல் மலை ஒருவழி பாதையை இருவழிப் பாதையாக மாற்றுதல்.

வினா எண் 8830— திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொடைக்கானல் மலைப்பகுதியான பெரியகுளம் தொகுதியில் சுற்றுலாப்பயணிகள் அதிகமாக வந்து செல்வதால் ஒரு வழிப்பாதையை இருவழிப்பாதையாக மாற்றி சீர் செய்து செப்பனிட்டு புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப் பட்டுள்ள சாலையானது நெடுஞ்சாலைத்துறையினால் பராமரிப்பு செய்யப்பட்டு வரும் மாவட்ட முக்கிய சாலை (MDR) யான கொடைக்கானல் மலைச்சாலை (Kodai Ghat Road) கி.மீ. 0/0—52/4 வரையிலாகும். தற்போது இச்சாலை ஒரு வழிச் சாலையாக உள்ளது. இச்சாலையில் கி.மீ. 0/0/5/8 (5.80.கி.மீ.) வரையில் தரைப்பகுதியிலும், எஞ்சியுள்ள .கிமீ. 5/8/52/4 (46.60 கி.மீ.) வரையில் மலைப்பகுதியிலும் உள்ளது. இச்சாலை முழுவதும் 0/0/52/4 வரை தேசீய நெடுஞ்சாலை தரத்திற்கு உயர்த்தி மேம்பாடு செய்ய வேண்டுமெனில் தரைப்பகுதியான கி.மீ. 0/0/52/8 வரை ரூ. 29.00 லட்சமும், மலைப்பகுதியான கி.மீ. 5/8/52/4 வரை ரூ. 466.00 லட்சமும் ஆக மொத்தம் ரூ. 495 லட்சம் தேவைப்படும். இச்சாலை மேம்பாட்டுப்பணி இதுவரையில் அரசின் ஒப்புதல் பெற்ற திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. எனவே இச்சாலையினை இருவழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் வாய்ப்புக்கள் இல்லை.

247—

மின்சார மோட்டாருக்கு கொடுத்த மின் இணைப்புக்கள்.

வினா எண். 9240—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டங்களில் இந்த வருடம் மின்சார மோட்டாருக்கு கொடுத்த மின் இணைப்புகள் எத்தனை ?

(ஆ) தொழிற்சாலைக்கு கொடுத்த மின் இணைப்புகள் எத்தனை ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) 1991-92 ஆம் வருடம் கொடுக்கப்பட்ட விவசாய மின் இணைப்புகளின் எண்ணிக்கையாவன :

1. தஞ்சை மாவட்டம் .. 1,300

2. நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம். 1,200

(ஆ) 1991-92 ஆம் வருடம் கொடுக்கப்பட்ட தொழிற் சாலைகளுக்கான மின் இணைப்புகள் :

1. தஞ்சை மாவட்டம் .. 139

2. நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம். 122

248—

தார் சாலையை செப்பனிடல்.

வினா எண். 9399—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல்லை, கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், வீராணம்-ரெட்டியார்பட்டி குண்டும் குழியுமாய் உள்ள தார் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை உக்கிரன்கோட்டை கீழ் வீராணம் சாலை எனும் 12.20 கி.மீ. நீளமுள்ள தார் சாலை. இச்சாலை கி.மீ. 10/2ல் ரெட்டியார் பட்டி எனும் ஊர் உள்ளது. இதில் 8/0-9/0. 10/0-11/0

மற்றும் 15/8-17/0 வரையுள்ள மோசமான சாலையை சீர்செய்ய பணிகள் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பந்தங்கள் இறுதியாக்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் முடிக்கப்படும். மீதமுள்ள பகுதிகள் போக்குவரத்திற்கு இடையூறின்றி பராமரிக்கப்படுகிறது.

249—

சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள அரசு வீடுகள்.

வினா எண். 10050—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு வீடுகள் எத்தனை ?

(ஆ) எந்த அடிப்படையில் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன.

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) சென்னை அரசினர் தோட்ட வளாகத்திலுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை—209.

(ஆ) இக்குடியிருப்புகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் அவர்களின் ஊதியத்தின் அடிப்படையிலும் முதுநிலைப் பட்டியலின்படியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

250—

துவக்கப்பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 119—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாபநாசம் ஊராட்சி ஒன்றியம், தியாகசமுத்திரம் ஊராட்சி மன்றம், தளிகையூர் கிராமத்தில் அமைந்துள்ள



துவக்கப்பள்ளிக்கு கட்டிடம் கட்ட பணி துவங்கி பல மாதங்கள் ஆகியும் இன்னும் பணி முடிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தியாகசமுத்திரம் ஊராட்சியில் தளிகையூர் கிராமத்தில் அமைந்துள்ள துவக்கப்பள்ளிக்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 1.25 லட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளிக் கட்டிடம் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு தற்போது முடிவடைந்து விட்டது.

251—

திண்டுக்கல் இராணி மங்கம்மாள் நகருக்கு குடிநீர் வசதி.

வினா எண். 274—திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேடசந்தூர் தொகுதி, பேரணை குடிநீர்த் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையைப் பயன்படுத்தி திண்டுக்கல் இராணி மங்கம்மாள் நகருக்கு குடிநீர் திட்டம் விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இராணி மங்கம்மாள் நகருக்கு பேரணை குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை விஸ்தரிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

252—

## கொடுமுடி ஒன்றியத்திலுள்ள பஞ்சாயத்துகளுக்கு குடிநீர் வசதி.

வினா எண். 316—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படாத பஞ்சாயத்துக்களுக்கு குடிநீர் (காவிரி ஆற்று நீர்) வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படாத பஞ்சாயத்துக்களுக்கு குடிநீர் (காவிரி ஆற்று நீர்) வழங்க வரும் நிதி ஆண்டுகளில் (அதாவது 1992-93-ல்) திட்டங்கள் மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.



253—

## போகலூர் ஒன்றியத்திலுள்ள ஆழ்குழாய்க் கிணறுகள்.

வினா எண் 542—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் உள்ள ஆழ்குழாய்க் கிணறுகளில் உபயோகத்தில் இருக்கும் கிணறுகள் எத்தனை ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 83 ஆழ்குழாய்க் கிணறுகள் உள்ளன.

(ஆ) அவற்றின் விபரம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இணைப்பு.

### இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கும் இடங்களின் விவரம் :

| வரிசை எண். | ஊராட்சியின் பெயர். | கிராமத்தின் பெயர். | ஆண்டு. | கை பம்பு பெயர். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | அரியக்குடி புத்தூர். | 1. அரியக்குடி | 1986 | மார்க் 2 |
| | | 2. அரியக்குடி புத்தூர் | 1986 | ஷை |
| | | 3. முத்துசெல்லாபுரம் | 1987 | ஷை |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1. | அரியக்குடி புத்தூர்—தொடர்ச்சி. | | | |
| | | 4. அரியக்குடி காலனி | 1986 | மார்ச் 2 |
| | | 5. வாழவந்தான்புரம் | 1986 | ஷை |
| | | 6. வாழவந்தான்புரம் | 1990 | ஷை |
| | | 7. அரியக்குடி | 1991 | ஷை |
| 2 | போகலூர் | 8. போகலூர் வடக்கு | 1982 | ஷை |
| | | 9. அம்பேத்கார் காலனி | 1984 | ஷை |
| | | 10. மீனாட்சிபுரம் | 1987 | ஷை |
| | | 11. அண்ணாநகர் | 1987 | ஷை |
| | | 12. ஜோதியேந்தல் | 1988 | ஷை |
| | | 13. போகலூர் ஊரணி | 1989 | ஷை |
| | | 14. நரியனேந்தல் | 1990 | ஷை |
| | | 15. சத்திரக்குடிபள்ளி | 1991 | ஷை |
| 3 | கீழாம்பல் | 16. கீழக்கோட்டை | 1986 | ஷை |
| | | 17. கீழாம்பல் | 1990 | ஷை |
| | | 18. கீழாம்பல் | 1990 | ஷை |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 4 | பாண்டிக்கண்மாய் | 19. ஜீவாநகர் | 1987 | ஷை |
| | | 20. பாண்டிக்கண்மாய் | 1988 | ஷை |
| | | 21. பாண்டிக்கண்மாய் | 1991 | ஷை |
| 5 | டி. கருங்குளம் .. .. | 22. டி. கருங்குளம் | 1987 | ஷை |
| | | 23. இலந்தைகுளம் | 1987 | ஷை |
| 6 | மஞ்சூர் .. .. | 24. வணங்கானேந்தல் | 1985 | ஷை |
| | | 25. வணங்கானேந்தல் காலனி | 1986 | ஷை |
| | | 26. வணங்கானேந்தல் காலனி | 1991 | ஷை |
| | | 27. மஞ்சூர் காலனி | 1991 | ஷை |
| 7 | தெய்வேந்திரநல்லூர் .. | 28. தெய்வேந்திரநல்லூர் | 1983 | ஷை |
| | | 29. மாவிலங்கை | 1984 | ஷை |
| | | 30. திருவாடி | 1990 | ஷை |
| 8 | குமுக்கோட்டை .. | 31. குமுக்கோட்டை | 1984 | ஷை |
| | | 32. குமுக்கோட்டை | 1985 | ஷை |
| | | 33. பூவிளத்தூர் | 1987 | ஷை |

| (1) | (2) | | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 9 | கருத்தனேந்தல் | .. | 34. கருத்தனேந்தல் ஊரணி | 1986 | மார்ச் 2 |
| | | | 35. கருத்தனேந்தல் பள்ளி | 1986 | டிட்டோ |
| | | | 36. கருத்தனேந்தல் நடுத்தெரு | 1986 | டிட்டோ |
| | | | 37. கருத்தனேந்தல் கோவில் | 1987 | டிட்டோ |
| 10 | பொட்டிதட்டி | .. | 38. பொட்டிதட்டி ரோடு | 1986 | டிட்டோ |
| | | | 39. பொட்டிதட்டி காலனி | 1986 | டிட்டோ |
| | | | 40. பொட்டிதட்டி ஸ்கூல் | 1986 | டிட்டோ |
| | | | 41. பொட்டிதட்டி ரோடு | 1987 | டிட்டோ |
| | | | 42. பொட்டிதட்டி ரோடு | 1990 | டிட்டோ |
| | | | 43. மந்திவலசை நடுத்தெரு | 1990 | டிட்டோ |
| 11 | மஞ்சக்கொல்லை | .. | 44. மஞ்சக்கொல்லை பள்ளி. | 1986 | டிட்டோ |
| | | | 45. மஞ்சக்கொல்லை (கோழிப் பண்ணை). | 1989 | டிட்டோ |
| 12 | கே. வலசை | .. | 46. கே. வலசை கோவில் | 1985 | மார்ச் 2 |
| | | | 47. கே. வலசை பாலம் | 1986 | டிட்டோ |
| | | | 48. அரசடிவண்டல் ரோடு | 1987 | டிட்டோ |
| | | | 49. அரசடிவண்டல் | 1987 | டிட்டோ |
| | | | 50. அரசடிவண்டல் ரோடு | 1988 | டிட்டோ |
| 13 | செவ்வூர் | .. | 51. செவ்வூர் காலனி | 1986 | டிட்டோ |
| | | | 52. செவ்வூர் காலனி | 1991 | டிட்டோ |
| 14 | வீரவனூர் | .. | .... | .. | டிட்டோ |
| 15 | மென்னந்திநாகாச்சி | .. | 53. நாகாச்சி ரோடு | 1986 | டிட்டோ |
| | | | 54. கே. கருங்குளம் ரோடு | 1986 | டிட்டோ |
| | | | 55. பெரியநாகாச்சி பஸ் ஸ்டாப் | 1986 | டிட்டோ |
| | | | 56. அரசநகரி ரோடு அருகில் | 1987 | டிட்டோ |
| | | | 57. நாகாச்சி பஸ் ஸ்டாப் | 1987 | டிட்டோ |
| 16 | காமன்கோட்டை | .. | 58. காக்கனேந்தல் ஊ.ஒ.ச்டி. அருகில் | 1986 | டிட்டோ |
| | | | 59. காக்கனேந்தல் கண்மாய் | 1985 | டிட்டோ |
| | | . | 60. காமன்கோட்டை அருந்ததியர் குடியிருப்பு. | 1986 | டிட்டோ |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 17 | இத [illegible]வயல் .. | 61. முத்துவயல் (நடுத்தெரு) | 1987 | மார்க் 2 |
| 18 | முதலூர் .. | 62. முதலூர் ஸ்கூல் அருகில் | 1984 | ஷெடி |
| 19 | செய்யாவாலூர் .. | 63. செய்யலாலூர் யாதவர் குடியிருப்பு. | 1987 | ஷ |
| 20 | எட்டிவயல் .. | 64. எட்டிவயல் ரோடு | 1987 | ஷெடி |
| | | 65. எட்டிவயல் காலனி | 1989 | ஷெடி |
| | | 66. முசமதியாபுரம் (நடுத்தெரு) | 1991 | ஷெடி |
| | | 67. ஆணைக்குடி நடுத்தெரு | 1991 | ஷெடி |
| | | 68. இன்னிசேரி | 1991 | ஷெடி |
| 21 | தீயனூர் . | 69. தீயனூர்கோவில் அருகில் | 1984 | ஷெடி |
| 22 | கவிதைகுடி . | 70. கவிதைகுடி கண்மாய் உள்புரம். | 1987 | ஷெடி |
| 23 | உரத்தூர் .. | 71. உரத்தூர் பால்வாடி | 1984 | ஷெடி |
| | | 72. அனுமனேரி ரோடு | 1985 | ஷெடி |
| | | 73. கோரைக்குளம் ரோடு | 1986 | ஷெடி |
| | | 74. உரத்தூர் ஊரணி | 1990 | ஷெடி |
| 24 | எஸ். கொடிக்குளம் .. | 75. எஸ். கொடிக்குளம் கண்மாய் | 1986 | மார்க் 2 |
| | | 76. எஸ். கொடிக்குளம் மருத்துவமனை. | 1986 | ஷெடி |
| 25 | சேமனூர் .. | 77. மேலச்சேமனூர் ரோடு | 1986 | ஷெடி |
| | | 78. சேமனூர் புதிய காலனி | 1987 | ஷெடி |
| | | 79. மேலச்சேமனூர் மேல் தெரு | 1990 | ஷெடி |
| | | 80. கீழச் சேமனூர்கண்மாய் கரை | 1991 | ஷெடி |
| 26 | வைரனேந்தல் .. | 81. வைரனேந்தல் நடுத்தெரு | 1987 | ஷெடி |
| | | 82. தெஞ்சியேந்தல் ரோடு அருகில். | 1987 | ஷெடி |
| | | 83. தெஞ்சியேந்தல் கோவில் அருகில். | 1989 | ஷெடி |

[1992 செப்டம்பர் 25

254—

## அலிவலம் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் வசதி.

வினா எண் 1164—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை வட்டம், அலிவலம் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு விரைவில் மின் மோட்டார் வைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம்—பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், அலிவலம் ஊராட்சி ஆதி திராவிடர் தெருவில் 30,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல முறையில் இயங்கி வருகிறது. இந்த ஊராட்சியைச் சார்ந்த உதய சூரியபுரத்தில் புதிதாக கட்டப்பட்ட ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மின் மோட்டார் பொருத்தப்பட்டு தற்பொழுது நல்ல முறையில் இயங்கி வருகிறது.

255—

## ஒன்றியங்களைப் பிரித்தல்.

வினா எண் 1290—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் மங்களூர், நல்லூர் போன்ற ஒன்றியங்களைப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர், நல்லூர் போன்ற ஒன்றியங்களைப் பிரிக்கும் செயற் குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை. இதனால் அரசுக்கு ஏற்படக் கூடிய செலவினங்களைக் கருத்திற்கொண்டு, அரசின் நிதி நிலைக்குத் தகுந்தாற் போன்று, மிகவும் அத்தியாவசியமானவைகளின் கருத்துருக்கள் பரிசீலிக்கப்படுகின்றன.



1992 செப்டம்பர் 25]

256—

## குத்தாலம் பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண் 1556—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் குத்தாலம், பேரூராட்சியில் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், குத்தாலம் பேரூராட்சியில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டி அதிலிருந்து பகிர்மானக் குழாய்கள் அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் ரூ. 55.75 இலட்சத்திற்கு அரசாணை எண். 8 ந. நி. கு. வ. துறை, நாள்: 9—1—1992-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

257—

## சங்ககிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 1562—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பள்ளிப்பாளையத்திலிருந்து சங்ககிரிக்குக் கொண்டு வரப்படும் கூட்டுக்குடிநீர் திட்டத்தில் இடையே உள்ள 23' கிராமங்களுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்.

(அ) பள்ளிப்பாளையத்திலிருந்து சங்ககிரிக்குக் கொண்டு வரப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இடையே உள்ள '23 கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு தொழில் நுட்ப ரீதியான சாத்திய கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

258—

## சென்னை மாநகராட்சியில் துப்புரவுத் தொழிலாளர் எண்ணிக்கை

வினா எண். 2492—டாக்டர் வி. செல்லக்குமார் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகராட்சியில் துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) பல ஆண்டுகளாக துப்புரவுத் தொழிலாளர்கள் நியமிக்கப்படாதிருப்பின் இன்றைய தேவையை கருத்தில் கொண்டு துப்புரவுத் தொழிலாளர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) தற்பொழுது சென்னை மாநகராட்சி துப்புரவுத் தொழிலில் கீழ்க்கண்ட தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்—

| | | |
|---|---|---|
| துப்புரவுத் தொழிலாளர்கள் | .. .. | 7,531 |
| குப்பை மாட்டு வண்டி ஓட்டுநர் | .. .. | 1,039 |
| மொத்தம் | .. | 8,570 |

நிரந்தர துப்புரவுப் பணியாளர்கள் விடுப்பில் செல்லும்போது அவர்களின் இடங்களில் புதிய துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றார்கள்.

(ஆ) மக்களின் நலத்தைக் கருத்திற் கொண்டு அவ்வப்பொழுது ஏற்படும் தேவைகளுக்கேற்ப துப்புரவுப் பணியாளர்கள் தக்க காலங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். 1,011 நிரந்தரத் துப்புரவுப் பணியாளர்கள் 15—11—1988 மற்றும் 3—4—1990 ஆகிய நாட்களில் நியமிக்கப்பட்டனர். இது தவிர 350 நிரந்தரப் பணியாளர்களின் காலியிடங்களும் கடந்தஇரண்டு ஆண்டுகளில் நிரப்பப்பட்டுள்ளன. அவ்வப்போதுள்ள நிலைமையை கருதி தேவைப்பட்டால் துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



259—

## கப்பிச்சாலையைத் தார்ச்சாலையாக மாற்றுதல்.

வினா எண். 2858—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் முதல்சேரியில் இருந்து ராஜாமடம் வரையில் செல்லும் சி.எம்.பி. ஆற்றுக்கரை கப்பிச் சாலையை தார்ச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்,முதல் சேரியிலிருந்து ராஜாமடம் வரை செல்லும் சி.எம்.பி ஆற்றுக்கரை சாலையில் முதல்சேரி-பள்ளிகொண்டான் 4 கி.மீ. சாலைக்கு தார்ப் போடப்பட்டுள்ளது. பள்ளிகொண்டான் முதல் மகிழங்கோட்டை சாலையில் 5 கி.மீ. நீளத்திற்கு 1990-91 ஆம் ஆண்டு தான் கப்பிப் போடப்பட்டது. இச் சாலைக்கு முழுமையாக தார் போட ரூ. 3.36 இலட்சம் செலவாகும். ஆனால் நிதிநிலை பற்றாக்குறை காரணமாக இச் சாலையை தார்ச் சாலையாக்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

260—

## ஊமத்தநாடு பகுதியில் போர்வெல் போடுதல்.

வினா எண். 2970—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடுபள்ளியருகில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஊமத்த நாட்டில் மக்கள் தொகை 1990-ஆம் ஆண்டு கணக்குப்படி 1,500-ஆகும். இது குடிநீர் பிரச்சினை உள்ள கிராமம். இங்கு 1980-இல் ஒரு கையிறைப்பானும், 1983-இல் ஒரு கையிறைபானும், 1980-இல் ஒரு விசை இறைப்பான் திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கிராமத்தில் 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. ஊமத்தநாடு பள்ளி அருகில் ஒரு கையிறைப்பானும் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, ஊமத்தநாடு பள்ளியருகில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு போட்டுக் கொடுத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

261—

குப்ப தேவன் வலசையில் மேல்நிலை நீர்த்தேக்கந் தொட்டி

வினா எண் 2971—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சிதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி ஆலடிக்காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குப்பதேவன் வரைக்கும் தண்ணீர் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

குப்பதேவன் மற்றும் ஆலக்காடு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குப்பதேவன் வலசையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு இந்த நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து ஆலடிக்காடுக்கு பகிர்மானக் குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்பட உள்ளது. இத்திட்டம் விரைவில் முடிக்கப்பட உள்ளது.



262—

துணைப்பிரதம சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 3142—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவனில் ஒரு துணை பிரதம சுகாதார நிலையம் (Health Sub-Centre) அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

அரசின் கொள்கைப்படி 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் திருவத்தேவனை உள்ளடக்கிய குப்பத்தேவனில் ஒரு துணை சுகாதார நிலையம் உள்ளது. எனவே புதியதாக திருவத்தேவனில் ஒரு துணை சுகாதார நிலையம் அமைப்பது இயலாது.

263—

மந்திரிப்பட்டினத்தில் துணை பிரதம சுகாதார நிலையம்.

வினா எண் 3144—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் மந்திரிப்பட்டினத்தில் ஒரு துணை பிரதம சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு. திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

அரசின் கொள்கைப்படி 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் மந்திரிப்பட்டணத்தை உள்ளடக்கிய குப்பத்தேவன் என்ற கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. எனவே, மந்திரிப்பட்டணத்தில் புதிதாக துணை சுகாதார நிலையம் அமைப்பது இயலாது.

264—

## கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை.

வினா எண் 3449—திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்தியமங்கலம் தொகுதியில் கொத்தமங்கலம், புதுப்பீர்கடவு, ராஜன்நகர், சிக்கரசம்பாளையம், இக்கரை நெகமம் ஆகிய ஊராட்சிகளின் கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) திட்டப்பணிகள் எப்போது தொடங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சத்தியமங்கலம் தொகுதியில் கொத்தமங்கலம் புதுப்பீர்கடவு, ராஜன்நகர், சிக்கரசம்பாளையம், இக்கரை நெகமம் ஆகிய ஊராட்சிகளின் கிராம கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நிதி இப்போது எதுவும் ஒதுக்கப்படவில்லை.

(ஆ) இக்கூட்டு குடிநீர்த் திட்டத்திற்காக ரூ. 253.60 இலட்சத்திற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு ஆய்வில் உள்ளது. இத்திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல்கள் அளிக்கப்பட்டவுடன் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் துவக்கப்படும்.

265—

## மொரப்பூர் ஒன்றியத்தைப் பிரித்தல்.

வினா எண் 3566—திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, கடத்தூரைத் தலைமையகமாகக் கொண்டு ஒரு ஒன்றியமும், பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியத்தைப் பிரித்து மலைவாழ் மக்களுக்காக சித்தேரி மலைப்பகுதியைத் தலைமையகமாகக் கொண்டு ஒரு ஒன்றியமும் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?





விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மொரப்பூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பதற்கும் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பதற்கும் அரசிடம் செயற் குறிப்பு ஏதுமில்லை. அவ்வாறு செயற் குறிப்பு ஏதேனும் வரப்பெற்றால், பல அம்சங்களைக் கருத்தில் கொண்டு பரிசீலனை செய்யப்படும்.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

266—

## உருமங்குளத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண். 3617—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராதாபுரம் தொகுதி பெட்டைகுளம் பஞ்சாயத்தில உருமங்குளத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் சரி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், இராதாபுரம் சட்டமன்ற தொகுதி உருமங்குளம் ஊராட்சி உருமங்குளத்தைச் சார்ந்த பெட்டைகுளம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 20—1—1992 அன்று பழுது நீக்கம் செய்யப்பட்டு தற்போது சீரான குடிநீர் விநியோகம் உள்ளது. மேலும், உருமங்குளத்தில் உள்ள மேல்நிலைத் தொட்டியும் ஒரு வருட காலமாக பழுது இல்லாமல் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. எனவே, அரசிடம் இது குறித்து செயற்குறிப்ப ஏதும் இல்லை.

267—

## சமூக ரெங்கப்புரத்தில் ஆழ்குழாய்க் கிணறு.

வினா எண். 3863—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

[1992 செப்டம்பர் 25.

இராதாபுரம் தொகுதி சமூக ரெங்கபுரம் பஞ்சாயத்தில் ஆதி திராவிடர் காலனியில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சமூக ரெங்கபுரம் கிராமத்தில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தொட்டியுடன் கூடிய மின விசைப்பான் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தற்போது ஊராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் பகுதிக்கு இத்திட்டத்திலிருந்து 4 பொது நல்லிகள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் பகிர்மானம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதியில் ஒரு கையிறைப்பான்கள் உள்ளன. எனவே, இப் பகுதியில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

268—

ஊராட்சிகளை பேரூராட்சிகளாக மாற்ற அடிப்படை வழிமுறைகள்.

வினா எண் 4030—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாக மாற்ற அரசு கையாளும் வழி முறைகள் என்ன?

(ஆ) திருச்சி மாவட்டம், புஞ்சைத் தோட்டக் குறிச்சி, புலியூர் போன்ற நிதி நெருக்கடியுள்ள பேரூராட்சிகள் மீண்டும் ஊராட்சிகளாக நிலை இறக்கம் செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஒரு ஊராட்சியின் ஆண்டு சராசரி வருமானம் ரூ. 10,000க்கு மேலும், மக்கள் தொகை எண்ணிக்கை 5,000-மும் அதற்கு மேலும் இருப்பின் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய ஒப்புதலுடன் கூடிய தீர்மானத்தின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் வரப்பெறும் கருத்துரு ஊரக வளர்ச்சி ஆணையரின் குறிப்புரையுடன் அரசுக்கு அனுப்



1992 செப்டம்பர் 25]

பப்படுகிறது; ஆயினும், 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 3(1)—ன்படி அரசு ஆணை பல்வகை எண். 2115, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 22—12—1991 இல் அளித்துள்ள அதிகார ஒப்பளிப்பிற்கேற்ப ஊராட்சிகளை பேரூராட்சிகளாக பேரூராட்சிகள் இயக்குநர் தரம் உயர்த்தலாம்.

(ஆ) திருச்சி மாவட்டத்திலுள்ள புஞ்சை தோட்டக்குறிச்சி ஒரு முதல் நிலை பேரூராட்சியாகும். அதே போல் புலியூர் ஒரு தேர்வுநிலை பேரூராட்சியாகும். மேற்காணும் பேரூராட்சிகளை நிலை இறக்கம் செய்யக் கேட்டு மாவட்ட ஆட்சியரிடமிருந்து கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. பேரூராட்சி மன்றமும் தீர்மானம் இயற்றவில்லை. எனவே, இப்பேரூராட்சிகளை நிலை இறக்கம் செய்ய அரசிடம் கருத்துரு ஏதும் இல்லை.

269—

பொள்ளாச்சி அண்ணா பேருந்து நிலையம் விஸ்தரிப்பு.

வினா எண். 3902—திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொள்ளாச்சி நகரில் அமைந்துள்ள அண்ணா பேருந்து நிலையத்தை பழைய காவல்துறை குடியமைப்பு இருந்த இடத்தில் விஸ்தரிப்பு செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பொள்ளாச்சி நகரில் அமைந்துள்ள அண்ணா பேருந்து நிலையத்தை அதன் முன்புறம் உள்ள காவல் துறையினர் இடத்தில் விஸ்தரிப்பு செய்வது குறித்து ஆய்வில் உள்ளது.

270—

தார்ச் சாலை அமைத்தல்.

வினா எண் 4127—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் இராதாவிளாகம் கிராமத்திற்கு கீழச்சாவடி-இராதாவிளாகம் சாலையை தார்ச் சாலையாக செய்து தரப்படுமா

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீழச்சாவடி இராதாவிளாகம் சாலையை தார்ச் சாலையாக மாற்ற தற்போது செயற் குறிப்பு ஏதும் இல்லை. எனினும், 1992-93 ஆம் ஆண்டில் நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு இச்சாலைப் பணி எடுத்துச் செய்யும் வாய்ப்புகள் ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

271—

## அவிநாசி இரண்டாவது குடிநீர்த் திட்டம்.

வினா எண் 4380—டாக்டர் மு. சின்னியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அவிநாசி தொகுதி ஏற்படுத்தப்பட்ட இரண்டாவது குடிநீர்த் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைசசர் :

அவிநாசி தொகுதியில் ஏற்படுத்தப்பட்ட திருப்பூர் இரண்டாவது குடிநீர்த் திட்டத்தில் தலைமைப் பணியிடத்தில் நீர் சேகரிக்கும் கிணறு அமைப்பதற்கும், பிரதான குழாய் அமைக்கும் பணி, சுத்திகரிப்புப் பணி நிலையம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணிகள் யாவும் செயல்பட்டு வருகின்றன. இப்பணிகள் யாவும் இந்த நிதி ஆண்டின் (1992-93) இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

272—

## புதுக்கோட்டை புதுக்குளம் பராமரிப்பு.

வினா எண். 4622—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டையில் நகராட்சிக்குட்பட்ட ''புதுக்குளம்'' என்ற குளம் தான் புதுகை நகர் முழுவதும் குடிதண்ணீர் விநியோகம் செய்து கொண்டு இருப்பதால் அக்குளத்துக்குத் தண்ணீர்



வருகின்ற கால்வாய் ஒழுங்காக பராமரிக்கப்படாமலும் அக்குளத்தைச் சுற்றி அசுத்தங்கள் நிறைந்து இருப்பதையும் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள புதுக்குளத்தினை மேம்படுத்தவும் குளத்திற்கு தண்ணீர் வரும் வாய்க்காலில் 350 மீட்டர் நீளம் சுவர் கட்டி சீரமைக்கவும், கரையில் வெளிப்புறங்களில் புல்தரை வளர்க்கவும், தேவையான விளக்குகள் பொருத்தவும், உட்புறங்களில் கருங்கற்கள் பதித்து வேலை செய்வதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது தேவையான காவலர்களை வைத்து குளம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

273—

## நவநீதகிருஷ்ணாபுரத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு.

வினா எண் 4650—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள ஆர். நவநீதகிருஷ்ணாபுரம் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): ஆம். நவநீதகிருஷ்ணாபுரத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய ஒரு விசைப் பம்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. தற்போது மேற்படி திட்டத்திற்கு நீராதாரமான ஆழ்குழாய் கிணறு அக்டோபர் 1991-ல் மண் சரிந்து விட்டதால் செயல்படவில்லை. இங்கு 1989 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கையிறைப்பான் செயல்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் (1992-ல்) வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் புதிதாக ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்கப்படும்.

274—

செய்யாறு ஒன்றிய அலுவலர்களுக்கு வீட்டுவசதி.

வினா எண். 4691— திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யாறு ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரிபவர்களுக்கு அலுவலகத்திற்குப் பின்புறம் 30 இல்லங்களுக்கு மேல் கட்டிடங்கள் கட்ட இடம் உள்ளதால் வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைசசர் :

செய்யாறு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் பின்புறம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான புறம்போக்கு 1.00.0 ஹெக்டேர் பரப்பில் காலியாக உள்ளது. ஆனால் அங்கு பணியாற்றும் ஆணையர் உட்பட 15 அலுவலர்களுக்குக் குடியிருப்புக் கட்ட ஒன்றியப் பொதுநிதியில் நிதி ஆதாரம் இல்லாததால் தற்சமயம் குடியிருப்புக் கட்ட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

275—

மாறாந்தை ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு வசதி.

வினா எண். 4893— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத்தில் ஆலங்குளம் ஒன்றியம், மாறாந்தை ஆதி திராவிட மக்கள் வீட்டு வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மாறாந்தை கிராம ஆதி திராவிடர்களுக்கு 1987-88 ஆம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் 20 தொகுப்பு வீடுகளும்



1990-91 ஆம் வருடம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 20 வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டன. அரசு இலவச பட்டா 25 நபர்களுக்கு உள்ளது. 1992-93 ஆம் வருடத்தில் இதுவரை தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படாத கிராமத்திற்கு முன்னுரிமை கொடுத்துவிட்டு இக் கிராமத்தில் தகுதியுள்ள நபர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

276—

அத்தாணி மக்களுக்குக் குடிநீர் வசதி.

வினா எண். 4950— திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதி, அத்தாணி காலனியில் வசிக்கும் மக்களுக்கு குடி தண்ணீர் வசதி இல்லாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அத்தாணி— சுகலூர் கூட்டுக்குடிநீர்த் திட்டத்ினை விரைவுபடுத்தி குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சுகலூர்—அத்தாணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிவு பெறும் நிலையில் உள்ளன. எனவே அத்தாணி காலனிக்கு விரைவில் முன்னோடி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். மேலும் இத்திட்டத்தின் அனைத்து பணிகளும் விரைவில் முடிக்கப் பெற்று முழுமையாக குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

277—

கடலங்குடி கிராம பள்ளி மேல்கூரை சீர் செய்தல்.

வினா எண். 5521— திரு. எம். எம். எஸ். அபுல் ஹசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம், கடலங்குடி கிராம பள்ளிக்கு மேற்கூரை, கீற்று வேய்வதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கீற்று வேயப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியம், கடலங்குடி கிராமத்தில் உள்ள ஒன்றியப் பள்ளிக் கட்டிடத்தின் இரு பகுதிகளின் மேற்கூரைகளும், ரூ. 13,034 (ரூபாய் பதிமூன்றாயிரத்து முப்பத்து நான்கு மட்டும்) செலவில், 1992 ஜனவரியில் பழுது நீக்கம் செய்து புதிய கீற்று வேயப்பட்டு தற்போது நன்முறையில் இயங்கி வருகின்றது.

278—

கிராமக் குடிநீர் விசைப் பம்பு பராமரிப்பாளர் ஊதியம்.

வினா எண். 5700— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமக் குடிநீர் விசைப்பம்பு பராமரிப்பாளர்களின் ஊதியம் மற்றும் பணிமுறைகள் பற்றி அரசுக்கு ஏதேனும் முறையீடுகள் வந்தனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஒரு சில குடிநீர் விசைப்பம்பு பராமரிப்பாளர்களிடமிருந்து, ஊதியம் உயர்த்தக் கோரி விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன.

(ஆ) ஊராட்சிகளில் பணிபுரியும் விசைப்பம்பு பராமரிப்பாளர்கள், அரசுப் பணியாளர்களோ, ஊராட்சி ஒன்றிய பணியாளர்களோ அல்லது ஊராட்சிகளின் முழு நேரப் பணியாளர்களோ அல்ல. ஊராட்சிகளின் பணிக்கூலி (Service at fixed rate) பெறுபவர்களாக ஊராட்சி தலைவர்களால் நியமிக்கப்பட்டு ஊராட்சி நிதியிலிருந்து ஊதியம் பெறும் பகுதி நேர பணியாளர்கள், இவர்களுடைய ஊதியம் மாவட்டத்திற்கு மாவட்டம், ஒன்றியத்திற்கு ஒன்றியம் வெவ்வேறு ஊதியங்கள் வழங்கப்படுவதால், ஒருமித்த ஊதியம் அவர்களது பணிக்கேற்பவும், தற்போதுள்ள கால சூழ்நிலைக் கேற்பவும் நிர்ணயம் செய்ய உத்தேசித்து, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து விபரங்கள் கேட்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.



279—

நத்தம் தொகுதி பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர் கிணறுகள் வெட்டுதல்.

வினா எண். 5705—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடந்த 3 நிதியாண்டுகளில் நத்தம் தொகுதி, சாணார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியங்களில் எந்தெந்த பேரூராட்சிப் பகுதிகளில் எங்கெங்கு குடிநீர் கிணறுகள் வெட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பேரூராட்சிகளால் பரிந்துரை செய்யப்பட்டது ?

(ஆ) அவற்றிற்கான உத்தேச மதிப்பீடு செலவு எவ்வளவு?

(இ) அவற்றில் எவ்வெவற்றிற்கு அரசு அனுமதி கோரி மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிந்துரை செய்யப்பட்டது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு,: உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல்-அண்ணா, மாவட்டம் நத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கும் நத்தம் பேரூராட்சி பகுதியில் குடிநீர் கேணிகள் வெட்ட நத்தம் பேரூராட்சியிலிருந்து பரிந்துரைகள் ஏதும் பெறப்படவில்லை. சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பேரூராட்சிகள் ஏதுமில்லை.

(ஆ) மற்றும் (இ) : இக்கேள்விகளுக்கு இடமில்லை.

280—

தெருவிளக்குகள் கூட்டுறவு சிறப்பங்காடிகளில் வாங்குதல்.

வினா எண். 5882—திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தெரு விளக்குகளை கூட்டுறவு சிறப்பங்காடிகளிலேயே வாங்க வேண்டுமென நிபந்தனை உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஊராட்சிகளுக்கான தெரு விளக்குகளை கூட்டுறவு சிறப்பங்காடிகளிலேயே வாங்க வேண்டுமெனும் நிபந்தனை ஏதும் இல்லை. ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் பராமரிக்கும் தெரு விளக்குகளுக்கு தேவையான குழல் விளக்குகள், சோக்குகள், ஸ்டார்ட்டர்கள் ஆகியவற்றை எச்.எம்.டி. (H. M. T.) மற்றும் மைசூர் லாம்ப்ஸ் நிறுவனங்களிலிருந்து வாங்க வேண்டும் என உத்திரவிடப்பட்டு, அதன்படி அந்த நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

281—

## கந்தர்வக் கோட்டை ஒன்றியப் பகுதிகளில் குடிநீர் விநியோகம்.

வினா எண். 6319—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை தொகுதியில் மட்டங்கால் புதுநகர், அருசுபட்டி, முதுகுளம், குறும்பூண்டி, அண்டனூர், கோமாபுரம் போன்ற இடங்களில் வறட்சியின் காரணமாக நீரின் மட்டம் குறைந்த நிலையில் இருப்பதால் தற்போது இயங்கும் ஜெட் பம்பு, மோட்டாரால் குடிநீர் விநியோகம் செய்வதில் தடங்கல் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த ஜெட் மோட்டாரை மாற்றி குடிநீர் ஒழுங்காக கிடைப்பதற்கு நீர்மூழ்கி மோட்டார் வழங்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக் கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மட்டங்கால், புதுநகர், அருசுபட்டி, முதுகுளம், குறும்பூண்டி, அண்டனூர் மற்றும் கோமாபுரம் ஆகிய கிராமங்களில் 1991ஆம் வருடம் பருவமழை நல்ல முறையில் பெய்துள்ளதால் நீர்மட்டம் உயர்ந்த நிலையில்



உள்ளது. இதனால் இந்த கிராமங்களில் உள்ள ஜெட் பம்பு மோட்டாரால் குடிநீர் விநியோகம் செய்வதில் எந்தவித தடங்கலும் இல்லாமல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

282—

## செந்தலைவயலில் துணைப் பிரதம சுகாதார நிலையம்.

வினா எண் 6589—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், செந்தலைவயலில் துணைப் பிரதம சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு , உள்ளாட்சித் துறை அமைச்சர் :

அரசின் கொள்கைப்படி 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் செந்தலை வயல் உள்ளடக்கிய விளாங்குளம் என்ற கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. எனவே செந்தலை வயலில் ஒரு துணை சுகாதார நிலையம் புதிதாக அமைப்பது இயலாது.

283—

## தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்.

வினா எண் 6724—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மேல மணக்காட்டிற்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும், வானொலிப் பெட்டியும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1991-92-ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் ஆண்டு வருவாய்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து

[1992 செப்டம்பர் 25

பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள்.

1991-92-ஆம் ஆண்டில் இக்குடியிருப்பிற்குத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சிகளின் நிதிகளிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

284—

வினா எண் 6725—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நெல்லியடிக்காட்டிற்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும், வானொலிப் பெட்டியும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1991-92-ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருவாய்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சர அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு 1991-92-ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டிகளை தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

285—

புதுச்சத்திரத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 6843—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1992 செப்டம்பர் 25]

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள புதுச்சத்திரத்திற்குத் தொகுப்பு வீடு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்போது ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 8 கிராமங்களில் 106 வீடுகள் கட்டும் பணி 1991-92ஆம் ஆண்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | | வீடுகள். |
|---|---|---|
| 1. | சின்னூர் புதுப்பேட்டை | 20 |
| 2. | பணிக்கொல்லை | 12 |
| 3. | சிலம்பிமங்கலம் | 12 |
| 4. | பூவாலை | 12 |
| 5. | அம்பிகாபுரம் | 13 |
| 6. | சேத்துக்கொல்லை | 12 |
| 7. | வடக்குச்சாவடி | 13 |
| 8. | சூரியாமங்கலம் | 12 |
| | மொத்தம் | 106 |

1992-93 ஆம் நிதியாண்டில் புதுச்சத்திரம் கிராமத்திற்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

286—

சாலை உருளை பழுது பார்த்தல்.

வினா எண் 6859—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 செப்டம்பர் 25

(அ) போளூர் ஒன்றியத்தில் உள்ள சாலை உருளையின் (Road Roller) சக்கரங்கள் பழுதடைந்துள்ளதை மாற்றித்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாலை உருளை 30-9-1981-ல் வாங்கப்பட்டது. அச்சாலை உருளையின் சக்கரங்கள் ரூ. 47,772 செலவில் கடந்த ஆண்டு பழுது பார்க்கப்பட்டது. தற்போது இந்த சாலை உருளையின் பின் சக்கரங்கள் மிக மோசமான நிலையில் பழுதடைந்துள்ளன. இதனை பழுது பார்க்கும் பணிக்கான நடவடிக்கை தற்சமயம் மேற்கொள்ளப்பட்டது.

287—

தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்.

வினா எண் 7127—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, சிறிய தெற்கு காட்டிற்கு வானொலிப் பெட்டியும், தொலைக்காட்சிப் பெட்டியும் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வானொலிப் பெட்டியைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

நிதி நிலைக்கேற்ப, ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை அளிக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக உள்ளது. ரூ. 9,000க்குக் குறைவான ஆண்டு வருவாயுள்ள ஊராட்சிகளுக்கு மட்டுமே முதலிடம் அளிக்கப்பட்டு நிதிநிலை



1992 செப்டம்பர் 25]

யைக் கருத்தில் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அவ்வடிப்படையில், இக்குடியிருப்பிற்கு 1992-93 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

நிதி வசதியுள்ள ஊராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப் பெற்றபின் வாங்கிக் கொள்ளலாம்.

288—

வினா எண் 7128—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சி தெற்கு பகுதி ஆதி திராவிடர்களுக்கு வானொலிப் பெட்டியும், தொலைக்காட்சிப் பெட்டியும் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வானொலிப் பெட்டியைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

நிதிநிலைக்கேற்ப, ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை அமைக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக உள்ளது. ரூ. 9,000-க்குக் குறைவான ஆண்டு வருவாயுள்ள ஊராட்சிகளுக்கு மட்டுமே முதலிடம் அளிக்கப்பட்டு நிதி நிலையைக் கருத்தில் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அவ்வடிப்படையில், இக்குடியிருப்பிற்கு 1992-93 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

நிதி வசதியுள்ள ஊராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப்பெற்ற பின் வாங்கிக் கொள்ளலாம்.

289—

வினா எண் 7239—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

[1992 செப்டம்பர் 25

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் கிழக்கில் ஆதி திராவிடர் தெருவிற்கு தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நிதி நிலைக்கேற்ப, ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை அளிக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக உள்ளது. ரூ. 9,000-க்குக் குறைவான ஆண்டு வருவாயுள்ள ஊராட்சிகளுக்கு மட்டுமே முதலிடம் அளிக்கப்பட்டு நிதி நிலையைக் கருத்தில் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இவ்வடிப்படையில், இக்குடியிருப்பிற்கு 1992-93 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

நிதி வசதியுள்ள ஊராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப் பெற்றபின் வாங்கிக் கொள்ளலாம்.

290—

## நியாய விலைக்கடை நிறுவுதல்.

வினா எண் 8475—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒரு கடைக்கு 1,200 குடும்ப அட்டைகள்; மூன்று கிலோ மீட்டர் தூரம் என தற்போதுள்ள முறையால் கிராமப்புற மக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) கிராமப்புற மக்களுக்கு மட்டும் 400 குடும்ப அட்டைகள்; ஒரு கிலோ மீட்டர் தூரம் என நிர்ணயித்து பகுதி நேர கடைகளை நிறுவ அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஒரு நியாய விலைக் கடைக்கு 1,200 குடும்ப அட்டைகள் என்னும் முறை நடைமுறையில் இருந்த போதிலும் பொதுமக்கள் தேவைக்கேற்ப அரசின் விதிமுறைகள்



1992 செப்டம்பர் 25]

(1,200 குடும்ப அட்டைகள் மற்றும் மூன்று கிலோ மீட்டர் தூரம் எனும் விதிகள்) தளர்த்தப்பட்டு தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் நியாயவிலைக் கடைகளை அரசு திறந்துள்ளது. தமிழகத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளில் 9,886 நியாய விலைக் கடைகளில் 500 குடும்ப அட்டைகளுக்கும் குறைவாகவே இணைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் பகுதி நேரக் கடைகளை திறப்பதற்கு தூரம் 1 கி.மீ. என நிர்ணயிப்பது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து சில விசேஷ இனங்களுக்கு அவ்வப்போது விதிகளை தளர்த்திட பரிந்துரை செய்யப்பட்டால் கவனித்து பரிசீலனை செய்யப்படும்.

291—

## திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு நீதிமன்றம்.

வினா எண் 8738—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் - அண்ணா மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு நீதிமன்றம் (Consumer Grievances Disputes Redressal Forum) எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது ?

(ஆ) 31—12—1991 முடிய அதில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல் - அண்ணா மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்பு (Dindigul-Anna District Consumer Disputes Redressal Forum) கடந்த 25—1—1991 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) 31—12—1991 முடிய அதில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 133.

292—

## தொழிலாளர் நல மையங்கள் எண்ணிக்கை.

வினா எண் 8287—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 செப்டம்பர் 2

(அ) தமிழ்நாட்டில் 1987-88 வரை எங்கெங்கு தொழிலாளர் நல மையங்கள் (மாவட்ட வாரியாக) செயல்பட்டு வந்தன?

(ஆ) 1990-91 வரை மேலும் எங்கெங்கு தொழிலாளர் நல மையங்கள் செயல்பட துவங்கியுள்ளன ?

(இ) இவற்றின் செயல்பாடுகள் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் 1987-88 வரை செயல்பட்டு வந்த தொழிலாளர் நல மையங்களின் விவரங்கள் இணைப்பு—1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) வ. உ. சி. மாவட்டத்தில் நாசரேத், தூத்துக்குடி தெர்மல் நகர், தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதகுடி ஆகிய இடங்களில் 1990-91 வரை மேலும் புதிய தொழிலாளர் நல மையங்கள் துவங்கப்பட்டன.

(இ) தொழிலாளர் நல மையங்களின் செயல்பாட்டு விவரங்கள் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டன

## இணைப்பு—1.

### தமிழ்நாட்டில் 1987-88 வரை செயல்பட்டு வந்த தொழிலாளர் நல மையங்களின் விவரம்.

| | | |
|---|---|---|
| 1. | செம்பியம் | செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம். |
| 2. | அம்பத்தூர் | ஷை |
| 3. | கிண்டி | ஷை |
| 4. | தாம்பரம் | ஷை |
| 5. | மாதவரம் | ஷை |
| 6. | எண்ணூர் * | ஷை |
| 7. | காஞ்சிபுரம் | ஷை |



1992 செப்டம்பர் 25]

இணைப்பு-1—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 8. | திருவொற்றியூர் | செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம். |
| 9. | வேலூர் | வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம். |
| 10. | வாணியம்பாடி | ஷை |
| 11. | குடியாத்தம் | ஷை |
| 12. | இராணிப்பேட்டை | ஷை |
| 13. | விழுப்புரம் | தென்னாற்காடு மாவட்டம். |
| 14. | கள்ளக்குறிச்சி | ஷை |
| 15. | ஈரோடு | பெரியார் மாவட்டம். |
| 16. | குமாரபாளையம் | ஷை |
| 17. | தாராபுரம் | ஷை |
| 18. | ஓசூர் | தருமபுரி மாவட்டம். |
| 19. | மேட்டூர் அணை | சேலம் மாவட்டம். |
| 20. | சேலம் | ஷை |
| 21. | இராஜபாளையம் | காமராஜர் மாவட்டம். |
| 22. | அருப்புக்கோட்டை | ஷை |
| 23. | சிவகாசி | ஷை |
| 24. | ஆலங்குளம் | ஷை |
| 25. | சாத்தூர் | ஷை |
| 26. | விருதுநகர் | ஷை |
| 27. | திருச்சி-10 | திருச்சி மாவட்டம். |
| 28. | திருச்சி-20 | ஷை |
| 29. | கரூர் | ஷை |

டி2 53-287—25

[1992 செப்டம்பர் 25

இணைப்பு—1— தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 30. | டால்மியா புரம் | திருச்சி மாவட்டம் |
| 31. | மணப்பாறை | ஷ்டி |
| 32. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் மாவட்டம். |
| 33. | கும்பகோணம் | ஷ்டி |
| 34. | காரைக்குடி | பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம். |
| 35. | கூடலூர்* | நீலகிரி மாவட்டம். |
| 36. | தேவர் சோலை* | ஷ்டி |
| 37. | பந்தலூர்* | ஷ்டி |
| 38. | மணலார்* | மதுரை மாவட்டம். |
| 39. | மதுரை | ஷ்டி |
| 40. | பசுமலை | ஷ்டி |
| 41. | வால்பாறை* | கோவை மாவட்டம். |
| 42. | முடீஸ்* | ஷ்டி |
| 43. | சோலையார் நகர்* | ஷ்டி |
| 44. | பீளமேடு | ஷை. |
| 45. | பெரிய நாயக்கன் பாளையம் | ஷ்டி |
| 46. | உப்பிலிபாளையம் | ஷ்டி |
| 47. | ஒண்டிப்புதூர் | ஷ்டி |
| 48. | இராமநாதபுரம் | ஷ்டி |
| 49. | உடுமலைப்பேட்டை | ஷ்டி |
| 50. | செல்வராஜபுரம் | ஷ்டி |
| 51 | திருநெல்வேலி | கட்டபொம்மன் மாவட்டம். |



1992 செப்டம்பர் 25]

இணைப்பு—1— தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 52. | தச்சநல்லூர் .. | கட்டபொம்மன் மாவட்டம் |
| 53. | தூத்துக்குடி .. | சிதம்பரனார் மாவட்டம். |
| 54. | ஆறுமுகநேரி .. | ஷ்டி |
| 55. | விக்கிரமசிங்கபுரம் .. | ஷ்டி |
| 56. | கோவில்பட்டி .. | ஷ்டி |
| 57. | நாகர்கோவில்* .. | கன்னியாகுமரி மாவட்டம். |
| 58. | குழித்துறை* .. | ஷ்டி |
| 59. | குலசேகரம்* — | ஷ்டி |
| 60. | திண்டுக்கல் .. | காயிதே மில்லத் மாவட்டம். |
| 61. | பழனி .. | ஷ்டி |
| 62. | சோலூர் மட்டம் * .. | நீலகிரி மாவட்டம். |

*தையற்பயிற்சி பிரிவு மட்டும் செயல்படும் மையங்கள் (இதர மையங்கள் அனைத்தும் தையற்பயிற்சி பிரிவுடன் குழந்தைகள் பிரிவும் செயல்படுவது).

## இணைப்பு-2.

## தொழிலாளர் நல மையங்களின் செயல்பாட்டு விவரம்.

தொழிலாளா நல மையங்கள் ஒவ்வொன்றிலும் குழந்தைகள் பிரிவு மற்றும் தையற்பயிற்சி பிரிவு என இரு பிரிவுகள் செயல் பிரிவு மற்றும் தையற்பயிற்சி பிரிவு என இரு பிரிவுகள் செயல் பட்டு வருகின்றன. குழந்தைகள் பிரிவில் வாரியத்திற்கு நல நிதி செலுத்தும் தொழிலாளர்களின் குழந்தைகள் (இரண்டு வயது முதல் ஐந்து வயதுக்குட்பட்ட) அதிகபட்சமாக 50 வீதம் சேர்க்கப்பட்டு பாடம் பயிற்றுவிக்கப்படுகின்றது. குழந்தை களுக்கு இலவச மதிய உணவு, பால் மற்றும் வாரம் இருமுறை பழம், முட்டை ஆகியவை இலவசமாக வழங்கப்படுகிறது.

மேலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆண்டுதோறும் இலவசமாக ஒரு ஜதை டெரிக்காட்டன சீருடையும் வழங்கப் பட்டு வருகிறது

தையற்பயிற்சி பிரிவில் தொழிலாளர்களின் மனைவிகள், மகள்கள் மற்றும் திருமணமாகாத சகோதரிகள் (15 வயதிற்கு மேற்பட்டவர்கள்) அதிகபட்சமாக 50 மாணவிகள் வீதம் ஒவ்வொரு மையத்திலும் சேர்க்கப்பட்டு மைய அமைப்பாளர்களால் கீழ்நிலை மற்றும் மேல் நிலையில் ஊசிவேலை மற்றும் உடை தயாரித்தல், பூவேலை ஆகிய பாடங்களில் அரசுத் தேர்வில் தேர்ச்சி பெறும் பொருட்டு தையற்பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி ஜனவரி முதல் டிசம்பர் வரை ஒவ்வொரு மாணவிக்கும் மாதம் ரூ. 80 வீதம் உதவித் தொகையுடன் அளிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு மையத்திலும் கீழ்நிலை மற்றும் மேல்நிலையில் (தனித்தனியாக) அரசுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் மாணவிகளுக்கு தலா ஒரு தையல் இயந்திரம் வீதம் பரிசு அளிக்கப்பட்டு வருகிறது.

293—

## வெள்ளாள விடுதி விவசாய பண்ணை.

வினா எண் 6390—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை தொகுதி வெள்ளாளவிடுதி (எண்ணெய் வித்துக்கள்) விவசாய பண்ணையில் அலுவலகத்துக்கு போதிய கட்டிடங்கள் இருந்தும் அதன் தலைமை அலுவலகம் ஆலங்குடி தொகுதி கறம்பக்குடியில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த அலுவலகத்தை வெள்ளாள விடுதி விவசாய பண்ணையிலேயே அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) வெள்ளாள விடுதி மாநில எண்ணெய் வித்துப் பண்ணையில் உள்ள கட்டிடங்கள் களப் பணியாளர்களுக்கான வீடுகள் மற்றும் கட்டிடங்களே ஆகும். அவை அலுவலக கட்டிடங்கள் அல்ல. எனவே, பணியாளர்களுக்கு அடிப்படைவசதிகள் இல்லாமையால், நிர்வாக அலுவலகம் கறம்பக்குடியில் இயங்கி வருகிறது. பண்ணையில் இருக்கும் கட்டிடங்கள் பண்ணை இயக்குவதற்காக மட்டுமே போதுமானதாக உள்ளன.





(ஆ) உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தி திட்டப்படி (TNADP) வெள்ளாளவிடுதி பண்ணையில் ஒரு அலுவலகக் கட்டிடம், 6 பணியாளர்கள் குடியிருப்புகளும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்காக ரூபாய் 11 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டவுடன் இவ்வலுவலகம் கறம்பக்குடியிலிருந்து வெள்ளாள விடுதிக்கு மாற்றம் செய்ய ஆவன செய்யப்படும்.

294—

## வீடு கட்ட கடனுதவி பெறும் பயனீட்டாளர் தகுதி.

வினா எண் 6266—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

கிராமப்புற வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கங்களில் வீடுகட்ட கடனுதவி பெறும் பயனீட்டாளர்களின் தகுதி எந்த அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது.

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

கிராமப்புற வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கங்களில் வீடுகட்ட கடனுதவி பெறும் பயனீட்டாளர்கள் கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:—

(1) மாத வருமானம் ரூ. 1,050-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(2) சொந்தமாக $1\frac{1}{2}$ சென்ட் வீட்டுமனை இருக்க வேண்டும். வருவாய்த்துறை அல்லது சமூக நலத் துறையினரால் வழங்கப்பட்ட வீட்டுமனையாக இருந்தால் 1 சென்ட் அளவே போதுமானது.

(3) கடன் பெறுவோரது வயது 55-க்கு குறைவாக இருக்க வேண்டும்.

(4) கடனுதவி பெற தகுதி பெற்றிருப்பவர்கள் அருகிலுள்ள வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தை அணுகி உறுப்பினராகச் சேர்ந்து கடன் மனு செய்துக் கொள்ளவேண்டும்.

[1992 செப்டம்பர் 25

சொந்தமாக 201 சதுர அடி காலி மனையில் ஓட்டு வீட்டினை கட்டிக் கொள்வதற்கு கீழ்க்கண்ட விவரப்படி கடன் வழங்கப் படுகிறது :—

| (1) | | சமவெளி. (2) | மலைப் பகுதி. (3) |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1. ஹட்கோ கடன் தொகை | .. | 7,000 | 9,000 |
| 2. மாநில அரசு மான்யம் | .. | 1,500 | 1,500 |
| 3. கடன் பெறுவோரது மூலதனம் | .. | 1,500 | 1,500 |
| | | 10,000 | 12,000 |

மாத வருமானம் ரூபாய் 1,051 முதல் ரூபாய் 2,200 வரை உள்ள குறைந்த வருவாய்ப் பிரிவினர்களுக்கு (Low income group) வீடுகட்ட வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் ஹட்கோவிட மிருந்து நிதி பெற்று ரூ. 22,000 வரை கடன் வழங்குகின்றன.

மாத வருமானம் ரூ. 2,200 முதல் ரூ. 3,700 வரை உள்ள நடுத்தர வகுப்பினர்களுக்கு வீடுகட்ட இச்சங்கங்கள் ஹட்கோவிட மிருந்து ரூ. 60,000 வரை கடன் வழங்குகின்றன.

295—

எம்.ஜி.ஆர். பிறந்த நாளை சத்துணவு நாளாக அறிவித்தல்.

வினா எண் 4974—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளை சத்துணவு நாளாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திராகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் குழந்தைகளுக்கு, முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளில் இனிப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



1992 செப்டம்பர் 25]

296—

ஆதி திராவிடர் சமுதாயத்திற்கு மின்வசதி.

வினா எண் 2665—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை - உள்ளூர் ஆதி திராவிடர்களின் சமுதாயக் கூடத்திற்கு மின் இணைப்புத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் புதுக்கோட்டை-உள்ளூர் ஆதி திராவிடர்களின் சமுதாயக் கூடம், தாட்கோவினால் கட்டப்படவில்லை.

இந்தச் சமுதாயக் கூடம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி-அளிப்புத் திட்டத்தின் கீழ் (RLEP) 1987-88 ஆம் நிதியாண்டில், தொகுப்பு வீடுகளுக்கான கூடுதல் வசதிகளில் ஒன்றாக, பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்டதாகும்.

இந்தச் சமுதாயக் கூடத்திற்கு மின் இணைப்பு வேலைக்கான மதிப்பீடு தயார் செய்து அரசு ஒப்பளிப்பு பெற அனுப்பி வைக்கும்படி தஞ்சாவூர் தாட்கோ செயற் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மதிப்பீடு கிடைக்கப் பெற்றதும் பரிசீலிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்படும்.

297—

சிறப்பு கால்நடை அபிவிருத்தித் திட்டம்.

வினா எண் 9013—திரு. க. வெ. வி. இராஜமாணிக்கம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் சிறப்பு கால்நடை அபிவிருத்தித் திட்டம் (ஆடு வளர்ப்பு மற்றும் பன்றி வளர்ப்புத் திட்டம்) மூலம் 1991-92 ஆம் ஆண்டில் பயன் பெற்ற குடும்பங்கள் எத்தனை ?

[1992 செப்டம்பர் 25

(ஆ) இறந்த கால்நடைகளுக்கு ஆயுள் காப்பீட்டு தொகை பெற ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு கால்நடை உதவி மருத்துவர்களை கூடுதலாக நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ)

| திட்டம். | பயன்பெற்ற குடும்பங்கள். | வழங்கப் பட்ட மொத்த மான்ய தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆடு உற்பத்தித் திட்டம் .. | 500 | 25.020 |
| பன்றி உற்பத்தித் திட்டம் .. | 51 | 0.600 |
| கன்று வளர்ப்புத் திட்டம் | 3,500 | 127.977 |

(ஆ) செயற்குறிப்பு இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

298—

## இறால் வளர்ப்பு தொழிற்பேட்டை.

Question No. 8279—Thirumathi V. G. MANIMEGALAI: Will the Hon. the Minister for Backward Classes are fisheries be pleased to state:

(a) Whether any agriculture estate is being setup at Tuticorin ?

(b) The details thereof ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) வ.உ. சிதம்பரனார் மாவட்டத்தில் தருவைக் குளத்தில் சுமார் 100 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்து 7.2 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்யப்பட்டு, இறால் வளர்ப்பு தொழிற்பேட்டையினை அமைத்திட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டப்பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

299—

## வாக்குப் பெட்டி தயாரிப்பு

வினா எண் 1091—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தின் சார்பில் வாக்குப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த மாநிலங்களுக்குத் தயாரித்து அனுப்பப்பட்டன ?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ)—

1. தமிழ்நாடு
2. பாண்டிச்சேரி
3. ஆந்திரம்
4. கர்நாடகம்
5. மத்தியப் பிரதேசம்

6. ஒரிசா
7. மேற்கு வங்காளம்
8. உத்திரப் பிரதேசம்
9. ஹரியானா
10. பஞ்சாப்
11. குஜராத்
12. சண்டிகார்
13. தாத்தர மற்றும் நகர் ஹாவேலி
14. லட்சத்தீவு.

(இ)

| வரிசை எண். | மாநிலம். | | வாக்குப்பெட்டிகளின் எண்ணிக்கை. | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) |
| 1. | தமிழ்நாடு | | 57,280 | 199.53 |
| 2. | பாண்டிச்சேரி | .. | 1,530 | 7.04 |
| 3. | ஆந்திரம் | .. | 3,000 | 6.70 |
| 4. | கர்நாடகம் | .. | 15,000 | 48.14 |
| 5. | ஒரிசா | | 5,981 | 26.67 |
| 6. | மத்தியப்பிரதேசம் | .. | 10,000 | 44.60 |
| 7. | மேற்கு வங்காளம் | .. | 17,845 | 75.16 |
| 8. | உத்திரப்பிரதேசம் | .. | 39,498 | 176.16 |
| 9. | ஹரியானா | .. | 3,450 | 15.30 |
| 10. | பஞ்சாப் | .. | 3,000 | 13.38 |
| 11. | குஜராத் | .. | 1,500 | 3.29 |
| 12. | சண்டிகார் | .. | 800 | 3.57 |
| 13. | தாத்தர மற்றும் நகர் ஹாவேலி. | | 150 | 0.52 |
| 14. | இலட்சத்தீவு | .. | 50 | 0.22 |
| | மொத்தம் | .. | 1,59,084 | 620.70 |



992 செப்டம்பர் 25]
300—

## டான்சி நிறுவனம்

வினா எண் 6003—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) டான்சி நிறுவனத்தின் கீழ் கட்டிடம் மற்றும் தொழிற்பேட்டை ஷெட்கள் அமைப்புக்கான பொருட்கள் என்னென்ன தயாரிக்கப்படுகிறது என்ற விவரம் அறிவிக்க இயலுமா ?

(ஆ) அவற்றில் ஏராளமான எண்ணிக்கை தேங்கிக் கிடக்கிறதா ?

(இ) அவற்றை பயன்படுத்தாமல் அரசு பொறுப்பில் கட்டப்படும் கட்டிடங்கள், ஷெட்களுக்கு தனி காண்ட்ராக்ட்கள் அடிப்படையில் அந்த பொருட்கள் வாங்கப்படுவதால்தான் இந்த அளவிற்கு டான்சியில் தேக்கம் ஏற்பட்டுள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) தொழிற்கூடம், மற்றும் அலுவலகக் கட்டிடங்களுக்குத் தேவையான இரும்புக் கம்பங்கள் (Columns) இரும்பு டிரஸ்கள், கதவுகள், ஜன்னல்கள் முதலானவற்றைத் தனது தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்கின்றது. அநேகமாக எல்லா டான்சி பொறியியற் கூடங்களும் மேற்கண்ட கட்டுமானங்கள், பெறப்படும் பணி ஆணைகளின் பேரில் தயாரித்துக் கொடுக்கத்தக்க திறன் வாய்ந்தவைகளாகும்.

(ஆ) ஆம். ஒரு சில தொழிற்சாலைகளில் மட்டும்.

(இ) தேக்கம் அதிக அளவில் டான்சியில் இல்லை. இருப்பினும் அரசுத் துறைகளிடமிருந்தும், அரசு நிறுவனங்களிடமிருந்தும் டான்சி நிறுவனம் பெறவேண்டிய பணி ஆணைகள், டான்சிக்கு கிடைக்காமல் போய்விடுகிறது. தற்போது இப்பொருட்களை அரசுத் துறைகளுக்கும், அரசு நிறுவனங்களுக்கும், தயாரித்து வழங்குவதில் தனியார் நிறுவனங்களிடமிருந்து போட்டியினை, டான்சி நிறுவனம் எதிர் நோக்க வேண்டியுள்ளது. மேலும் பிற அரசு நிறுவனங்களான, என்கோபெட் (Encofed) கதர் கிராமத் தொழில் வாரியம், தொழிற் கூட்டுறவு சங்கங்களும், இவ்வித தயாரிப்பில் நுழைந்து, டான்சியுடன் போட்டியிட்டு டான்சிக்கு கிடைக்கவேண்டிய பணிகளையும் அவர்கள், பெறுகிறார்கள். அரசுத் துறைகளுக்குத் தேவையான பொருள்களைத் தயாரித்து அளிப்பதில் டான்சிக்கு முன்னுரிமைக்கான அரசாணை (G.O. Ms.No. 1141, Industries, Department dated 27-10-1988) இருந்தும், தனியார் நிறுவனங்கள், இப்பணிக்கான ஆணைகளை, அரசுத் துறைகளிடமிருந்து, அரசு நிறுவனங்களிடமிருந்துதான் பெற்றுச் செய்கின்றன.

[1992 செப்டம்பர் 25

301—

**கடற்கரை பகுதியிலுள்ள குடிசைகளை அகற்ற சென்னை மாநகராட்சி எடுத்த நடவடிக்கை**

வினா எண் 3231—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சாந்தோம், பட்டினப்பாக்கம் மற்றும் மெரினாவிலுள்ள கடற்கரை, கடற்கரை சார்ந்த பகுதிகளில் உள்ள குடிசைகளை அகற்ற சென்னை மாநகராட்சி எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

மெரினா கடற்கரையில் காந்தி சிலையிலிருந்து அண்ணா சதுக்கம் வரையில் இருந்த குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்டு விட்டன. சாந்தோம் பகுதி மற்றும் பட்டினப்பாக்கத்தில் உள்ள குடிசைப் பகுதிகள் பிரகடனப்படுத்தப்பட்ட (Notified) குடிசைப் பகுதிகள் ஆகும். அவைகளை அப்புறப்படுத்துதல் இயலாது.

302—

**சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம்**

வினா எண் 5573— திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிட வசதி இல்லாது இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதிய கட்டிடம் கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கட்டிடம் கட்ட தகுந்த இடம் கிடைத்ததும் அரசின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு கட்டப்படும்.



1992 செப்டம்பர் 25]

303—

**மாதிரி வணிகவரிச் சட்டம்**

வினா எண் 8761— திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாதிரி வணிக வரிச் சட்டம் குறித்து மாநில அரசின் கருத்துக்களை மத்திய சட்டக் கமிஷன் கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது தனது கருத்துக்களை சட்டக் கமிஷனுக்கு மாநில அரசு அனுப்பி விட்டதா?

(இ) இதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதிரி வணிக வரிச் சட்டம் குறித்து மாநில அரசின் கருத்தினை மத்திய அரசின் நிதி அமைச்சகம் கேட்டிருந்தது. அதற்கான பதில் 22— 4— 1992-இல் அனுப் பப்பட்டுள்ளது. மத்திய சட்ட கமிஷன் இது தொடர்பாக கருத்து ஏதும் கேட்கவில்லை.

(இ) 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16 மற்றும் 17—ஆம் நாட்களில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட் டில் அனைத்து மாநிலங்களிலும் ஒரே மாதிரியான விற்பனை வரிச் சட்டம் இயற்றுவதற்கு ஏதுவாக மாதிரி வணிக வரிச் சட்டம் ஒன்றினை தயாரிக்குமாறு சட்டக் கமிஷனைக் கேட்டுக் கொள் வது என தீர்மானிக்கப்பட்டது. ஆனால் சட்ட கமிஷனுக்கு வேலைப் பளு அதிகமாக இருந்ததால் இப்பணியினை மத்திய அரசு தேசீய பொது நிதி மற்றும் கொள்கை நிறுவனத்திடம் (National Institute of Public Finance and Policy) ஒப்படைத்தது. அதற்கிணங்க அந்நிறுவனம் மாதிரி வணிகவரிச் சட்ட முன்வடிவு ஒன்றினை தயாரித்து மத்திய அரசிடம் அளித் தது. அம் முன் வடிவின் மீது மாநில அரசுகளின் கருத்தினை மத்திய அரசு கேட்டது.

இந்த மாதிரி சட்ட முன்வடிவினை தமிழ்நாடு அரசு நன்கு பரிசீலித்தது. இம்மாதிரி சட்ட முன்வடிவினை ஏற்றுக் கொண் டால் நமது மாநில விற்பனை வரிச் சட்டத்திற்கு பல திருத்தங் கள் கொண்டு வரவேண்டும். தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம்தான் நமது நாட்டிலுள்ள பிற விற்பனை வரிச் சட்டங்களுக்கு முன்னோடியாக அமைந்துள்ளது. இது 50 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையிலுள்ளது. வணிகவரித்

துறை அதிகாரிகளும், வர்த்தகர்களும் இச் சட்டத்தை நன்கு புரிந்து பின்பற்றி வருகின்றனர். எனவே தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தையே நமது மாநிலத்தில் தொடர்ந்து பின்பற்றலாம் என்றும், மாதிரி விற்பனை வரிச் சட்ட முன் வடிவில் உள்ள சில முக்கிய கருத்துக்களை மட்டும் தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில் சேர்த்துக் கொள்வதைப்பற்றி பரிசீலிக்கலாம் என்றும் கருதப்பட்டது. அதற்கிணங்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. இக்கருத்துக்களை தெரிவித்து மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு 22- 4— 1992ல் கடிதம் அனுப்பியுள்ளது.

304—

## அரசு கலைக் கல்லூரிகள்

வினா எண் 1650— டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரிகள் இல்லாத தொகுதிகள் எத்தனை?

(ஆ) கலைக் கல்லூரி இல்லாத தொகுதியில், கல்லூரி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இரண்டு. அவை (1) கடலாடி (2) பரமக்குடி.

(ஆ) தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

305—

## தமிழ்நாட்டிலுள்ள தொழுநோய் மருத்துவமனைகள்

வினா எண் 5615—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் தொழுநோயாளிகளுக்கென மருத்துவமனை மற்றும் மருந்தகம் அரசின் கீழ் எத்தனை உள்ளன? தனியார் பொறுப்பில் எத்தனை உள்ளன?

(ஆ) தமிழ்நாட்டில் தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை மற்றும் மருத்துவ செலவிற்காக ஆண்டுதோறும் அரசு செலவிடும் தொகை எவ்வளவு?





(இ) தொழுநோயாளிகள் எண்ணிக்கை குறித்து அண்மையில் சர்வே செய்யப்பட்டதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் 102 அரசு தொழுநோய் கட்டுப்பாடு நிலையங்களும் 52 தற்காலிக தங்கும் தொழுநோய் மருத்துவமனைகளும் உள்ளன. தமிழ்நாட்டில் தனியார் பொறுப்பில் 33 தொழுநோய் நிலையங்கள் உள்ளன மற்றும் 50 படுக்கைகள் கொண்ட அரசு தொழுநோய் மருத்துவமனை நிலையம் ஒன்றும் சென்னை தாம்பரத்தில் செயல்படுகிறது.

(ஆ) அரசு தொழுநோய் திட்டத்திற்காக பல்வேறு கணக்கு தலைப்பின்கீழ் ரூ. 1,381.78 லட்சம் 1990-91-ம் ஆண்டு செலவு செய்துள்ளது.

1991-92ஆம் ஆண்டுக்கு இதுவரை அரசு தொழுநோய் திட்டத்திற்காக ரூ. 1,250.96 இலட்சம் செலவு செய்துள்ளது.

(இ) ஆம். ஜனவரி 1—1—1992 முடிய நோயாளிகள் எண்ணிக்கை 1,39,073.

306—

## சிறப்பு கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம்கள்

வினா எண் 5996—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் சிறப்பு கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம்கள் ஏதேனும் நடைபெற்றனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன?

(இ) இவற்றில் பயனடைந்தோர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஈ) இவற்றில் இலவச மூக்கு கண்ணாடி வழங்கப்பட்டு பெற்றவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

[1992 செப்டம்பர் 25

(அ) ஆம். திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் கீழ்க் குறிப்பிட்டுள்ளபடி 31 முகாம்கள் நடைபெற்றுள்ளன:—

| | |
|---|---|
| 1989-90 | 13 முகாம்கள் |
| 1990-91 | 11 முகாம்கள் |
| 1991-92 | 7 முகாம்கள் |
| (பிப்ரவரி 92 முடிய) | 31 முகாம்கள் |

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற அரசு இலவச கண் சிகிச்சை முகாம்களில் பரிசோதனை மற்றும் கண் அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டது.

(இ) பயனடைந்தோர் எண்ணிக்கை விவரம்:

| | |
|---|---|
| 1989-90 | 1423 |
| 1990-91 | 1402 |
| 1991-92 (பிப்ரவரி 92 முடிய) | 856 |

(ஈ) இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டு பெற்றவர்களின் எண்ணிக்கை (பிப்ரவரி 92 முடிய) 1989-90—1,423; 1990-91 1402; 1991-92 — 856.

307—

## அரசு பொது மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை.

வினா எண் 6262—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசு பொது மருத்துவமனைகளில் கடந்த 10 ஆண்டுகளில் நோயாளிகளின் (புறம் மற்றும் அகம்) வருகை எண்ணிக்கை குறைந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அக்குறைவிற்கு காரணம் என்ன?

(இ) அக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ), (ஆ) மற்றும் (இ) அரசு பொது மருத்துவமனைகளில் அக நோயாளி மற்றும் புற நோயாளிகளின் எண்ணிக்கை குறித்த கடந்த பத்தாண்டுகளுக்கான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| ஆண்டு | புறநோயாளிகள் தினசரி சராசரி | மொத்தம் | அகநோயாளிகள் தினசரி சராசரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1990–81 | 1,62,754 | 4,92,26,596 | 18,595 | 29,38,848 |
| 1981–82 | 1,69,511 | 4,97,58,922 | 19,416 | 31,09,749 |
| 1982–83 | 1,81,343 | 5,25,53,129 | 20,879 | 33,65,363 |
| 1983–84 | 1,82,293 | 5,14,19,058 | 20,238 | 34,65,542 |
| 1984–85 | 1,84,750 | 5,50,01,535 | 20,477 | 44,71,080 |
| 1985–86 | 1,94,076 | 5,89,44,151 | 20,812 | 52,00,505 |
| 1986–87 | 1,68,480 | 4,91,19,278 | 20,109 | 51,23,841 |
| 1987–88 | 1,48,754 | 2,49,55,439 | 31,043 | 54,52,953 |
| 1988–89 | 1,67,295 | 5,26,81,180 | 21,072 | 60,99, 08 |
| 1989–90 | 1,66,990 | 4,71,74,000 | 25,590 | 54,57, 00 |
| 1990–91 | 1,20,012 | 4,25,62,376 | 22,119 | 67,26,525 |

அரசு பொது மருத்துவமனைகளில் சில சிறப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு வருவதால் அந்த மருத்துவமனைகளில் வசதி யில்லாத ஏழை நோயாளிகள் மருத்துவ சிகிச்சை அதிக அளவில் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் அகநோயாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வந்துள்ளது என்பது கடந்த 10 ஆண்டுகளில் அகநோயாளிகளின் எண்ணிக் கையிலிருந்து தெரியவருகிறது. அதே சமயம் தனியார் மருத்துவ மனைகள் பெருகி வருகின்ற காரணத்தால் வசதிபடைத்தவர்கள் அம்மருத்துவமனைகளுக்குச் சென்று சிகிச்சை பெறும் நிலை ஏற் பட்டுள்ளது. அதனால் புறநோயாளிகளின் எண்ணிக்கை அரசு பொது மருத்துவமனைகளில் குறைந்துள்ளது என்பதை 10 ஆண்டுகளின் கணக்கிலிருந்து தெரியவருகிறது. மேலும் சுகாதாரத் துறை சீராகச் செயல்படுவதால், புற நோயாளிகளின் எண்ணிக் கை குறையலாம். மேலும் மருத்துவ வசதிகள், படுக்கை வசதிகள் சிறப்பு சிகிச்சை அதிகப்படுத்தி, நிலைமைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[1992 செப்டம்பர் 25

308—

**கண்பார்வை இழப்பைத் தடுப்பதற்கு மத்திய அரசு அளித்த உதவித் தொகை.**

வினா எண் 7996—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கண்பார்வை இழப்பைத் தடுப்பதற்காக தேசியத் திட்டத்தின்கீழ் கடந்த 3 ஆண்டுகளில் மத்திய அரசு அளித்த உதவித் தொகை ஆண்டு வாரியாக எவ்வளவு ?

(ஆ) இத்திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்றோர் எண்ணிக்கை ஆண்டு வாரியாக எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (அ) | 1988–89 | 22.01 |
| | 1989–90 | 19.71 |
| | 1990–91 | 43.24 |
| (ஆ) | 1988–89 | 1,10,267 |
| | 1989–90 | 1,11,017 |
| | 1990–91 | 1,08,317 |

309—

**எக்ஸ்ரே மற்றும் ஆபரேஷன் தியேட்டர்.**

வினா எண் 8676—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எக்ஸ்ரே மற்றும் ஆபரேஷன் தியேட்டர் வசதியற்ற தாலுக்கா தலைமை மருத்துவ மனைகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றிலெல்லாம் இவ்விரு வசதிகளும் செய்துதர அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ). 42 தாலுகா மருத்துவமனைகளில் எக்ஸ்ரே வசதி அறுவையரங்கங்கள் கிடையாது. தற்போது 1991–92 ஆம் ஆண்டின் பகுதி 2 திட்டத்தின்கீழ் 13 தாலுகா மருத்துவமனைகளில் மேற்கண்ட வசதிகளை ஏற்படுத்த அரசாணை எண் 1550, சுகாதாரம், நாள் 11–12–1991-ல் ஆணையிடப்பட்டுள்ளது.



1992 செப்டம்பர் 25]

1992–93 ஆம் ஆண்டின் பகுதி 2 திட்டத்தின் கீழ் மேலும் 5 தாலுகா மருத்துவமனைகளில் எக்ஸ்ரே கருவி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 24 தாலுகா மருத்துவமனைகளில் தேவைப்படும் சூழ்நிலையை வைத்து நிதி வசதியை கருத்தில் கொண்டு மேற்கண்ட வசதிகள் அமைக்கப்படும்.

310—

**சித்த மருத்துவத்தை ஊக்கப்படுத்த நடவடிக்கை.**

வினா எண் 8797—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பண்டைத்தமிழ் மருத்துவமுறையான சித்த மருத்துவத்தை ஊக்கப்படுத்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

இந்திய மருத்துவக் கல்வி இயக்ககத்துடன் இணைத் திருந்த சித்த மருத்துவ பிரிவுக்கு 1970-ல் ஒரு தனி இயக்ககம் ஏற்படுத்தி இந்திய மருத்துவ இயக்ககம் என்ற பெயரில் ஒரு தனி இயக்குநரின் மேற்பார்வையில் தனியே இயங்கி வருகிறது. அரசு செயலகத்தில் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறையில் அதன் ஆணையர் மற்றும் செயலரின் கீழ் சித்த மருத்துவத்திற் கென்று தனியே ஒரு பிரிவு இந்திய மருத்துவப் பிரிவு என்ற பெயரில் ஒரு அரசு துணை செயலாளரின் நேரடி பார்வை யில் தனியே அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. மேற்கண்ட இந்திய மருத்துவ இயக்ககமும் செயலகத்திலுள்ள இந்திய மருத்துவப் பிரிவும் இணைந்து சித்த மருத்துவத்தை ஆங்கில மருத்துவத்திற்கிணையாக ஊக்கப்படுத்தும் நோக்குடன் இந்திய மருத்துவமுறையில் போதிக்க கல்லூரிகளையும், சிகிச்சையளிக்க மாவட்ட தலைமையிடம், வட்ட மற்றும் தாலுகா அளவில் அல்லாத இடங்களில் மருத்துவமனை, மருந்தகம் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறை மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்தி பல்வேறு திட்டங்கள் அரசுக்கு அனுப்பப்பட்டு அவை நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றன. 1992–93 ஆம் ஆண்டுவரை 264 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவ பிரிவு தொடங்கப் பட்டுள்ளன.

[1992 செப்டம்பர் 25

311—

சென்னை விமானப் பயிற்சிக் கழகத்திலுள்ள விமானங்கள் பழுது பார்த்தல்.

வினா எண் 1777—திரு. மா. சுந்தரதாஸ் :

will the Hon. Minister for Transport be pleased to state :

(a) Whether the Director-General of Civil Aviation has requested the Tamil Nadu Government to clear the defects in the administration of the Madras flying club during 1991 and

(b) the details thereof?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சென்னை விமானப் பயிற்சிக் கழகம் எதிர்நோக்கிய குறைபாடுகள் சரி செய்யப்பட வேண்டுமென்று சிவில் விமானப் போக்குவரத்து டைரக்டர் ஜெனரல் தெரிவித்தார். ஏழு பயிற்சி விமானங்களில் ஒன்றைத் தவிர ஏனைய விமானங்கள் பழுது பார்க்க வேண்டியுள்ளது என்றும், சென்னை விமானப் பயிற்சிக் கழகத்தில் நிதி நெருக்கடியும் உள்ளது. இந்நிலை நீட்டித்தால் தமிழ்நாட்டைச் சார்ந்த பயிற்சி மாணவர்கள் தேசிய அளவில் விமானியாகும் நிலையை இழக்க நேரிடும் என்றும் சிவில் விமான போக்குவரத்து டைரக்டர் ஜெனரல் தெரிவித்திருந்தார்.

இந்நிலைமையைச் சரி செய்ய மாநில அரசு தக்க நேரத்தில் நடவடிக்கை எடுத்தது. அதன் ஏழு பயிற்சி விமானங்களில் ஐந்து பயிற்சி விமானங்கள் தற்போது பயிற்சிக்கான நிலையில் உள்ளன. பயிற்சி விமானங்களின் பறக்கும் செயல் திறனும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. சென்னை விமானப் பயிற்சி கழகத்திற்கு உதவித்தொகை, பயிற்சியாளர்களுக்குரிய படிப்பு உதவித் தொகை, பெட்ரோல் ஈட்டுத் தொகை அனைத்தும் வழங்கப்பட்டு நிதி நிலைமை சீரடைந்து உள்ளது. தற்போது பணியாளர் பிரச்சினையும் இல்லை.

12—

திண்டுக்கல்-சென்னை நேரடி விரைவு இரயில்.

வினா எண் 6405—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



1992 செப்டம்பர் 25]

தோல் தொழிலுக்கு ஆம்பூர், வாணியம்பாடிக்கு அடுத்து பெயர் பெற்ற மிகப் பெரிய வர்த்தக மையமாகவும், மாவட்டத் தலைநகராகவும் உள்ள திண்டுக்கல்லிருந்து பல்வேறு அலுவல்கள் தொடர்பாக சென்னை வந்து செல்வோர் எண்ணிக்கை நாளும் பெருகி வரும் நிலையில் திண்டுக்கல்-சென்னைக்கென்று தனி நேரடி இரயில் இல்லாததால் திண்டுக்கல்—சென்னை நேரடி விரைவு இரயில் ஒன்று விடவேண்டும் என மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி நடவடிக்கை எடுக்கச் செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

திண்டுக்கல்லிற்கு வரும், அங்கிருந்து சென்னை செல்லும் பயணிகளின் வசதிக்காக 6 ஜதை விரைவு இரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தில் இரயில் பாதையினை மேலும் பயன்படுத்த வழிவகை இல்லாததாலும், இரயில் பெட்டிகள் மற்றும் இரயில் இன்சின்கள் பற்றாக்குறையாலும், திண்டுக்கல்லில் முடிவிடம் ( terminal ) வசதி குறைவு காரணமாகவும், திண்டுக்கல்—சென்னை இடையே விரைவு இரயில் விடுவதற்கு கருத்துரு ஏதும் இல்லையென்று தென்னக இரயில்வே பொது மேலாளர் தெரிவித்துள்ளார். எனவே திண்டுக்கல்—சென்னை நேரடி விரைவு இரயில் விட மத்திய அரசை வலியுறுத்தத் தேவையில்லையெனக் கருதப்படுகிறது.

313 —

காப்பி தோட்டத்தை அழித்துவிட்டு மனைகளாக மாற்றி விற்பனை செய்வதை தடுக்க நடவடிக்கை.

வினா எண் 7816—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வால்பாறை குன்றுகள் கிராமம், புதுத்தோட்டம் காப்பி எஸ்டேட்டை அழித்து Conservation of Forest Act-க்கு புறம்பாக சுமார் 30 ஏக்கரில் ரியல் எஸ்டேட் தொடங்க புதுத்தோட்டம் நிறுவனத்தினர் முயற்சி செய்து கொண்டு வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இவற்றை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) அரசுக்கு தெரிய வந்துள்ளது.

(ஆ) வால்பாறையில் உள்ள புதுத்தோட்ட நிறுவனத்தாரால் மேற்கொள்ளப்படும் காப்பி தோட்டத்தை அழித்து விட்டு மனைகளாக மாற்றி விற்பனை செய்யும் நடவடிக்கையை தடை செய்வதற்கு, அரசு, முதன்மை வனத்துறை தலைவர், மாவட்ட ஆட்சியாளர் மற்றும் நகர் மற்றும் ஊரக இயக்குநர் அவர்களை கலந்தாலோசித்து தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

314—

பேருந்துவிட நடவடிக்கை.

வினா எண் 8235—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரத்திலிருந்து பெரிய நெல்லிக்கொல்லை, சின்ன நெல்லிக்கொல்லை வழியாக சின்ன நற்குணம் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்திலிருந்து புவனகிரி, பி. உடையூர், சேத்தியாத்தோப்பு குறுக்குச்சாலை, பெரிய நெல்லிக் கொல்லை, சின்ன நெல்லிக்கொல்லை, எறும்பூர் வழியாக சின்ன நற்குணம் வரையிலான தட நீளம் 29.5 கி.மீ. ஆகும். இதில் பெரிய நெல்லிக்கொல்லை சாலையிலிருந்து சின்ன நற்குணம் கிராமம் வரையிலான 6.4 கி.மீ. தூரப்பகுதி (எறும்பூர் கிராமம் தவிர) இதுவரை பேருந்து வசதி பெறாத பகுதியாகும். அதில் பெரிய நெல்லிக்கொல்லைக்கும் எறும்பூருக்கும் இடைப்பட்ட 2 கி.மீ. தூரப்பகுதி மட்டுமே பேருந்து இயக்குதலுக்கு ஏற்ற நிலையில் உள்ளது. பெரிய நெல்லிக்கொல்லை சாலையிலிருந்து பெரிய நெல்லிக்கொல்லை வரையிலான 1.7 கி.மீ. தூர குறுகிய கப்பிச்சாலையும், எறும்பூரிலிருந்து சின்னநற்குணம் வரையிலான 2.7 கி.மீ. தூர மிகக் குறுகிய கப்பிச்சாலையும் பேருந்து போக்குவரத்துக்கு முற்றிலும் தகுதியற்றவை. எனவே, தற்போதைய நிலையில், சிதம்பரம்—சின்னநற்குணம் (வழி : பெரிய நெல்லிக்கொல்லை, சின்ன நெல்லிக்கொல்லை, எறும்பூர்) தடத்தில் பேருந்து வசதி அளித்திட இயலாது.





315—

கூட்டுறவு நெசவாளர் சங்கத்தில் கொள்முதல் செய்யப்பட்ட துணிகள்.

வினா எண். 193—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதியில் கூட்டுறவு நெசவாளர் சங்கத்தில் கொள்முதல் செய்யப்பட்ட துணிகளுக்கு கோ-ஆப்டெக்ஸ் தொகை அளிக்கவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) காமராஜர் மாவட்டத்திலுள்ள திருவில்லிபுத்தூர் தொகுதி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து ஜவுளி கொள்முதல் செய்ததில் ஆகஸ்டு 1991 முதல் ஜனவரி 1992 வரையிலான நிலுவைத்தொகை விவரத்தினையும், அம் மாதங்களில் கொள்முதல் செய்த தொகைகளின் விவரங்களையும் அம்மாதங்களில் கோ-ஆப்டெக்ஸ் பணப்பட்டுவாடா செய்த தொகைகளையும், இறுதி நிலுவைத் தொகையினையும் கீழ் வருமாறு கொடுக்கப்படுகிறது:—

(ரூபாய் இலட்சத்தில்.)

| மாதங்கள் | ஆரம்ப நிலுவைத் தொகை. | கொள் முதல் விவரம். | பணப் பட்டு வாடா செய்தத் தொகை. | இறுதி நிலுவைத் தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஆகஸ்டு 1991 | 134.98 | 91.65 | 85.83 | 140.80 |
| செப்டம்பர் 1991 | 140.80 | 48.92 | 4.69 | 185.03 |
| அக்டோபர் 1991 | 185.03 | 27.64 | 49.93 | 162.74 |
| நவம்பர் 1991 | 162.74 | 7.57 | 48.15 | 122.14 |
| டிசம்பர் 1991 .. | 122.16 | 71.34 | 70.16 | 123.36 |
| ஜனவரி 1992 .. | 123.34 | 43.62 | 57.10 | 109.86 |

கோ-ஆப்டெக்ஸ், பிரதம சங்கங்களிலிருந்து தொடர்ச்சியாக துணி கொள்முதல் செய்து, கோ-ஆப்டெக்ஸ் நிதி, நிலைமையை அனுசரித்து பிரதம சங்கங்களுக்கு பணம் பட்டுவாடா செய்து வருகிறது. மீதமுள்ள நிலுவைத் தொகையினை, விரைவில் பட்டுவாடா செய்ய ஏற்பாடுகள் செய்யப்படும்.

316—

## தார்ச்சாலை அமைத்தல்.

வினா எண். 6854—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாழியூர்—படவேடு சாலை பழுதடைந்து உள்ளதால் அதனை தார்ச்சாலையாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) வாழியூர்—படவேடு சாலை என்பது, வாழியூர் சாலை (கி.மீ. 0/0/3/4), வாழியூர்—அனந்தபுரம் சாலை (கி.மீ. 0/0/3/4, புதூர்—அனந்தபுரம் சாலை (கி.மீ. 0/8/3/2) படவேடு அரிசனக்காலனி முதல் படவேடு புதூர் சாலை (கி.மீ. 0/0-1/2), படவேடு முதல் படவேடு அரிசனக்காலனி சாலை (கி.மீ. 0/0-1/2) ஆகிய ஐந்து சாலைகள் இணைந்ததாகும். இவை நெடுஞ்சாலைத்துறையால் பராமரிக்கப்பட்டு வரும் 'அரசு இதர மாவட்ட சாலைகளாகும். இந்த சாலைகள் எல்லாம் ஒரு வழிப்பாதை அகலமுள்ள தார் மேற்பரப்புடைய சாலைகளாகும். இந்த ஐந்து சாலைகளில், வாழியூர்—அனந்தபுரம் சாலை கி.மீ. 0/0/3/2 தவிர ஏனைய நான்கு சாலைகளிலும் ஏற்பட்டிருந்த பழுதுகளை சீரமைக்கும் பணிகள் 1991—92-ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 20 கோடி சிறப்பு பராமரிப்பு நிதியைக் கொண்டு மோசமான நிலையில் உள்ள இதர மாவட்ட சாலைகளை சீர் செய்தல் என்ற செயல்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இப்பணிகள் யாவும் விரைவில் முடிக்கப்பட்டு, சாலைகள் சீரான பேருந்து—வாகனப் போக்குவரத்துக்கு ஏற்ப பராமரிக்கப்படும்.





317—

## ஒட்டன்சத்திரம்—தாராபுரம் சாலையை இரு வழித்தடமாக மாற்றல்.

வினா எண். 8940—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒட்டன்சத்திரத்திலிருந்து தாராபுரம் வழியாக திருப்பூர் செல்லும் சாலையான 'ஒட்டன்சத்திரம் தாராபுரம்' அரசு மாவட்ட பெரிய சாலையில் வாகனப் போக்குவரத்து பெருமளவில் அதிகரித்து வருவதால் இதனை இருவழித்தடமாக அகலப்படுத்த ரூ. 56.70 லட்சம் செலவிலான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திட்டம் ஏதும் இல்லை.

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒட்டன்சத்திரம் —தாராபுரம் சாலையின் மொத்த நீளம் 26.8 கி.மீ. (கி.மீ. 0/0–26/8) ஆகும். இதில் கி.மீ. 0/0–7/6 வரை இருவழித்தடமாக உள்ளது. எஞ்சியுள்ள கி.மீ. 7/6–26/8 பகுதியினை இருவழித்தடமாக மாற்றுவதற்கு ரூ. 60.00 இலட்சம் தேவைப்படும். இப்பணி இதுவரை அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள திட்டப்பணிகள் எதிலும் இடம் பெறவில்லை. மத்திய அரசின் ஒப்புதல் பெறும் பொருட்டு அனுப்பியுள்ள மத்திய சாலை நிதி திட்டப் பிரேரணையிலும் இப்பணி இடம் பெறவில்லை. அரசு திட்டப் பணிகளுக்கென குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்து வருவதால், இப்பணியினை அண்மைக் காலங்களில் பகுதி-2 திட்டத்தின் மூலம் எடுத்துச் செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.

318—

## குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை.

வினா எண். 1397—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்புவனம் பேரூராட்சி மக்களின் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருப்புவனம் பேரூராட்சியில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் முழுமையாக முடிக்கப்பட்டு 2—5—1992 முதல் கூடுதலாக இரண்டு இலட்சம் லிட்டர்கள் நீர் விநியோகிக்கப்படுகிறது.

319—

திருச்சி நகராட்சிப் பகுதியிலுள்ள சாலைகள் செப்பனிடல்.

வினா எண். 1787—டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி நகராட்சிப் பகுதிகளில் சாலைகள் சரிவர பராமரிக்கப்படாததால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் அவற்றைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : நகராட்சி எல்லையிலுள்ள அனைத்து சாலைகளும் நகராட்சி நிதிநிலைக்கு ஏற்ப அவ்வப்போது பழுது பார்க்கப்பட்டு செப்பனிடப்பட்டு வருகின்றன.

320—

மயானத்திற்கு சுற்றுப்புறச் சுவர் கட்டுதல்.

வினா எண். 2024—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி நகராட்சியில் உள்ள மயானத்திற்கு சுற்றுப்புறச் சுவர் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு. திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 1991—92 மற்றும் நடப்பு நிதி ஆண்டில் மயானம் பராமரிப்புக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை எனவே, நடப்பு ஆண்டில் சுற்றுப்புறச் சுவர் கட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை.



321—

போர்வெல் போட நடவடிக்கை.

வினா எண். 2167—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மே) கோனார் தெருவில் வடக்கு சாலை பாஸ்கரன் தெருவிலும் ஊரின் பள்ளி ஓரத்திலும், கீழ்ப்பகுதியிலும், நடுப் பகுதியிலும் ஆக 4 போர்வெல் போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு , உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இடையாத்தி (மே)-ல் 1983—84-ல் எம்.என்.பி. திட்டம் மூலம் ஒரு மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது செயலில் உள்ள குடிநீர்த் திட்டம் போதுமானதாகும். மேற்படியூர் கோனார் தெருவில் வடக்கு சாலை பாஸ்கரன் தெருவிலும், ஊரின் பள்ளி ஓரத்திலும், கீழ்ப் பகுதியிலும் நடுப்பகுதியிலும் ஆக 4 போர்வெல் போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

322—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 2277—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் ஊராட்சி சித்தாதிக்காட்டிற்கு அவசரமாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு ; உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சித்தாதிக்காட்டில் ஒரு கையிறைப்பானும், 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மின்விசைத் திட்டமும் பயனில் உள்ளன. ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

323—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 2370—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பூவளூர் (கி) ஆதிதிராவிடர்களுக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பூவளூர் (கி)யில் ஒரு கையிறைப்பானும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மின்விசைத் திட்டமும் பயனில் உள்ளன. இவை போதுமானதாகும். எனவே, ஆதிதிராவிடர்களுக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

324—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண். 2853—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பண்ணவயல் தெற்கு ஆதிதிராவிடர்களுக்கு ஆழ்குழாய் கிணறு (Bore Well) ஒன்று அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணவயல் தெற்கில் ஒரு அடிபம்பு, திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி குடியிருப்பிற்கு ஆழ்குழாய்க் கிணறு ஒன்று அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு இல்லை.



325—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண். 2856—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணவயல் ஊராட்சியைச் சேர்ந்த சுந்தரராஜாபுரம் ஆதிதிராவிடர்களுக்கு ஆழ்குழாய்க் கிணறு ( Bore Well ) ஒன்று அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணவயல் ஊராட்சியைச் சேர்ந்த சுந்தரராஜபுரத்தில் 20,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த் தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தற்போதைய மக்கட் தொகைக்கு இதுவே போதுமானதாகையால், மேலும் ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்க திட்டம் ஏதும் இல்லை.

326—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண். 3187—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிக்கோட்டையில் ஊராட்சி அலுவலகத்திற்கு அருகில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிக்கோட்டையில் ஒரு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது. ஆகையால் மேற்படி கிராமத்தில் ஊராட்சி அலுவலகத்திற்கு அருகில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

327—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை சரிசெய்தல்

வினா எண். 3188—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் முடச்சிக்காட்டில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை சரியாக இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் முடச்சிக்காட்டில் 10 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. அதில் ஜெட் வால்வ் பழுது ஏற்பட்டிருந்ததை சரி செய்யப்பட்டு 3-3-1992 முதல் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

328—

## சாலைகள் சீர் செய்தல்.

வினா எண். 3481—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மயிலாடுதுறை நகரில் உள்ள அனைத்து சாலைகளையும் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி முடிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சமீபத்தில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் வெள்ளத்தினால் மயிலாடுதுறை சாலைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 17 கி.மீ. சாலையை பழுது பார்க்க ரூ. 27,81,000 மான்யமாக நிதி உதவி கோரிய, நகராட்சி ஆணையரின் முன் மொழிவு நகராட்சி நிர்வாக ஆணையரிடம் பரிசீலனையில் உள்ளது.



(ஆ) தற்சமயம் போக்குவரத்து மிகுந்த முக்கிய சாலைகளில் ஏற்பட்ட பள்ளங்களை நகராட்சி மூலம் தார் போட செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசின் முழுக் கடன் உதவியுடன் ரூ. 2,00,000 செலவில் மகாதானத் தெருவை அகலப்படுத்தி தார் தளத்தை புதுப்பிக்கும் பணி நடைபெற உள்ளது.

329—

## சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்.

வினா எண். 3924—திரு. வெ. பழனிசாமி,

திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமப் பகுதிகளுக்கு சிறப்பு தன்னிறைவுத் திட்டம் மூலம் ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் அளிப்பது போல் நகராட்சிக்கும் சிறப்பு தன்னிறைவுத் திட்டம் மூலம் நிதி ஒதுக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஒதுக்கப்படும்?

(இ) எவ்வளவு ஒதுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஊராட்சி ஒன்றியங்களுக்கு சிறப்பு தன்னிறைவுத் திட்டம் மூலம் ரூ. 1 கோடி வழங்கப்பட்டதுபோல் நகராட்சிகளுக்கும் நிதி ஒதுக்கும் செயற் குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினாக்களுக்கு இடமில்லை.

330—

## ஏர்வாடி கிராம குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை.

வினா எண். 4392—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ஏர்வாடி கிராமத்திற்கு குடிநீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்தும் நிறைவேற்றப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? எந்த வகைக்கு செலவு செய்யப்பட்டுள்ளது, எப்போது முடிந்துக் கொடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) திட்ட மதிப்பீடு ரூ. 6.55 இலட்சங்கள், இத் திட்டத்திற்கு இதுவரை ரூ. 2.64 இலட்சங்கள் செலவு செய்யப் பட்டுள்ளது. தலைமைப் பணியிடத்தில் வேலைகள் செய்வதற்கு ஏர்வாடி தர்கா கமிட்டியினர் உயர்நீதிமன்றத்தின் தடை உத்திரவு பெற்றனர். அதனால் மேற்கொண்டு பணிகள் நடைபெற வில்லை. இந்திட்டத்திற்கு மாற்றுத் தலைமையிடம் தெரிவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. நீராதாரம் அமைக்க இடம் கிடைத்தவுடன் திட்டம் செயலாக்கப்படும்.

331—

**காரைக்குடியில் பூங்கா, விளையாட்டு மைதானம் அமைத்தல்.**

வினா எண். 4408—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டத்திலே காரைக் குடியில் பூங்கா, விளையாட்டு மைதானம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்திலே காரைக்குடியில் புதிதாக பூங்கா விளையாட்டு மைதானம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

332—

**காரைக்குடியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்.**

வினா எண். 4416—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) காரைக்குடி பாதாள சாக்கடைத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வேண்டிய நகராட்சிகள் குறித்து அரசு தே.மு.க. எண். 37919/டபிள்யூ. பி.2/86-1, நாள் : 23—6—1986-ல் அறிவித்துள்ள முன்னுரிமைப் பட்டியலில் பட்டியலில் காரைக்குடி நகராட்சி இரண்டாவது முன்னுரி ( Priority No. 2 ) இடம் பெற்றுள்ளது. மைப் பட்டியலின்படி உரிய நேரத்தில் இதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

333—

**கைப்பம்பு பிட்டர்களை அரசு ஊழியராக்கல்.**

வினா எண் 6315—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கோட்ட வளர்ச்சி அலுவலகங்களில் பணிபுரிகின்ற கைப்பம்பு பிட்டர்களை பணி நிரந்தரம் செய்து அரசு ஊழியராக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கோட்ட வளர்ச்சி அலுவலகங்களில் பணிபுரிகின்ற கைப்பம்பு பிட்டர்களை அரசு ஊழியராக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

டி2 53-287—29

334—

குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை.

வினா எண் 6695—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள வீரமுடையாநத்தம் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள வீரமுடையாநத்தம் குடியிருப்பில், ஏற்கனவே உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இத்திட்டம் இக்குடியிருப்பிற்கு போதுமானது ஆகும்.

335—

பள்ளிக்கூடத்திற்குக் கழிப்பிட வசதி செய்து கொடுத்தல்.

வினா எண் 7023—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கொன்றைக் காட்டில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு கழிப்பிடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் கொன்றைக் காட்டில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு கழிப்பிடம் அமைத்துக் கொடுக்க தற்போது அரசிடம் செயற் குறிப்பு இல்லை.



336—

போர்வெல் போட நடவடிக்கை.

வினா எண் 7281—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, நரியங்காடு இடையர் தெருவில் வடக்குப் பகுதியில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி நரியங்காடு இடையர் தெருவில் வடக்குப் பகுதியில் 2 ஆழ்துளைக் கிணறுகள் நிறுவப்பட்டு பயனில் உள்ளன. ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

337—

குடிநீர் வசதி செய்தல்.

வினா எண் 7516—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கொத்தட்டை கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆம். நடப்பு நிதியாண்டில் (1992-93) டேனிடா திட்டத்தின் கீழ் விசைப்பம்பு அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. திட்டம் மார்ச் 1993-க்குள் முடிக்கப்படும்.

[1992 செப்டம்பர் 25

338—

குடிநீர்த் தேக்கத் தொட்டிகளைப் பராமரிக்க உதவிப் பொறியாளர் நியமித்தல்.

வினா எண் 7544—திரு. ஆர். சிங்காரர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சிகளில் ஒப்படைக்கப்பட்ட குடிநீர்த் தேக்க தொட்டிகளை அடிக்கடி பராமரிக்க, ஒன்றியத்திற்கு ஒரு உதவிப் பொறியாளர் நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஊராட்சி ஒன்றியங்களில் ஒப்படைக்கப்பட்ட குடிநீர்த் தேக்கத் தொட்டிகளை பராமரிக்க தனிப் பொறியாளர் ஒருவரை ஒன்றிய அளவில் நியமிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

339—

குடிநீர் வசதி செய்தல்.

வினா எண் 7844—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், குமாரமங்கலம் ஊராட்சியில் உள்ள சிதம்பரநாதன் பேட்டை கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் டானிடா திட்டத்தின் கீழ் சிதம்பரநாதன் பேட்டை கிராமத்திற்கு விசைப் பம்பு திட்டம் செயலாக்கப்படவுள்ளது.



1992 செப்டம்பர் 25]

340—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 8611—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம் பலாங்குளம் ஊராட்சி, சுப்பிரமணியபுரம், பாக்கிய லட்சுமிபுரம், ஆண்டிப்பட்டி, பலாங்குளத்தின் ஒரு பகுதி முதலியவற்றை இணைத்து குடிநீர் வழங்க கூட்டுக்குடிநீர் திட்டம் அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

கீழப்பாவூர் ஒன்றியம், பலாங்குளம் ஊராட்சி, சுப்பிர மணியபுரம், பாக்கியலட்சுமிபுரம், ஆகியவை முழு அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளாகும். ஆண்டிப்பட்டி பகுதி யளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்பாகும். இக்குடியிருப்பு களை இணைத்துக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்க செயற் குறிப்பு எதுவும் தற்சமயம் இல்லை. ஆண்டிப்பட்டி குடியிருப் புக்கு வரும் ஆண்டுகளில் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

341—

குடிநீர்த் தொட்டிகள் கட்ட அனுமதி.

வினா எண் 8935—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னைக்கடுத்த பம்மல், நாகல்கேணி கிராமங்களில் வீடுகளில் உள்ள கிணறுகளின் நீர் மனித உபயோகத்திற்கு அல்ல என கிங் இன்ஸ்டிடியூட் சான்றிதழ் அளித்துவிட்ட நிலையில் அப்பகுதிக்கு குடிநீர் வழங்க 5 லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள குடிநீர்த் தொட்டிகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) பம்மல் மற்றும் நாகல்கேணியில் 5.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள குடிநீர் தொட்டிகள் கட்ட அனுமதி வழங்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

342—

தொழிலாளர் ஈமச்சடங்கு செலவிற்கு தொழிலாளர் நல வாரியம் வழங்கும் உதவித் தொகை.

வினா எண் 8252—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தொழிலாளர் ஈமச்சடங்கு செலவிற்காக தொழிலாளர் நல வாரியம் வழங்கும் உதவித் தொகை எவ்வளவு ?

(ஆ) கடந்த 3 ஆண்டுகளில் எத்தனை குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன ?

(இ) இந்த உதவித் தொகை வாரியமே நேரடியாக வழங்குகிறதா ? அல்லது சம்பந்தப்பட்ட தொழிலாளி உறுப்பினராக இருந்த தொழிற்சங்கம் மூலம் வாரியம் வழங்குகிறதா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) தொழிலாளர் ஈமச்சடங்கு செலவிற்காக அவரது வாரிசுகளுக்கு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் ரூ. 300 உதவித் தொகையாக அளிக்கிறது.

(ஆ) இணைப்பில் கண்டுள்ள அட்டவணைப்படி கடந்த மூன்றாண்டுகளில் பயன்பெற்ற குடும்பங்கள் 2,118. வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ. 6,35,400.

(இ) இந்த உதவித் தொகை வாரிசுதாரர்களுக்கு நிர்வாகங்களின் மூலமும், தொழிற்சங்கங்களின் மூலமும், சில நேர்வுகளில் நேரிடையாகவும் வழங்கப்படுகிறது.



இணைப்பு.

தொழிலாளர் ஈமச் சடங்கு செலவிற்காக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1989-90 முதல் 1991-92 வரை வழங்கிய உதவித் தொகை.

| ஆண்டு. | பயன்பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை (நிர்வாகம், தொழிற் சங்கம் மூலம் மற்றும் நேரடியாக.) | அளிக்கப்பட்ட மொத்த உதவித்தொகை (ரூ. 300 வீதம்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1—4—1989 முதல் 31—3—1990 வரை. | 878 | 2,63,400 |
| 1—4—1990 முதல் 31—3—1991 வரை. | 648 | 1,94,400 |
| 1—4—1991 முதல் 31—3—1992 வரை | 592 | 1,77,600 |
| | 2,118 | 6,35,400 |

343—

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் போக்குவரத்து நெரிசல் பற்றி ஆய்வு.

Question No. 6024.—THIRUMATHI. V. G. MANIMEGALAI : Will the Honourable the Minister for Housing and Urban Development be pleased to State :

(a) Whether the Madras Metropolitan Development Authority has sponsored any study of the Comprehensive traffic and transport system in Madras with the assistance from World Bank?

(b) the details thereof?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 1991-ம் ஆண்டு மே மாதத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை பெருநகர் பகுதியில் ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் போக்குவரத்து நெரிசல் பற்றிய ஆய்வு ஒன்றினை மேற்கொண்டது. இவ்வாய்வு பல்லவன் போக்குவரத்து ஆய்வுக்குழு மற்றும் கிரிலோஸ்கர் ஆய்வு நிறுவனம் ஆகியவைகளை இணைத்துக் கொண்டு உள்நாட்டு முதன்மை ஆலோசனைக் குழுவான ரயில் இந்தியா டெக்னிக்கல் மற்றும் எக்கனாமிக்கல் சர்வீஸ் மூலம் மேற்கொள்ளப்பட்டது. திருவாளர்கள் டபிள்யூ. எஸ். அட்கின்ஸ் என்ற நிறுவனத்தின் பணி மற்றும் ஆலோசனை இந்த ஆய்விற்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. இவ்வாய்வுக்கு தோராயமாக 81 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் ஆய்வு 1994 ஏப்ரல் மாதம் முடிவடையும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் முடிவுகள் சென்னை பெருநகருக்கு எதிர்காலத்தில் தேவைப்படும் போக்குவரத்து வசதிகளை கண்டறிந்து 1991 முதல் 2011 வரையுள்ள திட்டகாலத்திற்கான இரண்டாவது முதுமைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள உதவியாக இருக்கும். இந்த ஆய்வுக் குழுக்கள் இதுவரை 30 சதவீத ஆய்வினை முடித்துள்ளது.

344—

குழந்தைகள் காப்பகம் மீண்டும் துவக்க நடவடிக்கை.

வினா எண் 8215,— திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை தொகுதி, பெருங்களூர் ஊராட்சி, மட்டயம்பட்டி கிராமத்தில் இயங்கிய குழந்தைகள் காப்பகம் நிறுத்தப்பட்டது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் குழந்தைகள் காப்பகம் எப்போது துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:



1992 செப்டம்பர் 25]

(அ) மற்றும் (ஆ) : புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மட்டயம்பட்டி அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள் வருகை மிகக் குறைந்து விட்டதால் இந்த மையம் மூடப்பட்டது. ஆனால் இங்கு வந்த குழந்தைகள் 2 கி. மீ. தூரத்திலுள்ள வெள்ளவெட்டான் விடுதி கிராமத்தில் உள்ள சத்துணவு மையத்தில் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, மட்டயம்பட்டி கிராமத்தில் மீண்டும் புதியதாக மையம் துவங்க இயலாத நிலை உள்ளது.

345—

ஒவ்வொரு ஒன்றியப் பகுதியிலும் கூடுதல் கால்நடை மருந்தகங்கள்.

வினா எண் 1582— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒவ்வொரு ஒன்றியப் பகுதியிலும் கூடுதல் கால்நடை மருந்தகங்கள் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

அரசின் நிதிநிலைக்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் மாநிலத் திட்டத்தின்கீழ் பகுதி-2 திட்டத்தின் வாயிலாக கால்நடை மருந்தகங்கள் புதிதாக துவக்கப்படுகின்றன. அவ்வாறு துவக்கப்படும் கால்நடை மருந்தகங்கள் சாதாரணமாக ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் துவக்கப்படுகிறது. 1991-92-ல் 20 கால்நடை மருந்தகங்கள் புதிதாக துவக்க ஆணை வெளியிடப்பட்டது. 1992-93-ஆம் ஆண்டு 400 கால்நடை மருந்தகங்கள் துவக்குவதற்கு அரசு ஒப்பளித்துள்ளது. எனவே கால்நடை மருந்தகங்கள் கூடுதலாக பல ஒன்றியங்களில் ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது.

346—

லேம்ப் சொசைட்டி அமைத்தல்.

வினா எண் 4567— திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, பைத்தூர், வானாபுரம், தவளப்பட்டி மற்றும் கல்லுகட்டு ஆகிய மலைவாழ் மக்கள் கிராமங்களை இணைத்து பைத்தூரை மையமாகக் கொண்ட ஓர் 'லேம்ப்' சொசைட்டி ஏற்படுத்தப்படுமா?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. மு. ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

ஆத்தூர் தொகுதியில், பைத்தூர், வானாபுரம், தவளப்பட்டி மற்றும் கல்லுக்கட்டு ஆகிய கிராமங்களை இணைத்துப் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (லேம்ப் சொசைட்டி) அமைக்கப் போதுமான சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

347—

தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் மூலம் பதிவான வழக்குகளின் எண்ணிக்கை.

வினா எண் 6263—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் கடந்த பத்து ஆண்டுகளாக (ஆண்டு வாரியாக) தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் மூலம் பதிவாகும் வழக்குகள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) எத்தனை வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப் பட்டுள்ளனர்?

விடை—

மாண்புமிகு திரு மு. ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ மற்றும் (ஆ) இதற்கான விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையில் காணலாம்.

348—

மொத்த மக்கட் தொகையில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதி திராவிடர்கள் ஆகியோர் சதவீதம்.

வினா எண் 10127—திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



1992 செப்டம்பர் 25]

(அ) தமிழகத்தின் மொத்த மக்கட் தொகையில் பிற்படுத் தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர், ஆதி திராவிடர்கள் ஆகியோர் எத்தனை சதவீதம் உள்ளனர்?

(ஆ) முற்படுத்தப்பட்டோர் மொத்த மக்கட் தொகையில் எத்தனை சதவீதம் உள்ளனர்?

(இ) அவர்கள் எந்தெந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

(அ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 42.71 சதவீதமும், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 21.00 சதவீதமும், சீர் மரபினர் 3.44 சதவீதமும், ஆதி திராவிடர் 18.42 சதவீதமும், பழங்குடியினர் 1.11 சதவீதமும் உள்ளனர்.

(ஆ) முன்னேறிய வகுப்பினர் மொத்த மக்கட் தொகையில் 13.31 சதவீதம் உள்ளனர்.

(இ) முன்னேறிய வகுப்பினர் பட்டியல் தனியாக அரசால் பராமரிக்கப்படுவதில்லை என்பதால், அவர்கள் எந் தெந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விவரம் தற்போது அரசின் கைவசம் இல்லை.

349—

தமிழ்நாடு வக்ப் வாரிய நிர்வாகக் குழுத் தலைவர் மீது தகுந்த நடவடிக்கை எடுத்தல்.

வினா எண் 3533—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு வக்ப் வாரிய நிர்வாகக் குழுத் தலைவர் மீது புகார்கள் வந்துள்ளனவா?

(ஆ) அப்புகார்கள் மீது அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து நிருவாகக் குழு திருத்தி அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வக்ப் வாரிய நிருவாகக் குழுத் தலைவர் மீது புகார்கள் வந்துள்ளதைத் தொடர்ந்து, பொது நலன் கருதி, தமிழ்நாடு வக்ப் வாரியத்தின் நிருவாகத்தை சீரமைப்பதற்காக தமிழ்நாடு வக்ப் வாரியத்தை கலைத்து, தனி அலுவலரை ஓராண்டு காலத்திற்கு நியமனம் செய்வதற்கு வகை செய்வதற்காக 1991-ம் ஆண்டு தமிழ்நாடு வக்ப் வாரியம் (தனி அலுவலர் நியமனம்) சட்டம் 4—10—1991 அன்று சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 6-3-1992-ல் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, 16—3—1992 நாளிட்ட அரசு சிறப்பிதழ் மூலம் தமிழ்நாடு வக்ப் வாரியத்தைக் கலைப்பதற்கான அறிவிக்கை வெளியிட்டு 19—3—1992 முதல் தனி அலுவலர் தமிழ்நாடு வக்ப் வாரியத்தை நிருவகித்து வருகிறார். அவரது பதவிக்காலம் முடிந்த பின் நிர்வாகக் குழு மாற்றியமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

350—

## 'சேகோ சர்வ்' நிறுவனத்திற்கு ஆலோசனைக் குழு அமைத்தல்.

வினா எண் 6099—திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டத்தில், 'சேகோ சர்வ்' நிர்வாகம் சீர் குலைந்திருப்பதால் பல கோடிக்கணக்கான ரூபாய் வரவு-செலவு உள்ள இந்நிறுவனத்திற்கு ஆலோசனைக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:



தனி அதிகாரி நியமிக்கும் அவசரச் சட்டத்தின்படி சேலம் மாவட்டத்தில் உள்ள சேகோ சர்வ் நிறுவனத்திற்கு ஆலோசனைக் குழு அமைக்க அனுமதி இல்லை. மேலும் சேகோ சர்வ் நிறுவனம் லாபகரமாகவும் திருப்திகரமாகவும் நடைபெறுகிறது. ஆகவே அதற்கு ஆலோசனைக் குழு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

351—

## தனியார் ஆக்கிரமிப்பை அகற்றல்.

வினா எண் 8379—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆலங்குடிதொகுதி, பொன்னன்விடுதி வட்டத்தில் உள்ள வெட்டன் விடுதி வெட்டன்குளத்தை சுற்றியுள்ள இடத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்ததை அரசு கண்டறிந்து அந்த இடத்தை குளத்துடன் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, கணக்கன்காடு கிராமம், வெட்டன் விடுதியைச் சேர்ந்த வெட்டன்குளத்தை சுற்றியுள்ள இடங்களிலோ அல்லது குளத்திலோ தனியார்கள் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை.

352—

## அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிட வசதி.

வினா எண் 8577—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் ஒன்றியம், ஆலங்குளத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் அரசின் நிதிநிலைக்கு ஏற்ப, பள்ளிகளுக்கு கூடுதல் தகுதி முன்னுரிமையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்போது இப்பள்ளிக்கும் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

353—

## முழுப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்.

வினா எண் 9917—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாநிலத்தில் பல இடங்களில், போதிக்கும் ஆசிரியர்கள் முழுப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

354—

## போலி மருத்துவமனை.

வினா எண் 1303—டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போலி மருத்துவமனைகள் சென்னையில் இயங்குவது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.



355—

## சிகிச்சை.

வினா எண் 1334—டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களை நல்வழிப்படுத்த மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கும் (De-addiction) சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் தற்போதுள்ள படுக்கையின் எண்ணிக்கையில் குடி மற்றும் போதை மருந்து பழக்கத்திற்கு அடிமையான நோயாளிகளைக் குணப்படுத்தவும், உள்ளிருப்பு சிகிச்சை அளிக்கும் பொருட்டும் முயற்சி மேற்கொள்வதற்கு ஏதுவாக ஐந்து படுக்கைகள் ஒதுக்க வேண்டும் என்று அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

356—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 3495—திரு. டி.எம்.ரங்கராஜன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை குடிசைப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில், அக்குடிசைகளுக்கு அருகாமையில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

சென்னை குடிசைப்பகுதிகளுக்கு அருகாமையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை. எனினும் இந்தியமக்கட் தொகைத் திட்டத்தின் கீழ் சென்னைப் பகுதியில் மக்கள் தொகைக்குத் தேவையான 134 சுகாதார நிலையங்கள் துவக்கப் பட்டுள்ளன.

357—

**ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்கல்.**

வினா எண் 3761—திரு. எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வானூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்ற நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு மாற்றி அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வானூரில் இயங்கி வந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகம் 1-4-1990 முதல் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டது. தற்போது அது வட்ட மருத்துவமனையாக (Taluk Hospital) மாற்றப்பட்டுள்ளது.

358—

வினா எண் 3890—திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆத்தூர் (திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்) தொகுதியிலுள்ள சின்னாளப்பட்டியில் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாக மாற்ற அரசு முன்னுரிமை அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) ஆத்தூர் (திண்டுக்கல்—அண்ணா மாவட்டம்) சின்னாளப்பட்டி சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்ற சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



359—

**சமுதாய நல நிலையங்கள்.**

வினா எண். 4305—திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள பிராகுப்
பம், அம்மையார்குப்பம் மற்றும் பொதட்டூர் ஆகிய இடங்களில்
இயங்கி வரும் ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளை சமுதாய
நல நிலையங்களாக (Community Health Centre)
மேம்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள பிராகுப்பம்
அம்மையார்குப்பம் மற்றும் பொதட்டூர் ஆகிய இடங்களில்
இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களை சமுதாய நல
நிலையங்களாக (Community Health Centre) மேம்படுத்
தும் திட்டம் அரசிடம் தற்போது பரிசீலனையில் இல்லை.

360—

**தனியார் மருத்துவர் வேண்டுகிற சோதனைகளை அரசு மருத்துவமனைகளில் செய்தல்.**

வினா எண். 5339—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு மருத்துவமனைகளில் தனியார் மருத்துவர்கள் வேண்டு
கிற சோதனைகள் (X-Ray, Blood Test, Scan) கட்டணம் பெற்
றுக்கொண்டு செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு மருத்துவ கவனிப்பு விதி எண். 42 (அ) வின் படி
தனியார் மருத்துவர்கள் வேண்டுகிற ஆய்வக பரிசோதனைகளை
மட்டுமே (Pathological, Bacteriological and Bio Chemical work
உரிய கட்டணம் பெற்றுக் கொண்டு செய்துதர ஆணைகள் உள்
ளன. ஊடுகதிர் படமெடுத்தல் மற்றும் ஸ்கேன் ( Scan ) பரி

சோதனைகளை கட்டணம் பெற்றுக் கொண்டு செய்து தர ஆணைகள் இல்லை.

**361—**

ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துதல்.

வினா எண். 6496—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெட்டவயலில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ரெட்டவயலில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**362—**

ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாக்கல்.

வினா எண். 7399—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.



**363—**

பல் மருத்துவர் பற்றாக்குறையைப் போக்குதல்.

வினா எண். 8498—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் பல் மருத்துவர்கள் பற்றாக்குறையைப் போக்க அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கையின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு பல் மருத்துவக் கழகத்தின் தகவல்களின்படி தமிழ்நாட்டில் பகுதி 'ஏ' வாக பதிவு பெற்ற பல் மருத்துவர்கள் 1375 பேரும், பகுதி 'பி' வாக பதிவு பெற்ற பல் மருத்துவர்கள் 372 பேரும் உள்ளனர். இதன்படி பல் மருத்துவர், பொதுமக்கள் விகிதாச்சாரம் 1 : 30,500 என உள்ளது. தற்போது தமிழ்நாட்டில் டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் அனுமதி பெற்று நடைபெறும் அரசு மற்றும் தனியார் பல் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் அனுமதி வருடத்திற்கு மொத்தம் 385 ஆகும். எனவே, ஒவ்வொரு வருடமும் சற்றேறக்குறைய இதே அளவு பல் மருத்துவர்கள் பட்டம் பெற்று முடிக்கும் வாய்ப்பு உள்ளது.

மேலும் சென்னை பல் மருத்துவக் கல்லூரியில் பி.டி.எஸ். பட்டப் படிப்பிற்கான 45 இடங்கள் 60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, இப்போதைய ஏற்பாடுகளின்படி வெளிவரும் பல் மருத்துவர்களின் எண்ணிக்கையின் காரணமாக மாநிலத்தில் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பிருக்காது.

**364—**

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து

வினா எண். 2093—திரு சி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டையில் இருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சொகுசுப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு நாள்தோறும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினால் காலை 9.00 மற்றும் 10.00 மணி, இரவு 8.30 மற்றும் 9.00 மணி ஆகிய நேரங்களில் நான்கு செமி டீலக்ஸ் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பயணிகளின் விகிதாச்சாரத்தை கணக்கில் கொண்டு பார்க்கும் பொழுது இவ்வழித்தடத்தில் சொகுசுப் பேருந்துகள் இயக்குவது பொருளாதார அடிப்படையில் உகந்தது அல்ல என்று கருதப்படுகிறது.

365—

## கைத்தறி நெசவாளர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு.

வினா எண் 7736—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண, கருத்துரு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) குறிப்பிட்ட பிரச்சினைப்பற்றி வினா கொடுக்கப்பட்டால், விவரங்கள் தெரிவிக்கப்படும்.

366—

## சாலை செப்பனிடல்.

வினா எண் 2935—திரு. இரா. தங்கராசு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

செந்துறை-காடூர், செந்துறை-குழுமூர் ரயில்வே மேம்பாலத்தின் கீழ் செல்கின்ற சாலைகளை செப்பனிட்டு தர அரசு முன்வருமா ?





விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு சாலைகளில் இரயில்வே மேம்பாலம் ஏதும் இல்லை. இச்சாலைகளில் நவம்பர் 1991-ல் பெய்த பெருமழையினால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் நொடிகள் மட்டும் வெள்ள நிவாரண நிதியில் சீர் செய்யப்பட்டன. இச்சாலைகளில் முழுப் பகுதிகளையும் புதுப்பிக்கும் பணிகள் பரிசிலனையில் உள்ளன.

367—

## பாலம் கட்டுதல்.

வினா எண் 3127—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி தொகுதியில் தோவாளை ஊராட்சி ஒன்றியம், வீரநாராயணமங்கலம் பாலம் பழுதடைந்து போக்குவரத்து பாதிக்கப்படுவதால் பாலத்தை உடனடியாகக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் பொதுப்பணித் துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலப்பணி தற்போது நடைபெற்று வருகிறது.

368—

## பாதை செப்பனிடல்

வினா எண். 3773—செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்தின்கீழ் காரமடையிலிருந்து கோபனாரி என்ற மலைவாழ் மக்கள் வாழும் பகுதிக்கு பாதை செப்பனிடும் பணியின் தற்போதைய நிலை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

இப்பணி அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை.

[1992 செப்டம்பர் 25

369—

## தார் சாலையாக்கல்.

வினா எண் 5253—திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா. பழூர் ஒன்றியத்திலுள்ள ஸ்ரீபுரந்தான்—காசாங்கோட்டை சாலை, கார்குடி காசாங்கோட்டை சாலை தார்ச்சாலையாக அமைக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்ரீபுரந்தான் சாலை தமிழ்நாடு வேளாண்மை விற்பனைக் கூட திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்ய சேர்க்கப்பட்டுள்ளது.

தா. பழூர் விளாங்குடி சாலை முதல் காசாங்கோட்டை வரை (வழி) கார்குடி சாலையானது, வேளாண் விற்பனைக்கூட திட்டத்தில் மேம்பாடு செய்ய சேர்க்கப்பட்டு, மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

370—

## மேம்பாலம் கட்டுதல்.

வினா எண் 5391—திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், உத்தமர் கோயில் ரயில்கேட்டில் போக்குவரத்து இடையூறை தவிர்க்கும் பொருட்டு அங்கு மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மேம்பாலபணி குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



1992 செப்டம்பர் 25]

371—

## சாலை செப்பனிடல்.

வினா எண் 2759—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாக்குடியில் ஆதி திராவிடர் தெருவிற்குச் செல்லும் சாலையை செப்பனிட்டு கப்பிப் போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கோட்டாக்குடியில் ஆதி திராவிடர் தெருவிற்குச் செல்லும் சாலையை செப்பனிட்டு கப்பி போட்டுத்தர நிதிநிலைப் பற்றாக்குறையின் காரணமாக தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

372—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண் 4116—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அருள்மொழித்தேவன் கிராமத்திலுள்ள குடிநீர் பிரச்சினையைப் போக்கிட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அருள்மொழித்தேவன் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு [ஊராட்சி வசம் ஒப்படைக்கப்

பட்டு, டேனிடா திட்டத்தின்கீழ் பைப் லைன் விஸ்தரிப்பு வேலை நடப்பு நிதியாண்டில் முடிக்கப்பட்டு மக்களின் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

373—

## பாதை அமைத்தல்.

வினா எண் 4569—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, பைத்தூர் கல்லுக்கட்டு வரை செல்லும் ஆற்றோடைக்கு அருகில் பாதை அமைக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, பைத்தூர் கல்லுக்கட்டு வரை செல்லும் ஆற்றோடைக்கு அருகில் பாதை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதும் அரசிடம் இல்லை.

374—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 4988—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மூங்கில்துறைப்பட்டு அருகில் பெண்ணாற்றில் கிணறு வெட்டி, மூங்கில் துறைப்பட்டு, பொரக்கப்பட்டு, பொறுவனூர் வடகீரனூர், வடபொன்பரப்பி ஆகிய ஊர்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :





(அ) மற்றும் (ஆ) ஆம். பெண்ணையாற்றை நீராதாரமாகக் கொண்டு மூங்கில் துறைப்பட்டு மற்றும் 22 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மூங்கில் துறைப்பட்டு பொரக்கப்பட்டு, பொறுவனூர், வடகீரனூர், வட பொன் பரப்பி ஆகிய குடியிருப்புகள் சேர்க்கப்பட்டு திட்டம் ஆய்வில் உள்ளது.

600 008.

375—

## நீர்மூழ்கி மோட்டார் அமைத்தல்.

வினா எண். 6493—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம், ஒன்றியம் இரண்டாம் புளிக்காட்டிஉள்ள மேல்நிலை நீர்ததேக்கத் தொட்டியிஉள்ள மின்மோட்டரை மாற்றி நீர்மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம்புளிக்காட்டி உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து மின் மோட்டாரை மாற்றி நீர்மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

376—

## குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை.

வினா எண். 6689—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள சின்னக் குப்பம் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சின்னக்குப்பம், பெரியகுப்பம் கூட்டுத் குடிநீர்த் திட்டம், இவ்வாண்டு (1992) நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனில் உள்ளது. எனவே, குடிநீர்ப் பிரச்சினை தற்போது இல்லை.

377—

வினா எண். 6716 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புளிக்காடு, ஊராட்சி நாணத்திடலுக்கு புதிய குழாய்கள் இணைத்து குடிதண்ணீர் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம்புளிக்காடு ஊராட்சி நாணத்திடலுக்கு கடலோரக் கிராமங்களில் மட்டும் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. புதிய குழாய்கள் அமைத்து குடிதண்ணீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

378—

வினா எண். 6743— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குண்ணாமரைக்காட்டில் வடக்குப் பகுதியில் ஒரு போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு , உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குண்ணாமரைக்காட்டில் வடக்குப் பகுதியில் ஒரு போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

379—

வினா எண். 6746— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம், ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி, குறவன்கொல்லைக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி, குறவன்கொல்லையில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

380—

வினா எண். 6828— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள ஆதிவராக நல்லூர்ப், பாரகன் தைக்கால், இராமநாதன்குப்பம் ஆகிய இடங்களில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் என்றால், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆதிவராகநல்லூர் குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் டானிடா திட்டத்தின்கீழ் விசைப்பம்பு அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும். பாரகன் தைய்கால் குடியிருப்பிற்கு வரும் நிதியாண்டில் டானிடா திட்டத்தின்கீழ் தாரா கைப்பம்புகள் பொருத்தப்படும். இராமநாதன்குப்பம் குடியிருப்பிற்கு வரும் நிதியாண்டில் டானிடா திட்டத்தின்கீழ் கைப்பம்புகள் பொருத்தப்படும்.

381—

வினா எண் 7064— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னக்கழனிவாசலில், அமைக்கப்பட்டுள்ள மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிக்கு மின் மோட்டார் உடன் இணைந்து பைப் லைன் விஸ்தரித்துக் கொடுத்து தண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னக் கழனிவாசலில் உள்ள மேல்நிலை குடிநீர்த் தொட்டிக்கு மின் மோட்டார் உடன் வைத்து பைப் லைன், விஸ்தரிப்புக் கொடுத்து தண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

382—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண். 7075— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குளக்குடி ஊராட்சியைச் சேர்ந்த பனங்குளத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குளக்குடி ஊராட்சியைச் சேர்ந்த பனங்குளத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

383—

வினா எண். 7078— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குளக்குடியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குளக்குடியில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

384—

வினா எண். 7101— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மணக்காடு ஊராட்சி பாங்கரான் கொல்லைக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மணக்காடு ஊராட்சி, பாங்கரான் கொல்லையில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

385— [1992 செப்டம்பர் 25

குடிநீர் வசதி செய்தல்.

வினா எண். 7265— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு சிறிய தெற்கு காட்டில் மேற்கு கடைசியில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு சிறிய தெற்கு காட்டிற்கு பெரிய தெற்கு காடு குடிநீர்த் திட்டத்திலிருந்து ஒரு குடிநீர் மேடை அமைக்கப்பட்டுள்ளது. மேற்கு கடைசியில் ஒரு போர்வெல் போட்டுக்கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

386—

வினா எண். 7513—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி வளையமாதேவி கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் , எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியத்தில் வளையமாதேவி என்ற ஒரு குடியிருப்பு இல்லை. ஆனால், மேல் வளையமாதேவி, கீழ் வளையமாதேவி மற்றும் கீழ் வளையமாதேவி காலனி ஆகிய குடியிருப்புகள் உள்ளன. இவை மூன்றும் பகுதி குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளாகும். இவை மூன்றிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.



1992 செப்டம்பர் 25]

387—

வினா எண். 7540—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனவாசல் கடைத் தெருவில், ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், புனவாசல் கடைத் தெரு பகுதிக்கு புனவாசல் தெற்கு மற்றும் மேற்கு குடிநீர்த் திட்டத்திலிருந்து 3 பொதுக்குழாய்கள் நிறுவப்பட்டுள்ளன. இதுவே இப்பகுதிக்கு போதுமானதாகும். ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

388—

வினா எண். 7541— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனவாசல் பிளாங்குடியிருப்பு மேற்குப் பகுதியில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், புனவாசல் பிளாங்குடியிருப்பு மேற்குப் பகுதியில் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நீர்த் தேக்கத் தொட்டியும், 3 பொதுக் குழாய்களும் உள்ளன. மேலும் ஒரு ஆழ்துளைக் கிணறு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒரு ஆழ்க்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

389—

வினா எண். 7843—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் குமாரமங்கலம் ஊராட்சியில் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் குமாரமங்கலம் விசைப் பம்பு குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட உள்ளது.

390—

வினா எண். 7846—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், நற்கந்தன்குடி கிராமத்திற்கு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நற்கந்தன்குடி கிராமத்திற்கு நடப்பு நிதி ஆண்டில் (1992–93) தாரா கையிறைப்பான்கள் இரண்டு பொருத்தப்பட்டு குடிநீர் வசதியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

391—

நியாயவிலைக் கடைகளில் முறைகேடுகளைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண். 4556—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) நியாயவிலைக் கடைகளில் நடைபெறும் முறைகேடுகளைத் தடுக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நியாயவிலைக் கடைகளில் பொதுவாக எடை குறைவு மற்றும் போலி பில்கள் மூலம் கட்டுப் பாட்டுப் பொருட்களை முறைகேடாக விற்பனை செய்வது போன்ற குறைபாடுகளைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது.

392—

முந்திரி தொழிற்சாலைகளில் சுகாதார வசதி.

வினா எண். 6416—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் முந்திரி தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நிர்வாகம் போதிய சுகாதார வசதி செய்யவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சுகாதார வசதி செய்ய என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) முந்திரி தொழிற்சாலைகளில் சுகாதார வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

393—

வேளாண்மைப் பல்கலைக்கழகம் துவக்கும் திட்டம்.

வினா எண். 8622 — திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பையூர் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய இடத்தை மையமாகக் கொண்ட புதிய வேளாண்மைப் பல்கலைக் கழகம் துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

394—

விவசாயிகளுக்குத்தெளிப்பான்கள் மற்றும் சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கல்.

வினா எண். 9154—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1990-91 ஆம் ஆண்டில் எத்தனை ஏழை விவசாயிகளுக்கு விசை நீர் தெளிப்பான்கள் மற்றும் சொட்டு நீர்ப்பாசன கருவிகள் வழங்கப்பட்டன ?

(ஆ) இக்கருவிகள் வழங்கியதில் அரசுக்கு எவ்வளவு செலவு ஏற்பட்டுள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைசசர் :

(அ) மற்றும் (ஆ) 1990-91 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் சொட்டு நீர்ப்பாசனத்துறை மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனத் துறை திட்டம் ஏதும் செயல்படுத்தப்படவில்லை. எனவே, விசைநீர்த் தெளிப்பான்கள் மற்றும் சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் எந்த விவசாயிக்கும் வழங்கப்படவில்லை. ஆகவே, அரசுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செலவு ஏதும் ஏற்படவில்லை.



395—

சமுதாய ஆழ்குழாய்க் கிணற்றை இயக்குதல்.

வினா எண். 9227—எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் வடக்கு கிராமத்தில் இருக்கும் சமுதாயக் கிணறு (விவசாயத்துறை) செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், சமுதாய ஆழ்குழாய்க் கிணறு செயல்படுத்த எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மின் அழுத்தம் 350 வோல்ட்டுக்கு குறைவாக இருந்ததால் சீராக இயங்காமல் இருந்த நீர்மூழ்கி இரைவை, இவ்வாண்டு ஏப்ரல் மாதம் ஸ்டெப் அப் டிரான்ஸ்பார்மர் வோல்டேஜ் பூஸ்டர் (Step Transfarmer Voltage Booster) பொருத்தப்பட்டதால் இப்போது சீராகஇயங்குகிறது.

396—

வீடுகட்டக்கடன் வழங்கல்.

வினா எண். 8051—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராம வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 1988-89 முதல் 1991-92-ல் அக்டோபர் முடிய நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியத்தில் எந்தெந்த கிராமங்களில் எத்தனை பேர்களுக்கு வீடு கட்டக் கடன் வழங்கப்பட்டுள்ளன ?

(ஆ) வழங்கப்பட்ட கடன்கள் மொத்தம் எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை :

1992 செப்டம்பர் 25]

(அ) நத்தம் வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலம் 1988-89 ஆம் ஆண்டு முதல் 1991-92 ஆம் ஆண்டு அக்டோபர் முடிய எந்தெந்த கிராமங்களில் எத்தனை பேர்களுக்கு வீடுகட்ட கடன்கள் வழங்கப்பட்டுள்ளன என்ற விவரங்கள் இணைப்பு 1-ல் தனியாக வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) வழங்கப்பட்ட கடன்கள் மொத்தம் எவ்வளவு என்ற விவர அறிக்கை இணைப்பு 2-ல் கீழே வைக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு-1.

நத்தம் வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தினால் 1988-89 முதல் 1991-92 வரை கிராமங்கள் வாரியாக கிராமப் புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை பின் வருமாறு :—

1988-89 இல் வழங்கப்பட்ட கடன்கள் :

| வரிசை எண். | கிராமத்தின் பெயர். | கடன்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | வேலாயுதம்பட்டி | 28 |
| 2. | சேர்வீடு | 18 |
| 3. | புன்னப்பட்டி | 19 |
| 4. | காசம்பட்டி | 15 |
| 5. | ரெட்டியப்பட்டி | 5 |
| 6. | ஏரக்காப்பட்டி | 10 |
| 7. | ஆவிச்சிப்பட்டி | 8 |
| 8. | பன்னியாமலை | 22 |
| 9. | பெரியூர்பட்டி | 12 |
| 10. | செந்துரை | 18 |
| 11. | கோமணாம்பட்டி | 11 |
| | மொத்தம் | 166 |



1992 செப்டம்பர் 25]

1989-90-இல் வழங்கப்பட்ட கடன்கள்:

| வரிசை எண், கிராமத்தின் பெயர். | கடன்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. கோட்டையூர் | 5 |
| 2. பாலப்ப நாயக்கன்பட்டி | 19 |
| 3. சாத்தாம்பாடி | 11 |
| 4. மதுக்காரம்பட்டி | 14 |
| 5. வினாம்பட்டி | 23 |
| 6. கோமணாம்பட்டி | 17 |
| 7. பி. தேத்தாம்பட்டி | 7 |
| 8. நடுவனூர் | 2 |
| 9. வேம்பரளி | 5 |
| 10. பெரியூர்பட்டி | 5 |
| 11. மல்லநாயக்கன்பட்டி | 4 |
| 12. கவரையப்பட்டி | 20 |
| 13. ரெங்கையசேர்வாரன்பட்டி | 1 |
| 14. களத்துப்பட்டி | 7 |
| 15. பூதகுடி | 10 |
| 16. சித்திரைக்கவுண்டம்பட்டி | 6 |
| 17. செந்துரை | 2 |
| 18. சேர்வீடு | 10 |
| 19. கோசுகுறிச்சி | 9 |
| 20. இடையாம்பட்டி | 11 |
| 21. ஊராளிப்பட்டி | 9 |

[1992 செப்டம்பர் 25

| வரிசை எண், கிராமத்தின் பெயர். (1) | கடன்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 22. மலையூர் | 12 |
| 23. முறையூர் | 14 |
| 24. ரெட்டியம்பட்டி | 10 |
| 25. சமுத்திராபட்டி | 9 |
| 26. உலுப்பகுடி | 7 |
| 27. புதுக்கோட்டை | 10 |
| 28. ப. புதூர் | 8 |
| மொத்தம் | 267 |

1990–91— இல் வழங்கப்பட்ட கடன்கள் :—

| வரிசை எண், கிராமத்தின் பெயர். (1) | கடன்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. அழகாபுரி | 7 |
| 2. ஆவிச்சிப்பட்டி | 15 |
| 3. உலுப்பகுடி | 2 |
| 4. பன்னியாமலை | 2 |
| 5. வேலாயுதம்பட்டி | 8 |
| 6. காசம்பட்டி | 3 |
| 7. எஸ். தேத்தாம்பட்டி | 18 |
| 8. மஞ்சநாயக்கன்பட்டி | 8 |
| 9. பண்ணூர்பட்டி | 5 |



1992 செப்டம்பர் 25]

| வரிசை எண்ணும், கிராமத்தின் பெயர். (1) | கடன்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 10. கம்பிளியப்பட்டி | 1 |
| 11. குரும்பபட்டி | 1 |
| 12. கோமணாம்பட்டி | 8 |
| 13. சின்னையம்பட்டி | 10 |
| 14. சிறுகுடி | 5 |
| 15. சமுத்திராபட்டி | 2 |
| 16. நல்லூர் | 4 |
| 17. பூசாரிப்பட்டி | 19 |
| 18. ஒதுக்கப்பட்டி | 2 |
| 19. லிங்கவாடி | 31 |
| 20. கருத்தலக்கம்பட்டி | 4 |
| 21. சேர்வீடு | 11 |
| 22. செந்துரை | 1 |
| 23. வத்திப்பட்டி | 1 |
| 24. ஊராளிப்பட்டி | 17 |
| 25. மதுக்காரம்பட்டி | 3 |
| 26. அரவங்குறிச்சி | 1 |
| 27. சொறிப்பாறைபட்டி | 25 |
| 28. வேப்பம்பட்டி | 7 |
| 29. கோட்டைப்பட்டி | 5 |
| 30. பி. நத்தம் | 6 |

| வரிசை எண், கிராமத்தின் பெயர். | கடன்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 31. ஏரக்காப்பட்டி .. .. .. .. | 4 |
| 32. திருநாத்துப்பட்டி .. .. .. .. | 10 |
| 33. சேத்தூர் .. .. .. .. | 7 |
| .. மொத்தம் | 250 |

1991-92ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட கடன்கள் :

| | |
|---|---|
| 1. லிங்கவாடி .. .. .. .. | 25 |
| 2. லிங்கவாடி மலையூர் .. .. .. | 5 |
| 3. சேர்வீடு .. .. .. .. | 25 |
| 4. சிறுகுடி .. .. .. .. | 14 |
| 5. ஒடுகம்பட்டி .. .. .. .. .. | 3 |
| 6. பூசாரிப்பட்டி .. .. .. .. | 3 |
| 7. நல்லக்கண்டம் .. .. .. .. | 4 |
| 8. பெரியூர்பட்டி .. .. .. .. | 6 |
| 9. எஸ். குளும்பாப்பட்டி .. .. .. | 10 |
| 10. ஒந்துறை .. .. .. .. | 9 |
| 11. ஓங்குளம் களத்துப்பட்டி .. .. .. | 9 |
| 12. நடுவானூர் .. .. .. .. | 3 |
| 13. என். புதுப்பட்டி .. .. .. .. | 21 |
| 14. அலிச்சிப்பட்டி .. .. .. .. | 10 |
| 15. ஊராளிப்பட்டி .. .. .. .. | 20 |
| 16. பெரியமுல்லையூர் .. .. .. | 20 |
| 17. கரியூர் .. .. .. .. | 7 |



| வரிசை எண் கிராமத்தின் பெயர். | கடன்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 18. உலுப்பக்குடி .. .. .. .. | 15 |
| 19. கோமணம்பட்டி .. .. .. .. | 12 |
| 20. கேசம்பட்டி .. .. .. .. | 6 |
| 21. பாலப்பநாயக்கன்பட்டி .. .. .. | 5 |
| 22. ஒரிப்பாறைப்பட்டி .. .. .. | 5 |
| 23. சமுத்திராப்பட்டி .. .. .. | 4 |
| 24. மாம்பட்டி .. .. .. .. | 9 |
| மொத்தம் .. | 250 |

1991-92 ஆம் ஆண்டுக்கென 250 கடன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. மேற்படி கடன்கள் அட்கோ நிறுவனம் நிதி வழங்கியவுடன் 1991-92-க்கான கடன்கள் பட்டுவாடா செய்யப்படும்.

இணைப்பு-2.

1988-89 ஆம் ஆண்டு முதல் 1990-91 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட கடன்கள் மொத்தம் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும் ஆண்டும். | கடன்களின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| 1. 1988–89 .. | 166 | 9,96,000 |
| 2. 1989–90 .. | 267 | 15,60,000 |
| 3. 1990–91 .. | 250 | 20,96,500 |
| மொத்தம் .. | 683 | 46,52,500 |

1991–92 ஆம் ஆண்டு 250 கடன்கள் அனுமதிக்கப்பட்டு ரூ. 21,25,000 நிதி அட்கோ நிறுவன நிதி உதவி கிடைக்கப் பெற்றதும் வழங்கப்படும்.

[1992 செப்டம்பர் 25

397—

## முதியோருக்கு இலவச வேட்டி சேலை வழங்கல்.

வினா எண். 5696—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஓய்வூதியம் பெறும் வயது முதிர்ந்தோருக்கு 1988-89, 1989-90 ஆகிய ஆண்டுகளில் குறிப்பிட்ட சில நாளில் அரசு இலவச வேட்டி, சேலை வழங்கியதால் ஏற்பட்ட செலவு எவ்வளவு?

(ஆ) இலவச வேட்டி, சேலை அவ்விரு ஆண்டுகளிலும் பெற்ற ஓய்வூதியம் பெறும் முதியோர் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இலவச வேட்டி, சேலை பெற்றுக்கொள்ள அரசு டோக்கன்கள் வழங்கியும் வேட்டி, சேலை சில பகுதியில் உள்ளவர்களுக்கு வழங்கப்படாமல் இருப்பதாக அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளனவா?

(ஈ) ஆம் எனில், அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) 1988–89 மற்றும் 1989–90 ஆண்டுகளில் செலவு முறையே ரூ. 1,74,95,000, ரூ. 2,14,63,000 ஆகும்.

(ஆ) 1988-89ல் 2,42,544 முதியோர்களும், 1989–90-ல் 3,92,597 முதியோர்களும் பெற்றுள்ளனர்.

(இ) மற்றும் (ஈ) முறையீடு ஏதும் இத்துறை பெறப்பட்டதாக தகவல் இல்லை. அப்படி முறையீடு ஏதேனும் வருமானால் இது குறித்து ஆவன செய்யப்படும்.

398—

## கோழி வளர்ப்புக்காக நிதியுதவி.

வினா எண்.7708—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



1992 செப்டம்பர் 25]

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கோழி வளர்ப்புக்காக தனியார்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு.எம். ஆனந்தன், ஆதித்திராவிட நலத் துறை அமைச்சர் :

(அ) கோழிகள் வளர்க்க கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மட்டுமே கூட்டுறவு சங்கங்கள் உதவி செய்ய இயலும். தனியாருக்கு கூட்டுறவு சங்க உதவி கிடைக்க வழியில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

399—

## நில அளவைத் துறையில் சமவேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் ஊதியம் வழங்கல்.

வினா எண். 7475—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சம வேலைக்கு சம ஊதியம் என உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு இருந்தும் நில அளவைத் துறையில் மட்டும் ஒரே பணிக்கு சில பணியாளர்களுக்கு காலமுறை ஊதியமும் சிலருக்கு தொகுப்பூதியமும் வழங்கப்படும் முரண்பாடுகளை களைய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

சமவேலைக்கு சம ஊதியம் என உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு இருந்தும் நில அளவைத் துறையில் பணிபுரியும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கும் காலமுறை ஏற்ற ஊதியம் பெறும் பணியாளர்களுக்கும் ஊதிய முரண்பாடுகள் இருக்கின்றன.

2. நில அளவை மேம்பாட்டுத் திட்டப் பணிக்காக ஒப்பந்த அடிப்படையில் இரண்டு ஆண்டு காலத்திற்கு என்ற அடிப்படையில் தொகுப்பூதிய பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இரண்டு ஆண்டு காலம் முடிந்த நிலையில், தொகுப்பூதிய பணியாளர்களை பணியிலிருந்து விடுவிக்காமல், மனிதாபிமான அடிப்படையில் தொடர்ந்து தொகுப்பூதியத்தில் பணி

புரிய அனுமதிக்கப்பட்டனர். தொகுப்பூதியத்தில் பணிபுரியும் நபர்களுக்கு நில அளவைத் துறையிலேயே ஊதிய ஏற்றமுறை பணியிடம் வழங்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு இதுவரையில் சுமார் 3,000 நபர்களின் பணியினை வரன்முறைப்படுத்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. தொகுப்பூதியத்தில் பணிபுரியும் நபர்கள் அனைவரையும் நில அளவைத் துறையிலேயே ஈர்த்துக் கொள்வது என்பது இயலாதது என்று கருதிய அரசு, பிறதுறைகளில் ஏற்படும் ஊதிய ஏற்றமுறை பணியிடத்தில் இதுவரை 656 நபர்கள் பல்வேறு துறைகளில் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

**400—**

மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் தினசரி குறிப்பிட்ட சில மணிநேரம் தங்கள் அலுவலகத்திலிருந்து பணியாற்றல்.

வினா எண் 9732—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாசில்தார் மற்றும் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் தினசரி குறிப்பிட்ட சில மணிநேரம் தங்கள் பணி அலுவலகத்தில் இருந்து பணியாற்ற வேண்டியதன் அவசியம் பற்றி அரசு பரிசீலிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

வாரத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் வட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகளான மாவட்டாட்சித்தலைவர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், வருவாய்க் கோட்டாட்சித் தலைவர்கள் போன்றவர்கள் தங்களுடைய அலுவலகங்களில் அமர்ந்து பொது மக்களின் குறைகளைக் கேட்டறிகிறார்கள். வாரத்தின் பிற நாட்களில் தேவைப்படும் போதெல்லாம் அலுவலர்கள் விசாரணை மற்றும் புலத் தணிக்கை செய்யும் பொருட்டும், தமக்கு கீழ் உள்ள அலுவலகங்களைப் பார்வையிடுவதற்கும், முக்கியப் பிரமுகர்களை வரவேற்கவும் செல்கின்றார்கள். தங்களுடைய அலுவலகப் பணிகளோடு அலுவலகத்திற்கு வெளியே சென்று ஆற்றவேண்டிய பல பணிகளும் அவர்களுக்கிருக்கிறது. எனவே அவர்கள் வெளியில் பணியாற்ற செல்லும் நேரம் தவிர ஏனைய நேரங்களிலெல்லாம் அலுவலகங்களில் அமர்ந்தே பணியாற்றுகிறார்கள்.





**401—**

திருவட்டார் தொகுதியில் மலையாள மொழியைப் பயிற்றுவிக்க போதிய ஆசிரியர்கள் நியமித்தல்.

வினா எண் 25—திரு இரா. நடேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவட்டார் தொகுதி தேவஸ்வம்போர்டு பள்ளி உள்பட பல பள்ளிகளில் மலையாள மொழியை தாய்மொழியாகக் கொண்ட மாணவ மாணவியர்களுக்கு அம்மொழியைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் போதிய அளவில் இல்லாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) போதிய அளவில் உள்ளனர்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**402—**

ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி.

வினா எண். 1349—திரு வே. பெரியசாமி : மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அந்தியூர் தொகுதியில், அத்தாணி பேரூராட்சிக்கு உட்பட்ட பெருமாபாளையம், நஞ்சுண்டாபுரம், கீழ்வாணிக்கு அருகிலுள்ள இந்திராநகர் ஆகிய ஆதிதிராவிடர் காலனிகளில் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியைத் திறக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

பெருமாள் கோயில் புதூர் நஞ்சுண்டாபுரம், இந்திராநகர் ஆகிய மூன்று கிராமங்களிலும் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகள் அரம்பிப்பது குறித்து கருத்துருக்கள் ஏதும் இல்லை.

1992 செப்டம்பர் 25

403—

உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம்.

வினா எண். 1622—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி தொகுதி மஞ்சூர் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

404—

அரசு விளையாட்டுத்திடல் அமைத்தல்.

வினா எண். 2262—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் அரசு விளையாட்டுத் திடல் அமைக்கும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இல்லை.

405—

உயர்நிலைப்பள்ளிக்கு விளையாட்டு மைதானம்.

வினா எண். 211—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி தொகுதி எமனேஸ்வரத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ரெவின்யூ புறம்போக்கில் உள்ள 6 ஏக்கர் இடம் விளையாட்டு மைதானத்திற்கு வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ரெவின்யூ புறம்போக்கில் உள்ள 6.08 ஏக்கர் நிலத்தை கல்வித் துறைக்கு மாற்றுவதற்கான கருத்துரு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

406—

மாவட்ட மைய நூலகத்திற்கு கட்டிடம்.

வினா எண். 3121—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட மைய நூலகத்தில் கவிமணி நிலையம் போதிய இடவசதி இல்லாமையால் புதிய கட்டிடம் கட்டி நூல்களை அடுக்கி வைப்பதற்கும் நூலகத்தை மாற்றியமைப்பதற்கும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்ட மைய நூலகத்திற்கு புதியக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

407—

மொடக்குறிச்சியில் பெண்கள் கலைக்கல்லூரி.

வினா எண். 3358—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மொடக்குறிச்சியில் பெண்கள் கல்லூரி ஒன்றை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

408—

## உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்குதல்.

வினா எண். 4469—திரு. சி. தாமோதரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நடுவீரப்பட்டு கிராமத்தில் இயங்கும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்திட பொதுமக்கள் பங்குப்பணம் செலுத்தியும், இன்னும் செயல்படுத்தப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு உடனடியாக அனுமதி வழங்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) தென்னாற்காடு மாவட்டம், நடுவீரப்பட்டு அரசு உயர்நிலைப்பள்ளி அரசாணை (நிலை) எண் 921, கல்வி, நாள் 23-9-1992-ன்படி மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டு உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

409—

## உடுமலை அரசு கலைக்கல்லூரி.

வினா எண். 4779—திரு. கே. பி. மணிவாசகம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உடுமலை அரசு கலைக் கல்லூரியில் எம். ஏ., (தமிழ்), எம். ஏ., (ஆங்கிலம் இலக்கியம்), பி. எஸ்ஸி., (கம்ப்யூட்டர் சயின்ஸ்) ஆகிய வகுப்புகள் அடுத்த கல்வி ஆண்டில் துவங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



410—

## உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்குதல்.

வினா எண் 4793—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், வெட்டண் விடுதியில் தற்போது இயங்கி வரும் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இல்லை.

411—

## உயர்நிலைப்பள்ளிகள் துவங்க அனுமதிக்கப்பட்ட பள்ளிகள்.

வினா எண் 5503—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 3 ஆண்டுகளில் அரசு மற்றும் தனியார் துறையின் கீழ் துவங்க அனுமதிக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிகள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இவற்றில் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் துவங்க அனுமதிக்கப்பட்டவை விவரம் என்ன?

(இ) அவற்றில் சொந்தக் கட்டிடத்தில் இயங்க புதிதாக கட்டிடம் கட்ட எத்தனை பள்ளிகளுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டன?

(ஈ) அந்த நிதி உதவி கொண்டு சொந்த கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டனவா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் (1989-90 முதல் 1991-92) துவக்கப்பட்ட அரசு உயர்நிலைப்பள்ளிகள் 200, தனியார் உயர்நிலைப்பள்ளிகள் 63, ஆக மொத்தம் 263.

(ஆ) இவற்றில் திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் துவங்க அனுமதிக்கப்பட்ட அரசுப் பள்ளிகள் 6, தனியார் 6, ஆக மொத்தம் 12.

(இ) திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் 1986-87 முதல் 1990-91 வரை மொத்தம் 15 அரசு உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளுக்கு புதிய கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) ஆம். கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

412—

உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை.

வினா எண். 5748—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேதாரண்யம் தொகுதி, கரியாப்பட்டினம் அரசு மேல் நிலைப் பள்ளி மற்றும் உம்பளச்சேரி உயர்நிலைப் பள்ளிகளில் நிரந்தர கட்டடங்கள் மற்றும் விஞ்ஞான சோதனைக் கூடம் இல்லாமல் கூரைக் கட்டடத்தில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கட்டடம் கட்ட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நிதி நிலைமைக்கு ஏற்ப கட்டடங்கள் கட்ட முயற்சி மேற்கொள்ளப்படும்.

413—

பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம்.

வினா எண் 6387—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) புதுக்கோட்டை தொகுதியில் கந்தர்வகோட்டையில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குரிய கட்டிடத்தில் கட்டிட வசதி இல்லாமல் பெண்கள் உயர்நிலைப் பள்ளி இணைந்து செயல்படுவது அரசுக்குத் தெரியுமா?





(ஆ) ஆம் எனில், பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு தனியாக எப்போது கட்டிடங்கள் கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இப்பள்ளிக்கு சொந்த நிலமில்லாததால் சொந்த கட்டிட வசதி இல்லை. இருப்பினும் வரும் நிதியாண்டுகளின் ஒதுக்கீடுகளில், தகுந்த கட்டட வசதிகளை ஏற்படுத்தித்தர இப்பள்ளி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

414—

மாவட்ட மைய நூலகங்களில் வீடியோ மூலம் கல்வி பற்றிய நிகழ்ச்சிகள் காட்டுதல்.

வினா எண் 7707—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) எந்தெந்த மாவட்ட மைய நூலகங்களில் கல்வி பற்றிய நிகழ்ச்சிகள் வீடியோ மூலம் காட்டும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது?

(ஆ) இத்திட்டம் ஊராட்சி ஒன்றிய மைய நூலகங்களுக்கும் விரிவாக்கம் செய்ய அரசு முன்வருமா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) தமிழகத்திலுள்ள 22 மாவட்டங்களில், மாவட்ட மையநூலகம் செயல்படும் 21 மாவட்டங்களில் கல்வி பற்றிய நிகழ்ச்சிகள் வீடியோ மூலம் காட்டும் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. கடைசியாக பிரிந்த காயிதே மில்லத் மாவட் டத்திற்கு மாவட்ட மைய நூலகம் ஏற்படுத்தப்பட்டவுடன் இத்திட்டம் அம்மாவட்டத்திற்கும் விரிவு செய்யப்படும்.

(ஆ) மற்றும் (இ) மைய ஊராட்சி ஒன்றிய நூலகங்களில் மேற்காணும் திட்டத்தை விரிவாக்கம் செய்ய இராஜாராம் மோகன் ராய் அறக்கட்டளையினரிடமிருந்து நிதி உதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நிதி உதவி பெற்றபின் படிப்படியாக இத்திட்டம் ஊராட்சி மைய நூலகங்களுக்கும் விரிவாக்கம் செய்யப்படும்.

[1992 செப்டம்பர் 25

415—

வட்டார அளவு விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு ஒதுக்கப்படும் தொகையை உயர்த்தல்.

வினா எண் 7976—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வட்டார அளவு விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு ஒரு வட்டாரத்திற்கு 1982லிருந்து ரூ. 250 தான் ஒதுக்கப்பட்டுள்ளதை ரூ. 500 ஆக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு அரசு ஒன்றியத்திற்கும் ரூ. 250 வழங்கப்படுகிறது. இந்தத் தொகை அந்த ஊரக ஒன்றிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்திட அரசு வகை செய்துள்ளது. இத்தொகையை உயர்த்தி வழங்கக்கோரி இது வரை எந்த பஞ்சாயத்து யூனியனிலிருந்தோ அல்லது மாவட்ட விளையாட்டுத் தலைவர்களிடமிருந்தோ கருத்துரு பெறப்பட வில்லை. எனவே இத்தொகையை தற்போது ரூ. 500 ஆக உயர்த்திட வேண்டிய நிலை எழவில்லை.

416—

ஐந்து வயதிற்கான சிறுவர் விளையாட்டுப் போட்டி.

வினா எண். 7979—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

5 வயதிற்கான சிறுவர் விளையாட்டு திறன் போட்டிக்கு ஒவ்வொரு நர்சரி பள்ளிக்கும் ரூ. 700 ஒதுக்கப்பட்டதை உயர்த்தவும். 8 வயது சிறுவர்கள் என்று மாற்றியதை மீண்டும் 5 வயது சிறுவர்கள் என்று மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

அவ்வாறான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.



1992 செப்டம்பர் 25

417—

மெட்டல் சாலை அமைத்தல்.

வினா எண் 387—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆலங்குளம் ஒன்றியம். மாறாந்தையிலிருந்து செட்டிகுறிச்சி செல்லும் சாலையை பழுது நீக்கி மெட்டல் போட்டுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மாறாந்தை—செட்டிக்குறிச்சி சாலை கி.மீ. %—2/2 (1991-92) ஆண்டு சிறப்பு உறுப்பு திட்டத்தின் கீழ் (Special Component Plan) மேம்பாடு செய்ய ஒப்புதல் பெறப்பட்டு சாலை மேம்பாட்டு பணி செயலாக்கத்தில் உள்ளது.

418—

வாணியாறு நீர்த்தேக்கத் திட்டம்.

வினா எண். 5155—திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி மாவட்டம், வாணியாறு நீர்த்தேக்கத் திட்டத்தை உயரப்படுத்தி, மொரப்பூர் ஒன்றியம் இராமியன அள்ளிப்பகுதிவரை கால்வாயை நீட்டித்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் பள்ளிக்கூடங்களுக்கு புதுக் கட்டிடங்கள் மற்றும் கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கு மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டிடங்களுக்கு சீர் செய்யும் பணிக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 18 புதிய அல்லது கூடுதல் பள்ளிக்கூட கட்டிடங்கள் கட்டுவதற்கு 1991-92 ஆம் ஆண்டில் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

423—

ஆரம்பப் பள்ளிக் கட்டிடம்.

வினா எண். 2117—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடி தொகுதி பார்த்திபனூரில் ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியம், பார்த்திபனூர் கிராமத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி வளாகத்தில் மூன்று கட்டிடங்களில் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது கல்வி கற்கும் குழந்தைகளுக்கு இது போதுமான இடமாகும். இனி வரும் ஆண்டுகளில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதல் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

424—

சாலை செப்பனிடுதல்.

வினா எண். 2416—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி போகலூர் ஒன்றியம் வைரவனேந்தல் கிராமத்திற்கு சாலையைச் செப்பனிட அரசுக்குப் பரிந்துரைகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?





விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வைரவனேந்தல் கிராமம் முதல் வீரவனூர் கிராமம் வரை உள்ள சாலையின் மொத்த நீளம் 1.60 கிலோ மீட்டராகும். இச்சாலை 1990-91 ஆண்டில் கருங்கல் கப்பி சாலையாக மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 2.64 லட்சம் மதிப்பீட்டில் இச்சாலையைத் தார்ச்சாலையாக அமைக்கும் பணி ஆரம்பிக்கும் நிலையில் உள்ளது.

425—

மராமத்து செய்தல்.

வினா எண் 2746—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பள்ளிகொண்டான் ஊராட்சியைச் சேர்ந்த செட்டிக்குளத்தை மராமத்து செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியத்திலும் பள்ளிகொண்டான் ஊராட்சியிலும் போதிய நிதி வசதியின்மையால் செட்டி குளத்தை மராமத்து செய்ய திட்டம் ஏதுமில்லை.

426—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண் 2788—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பிள்ளையார் திடலில் தனியாக தண்ணீர் சப்ளை செய்ய நவக்கொல்லையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து வெளிமடம், நாணதிடல் ஆகிய ஊர்களுக்கு குடிதண்ணீர் வழங்க அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

419—

<u>சாலையை சீர்படுத்துதல்.</u>

<u>வினா எண். 5309—திரு. த. ரத்தினவேல் :</u> மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி விமான நிலையம் எதிரில் உள்ள ஏயர்லெஸ் சாலை மிகவும் பழுதுபட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை சீர்ப்படுத்த அரசு முன்வருமா ?

விடை—

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :</u>

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்தது அல்ல. இச்சாலை திருச்சி விமான நிலைய பொறுப்பிலுள்ள சாலையாகும்.

420—

<u>கண்ணங்குளத்திலுள்ள குளம் மழைக் காலங்களில் உடைப்பு ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை.</u>

<u>வினா எண். 52—திருமதி ரமணி நல்லதம்பி :</u> மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ராதாபுரம் தொகுதி, கண்ணங்குளத்தில் உள்ள குளம் மழைக்காலத்தில் உடைப்பு எடுக்கும் அபாய நிலையில் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் என்ன ?

விடை—

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை அமைச்சர் :</u>

(அ) ஆம்.

(ஆ) ராதாபுரம் தொகுதி, வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட கண்ணங்குளம், கல நீர்ப்பாசன திட்டத்தில் 1991-92-ம் ஆண்டு ரூ. 5,000 மதிப்பீட்டில் மராமத்து செய்து முடிக்கப்பட்டுவிட்டது.



421—

<u>கப்பிச் சாலை அமைத்தல்.</u>

<u>வினா எண். 664—திரு. ஆர். சிங்காரம் :</u> மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், பருத்திச்சேரி ஊராட்சியில் உள்ள மண்சாலையை கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :</u>

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம் பருத்திச்சேரி ஊராட்சியில் உள்ள மொத்த மண் சாலைகளின் நீளம் 4.50 கி.மீ. ஆகும். ஆதி திராவிடர் தெரு, வடக்கு தெரு, கீழத்தெரு, அண்ணா நகர் ஆகிய நான்கு தெருக்களில் மொத்தம் 2.5 கி.மீ. தூரத்திற்கு மண்சாலைகள் 1990-91 ஆம் ஆண்டில் சிறப்பு கப்பிச்சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 1 கி.மீ. தூரமுள்ள வரையறுக்கப்படாத சாலை மற்றும் 1 கி.மீ. தூரமுள்ள ஊராட்சி சாலையை கப்பிச்சாலையாக மாற்ற நிதி பற்றாக்குறை காரணமாக இப்பணி நிறைவேற்றப்படவில்லை. இது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

422—

<u>பள்ளிக்கட்டிடங்கள் சீர் செய்தல்.</u>

<u>வினா எண். 1405—திரு. இரா. நடேசன் :</u> மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு கோடி நிதி ஒதுக்கும் திட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பள்ளிக் கட்டிடங்கள் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :</u>

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பிள்ளையார் திடல், நாணத்திடல், நவக்கொல்லை, வெளிமடம் ஆகிய கிராமங்களுக்கு கடலோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் குரூப் 1-ல் இருந்து பிள்ளையார் திடலில் உள்ள 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இது போதுமானதாகும். பிள்ளையார் திடலில் தனியாக தண்ணீர் விநியோகம் செய்ய நவக்கொல்லையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து வெளிமடம், நாணத்திடல் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வழங்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

427—

மூன்றாம் நிலை தரத்திலுள்ள நகர்மன்றங்க .

வினா எண் 3425—திரு. அ. சுப்புரத்தினம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது தமிழ்நாட்டில் மூன்றாம் நிலை தரத்தில் எத்தனை நகர் மன்றங்கள் உள்ளன ?

(ஆ) அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) 13 நகராட்சிகளும் ஒரு நகராட்சி நகரியமும் உள்ளது.

(ஆ) ஆம், ஓசூர் தேர்வு நிலை பேரூராட்சி 15—1—1992 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. திருத்துறைப்பூண்டி பேரூராட்சி 1—4—1992 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மேலும் 29 பேரூராட்சிகளை அவற்றின் வருமானத்திற்கேற்ப தகுந்தாற்போல் நகராட்சிகளாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



428—

குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை.

வினா எண் 3838—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி, திருமலாபுரம் பஞ்சாயத்து, ஓடக்காரன் குடியிருப்பில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ராதாபுரம் தொகுதி, திருமலாபுரம் ஊராட்சி, ஓடக்காரன் குடியிருப்பில் 1990—91-இல் கையிறைப்பான் ஒன்று போடப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது. மேற்கொண்டு திட்டங்கள் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

429—

குளத்தை ஆழப்படுத்துதல்.

வினா எண் 4047—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஆயிபுரம் காலனியில் அமைந்துள்ள குளத்தை ஆழப்படுத்தி படித்துறை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆயிபுரம் காலனியில் அமைந்துள்ள குளத்தை 1992–93-ம் ஆண்டில் மராமத்து செய்ய முன்னுரிமை வழங்கப்படும்.

430—

[1992 செப்டம்பர் 25

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நூலகங்கள்.

வினா எண் 4514—திருமதி. வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நூலகங்கள் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஏழுவகைப் பணிகள் செய்யப்படுகின்றன. நூலகங்கள் அமைப்பதற்கு அத்திட்டத்தில் வகை செய்யப்படவில்லை.

431—

குடிநீர் வசதி செய்தல்.

வினா எண் 4902—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில், ஆலங்குளம் ஒன்றியத்தில், கருப்பினாங்குளம் கிராமத்தில் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் ;

கருப்பினாங்குளம் கிராமத்திற்கு குடிநீர்ப் பற்றாக் குறையைப்போக்க அருகிலுள்ள நவநீதகிருஷ்ணபுரம் குடிநீர்த் திட்டத்தின் மூலம் இரண்டு பொதுக் குழாய்கள் அமைக்கப் பட்டன. இத்திட்டத்தின் நீராதாரம் (ஆழ்குழாய்) தூர்ந்து விட்டதால், புதிய நீராதாரம் தோற்றுவிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகிறது. புதிய நீராதாரம் தோற்றுவிக்கப்பட்ட வுடன் கருப்பினாங்குளத்திலுள்ள பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படும்.



1992 செப்டம்பர் 25]

432—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண் 6181—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர்—அத்திமூர் பகுதிக்கு (திண்டிவனம் ஊராட்சியில்) ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, திண்டிவனம் ஊராட்சியைச் சேர்ந்த திண்டிவனம் குடியிருப்பில், அத்திமூர் பகுதியின் குடிநீர்த் தேவையையும் கணக்கிட்டு 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்னிறைப்பான் திட்டம் செயலாக்க இந்நிதியாண்டில் திட்டமிடப்பட்டுள்ளது. அத்திமூர் பகுதிக்கு இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்படும். திட்டம் 1993-ல் முடித்து மக்கள் பயனுக்கு கொண்டு வர ஆவன செய்யப்பட்டுள்ளது.

433—

ஊராட்சி மன்றக் கட்டிடம்

வினா எண் 6303—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மொடக்குறிச்சி தொகுதி விளக்கேத்தியில் ஒரு ஊராட்சி மன்றக் கட்டிடம் அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மொடக்குறிச்சி தொகுதி விளக்கேத்தியில் ஒரு ஊராட்சி மன்றக் கட்டிடம் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1991–92-ம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டு கட்டிடம் கட்டப் பட்டு வருகிறது.

434—

## குளம் வெட்டி படித்துறை அமைத்தல்.

வினா எண் 6823—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள கரிவெட்டி கிராமத்திற்கு குளம் வெட்டி படித்துறை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள கரிவெட்டி கிராமத்திற்கு குளம் வெட்டி படித்துறை கட்டும் பணியை 1992-93-ம் ஆண்டில் செய்வது குறித்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

435

## ஓடையை வெட்டி மராமத்து செய்தல்.

வினா எண் 7179—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், ஓட்டங்காடு ஊராட்சி பெரிய தெற்குக்காடு ராஜான் ஓடையை வெட்டி மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாததால் ஓட்டங்காடு ஊராட்சி பெரிய தெற்குக் காடு ராஜான் ஓடையை வெட்டி மராமத்து செய்து கொடுக்க தற்போது செயற்குறிப்பு இல்லை.





436—

## தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்.

வினா எண் 73[illegible]9—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புக்கரம்பைக்கு வானொலிப் பெட்டியும் தொலைக் காட்சிப் பெட்டியும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

வானொலிப் பெட்டியைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

நிதி நிலைக்கேற்ப, ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை அளிக்க வேண்டுமென்பதே அரசின் கொள்கையாக உள்ளது. ரூ. 9,000-க்குக் குறைவான ஆண்டு வருவாயுள்ள ஊராட்சிகளுக்கு மட்டுமே முதலிடம் அளிக்கப்பட்டு நிதிநிலையைக் கருத்தில் கொண்டு தொலைக் காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இவ்வடிப்படையில் இக்குடியிருப்பிற்கு 1992-93 ஆம் ஆண்டில் தொலைக் காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

நிதி வசதியுள்ள ஊராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து தொலைக் காட்சிப் பெட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப் பெற்றபின் வாங்கிக் கொள்ளலாம்.

437—

## கூடுதல் பள்ளிக் கட்டிடம்.

வினா எண் 7963—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை தொகுதி, வடவாளம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட கெதுவாரிப்பட்டி கிராமத்தில் கூடுதல் பள்ளிக்கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

புதுக்கோட்டை தொகுதி, வடவாளம் பஞ்சாயத்துக் குட்பட்ட கெதுவாரிப்பட்டி கிராமத்திலுள்ள பள்ளிக்கட்டிடம் போதுமான இடவசதி கொண்டதாக இருப்பதால் இப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

438—

வேர்கிளம்பி பேரூராட்சியில் நிர்வாக அதிகாரி நியமித்தல்.

வினா எண். 7999—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பேரூராட்சிகளில் குறிப்பாக வேர்கிளம்பி பேரூராட்சியில் வளர்ச்சிப் பணிகள் தடையின்றி நடைபெற உடனடியாக நிர்வாக அதிகாரியை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வேர்கிளம்பி போன்ற முதல்நிலை பேரூராட்சிகளில் காலியாக உள்ள பேரூராட்சி செயல் அலுவலர் பதவிகளை நிரப்புமாறு தக்க அறிவுரைகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் காலியாக இருந்த முதல் நிலை இரண்டாம் நிலை செயல் அலுவலர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளன.

439—

இ.எஸ்.ஐ. மருத்துவமனையை 50 படுக்கை கொண்ட மருத்துவமனையாக உயர்த்துதல்.

வினா எண். 8873—திரு. என். ஜி. வேணுகோபால்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராணிப்பேட்டை சிப்காட் பகுதியில் இயங்கிவரும் இ.எஸ்.ஐ. மருத்துவமனையை 50 படுக்கை கொண்ட மருத்துவமனையாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்போது இராணிப்பேட்டையில் இயங்கி வரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்தும் திட்டம் அரசிடம் இல்லை. ஆயினும் இம் மருந்தகம் அப்படியே இருக்க தனியாக 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை இராணிப்பேட்டையில் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

440—

எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி.

வினா எண் 7443—திரு. எம். ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி மற்றும் தரத்தினை மேம்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) எண்ணெய் வித்துக்கள் பெருமளவில் உற்பத்தியாகும் மாவட்டங்கள் அனைத்திலும் அத்திட்டம் செயல்படுத்த அரசு முன் வருமா?

(இ) இத்திட்டத்தை செயல்படுத்த ஒத்துழைப்பு நல்கும் எண்ணெய்வித்து உற்பத்தி விவசாயிகளுக்கு அரசு ஏதேனும் மானியம் மற்றும் சலுகை வழங்க முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ), (ஆ) மற்றும் (இ) விவர அறிக்கை கீழே வைக்கப் பட்டுள்ளது.

விவர அறிக்கை.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி மற்றும் தரத்தினை மேம்படுத்த நடப்பு ஆண்டில் (1992-93) கீழ்க் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் தமிழ் நாட்டில் செயல்படுத்தப்படுகின்றன.

[1992 செப்டம்பர் 25

1. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகரிப்புத் திட்டம் (மாநில அரசுத் திட்டம்).

இத்திட்டத்தின்கீழ் தரமான விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு விதைப் பண்ணை ஊக்கத் தொகையும் விதை கொள்முதல் செய்தவுடன் வழங்கப்படுகிறது. நிலக்கடலை சான்று விதைகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 1-ம், உண்மைச் சான்று விதைக்கு ரூ.0 .50-ம் விதைப் பண்ணை அமைத்து விதைக் கொள்முதலுக்கு தரும் விவசாயிக்கு ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. எள். மற்றும் ஆமணக்கு விதைகளுக்கு அங்காடி விலையில் 20 சதம் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. சூரியகாந்தி விதைக்கு கிலோவுக்கு ரூ. 25 ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

2. சோயாமொச்சை அபிவிருத்தித் திட்டம்.

0.4 ஹெக்டேரில் செயல் விளக்கப் பாத்தி அமைக்க விவசாயிகளுக்கு இடுபொருள்கள் இலவசமாக விநியோகிக்கப் படுகின்றன.

3. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம் (மைய அரசும் மற்றும் மாநில அரசும் முறையே 75 : 25 என்ற விகிதத்தில் செலவினை ஏற்கும் திட்டம்) :

இத்திட்டத்தின்கீழ் தனி விதை உற்பத்தி, விதை விநியோகம் விதை சிறுதளை, பெரு விளக்கப் பண்ணை அமைத்தல், பயிர் பாதுகாப்பு செய்தல் புன்னைக் கருவிகள் பயிர் பாதுகாப்புக் கருவிகள் தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் வாங்குதல் ஜிப்சம் போன்ற இடுபொருட்கள் வாங்கி உப யோகித்தல் ஆகிய இனங்களுக்கான விவசாயிகளுக்கு சலுகை வழங்கப்படுகிறது.

எண்ணெய் வித்துக்கள் பெருமளவில் உற்பத்தியாகும் மாவட்டங்கள் அனைத்திலும் மேற்குறிப்பிட்ட திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டத்தின்கீழ் நிலக்கடலை விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு விதைப் பண்ணை ஊக்கத் தொகை (சான்று விதைக்கு கிலோவுக்கு ரூ. 1-ம் உண்மைச்சான்று விதைக்கு கிலோவுக்கு ரூ. 0:50—ம் விதை விலையுடன் சேர்த்து விதைக் கொள்முதல் செய்யும்போது வழங்கப்படுகிறது எள் மற்றும் ஆமணக்கு விதை உற்பத்திக்கு அங்காடி விலையில் 20 சதம்



1992 செப்டம்பர் 25]

ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. சூரியகாந்தி விதை உற்பத்திக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.0 .25 ஊக்கத் தொகை வழங்கப் படுகிறது. சோயாமொச்சை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் செயல் விளக்கப் பாத்தி அமைக்கும் விவசாயிகளுக்கு இடுபொருள் இலவசமாக வழங்கப்படுகின்றது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குக் கீழ் குறிப்பிட்டுள்ள சலுகைகள் வழங்கப்படுகின்றன—

| | மான்யம். |
|---|---|
| சான்று விதை கொள்முதல் | கிலோவுக்கு ரூ. 2. |
| உண்மைச் சான்று .. | கிலோவுக்கு ரூ. 0.50. |
| விதை விநியோகம் .. | சான்று மற்றும் உண்மைச் சான்று கிலோவுக்கு ரூ. 1 ஒட்டுரக விதைகளுக்கு கிலோவுக்கு ரூ. 3. |
| பெருவிளக்கப் பண்ணை (10 உதவி 2 எக்டர் வரை) | இடுபொருளின் விலையில் 5 சதம். |
| விதை சிறுதளைகள் (சிறு/குறு விவசாயிகளுக்கு குறிப்பாக ஆதி திராவிடர்/பழங்குடியினர் வகுப்பு விவசாயிகளுக்கு). | சிறு தளை இடுபொருளின் விலையில் 90 சதம். |
| பயிர் பாதுகாப்பு மருந்துகள் | 50 சத மான்யம் எக்டேருக்கு ரூ. 100—க்கு மிகாமல் (கூடிய வரையில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு). |
| நிலக்கடலை வேர்ப்பூச்சி தடுப்பு .. | மருந்துகள் மற்றும் கருவிகள் வாங்கிட எக்டருக்கு ரூ. 500-க்கு மிகாமல். |

சிறு குறு விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்புக் கருவிகள் விநியோகம்—50 சத மானியம் கருவி ஒன்றுக்கு ரூ. 500-க்கு மிகாமல்.

பண்ணைக் கருவிகள்—50 சத சிறு/குறு விவசாயிகளுக்கு மான்யம் கருவி ஒன்றுக்கு ரூ. 700-க்கு மிகாமல் ஆதிதிராவிடர் பழங்குடியினர் வகுப்பு விவசாயிகளுக்கு 10 சத விலையில் கருவிகள் வழங்கப்படும். கருவி ஒன்றுக்கு அதிகபட்சம் மான்யம் ரூ. 700.

| | | |
|---|---|---|
| தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் | சிறு/குறு விவசாயிகளுக்கு 50 சதம் ஆதி திராவிடர் பழங்குடியினர் வகுப்பு விவசாயிகளுக்கு 75 சதம் மற்ற பிரிவினருக்கு 25 சத மான்யம் | ஒரு தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிக்கு ரூ. 10,000-க்கு மிகாமல். |
| ரைசோபியம் நுண்ணுயிர் விநியோகம் (நிலக்கடலை மற்றும் சோயா மொச்சைக்கு) | 50 சதம் எக்டருக்கு ரூ. 15-க்கு மிகாமல். | |
| ஜிப்சம் | தேவைக்கேற்ப எக்டருக்கு ரூ. 200-க்கு மிகாமல் | |

441—

குழந்தைகள் மையம் அமைத்தல்.

வினா எண் 6362— திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பெரும் பள்ளத்தில் நெருஞ்சிப் பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு குழந்தைகள் மையம் அமைத்துக் கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை —

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் தற்போது பெரியார் மாவட்டத்திற்கு விரிவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள சில விதிமுறைகளுக்குட்பட்ட கிராமங்களில் கூடுதல் மையங்கள் திறக்கப்படுகின்றன. எனவே உறுப்பினர் குறிப்பிட்டுள்ள கிராமத்திலும் தேவைக்கேற்ப மையம் துவக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.





442—

கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்.

வினா எண் 7166— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் கீழ்ப்புனவாசலில் ஒரு கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தாலுகா, பேராவூரணி ஒன்றியத்தில் புனவாசல் கிராமத்தில் ஏற்கனவே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று சிறப்பாக செயல் பட்டு வருகிறது. இச்சங்கம் பால் உற்பத்தி செய்து உள்ளூர் தேவை போக 75 சதவிகிதத்திற்கும் அதிகமாகப் பாலை தஞ்சை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பி வருகிறது. இச்சங்கத்திற்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் தான் கீழ்ப்புனவாசல் கிராமம் இருக்கிறது. தற்போது கீழ்ப்புனவாசல் கிராமம் பால் கறவையாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், புனவாசல் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் பால் ஊற்றிப் பயன் பெற்று வருகிறார்கள். அதனால் கீழ்ப்புனவாசல் கிராமத்திற்கென்று தனியாக ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

443—

கால்நடை ஆய்வாளர்கள் எண்ணிக்கை.

வினா எண் 7432— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடந்த 3 ஆண்டுகளில் உரிய பயிற்சி முடித்த கால் நடை ஆய்வாளர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) வருகிற ஆண்டுகளில் பணியில் அமர்த்தப்பட்ட கால் நடை ஆய்வாளர் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) அண்ணா மாவட்டத்தில் பணியமர்த்தப்பட்ட கால் நடை ஆய்வாளர் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :**

(அ) கடந்த 3 ஆண்டுகளில் உரிய பயிற்சி முடித்த கால்நடை ஆய்வாளர்கள் மொத்தம் 117 நபர்கள்.

1988-89— 117

1989-90 }
1990-91 } பயிற்சி நடைபெறவில்லை.

(ஆ) 117 நபர்களும் கால்நடை ஆய்வாளர்களாக பணியில் அமர்த்தப்பட்டனர்.

(இ) அண்ணா மாவட்டத்தில் 7 கால்நடை ஆய்வாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

444—

**தாட்கோ மூலம் கொடுக்கப்படுகின்ற அரசின் நலத் திட்டங்கள் ஆதி திராவிட மக்கள் தெரிய நடவடிக்கை.**

வினா எண் 17818—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தாட்கோ மூலம் கொடுக்கப்படுகின்ற அரசின் நலத் திட்டங்கள் வால்பாறை சட்டமன்றத் தொகுதி ஆதி திராவிட மக்களுக்கு முழுமையாக தெரிவிக்கப்படுவதில்லை என்ற குறையைப்போக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :**

தாட்கோ மூலம் கொடுக்கப்படுகின்ற அரசின் நலத் திட்டங்கள் வால்பாறை சட்டமன்றத் தொகுதி ஆதிதிராவிட மக்களுக்கு முழுமையாகத் தெரிவிக்கப்படுவதில்லை என்ற குறை தொடர்பாக இதுவரை முறையீடு ஏதும் வரவில்லை. எனினும் இது பற்றி ஆவன செய்வது தொடர்பாகவும், மேலும் மேற்படி திட்டங்கள் குறித்து மாவட்டம் முழுவதும் விளம்பரப்படுத்தவும் கோயம்புத்தூர் மாவட்ட மேலாளருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.



445—

**நரிக்குறவர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.**

வினா எண் 6165—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர் ஒன்றியம், கன்னிகாபுரம் பகுதியில் 25 நரிக்குறவர்கள் குடும்பங்களுக்கு நிரந்தரமாக குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், அரசு பரிசீலிக்குமா ?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், போளூர் ஒன்றியம், கன்னிகாபுரம் பகுதியில் வசிக்கும் 30 நரிக்குறவர் குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவது பற்றி மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

446—

**செராமிக் தொழிற்சாலையை மீண்டும் திறக்க நடவடிக்கை.**

வினா எண் 3326—திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விருத்தாசலம் நகரில் கடந்த இரு வருடமாக மூடிக்கிடக்கும் செராமிக் தொழிற்சாலையை மீண்டும் திறந்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் துயர் துடைக்க அரசு முன் வருமா ?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :**

விருத்தாசலத்திலுள்ள பீங்கான் தொழிற்சாலையை மீண்டும் திறந்து அதனை நடத்துவதற்கு எவ்வித உத்தேசமும் இல்லை. எனினும், அந்த கட்டிடங்களை சிறு தொழில் கூடங்களாக மாற்றி உருவகப் பொருள் (Body Slip) மற்றும் சூளை (Turnnel Kiln) அமைத்து பணி நிலையமாக மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1992 செப்டம்பர் 25

447—

கதர் ஆடைகளுக்குத் தள்ளுபடி

வினா எண். 5557—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கதர் ஆடைகளுக்காக ஆண்டு தோறும் எத்தனை நாட்களுக்கு விற்பனையில் தள்ளுபடி அளிக்கப்படுகிறது?

(ஆ) அவற்றின் விவரம் என்ன ?

(இ) இந்த தள்ளுபடி சலுகைக்காக மத்திய அரசு அளிக்கும் மானிய உதவி எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ), (ஆ) மற்றும் (இ) விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

(அ) கதர், பட்டு, கம்பளி ரகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 90 நாட்களுக்கும் கதர் பாலியஸ்டர் ரகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 60 நாட்களுக்கும் தமிழக அரசால் 10 சதவீதம் சிறப்பு தள்ளுபடி அனுமதிக்கப்படுகிறது.

(ஆ) கதர் மற்றும் பாலியஸ்டர் ரகங்களுக்கு சென்ற நிதியாண்டில் (1991-92) தமிழக அரசால் தள்ளுபடி விற்பனை நாட்கள் அனுமதிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

| விவரம். (1) | கதர் பாலிவஸ்திரா ரகங்கள். (2) | கதர்பட்டு மற்றும் கம்பளி ரகங்கள். (3) |
|---|---|---|
| 1. ரம்ஜான் — — .. | .. | 7 |
| 2. காமராஜ் பிறந்த நாள் .. | .. | 15 |
| 3. அண்ணா, தந்தை பெரியார் பிறந்த நாள் .. ... | 15 | 15 |
| 4. காந்தி ஜெயந்தி மற்றும் தீபாவளி | 30 | 30 |
| 5. ராஜாஜி பிறந்த நாள் ... .. | .. | 3 |
| 6. கிறிஸ்துமஸ் .. .. .. | 3 | 3 |
| 7. பொங்கல் .. ... .. | 11 | 11 |
| 8. ஆண்டு இறுதி இருப்புக் குறைக்க | 1 | 6 |
| மொத்தம் .. | 60 | 90 |





இது தவிர சென்ற ஆண்டில் இருப்புக்களை குறைப்பதற்கென 2-5-1991 முதல் 18-5-1991 முடிய 15 நாட்களுக்கு (ஞாயிற்றுக்கிழமைகள் தவிர) 10 சதவிகிதம் தமிழக அரசால் சிறப்பு தள்ளுபடி அனுமதிக்கப்பட்டது.

(இ) கதர் ரகங்களுக்கு 15 சதவிகிதமும், பாலியஸ்டர் ரகங்களுக்கு 10 சதவிகிதமும் மத்திய அரசு, பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் மூலம் ஆண்டு முழுவதும் சிறப்புத் தள்ளுபடி வழங்குகிறது. மேலும் தமிழக அரசு சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கும் காலங்களிலும், பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு 10 சதவிகிதம் கூடுதலாக சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கிறது. இவ்வகையில், 1989-90 மற்றும் 1990-91 நிதி ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து தள்ளுபடி மானியம் பெறப்பட்டுள்ளது.

1989-90 .. ரூ. 345.49 இலட்சம்.

1990-91 .. ரூ. 230.88 இலட்சம்.

448—

பட்டுப்பூச்சி வளர்க்க ஒப்படைக்கப்பட்ட நிலங்கள்.

வினா எண் 5968— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பட்டு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நத்தம் தொகுதியில் எந்தெந்த கிராமங்களில் பட்டுப்பூச்சி வளர்க்க எவ்வளவு நிலங்கள் பட்டு வளர்ப்புத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன?

(ஆ) ஒப்படைக்கப்பட்ட நிலங்களில் பட்டு வளர்ப்புத் திட்டம் செயல்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திலுள்ள நத்தம் கிராமத்தில் மட்டும் 1982-83 ஆம் ஆண்டு முதல் 1988-89 ஆம் ஆண்டு வரை 3.30 ஏக்கர் பரப்பளவுக்கு குத்தகைக்கு தனியார் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசு விளக்க பட்டுப் பண்ணையாக செயல்பட்டது. அதன் பின் 1989-90 முதல் வேறொரு தனியார் குத்தகை நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு 1990-ம் ஆண்டு ஜூன் 30-ம் நாள் முடிய 1.50 ஏக்கர் பரப்பில் அரசு விளக்க பட்டு-பண்ணை செயல்பட்டு வந்தது. நத்தம் தொகுதியில் வேறு எந்த கிராமத்திலும் அரசு பட்டுப் பண்ணைகள் அமைப்பதற்காக அரசு நிலங்களை எடுக்கவில்லை. இந்தப் பட்டுப் பண்ணை விளக்கப் பண்ணையாக செயல்பட்டதுடன் கூடுதலாக அப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட மல்பரி இலைகளை உபயோகப்படுத்தி பட்டு பூச்சியும் வளர்க்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட 3.30 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில்தான் எடுக்கப்பட்டது. நிலம் கையகப்படுத்தப்படவில்லை. இப் பகுதியிலுள்ள விவசாயிகளே புழு வளர்ப்பு நுணுக்கங்கள் அறிந்துகொண்டதால், இந்த விளக்கப் பண்ணை செயல்படத் தேவையில்லை. எனக் கருதி இதன் செயல்பாடுகள் 30—6—1990 அன்று தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ) ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் 1982-83 முதல் 1989-90 வரை நத்தம் கிராமத்தில்தான் குத்தகை நிலத்தில் அரசும் கூட்டுப் பண்ணை அமைத்து பட்டு வளர்ப்புத் திட்டம் செயல்பட்டு வந்தது. தற்போது இந்த நிலம் அரசுக் கட்டுப்பாட்டில் இல்லை. மேலும் தனியார் குத்தகை நிலங்களில் அரசுப் பண்ணைகள் செயல்பட வேண்டாம் என்று கொள்கையளவில் முடிவு எடுத்தபின் நிலச் சொந்தக்காரரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

449—

நில அளவர்களை பணி நிரந்தரம் செய்தல்

வினா எண் 1752—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வருவாய்த் துறையில் தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்ட 2,000 நில அளவர்களை பணி நிரந்தரம் செய்யும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் செயல் டுத்த
தொகுப்பூதியத்தில் நில அளவர்கள் மற்றும் இதர இனங்களில்
இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 1982 ஆம்
ஆண்டில் 5,957 நபர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இவர்
களை இரண்டாண்டுகள் கழித்து பணிநீக்கம் செய்திருக்கவேண்
டும். மனிதாபிமான அடிப்படையில் அவர்கள் நத்தம் நில
அளவைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களில் பணி
யினை நிரந்தரப்படுத்த ஏதுவாக நில அளவைத் துறையில்
ஏற்படும் காலியிடங்களில் பிற துறைகளிலும் ஏற்படும் காலியிடங்
களில் நியமனம் அளிக்க அரசு வழிவகை செய்தது. அதன்
அடிப்படையில் நில அளவைத் துறையின் 1,917 நில அளவர்கள்
மற்றும் வரைவாளர்களின் பணி வரன்முறை செய்து அரசு ஆணை
வெளியிட்டுள்ளது. அதுமட்டுமின்றி பிற துறைகளில் 656
தொகுப்பூதிய நபர்கள் ஊதிய ஏற்ற முறையில் ஈர்த்துக்
கொள்ளப்பட்டுள்ளனர்.

தற்போது தொகுப்பூதியத்தில் 3,656 நபர்களும், பிரிவு எழுத்தர் இனத்தில் 54 நபர்களும் பணிபுரிகின்றனர். இவர்களை எதிர்காலத்தில் துறையில் ஏற்படும் காலியிடங்களில் முன்னுரிமை அடிப்படையில் ஊதிய ஏற்ற முறை பணியிடத்தில் பணியமர்த்தல் செய்யப்படுவார்கள்.

450—

விளையாட்டு அரங்கம், நீச்சல்குளம் ஆகியவை பராமரித்தல்

வினா எண் 7969—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாவட்டங்கள் தோறும் மத்திய அரசின் மானியம் பெற்று கட்டப்பட்டுள்ள விளையாட்டு அரங்கம், நீச்சல்குளம் ஆகியவற்றை பராமரிக்க பொதுப்பணித் துறையினரிடம் ஒப்படைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்.

இல்லை.

[1992 செப்டம்பர் 25

451.—

விளையாட்டுப் போட்டிகள் மாநில அளவில் நடத்துதல்.

வினா எண் 7977—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மத்திய அரசின் மானியத்திலிருந்து 12 வயதிற்குட்பட்ட தேசிய விளையாட்டுத்திறன் போட்டி, தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டி, ஊரக விளையாட்டுப் போட்டிகள், மாவட்ட அளவில் நடத்தப்படுவதை மாநில அளவு போட்டியாக நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை.—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

தேசிய விளையாட்டுத் திறன் போட்டிகள், தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் அகில இந்திய டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் ஊரக விளையாட்டுப் போட்டிகள், இந்திய விளையாட்டுக் குழுமம்—(S.A.I.) ஒவ்வொரு ஆண்டும் வழங்கும் மானியத்தில் வட்டார அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும் நடத்தி, மாநில அளவில் தேர்வு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவில் தெரிந்தெடுக்கப்பட்ட மேற்கண்ட விளையாட்டுப் போட்டிகளின் விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகள் தேசிய அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற அனுப்பப்படுகின்றனர். எனவே, மேற்கண்ட மூன்று விளையாட்டுப் போட்டிகள் முதலில் வட்டார அளவிலும், பின்பு மாவட்ட அளவிலும், பிறகு மாநில அளவிலும் நடத்தப்படுகின்றன.

452

போட்டிகள் நடத்த தொகை அதிகரித்தல்

வினா எண் 7978—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

16 வயதிறகுடபட்ட இளமையில் தேர்ந்தெடுத்தல் போட்டிகளுக்கு, மாவட்ட அளவில் நடத்த ரூ. 500 ஒதுக்கப்பட்டுள்ளதை ரூ. 1,000 ஆக ஒதுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 செப்டம்பர் 25]

விடை.—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இளமையில் தேர்ந்தெடுத்தல்—மாவட்ட அளவிலான தெரிவிக்கு ரூ. 500 வழங்கப்படுகிறது. இது மாவட்ட அளவில் மட்டும் தெரிவு நடத்தி ஆறு விளையாட்டுக்களில் தக்க குழுக்களை தெரிந்தெடுக்க வழங்கப்படும் தொகையாகும். இதில் செலவினங்கள் மிகுதியாக இருக்க வாய்ப்பில்லை எனவே, இத் தொகையினை ரூ. 1,000 ஆக உயர்த்திட செயற்குறிப்பு ஏதுமில்லை.

453.—

ஆசிரியர் இல்லம் கட்டுதல்

வினா எண் 7993—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வெளியூர் ஆசிரியர்கள் சென்னை வந்தால் தங்குவதற்காக சைதாப்பேட்டையில் ஆசிரியர் இல்லம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன ?

(ஆ) இத்திட்டத்திற்கு ஆசிரியர் தேசிய நிறுவனம் எவ்வளவு நிதி உதவி அளித்துள்ளது ?

(இ) இதில், அரசின் செலவு எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) சென்னை சைதாப்பேட்டையில் ஆசிரியர் இல்லம் கட்டி முடிக்கப்பட்டு கல்வி இலாகா பொறுப்பேற்கும் நிலையில் உள்ளது.

(ஆ) இத் திட்டத்திற்கு ஆசிரியர் தேசிய நிறுவனம் ரூ. 28.30 லட்சம் நிதி உதவி அளித்துள்ளது. இதில் மத்திய அரசு மனிதவள மேம்பாட்டுத் துறை ரூ. 10 லட்சம் அளித்துள்ளது.

(இ) இதில் மாநில அரசின் செலவு ஏதுமில்லை.

454—

## புதிய பல்கலைக்கழகம் அமைத்தல்.

வினா எண் 8867—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரியை மையமாகக் கொண்டு புதிய பல்கலைக்கழகம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புதியதாக மத்திய பல்கலைக் கழகம் ஒன்றை தமிழ் நாட்டில் தொடங்குமாறு மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளோம். இதற்கு மத்திய அரசு இசைவளித்தால் இந்த மத்திய பல்கலைக்கழகத்தை, சேலம், தர்மபுரி, வட ஆற்காடு - அம்பேத்கார், திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டங்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் மத்திய அரசுடன் கலந்து ஆலோசித்து, இதற்கு தகுந்த இடத்தை மாநில அரசு தேர்ந்து எடுக்கும். (இந்த நான்கு மாவட்டங்களில்தான் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சதவீதம் அதிகமாகவும் எழுத படிக்க தெரியாதவர்களின் சதவீதம் குறைவாகவும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

455—

## கைத்தறி ஆடைகளை ஏற்றுமதி செய்தல்.

வினா எண் 8799—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக கைத்தறி ஆடைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் :

(அ) ஆம். தமிழ்நாடு அரசு எற்கனவே கைத்தறி ஆடைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.

(ஆ) வெளிநாட்டு செலாவணியை பெறுவதற்காக, புதிய இரகங்கள் மற்றும் வடிவமைப்புகளில் புதுமையை புகுத்தி தயாரிக்கப்பட்ட ஆடைகள் உற்பத்தி செய்யப்படுகின்றது கடந்த 3 ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட ஆடைகளின் மதிப்பு கீழே கொடுக்கப்படுகிறது:—

| வருடம். | மதிப்பு (ரு. கோடியில்.) |
|---|---|
| 1988–89 | 13.96 |
| 1989–90 | 6.05 |
| 1990–91 | 6.12 |

456—

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சரிசெய்தல்.

வினா எண் 3841—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ராதாபுரம் தொகுதி, கும்பிகுளம்—சீலாத்திகுளம் பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது அரசு அறியுமா ?

(ஆ) அவற்றைச் சரி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இராதாபுரம் வட்டத்தில் பெய்த மழையின் காரணமாக சீலாத்தி புதுக்குளத்திற்கு நீர் வரும் வடமலையான் கால்வாயில் ஏற்பட்ட உடைப்புகளும் கும்பிகுளத்தில் ஏற்பட்ட உடைப்புகளும் நிரந்தரமாக அடைக்கப்பட்டன. வடமலையான் கால்வாயில் இருந்து சீலாத்தி-புதுக்குளத்திற்கு வரும் கிளைக்கால்வாயில் ஏற்பட்ட உடைப்பு நிரந்தரமாக 31—3—1992-ல் அடைக்கப்பட்டு வேலை முடிவுற்றுவிட்டது.

457—

சாலை அமைத்தல்.

வினா எண். 5352—திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, சின்னவளையம்—பிச்சானூர் பாகல்மேடு சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சின்னவளையம்—பிச்சனூர் பாகல்மேடு சாலையானது திருச்சி-சிதம்பரம் சாலை (எம்.டி.ஆர்.) கி.மீ. 94/8-ல் பிரிந்து செல்லும் (1) சின்னவளையம்-பெரியவளையம், வெட்டியார் வெட்டு சாலை (ஊராட்சி ஒன்றிய சாலை) கி.மீ. 0/0–8/0 (2) பூவாய்க்குளம் பிச்சானூர் சாலை கி.மீ. 0/0–2/0 மற்றும் (3) பிச்சானூர்—பாகல்மேடு அரிசன தெரு சாலை (வழி) வெட்டியார் தெரு, கி.மீ. 0/0–4/0 ஆகிய மூன்று தொடர் சாலைகளாகும். இதன் மொத்த நீளம் 12.0 கி.மீ. ஆகும். இச்சாலைகள் மூன்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளாகும். இதனைத் தொடர்ந்து பாகல்மேடு இளையபெருமாள் நல்லூர் சாலை ய/0–5/0 என்னும் சாலை மண்தளம் கொண்ட ஒன்றிய சாலையாக உள்ளது.



இச்சாலை பகுதியில் சின்னவளையம் முதல் பூவாய்க்குளம் வரை கிராமச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ள ரூ. 33.00 லட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, இப்பணிக்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள பூவாய்க்குளம் பிச்சானூர்—பாகல்மேடு வழியாக, இளையபெருமாள் நல்லூர் வரையுள்ள மண்சாலையை தார்ச்சாலையாக மேம்பாடு செய்ய தோராயமாக ரூ 19.00 இலட்சம் தேவைப்படும்.

இச்சாலையை மேம்பாடு செய்யும் பணி இதுவரையில் அரசின் திட்டப் பணிகள் எதிலும் இடம்பெறவில்லை. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்பாடு செய்ய பகுதி-2 திட்டத்தில் வகை செய்யப்படவில்லை. அதனால் இப்பணி இத்துறையினால் பகுதி-2 திட்டத்தில் வகைசெய்யப்படவில்லை. அதனால் இப்பணியை இத்துறையினால் பகுதி-2 திட்டத்தில் மேம்பாடு செய்ய வாய்ப்பில்லை.

458—

வாய்க்காலை சீரமைத்து அகலப்படுத்துதல்.

வினா எண் 5472—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதி நிதிநத்தம் கிராமத்திற்கு, கழுதூரில் இருந்து வரும் வாய்க்காலைச் சீரமைத்து அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

ஏதுமில்லை.

459—

மேம்பாலம் கட்டுதல்.

வினா எண். 9037—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், கரூர், லாலாப்பேட்டை ஆகிய ஊர்களில் உள்ள ரயில்வே லெவல் கிராசிங்கில் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

1. கரூரில் மேம்பாலம் கட்டுதல் :

கரூரில் உள்ள இருப்புப்பாதை கடவுக்கு மேம்பாலம் கட்டும் பணிக்கு இரயில்வே பணிகள் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன்தான் மேற்கொள்ள இயலும்.

2. லாலாப்பேட்டையில் மேம்பாலம் கட்டுதல் :

இந்த மேம்பாலம் அமைக்க வேண்டிய சாலையானது, நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பிலுள்ள அரசு மாநில நெடுஞ்சாலையான நாகப்பட்டினம்—கடலூர்—மைசூர் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 183/4—ல் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்பட வேண்டும். இம்மேம்பாலம் கட்ட தோராயமாக ரூ. 250.00 இலட்சம் தேவைப்படும். தற்போதைய நிதிநிலையில் இரயில்வே ஊர்தி அலகு ஒரு இலட்சத்திற்குக் குறைவாக உள்ள இந்த இருப்புப்பாதைக் கடவுக்கு பதிலாக மேம்பாலம் கட்டும் பணிக்கு மாநில அரசே முழுத்தொகையையும் ஏற்று இப்பணியினை மேற்கொள்ள இயலாது.

460—

சமுதாயக்கூடம் அமைத்தல்.

வினா எண். 2766—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவோணம் ஒன்றியம், பண்ணவயல் தெற்கு ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக்கூடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் யெற்குறிப்பு உள்ளதா?





விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஊராட்சியிலும், ஊராட்சி ஒன்றியத்திலும் போதுமான நிதி வசதி இல்லாததாலும், 1991—92—ம் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் இதற்கான வழிவகை செய்யாததாலும் பண்ணவயல் தெற்கு ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் அமைத்துக் கொடுக்கும் சாத்தியக்கூறு இல்லை.

461—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 3523—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட பைங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) அத்திட்டத்தை இந்த ஆண்டு அரசு முடித்துத் தருமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பைங்குளம் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் தலைமைப் பணியிடத்தில் மின்னிறைப்பான்கள் நீரேற்றுக் குழாய் மற்றும் நீர் பகிர்மானக் குழாய்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கான

குழாய் இணைப்பு, விநியோகக் குழாய் பதிக்கும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) எஞ்சிய அனைத்துப் பணிகளும் 9/92க்குள் முடிப்பதற்காக துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

462—

தண்ணீர் வழங்க செய்தல்.

வினா எண். 3607—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் சட்டமன்ற தொகுதி செட்டிகுளம் பஞ்சாயத்தில் பெருமலை குடிநீர் தொட்டியில் இருந்து தண்ணீர் நன்றாக வருமாறு செய்ய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ராதாபுரம் சட்டமன்ற தொகுதி செட்டிகுளம் ஊராட்சியில் பெருமணல் குடிநீர் தொட்டியில் இருந்து தண்ணீர் நன்றாக வருமாறு செய்ய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

463—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 3763—திரு. எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வானூர் தொகுதி, வானூர் வட்டத்தில் தென்கொடிப்பாக்கம், அருவாபாக்கம், பாப்பான்சாவடி, குயிலாபாளையம் ஆகிய பகுதிகளில் கடுமையான குடிநீர்ப்பஞ்சம் ஏற்பட்டு இருப்பதால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தென்கொடிப்பாக்கம் மற்றும் அருவாபாக்கம் கிராமங்கள், கிளியனூர் மற்றும் 18 இதர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில்—இணைக்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகிக்கப்படவுள்ளது. பாப்பான்சாவடி மற்றும் குயிலாபாளையம் ஆகிய பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு விசை யிறைப்பான் நிறுவப்பட்டு மின் இணைப்பு கிடைக்கப் பெற்றவுடன் திட்டப்பணிகள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

464—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 3834—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி, பனகுடி பஞ்சாயத்தில், அண்ணாநகர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி தளவாய்புரத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தளவாய்புரம் பகுதிக்கு சேர்ந்தாற்போல் அமைந்துள்ள அண்ணாநகரில் தற்பொழுதுதான் புதிதாக வீடுகள் கட்டப்பட்டு வளர்ச்சி அடைந்து வருகிறது. இதன் தற்போதைய மக்கட்தொகை சுமார் 180 ஆகும். இங்கு ஏற்கனவே கைப்பம்புடன் கூடிய ஒரு ஆழ்துளைக் கிணறு நல்ல முறையில் இயங்கி வருகிறது. இதுவே இப்பகுதிக்கு போதுமானதாகும். இப்பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி தளவாய்புரத்திலிருந்து தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

465—

## தார்ச் சாலை போடுதல்.

வினா எண். 4113—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தச்சக்காடு கிராமச்சாலைக்கு கப்பி அடித்து தார்ச் சாலையாக மாற்றித்தர அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தென் ஆற்காடு மாவட்டம், பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த தச்சக்காடு கிராமச் சாலைக்கு கப்பி அடித்து தார்ச்சாலையாக மாற்றித்தர தற்போது செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

466—

## புதிய ரோடு போடும் திட்டம்.

வினா எண். 4183—திரு. கா. சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், முள்ளுக்குறிச்சி கிராமத்தின் வழியாக மூலைக்குறிச்சி, சின்னபூசனிக்குழி, பெரிய பூசனிக்குழி, நரியன்காடு வழியாக கொல்லிமலைக்கு புதிய ரோடு போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், முள்ளுக்குறிச்சி கிராமத்தின் வழியாக மூலைக்குறிச்சி, சின்னபூசனிக்குழி, பெரிய பூசனிக்குழி, நரியன்காடு வழியாக கொல்லிமலைக்கு புதிய சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது ஏதுமில்லை.



467—

## ஆழ்குழாய்க்கிணறு அமைத்தல்.

வினா எண். 5481—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேரன் மகாதேவி தொகுதி, மடத்தூர் ஊராட்சி, ராமச் சந்திரபுரத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ராமச்சந்திராபுரம் குடியிருப்பில் இரண்டு கையிறைப்பான்கள் உள்ளன. இக்குடியிருப்பு முழு அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்பாகும். எனவே இங்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

468—

## தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 5685—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேரன்மகாதேவி தொகுதி, தூப்பாக்குடி ஊராட்சி, ராவுத்தப்பேரியில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

கடையம் ஊராட்சி ஒன்றியம், தூப்பாக்குடி ஊராட்சியைச் சேர்ந்த ராவுத்தப்பேரி குடியிருப்புக்கு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை. இக்கிராமத்திற்கு 1992-93 நிதியாண்டில், குடிநீர் வசதி செய்யும் பொருட்டு, பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

[1992 செப்டம்பர் 25

469—

## தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 3587—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி மணல் காட்டனூர் தரைமட்ட நீர்த் தேக்கத்தொட்டி அமைத்துத்தரும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : கடையம் ஊராட்சி ஒன்றியம், மணல் காட்டனூர் குடியிருப்பின் மக்கட் தொகை 467 ஆகும். இங்கு இரண்டு கையிறைப்பான்கள் உள்ளன. இது ஒரு பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்பாகும். இங்கு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

470

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண். 5689—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், ஏ.பி. நாடானூர் ஊராட்சி சிவதானபுரம் ஆதிதிராவிடர் பகுதிக்கு கீழ்புறம் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

கடையம் ஊராட்சி ஒன்றியம், ஏ.பி. நாடானூர் ஊராட்சியைச் சேர்ந்த சிவஞானபுரம் ஆதி திராவிடர் பகுதியின் மக்கட் தொகை 230 ஆகும். இங்கு ஒரு திறந்த வெளிக் கிணறும், ஒரு கையிறைப்பானும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. இக்குடியிருப்பு பகுதியளவு குடிநீர் வசதி பெற்றது. இக்குடியிருப்புக்கு மேலும் ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1992 செப்டம்பர் 25]

471—

## சாலை பழுதுபார்த்தல்.

வினா எண். 6424—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகியநாயகிபுரம் ஊராட்சி பத்துக்காட்டிலிருந்து பூமுடிக் காடு வரை செல்லும் சாலையை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், அழகியநாயகிபுரம் ஊராட்சி பத்துக்காட்டி லிருந்து பூமுடிக்காடு வரை செல்லும் சாலையை மராமத்து செய்து கொடுக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

472—

## குடிநீர்த் தொட்டிகள் அமைத்தல்.

வினா எண். 6514—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகரின் எந்தெந்தப் பகுதிகள் குடிநீர் தட்டுப்பாடு பகுதியென சர்வே செய்யப்பட்டுள்ளன ?

(ஆ) மேத்தா நகர் குடியிருப்புப் பகுதியில் குடிநீர் வழங்கும் கையிறைப்பான்கள் இல்லாமல் இருப்பதும், சாரங்கபாணி தெரு, சிங்கராயர் தெரு, ஆபிசர்ஸ் காலனி 3-வது மற்றும் 4-வது தெரு ஆகியவற்றில் உள்ள மக்கள் வசதிக்காக மெட்ரோ வாட்டர் தொட்டிகள் இதுவரை இல்லாமல் இருப்பதும் அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், குடிநீர்த் தொட்டிகள் அமைக்க அரசு முன்வருமா ?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சென்னை மாநகரில் மொத்தம் உள்ள 6,725 தெருக்களில் 200 தெருக்கள் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதிகள் என விரிவான ஆய்வின் பேரில் கண்டறியப்பட்டுள்ளன. அத் தெருக்கள் சென்னையில் கொருக்குப்பேட்டை, செழியன் நகர் கொண்டித்தோப்பு, ஜார்ஜ் டவுன், சைதாப்பேட்டை, மைலாப்பூர், திருவல்லிக்கேணி, சாந்தோம் மற்றும் டி.பி சத்திரம் ஆகிய பகுதிகள் ஆகும்.

(ஆ) மேத்தா நகர் குடியிருப்புவாசிகளுக்கு தினமும் இரண்டிலிருந்து மூன்று மணி நேரத்திற்கு குடிநீர் இணைப்புகளின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேத்தா நகரிலுள்ள விளையாட்டு திடலில் ஒரு மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டமும் ஆய்வில் உள்ளது. ஆபிசர்ஸ் காலனி 3-வது மற்றும் 4-வது தெருவிலுள்ள குடியிருப்போர்களுக்கு தினமும் 2 முதல் 3 மணி நேரம் குடிநீர் வழங்கப்படுகிறது. சாரங்கபாணி தெரு மற்றும் சிங்கராயர் தெரு குடிநீர் வழங்கும் பிரதான குழாயின் கடைசிப் பகுதியில் இருப்பதால் அங்கு குடிநீர்த் தேவைக்காக 5 குடிநீர்த் தொட்டிகள் நிறுவப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது.

(இ) குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள இடங்களில் தேவையான அளவு குடிநீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டு குடிநீர் வழங்கப் படுகின்றந. புதிய குடிநீர்த் தொட்டிகள் தேவைக்கேற்ப அமைக்கப்படும்.

473—

கூட்டுறவுப் பணியாளர்களை அரசு ஊழியராக்குதல்.

வினா எண் 5145—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூட்டுறவுத் துறைப் பணியாளர்களை அரசு ஊழியர்களாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்று கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள், யாவரும் அந்தந்த சங்கத்தால் பணியில் நியமனம் செய்யப்பட்ட ஊழியர்களாதலால் அரசு ஊழியர்களாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

474—

அரிசி விலை நிர்ணயம் செய்தல்.

வினா எண். 5454—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1989-90, 1990-91-ஆம் ஆண்டுகளில் இதர மாநிலங்களிலிருந்து வெளிச்சந்தையில் வாங்கப்பட்ட அரிசி எவ்வளவு ?

(ஆ) அந்த அரிசி வாங்குவதற்கு அரசு தந்த விலை எந்த அடிப்படை நெறிமுறையின்படி நிர்ணயம் செய்யப் பட்டது ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ)

| ஆண்டு. | அரிசி வாங்கப்பட்ட அளவு. | விலை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (டன்களில்) | (டன் ஒன்றுக்கு) |
| 1. 1989-90 | 3,42,239 | ரூ. 3740 முதல் 3,999 வரை |
| 2. 1990-91 | 1,10,665 | ரூ. 3698.50 |

(ஆ) வெளிமாநிலங்களிலிருந்து அரிசி வாங்க செய்தித் தாள்கள் மூலமாக டெண்டர் கோரப்பட்டு, அந்த டெண்டரில் பெறப்பட்ட குறைந்த விலை கொடுத்த வியாபாரிகளிடம், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், நுகர்பொருள் வாணிபக் கழகம், அரசின் நிதித் துறை செயலாளர், நுகர்பொருள் வாணிபக் கழக பொதுமேலாளர் (வாணிபம்), தலைமைக் கணக்கு அலுவலர் மற்றும் நிதி ஆலோசகர் அடங்கிய டெண்டர் குழு மேலும் பேச்சுவார்த்தை நடத்தி, குறைந்த விலையை நிர்ணயம் செய்து, அரசின் உணவுத் துறை செயலாளர் நிதித் துறை செயலாளர் மற்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், அரசு தலைமைச் செயலாளர் அடங்கிய Purchase Committee-க்கு அனுப்பி ஒப்புதல் பெற்ற பின்னரே அந்த விலையின் அடிப் படையில் அரிசி வாங்கப்பட்டது.

475—

## மருத்துவமனைக்கு பெயர் சூட்டுதல்.

வினா எண். 3730—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சிங்காநல்லூர் தொகுதியில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைக்கு தொழிலாளர் தலைவராய் இருந்து உயிர் நீத்த தியாகி N.G.R. பெயர் வைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள், மருந்தகங்கள் புதுடெல்லி தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட நிதியிலிருந்து கட்டப்படுவதால் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனைகளுக்கு தேசியத் தலைவர்கள் பெயரை சூட்டக்கூடாது என்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் ஏற்கனவே கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கு தொழிலாளர் தலைவர் தியாகி திரு. என். ஜி. ராமசாமி அவர்களின் பெயரைச் சூட்டிட தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் ஒப்புக் கொள்ளவில்லை.



476—

## மாணவியர் இல்லம் தொடங்குதல்.

வினா எண். 1110—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) அவிநாசியில் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் அரசு மாணவியர் இல்லம் தொடங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை :—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம் அவிநாசியில் மாணவியர் இல்லம் 1976-ல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

477—

## மாணவர் விடுதியின் எண்ணிக்கை அதிகரித்தல்.

வினா எண் 1214—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடியில் உள்ள பிற்பட்டோர் மாணவர் விடுதியில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்த அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

[1992 செப்டம்பர் 25

478—

நடைபாதை போடுதல்.

வினா எண் 1592—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி நகரத்திலுள்ள நரிக்குறவர்கள் காலனிக்கு நடைபாதை போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

தற்சமயம் இல்லை.

479—

நரிக்குறவர்கள் முன்னேற தொழிற்சாலை அமைத்தல்.

வினா எண். 2834—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நரிக்குறவர்கள் சமூகத்தை முன்னேற்ற அரசு ஆரம்பித்துள்ள தொழிற்சாலைகள் யாவை ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் தொழிற்சாலைகள் ஏதும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

480—

நரிக்குறவர் மாணவ, மாணவியர் விடுதிகள் எண்ணிக்கை.

வினா எண். 2836—டாக்டர் எஸ். சுந்தரராஜ்,: மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் நரிக்குறவர்கள் மாணவ, மாணவியர் விடுதிகள் எத்தனை உள்ளன ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

சென்னை மாவட்டத்தில் சைதாப்பேட்டையில் தனியார் நரிக்குறவர் மாணவர் இல்லம் ஒன்று இயங்கி வந்தது. இது 1—7—1991 முதல் திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் வட்டம் எறையூருக்கு மாற்றப்பட்டுள்ளது. இவ்விடுதிக்கு அரசு உணவு மானியம் வழங்குகிறது.

481—

பிற்பட்ட மாணவர்களுக்கு விடுதி அமைத்தல்.

வினா எண். 2945—திரு. இரா. தங்கராசு: மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், இடையக்குறிச்சி அரசு உயர்நிலைப்பள்ளி, மிகவும் பின்தங்கிய பகுதியில் இருப்பதால், அதில் படிக்கும் மாணவர்களுக்கு பிற்பட்ட நல விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

தற்சமயம் இல்லை.

482—

விடுதியில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்தல்.

வினா எண் 4025 திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போடிநாயக்கனூரில் உள்ள அரசு மாணவ மாணவியர் விடுதிகளில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், ஒவ்வொரு விடுதியிலும் எத்தனை மாணவர்களுக்கு கூடுதலாக அனுமதி வழங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குமேல் கூடுதலாக மாணவர்களை விடுதிகளில் அனுமதிக்கக்கூடாது என எடுக்கப்பட்டுள்ள நிலைக்கேற்ப போடிநாயக்கனூரில் இத்துறையின்கீழ் இயங்கும் இரு விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இயலாது.

483—

கிறித்துவ வன்னியர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

வினா எண் 4355—டாக்டர் எஸ். ஆரோக்கியசாமி : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வன்னியர்களைப்போல் கிறித்துவ வன்னியர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாமல் உள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) ஆம். கிறித்துவ வன்னியர்கள் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இல்லை.

(ஆ) (1) கிறித்துவ வன்னியர்கள் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும் கல்விச் சலுகைகள் அனைத்தையும் பெற்று வருகின்றனர்.

(2) கல்வி நிலையங்களில் இடம் பெறுவது அரசுப் பணிகளில் வேலைவாய்ப்பிற்கான இட ஒதுக்கீடு ஆகியவற்றைப் பொறுத்தவரை கிறித்துவ வன்னியர்கள் '' பிற்படுத்தப்பட்டோராகவே '' கருதப்படுகின்றனர்.

(3) கிறித்துவ வன்னியர்களை மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசிற்கு தற்போது உத்தேசமில்லை.



484—

சீர்மரபினர் விடுதி திறக்க நடவடிக்கை.

வினா எண் 3962—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் வட்டம் வேடர்நகர் அரசினர் உயர்துவக்கப்பள்ளியில் பயிலும் மிகப் பிற்பட்டோர் இன மாணவர்களான சீர்மரபினர்களின் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) இங்கு சீர்மரபினருக்கு ஓர் விடுதி திறக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) 25 பேர்கள்.

(ஆ) வேடர்நகர் அருகிலுள்ள சத்தியமங்கலத்தில் பிற்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி செயல்பட்டு வருவதாலும் வேடர்நகர் நடுநிலைப் பள்ளியில் மிகக் குறைந்த அளவு சீர்மரபின மாணவ மாணவியர் உள்ளதாலும் அங்கு சீர்மரபினர் விடுதி துவங்க சாத்தியக் கூறுகள் இல்லை.

485—

பிற்பட்டோர் நல விடுதியில் ஆதிதிராவிட மாணவர்கள் சேர்க்கை.

வினா எண் 5957—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பிற்பட்டோர் நலத்துறையின்கீழ் இயங்கும் மாணவர், மாணவியர் விடுதிகளில் காலியாக உள்ள இடங்களில் ஆதிதிராவிட மாணவ மாணவியர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டும் சம்பந்தப்பட்ட துறை அதுபற்றி இன்னும் முடிவெடுக்காமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசின் நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) அற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் காலியாக உள்ள இடங்களில் ஆதிதிராவிட மாணவ மாணவியர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று பரிந்துரை ஏதும் இல்லை. எனினும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் 25 சதவீத இடங்கள் ஆதிதிராவிடர் மாணவ மாணவியருக்கென ஒதுக்கப்பட்டு நிரப்பப்படுகின்றன.

486—

## நிரந்தர குடியிருப்புகள் கட்டுதல்.

வினா எண் 6165—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர் ஒன்றியம், கன்னிகாபுரம் பகுதியில் 25 நரிக்குறவர்கள் குடும்பங்களுக்கு நிரந்தரமாக குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் அரசு பரிசீலிக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ). திருவண்ணாமலை—சம்புராயர் மாவட்டம், போளூர் ஒன்றியம் கன்னிகாபுரம் பகுதியில் வசிக்கும் 30 நரிக்குறவர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவது பற்றி மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப் படுகிறது.



487—

## நரிக்குறவர்களுக்கு வீடு கட்டுதல்.

வினா எண் 6166—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூரில் அல்லி நகர் பகுதியில் குடிசையிட்டுள்ள நரிக்குறவர்களுக்கு வீடு கட்டித் தர அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், இதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) போளூர் அல்லிநகர் பகுதியில் வாழும் 150 நரிக்குறவர்களில் 23 நரிக்குறவர் குடும்பங்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த 23 நரிக்குறவர் குடும்பங்களுக்கு வீடு கட்டித் தருவதுபற்றிய செயற்குறிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டபின் அதுபற்றி பரிசீலித்து அரசு முடிவெடுக்கும்.

488—

## காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 6717—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம் நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த தண்டாமரைக்காடு மிகவும் பின்தங்கிய முத்தரையர் மக்களுக்கு காலனி வீடுகள் கட்டுவதற்கு குடிமனைப் பட்டா வழங்கப்பட்ட இடத்தில் வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலத் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

முத்தரையர்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பினரில் சேர்க்கப்படவில்லை என்றாலும் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் இப்பொழு நடைமுறையில் இல்லை.

[1992 செப்டம்பர் 25

489—

**காலனி வீடுகள் கட்டுதல்.**

வினா எண் 6795—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், இரண்டாம் புலிக்காடு ஊராட்சி நவக்கொல்லையில் குடியிருக்கும் மிகவும் பின்தங்கிய வகுப்பினரான முத்தரையர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

முத்தரையர்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பினரில் சேர்க்கப்படவில்லை என்றாலும் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் இப்பொழுது நடைமுறையில் இல்லை.

490—

**பின்தங்கியோர் விடுதி கட்டிடம் கட்டுதல்.**

வினா எண். 6980—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டினத்தில் பின்தங்கியோர் விடுதி கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டிணத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கென தனி விடுதி எதுவும் இல்லை. எனினும் அங்கு அரசினர் சீர்மரபினர் மாணவர் விடுதிக் கட்டிடம் கட்ட, கடந்த 1992 மார்ச்சு மாதம் ரூ. 10.60 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு அளிக்கப் பட்டுள்ளது. மேற்கண்ட விடுதியில் சீர்மரபினர்களுடன் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட இன மாணவர் களும் தங்கிப் பயனடையலாம்.



1992 செப்டம்பர் 25]

491—

**ஐ.ஏ.எஸ்.,ஐ.பி.எஸ். தேர்வுகள் எழுத சிறப்புப் பயிற்சி.**

வினா எண். 7429—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பிற்பட்டோர், மிகப்பிற்பட்டோர் சீர்மரபினர் மாணவர்களுக்காக ஐ.ஏ.எஸ்.,ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகள் எழுத சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சென்னையில் 50 பேர்களுக்கும் கோவை அவினாசி லிங்கம் மனையியல் மற்றும் மகளிர் மேநிலைக் கல்வி நிலையம், அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி, அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம், புனித சேவியர் கல்லூரி பாளையங்கோட்டை. காந்தி கிராம கிராமிய பல்கலைக் கழகம், காந்திகிராம், திண்டுக்கல் ஆகிய இடங்களில் தலா 25 பேர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின் காலம் எட்டு மாதங்கள் ஆகும். அகில இந்தியத் தேர்வு களுக்கான முதனிலைத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு இறுதித் தேர்வுக்கான பயிற்சி (தனிப் பயிற்சி) ஒன்றும் அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ. 250 உணவுக் கட்டணமாக வழங்கப்பட்டு வருகிறது

492—

வினா எண். 7430—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பிற்பட்டோர், மிகப்பிற்பட்டோர், சீர்மரபினர் மாணவ மாணவியர்களுக்கு எங்கெங்கு கம்ப்யூட்டர் பயிற்சி, சுருக்கெழுத்துப் பயிற்சிகள் அரசினால் நடத்தப்படுகின்றன?

(ஆ) அவற்றிற்கான அரசின் செலவென்ன ?

(இ) அத்தகு பயிற்சிபெறும் மாணவ மாணவியர்க்கு பயிற்சிக் காலத்தில் ஏதேனும் அரசு உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிறதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மீனத்துறை அமைச்சர் :

(அ) கம்ப்யூட்டர் பயிற்சி சென்னை, கோவை, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் சுருக்கெழுத்துப் பயிற்சி அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) மொத்தம் செலவு ரூ. 21.5 இலட்சம் ஆகும்.

(இ) கணிப்பொறி.—எல்லா மாணவ மாணவியருக்கும் பயிற்சிக் கட்டணமாக ரூ. 1,500 முதல் ரூ. 2,000வரை வழங்கப்பட்டு வருகிறது. சென்னையில் மட்டும் தங்கும் வசதியும் உணவுக் கட்டணம் ஆக மாதம் ரூ. 160-ம் வழங்கப் படுகிறது.

சுருக்கெழுத்து.—தேர்வுக் கட்டணத்துடன் கல்விக் கட்டண மாக மாதம் ரூ. 40 சதவீதமும் உணவுக் கட்டணமாக மாதம் ரூ. 160 வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

493—

நாடார் இனத்தை பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்தல்.

வினா எண். 8584—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பனைத்தொழிலை அதிகமாகக் கொண்டு மிகவும் பின்தங்கி வாழும் நாடார் இனத்தவரை மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

தற்பொழுது இல்லை.





494—

பிற்பட்ட இன பெண்களை மிகவும் பிற்பட்ட இனமாக மாற்றுதல்.

வினா எண். 8788—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அனைத்துப் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண்களுக்கு கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் சலுகை கொடுக்கும் வகையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனமாக இவர்களைச் சேர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

இல்லை.

495—

தொழிற்கருவிகள் வழங்க மாவட்ட அளவில் குழு அமைத்தல்.

வினா எண். 9334—திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சலவையாளர், சவரத் தொழிலாளர்களுக்கு அரசு வழங்கும் இலவச தொழிற் கருவி பெறுபவர்களை தேர்ந்து எடுக்க அந்த சமூகத்தினரை கொண்ட ஒரு குழு மாவட்ட ஆட்சி தலைவர் தலைமையில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின் மூலம் சலவையாளர்களுக்கும், முடிதிருத்துபவர் களுக்கும், போயர்களுக்கும் வழங்கப்படும் இலவச தொழிற் கருவிகள் யாவும் முதுநிலைப் படியும் மற்றும் இக்கருவிகளை

பெறுவதற்காக விதிக்கப்பட்டுள்ள தகுதிகளின் அடிப்படையிலும்தான், சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களால் வழங்கப்படுகின்றன.

முதுநிலைப்படியும், தகுதியின் அடிப்படையிலும் இவ்விலவசக் கருவிகள் வழங்கப்படுவதால், பயனாளிகளைத் தெரிவு செய்ய சம்பந்தப்பட்ட சமூகத்தினரைக் கொண்ட குழு ஏற்படுத்த வேண்டிய தேவை எழவில்லை.

496—

<u>பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.</u>

வினா எண். 10411—<u>திரு. அ. பாப்பாசுந்தரம்:</u> மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ரெட்டியார் இனத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

<u>மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:</u>

இல்லை.

497—

<u>பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.</u>

வினா எண். 10418—<u>திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:</u> மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்குந்தர் வகுப்பினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

<u>மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:</u>

செங்குந்தர் என அழைக்கப்படும் கைக்கோளர் வகுப்பு ஏற்கனவே பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இவ்வகுப்பினை மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க தற்போது இயலாது.



<u>வக்ப் போர்டுக்குச் சொந்தமான சொத்துக்கள்</u>

498—

வினா எண். 9930—<u>திருமதி ஜீனத் சேர்புதீன்:</u> மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வக்ப் போர்டுக்குச் சொந்தமான சொத்துக்களின் தற்போதைய மதிப்பு என்ன?

விடை—

<u>மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், ஊரகத்தொழில்துறை அமைச்சர்:</u>

தமிழ்நாடு வக்ப் வாரியம் தனது சொந்த அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்காக அரசு கடனுதவியுடன் 1982-ஆம் ஆண்டு வாங்கிய சுமார் 5½ கிரவுண்டு நிலத்தைத் தவிர வேறு சொத்துக்கள் ஏதும் வக்ப் வாரியத்திற்கு கிடையாது. மேற்படி நிலத்தின் தற்போதைய மதிப்பு சுமார் ரூ. 50 லட்சம் ஆகும். தமிழ்நாட்டில் உள்ள வக்ப் நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் தற்போதைய மொத்த மதிப்பு சுமார் ரூ. 222.50 கோடிகள் ஆகும். இச்சொத்துக்களின்மீது வக்ப் வாரியத்திற்கு எந்தவித உரிமையும் இல்லை. அவற்றின் வருவாயில் ஆறு சதவீதம் மட்டும் வக்ப் வாரியத்திற்கு அவர்கள் செலுத்த வேண்டும்.

499—

<u>பள்ளிக்கட்டிட குழுவிற்கு அரசு அனுமதி</u>

வினா எண். 1820—<u>திரு. ம. சின்னசாமி:</u> மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசு உயர்நிலை, மேல்நிலை பள்ளிகளில் இயங்கி வரும் கட்டிட குழுவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், குழுவின் பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

500—

புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு

வினா எண். 1953—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் பௌதிகம், வேதியியல் பட்ட மேற்படிப்பும், எம்.ஃபில். படிப்பும் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இது தொடர்பாக கல்லூரி முதல்வரிடமிருந்து கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

501—

சங்கராபுரத்தில் கலைக் கல்லூரி.

வினா எண். 3379—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சங்கராபுரத்தில் ஒரு கலைக் கல்லூரியும், மூங்கில் துறைப்பட்டில் ஒரு பொறியியல் கல்லூரியும் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்.

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



502—

தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள் உரிமையை ரத்து செய்தல்.

வினா எண் 8850—திரு. ம. சின்னசாமி திரு. எம். தங்கவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள் அரசை மதிக்காமல் செயல்படும்போது தன்னாட்சி உரிமையை ரத்து செய்ய அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

பல்கலைக் கழகங்களின் பரிந்துரையின்பேரில் அவற்றின் இணைவுக்குட்பட்ட கல்லூரிகள் தன்னாட்சி உரிமையுடன் செயல்பட அரசு ஒப்புதல் அளிக்கிறது. அவ்வாறு தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள் அரசை மதிக்காமல் செயல்படும்போது சார்ந்த பல்கலைக் கழகம் தான் தன்னாட்சி உரிமையை பல்கலைக் கழக விதிமுறைகளின்படி ரத்து செய்ய இயலும். ரத்து செய்ததற்கான ஒப்புதலைத் தான் அரசு வழங்கும் நிலை உள்ளது.

503—

ஒட்டங்காட்டில் பிரதம சுகாதார நிலையம்.

வினா எண். 7276—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காட்டில் பிரதம சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் ஒட்டங்காட்டில்பிரதம சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை. பேராவூரணி ஒன்றியத்தின் மக்கள் தொகை 94,800. 30,000 மக்கள் தொகைக்கு ஒரு

ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி அவ்வொன்றியத்தில் (1) சிறுவாவிடுதி (2) குறிச்சி மற்றும் (3) காலகம் என்ற மூன்று இடங்களில் ஏற்கனவே ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகின்றன.

எனவே ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மேற்படி ஊராட்சி ஒன்றியத்தில் அமைக்க சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

— —

## லால்குடி தாலூகா மருத்துவமனை.

வினா எண். 8668— திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) லால்குடி அரசினர் தாலூகா மருத்துவமனையில் சுகாதார வசதிகள் மற்றும் மருத்துவக் கருவிகள், அகம் மற்றும் புற நோயாளிகள் தங்குமிடம் இல்லாது மக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், கழிப்பிட வசதிகள் செய்யவும், மருத்துவக் கருவிகள் வழங்கவும், அகம் மற்றும் புற நோயாளிகள் தங்குவதற்கான கூடங்கள் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) லால்குடி அரசினர் மருத்துவமனை அபிவிருத்தி திட்டங்கள் தற்போதுள்ள நிதி நிலையில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இனிவரும் காலத்தில் லால்குடி அரசு மருத்துவமனையில் விரிவாக்கம் குறித்து கவனித்து பிரேரணைகள் அனுப்புமாறு திருச்சி மாவட்ட சுகாதாரப்பணி இணை இயக்குநருக்கு எழுதப்பட்டுள்ளது. மேலும் மருத்துவமனைகள் அபிவிருத்திக்கென உள்ளூர் நன்கொடையாளர்களிடம் நன்கொடைகள், கட்டுமானங்கள் கருவிகள் ஆகியவை பெற சமூக நல அமைப்புகளை அணுக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.



505—

## சமூகநலக்காடு வளர்ப்பு திட்டத்தில் நடப்படும் மரக்கன்றுகள்

வினா எண். 4870—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சமூக நலக்காடு வளர்ப்பு திட்டத்தின்கீழ் நடப்படும் மரக் கன்றுகளை பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொள் கின்றது ?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

வனத்துறையினரால் வளர்க்கப்படும் மரக்கன்றுகள் கிராம மக்களின் ஒத்துழைப்போடு வளர்க்கப்படுகின்றன. மூன்று ஆண்டுகள் வரை பராமரிப்பு வேலைகள் செய்யப்படுகின்றன. பல தோட்டங்களை ஒன்றாக சேர்த்து ஒரு தோட்டக் காவலர் அல்லது சமூக வன ஊழியர் கிராம சமூக வனக்குழு உதவியுடன் பாதுகாத்து வருகிறார். திருட்டு வெட்டுகள் ஏதேனும் நடந் தால் காவல் துறையினர், ஊர் பஞ்சாயத்து, கிராம வனக்குழு உதவியுடன்தான் குற்றவாளிகளை பிடிக்க நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

506—

## தமிழ்நாடு வன வளர்ச்சி நிதி.

வினா எண். 5320— டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வன வளர்ச்சி நிதி என்பது அரசின் செயல்பாட்டில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன். போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 1991ஆம் ஆண்டில் தமிழ்நாடு வன வளர்ச்சி நிதி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்நிதியின் அடிப்படை நோக்கம் காடு வளர்ப்பு, அபிவிருத்தி பணிகள் ஆராய்ச்சிப்பயிற்சி பணிகள்

மற்றும் சுற்றுப்புறம் பாதுகாப்பு போன்றவைகளாகும். இந்நிதி சுற்றுப் புறம் மற்றும் வனத்துறை செயலரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றது.

507—

சமூகக் காடு வளர்ப்பு ஊழியர் தினக்கூலி.

வினா எண். 5699—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா,

(அ) சமூகக் காடு வளர்ப்பு பணி ஊழியர்களுக்கு தினக்கூலி ரூ.14 ஆக ஊதிய உயர்வு தர அரசு உத்தரவிட்டும், தீவிர மர வளர்ப்புத் திட்டம் மற்றும் வைகை மண்வள பாதுகாப்பு திட்ட தோட்டக் காவலர்கள் இந்த ஊதிய உயர்வு பெறாமல் இருப்பது பற்றி அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சமூகக்காடுகள் வளர்ப்பு பணி ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல தீவிர மர உற்பத்தித் திட்டம் மற்றும் வைகை மண் வள பாகாப்புத் திட்ட தோட்டக் காவலர்களுக்கு தினக்கூலி ரூ. 14 ஆக ஒரு மாதத்தில் 5 விடுமுறை நாட்கள் நீங்கலாக 25 நாட்களுக்கு கணக்கிட்டு மாதம் ரூ. 350 அரசு ஆணை எண் 46, சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை, நாள் 12-1-1990-ன்படி வழங்கப்பட்டு வருகிறது.

சோழகணைச் சாலை.

508—

வினா எண். 6372—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம். அந்தியூர் ஒன்றியம், சோழகணை என்ற ஊருக்கு பாரஸ்டு வழியாக ரோடு அமைத்துக் கொடுக்க 1991-92-ல் எவ்வளவு செலவு செய்ய அரசு எண்ணியுள்ளது ?



விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியிலுள்ள வடபர்கூர் கரப்புக் காட்டில் உள்ள சோழகணை முதல் பெரிய சோழகணை வரையுள்ள சாலையின் நீளம் 10 கி.மீ. இச்சாலையை செப்பனிட 1991-92 - ஆம் நிதி ஆண்டில் நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை.

509—

கல்ராயன்மலை வனப் பொருட்கள்.

வினா எண் 7892—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்ராயன் மலையில் கிடைக்கும் கடுக்காய் போன்ற வனப் பொருட்களை அங்குள்ள கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் முறைப்படி கொள்முதல் செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசுக்கு வருவாய் வரும் வகையில் சங்கத்தின் பணியினை முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) கல்ராயன் மலையில் கிடைக்கும் வனப் பொருட்கள் அனைத்துமே (கடுக்காய் உட்பட) அங்குள்ள கூட்டுறவு சங்கங்களின் மூலம் தான் முறைப்படி கொள்முதல் செய்யப்படுகின்றன.

(ஆ) வினா எழாது.

510—

கைத்தறி நெசவாளர் சங்க தள்ளுபடி நிலுவைத் தொகை.

வினா எண். 8549—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு தள்ளுபடி கொடுத்த வகையில் நிலுவையில் உள்ள தள்ளுபடி தொகைகளை மாநில அரசு உடனே கொடுக்க முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மாநிலத்தின் நிதிநிலை ஒதுக்கீட்டினை கருத்தில் கொண்டு கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு தள்ளுபடி தொகைகளை மாநில அரசு எத்தனை விரைவில் வழங்க இயலுமோ அத்தனை விரைவில் வழங்கி வருகிறது.

511—

பரமக்குடி தொகுதியில் ஊரகச் சாலைகள்.

வினா எண் 2070—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடி தொகுதியில் ஊரக சாலைகள் திட்டத்தின் கீழ் 1991-92-ல் போடப்பட்ட சாலைகளின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பரமக்குடி தொகுதியில் கீழ்வரும் சாலைகள் கிராமச்சாலைகள் திட்டம் 1990-91 மற்றும் 1991-92(தன்னிறைவு திட்டம்)-ல் சேர்க்கப்பட்டு பணி செயலாக்கத்தில் உள்ளது.

1. இராமநாதபுரம் நயினார்கோயில் சாலையில் கி.மீ. 15/8ல் பிரிந்து எஸ்.வி. மங்கலம் வரை சாலை கி.மீ. 0/0—4/0.

2. அரியாங்கோட்டை காவனூர் சாலையிலிருந்து ஆட்டாங்குடி வழியாக கொள்ளங்குளம் செல்லும் சாலை கி.மீ. 0/0—5/5 மற்றும் மருதூர் இணைப்பு சாலை 0/0—0/7.



512—

கோடைமேலழகியன் வாய்க்கால்.

வினா எண், 2447—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தாமிரபரணி வடக்கு கோடைமேலழகியன் வாய்க்காலில் லைனிங் வேலை செய்வதற்கு ஆய்வு செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தாமிரபரணி வடக்கு கோடைமேலழகியன் வாய்க்காலை ரூபாய் 507.23 இலட்சம் செலவில் லைனிங் செய்வதற்கான பணி தாமிரபரணி மற்றும் மணிமுத்தாறு பாசன வாய்க்கால் நவீனப்படுத்தும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டம் குறித்து விரிவான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அவர்களுக்கு 1992 மார்ச் திங்களில் அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

513—

மதிகெட்டான் ஓடைப்பணி.

வினா எண் 4303—திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டு தாலுகாவில் உள்ள மதிகெட்டான் ஓடையில் நடைபெற்று வந்த பணி திடீரென்று நிறுத்தப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) மீண்டும் அப்பணியைத் தொடர்ந்து செயல்படுத்தி முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப் புறுதித் திட்டத்தின்கீழ் ரூ. 37.00 லட்சங்களுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிகெட்டான் ஓடையின் குறுக்கே ஒரு புதிய ஏரி அமைக்கும் பணி 2/87-ல் தொடங்கப்பட்டு, 5/89 வரை நடை பெற்றது. இவ்வேலை ஓடைப்பகுதியில் வரை அமைக்கவும் , கலிங்கல்களை அமைக்கவும், ஏரியின் உட்பகுதியில், தண்ணீர் கொள்ள ஏற்றதா என்பதற்காக வடிவமைப்பு வேண்டியும், நிலத்தடிநீர் பிரிவினரால் தனியே விவரமான ஆய்வு பெற வேண்டியும், சென்னை வடிவமை வட்டம் கண்காணிப்புப் பொறியாளரின் அறிவுரையின் பேரில் பணி நிறுத்தப்பட்டது. இப்பணியின் எஞ்சிய பணிகளை செய்து முடிக்க மூல மதிப்பீட்டின்படி சிறப்பு சிறு பாசன தலைப்பின்கீழ் ரூ. 16.00 லட்சத்திற்கு அரசு ஆணை எண் 2425, பொதுப்பணி துறை நாள் 16–11–1990ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளுக்கான மதிப்பீடு நடப்பு நிதியாண்டின் விலை விகிதப்படி கண்காணிப்புப்பொறியாளர் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். வட்டம் அவர்களால் தயாரிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளர் (சிறு பாசனம்) அவர்களால் ரூ. 41.50 லட்சத்திற்கு 31–1–1992-ல் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பணியினை உடன் மேற்கொள்ள தக்க நடவடிக்கையினை எடுக்குமாறு கண்காணிப்புப் பொறியாளர் செங்கல்பட்டு–எம்.ஜி.ஆர். மாவட்டம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

514—

## உரூர் ஆதிதிராவிடர் தெரு நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண். 584—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உரூர் ஆதி திராவிடர் தெருவிற்கு நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

உரூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு ஒரு பகுதி மட்டும் நிறைவு பெறும் கிராமம். 1972 ஆம் ஆண்டு ஒரு அடிபம்பு திட்டம் அமைக்கப்பட்டு உள்ளது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

515—

## பாறையூர் ஆழ்குழாய்க் கிணறு.

வினா எண். 634—திரு வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அந்தியூர் ஒன்றியம், பாறையூரில் போடப்பட்ட போர் வெல்லில் நல்ல தண்ணீர் உள்ளதால் இத் தண்ணீரை (ஏர் கம்பரசர்) மூலம் பாறையூருக்கும் தம்மநாயக்கனூருக்கும் வழங்க அரசு நவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தம்மநாயக்கனூரில் ஏற்கனவே இரண்டு ஆழ்குழாய் கிணறுகள் மூலம் போதிய குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் பிரம்மதேசம் ஊராட்சியைச் சேர்ந்த பாறையூரில் அமைந்துள்ள ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்து கம்பரசர் மூலம் தம்மநாயக்கருக்கு தண்ணீர் வழங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

516—

## பாதரங்கோட்டை ஆழ்த்துளைக் கிணறு.

வினா எண். 1860—திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை தெற்கு சுப்பிரமணியர் கோவில் அருகில் ஒரு போர் வெல் அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சி துறை அமைச்சர் :

பாதரங்கோட்டை தெற்கு கிராமத்தில் ஒரு யூனியன் நீர்த் தேக்கத் தொட்டியும், 2 கையிறைப்பான்களும் உள்ளதால் சுப்பிர மணியர் கோவில் அருகில் ஒரு ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

517—

அனந்த கோபாலபுரத்தில் ஆழ்துளைக் கிணறு.

வினா எண். 1843—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அனந்த கோபாலபுரம் தொடக்கப்பள்ளிக்கு அருகில் ஒரு போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருவோணம் ஒன்றியம், அனந்தகோபாலபுரத்தில் ஒரு கை யிறைப்பானும், ஒரு மின்விசைத் திட்டமும் நிறைவேற்றப் பட்டுள்ளன. ஆகையால் தொடக்கப்பள்ளிக்கு அருகில் ஒரு போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு தற்போது இல்லை.

518—

திருவள்ளுவர் நகரில் மேல்நிலைத் தொட்டி.

வினா எண். 1948 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

**தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை(தெ-ஐ சேர்ந்த திருவள்ளுவர் நகருக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?**



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெற்கு)-ஐ சேர்ந்த திருவள்ளுவர் நகரில் சுமார் 550 மக்கள் தொகைக்கு ஒரு கையிறைப்பான் உள்ளது. எனவே ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க தற்போது அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

519—

இடையாத்தியில் ஆழ்துளைக் கிணறு.

வினா எண். 2163—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மே) வண்ணான் கொல்லைக்கு ஒரு போர்வெல் போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி மேற்கில் எம்.எஸ்.பி. மூலம் 1983-84-ல் மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. மேற்படியூர் வண்ணான் கொல்லைக்கு ஒரு போர்வெல் போட்டுத் தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

520—

இடையாத்தியில் மேல்நிலைத் தொட்டி

வினா எண் 2216—திரு ஆர். சிங்காரம்.—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மே) வெள்ளாளர் தெருவிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட் டிக்கு தண்ணீர் சப்ளை மிகவும் பற்றாக்குறையாக இருப்பதால் ஒருலட்சம் லிட்டர் கொள்ளும் தொட்டி கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், இடையாத்தியில் (மே) ஒரு கையிறைப்பானும் 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியும் பயனில் உள்ளன. ஒரு லட்சம் லிட்டர் கொள்ளும் தொட்டி கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

521—

இடையாத்தி வெள்ளாளர் தெருவில் ஆழ்துளைக் கிணறு.

வினா எண். 2217—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மே) வெள்ளாளர் தெருவில் மேல்பகுதிக்கும், கீழ் பகுதிக்கும் இரண்டு போர்வெல் போட்டுத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி மேற்கு வெள்ளாளர் தெருவில் மேல் பகுதிக்கும் கீழ் பகுதிக்கும் வெள்ளாளர் தெருவிலுள்ள கையிறைப்பான் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் குடிநீர் விநியோகம் ஆகிறது. இது போதுமானதாகும். இரண்டு போர்வெல் போட்டுத் தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

522—

ஆண்டாகோட்டையில் பொதுக் குழாய் விஸ்தரிப்பு

வினா எண். 2520—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆண்டாகோட்டை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மேலும் 3 பி.எப். விஸ்தரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், ஆண்டாகோட்டையில் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின் விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளது. மேலும் 3 பொதுக் குழாய் விஸ்தரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

523—

வேலாம்பட்டியில் மேல்நிலைத் தொட்டி.

வினா எண். 2225—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி ஊராட்சி வேலாம்பட்டி (மே) குறவன்கொல்லைக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இடையாத்தி ஊராட்சி வேலாம்பட்டி (மே) குறவன் கொல்லைக்கு வேலாம்பட்டியிலுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து 2 குடிநீர் மேடை மூலம் குடிநீர் விநியோகம் ஆகிறது. அது போதுமானதாகும். எனவே ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

524—

பட்டத்தூரணியில் ஆழ்துளைக் கிணறு.

வினா எண். திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் பட்டத்தூரணி வடக்கில் ஒரு போர்வெல் போட்டுத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு., உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், பட்டாத்தூரணி வடக்கில் 1982–83ல் ஏ.ஆர்.பி. மூலம் ஒரு மின்விசைத் திட்டமும் ஒரு கையிறைப்பானும் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஒரு போர்வெல் போட்டுத் தர அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

525—

பின்னவாசல் மேல்நிலைத் தொட்டிக்கு மின் மோட்டார்.

வினா எண். 2538—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் ஆதிதிராவிடர் தெருவில் அமைக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் இணைத்து தண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் கிராமத்தில் 1990–91 நிதியாண்டில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பெற்று மின் இணைப்பு பெற உள்ளது. மின் வாரியப் பணிகள் நிலுவையில் உள்ளன. மின் இணைப்பு பெற்றதும் இத் திட்டம் இக்கிராமத் திற்கு முழுமையாகப் பயன் அளிக்கும்.

526—

முதல்சேரியில் மேல்நிலைத் தொட்டி

வினா எண். 2634—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பழைய முதல்சேரியில் ஆதிதிராவிடர்களுக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், பழைய முதல்சேரியில், பழைய முதல்சேரி குடிநீர்த் திட்டத்தின்கீழ் 5 பொதுக் குழாய் மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை போதுமானவை. மேற்படியூர் ஆதிதிராவிடர்களுக்கு ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

527—

வெளிமடத்தில் ஆழ்துளைக் கிணறு

வினா எண். 2669—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் வெளிமடத்திற்கு ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வெளிமடத்திற்கு கடலோரக் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின்மூலம் இங்கு 5,000லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆகையால் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

528—

செங்கமங்கலத்தில் நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2695—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் கீழக்காட்டிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் கீழக்காட்டில் இரண்டு கையிறைப்பான்கள் பயனில் உள்ளன. மேலும் செங்கமங்கலம் தெற்கு குடிநீர்த் திட்டத்திலிருந்தும் ஒரு குடிநீர் மேடை அமைக்கப்பட்டுள்ளது. இதுவே போதுமானதாகும். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

529—

பைங்கால் நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண். 2718—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பைங்கால் வடக்கு ஆதிதிராவிடர் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், பைங்கால் வடக்கு ஆதிதிராவிடர் தெருவிற்கு 1989ல் கையிறைப்பான் எம்.எஸ்.பி. மூலம் நிறைவேற்றப்பட்டது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு தற்போது இல்லை.

530—

உடையநாட்டில் ஆழ்துளைக் கிணறு.

வினா எண். 3049—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு முஸ்லீம் தெருவில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் முஸ்லீம் தெருவிற்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படியூர் முஸ்லீம் தெருவில் ஒரு போர்வெல் போட்டுக்கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

531—

உடையநாடு தென் பகுதியில் ஆழ்துளைக் கிணறு.

வினா எண் 3052—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு ஆதிதிராவிடர் தெருவில் தென்பகுதியில் ஒரு போர் வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு ஆதிதிராவிடர் தெருவில் ஒரு கைபம்பு நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மேற்படி கிராமத்தில் தென்பகுதியில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

532—

சுப்பம்மாள் சத்திரத்தில் ஆழ்துளைக் கிணறு.

வினா எண். 3151—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி, சுப்பம்மாள் சத்திரத்தில் இராட்சத போர்வெல் அமைத்து நல்ல குடிதண்ணீர் கடற்கரை மக்களுக்கு சப்ளை செய்கின்ற திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சுப்பம்மாள் சத்திரத்தில் தற்போது கடலோர கிராமங்கள் குடிநீர்த் திட்டம் (குரூப் 2) மூலம் ஒரு பொது மேடை அமைத்து நீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிராமத்தில் இராட்சத போர்வெல் அமைத்து நல்ல குடிதண்ணீர் கடற்கரை மக்களுக்கு சப்ளை செய்ய அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

533—

பூம்புகார் தொகுதியில் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 3305—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பூம்புகார் தொகுதியில் உள்ள 15 மீனவர் குப்பங்களையும் ஒருங்கிணைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க அரசு முயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் தொடங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். பூம்புகாரில் உள்ள மீனவர் குப்பங்களை சீர்காழி மற்றும் செம்பனார்கோவில் ஒன்றியங்களில் உள்ள கடலோர கிராமங்களுக்குரிய குடிநீர்த் திட்டத்தில் சேர்த்து குடிநீர் வழங்குவது பற்றி ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

534—

சென்னையில் குடிநீர் விநியோகத்திற்காக பயன்படுத்தப்பட்ட தனியார் லாரிகள்.

வினா எண். 4451—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிநீர் விநியோகத்திற்கென சென்னை மாநகரில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் டாங்கர் லாரிகள் எண்ணிக்கை எவ்வளவு ?



(ஆ) இந்த வாகனங்கள் எந்த அடிப்படை நெறிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்படுகின்றன ?

(இ) டெண்டர் மூலம் அன்றி தனி பேச்சு அடிப்படையில் இந்த வாகனங்கள் கடந்த 1989-90, 1990-91 மற்றும் 1991 ஜனவரியில் அமர்த்தப்பட்டதா ?

(ஈ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சி துறை அமைச்சர் :

(அ)

| | டாங்கர் லாரிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1989-90 | 382 |
| 1990-91 | 385 |
| 1991-92 | 119 |

(ஆ), (இ) மற்றும் (ஈ). ஒப்பந்தப்புள்ளிகள் பத்திரிகை விளம்பரம் மூலம் பெற்று அதில் கிடைத்த குறைந்த விலைப்புள்ளியை ஒப்புதல் பெற்று அதன் அடிப்படையில் டாங்கர் லாரிகள் அமர்த்தப்பட்டன. இதன்படி 1989-90 ம் ஆண்டில் மட்டும் 6,000 மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு உள்ள டாங்கர் லாரிகள் டெண்டர் மூலம் பெற்ற குறைந்த விலைப் புள்ளியின் அடிப்படையில் அமர்த்தப்பட்டன. 12,000 லிட்டர் கொள்ளளவு உள்ள டாங்கர் லாரிகளை பொறுத்தமட்டில் இதற்குக் கீழ் கொள்ளளவு உள்ள லாரிகளுக்கு பெற்ற குறைந்த விலைப் புள்ளியின் விகிதாச்சார அடிப்படையில் இந்த டெண்டரில் பங்கேற்றவர்களிடமிருந்து மட்டுமே லாரிகள் அமர்த்தப்பட்டன. மேலும் முந்தைய ஆண்டு அமர்த்தப்பட்ட இரண்டு டாங்கர் (Two Tank Lorry) லாரிகளும் முந்தைய ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட வாடகையிலேயே தொடர்ச்சியாக அமர்த்தப்பட்டன. 12,000 லிட்டர் கொண்ட டாங்கர் லாரிகள் 292-ம், இரண்டு டாங்கர் லாரிகள் 37-ம் வாடகைக்கு அமர்த்தப்பட்டன.

535—

சத்துவாச்சாரியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்.

வினா எண். 5921—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், வேலூர் தொகுதியில் சத்துவாச்சாரி பேரூராட்சிப் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 செப்டம்பர் 25

(ஆ) ஆம் எனில், எப்போது? எவ்வளவு, தொகை மதிப்பீட்டில்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

536—

## 48. புதூரில் ஊராட்சிமன்றக் கட்டிடம்.

வினா எண். 6300—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மொடக்குறிச்சி தொகுதி 48. புதூரில் ஒரு ஊராட்சி மன்றக் கட்டிடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

மொடக்குறிச்சி தொகுதி 48. புதூரில் ஒரு ஊராட்சி மன்றக் கட்டிடம் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1991–92-ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

537—

## அனுமன்பள்ளியில் ஊராட்சி கட்டிடம்.

வினா எண் 6301—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மொடக்குறிச்சி தொகுதி அனுமன்பள்ளியில் ஒரு ஊராட்சிமன்றக் கட்டிடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

மொடக்குறிச்சி தொகுதி, அட்டவணை அனுமன்பள்ளியில் ஒரு ஊராட்சிமன்றக் கட்டிடம் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

538—

## சித்தரெட்டிப்பாளையத்தில் கசிவுநீர்க் குட்டை.

வினா எண் 5923—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், பச்சாம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த சித்தரெட்டிபாளையத்திற்கு அருகில் கசிவு நீர்க்குட்டை கட்டி தண்ணீர் தேக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், 1991-92-ல் பணி நடைபெற ஏற்பாடு செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பச்சாம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த சித்தரெட்டிபாளையத்திற்கு அருகில் கசிவு நீர்க்குட்டை அமைக்கும் பணியினை மேற்படி ஊராட்சியில் ஒப்புதல் பெற்றபின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 1992-93-ஆம் ஆண்டில் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

539—

## தலைமைச் செயலகத்தில் அமுதம் சிறப்பங்காடி.

வினா எண் 8245—திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தலைமைச் செயலகத்தில் உள்ள அமுதம் சிறப்பங்காடி பெரும்பாலான நேரங்களில் மூடிக்கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த அங்காடியின் வியாபாரத்தை அதிகரிக்க அதிக நேரம் திறந்து வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள அனைத்து அங்காடிகளும் காலை 9.30 முதல் 10.00 மணிவரை, மதியம் 1.00 முதல் 3.00 மணிவரை மற்றும் மாலை 5.30 மணி முதல் 6.00 மணி வரை மட்டும் பணிபுரிய வேண்டும் என்ற அரசு ஆணைகளுக்கு இணங்க தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள அமுதம் சிறப்பு அங்காடியும் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இந்த நேர மாற்றத்தால் விற்பனை தொகையில் எவ்வித மாற்றமும் இல்லை. ஊழியர்கள் அந்த நேரத்திற்கு குறித்தாற்போல் அவர்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்கின்றனர்.

10—

## கெங்கவல்லியில் தொழிற்பயிற்சி நிலையம்.

வினா எண் 8965—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம், கெங்கவல்லியில் பயன்படுத்தாமல் இருக்கும் 10 ஏக்கர் நிலத்தைக் கொண்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம் கெங்கவல்லியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.



541—

## பாரம் தூக்கும் தொழிலாளர் பணி நிரந்தரம்

வினா எண் 9275—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பாரம் தூக்கும் தொழிலாளர்களுக்கு நிரந்தர சம்பளம் வேண்டி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) பாரம் தூக்கும் தொழிலாளர்களின் தொழிலின் தன்மையைக் கருதி, அவர்களை நிரந்தரம் செய்யும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் இத்தொழிலாளர்களுக்கு அரசினால் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஆ) எழாது.

542—

## ஆதிதிராவிடருக்கு தனி பயிற்சி நிலையம்.

வினா எண் 3439—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் கலந்துகொள்ளும் ஆதிதிராவிட இன வேட்பாளர்களுக்கு பயிற்சி கொடுக்க தனி பயிற்சி நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1992 செப்டம்பர் 25

543—

**ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் எண்ணிக்கையை உயர்த்துதல்.**

வினா எண் 4867—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், 1991–92-ஆம் ஆண்டு எத்தனை மாணவர்கள் அதிகப்படியாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிகளில் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையை உயர்த்த ஆணைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) 1991–92-ல் மாணவர்கள் அதிகப்படியாக சேர்த்துக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

544—

**பாலக்குட்டை—தும்பல் சாலை.**

வினா எண் 5158—திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தர்மபுரி மாவட்டம், சித்தேரி மலைப்பகுதி பாலக்குட்டை முதல் சேலம் மாவட்டம் தும்பல் வரையில் சாலை அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :



1992 செப்டம்பர் 25]

(அ) மற்றும் (ஆ) எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செயல்படுத்துவதற்கான திட்டப் பணிகள் பட்டியலில், தர்மபுரி மாவட்டம், சித்தேரி மலைப்பகுதி பாலக்குட்டை முதல் தும்பல் வரை சாலை போடும் பணி சேர்க்கப்பட்டுள்ளது. நிதி வசதிக்கேற்ப வரும் ஆண்டுகளில் இப்பணியை மேற்கொள்வது பற்றிக் கருதப்படும்.

545—

**கல்ராயன் மலைப்பகுதியில் சாலை வசதி.**

வினா எண். 8264—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்ராயன் மலைப்பகுதியில் உள்ள கிராமங்களுக்கு சாலை வசதி செய்து தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன். ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கல்ராயன் மலைப்பகுதியிலுள்ள கிராமங்களுக்கு மலைவாழ் மக்கள் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலை வசதி செய்து தரப்பட்டு வருகிறது. 1991-92 ஆம் ஆண்டிற்கான துணைத் திட்டத்தில் கல்ராயன் மலைப் பகுதியின் அடியிற்கண்ட சாலை வசதிகள் செய்து தர ஆணை வெளியிடப்பட்டு விரிவான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

| | | உத்தேச மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | சேலம் மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் சூலாங்குறிச்சிக்கு செல்லும் சாலையில் கி.மீ. 1/0-லிருந்து கிளக்காம் பாடிக்கு செம்பரக்கரை, கோவில்புதூர் வழியாக சாலை அமைத்து மேம்பாடு செய்தல்—கி.மீ.2 0/0—11/0 வரை | 100 |

2. சேலம் மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் கருமாந்துரை முதல் ஈச்சங்காடு வரை தோட்டித் துறை வழியாக சாலை அமைத்து மேம்பாடு செய்தல்—கி.மீ. 9/9—11/6. 75

3. தென் ஆற்காடு மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் கருமாந்துரை முதல் மணியார்பாளையம் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல் தார் சாலையாக மேம்படுத்துதல்—கி.மீ. 0/0—11/0 135

மொத்தம் 310

மேலும், 1992–93 ஆம் ஆண்டு துணைத் திட்டத்தின் கீழ் பரிசீலனை செய்யப்படவுள்ள பட்டியலில் கீழ்க்கண்ட பணிகள் இடம் பெற்றுள்ளன :—

| | மதிப்பீடுகள். (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. கருமாந்துரை முதல் வெள்ளிமலைக்கு புதூர் தெக்கன்பாடு மேலக்காடு வேலூர் நாளம்பட்டு வழியாக சாலை அமைத்து மேம்பாடு செய்தல் 0/0—11/0. | 65 |
| 2. காக்கிரன் வளை முதல் நடுபத்து வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0—5/0 வரை சேலம் மாவட்டம் கல்ராயன்மலை | 40 |
| 3. வெள்ளிமலை பரிசும் சாலையில் கிமீ. 7/4 லிருந்து கனியம் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0—13/0 (தென் ஆற்காடு மாவட்டம் கல்ராயன் மலை) | 218 |
| மொத்தம் | 325 |



மேலும் அரசாணை எண் 1092, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 25—6—1990-ல் அனுமதிக்கப்பட்ட தொகுப்பு பட்டியலில் கல்ராயன் மலைப் பகுதியில் கீழ்க்கண்ட பணிகள் இடம் பெற்றுள்ளன :—

| சாலை விபரம். | மதிப்பீடுகள். (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. சீராப்பட்டு முதல் தெக்கம்பாடு வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல். | 45.00 |
| 2. சீராப்பட்டு முதல் போரசம்பட்டு வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல். | 35.00 |
| 3. வெள்ளிமலை முதல் மடுவூர் வரை சாலை அமைத்து மேல்பாடு செய்தல். | 135.00 |
| 4. சீராப்பட்டு முதல் பெருக்கன்சேரி வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல். | 60.00 |
| 5. கிளாக்காடு முதல் குடாரம் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல். | 15.00 |
| 6. தெக்கம்பட்டு முதல் பெருக்கன்சேரி வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல் | 132.0 0 |
| 7. பெருமானத்தம் முதல் கிளாக்காடு வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல். | 66.00 |
| 8. தும்பல் முதல் மேரூர் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல். | 132,.00 |
| 9. தும்பல் முதல் மோட்டியானூர் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல். | 165.00 |
| 10. மல்லபாடி முதல் பரிசும் வரை தார் சாலையாக மேம்பாடு செய்தல். | 67.50 |
| 11. முட்டம்பட்டி முதல் சியகலூர் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல். | 66.0[illegible] |
| 12. குள்ளம்பட்டி முதல் புது பாலவட்டு வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல். | 66.00 |

| | | |
|---|---|---|
| 13. | பாலப்பாடப்பட்டு முதல் புதுபாலவட்டு வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல் | 83.00 |
| 14. | வாஞ்சிருளி முதல் வள்ளிமல்லி வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல் | 16.00 |
| 15. | வாஞ்சிருளி முதல் தோம்பரர்ம்பட்டு வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல் | 83.00 |
| 16. | பொட்டியம் முதல் கலியம் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல் | 126.00 |
| 17. | கனியம் முதல் தொரழ்கூர் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல் | 126.00 |
| 18. | தொரங்கூர் முதல் காட்டுகோட்டை வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல் | 306.00 |
| 19. | வெள்ளிமலை முதல் தேவனூர் வரை சாலை அமைத்து தார் சாலையாக மேம்படுத்துதல். | 67.50 |
| | மொத்தம் | 2,022.00 |

மேற்கண்ட தொகுப்பு பட்டியலில் உள்ள பணிகள் முக்கியத்துவத்தை பொறுத்தும், நிதி ஒதுக்கீடு வழங்கப் படுவதைப் பொறுத்தும் இப்பணிகள் வரும் ஆண்டுகளில் படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும். மேற்படி பணிகள் வனத்துறையின் அனுமதி பெற்ற பின்னர் எடுத்துச் செய்யப் படும்.

546—

## மீனவர்களுக்கு மானிய உதவி.

வினா எண். 11223—திரு. எம் ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீனவர்களுக்கு மீன்பிடிக் கருவிகள், வலைகள் மற்றும் கட்டுமரங்களுக்கான மரங்கள் வாங்க அரசு மானிய உதவியுடன் கடன் உதவிகள் வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன ?





விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப் பினர்களாக உள்ள மீனவர்களுக்கு மாநில அரசு அளித்து வரும் 20 சதவீதம் மானியத் திட்டத்தின் கீழ் நைலான் வலை வாங்கும்பொருட்டு அதிகபட்சமாக ரூ. 500 வீதமும் கட்டு மரங்களுக்கான மரங்கள் வாங்குவதற்கு அதிக பட்ச மாக ரூ. 3000 வீதமும் மானியம் வழங்கப்படுகிறது.

547—

## தொழில் மையங்கள் மூலம் தகவல்.

வினா எண். 7997—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா :

மாவட்டங்களில் அரசின் தொழில் கொள்கை மற்றும் திட்டங்களின் விவரங்களை தொழில் முனைவோர் அறியும் வகையில் மாவட்ட தொழில் மையங்களில் செயல்படுத்த அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ் நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

அரசு கொள்கையையும் அரசின் திட்டங்களையும் மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் தகவல் பரப்புக் கூட்டத்தின் மூலம் தொழில் முனைவோர் களுக்கு தெரிவிக்கப்படுகிறது. சென்னை மாநகரில் தொழில் இயக்ககம் இதைச் செய்து வருகிறது.

548—

**லெட்சுமிபுரத்தில் தொழிற்பேட்டை.**

வினா எண். 8917—திரு. ஆ. பாலையா : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளச்சல் தொகுதி லெட்சுமிபுரத்தில் அரசு சார்பில் தொழில் பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) குறைந்தபட்சம் 10 தொழில் முனைவோர்களாவது குளச்சல் தொகுதி லெட்சுமிபுரத்தில் தொழில் துவங்க முன் வருவார்களேயானால் சிட்கோ தகுந்த நிலத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் உதவியுடன் தேர்ந்தெடுத்து தொழிற்பேட்டை அமைக்க தயாராக உள்ளது.

549—

**மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ்.**

வினா எண். 9430—திரு. சி. தர்மலிங்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட ஐவ்வாது மலையில் உள்ள மலைவாழ் மக்கள் சாதிச்சான்று பெற வேண்டுமானால் கோட்டாட்சித் தலைவர் அவர்களிடம்தான் பெற வேண்டி உள்ளதால் அம்மக்களுக்கு விரைவாக சாதிச்சான்றிதழ் கிடைக்க வட்டாட்சியர் மற்றும் ஒன்றிய ஆணையாளர் அளவில் சாதிச்சான்று வழங்க அரசு ஆவன செய்யுமா ?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

வட்டாட்சியர்களிடமிருந்து பொய்ச்சாதிச்சான்று பெறுவதைத் தடுக்கவும், உண்மையான பழங்குடியினர் மற்றும் மலை சாதியினர் அரசு வழங்கும் சலுகையைப் பெறவும், அவர்களுக்கு வழங்கவிருக்கும் சாதிச்சான்றுகள் பல நிலைகளில் தீர விசாரணை செய்ய வேண்டியது அவசியமானதாலும் தற்போது ஒரு நபருக்கு ஒரு நிரந்தரச் சாதிச்சான்று வழங்கப் படுவதால் அதைத் தீர விசாரணை செய்து வழங்க வேண்டியப் அவசியமானதாலும், அனைத்து மலை சாதியினர் மற்றும் பழங்குடியினர் சாதிச்சான்றுகளை வருவாய்க்கோட்ட அலுவலர்கள் வழங்குவதுதான் முறையானது. மேலும் இச் சாதிச்சான்று கோட்டாட்சியர் வழங்குவதைத்தான் மைய அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, அணைக்கட்டு தொகுதிக்குப்பட்ட ஜவ்வாது மலையில் உள்ள மலைவாழ் மக்களுக்கு, கோட்டாட்சித் தலைவரால் சாதிச்சான்று வழங்கப் படுவதைத் தவிர்த்து வட்டாட்சியர் மற்றும் ஒன்றிய ஆணையரால் வழங்க ஏற்பாடு செய்வது சாத்தியமாகாது.

550—

**கிராமப்புற பள்ளிகளின் அறிவுக்கூர்மை மிக்க மாணவர்களுக்கு இலவச உணவு உறைவிடம்.**

வினா எண். 1827—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிராமப்புற பள்ளிகளில் பயிலும் அறிவுக்கூர்மை மிக்க வசதியில்லாத மாணவர்களை தெரிந்தெடுத்து அவர்களுக்கு அரசுச் செலவில் உணவு, உறைவிடம் வசதி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

அப்படிப்பட்ட திட்டம் இல்லை. ஆயினும், கிராமப்புறங் களிலுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பயிலும் அறிவுக் கூர்மை மிக்க மாணவர்களையும் மாணவிகளையும் ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் 100

[1992 செப்டம்பர் 23

மாணவர்கள் வீதம் தேர்வு செய்து, 50 மாணவர்களுக்கும், 50 மாணவிகளுக்கும் 9 முதல் 12 ஆம் வகுப்புவரை ஆண்டுக்கு தலா ரூபாய் ஓராயிரம் உதவித் தொகை 1991-92-ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

551—

### பள்ளிகளில் புதிய கட்டிடங்கள்.

வினா எண். 2573—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

சேலம் மாவட்டத்தில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ள பள்ளிகளில் போதிய கட்டிட வசதி இல்லாவிடில் புதிய கட்டிடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

தற்போது இல்லை.

552—

### உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண். 3234—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1991-ஆம் வருடம் சேரன்மகாதேவி தொகுதி பள்ளக்கால் பொதுக்குடி அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலை பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இல்லை.



1992 செப்டம்பர் 25]

553—

### பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 4269—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குத்தாலம் தொகுதி, திருவாவடுதுறை அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு புதிதாக கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இல்லை.

554—

### பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 4665—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை ஒன்றியம், புத்தாம்பூரில் பள்ளி, கூரைக் கொட்டகையில் செயல்பட்டு வருவதால் இப்பள்ளிக்கு கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இல்லை.

555—

### ஆசிரியர்களுக்கான ஒரு வழிப்பயணச் சலுகை வழங்குவதில் முறைகேடுகள்.

வினா எண். 5436—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆசிரியர்களுக்கான ஒரு வழிப்பயணச் சலுகை வழங்குவதில் முறைகேடுகள் நடப்பதாக தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் நத்தம் வட்டாரம் இளை அரசுக்கு முறையீடு செய்ததா ?

[1992 செப்டம்பர் 25

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

556—

100 சதவீத கல்வியறிவுத் திட்டம்.

வினா எண். 8202—திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் 100 சதவீத கல்வியறிவு பெற மத்திய அரசு கல்வித் திட்டத்தில் உள்ளது போல் மாநில அரசு கல்வி திட்டத்திலும் "Each all and Teach all" என்ற கொள்கை கொண்டு வரப்படுமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

மைய அரசும் மாநில அரசும் சேர்ந்து செயல்படுத்திவரும் 1991-92-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 100 சதவீத எழுத்தறிவுத் திட்டம் 1993-94-இல் நிறைவு பெற்றிட வகை செய்யப்பட்டுள்ளது. எனவே இதற்கென மாநில அரசின் தனித் திட்டம் ஏதும் கொண்டு வரும் உத்தேசம் இல்லை.

557—

கல்வி நிலையங்களில் காவல் நிலையம்.

வினா எண். 8726—திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வெளிநாடுகளில் கல்வி நிலையங்களில் காவல் நிலையம் இருப்பதுபோல், இங்கேயும் கல்வி நிலையங்களில் காவல் நிலையம் ஏற்படுத்தி மாணவர்களை நெறிப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

558—

அந்தியூரில் செங்கல் சூளையில் சுகாதாரக் கேடு.

வினா எண். 5088—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதியில் அந்தியூர் நகரில் செங்கல் சூளை வைக்கப்பட்டுள்ளதால் மக்களுக்கு சுகாதாரக் கேடு ஏற்பட்டு மக்கள் நோய் வாய்ப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ). அந்தியூர் பேரூராட்சிப் பகுதியில் ஐந்து செங்கல் சூளைகளும் குடியிருப்பு மற்றும் போக்குவரத்தை ஒட்டியுள்ள பகுதியில் உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்பட்டு வருவதால், மேற்படி செங்கல் சூளைகளை அப்புறப்படுத்த அந்தியூர் பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

559—

தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம்.

வினா எண். 5490—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் எங்கெங்கு செயல்படுத்தப்படுகின்றன ?

(ஆ) அவை செயல்படும் முறைகள், எந்தெந்த அடிப்படையில் நெறிமுறைப்படுத்தப்பட்டுள்ளன'

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) கீழ்க்கண்ட தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டங்கள் செயல்படுகின்றன :—

(1) காஞ்சிபுரம் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம்—காஞ்சிபுரம்.
(2) ஈரோடு கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம்—ஈரோடு.
(3) சேலம் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம்—சேலம்.
(4) மதுரை கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம்—மதுரை.

(ஆ) அனைத்து திட்டங்களுக்கும் தேவையான நூல் வகைகள், கிடைக்க வழிவகை செய்தும் அவைகளில் உற்பத்தி, விற்பனை மற்றும் செயல்திறன் ஆகியவைகளை ஆய்வு செய்து, எங்கெங்கு இடர்பாடுகள் ஏற்படுகின்றதோ, அவைகளை சீர்செய்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவைகளின் செயல்பாடு குறித்து மாதாந்திர ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அவ்வாய்வுக்கூட்டங்களில் உற்பத்தி விற்பனை மற்றும் லாப நட்டங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு குறைபாடுகள் தெரியவரின் அவைகள் நெறிமுறைப்படுத்தப் பட்டு வருகின்றன.

மேலும் இத்திட்டங்களின் வரவு-செலவுகள் ஆண்டு தோறும் கூட்டுறவு தணிக்கை துறை மூலம் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவுச் சங்க சட்டவிதிகளுக்கும், திட்ட விதிகளின்படியும் நிர்வாகம் செயல்பட்டு வருகிறது.

560—

## அம்மணி சத்திரத்தில் புயல் பாதுகாப்பு இல்லம்.

வினா எண். 6904—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம் அம்மணி சத்திரத்தில் சத்திரம் இடிக்கப்பட்ட இடத்தில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

164978

561—

## சித்தாக்காட்டிற்குத் தெரு விளக்கு.

வினா எண். 7056—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம். நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த சித்தாக்காட்டிற்கு தெருவிளக்கு அமைத்துக் கொடுக்கவும், குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு போட்டுக் கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த சித்தாக்காட்டிற்கு ஒற்றை விளக்குகள் அமைக்கக் கோரியோ தெருவிளக்குகள் பொருத்தக் கோரியோ விண்ணப்பம் ஏதும் மின் வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை.

562—

## ஆலங்குளத்தில் மின் விளக்குகள்.

வினா எண். 8711—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆலங்குளம் ஒன்றியம் ஆலங்குளம் நகரத்தில் அண்ணா நகர் பகுதியில் மின் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

ஆலங்குளம் ஒன்றியம் ஆலங்குளம் நகரத்தில் அண்ணா நகர் பகுதியில் 18—4—1992 அன்று 16 குழல் விளக்குகள் (1×40 வாட்) அமைக்கப்பட்டுள்ளன.

563—

இராமநாதபுரம் மாவட்டம் சாலைகளைப் பழுது பார்த்தல்.

வினா எண். 303—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கண்மாய் கரைகளின் மேலும், அதன் அருகிலும், சாலைகள் போடுவதால் மழைக் காலங்களில் அரிப்பு ஏற்பட்டு சாலைகள் பழுதடைவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அக்குறையைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டங்களில் பெரும்பாலான கிராமங்கள் கண்மாய்கள் கரைகளில் மேலும் அதன் அருகிலும் அமைந்துள்ளன. எனவே சாலைகள் கண்மாய் கரைகளின் மேலோ அல்லது அருகிலோ அமைக்கப் படுகின்றன. மழைக்காலங்களில் ஏற்படும் சாலைகளின் அரிப்பை ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பொறுத்தவரையில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்தும் அரசின் சிறப்பு நிதியிலிருந்தும் பழுதுகள் நீக்கப்பட்டு சரி செய்யப்படுகின்றன.



564—

கடற்கரை வாய்க்கால் மராமத்து

வினா எண். 1160—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக் கரையிலுள்ள கடற் கரை வாய்க்காலை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் ஏரிப்புறக்கரை ஊராட்சி யிலும் போதிய நிதி வசதி இல்லாததால் கடற்கரை வாய்க்காலை மராமத்து செய்து கொடுக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

565—

திருச்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தில் வீடுகள் இணைப்பு

வினா எண். 1800—டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி நகரில் செயல்படுத்தப்படும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தில் சாக்கடை இணைப்பிற்காக நகராட்சியே வீடு களுக்கு இணைப்பு கொடுத்து அதற்கான தொகையை தவணை முறையில் வீட்டு வரியுடன் சேர்த்து வசூலிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பாதாளச் சாக்கடை திட்ட துணை விதியின்படி, வீடுகளுக்கு சாக்கடைஇணைப்பதற்கான செலவினை அந்தந்த வீட்டின் உரிமை யாளரே ஏற்கவேண்டும். இதற்கான செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து அளித்து, பின்னர் வீட்டு உரிமையாளர்களிடமிருந்து தவணை முறையில் வசூலிக்கும் அளவுக்கு நகராட்சியின் நிதிநிலை இடந்தராது.

[1992 செப்டம்பர் 25

566—

வெட்டுவாக்கோட்டை—கருப்பட்டித் தெரு சாலை.

வினா எண். 1867— திரு. ஆர். சிங்காரம்—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம் பாதரங் கோட்டை (வ) ஊராட்சி வெட்டுவாக்கோட்டை—கருப்பட்டித் தெரு வரை செல்லும் கப்பிச் சாலையைத் தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஊராட்சி ஒன்றியம் பாதரங்கோட்டை (வ) ஊராட்சி வெட்டுவாக்கோட்டை—கருப்பட்டித்தெரு வரை செல்லும் சாலை ஒரு கிலோ மீட்டர் நீளமுள்ள இனம் பிரிக்கப்படாத ஊராட்சி பராமரிப்பில் உள்ள சாலையாகும். அச்சாலை சிவப்பு கப்பி சாலையாக உள்ளது. அச்சாலையில் பேருந்து போக்குவரத்து இல்லாததால் இதனைத் தார்ச் சாலையாக மாற்றிட செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

567—

மேலக்கொள்ளுக்காடு சாலை.

வினா எண். 1870—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம் பாதரங் கோட்டை (வ) ஊராட்சி கருப்பட்டித் தொகுதியிலிருந்து மேலக் கொள்ளுக்காடு வரை சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம் பாதரங் கோட்டை (வ) ஊராட்சி கருப்பட்டித் தெருவிலிருந்து மேலக் கொள்ளுக்காடு வரையுள்ள சாலை அமைக்க செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

568—

பூவலூரில் மேல்நிலைத் தொட்டி.

வினா எண் 2309—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் பூவலூர் தெற்கு தெருவில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். நடப்பு நிதியாண்டில் (1992–93) துரித கிராமக் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட உள்ளது.

569—

வழுதலை வட்டத்திற்கு மேல்நிலைத் தொட்டி.

வினா எண். 2311—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் வாட்டாத்திக் கோட்டையைச் சேர்ந்த வழுதலை வட்டத்திற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

வழுதலை வட்டத்தில் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் 4 பொது குடிநீர் குழாயுடன் கூடிய ஒரு மின்விசைத் திட்டம் பயனில் உள்ளது. இது போதுமானதாகும். ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

570—

வா. கொல்லைக்காட்டில் ஒரு ஆழ்துளைக் கிணறு.

வினா எண். 2315—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் வா. கொல்லைக் காட்டில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

வா. கொல்லைக்காட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பயனில் உள்ளது. ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

571—

படப்பனார் வயலில் ஆழ்துளைக் கிணறு.

வினா எண் 2515—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், படப்பனார் வயல் வடக்கில் ஒரு போர்வெல் போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், படப்பனார் வயல்கிராமத்தில் 1982–83–ல் ஏ.ஆர்.பி. மூலம் ஒரு கையிறைப்பானும் ஒரு மின் விசைத் திட்டமும் நிறைவேற்றப்பட்டு உள்ளன. படப்பனார் வயல் வடக்கில் ஒரு போர்வெல் போட்டுத்தர அரசிடம் செயற் குறிப்பு தற்போது இல்லை.

572—

செங்கமங்கலம் மேற்கு—மேல்நிலைத் தொட்டி.

வினா எண். 2687—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் மேற்கு பகுதிக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் மேற்கு பகுதியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

573—

தொந்துபுளிக்காட்டில் மேல்நிலைத் தொட்டி.

வினா எண். 2699—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பழைய நகரம் ஊராட்சியை சேர்ந்த தொந்துபுளிக்காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பழைய நகரம் ஊராட்சியைச் சேர்ந்த தொந்துபுளிக் காட்டில் இரண்டு கையிறைப்பான்கள் பயனில் உள்ளன. ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

574—

முதல்சேரி கீழ்த்தெருவில் ஆழ்துளைக் கிணறு.

வினா எண். 2753—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், முதல்சேரி கீழ்த்தெருவில் ஆழ்குழாய்க் கிணறு (Bore well) ஒன்று அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

முதல்சேரி மெயின் ரோட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 2 பொது குழாய் மேடைகள் இயங்கி வருவதால் மேற்படியூர் கீழ்த்தெருவில் ஆழ்குழாய்க் கிணறு ஒன்று அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

575—

கீழக்காட்டில் மேல்நிலைத் தொட்டி.

வினா எண் 3042—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியங்கோட்டை கீழக்காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியங்கோட்டை கீழக்காட்டில் ஒரு கைப்பம்பு இயங்கி வருகிறது. இங்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிடத்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

576—

பெருமகளூர் மேல்நிலைத் தொட்டி.

வினா எண். 3089—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை உடன் இயங்க வைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மூலம் 30-3-1991 முதல் பொது மக்களுக்கு தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

577—

பெருமகளூரில் குழாய் இணைப்பை விஸ்தரித்தல்.

வினா எண். 3095—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரம் அண்ணா நகர் வடக்குத் தெருவிற்கு குடிதண்ணீர் வழங்க குழாய் இணைப்பை விஸ்தரிப்பு செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பெருமகளூர் பேரூராட்சி அண்ணாநகர் வடக்குத் தெருவிற்கு குடிதண்ணீர் வழங்கக் குழாய் இணைப்பை விஸ்தரிப்பு செய்து கொடுக்க தனியாக செயற்குறிப்பு இல்லை.

578—

பருத்திக் குளத்தைப் பராமரித்தல்.

வினா எண். 3150 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சியில் சுப்பம்மாள் சத்திரத்தில் உள்ள பருத்தி குளத்தை புல்டோசர் வைத்து பராமரித்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பருத்திக் குளத்தைப் பராமரித்துக் கொடுக்க இவ்வாண்டில் செயற்குறிப்பு ஏதுமில்லை. நிதி நிலைக்கேற்ப, 1992–93ம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் இவ்வேலையை மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

579—

ஏனாதிகரம்பையில் ஆழ்துளைக் கிணறு.

வினா எண். 3178— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஏனாதிகரம்பை ஆற்றங்கரைக்கு மேற்கில் வாழும் முத்தரையர் தெரு மக்களுக்கு தனியாக ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், ஏனாதிகரம்பையில் ஏ.ஆர்.பி. மூலம் 1991–92-ல் மின்விசைத் திட்டமும், வறட்சி நிவாரணத்தின் மூலம் 1989–90-ல் ஒரு கையிறைப்பானும் பயனில் உள்ளன. ஆகையால் மேற்படி கிராமத்தில் ஆற்றுக்கு மேற்கில் வாழும் முத்தரையர் தெரு மக்களுக்கு தனியாக ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

580—

சேலம் டால்மியா குடிநீர்த் திட்டம்.

வினா எண் 4831—திரு. எம். நடேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் டால்மியா குடிதண்ணீர் திட்டம் நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேலம் டால்மியா குடிதண்ணீர் திட்டம் நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

581—

கருவந்தா கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு.

வினா எண் 4907—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், கருவந்தா கிராமத்தில் வடக்குத் தெருவில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆலங்குளம் ஒன்றியம், கருவந்தா கிராமத்தில் மக்கள் தொகை 1,850 ஆகும். இது ஒரு பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற கிராமமாகும். இங்கு நான்கு கையிறைப்பான்கள் உள்ளன. கருவந்தா கிராமத்தில் வடக்கு தெருவில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

582—

செய்யார் தொகுதியில் குடிநீர்த் திட்டங்கள்.

வினா எண் 5026—திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செய்யார் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்ட 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் இவற்றை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணிகள் ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) செய்யார் தொகுதியில் 8 குடிநீர்த் திட்டங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றில் 6 திட்டங்களுக்கு ஆய்வுப் பணிகள் முடிக்கப்பெற்று இதர பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. எஞ்சிய 2 திட்டங்களுக்கும் ஆய்வுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. எந்த குடிநீர்த் திட்டமும் நிறுத்தி வைக்கப்படவில்லை.

583—

ஆதிதிராவிடர் மயானச்சாலை ஆக்கிரமிப்பு.

வினா எண் 5351—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) வேதாரண்யம் தொகுதியில் ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதிகளில் அம்மக்கள் இடுகாட்டிற்குச் செல்லும் சாலையை ஒட்டிய பட்டா நிலமுடையவர்களால் சாலை ஆக்கிரமிக்கப்பட்டு நாளுக்கு நாள் குறுகி வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆக்கிரமிப்பு பற்றி புகார் ஏதுமில்லை.

(ஆ) வினா எழாது.

584—

கொட்டாரம் கிராமத்தில் தொகுப்பு வீடுகள்.

வினா எண் 5399—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதி, கொட்டாரம் கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்களுக்கு 1991-92-ம் ஆண்டில் 203 வீடுகள் மங்களூர் ஒன்றியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேலை நடைபெற்று வருகிறது. 1992–93-ம் ஆண்டு திட்டத்தில் மங்களூர் ஒன்றியத்தில் கொட்டாரம் கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

585—

## மயிலாடுதுறை பாதாளச் சாக்கடைத் திட்டம்.

வினா எண் 5534—திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது திட்டம் நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

586—

## நத்தம் தொகுதி கசிவுநீர்க் குட்டைகள்.

வினா எண் 5703— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியப் பகுதியில் எங்கெங்கு கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேளாண்மை பொறியியல் துறையில் திண்டுக்கல் டிவிஷன் நிர்வாகப் பொறியாளருக்கு உத்தரவிடப்பட்டது ?

(ஆ) அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) நத்தம் ஒன்றியப் பகுதியில் குடகிப்பட்டி, செந்துரை ஆகிய கிராமங்களில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பணிகள் நடைபெற்று வருகின்றன.



(ஆ) பணிகள் நடைபெற்று வருகின்றன.

587—

## மயிலாடுதுறையில் மேல்நிலைத் தொட்டி.

வினா எண். 5724—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுத்துறை மாருதி நகரிலிருந்து எடுக்கப்படும் குடிநீர் மயிலாடுதுறையின் வடக்கு நகரப் பகுதிக்கு வழங்கப்படுவதால் வடக்கு நகரப் பகுதியில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மேல்நிலைத் தொட்டி கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

588—

## பொள்ளாச்சி வடக்கு ஒன்றியக் கட்டிடம்.

வினா எண். 5884—திரு. நா.சா. பழனிசாமி—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பொள்ளாச்சி வடக்கு ஒன்றிய கட்டிடத்தை புதிதாக கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) பொள்ளாச்சி ஊராட்சி ஒன்றியத்திற்கு புதிய கட்டிடம் கட்ட ரூ. 12.00 இலட்சம் தேவைப்படுகிறது. ஆனால் ஒன்றியத்தில் நிதிப் பற்றாக்குறை உள்ளதால் இப்போது புதிய கட்டிடம் கட்டும் உத்தேசம் இல்லை.

589—

## கணபதி பாளையத்தில் ஊராட்சி மன்றக் கட்டிடம்.

வினா எண். 6304—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மொடக்குறிச்சி தொகுதி கணபதிபாளையத்தில் ஊராட்சி மன்றக் கட்டிடம் ஒன்று கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மொடக்குறிச்சி தொகுதி கணபதிபாளையத்தில் ஊராட்சி மன்றக் கட்டிடம் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1991-92ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

590—

## வீரக்குடி ஆதிதிராவிடர்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி.

வினா எண் 7070—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் மணக்காடு ஊராட்சி வீரக்குடி ஆதிதிராவிடர் தெருவிற்கு தொலைக்காட்சிப் பெட்டியும், வானொலிப் பெட்டியும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1991-92ஆம் ஆண்டில் தொலைக் காட்சி பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருவாய்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து



பெறப்பட்டுள்ளன. இப்புள்ளிவிவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தேர்வு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு 1991-92ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.

591—

## நடுவிக்குறிச்சிக்குத் தொலைக்காட்சிப் பெட்டி.

வினா எண். 7138.—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சிக்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நிதிநிலைக்கேற்ப, ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு தொலைக்காட்சி பெட்டியை அளிக்கவேண்டுமென்பது அரசின் கொள்கையாக உள்ளது. ரூ. 9,000-க்குக் குறைவான ஆண்டு வருவாயுள்ள ஊராட்சிகளுக்கு மட்டுமே முதலிடம் அளிக்கப்பட்டு நிதி நிலையைக் கருத்தில்கொண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அவ்வடிப்படையில் இக்குடியிருப்பிற்கு 1992-93ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

நிதி வசதியுள்ள ஊராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற பின் வாங்கிக்கொள்ளலாம்.

592—

## நடுவிக்குறிச்சிக்கு வானொலிப் பெட்டி.

வினா எண். 7347—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

[1992 செப்டம்பர் 25

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சிக்கு வானொலிப் பெட்டியும், தொலைக்காட்சி பெட்டியும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

வானொலிப் பெட்டியைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

நிதிநிலைக்கேற்ப, ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை அளிக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக இருக்கிறது. ரூ. 9,000க்குக் குறைவான ஆண்டு வருவாயுள்ள ஊராட்சிகளுக்கு மட்டுமே முதலிடம் அளிக்கப் பட்டு நிதிநிலையைக் கருத்தில் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அவ்வடிப்படையில், இக் குடியிருப்பிற்கு 1992–93ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

நிதி வசதியுள்ள ஊராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப் பெற்றபின் வாங்கிக் கொள்ளலாம்.

593—

ஊராட்சி ஒன்றியங்களில் மின் உதவிப் பொறியாளர்.

வினா எண். 9676—டாக்டர் மு. காளிராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்களில் மின் விளக்குகள் சீராக எரிய வைப்பதற்கு மின் உதவிப் பொறியாளர்களை ஊராட்சி ஒன்றியங்களிலேயே பணியில் அமர்த்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மின் உதவிப் பொறியாளர்களை ஊராட்சி ஒன்றியங்களிலேயே பணியில் அமர்த்துவது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1992 செப்டம்பர் 25]

594—

கூட்டுறவுச் சங்கங்களில் ஊக்கத் தொகை வழங்கல்.

வினா எண். 2077 — டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூட்டுறவுச் சங்கங்களில் இலாபம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஊக்கத் தொகை ( Bonus ) அளிக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) போனஸ் வழங்கும் திட்டத்தின் வரம்பிற் குட்பட்டும், 10ம் அதற்கு மேலும் பணியாளர்கள் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் இயங்கினாலும் ஆண்டு ஊதியத்தில் குறைந்தபட்ச போனசாக போனஸ் பெறத் தகுதி யுள்ள பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு வழங்கப்படுகின்றது.

595—

பச்சாவத் குழுவின் பரிந்துரைகள் அமல் செய்தல்.

வினா எண். 7722—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உழைக்கும் பத்திரிகைத் தொழிலாளர்களுக்கான " பச்சாவத் குழு " பரிந்துரைகள் அமல் செய்ய வேண்டுமென, மத்திய அரசு ஆணை பிறப்பித்தும் இன்னும் அவை அமல் செய்யப் படாமல் இருப்பதாக தமிழ்நாட்டில் உழைக்கும் பத்திரிகைத் தொழிலாளர்கள் அரசுக்கு ஏதேனும் முறையீடு செய்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

[1992 செப்டம்பர் 25

(ஆ) உழைக்கும் பத்திரிகைத் தொழிலாளர்களுக்கு பச்சாவத் குழு பரிந்துரைகளை, பத்திரிகை நிறுவனங்கள் பொதுவாக அமல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் பச்சாவத் பரிந்துரைப்படி சேரவேண்டிய தொகையினை நிர்ணயித்து தீர்ப்பு அளிக்க அரசால் பெறப்பட்ட மூன்று மனுக்களை தொழில் நீதிமன்றத்துக்கு விட அரசு ஆணையிட்டுள்ளது. தொழில் நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்படும்போது மேற்படி உழைக்கும் பத்திரிகை தொழிலாளர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கும்.

596—

பெஜலட்டியில் அரசு உறைவிடப்பள்ளி.

வினா எண் 5103—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம் தாளவாடி ஒன்றியத்திற்கு உட்பட்ட பெஜலட்டியில் அரசினர் உறைவிடப்பள்ளிக்கு கட்டிட வசதி இல்லாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிடம் கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) தற்போது 10, 60 நீள அகலத்தில் உள்ள கட்டிடத்தில் இப்பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளிக்கு 20 செண்ட் நிலப் பரப்பு உள்ளது.

(ஆ) கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு 1992-93-ம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு இல்லை.

597—

தருமபுரி மாவட்டத்தில் மீன் வளர்ப்பு முகாம்.

வினா எண் 5590—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி மாவட்டத்தில் கசிவுநீர்க் குட்டைகள் நிரம்பிய நிலையில் மீன்வளம் பெருக்க மீன வளர்ப்பு முகாம்கள் மூலம் மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள கசிவுநீர்க் குட்டைகளில் நிரம்பிய நீரை மூன்று மாதங்களுக்கு மேல் தேக்கி வைக்க இயலாத நிலையில் உள்ளதால் இக்குளங்களின் மூலம் மீன்வளர்ப்பு செய்ய வாய்ப்பில்லை. எனவே இந்நீர் நிலைகளில் மீன்வளம் பெருக்க திட்டம் எதுவும் துறையில் இல்லை. எனினும் தருமபுரி மாவட்டத்தில் சில கசிவு நீர்க் குட்டைகள் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் மீன் வளர்ப்பிற்கு சோதனை முறையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

598—

வினா எண் 8061—திரு. இரா. நடேசன்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள மாவட்டத் தொழில் மையங்களில் இருந்து தொழில் தொடங்க கடன் உதவிக்கு பரிந்துரை செய்து அனுப்பும் விண்ணப்பங்களை வங்கிகள் பெரும்பாலும் கடன் உதவி செய்யாததால் புதிய தொழில் முனைவோர் அல்லல் படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தொழில் மையங்கள் மூலமே கடன் வழங்க அரசு முன் வருமா ?

விடை

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் அமைச்சர் :

(அ) மாவட்ட தொழில் மையங்கள் கடன் வழங்க வங்கிகளுக்கு பரிந்துரை செய்கின்றன. குறிப்பான விண்ணப்பம் பெறப்பட்டால் குறிப்பிட்ட வங்கிக்கு தெரிவிப்பதுடன் மாவட்ட ஆட்சியரை தலைவராகவும், வங்கியிலுள்ளவர்களை அங்கத்தினராகக் கொண்டு இயங்கும் மாவட்ட ஆலோசனைக் குழு மூலமும் இதற்கு வழி காணப்படுகிறது.

(ஆ) இல்லை. அரசின் தொழில் கொள்கைப்படி மாவட்டத் தொழில் மையங்கள் நேரிடையாக கடன் வழங்குவது கிடையாது.

602—

## கலைக் கல்லூரி அமைத்தல்.

வினா எண் 6199 திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூரில் வரும் நிதியாண்டு 1992-93ல் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

603—

## தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அரசு நிதியுதவி.

வினா எண். 7886— திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அரசு, எவ்வளவு நிதியுதவி செய்துள்ளது ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அரசு, பராமரிப்பு மானியமாக ஆண்டுதோறும் ரூ. 95 இலட்சம் வழங்கப்பட்டது. 1—4—91 முதல் இந்த மானியம் ரூ. 113 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

604—

## மதுரை இராஜாஜி மருத்துவமனையில் எயிட்ஸ் பெண் நோயாளி இறந்தது குறித்த நடவடிக்கை.

வினா எண் : 320 திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—



a) Whether AIDS Women patients under going treatment at Rajaji Hospital at Madurai was found hanging on 26th August 1991 ?

b) the details thereof and

c) the nature of treatment given to her at the hospital

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) விவர அறிக்கை ஒன்று கீழே வைக்கப் பட்டுள்ளது.

## விவர அறிக்கை.

முதல்வர் அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை அவர்கள்.

இராஜாம்மாள் என்பவர் எயிட்ஸ் நோயாளி வார்டு எண். 106-ல் 21—8—1991 அனுமதிக்கப்பட்டு 27—8—1991 அன்று காலை 5.00 மணிக்கு, அதே வார்டு குளியலறையில் (பாத்ரூமில்) தூக்கு மாட்டிக் கொண்டு இறந்து கிடந்தார் என்று கூறியுள்ளார். இது குறித்து ஜே. 2 போலீஸ் ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டருக்கு மேல் நடவடிக்கைக்காக தகவல் அனுப்பப்பட்டது. என்று. கூறியுள்ளார். மேலும் பேராசிரியர் தியாகராஜன் அவர்கள் 29—8—1991 அன்று பிணப்பரிசோதனை செய்த பின்னர் உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுரைக்கேற்ப அன்றே சவ அடக்கம் செய்யப்பட்டது என்று கூறியுள்ளார்.

## இதர விவரங்கள்.

நோயாளியின் பெயர் : இராஜம்மாள் 45 வருடம் பெண்

உள் நோயாளியின் எண் : 377052 (எப்.வி.டி.எண். 1506/90)

சேர்க்கப்பட்ட நாள் : 21—8—1991 வார்டு எண். 106 எப்

சிகிச்சை விபரங்கள் :

எச்ஐ.வி. பாசிடிவ் உடல் இளைத்தல் மற்றும் இருமல் இருப்பது எயிட்ஸ் பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டது. நுண் கதிர் படத்தின் மூலம் வலது பக்கத்தில் சளி அதிகமாக இருப்பது காசநோய் பாசிடிவ் என்று அறியப்பட்டது.

இறந்த நாள் : 27—8—1991 ( தூக்கில் தொங்கியது கண்டறியப்பட்டது).

599 —

## உரிமையியல் நீதிமன்றம் அமைத்தல்.

வினா எண் 7753—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் எங்கெங்கு உரிமையியல்—நீதிமன்றம் புதிதாக அமைக்கலாம் என உயர்நீதிமன்றம் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

(ஆ) அவை எப்போது அமைக்கப்படவிருக்கின்றன ?

(இ) நத்தம் நகரில் உரிமையியல் நீதிமன்றம் புதிதாக அமைக்க வேண்டுமென்று 10 ஆண்டுகளாக இருந்துவரும் கோரிக்கை மீது உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையை அரசு கேட்டுள்ளதா ?

(ஈ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் சேலம் மாவட்டம் ஓமலூர், செங்கை-எம்.ஜி.ஆர் மாவட்டம் தாம்பரம், வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூர், தஞ்சை மாவட்டம் பாபநாசம் ஆகிய இடங்களில் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கலாம் என உயர்நீதிமன்றம் அரசுக்கு முன்னர் பரிந்துரை செய்துள்ளது. அரசு அவைகளை பரிசீலித்து நிதிநிலைக்கு ஏற்ப தக்க ஆணைகள் வழங்கி வருகின்றது.

(இ) மற்றும் (ஈ) திண்டுக்கல் அண்ணா மாவட்டம், நத்தத்தில் ஒரு உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு உயர் நீதி மன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

600—

## சார்பதிவாளர்கள் நியமித்தல்

வினா எண் 6346— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பதிவுத்துறையில் சார்பதிவாளர்கள் நேரடியாக நியமிக்கப்படுகின்றனரா ?





(ஆ) ஆம் எனில், கடந்த 3 ஆண்டுகளில் அவ்வகை[illegible] நியமிக்கப்பட்டோர் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) இவர்கள் நியமனத்திற்கு அரசு வகுத்துள்ள நெறிமுறைகள் விவரம் என்ன ?

(ஈ) இத்தகு நேரடி நியமனங்களால் அத்துறையில் உள்ள அமைச்சுப் பணியாளர்களின் பதவிஉயர்வு பாதிக்கப்படுவதாக அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) நேரடியாக நியமனமும் உண்டு.

(ஆ) மூன்று. மேற்படி மூன்று நபர்கள் தற்போது பயிற்சியில் உள்ளனர். பயிற்சி முடிக்கப்பட்ட பின்னர் சார்பதிவாளர்களாக நியமிக்கப்படுவார்கள்.

(இ) தமிழ்நாடு பதிவு சார்நிலைப்பணி சிறப்பு விதி 2(சி)ன் படி மாற்றம் மூலம் நியமனம் மற்றும் நேரடி நியமனம் 2 : 1 என்ற விகிதத்தில் நியமனம் செய்யப்படுகிறது.

(ஈ) தமிழ்நாடு பதிவுத்துறை அமைச்சுப் பணியாளர் சங்கம் மாநில மையம், சென்னையிடமிருந்து அரசுக்கு முறையீடு வந்துள்ளது.

601—

## மைய நூலகம் மற்றும் மாவட்ட நூலகம் அமைத்தல்.

வினா எண் 1673—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மைய நூலகம். மாவட்ட நூலக அலுவலகம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்ட நூலக ஆணைக்குழு அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இராமநாதபுரத்திலுள்ள 'ஏ' கிரேடு கிளை நூலகத்தை மாவட்ட மைய நூலகமாக மாற்றும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

அடிப்படையில் காசநோய் என்று கண்டு அறியப்பட்டு காச நோய் எதிர்ப்பு மருத்துவம் துவங்கப்பட்டது. அவ்வமயம் 27.8.91 அன்று காலையில் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார். இறப்பு விசாரணை முடிந்ததும் பிளாஸ்டிக் பையில் அன்றே 2.20 பிற்பகல் போலீஸிடம் உடல் ஒப்படைக்கப்பட்டது.

605—

## இரத்தம் சேமிக்கும் திட்டம்.

வினா எண் 4625—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

புதுக்கோட்டை தொகுதியிலுள்ள புதுக்கோட்டை தலைமை மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி மூலம் இரத்தம் சேமிக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஒன்று செயல்பட்டுவருகிறது.

606—

## பெண் மருத்துவர் நியமித்தல்.

வினா எண் 5753—திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேதாரண்யம் தொகுதி கருப்பம்பலம் அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர் பணியிடம் நீண்ட காலமாகவே காலியாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக பெண் மருத்துவர் நியமிக்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.



(ஆ) பெண் மருத்துவர் பற்றாக்குறை காரணமாக மேற்படி மருத்துவமனைக்குப் பெண் மருத்துவர் நியமனம் செய்ய இயலவில்லை. எனினும் பெண் மருத்துவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

607—

## தொழுநோய் தடுப்புத் திட்டம்.

வினா எண் 6025—திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(a) Whether any investigation has been conducted in this State District wise to note on the impact of anti-leprosy drive in recent times?

(b) the details thereof?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

608—

## புற்றுநோய் மருத்துவ மனையை நவீனப்படுத்துதல்

வினா எண் 8204— திரு. டி.எம். ரங்கராஜன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அடையாறு புற்றுநோய் மருத்துவமனையை நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தனியார் நிறுவனமான அடையாறு புற்றுநோய் மருத்துவமனையை நவீனப் படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**பிண ஆராய்வு செய்வதற்கான முன்னெச்சரிக்கைகள் :**

பிண ஆராய்வு மற்றும் உடல் பரிசோதனை உறுப்புகள் ஆகியவற்றை கையாளும் அனைவரும் இரண்டு கையுறைகளும் இரண்டு மேல் உடுப்புகளும் அணிய வேண்டும். பிறகு அவைகள் அனைத்தும் எரிக்கப்படவேண்டும். எல்லா கருவிகளும் உபயோகப்படுத்தப்பட்ட பிறகு கிருமி நாசினி கருவி மூலம் சுத்தப் படுத்தப்படவேண்டும். பிணம் இரண்டு மடிப்புகளான பிளாஸ்டிக் பைகளில் அடைத்து நகராட்சினரால் எரிக்கப்பட வேண்டும். சோதனைக்காக எடுத்து வைக்கப்பட்ட உடல் கூறு எவையேனும் இருப்பின் அவைகள் 10 சதவீதம் பார்மாலினில் வைத்து பாதுகாக்கப்படவேண்டும்.

கீழ்க்கண்ட அலுவலர்களுக்கு காவல்துறையினருடன் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

(1) மாநகராட்சி சுகாதார அலுவலர்—பிண ஆராய்வு செய்த பின்னர் பிணத்தை எரிப்பதற்காக அப்புறப்படுத்துவது.

(2) மாவட்ட ஆட்சியர் மதுரை : தெரிந்தெடுக்கப்பட்ட வியாதிகளில் இந்த வியாதியும் இருப்பதால்,

(3) மருத்துவ கல்வி இயக்குநர்.

**இணைப்பு—2.**

இராஜம்மாள் எப்.வி.டி. 1506/91 பெண் 45 வருடம் உள் நோயாளி எண் : 377052.

வெஸ்டன் பிளாட் ஆய்வின் மூலம் செரொபாசிடிவ் என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டு 13—12—1990 அன்று ஜிப்மெர் பாண்டிசேரி மருத்துவமனை மூலம் அனுப்பப்பட்டார் பிணியாளர். அன்றே வார்டு எண். 106 பால் வினை நோய் சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார். மருத்துவ பரிசோதனை ரீதியாக நோயாளி ஆங்குலர் ஸ்டோமடிட்ஸ் தவிர சகஜ நிலையில் இருந்தார்.

நுண்கதிர் படம் மார்பகம் : சகஜமாக இருந்தது. இருப்பினும் மாத்திரை செப்டிரான் ஒரு நாளைக்கு இரண்டு வேளைகள், டாப்சான் 100 மி.கி. ஒரு நாளைக்கு ஒன்றும் கெமாபிரான் பைலாக்ஸிஸ்—பிசி.பி. ஊசி ஆகியவைகளை வழங்கி சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. இந்த சிகிச்சை 31 நாட்களுக்குப் பிறகு நிறுத்தப்பட்டது. இதற்கு இடையில் மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை வைராலஜி துறையில், பிணியாளரின் செரோபாசிடிவ் நிலை எலிசா ஆய்வின் மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இந்த நேரத்தில் பால்வினை நோய் என்பதற்கு மருத்துவ



ரீதியாகவும் ஆய்வு மூலம் சான்று ஏதும் இல்லை. பிணியாளர் 14—1—1991 அன்று மருத்துவ மனையிலிருந்து அனுப்பப்பட்டார். இவருடைய கணவர் திரு. பாலன் (எம்.வி.டி. எண். 2904/90) என்பவருக்கும் இதே சமயத்தில் ஆய்வு செய்த போது எச் ஐ.வி. தொற்றுதல் அல்லது பால்வினை நோய் சம்பந்தமான எந்த அறிகுறியும் இல்லை.

சில வாரங்கள் கழித்து கீழ்முதுகு வலியுடன் ஆய்வுக்கு வந்தபோது 17-4-91 அன்று திரும்பவும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். வயிற்றுப்போக்கு இருமல் மற்றும் ஜுரம் எதுவும் இல்லை. பரிசோதித்ததில் நோயாளி நல்ல நிலையிலும் நச்சுத் தன்மை ஏதுமின்றி இருந்தார். பிறப்பு உறுப்பை பரிசோதித்ததில் பெல்விக் வீக்க நோய் இருப்பது தெரிவிக்கப்பட்டது. செப்லாக்ஸிஸ் 500 மி.கி. 6 மணிக்கு ஒரு தரம் மற்றும் மெட்ரோனிடாஸோல் 400 மி.கி. 8 மணிக்கு ஒருதரம் 14 நாட்களுக்கு கொடுக்கப்பட்டது. ஹேமோகிரம் 20-4-91 அன்று செய்ததில் இயல்பான நிலையில் இருந்தது.

நுண்கதிர் படம் பிலிம் பற்றாக்குறையால் எடுக்கப்படவில்லை.

மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை மைக்ரோ பையாலஜி துறையில் மீண்டும் செரோபாஸிடிவ் நிலை ஊர்ஜிதம் செய்யப்பட்டது. 4 5-91 அன்று அவருடைய வேண்டுதலின் பேரில் மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்டார். அப்போது அவர் நல்ல நிலையில் காணப்பட்டார். நோயின் அறிகுறி இல்லை.

அவருடைய கணவருக்கு இரண்டாம் முறை சோதனை செய்யப்பட்டது. அப்போதும் எச்.ஐ.வி. தொற்றுதல் ஏதும் காணப்படவில்லை.

21-8-91 அன்று நோயாளி மூன்றாவது முறையாக சிகிச்சைக்கு வந்தார். அப்பொழுது நோயாளி மிகவும் இளைத்த நிலையில் நச்சுத் தன்மையுடன் அவ்வப்போது இருமலுடன் காணப்பட்டார். இவைகளின் அடிப்படையில் அவருக்கு எய்ட்ஸ் நோய் இருப்பது பற்றி சந்தேகிக்கப்பட்டது.

அவசர நுண்கதிரியல் படம் மார்பகம் பி.ஏ. வலது பாடல் நிமோனிடிஸ் தெரியவந்தது. ஆனால் ஹேமோகிராம் சகஜ நிலையில் இருந்தது. பிசி.வி. சந்தேகத்தின் பேரில் மாத்திரை காட்ரி மாக்ஜாஸோல் மற்றும் டாக்ஸின் ஆகியவை ஆரம்பிக்கப்பட்டது. முதல் மருத்துவப் பிரிவிலுள்ள உதவி மருத்துவர் இந்த நோயாளியைப்பார்த்தார். அவரும் இந்த முறையில் சிகிச்சை அளிப்பதை ஒத்துக் கொண்டார். இதற்கிடையில் சளி ரிசல்ட் எ.எப்.பி. பாசிடிவ் என்று தெரியவந்தது. இதன்

609—

நகரப் பேருந்தின் நடைகளை அதிகமாக்குதல்.

வினா எண் 2799—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூர் வழியாகச் சென்று வரும் சோழன் நகரப் பேருந்து தடம் எண் 14-ஐ 10 சிங்கிலாக மாற்றித்தர செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூர் வழியாக இயக்கப்பட்டு வரும் தடம் எண் 14 தற்போது 8 நடைகள் இயங்கி வருகின்றன. தற்போதுள்ள வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

610—

பேருந்து விடுவதற்கு நடவடிக்கை.

வினா எண் 4544—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, பெரியார் நகர் பேருந்து நிலையத்திலிருந்து மந்தைவெளிக்கு நேரடிப்பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தற்பொழுது பெரியார் நகரிலிருந்து 8 வழித் தடங்களில் 34 பேருந்துகள் நகரின் முக்கியப் பகுதிகளான பாரிமுனை, வள்ளலார் நகர், தண்டையார் பேட்டை, அண்ணா சதுக்கம், காயிதே மில்லத் கலைக் கல்லூரி, சைதாப்பேட்டை, அடையாறு, திருவான்மியூர் என பல பகுதி



களுக்கும் நேரடிப் பேருந்துகளாக இயக்கப்படுகின்றன. தற்போது பெரியார் நகரிலிருந்து மந்தைவெளிக்கு நேரடியாக ஒரு பேருந்து இயக்குவதற்கான நடவடிக்கையை பல்லவன் போக்குவரத்துக் கழகம் எடுத்து வருகின்றது.

611—

குறிஞ்சிப்பாடி—சென்னை வழித்தடத்தில் பேருந்து வசதி.

வினா எண் 4581—திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குறிஞ்சிப்பாடி — சென்னை வழித் தடத்தில் இயங்கி வந்த திருவள்ளுவர் மற்றும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : குறிஞ்சிப்பாடி— சென்னை வழித் தடத்தில் இயங்கி வந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கை மிகவும் குறைவாக (பயணிகள் விகிதாச்சாரம் 74 சதவீதமே) இருந்தமையால் நிறுத்தப்பட்டு விட்டது. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக இரு பேருந்துகளில் ஒரு பேருந்து மட்டும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நிறுத்தப்பட்டு இருந்தது. அவ்வாறு நிறுத்தப்பட்ட பேருந்தும் மீண்டும் இயக்கப்பட்டுவருகின்றது.

612—

பேருந்துகளை நிறுத்த நடவடிக்கை.

வினா எண். 4720—திரு. கே.பி. மணிவாசகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

டீசல் தட்டுப்பாட்டின் போது நகரப் பேருந்து வழித் தடங்களில் டீசல் சேமிக்க பல பேருந்து நிறுத்தங்கள் குறைக்கப் பட்டதை அரசு மறுபரிசீலனை செய்து மக்கள் தேவையை கருதி பழைய நிறுத்தங்களில் நிறுத்த அரசு ஆவன செய்யுமா ?

[1992 செப்டம்பர் 25

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்; போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பெரும்பாலான போக்குவரத்துக் கழகங்களில் நகரப் பேருந்து வழித் தடங்களில் பேருந்து நிறுத்தங்கள், எவையும் குறைக்கப்படவில்லை. ஆனால் அண்ணா போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் சாலை போக்குவரத்துக் கழகம் மற்றும் பாண்டியன் சாலை போக்குவரத்துக் கழகம் ஆகிய போக்குவரத்துக் கழகங்களில் ஒரு சில வழித் தடங்களில் உள்ள பேருந்து நிறுத்தங்கள் தற்காலிகமாக குறைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு குறைக்கப்பட்ட நிறுத்தங்களிலும் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க தற்போது மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு அங்கு பேருந்துகள் நிறுத்தி செல்லப்படுகின்றன.

613—

வெள்ளாற்றுப் பாலம் கட்டுதல்.

வினா எண் 8230— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடலூரிலிருந்து சிதம்பரம் செல்லும் பழைய க.சி. சாலையில் வெள்ளாற்றுப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பழைய கடலூர் — சிதம்பரம் சாலையானது கடலூர் முதல் கன்னியாகுமரி வரையிலான கிழக்குக் கடற்கரை சாலை நேர்பாட்டில் அமைகின்றது. இந்த கிழக்கு கடற்கரை சாலை மேம்பாட்டுப் பணிகள் மைய அரசின் ஒப்புதல் பெறுவதற்காக மாநில அரசால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள மைய சாலை நிதிப் திட்டப் பிரேரணைகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இப்பணிக்கு மைய அரசின் ஒப்புதல் கிடைத்ததும் கிழக்கு கடற்கரை சாலை மேம்பாட்டுப் பணியின் ஓர் அங்கமாக பழைய கடலூர் சிதம்பரம் சாலை கி.மீ. 35,6ல் வெள்ளாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் பணியும் மேற்கொள்ளப்படும்.



1992 செப்டம்பர் 25

614—

கூட்டுறவுச் சங்கங்களில் கைத்தறித் துணி தேக்கம்.

வினா எண் 5558— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பல்வேறு கைத்தறி கூட்டுறவு சொசைட்டிகளில் தயாரிக்கப்பட்ட ஜனதா ரக வேட்டி, சேலைகள் பெருமளவில் தேக்கமிருக்கும் நிலையில் அரசு அவ்வப்பொழுது அளிக்கும் இலவச வேட்டி. சேலைகள் தனியாரிடமிருந்து வாங்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) இனியேனும் இத்தகைய இலவச வேட்டி, சேலைகள் அளிக்க கைத்தறி கூட்டுறவு சொசைட்டிகளிடமிருந்து தான் வாங்க வேண்டுமென சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அரசு நிரந்தர ஆணை ( Standing order ) பிறப்பிக்க முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் :

(அ) 1–12–1991 அன்று தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திடம் 20,000 சேலைகள் மற்றும் 10 லட்சம் வேட்டிகள்தான் கையிருப்பில் இருந்தது. அவைகள் ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்டு விட்டன.

(ஆ) சொசைட்டிகளிடமிருந்து கையிலிருக்கும் வேட்டி, சேலைகள் கொள்முதல் செய்யப்பட்ட பின்புதான் தனியாரிடமிருந்து வேட்டி சேலைகள் வாங்க அரசு முயலுகிறது.

615—

ஓடம் உடைந்துள்ளதை புதுப்பிக்க நடவடிக்கை.

வினா எண் 12— திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி திக்குறிச்சி ஆற்றில் மக்கள் போக்குவரத்திற்கு பயன்படுத்தி வந்த ஓடம் (வள்ளம்) பழுதடைந்து உடைந்து காணப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பழுதடைந்த படகிற்கு பதிலாக புதிய படகு ரூ. 50,000-க்கு வாங்க 1992-93 பகுதி இரண்டு திட்டத்தில் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

616—

அணையின் உபரித் தண்ணீரை வாய்க்கால் மூலம் கொண்டு வரத் திட்டம்.

வினா எண் 750—திரு. ஆர்.பி. பரமசிவம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சின்ன சேலம் நீர்ப்பாசன ஏரிக்கு கோமுகி அணையின் உபரித் தண்ணீரை வாய்க்கால் மூலம் கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை.

617—

புறவழிச்சாலை அமைத்தல்.

வினா எண் 5849—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

போக்குவரத்து நெரிசலைக் குறைக்க திருச்சி மாவட்டம், துறையூர் நகரில் புறவழிச்சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :



வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குறிப்பு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான "மைய சாலை நிதித்" திட்டத்தில் சேர்க்கப்பட்டு, மாநில அரசால் மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு மைய சாலை நிதித்திட்டப் பணிகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. மைய அரசின் ஒப்புதல் கிடைத்த பின்னர், இப்பணி துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

618—

வரத்துக் கால்வாய் கரைகளை நவீனப்படுத்துதல்.

வினா எண். 6222—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர் மாம்பட்டு ஏரிக்கு வரத்துக் கால்வாய் கரைகளை நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மேற்கண்ட திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

619—

குடிதண்ணீர் வசதி.

வினா எண். 3839—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி, செட்டிகுளம் பஞ்சாயத்தில் செம் பாடு பகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

செம்பாடு பகுதியில் 1991-92 ஆம் ஆண்டு அதிவிரைவுத் திட்டத்தின் கீழ் ஒரு ஆழ் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு கையிறைப்பான் பொருத்தப்பட்டது. தற்போது இக்குடியிருப்பில் இரண்டு கையிறைப்பான்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. வேறு செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

620—

குளங்கள் ஆழப்படுத்த நடவடிக்கை

வினா எண் 4128—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வல்லம் காலனியில் குளங்கள் ஆழப்படுத்தித் தர ஏற்பாடு செய்து தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வல்லம் காலனியில் குளங்களை ஆழப் படுத்தும் பணியை 1992-93 நிதி ஆண்டில் செய்ய தென் ஆற்காடு மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

621—

குடிதண்ணீர் வசதி.

வினா எண் 5468—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதி, செவ்வேரி கிராமத்திற்கு குடி தண்ணீர் வசதி செய்துத ர அரசு ஆவன செய்யுமா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

கழுதூர் மற்றும் 10 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் செவ்வேரி கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்ய ஆவன செய்யப்பட்டுள்ளது.

622—

வினா எண் 5655 திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதி, கீழ்ஐவனூர் கிராமத்தில் நிரந்தரமாக குடிநீர் பற்றாக்குறையைப்போக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

கீழ் ஐவனூர் கிராமத்திற்கு நிரந்தரமாகக் குடிநீர் வழங்க ஆலம்பாடி மற்றும் 10 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இக்குடியிருப்பு சேர்க்கப்பட்டு, இத்திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் நடைபெறுகின்றன.

623—

பேரூராட்சி நிர்வாக அதிகாரிகள்.

வினா எண். 5949 திரு. ஏ. எம். முனிரத்தினம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பேரூராட்சிகளில் பணியாற்றும் நிர்வாக அதிகாரிகளின் சம்பளத்தை அரசே வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தற்போது இதுபோன்ற செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

624—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 6183—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கீழ் அரசம்பட்டு கிராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முடிவடையும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கீழ் அரசம்பட்டி கிராமத்தில் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு எதிராக வேலூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. வழக்கு முடிந்தவுடன் வேலை துவக்கப்படும்.

625—

உப்புக்குளத்தின் கரையை உயர்த்திக் கட்டி பராமரித்துத் தர நடவடிக்கை.

வினா எண் 7118—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கல்லூரணி காடு உப்புக்குளத்தின் கரையை உயர்த்திக் கட்டி பராமரித்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாததால் கல்லூரணிகாடு உப்புக்குளத்தின் கரையை உயர்த்திக் கட்டி பராமரிக்க தற்போது செயற்குறிப்பு இல்லை.



626—

குடிநீர் வசதி.

வினா எண் 7850—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் கனகரப்பட்டு ஊராட்சிக்குக் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இந்நிதியாண்டில் 1992-93) மேற் கண்ட குடியிருப்பிற்கு மின்னிறைப்பான் திட்டம் மேற்கொள்ளப் பட்டு, இவ்வாண்டிற்குள் முடிந்து மக்கள் பயனுக்குக் கொண்டு வர ஆவன செய்யப்பட்டுள்ளது.

627—

குடிநீர் வசதி.

வினா எண். 7858—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பூதவராயன்பேட்டை கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, பூதவராயன் பேட்டை கிராமத்திற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் இயங்குகிறது. எனவே, குடிநீர்ப் பிரச்சினை இல்லை.

628—

[1992 செப்டம்பர் 25

ஊராட்சி ஒன்றிய விரிவாக்க மற்றும் ஊர் நல ஊழியர்களுக்கு இரு சக்கர வாகன முன்பணம்.

வினா எண். 9841—திரு. ஏ. டி. செல்லச்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் விரிவாக்க அலுவலர் ஊர்நல அலுவலர்கள் கிராமப்புறங்களுக்கு சென்று வர ஏதுவாக இரு சக்கர வாகனம் (டு வீலர்) வாங்கிக் கொள்ள ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

629—

வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு தனிக் கட்டிடம்.

வினா எண். 6752—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கரம்பக்காட்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு தனிக் கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கரம்பக்காட்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி எதுவுமில்லை. எனவே, அப்பகுதியில் தனிக் கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.



92 செப்டம்பர் 25]

630—

கூட்டுறவு வங்கிக்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை.

வினா எண். 7016—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காட்டில் கூட்டுறவு வங்கிக்கு கட்டிடம் கட்ட வாங்கப்பட்ட இடத்தில் கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியத்தில் உள்ள ஒட்டங்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி சடந்த 5 ஆண்டுகளாக நட்டத்தில் செயல்பட்டு வருவதால் வெகுமதியாக அளிக்கப்பட்டுள்ள நிலத்தில் கிடங்கு கட்டுவதற்கான வாய்ப்பு இல்லை. தவிரவும், இப்பொருள் பற்றியதான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

631—

வீடுகள் கட்டுதல்.

வினா எண் 7723—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பீடித் தொழிலாளர்களுக்கென வீடுகள் கட்டித் தர அரசிடம் கருத்துரு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) முதல் கட்டமாக திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் முக்கூடல் மற்றும் மேலப்பாளையம் ஆகிய பகுதிகளில் முறையே 600 மற்றும் 400 வீடுகள் கட்டித் தரப்பட

உள்ளது. மற்ற மாவட்டங்களில், நிலம் கையகப்படுத்தப் படுவதைப் பொறுத்து, பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் விஸ்தரிக்கப்படும்.

632—

**பஞ்சாலைகளில் சிறுவர் பணியமர்த்தல்.**

வினா எண் 7724— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பஞ்சாலைகளில் 16 வயதுக்குக் குறைந்த சிறுவர், சிறுமியர்கள் வேலைக்கமர்த்தப்படுவதும், அதிக பணிநேரம், குறைந்த கூலி என்ற நிலையும் இருப்பதாக அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசின் நடவடிக்கைகள் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

633—

**உடல் உழைப்போர் சட்டத்தைக் கட்டிடத் தொழிலாளர்களுக்கும் விரிவாக்கம் செய்தல்.**

வினா எண். 8649— திரு எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்ண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு உடல் உழைப்போர் சட்டத்தைக் கட்டிடத் தொழிலாளர்களுக்கும் விரிவாக்கம் செய்யவும், முத்தரப்பு நிறுவனம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

அமைப்பு ரீதியற்ற கட்டிடத் தொழிலாளர்களுக்கு அரசு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்துள்ளதோடல்லாமல், 1982-ம் வருடத் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்



(பணி முறைப்படுத்தல் மற்றும் வேலை நிலைமைகள்) சட்டத்திலுள்ள சலுகைகளை கட்டிடத் தொழிலாளர்களும் பயன் பெறும் வகையில் இச்சட்டத்தின் கீழ் அவர்களைக் கொண்டு வர உத்தேசித்து, இதற்கான வகை செய்யும் திட்டத்தை அரசு பரிசீலித்து வருகிறது.

634—

**சாந்தோம் கடற்கரைப் பகுதிகளில் குடிசைகளை அகற்றுதல்.**

வினா எண் 184— திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(a) The steps taken to clear all the huts from the sands of the Santhome Beach at Madras City

(b) The Steps taken to restore the beach as place of health/public resort

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) சென்னை நகரில் சாந்தோம் கடற்கரைப் பகுதியிலிருந்து குடிசைகளை அகற்றி அவைகளில் வசித்து வரும் மக்களை, செங்கை-எம். ஜி. ஆர். மாவட்டம், பள்ளிக்கரணையில் கலப்புத்திட்டத்தின்கீழ் (Composite Scheme) மேம்படுத்தப்பட்ட மனைகளில் குடியமர்த்துவதற்கான செயற்குறிப்பு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மெரினா கடற்கரையை சுகாதார பொது இருப்பிடமாக திரும்ப ஏற்படுத்துவதற்கென, தலைமைச் செயலரின் தலைமையில் ''மெரினா மேம்பாட்டுக் குழு'' அமைக்கப்பட்டுள்ளது.

635—

**சத்துணவுக் கூடம் அமைத்தல்.**

வினா எண் 7702— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதியில் அமைந்துள்ள சத்துணவு இடங்களின் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) புதிதாக எங்கெங்கு சத்துணவுக்கூடம் அமைக்க வேண்டுமென கடந்த 3 ஆண்டுகளில் பரிந்துரைக்கப்பட்டன ?

(இ) அவற்றில் எங்கெங்கு புதியதாக சத்துணவுக் கூடங்கள் கட்டப்பட்டன ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

| | நத்தம் ஊராட்சி ஒன்றியம். | சானார்பட்டி ஊராட்சி ஒன்றியம். |
|---|---|---|
| (அ) | 50 | 50 |
| (ஆ) | 1. சின்னமூலையூர் | 1. கே. குரும்பபட்டி |
| | 2. அழாபரி | 2. நத்தமாடிப்பட்டி |
| | 3. வேம்பரணி | 3. நொச்சோடைப்பட்டி |
| | 4. அய்யாபட்டி | 4. டி. வடுகப்பட்டி |
| | | 5. கூ.வ. குரும்பட்டி |
| | | 6. சானார்பட்டி |
| | | 7. எம். பன்னப்பட்டி |
| (இ) | இல்லை. | 1. கே. குரும்பட்டி |
| | | 2. நத்தமாடிப்பட்டி |
| | | 3. நொச்சோடைப்பட்டி |
| | | 4. டி. வடுகபட்டி |
| | | 5. கூ. வ. குரும்பட்டி |
| | | 6. சானார்பட்டி |
| | | 7. எம். பன்னப்பட்டி |

636—

## சத்துணவுக்கூடம் கட்டுதல்.

வினா எண் 7842—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியில் அடங்கிய பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் குமாரமங்கலம் காலனிக்கு சத்துணவுக் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?





விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 1991-92-ம் ஆண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 9.98 கோடி மதிப்பீட்டில் 1409 புதிய கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதுபோன்று 1992-93ம் ஆண்டிற்கும் மேற்படி திட்டத்திற்கு 10.42 கோடி மதிப்பீட்டில் 1470 புதிய மையக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாவட்ட ஆட்சியரால் தேவைகளின் அடிப்படையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும் பொழுது மேற்கூறிய மையத்திற்கான கட்டிடத்தின் தேவை குறித்தும் பரிசீலிக்கப்படும்.

637—

## சத்துணவுக்கூடம் அமைத்தல்.

வினா எண் 7845—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், நற்கவந்தன்குடி ஊராட்சிக்கு சத்துணவுக் கூடம் அமைத்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

638—

## சத்துணவுக்கூடம் கட்டுதல்.

வினா எண் 8184—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 செப்டம்பர் 25

(அ) புவனகிரி தொகுதி, வடக்குச் சாவடி கிராமத்திற்கு மதிய உணவு சத்துணவுக் கூடம் ஒன்று கட்டித் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 1992-93 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், வடக்குச்சாவடி கிராமத்தில் சத்துணவுக் கூடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

639—

கால்நடைமருத்துவமனைத் துவக்கும் திட்டம்.

வினா எண் 5161— திரு. கே சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், ஏ. பள்ளிப்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனைத் துவங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நானூறு கால்நடை மருந்தகங்கள் துவங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்போது பரிசீலிக்கப்படும்.

640—

தீண்டாமை ஒழிப்புச் சட்டம்.

வினா எண் 5964— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



1992 செப்டம்பர் 25]

(அ) குடும்ப நலத் திட்டம் பற்றி தயாரிக்கப்படும் கார்ட்டூன் திரைப்படங்களைப்போல் தீண்டாமை ஒழிப்பு பற்றியும் தயாரித்து கிராமப் பகுதிகளில் மக்களுக்கு காட்ட கருத்துரு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) குடும்ப நலத்திட்டம் பற்றிய கார்ட்டூன் திரைப்படங்கள் எதுவும் தயாரிக்கப்படவில்லை. தமிழக அரசின் குடும்ப நலத்துறையினரால், திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு காண்பிக்கப்படுகின்றன. அவ்வாறே, இத்துறையால் 'தீர்த்தயாத்திரை' என்ற பெயர் கொண்ட படம் தீண்டாமை ஒழிப்புப் பற்றித் தயாரிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் காட்டப்பட்டு வருகின்றது கார்ட்டூன் திரைப்படங்கள் தயாரிப்பது பற்றிய கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

641—

கால்நடை மருந்தகம் கட்டுதல்.

வினா எண். 7874— திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், தொடாலூரில் கால்நடை மருந்தகம் கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் , ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் தொடாலூரில் கால்நடை மருந்தகம் துவக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

டி.2 53-287—52

642—

## கால்நடை மருந்தகம் அமைத்தல்.

வினா எண். 7922—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை தொகுதி மூக்கம்பட்டி பஞ்சாயத் தில் மூக்கம்பட்டியில் புதியதாய் கால்நடை மருந்தகம் அமைக் கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

643—

## பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்.

வினா எண். 8822—டாக்டர் எஸ். மணிமேகலை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரியலூர் ஒன்றியம் விளாங்குடியில் ஓர் பால் குளி ரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



644—

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

வினா எண். 8898—திரு. தா. செழியன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரம்பலூர் வட்டம், பூலாம்பாடியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் , ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

645—

## தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனிச்சலுகை அளித்தல்.

வினா எண். 9897—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

ஆதி திராவிடர்களில் ஒரு பிரிவான செருப்பு தைக்கும் இனத்தை சேர்ந்தவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப் பட்டவர்கள் ( Most Scheduled Caste ) என்று பட்டியலிட்டு தனி சலுகை அளிக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் , ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் என்ற தனிப்பட்டியல் ஏதும் மத்திய அரசால் பராமரிக்கப்படவில்லை. எனவே, ஆதி திராவிடர்களில் ஒரு பிரிவினரான சக்கிலியன், அருந்ததியர் (செருப்பு தைக்கும் இனம்) இனத்தினை மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் என்று மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய வழிவகை இல்லை.

[1992 செப்டம்பர் 25

646—

மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் திறக்க நடவடிக்கை

வினா எண். 4960—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) அந்தியூர் தொகுதியிலுள்ள சிங்கம்பேட்டை நெருஞ்சிப்பேட்டை போன்ற ஊர்களில் உயர்நிலை, மேல் நிலைப்பள்ளிகள் உள்ளதால் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் மற்றும் மாணவியர் இல்லங்கள் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நெருஞ்சிப்பேட்டை, சிங்கம்பேட்டை ஆகிய ஊர்களில் மிகப் பிற்படுத்தபட்டோர் நல மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் திறக்க தற்போது உத்தேசம் இல்லை.

647—

பயணிகள் தங்கும் வசதி அமைத்தல்.

வினா எண். 4491—திரு. செ. து. வரதராஜன் :

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 'ஹஜ்' பயணிகளின் வசதிக்காக சென்னையில் தங்கும் விடுதி கட்டித்தரும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 'ஹஜ்' புனிதப் பயணிகளின் வசதிக்காக தங்கும் விடுதி கட்ட அரசிடம் ஹஜ் குழு நிலம் கேட்டுள்ளது. இந்த காரியத்திற்கு நிலம் கொடுக்க வாய்ப்பினை அரசு ஆராய்ந்து வருகிறது.



1992 செப்டம்பர் 25]

648—

தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 4512—திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அருப்புக்கோட்டைத் தொகுதியில் உள்ள திருச்சுழியில் 'Gem Polishing'' தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான். ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

649—

போரூர் துணை வணிக வரித் துறை அலுவலகத்திற்கு கட்டிடம்.

வினா எண் 6800—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போரூர் துணை வணிக வரித் துறை அலுவலகத்திற்குச் சொந்தமாக கட்டிடம் கட்டித் தர அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் போரூர் துணை வணிக வரி அலுவலகத்திற்கென கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

650—

அரசினர் மகளிர் கலைக் கல்லூரி.

வினா எண் 3477—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையில் உள்ள தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் பி.காம்., பி.எஸ்.ஸி., (வேதியல்) பி.எஸ்ஸி (பௌதிகம்)., பி.ஏ., தமிழ் ஆகிய பிரிவுகள் புதிதாக துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நிதிச் செயற்குறிப்பு பெறப்பட்டது. அரசின் கடுமையான நிதி நெருக்கடி குறித்து 1993–94 ஆம் ஆண்டு பகுதி இரண்டாம் திட்டத்தின் கீழ் இக்கருத்துரை பரிசீலிக்கலாம் என அரசு முடிவெடுத்துள்ளது.

651—

நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண் 9685—திரு. அ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி வட்டம், அ. கலையம்புத்தூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : கருத்துரு ஏதும் இல்லை





652—

சாத்தனப்பட்டுக்கு புதிய பள்ளி.

வினா எண் 9832—திரு. இரா. தங்கராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் சாத்தனம்பட்டுக்கு புதிய பள்ளி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயற்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

653—

பொது மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்களில் உயிர் காப்பு மருந்துகள்.

வினா எண் 1244—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொது மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உயிர் காப்பதற்கு தேவையான மருந்துகள் காசநோய், நீரழிவு நோய் மற்றும் இதர நோய்களுக்கான மருந்துகள் தடையின்றி கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

பொது மருத்துவமனைகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உயிர் காக்க தேவையான மருந்துகளும் காசநோய், நீரழிவு நோய்களுக்கான மருந்துகளும் தடையின்றிக் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

654—

## உத்தரமேரூர் அரசு மருத்துவமனை.

வினா எண் 1754—திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூரில் அரசினர் மருத்துவமனை அமைக்கப் பட்டும் செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) உத்திரமேரூரில் ஆறு படுக்கைகள் கொண்ட வட்ட தலைமையிட மருத்துவமனை 27—11—1987 முதல் செயல் பட்டு வருகிறது. 6 படுக்கைகள் 32 படுக்கைகளாக உயர்த்தி அரசாணை நிலை எண் 1550 சுகாதாரம், 11-12-1991-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

655—

## இராயப்பேட்டை மருத்துவமனையில் நோயாளிகள் பொழுது போக்குமிடம்.

வினா எண் 3882— திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயப்பேட்டை மருத்துவமனையில் நோயாளிகளுக்கு பொழுதுபோக்கு இடம் அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) அதன் விவரங்கள் குறித்து மற்றும்

(இ) அந்த மருத்துவமனையில் வேறு ஏதேனும் மேம்பாடு திட்டம் உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) (1) குழந்தைகள், புறநோயாளிகள் பிரிவுக்கு அருகில் ஊஞ்சல் மற்றும் ஏற்றப் பலகை விளையாட்டு வசதிகளுடன், குழந்தைகள் பூங்கா பராமரிக்கப்படுகின்றது.

(2) குழந்தைகள், உள் நோயாளிகள் பிரிவில் பொம்மைகள் உள்ளன. (தொண்டு நிறுவனங்கள் நன்கொடையாக அளித்தவை).

(இ) இல்லை.

656—

## உயிர் காக்கும் மருந்து விலை உயர்வைத் தடுத்தல்.

வினா எண் 3892— திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உயிர் காக்கும் மருந்துகளின் விலை உயர்ந்துள்ளதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மத்திய அரசு, இரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சகம், இரசாயனம் மற்றும்பெட்ரோ இராசாயனத் துறை, புதுடெல்லி அவர்களின் மருந்து விலை கட்டுப்பாடு ஆணை, 1987-இன்படி மருந்துகளின் விலைகள் நிர்ணயிக்கப்பட்டு, எல்லா மாநில அரசினரால் அமுல்படுத்தப்படுகிறது. மருந்துகளின் விலையில் மாற்றங்கள் ஏற்படின் மைய அரசினால் மருந்து விலைக் கட்டுப்பாடு ஆணை 1987—இல் திருத்தப்பட்ட ஆணைகள் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்றன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டி2 53 287—53

[1992 செப்டம்பர் 25

657—

போளூர் மருத்துவமனையில் புறநோயாளிப் பிரிவு.

வினா எண் 4356— திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) போளூர் மருத்துவமனையில் புற நோயாளி, அக நோயாளி மருத்துவர் ஒரே இடத்தில் பணியாற்றவும் அங்கு ஒரு புறநோயாளி பிரிவு ஏற்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இது குறித்து அரசிடம் செயற் குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

658—

ஆலங்குடி தொகுதி தலைமை மருத்துவமனை.

வினா எண். 4800— திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆலங்குடி தொகுதி, தலைமை மருத்துவமனையை விரிவு படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

இல்லை.



1992 செப்டம்பர் 25]

659—

ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாம்பு விஷ மாற்று மருந்து.

வினா எண் 5333— டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பாம்பு விஷ மாற்று மருந்து எப்போதும் தயார் நிலையில் வைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பாம்பு விஷ மாற்று மருந்து எப்போதும் தயார் நிலையில் இருப்பு வைத்துக்கொள்ள ஆவன செய்யப்பட்டுள்ளது.

660—

மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் ஊசி மருந்துகள்.

வினா எண் 5693— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சாதாரண மலிவு விலையிலுள்ள மாத்திரை போன்ற மருந்துகளைத் தவிர மற்றவற்றை குறிப்பாக ஊசி மருந்துகளை வெளியில் வாங்கி வரும்படி நோயாளிகள் நிர்பந்திக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் மருந்துகளை குறிப்பாக ஊசி மருந்துகளை வெளியில் வாங்கி வரும்படி நோயாளிகள் நிர்பந்திக்கப்படுவதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1992 செப்டம்பர் 25

661—

## போலி மருத்துவ நிறுவனங்கள்.

வினா எண். 5864—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

போலி மருத்துவர்கள் உருவாகக் காரணமாக இருக்கும் போலியாக மருத்துவச் சான்றிதழ் அளிக்கின்ற நிறுவனங்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

இத்தகைய புகார்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப் பட்டால் போலியாக மருத்துவச் சான்றிதழ் அளிக்கின்ற நிறு வனங்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

662—

## படவேட்டில் பொது சுகாதார நிலையம்.

வினா எண். 6198—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் படவேடு பகுதியில் ஒரு பொது சுகாதார நிலையம் அமைக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : போளூர் படவேடு பகுதியில் ஒரு பொது சுகாதார நிலையம் அமைக்க தற்போது வாய்ப்புக்கள் ஏதுமில்லை.

663—

## தாலூகா அரசு மருத்துவமனைகள்.

வினா எண் 6252—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—



1992 செப்டம்பர் 25]

(அ) புதிதாக அமைக்கப்படும் தாலூக்காக்களில் அதன் தலைமையிடங்களில் தாலூகா அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், 10 ஆண்டுகளுக்கு முன்னரே அமைக்கப் பட்ட நத்தம் வட்டத்தின் தலைநகரான நத்தம் நகரில் தாலூகா அரசு மருத்துவமனை அமைக்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஆம். அனைத்து வட்ட தலைமையிட மருத்துவமனை அமைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை.

(ஆ) அரசாணை (நிலை) எண். 578, சுகாதாரம், நாள் 3—4—1984-ல் 32 படுக்கைகள் கொண்ட தாலூக்கா தலைமை யிட மருத்துவமனை நத்தம் நகரில் அமைக்க ஆணையிடப்பட்டு உள்ளது. 7—12—1991-ல் தாலூக்கா மருத்துவமனை அங்கு செயல்பட துவங்கியுள்ளது.

664—

## பேரணாம்பட்டிலிருந்து பெங்களூருக்கு பேருந்து விடுதல்.

வினா எண். 8396—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

பேரணாம்பட்டில் இருந்து வி. கோட்டா, கே. ஜி. எப். வழியாக பெங்களூருக்கு பேருந்து விடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

பேரணாம்பட்டில் இருந்து வி. கோட்டா, கே. ஜி. எப். வழியாக பேருந்து இயக்க ஆந்திரா மற்றும் கர்நாடக மாநில அரசுகளின் ஒப்புதல் தேவை. எனவே, கர்நாடகம் மற்றும் ஆந்திரா மாநில அரசுகளுக்கு இடையே பேருந்துகள் இயக்குவது குறித்து ஒப்பந்தம் ஏற்படும் தருணத்தில் இது குறித்து முடி வெடுக்க இயலும்.

665—

**ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவில் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள்.**

வினா எண். 5325—திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காமராஜர் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூக்காவில் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் எத்தனை உள்ளன ?

(ஆ) அச்சங்கத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் எத்தனை பேர் ?

(இ) இச்சங்கங்களில் பணியாற்றும் நெசவாளர்களுக்கு காடாபீஸ் ரகங்களுக்கு நூல் விநியோகம் செய்யப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் :

(அ) காமராஜர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவில் 22 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

(ஆ) காமராஜர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவில் உள்ள 22 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 206 பணியாளர்கள் உள்ளனர்.

(இ) ஆம்.

(ஈ) நூல் விநியோகிப்பதற்காக நிறுவப்பட்டுள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட ஒழுங்கீனத்தால் மேற்படி பகுதி நெசவாளர்களுக்கு நூல் கிடைப்பதில் தடங்கல் ஏற்பட்டது. முறையின்றி விற்பனை செய்த மேலாளர், பணியாளர் ஆகியோர் மீது தகுந்த ஒழுங்கு முறை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

666—

**வையங்குடியில் வாய்க்கால் கரை உயர்த்துதல்.**

வினா எண். 5474—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



மங்களூர் தொகுதி, வையங்குடி கிராமத்தினுடைய வாய்க்கால் கரைகளை அகலப்படுத்தி சீர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

வையங்குடி வாய்க்காலை 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 70,000 (எழுபது ஆயிரம் ரூபாய்) மதிப்பீட்டுத் தொகையில் தரப்படுத்தி சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

667—

**குறிச்சி கிழக்கு ஆதி திராவிடர் தெருவிற்குச் சாலை.**

வினா எண் 2303—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி, ஒன்றியம் குறிச்சி கிழக்கு ஆதிதிராவிடர் தெருவிற்கும் குறிச்சிக்கும் இடையில் சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், குறிச்சி கிழக்கு ஆதி திராவிடர் தெருவிற்கும், குறிச்சிக்கும் இடையில் இனம் பிரிக்கப்படாத ஒரு கி. மீ. நீளமுடைய மண் சாலையாக உள்ளது. மேற்படி சாலையை மேம்பாடு செய்து புதிய சாலை அமைத்துக் கொடுக்க நிதி நிலை பற்றாக்குறையின் காரணமாக தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

668—

**கடுத்தனந்தல் சாலையைச் செப்பனிடுதல்.**

வினா எண். 2404—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், கடுத்தனந்தலுக்கு செல்லும் ஊராட்சி சாலையை செப்பனிட அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம் கடுத்துனந்தலுக்கு செல்லும் ஊராட்சி சாலையை செப்பனிட செயற் குறிப்பு அரசிடம் தற்போது ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

669—

மென்னந்தி இணைப்புச் சாலை.

வினா எண். 2418—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், கே. வலசை கிராமத்தில் இருந்து கொல்லனூர் வழியாக மென்னந்தி இணைப்புச் சாலையை அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், கே. வலசை கிராமத்திலிருந்து கொல்லனூர் வழியாக மென்னந்தி இணைப்புச் சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் தற்போது ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

670—

மணக்காடு சாலையை அகலப்படுத்துதல்.

வினா எண் 2540—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் ஆதி திராவிடர் காலனியிலிருந்து மணக்காடு செல்லும் ஊராட்சி சாலையை அகலப்படுத்தி கப்பிச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், பின்னவாசல் ஆதி திராவிடர் காலனியிலிருந்து மணக்காடு செல்லும் சாலையினை அகலப்படுத்தி கப்பிப் போட நிதி நிலை இடம் தராததால் தற்போது செயற் குறிப்பு ஏதுமில்லை.

671—

சேலம் மாவட்ட குடிநீர்த் திட்டங்கள்.

வினா எண் 2589—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மழையளவு குறைந்ததால் ஆழ்துளை கிணறுகளும் பயனற்றதாகிற சேலம் மாவட்டத்திற்கு நிரந்தர குடிநீர் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மாற்று நீராதாரம் அமைக்கும் திட்டங்கள் கிராம குடிநீர் திட்டங்கள், நகரக் குடிநீர்த் திட்டங்கள், உலக வங்கி திட்டம், வறட்சி நிவாரணப் பணிகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு அனைத்தும் 30—6—1993-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

672—

கீழக் கோட்டத்தில் மயானச் சாலை.

வினா எண் 2774— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடம் ஊராட்சியைச் சேர்ந்த கீழக்கோட்டத்தில் மயானச் சாலை அமைத்து தகரக் கொட்டகை கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைசசர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடம் ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் கீழக்கோட்டத்தில் மயானச் சாலை மற்றும் தகரக் கொட்டகை போடவும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

673—

நிராமன்-ரெட்டிப்பாளையம் சாலை.

வினா எண். 2937— திரு. இரா. தங்கராசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், நிராமன் கிராமம்-ரெட்டிப்பாளையம் வரை தார்ச் சாலை அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், நிராமன் கிராமம்-ரெட்டிப்பாளையம் வரை உள்ள சாலையை தார்ச் சாலையாக அமைப்பது பற்றிய செயற்குறிப்பு தற்போது அரசிடம் ஏதுமில்லை.

674 —

சின்னரெட்டவயல் ஊராட்சி சாலை.

வினா எண். 3004—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னரெட்டவயல் ஊராட்சி சாலையை பராமரிக்க அரசிடம் யெற்குறிப்பு உள்ளதா?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், சின்னரெட்டவயல் ஊராட்சி சாலை மண் சாலையாக உள்ளது. இதில் பேருந்து போக்குவரத்து இல்லாத காரணத்தினாலும், ஊராட்சி ஒன்றிய நிதி வசதி பற்றாக்குறை காரணமாகவும் இச் சாலையை பராமரிக்க தற்சமயம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

675—

விளாத்திக்குளம் தொகுதியில் கருவேல மரங்களைக் கரியாகத் தயாரித்தல்.

வினா எண். 3403—திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

வேலி மரங்கள் விளாத்திகுளம் தொகுதியில் அதிகமாக உள்ளதால் அதைக் கரியாக தயார் செய்து விற்பனை செய்யும் மக்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்) கடன் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சிதம்பரனார் மாவட்டம், விளாத்திக்குளம் சட்டமன்ற தொகுதி, விளாத்திக்குளம் மற்றும் புதூர் ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்டதாகும். அவ்விரு ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வேலி கருவேல மரங்களைக் கரியாகத் தயார் செய்து விற்பனை செய்யும் தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வங்கிகள்மூலம் மானியக் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

676—

பெரியநாயகிபுரத்திற்கு நேர் சாலை.

வினா எண். 3035—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பெரியநாயகிபுரம் துலுக்க விடுதியில் இருந்து பெரியநாயகிபுரத்திற்குவரும் வழியில் முந்திரிக்காட்டில் நேராக சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், பெரியநாயகிபுரம் துலுக்க விடுதியில் இருந்து பெரியநாயகி புரத்திற்கு வரும் வழியில் வனத் துறையைச்சேர்ந்த முந்திரிக்காடு அமைந்துள்ளது. வனத் துறையின் அனுமதி பெற்று அங்கு 1/2 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைத்து சிகப்புக் கப்பி போட ரூ. 45,000 செலவாகும். இதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை.

677—

உடையநாடு ஆதி திராவிடர் தெருவிற்குச் சாலை.

வினா எண். 3051— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு ஆதிதிராவிடர் தெருவிற்குள் செல்லும் சாலையை பராமரித்து கப்பிச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றிய உடையநாடு ஆதி திராவிடர் தெருவிற்குள் செல்லும் சாலை 1 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி சாலையாகும். இது தற்சமயம் கிராவல் சாலையாக உள்ளது. ஊராட்சியில் போதிய நிதி வசதியில்லாததால் இவ்வாண்டில் இவ்வேலையை செய்து தர செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

678—

நெல்லித் துறை குடிநீர்த் திட்டம்

வினா எண். 3920 —திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோயம்புத்தூர் மாவட்டம், நெல்லித்துறை குடிநீர்த் திட்டம் எப்பொழுது நிறைவுபெறும்?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கோவை மாநகர், 20 பேரூராட்சிகள் மற்றும் 521 வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கான பில்லூர் அணையை நீர் ஆதாரமாகக் கொண்ட நெல்லித்துறை குடிநீர்த் திட்டம் 30-6-1993-க்குள் நிறைவேற்றப்படுவதற்குப் பணிகள் விரைவு படுத்தப்பட்டுள்ளது.

679—

சைதாப்பேட்டையில் பேருந்து நிலையம்

வினா எண். 3926—திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சைதாப்பேட்டையில் வெளியூர் பேருந்துகள் நின்று செல்வதற்காக பேருந்து நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சைதாப்பேட்டையில் வெளியூர் பேருந்துகள் நின்று செல்வதற்காக பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

680—

வல்லம் காலனிக்குச் சாலை

வினா எண். 4129—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் வல்லம் காலனிக்குச் சாலை வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் வல்லம் காலனிக்குச்சாலை வசதி செய்து தரும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

681—

## வலசக்கல்பட்டி குடிநீர்த் திட்டம்

வினா எண். 4880—திரு. கே. கந்தசாமி : : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம் கெங்கவல்லி பேரூராட்சிக்கு குடிநீர் கொண்டு வரும் வலசக்கல்பட்டி குடிநீர்த் திட்டத்தை அரசு நிறைவேற்றுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சேலம் மாவட்டம் கெங்கவல்லி பேரூராட்சிக்கு குடிநீர் கொண்டு வரும் வலசக்கல்பட்டி குடிநீர்த் திட்டம் மேற்கொள்வதற்கு வலசக்கல்பட்டி ஏரிப் பகுதியில் போதிய நீராதாரம் இல்லை. எனவே மாற்று திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

682—

## தீர்த்தாரப்பபுரம் குடிநீர்த் திட்டம்

வினா எண். 5480—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம் மடத்தூர் ஊராட்சியில் தீர்த்தாரப்பபுரம் குடிநீர்த் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம் மடத்தூர் ஊராட்சியில் தீர்த்தாரப்பபுரத்தில் மக்கள் தொகைக்கு ஏற்ப, பகுதி குடிநீர் வசதி பெற்றுள்ளது. எனவே, புதிய குடிநீர்த் திட்டத்திற்கான செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் இல்லை.

683—

## அருணாசலபுரத்திற்குக் குடிநீர் வசதி

வினா எண். 5494—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா!

வெங்காடம்பட்டி ஊராட்சி, கருத்தலிங்கபுரம் (சேரன்மகாதேவி தொகுதி) அருணாசலபுரத்திற்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

வெங்காடம்பட்டி ஊராட்சி, கருத்தலிங்கபுரம் முழுமையாகக் குடிநீர் வசதி பெற்ற கிராமம். அருணாசலபுரம் பகுதி குடிநீர் வசதி பெற்ற கிராமம். இது இங்குள்ள மக்கள் தொகைக்குப் போதுமானதாக உள்ளது. எனவே, புதிய குடிநீர் வசதி செய்து கொடுக்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

684—

## சங்கரலிங்கபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண். 5686—திரு. இரா. புதுநயினார் ஆதித்[illegible] மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமை[illegible] களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேரன்மகாதேவி தொகுதி — தெற்கு — மடத்[illegible] ஊராட்சி,—காலூர்—இராமநாதபுரம்—சங்கரலிங்கபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) தெற்கு மடத்தூர் ஊராட்சி, காவூர், இராமநாதபுரம், சங்கரலிங்கபுரம் ஆகிய கிராமங்களில் அங்குள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப குடிநீர் வசதி பெற்றுள்ளது. எனவே, புதிதாக கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

685—

முப்பிலியூர் குடிநீர்த் திட்டம்

வினா எண் 5688— திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேரன்மகாதேவி தொகுதி, தெற்குமடத்தூர் ஊராட்சி, கோதண்டராமபுரம்-முப்பிலியூர் குடிநீர் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சேரன்மகாதேவி தொகுதி, தெற்குமடத்தூர், கோதண்டராமபுரம் மற்றும் முப்பிலியூர் ஊராட்சிகளின் மக்கள் தொகைக்கேற்ப குடிநீர் வசதி உள்ளது. புதிய திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

686—

ஊமத்தநாடு குடிநீர்க்குழாய் பழுது பார்த்தல்

வினா எண். 6581—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு 2-வது வார்டு, செட்டித் தெருவில் இயங்காத குடிதண்ணீர்க் குழாயை இயங்க வைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், ஊமத்தநாடு, 2-வது வார்டு செட்டித் தெருவில் இருக்கும் குடிநீர் குழாய்க்குச் செல்லும் பைப் லைனில் ஏற்பட்ட பழுது சீர் செய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

687—

தேனங்காடு மேல்நிலைத் தொட்டி.

வினா எண் 6767—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், தேனங்காடு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியில் மின் மோட்டார் இயங்காததால் அதை பழுது பார்த்து இயக்க வைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்;

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், தேனங்காடு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மின் மோட்டார் பழுது நீக்கம் செய்யப்பட்டு தற்பொழுது நல்ல முறையில் இயங்கி வருகிறது.

688—

சித்தலாபாடி இணைப்புச் சாலை.

வினா எண் 7567—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வசப்புத்தூர் ஊராட்சியில் அடங்கிய சித்தலாபாடி கிராமத்திற்கு இணைப்புச் சாலைப் பாலம் போட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வசப்பூத்தூர் ஊராட்சியில் உள்ள சித்தலாபாடி கிராமத்திற்கு இணைப்புச் சாலை ரூ. 20,673 மதிப்பீட்டில் போடப்பட்டுள்ளது. ஊராட்சியில் நிதிநிலை சரியில்லாத காரணமாக இணைப்புச்சாலைப் பாலம் போட செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

689—

அகர ஆலம்பாடிக்கு மயான பாதை.

வினா எண் 7621—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஒன்றியம், அகர ஆலம்பாடிக்கு மயானப் பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) புவனகிரி ஒன்றியம். அகர ஆலம்பாடிக்கு மயானப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

690—

அந்தியாநல்லூர் சாலை வசதி

வினா எண் 7678—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி. பரங்கிப் பேட்டை ஒன்றியத்திலுள்ள அந்தியாநல்லூருக்கு சாலை வசதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில். எப்பொழுது ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி. பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள அந்தியாநல்லூருக்கு ரூ. 6,500 மதிப்பீட்டில் சாலை வசதி செய்யப்பட்டுள்ளது.

691—

பசும்பொன் தேவர் மாவட்டத்திற்கு உரம்

வினா எண் 8109—திரு. மா. சா. மா. ராமச்சந்திரன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பசும்பொன் தேவர் மாவட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டு எவ்வளவு உரம் ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) ஒதுக்கப்பட்டுள்ள உரம் ஒவ்வொரு சங்கத்திற்கும் அனுப்பப்பட்டுவிட்டதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) பசும்பொன்தேவர் மாவட்டத்திலுள்ள சில்லரை விற்பனை நிலையங்கள் கொடுத்த தேவைப்பட்டியலுக்கு ஏற்ப 1991-92-ல் 25-3-92 வரை 12.250 மெட்ரிக் டன் உரம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சில்லரை விற்பனை நிலையங்கள் கேட்டுக் கொண்டபடி உரம் எல்லா நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுவிட்டது.

692—

பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு போதுமான பீடி இலை வழங்கல்.

வினா எண் 8624—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம், கீழப்பாவூர் ஒன்றியப் பகுதிகளில் பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு வாரத்தில் 6 நாட்களிலும் வேலை

செய்வதற்கு புகையிலை, பீடி இலை முதலிய பொருட்களை கொடுக்காததினால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கும் நிலையை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) ஆலங்குளம் மற்றும் கீழம்பாவூர் பகுதிகளில் கிங் பீடி, காஜா பீடி, செய்யது பீடி, எம். எஸ். பி. பீடி, முருகா ஹோம் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் தாமோதர் ஹோம் இண்டஸ்ட்ரீஸ் ஆகிய பீடி நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட நிறுவன உரிமையாளர்கள் இலை பற்றாக்குறை காரணமான வேலை இல்லாத நிலைமை இல்லை என்றும், அவர்களிடம் தேவைக்கு அதிகமாக பீடி இலை இருப்பு இருப்பதால் தற்போதைய தேவைக்கு ஏற்ப பீடி சுற்ற மூலப் பொருட்கள் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

693—

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தில் முறைகேடுகள்.

வினா எண் 8982—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் நிலக்கடலை வாங்கியதிலும் அந்த இணையத்தில் நியமனங்களிலும் பல முறைகேடுகள் நடந்துள்ளதாகவும், அதனால் இந்திய அரசின் பராமரிப்பிலுள்ள தேசிய பால்வளத் துறை நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ள பல இலட்ச ரூபாய் நஷ்டமடைந்திருப்பதாகவும், கூட்டுறவு சிறப்பு தணிக்கை மூலம் அரசுக்கு ஏதேனும் அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) அப்படி ஏதேனும் அறிக்கை பெறப்பட்டிருந்தால் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் 1986–87-ஆம் ஆண்டு இறுதி தணிக்கையின் போது நிலக்கடலை வாங்கியதிலும், 1987-88 ஆம் ஆண்டு இறுதி தணிக்கையின் போது இணையத்தின் நியமனங்களிலும் முறைகேடுகள் நடந்துள்ளதாகவும் மேற்படி இணையத்தினை தணிக்கை செய்து கூட்டுறவு தணிக்கை அலுவலர் தனி அறிக்கைகள் கொடுத்துள்ளார்.

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 பிரிவு 82-ன் கீழ் மேற்கண்ட தனி அறிக்கைகளில் கூறப்பட்டுள்ள முறைகேடுகளை விசாரணை செய்ய வேளாண்மைத் துறை இயக்குநர் மற்றும் எண்ணெய் வித்து கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஆணையிட்டுள்ளார். இந்த விசாரணை ஆறு மாதங்களில் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

694—

நகரங்களில் குடிசைகளில் வாழும் மக்களை கணக்கிடுதல்.

வினா எண். 6273—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் குடிசைகளில் வாழும் மக்கள் எவ்வளவு என சர்வே ஏதேனும் மேற்கொள்ளப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

(இ) அவர்களுக்காக அரசு உடனடி நல்ல குடியிருப்பு அளிக்க கருத்துரு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர். :

(அ) ஆம்.

(ஆ) சென்னைப் பெரு நகரத்தில் 1,413 குடிசைப் பகுதிகளில் 1,70,720 குடும்பங்களும், மதுரையில் 185 குடிசைப் பகுதிகளில் 18,776 வீடுகளும், கோவையில் 199 குடிசைப் பகுதிகளில் 16,877 வீடுகளும், திருச்சியில் 155 குடிசைப் பகுதிகளில் 10,553 வீடுகளும் மற்றும் சேலத்தில் 73 குடிசைப் பகுதிகளில் 3,690 வீடுகளும் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் உள்ள குடிசைப் பகுதி வாழ் மக்களை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அடுக்குமாடிக் குடியிருப்பு, மேம்படுத்தப்பட்ட மனைகளில் குடியமர்த்துதல் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிகளை மேம்படுத்தி வீடுகளை அவர்களே கட்டிக் கொள்ள கடன் வழங்குதல் போன்ற திட்டங்களின் மூலம் சுகாதார வசதியுடன் கூடிய சூழ்நிலையில் குடியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

695—

## சத்துணவு மையங்களில் உடல் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு.

வினா எண். 8956—திரு. செ. து. வரதராசன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடல் ஊனமுற்றோருக்கு சத்துணவு மையங்களில் வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): அரசு நிறுவனங்களில் குறைந்தபட்சம் 3 விழுக்காடு பணியிடங்களை உடல் ஊனமுற்றோருக்கென ஒதுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. இது சத்துணவு மையப் பணியாளர்களுக்கும் பொருந்தும்.



696—

## தொழிற்சாலை அமைத்தல்.

வினா எண். 8352—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

697—

## பிற்பட்டோருக்கான மாணவர் விடுதி தொடங்குதல்.

வினா எண். 3574—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சீர்காழியில் பயிலும் பள்ளி மாணவர்களின் நலன் கருதி பிற்பட்டோருக்கான மாணவர் விடுதி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

698—

## சிட்கோ மூலம் நூற்பாலைகள்.

வினா எண். 7984—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிட்கோ மூலம் நூற்பாலைகள் துவங்க முறையீடு அல்லது மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) சிட்கோ மூலம் நூற்பாலைகள் துவங்க இதுவரை எந்தவிதமான முறையீடோ அல்லது மனுவோ பெறப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

699—

## சாதி மற்றும் வருமானச் சான்று ஒரு வாரத்திற்குள் வழங்குதல்.

வினா எண். 8949—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சாதிச் சான்று மற்றும் வருமானச் சான்றுகள் மனுச் செய்த ஒரு வாரத்திற்குள் வழங்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

சாதிச் சான்றுகள் கோரி விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும், விண்ணப்பம் பெறப்பட்ட நாளன்றே சாதிச் சான்றிதழ்களை வழங்க வேண்டுமென்றும், ஆனால் மலை சாதி, பழங்குடி, கொண்டாரெட்டி, காட்டு நாய்க்கன் போன்ற சாதிச் சான்றுகள் கோரி வரும் விண்ணப்பங்களை காலதாமத





மின்றி ஆய்வு செய்து விரைந்து சாதிச் சான்றுகளை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்க வேண்டுமென்றும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. சாதிச் சான்றிதழ்களைப் போன்றே வருமானச் சான்றிதழ்களும் விரிவாக விசாரணை செய்து உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

700—

## அரசு மருத்துவமனையில் படுக்கை எண்ணிக்கை அதிகரித்தல்

வினா எண். 320—திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குளித்தலை அரசினர் மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

குளித்தலை அரசினர் மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

701—

## எய்ட்ஸ் நோயைக் கண்டுபிடிக்க ஊழியர்களுக்கு பயிற்சி அளித்து சர்வே செய்ய திட்டம்.

வினா எண். 1131—டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உயிர்க்கொல்லி நோயான எய்ட்ஸ் நோயைக் கண்டுபிடிக்க ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்து மாநிலம் முழுவதும் சர்வே செய்ய திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

702—

எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள்.

Question No. 3784 Dr. Beatrix D. Souza, Will the Hon'ble Minister for Health be pleased to state:

(a) Whether the incidence of AIDS is on the increase in Tamil Nadu?

[b] If so how many cases have been tested positive?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இந்நாள்வரை 3,89,829 நபர்களின் இரத்தம் பரிசோதனை செய்யப்பட்டு 2,149 நபர்கள் வெஸ்டர்ன் பிளாட் (Western Blot) பாஸிட்டிவ் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

703—

ஜெர்மன் தொழுநோய் நிவாரண நிலையம்.

Question No. 4852 Thiru M. Sundaradoss Will the Hon'ble Minister for Health be pleased to state :

(a) Whether the German Leprosy Relief Association has given large number of drugs for distribution in Tamil Nadu in recent times.

(b) the details thereof

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) ஜெர்மன் தொழுநோய் நிவாரண நிலையம் ஓர் தொண்டு நிறுவனம். இந்நிறுவனம் தொழுநோய் தடுப்புப் பணியில்





ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் குளோபாசிமைன் என்னும் மருந்தினை அதிக எண்ணிக்கையில் அரசுக்கு வழங்கியுள்ளது. என்றாலும் இந்நிறுவனத்திற்குத் தேவையான மற்றைய தொழுநோய் தடுப்பு மருந்துகளான டேப்ஸோன் மாத்திரைகள் மற்றும் ரிபாமைசின் முதலிய இதர மருந்துகளை, அரசு தேவையான அளவு அவர்களுக்கு விநியோகித்து வருகிறது.

(ஆ) ஜெர்மன் தொழுநோய் நிவாரண நிலையம் 1991–92 ஆம் வருடத்தில் பின்வரும் மருந்துகளை தமிழ்நாடு அரசுக்கு வழங்கியுள்ளது :

1. கேப்ஸ்யூல் குளோபாசிமைன் 50 மி.கி.—70 லட்சம்.

2. கேப்ஸ்யூல் குளோபாசிமைன் 100 மி.கி.—8 லட்சம்.

3. கேப்ஸ்யூல் ரிபாமைசின் 300 மி.கி.—9.6 லட்சம்.

704—

அரசு மருத்துவமனைகளில் தேவையான அளவு இரத்த சேமிப்பு

வினா எண். 5056 திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வறுமைக்கோட்டில் வாழும் மக்கள், அரசு மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சைக்காக சேர்க்கப்படும்போது அவர்களுக்கு தேவைப்படும் இரத்தத்தை தனியார் மருத்துவமனைகளில் இருந்து வாங்கித் தந்தால்தான் அறுவைச் சிகிச்சை நடத்த முடியும் என்ற சூழ்நிலையை மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நோயாளிகளுக்குத் தேவைப்படும் இரத்தத்தை அரசு மருத்துவ மனைகளில் உள்ள இரத்த வங்கியில் தாமாக மருத்துவமனைக்கு வந்து மனமுவந்து இரத்தம் கொடுக்கும் நபர்களிடம் (Voluntary blood donars) இருந்தும், மற்றும் இரத்ததான முகாம்களைத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் சேகரித்தும் நோயாளிகளுக்கு அளிக்கப்படுகிறது.

705— [1992 செப்டம்பர் 25

ஸ்ரீஇராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியைத் தனியாரிடம் ஒப்படைக்கும் திட்டம்.

வினா எண் 5066—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னைக்கு அருகில் போரூரில் உள்ள ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை மீண்டும் தனியாரிடமே ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

706—

மருத்துவமனையில் 20 படுக்கை வசதிகள் செய்தல்.

வினா எண். 6365—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் குருவா ரெட்டியூர் ஆரம்ப சுகாதார மருத்துவ மனையை நிலையுயர்த்த 20 படுக்கை வசதிகள் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி ஆரம்பிக்கப்படும்?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

707—

சுகாதார நிலையத்திற்கு எம்.பி.பி.எஸ். மருத்துவரை நியமித்தல்.

வினா எண் 6984—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், ஒன்றியம் மல்லிப்பட்டினம் துணைப் பிரதம சுகாதார நிலையத்திற்கு எம்.பி.பி.,எஸ், படித்த மருத்துவரை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டினம் துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவர் பணியிடம் ஒப்பளிப்பு அளிக்கப்படவில்லை. எனவே இதற்கான செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

708—

முக்கூடல் பேரூராட்சியில் பெண் மருத்துவர் நியமித்தல்.

வினா எண் 7898—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேரன்மகாதேவி தொகுதி, முக்கூடல் பேரூராட்சியில் பெண் மருத்துவர் நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அப்பணி நிரப்பப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) சேரன்மகாதேவி தொகுதி, முக்கூடல் பேரூராட்சியில் உள்ள முக்கூடல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு பெண் உதவி மருத்துவர் பணி அமர்த்தப்பட்டு அவர் அங்கு 1—3—1992 முதல் பணிபுரிந்து வருகிறார்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

709—

''ஸ்கேன்'' கருவி மற்றும் படுக்கை அதிகரித்தல்.

வினா எண். 8198—திரு. நா. மூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சீர்காழி அரசு மருத்துவமனையில் ''ஸ்கேன்'' கருவி கொண்டு வரும் திட்டமும் மற்றும் படுக்கை வசதியை அதிகப்படுத்தும் திட்டமும் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

''ஸ்கேன்'' கருவி முக்கியமான சில தலைமை மருத்துவமனைகளில் மட்டுமே அமைக்கப்பட்டு வருகிறது. அனைத்து தலைமை மருத்துவமனைகளுக்கும் ஏற்பாடு செய்தபின் படிப்படியாக தாலுக்கா மருத்துவமனையிலும் இவ்வசதி செய்துகொடுக்க உத்தேசிக்கப்படும். போதிய நிதி வசதியின்மை காரணமாக படுக்கை வசதிகளை அதிகப்படுத்த இயலவில்லை. இனி வரும் காலத்தில் ஒதுக்கப்படும் நிதி வசதியை கருத்தில் கொண்டு படுக்கை வசதி அதிகப்படுத்தப்படும்.



710—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண். 8915—திரு. ஆ. பாலையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் பேரூராட்சி பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு அனுமதி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், வருகிற நிதியாண்டில் அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) குளச்சல் தொகுதி ரீத்தாபுரம் பேரூராட்சி பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்திய கூறுகள் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

711—

சோழன் நகரப் பேருந்து விட நியமித்தல்.

வினா எண். 2626—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாபநாசம் தாலூக்கா வாழ்க்கை தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி (வழி-கபிஸ்தலம், பாபநாசம், அய்யம்பேட்டை) தடத்தில் புதிதாக ஓர் சோழன் நகரப் பேருந்து விட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) வினாவில் கூறப்பட்டுள்ள வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து நடப்பு நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

712—

## பேருந்து நிற்க பஸ் ஸ்டாப் அமைத்தல்.

வினா எண் 2715—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், பைங்காலில் சோழன் நகரப் பேருந்து நிற்க பஸ் ஸ்டாப்பிங் ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம்' பேராவூரணி ஒன்றியம், பைங்காலில் சோழன் நகரப் பேருந்துகளை நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கி செல்லும் வகையில் ஸ்டாப்பிங் தற்போது நடைமுறையில் உள்ளது.

713—

## நன்னிலத்தில் சோழன் போக்குவரத்துக் கழக பணிமனை.

வினா எண் 3272—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நன்னிலத்தில் சுமார் 48 லட்ச ரூபாய் செலவில் துவங்கப் பட இருக்கும் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை நெ. 1 அந்தஸ்தில் அனுமதிக்கப்பட்டு பல புதிய வழித்தடங்களுடன் பேருந்துகள் செல்ல வசதி செய்து தரப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

நன்னிலத்தில் உள்ள சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை 18—10—1991 முதல் துவக்கப்பட்டு, அது 9 நகரப் பேருந்துகள் மற்றும் 5 புறநகர்ப் பேருந்துகளுடன் செயல் பட்டு வருகிறது.



714—

## விவசாய டிராக்டர்களுக்கு தகுதிச் சான்று பெறுவதை ரத்து செய்தல்.

வினா எண். 5877—திரு. நா சா. பழனிசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயத்திற்கு என்று ஓடும் டிராக்டர்களுக்கு தகுதிச் சான்று (Fitness Certificate) பெறுவதை ரத்து செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

விவசாயத்திற்கு என்று பயன்படுத்தப்படும் டிராக்டர்களுக்கு தகுதிச்சான்று (Fitness Certificate) பெறவேண்டிய அவசியம் இல்லை. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

715—

## நிரந்தரப் பேருந்து நிற்கும் இடம் அமைத்தல்.

வினா எண். 7036—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் துறவிக் காட்டில் ஒரு நிரந்தர பேருந்து நிறுத்தும் இடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், துறவிக் காட்டில் ஒரு நிரந்தர பேருந்து நிறுத்துமிடம் ஏற்கனவே உள்ளது. இவ்விடத்தில் அனைத்துப் பேருந்துகளும் நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன.

716—

## பஸ் ஸ்டாப் அமைத்தல்.

வினா எண். 7376—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிக்காடு மெயின் சாலையில் செல்லும் மருது பாண்டியர் மற்றும் அரசுப் பேருந்துகள் நின்று போக பஸ் ஸ்டாப் ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம், ஒன்றியம், ஆண்டிக்காடு மெயின் சாலையில் செல்லும் மருது பாண்டியர் மற்றும் அரசு பேருந்துகள் நின்று போக பஸ் ஸ்டாப் ஒன்று ஆண்டிக்காட்டில் உள்ளது. அவ்விடத்தில் அனைத்துப் பேருந்துகளும் தற்போது நின்று செல்கின்றன.

717—

## மூன்று முறை செல்லும் பேருந்தை ஆறு முறையாக நீட்டித்தல்

வினா எண் 7861—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரத்திலிருந்து பி. உடையூர், உளுத்தூர், பின்னலூர் வழியாக வடலூர் மூன்று முறை செல்லும் பேருந்தை ஆறு முறையாக நீட்டிக்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): கோரிக்கை வழித்தடத்தில் தற்போது பயணிகள் கொள்திறன் 66 விழுக்காடுகளே உள்ளன. அரசு நெறிமுறைப்படி பயணிகள் கொள்திறன் 70 விழுக்காடுகளுக்கும்



மேல் இருந்தால்தான் கூடுதல் பேருந்து வசதி அளிக்க இயலும். எனவே எதிர்காலத்தில் போக்குவரத்துத் தேவை அதிகரிப்பின் கூடுதல் நடைகள் அளிக்கப்படும்.

718—

## சந்தனக்கட்டை, மூங்கிலைக் கடத்துவதைத் தடுத்தல்.

வினா எண். 7891—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்வராயன் மலையில் சந்தனக் கட்டைகளும், மூங்கிலும் அதிக அளவில் கடத்தப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கல்வராயன் மலையில் சந்தன மரங்கள் மற்றும் மூங்கில்
கள் கடத்துவது குறித்து தகவல் கிடைக்கப் பெற்றால் வனப்
பாதுகாப்புப் படை மற்றும் வன அதிரடிப்படை குழுக்கள்
உடனடியாக மேற்படி இடங்களை தணிக்கை செய்தும்,
சம்பந்தப்பட்ட சரக பணியாளர்கள் உஷார் படுத்தப்பட்டும்
கடத்தல் உடனடியாகத் தடுக்கப்படுகின்றது. தவிர,
தற்போது கள்ளக்குறிச்சி மற்றும் ஆத்தூர் கோட்டங்களில்
கம்பியில்லாத் தந்தி தொலை தொடர்பு வசதிகள் உள்ளதால்
கடத்தல்கள் பெருமளவில் தடுக்கப்பட்டு வருகின்றது.

719—

## சாலை பழுது பார்த்தல்.

வினா எண். 10084—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி தாளக்கரை முதல் தேவர்மலை வரை உள்ள சாலையினை பழுது பார்க்க (1992–93-ல்) எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி தாளக்கரை முதல் தேவர்மலை வரை உள்ள சாலையினை பழுது பார்க்க (1992–93–ல்) நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

720—

சாலை மேம்பாட்டிற்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு.

வினா எண். 170—திரு. ஏ. டி. செல்லச்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் மிக மோசமாக உள்ள இணைப்புச் சாலைகள் மேம்பாட்டிற்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் நல்ல நிலையில் பராமரிக்கப்படுகின்றன. எனவே சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

721—

சாலை விரிவாக்கப்பட்டு மெட்டல் போடுதல்.

வினா எண். 388—திரு. எல். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதி அருணாசலப் பேரியிலிருந்து சுப்பையாபுரம் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சாலை விரிவாக்கப்பட்டு மெட்டல் போடப்படுமா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதி அருணாசலப் பேரியிலிருந்து சுப்பையாபுரம் செல்லும் சாலையின் நீளம் 1.80 கி.மீ. இது தற்போது இரு பக்கமும் நிலச் சொந்தக்காரர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பை அகற்றிய பின்பு சாலை அமைக்க வேண்டுமானால் ரூ. 2.97 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது நிதிநிலை பற்றாக்குறை காரணமாக இப்பணியை எடுத்துச் செய்யும் செயற்குறிப்பேதும் அரசிடம் இல்லை.

722—

சாலை பழுதுபார்த்தல்.

வினா எண். 771—திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர், வட்டம் வலிவலம்—சுந்தரபாண்டியம் செல்லும் தார்ச்சாலை பழுதடைந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டு இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) திருவாரூர் ஊராட்சி ஒன்றியம், வலிவலம்-சுந்தரபாண்டியம் செல்லும் தார்ச்சாலையினைப் பராமரிக்க நிதி நிலைப் பற்றாக்குறையின் காரணமாக தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

723—

பாலம் கட்டுதல்.

வினா எண். 1170—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை வட்டம், துறவிக்காடு விவசாய நிலங்களுக்கு செல்லும் பாதையான புதுப்பட்டினம் சி.எம்.பி. வாய்க்காலில் ஒரு பாலம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை வட்டம், துறவிக்காடு விவசாய நிலங்களுக்குச் செல்லும் பாதையான புதுப்பட்டினம் சி.எம். பி. வாய்க்காலில் பாலம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

724—

தார்சாலை அமைத்தல்.

வினா எண். 2121—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம் முத்துச் செல்லபுரம்-செம்பொன்குடி சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

போகலூர் ஒன்றியம் முத்துச் செல்லபுரம்-செம்பொன் குடிசாலையை தார்ச் சாலையாக மாற்ற 1992-93ஆம் ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.



போர்வெல் போடுதல்.

வினா எண். 2194—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (கி) பசுக்காரன் தெருவிலும், பள்ளி அருகிலும் இரண்டு போர்வெல் போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (கி)யில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து ஒரு குடிநீர் மேடை மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படியூர் பசுக்காரன் தெருவிலும், பள்ளி அருகிலும் இரண்டு போர்வெல் போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

726—

கப்பிச் சாலையாக மாற்றுதல்.

வினா எண். 2358—திரு. ஆர். சிங்காரம : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வாட்டாத்திக்கோட்டையைச் சேர்ந்த சொக்கன் தெரு ஆதி திராவிடர் சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் வாட்டாத்திக்கோட்டையைச் சேர்ந்த சொக்கன் தெரு ஆதி திராவிடர் சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தர இவ்வாண்டில் நிதிநிலை பற்றாக்குறை காரணமாக தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[1992 செப்டம்பர் 25

727—

**கப்பிச் சாலை அமைத்தல்.**

வினா எண். 2526—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பட்டத்தூரணி (வ) வரை செல்லும் சி.எம்.பி. ஆற்றுக்கரைசாலையை செப்பனிட்டு கப்பிச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் பட்டத்தூரணி (வடக்கு) வரை செல்லும் சி.எம். பி. ஆற்றுக்கரைச்சாலை 1.5 கி.மீ. நீளமுடைய சிகப்பு கப்பிச்சாலையாகும். இதனை கப்பிச்சாலையாக்க ரூ. 1.5 லட்சம் செலவாகும். நிதிப்பற்றாக்குறையின் காரணமாக இச்சாலை மேம்பாட்டு வேலையை எடுத்துச் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே சாலையைச் செப்பனிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

728—

**சாலையை கப்பிச்சாலையாக மாற்றுதல்.**

வினா எண். 2553—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வலப்பிரமன் காட்டிலிருந்து பனஞ்சேரிவரை செல்லும் சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு , உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் வலப்பிரமன் காட்டிலிருந்து பனஞ்சேரி வரை செல்லும் சாலையை கப்பிச்சாலையாக மாற்றித்தர நிதி வசதி இல்லாத காரணத்தால் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.



1992 செப்டம்பர் 25]

729—

**நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின்மோட்டார் இணைத்தல்**

வினா எண். 2646—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பள்ளிகொண்டான் ஊராட்சியைச் சார்ந்த செட்டிக்காட்டில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் இணைத்துக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிகொண்டான் ஊராட்சியைச் சேர்ந்த செட்டிகாட்டில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிககு மின் மோட்டார் இணைத்து திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டு பட்டுக்கோட்டை ஊராட்சிஒன்றிய ஆணையரிடம் 12—7—1991 அன்று ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

730—

**நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின்மோட்டார் இணைத்தல்**

வினா எண். 2748—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிகொண்டானில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின்மோட்டார் இணைப் கொடுத்து இயங்கவைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் ,:

பள்ளிகொண்டான் குடிநீர்த் திட்டத்திற்கு மின் இணைப்பு பெறுவதற்கு மின் இணைப்புத் தொகை மற்றும் காப்புத்தொகை அனைத்தும் மின்சார வாரியத்திற்கு செலுத்தப்

பட்டு, மின்சார வாரியம் மின் இணைப்புத் தர தக்க நடவடிக்கைகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

731

## நீர்த்தேக்க தொட்டி அமைத்தல்

வினா எண். 2765—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பண்ணவயல் ஊராட்சியைச் சேர்ந்த கூத்தாடிவயல் ஆதி திராவிடர்களுக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் ;

கூத்தாடிவாயலில் ஒரு அடி பம்பு அமைக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்களுக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

732—

## தார்சாலையாக மாற்றுதல்.

வினா எண். 2767—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் காரங்குடா மெயின் சாலையிலிருந்து கடற்கரை செல்லும் சாலையை செப்பனிட்டு தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் காரங்குடா மெயின் சாலையிலிருந்து கடற்கரை செல்லும் சாலை 0.6 கி.மீ. நீளமுடைய ஊராட்சி சாலை



யாகும். இதில் பேருந்து போக்குவரத்து நடைபெறாததால் இதனை தார்ச்சாலையாக மாற்ற இயலாது. இது குறித்து செயற்குறிப்பேதும் தற்போது இல்லை.

733—

## சிறு பாலம் கட்டுதல்

வினா எண் 3012 — திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் மரக்காவலசை அங்காடிக்குச் செல்லும் வழியில் ஒரு சிறு பாலம் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் மரக்காவலசை அங்காடிக்குச் செல்லும் வழியில் ஒரு சிறு பாலம் அமைக்க நிதிநிலை பற்றாக்குறை காரணமாக செயற்குறிப்பு ஏதும் இல்லை.

734 —

## சாலைமராமத்து செய்து கப்பிச்சாலையாக மாற்றுதல்

வினா எண் 3043 — திரு. ஆர். சிங்காரம் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கைவனவயல் மெயின் சாலையிலிருந்து ஊருக்குள் செல்லும் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் கைவனவியல் மெயின் சாலையிலிருந்து ஊருக்குள்செல்லும் சாலையை மராமத்து செய்து, கப்பிச் சாலையாக மாற்ற நிதி வசதி பற்றாக்குறை காரணத்தால் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

735—

## கப்பிச் சாலையை தார் சாலையாக்குதல்

வினா எண் 3059 — திரு. ஆர். சிங்கராம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் வீரியங்கோட்டை குளத்துக்கரையிலுள்ள கப்பிச்சாலையை மராமத்து செய்து தார்ச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, மண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர், மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் வீரியங்கோட்டை குளத்துக்கரையிலுள்ள சாலைக்கு 1991-92ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் கப்பி போடவும், ஒரு பைப் கல்வெர்ட் அமைக்கவும் திட்டமிட்டு ரூ. 2,38,000 அனுமதிக்கப்பட்டுள்ளது. இச்சாலையில் பேருந்து போக்குவரத்நு இல்லாததால் இதனைத் தார்ச்சாலையாக மாற்றிட தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

736—

## கடற்கரை சாலையை தார் சாலையாக்குதல்

வினா எண். 3104—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குப்பத்தேவன், சோதனைச் சாவடியிலிருந்து கணேசபுரம் வழியாக செல்லும் கடற்கரை சாலையை தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், குப்பத்தேவன் ஊராட்சி சாலையில் பேருந்து போக்குவரத்து இல்லை. எனவே இச்சாலையை தார்ச்சாலையாக மாற்ற தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.





737—

## மண்சாலையை கப்பிச்சாலையாக்குதல்.

வினா எண் 3148 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேது ாவாசத்திரம் ஒன்றியம் திருவத்தேவன் ஊராட்சி சோமநாத பட்டினத்தில் ஊருக்குள் செல்லும் மண்சாலை கப்பிச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி, சோமநாதபட்டினத்தில் ஊருக்குள் செல்லும் மண்சாலை கப்பிச் சாலையாக தற்போது மாற்ற நிதிநிலை இடம் தராததால் செயற்குறிப்பு ஏதுமில்லை.

738—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண் 3638—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதி சௌந்திர பஞ்சாயத்தில் திருமலாபுரம் அருகே ஒரு ஆழ்குழாய்க்கிணறு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருமலாபுரம் கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்ய தெற்கு வள்ளியூரில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்து குடிநீர் எடுத்து செல்லும் திட்டம் ரூ. 4.94 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு தற்போது திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது விரைவில் முடிக்கப்பட்டு பயனுக்கு கொண்டு வரப்படும்.

[1992 செப்டம்பர் 25

739—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண். 3652—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி, குட்டம் பஞ்சாயத்து அண்ணாநகர் பகுதியில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

குட்டம் குடியிருப்பின் ஒரு பகுதிதான் அண்ணா நகர். இங்கு போதிய அளவு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே, ஆழ்குழாய் அமைக்கும் செயற்குறிப்பு தற்சமயம் இல்லை.

740—

## பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 4125—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சேந்திரக்கிள்ளை கிராமத்திலுள்ள பள்ளிக் கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் சேந்திரக் கிள்ளை கிராமத்திலுள்ள பள்ளிக்குக் கட்டிடம் கட்டித் தரும்பணி 1991-92-ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டால் வரும் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



1992 செப்டம்பர் 25]

741—

## மயானப் பாதை அமைத்தல்.

வினா எண் 4149—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியில் உள்ள பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பால்வாத்துண்ணன் காலனிக்கு மயானப் பாதை அமைத்துத் தர முடியுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தென்ஆற்காடு மாவட்டம் பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியம் பால்வாத்துண்ணன் கிராமத்தில் ரூ. 15,000 மதிப்பீட்டில் பம்பு ரூம் பணியும் மற்றும் ரூ. 11,700 மதிப்பீட்டில் அலமேலு மங்காபுரம் படித்துறை கட்டுதல் பணியும் 1991-92ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நடைபெற்று வருகின்றன. நிதி பற்றாக்குறை காரணமாக பால்வாத்துண்ணன் காலனிக்கு மயானப்பாதை அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படவில்லை. நிதிநிலை வசதிக்கேற்ப இப்பணி 1992-93ல் எடுத்துச் செய்வது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

742—

## சாலையை சீர்செய்து தார் சாலையாக்குதல்.

வினா எண் 5473—திரு ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதி நிதி நத்தம் கிராமத்திற்கு செல்லும் சாலையைச் சீர் அமைத்து புதியதாக தார் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மங்களூர் தொகுதி நிதி நத்தம் கிராமத்திற்கு செல்லும் சாலையைச் சீர் அமைத்து புதியதாக தார் சாலை அமைக்க ரூ. 7 லட்சம் செலவாகும். தற்போது இதுகுறித்து செயற் குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

743—

குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்தல்.

வினா எண் 6688—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள பெரியகுப்பத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சின்னக்குப்பம், பெரிய குப்பம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இவ்வாண்டு நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுவிட்டது. தற்பொழுது குடிநீர் பிரச்சினை இல்லை.

744—

சாலை வசதி செய்தல்.

வினா எண் 7613—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள அம்மன் குப்பத்திற்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் அம்மன் குப்பம் ஊராட்சியின் நிதிநிலை திருப்திகரமாக இல்லாததால் புவனகிரி ஒன்றியத்தை சேர்ந்த அம்மன்குப்பம் ஊராட்சிக்கு சாலை வசதி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது ஏதுமில்லை.

745.

குடிசைவாழ் மக்களுக்கு குடியிருப்புகள்

வினா எண் 6272—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிசைவாழ் மக்களுக்கு குடியிருப்புகள் அளிப்பது தொடர்பாக 1985-ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணை (எம். எஸ். 672 (10-5-1985) கவர்னர் ஆட்சியில் (எம். எஸ். 1488, 3-11-1988) பிறப்பிக்கப்பட்ட புதிய அரசாணையினால் ரத்து செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) குடிசைவாழ் மக்களின் குடியிருப்பு உரிமை பாது காப்பை உறுதிசெய்ய 1985-ல் பிறப்பிக்கப்பட்ட அவ்வரசாணை மீண்டும் புதுப்பிக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

(இ) அரசு (நிலை) ஆணை எண் 672 வீட்டுவசதி மற்றும், நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 10-7-1985-ன்படி குடிசைப் பகுதிகளில் 30-6-1984க்கு முன்பு வசித்து வருபவர் சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், குத்தகை மற்றும் விற்பனை ஒப்பந்தம் மூலம் மனை ஒதுக்கீடு பெறத் தகுதியுடையவராவார். ஆளுநர் ஆட்சியில் வெளியிடப்பட்ட அரசு (நிலை) ஆணை எண் 1488, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 3-11-1988ன் படி 30-6-1984-க்கு முன் குடிசைப் பகுதிகளில் வசித்து வந்தவர்களை சில நிபந்தனைகளுக்குட்பட்டு மாற்றிடம் வழங்காமல் வெளியேற்றம் செய்யப்படமாட்டாது என ஆணை இடப்பட்டுள்ளது. இதனால்

பெரும்பான்மையாக குடிசைவாசிகள் பயன் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே 1985-ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணை மீண்டும் புதுப்பிக்கப்படுமா என்ற வினாவிற்கு இடமில்லை.

746—

தொழிற்கடன் வழங்க வங்கிகள் மறுப்பு.

வினா எண் 7528—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தாட்கோ திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு மானியத்தில் தொழில் கடன் வழங்க தேசியமயமாக்கப்பட்ட சில வங்கிகள் மறுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சில வங்கிகள் கடன் வழங்குவதில் தாமதம் செய்வதாக அறியும்போது அவ்வங்கிகள் உடனடியாகக் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட வங்கிகளின் மேலாளர்/மண்டல மேலாளருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

747—

பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்

வினா எண் 10159—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கொங்கு வேளாள கவுண்டர்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

கொங்கு வேளாள கவுண்டர்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.



748—

நூலக வரி செலுத்துதல்.

வினா எண் 5968—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஊராட்சிகளுக்காக செலுத்தும் நூலக வரி மீண்டும் ஒன்றியங்களுக்கு ஊராட்சி நிதியிலிருந்து திரும்ப செலுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், ஊராட்சிகளே நேரடியாக தம் நிதியிலிருந்தே நூலக வரியை செலுத்தும் வகையில் அரசு உத்தரவிடுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்தப் பணம் செலுத்தப்படுவதில்லை. இப்பணம் அரசு கணக்கில் நூலகத் தலைப்பில் செலுத்தப்படுகிறது. 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலக வரி விதி பிரிவு 12ன் படி ஒவ்வொரு ஊராட்சியும் வீட்டு வரியின் மீது ரூபாய்க்கு 5 பைசா வீதம் மேல்வரி ஒன்று விதித்து அதனை நூலக வரியாக வீட்டு வரி, செலுத்துவோரிடமிருந்து வசூல் செய்து மாதந்தோறும் கருவூலத்தின் மூலம் நூலகக் குழுவிற்கு ஊராட்சியால் நேரிடையாகச் செலுத்தப்பட வேண்டும் என விதிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

749—

தற்பொழுது இயங்கும் விளையாட்டுப் பள்ளிகள் எண்ணிக்கை

வினா எண் 3433—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறையினரால் தற்போது இம்மாநிலத்தில் நடத்தப்படும் விளையாட்டுப் பள்ளிகள் எத்தனை?

(ஆ) அத்தகைய பள்ளிகளை அதிகரிக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறையினரால் தற்போது தமிழகத்தில் விளையாட்டுப் பள்ளிகள் மாணவர் களுக்கென மூன்றும், மாணவிகளுக்கெனத் தனியாக ஒன்றும் ஆக மொத்தம் நான்கு பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) இல்லை.

750—

ஆண்கள் அரசு மேல்நிலைப் பள்ளி அமைத்தல்

வினா எண் 4473—திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கல்பட்டு நகராட்சியில் ஆண்கள் அரசு மேல் நிலைப்பள்ளி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை ஏற்படுத்தித் தர அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு நகர்மன்றப் பகுதியில் 8 கி.மீ. சுற்றளவிற்குள் ஒரு அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியும், 5 தனியார் மேல்நிலைப் பள்ளிகளும் இயங்கி வரு கின்றன. இவற்றுள் இரு பள்ளிகள் ஆண்பாலருக்கானவை. எனவே போதிய அளவு பள்ளிகள் இருக்கும் இப்பகுதியில் தனி யாக ஆண்களுக்கென்று மேல்நிலைப் பள்ளி ஏற்படுத்துவது குறித்து எவ்விதக் கருத்தும் பரிசீலனையில் இல்லை.

751—

கலைக் கல்லூரி, தொழிற் கல்லூரி நிறுவுதல்

வினா எண் 5258—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவையாறு தொகுதியில் உள்ளோர் உயர் கல்வி பயில நகர்ப்புறங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளதால், அத்தொகுதி யில் உள்ள அரசர் ஓரியண்டல் கல்லூரியை கலைக் கல்லூரியாக வும், மேலும் ஒரு தொழில் கல்லூரியும் நிறுவுவதற்கு அரசு ஆவன செய்யுமா?



விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

கலைக் கல்லூரியாக மாற்றுவதற்கு அக்கல்லூரி நிர்வாகம் கருத்துரு அனுப்பினால் உரிய விதிகளுக்கிணங்க பரிசீலிக்க இயலும்.

அரசின் கடுமையான நிதிப் பற்றாக்குறை காரணமாக தொழில் கல்லூரி நிறுவுதல் இயலாது.

752—

விரிவுரையாளர்களுக்கு ஊதியம் வழங்குதல்.

வினா எண் 7889—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகள் குறிப் பாக சேலம் சௌடேஸ்வரி கல்லூரியில் கல்வித் துறையின் முறை யான பணியிட அனுமதியின்றி (without sanction of post) விரிவுரையாளர்களை நியமனம் செய்து அவர்களுக்கு ஊதியம் கொடுக்காமல் இருப்பது பற்றி அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அம்முறையீடுகள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தனியார் கல்லூரி (ஒழுங்காற்று) விதிகள் 1976 விதி 11 (1) ன்படி உதவி பெறும் கல்லூரிகளுக்கு பணியிடங் களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் அதிகாரம் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு உண்டு. எனவே அம்முறையீடுகள் தொடர் பாக தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் அரசின் ஆணைகள் தேவைப்படுகின்ற நிலையில் தக்க கருத்துக்களை அனுப்பும்படியும் கல்லூரி கல்வி இயக்குநருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

753—

## கட்டிட வசதி செய்தல்.

வினா எண் 9836—திரு. இரா. தங்கராசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆண்டிமடம் தொகுதியில் திருக்களப்பூர் உயர் நிலைப் பள்ளிக்கு கட்டிட வசதி போதாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான கட்டிடம் எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் கல்வி அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இப்பள்ளிக்கு தற்போது போதிய சொந்த நில மில்லை. நிலம் பெற பள்ளி தலைமையாசிரியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சொந்த நிலம் பெறப்பட்ட பின்னர் கட்டிடம் கட்டுவது குறித்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் படும்.

754—

## நோயாளிகளுக்கு கட்டிட வசதி செய்தல்.

வினா எண் 1435—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தொழு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தற்போது கட்டிட வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் கட்டிமுடிக்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இல்லை.



755—

## இன்பிரா ஸ்டெரெக்சர் வசதியை மேம்படுத்துதல்.

வினா எண் 1791—டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி அரசு தலைமை மருத்துவமனையில் உள் நோயாளிகளுக்கான இன்பிரா ஸ்டெரெக்சர் வசதிகளை மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நிதி நிலைமைக்கேற்ப திருச்சி மாவட்ட மருத்துவ மனையில் உள்ள பல்வகை பிரிவுகளின் தேவைகள் விரிவாக்கப் படும்.

756—

## மருத்துவமனையை விரிவுபடுத்துதல்.

வினா எண் 3332—திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) விருத்தாசலம் நகரில் உள்ள அரசு பொது மருத்துவ மனையை போதிய நவீன வசதிகளுடன் விரிவுபடுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

757—

## கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 3478—திரு. எம்.எம்.எஸ். அபுல் ஹசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனைக்கு தனியார்கள் இலவசமாக கட்டிடங்கள் கட்டித்தர முன் வந்தால் அதற்கு அரசு அனுமதி அளிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஆம்.

758—

மருத்துவமனை விரிவுபடுத்த புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 3734—திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பொள்ளாச்சி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த புதிய கட்டிடங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செயற்குறிப்பு இல்லை.

759—

மருத்துவமனையில் தீவிர கண்காணிப்பு பிரிவு திறத்தல்.

வினா எண் 4774—திரு. கே. பி. மணிவாசகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உடுமலை அரசு மருத்துவமனையில் தீவிர கண்காணிப்புப் பிரிவு (இன்டென்சிவ் கேர் யூனிட்) ஒன்று திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?



விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) இம் மருத்துவமனையில் பிரதான அரங்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு பேறுகால பின் கவனிப்புப் பகுதி மற்றும் இரத்த சேமிப்பு வங்கி ஆகியவைகள் செவ்வனே இயங்குவதால் தீவிர கண்காணிப்புப் பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

760—

இருதய நோயைத் தடுக்கும் சிறப்புத் திட்டம்.

வினா எண் 5792—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

Rheumatic Heart Diseases என்னும் இருதய நோய் மலைவாழ் மக்களுக்கு அதிகமாக வருவதால் இதைத் தடுக்க சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இல்லை.

761—

புதிய கட்டிடம் கட்டி புதிய மருத்துவமனையாக்குதல்.

வினா எண் 6136—திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பொள்ளாச்சி நகரில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைக்கு புதியதாக கட்டிடம் கட்டப்பட்டு நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இல்லை.

[1992 செப்டம்பர் 25

762—

போலி டாக்டர்கள் கண்டுபிடிப்பு.

வினா எண் 6232—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் போலி டாக்டர்கள் எத்தனை பேர் கண்டு பிடிக்கப்பட்டனர்?

(ஆ) அவர்கள்மீது எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் 266 போலி டாக்டர்கள் கண்டு பிடிக் கப்பட்டுள்ளனர்.

(ஆ) 266 பேர்களும் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இது போன்ற போலி டாக்டர்கள் செயல்படாமலிருக்க காவல் அலுவலர்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட் டுள்ளனர்.

763—

நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனை அமைத்தல்.

வினா எண் 8597—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேரன்மகாதேவி தொகுதி முக்கூடல் பேரூராட்சியில் பீடித் தொழிலாளர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனை அமைக்கும் உத்தேசம் அரசிடம் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படத் தொடங் கும்?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சேரன்மகாதேவி தொகுதி முக்கூடல் பேரூராட்சியில் பீடித் தொழிலாளர்கள் தொழிலாளர் நல அரசு கட்டுறுதி திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படாததால் தற்போதைய நிலையில் அவர்களுக்கென தனிப்பட்ட மருத்துவமனை அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

764—

ரிசர்வ் பாரெஸ்டில் மரம் ஏலம் விடுதல்.

வினா எண் 4739 திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி வனச்சரகம், ஒப்பிலான், மாரியூர், முந்தல் மற்றும் வாலிநோக்கம் கிராமப் பகுதியிலுள்ள ரிசர்வ் பாரஸ்டிற்குச் சொந்தமான 20 ஆண்டு களுக்கு மேற்பட்ட முதிர்ச்சி அடைந்த உடை மரங்களை ஏலம் விடுவதின் மூலம் அன்றாட சேதத்தை தவிர்க்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்கு வரத்துத்துறை அமைச்சர்:

மணல் அரிப்பையும், புயல் சேதத்தையும் தவிர்க்க அப் பகுதியில் உள்ள மரங்கள் இன்றியமையாத இயற்கை அரணாக அமைந்திருப்பதால் அவைகளை வெட்டி ஏலம் விடுவது மண் ணிற்கும், மனித இனத்திற்கும் ஊறு விளைவிக்கும். எனவே, அம்மரங்கள் ஏலம் விடப்படுவதில்லை.

765—

தார் சாலை சீரமைத்தல்.

வினா எண் 5407 திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

மங்களூர் தொகுதி நாவலூர் கிராமத்திற்கு செல்லக் கூடிய தார் சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

[1992 செப்டம்பர் 25

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

புதுக்குளத்திலிருந்து நாவலூர் செல்லும் சாலை மங்களூர் ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இச் சாலையை 4.4 கி.மீ. நீளத்திற்கு மேம்பாடு செய்வதற்கு 1992-93 ஆம் ஆண்டு பேருந்து தடச்சீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

766—

உல்லாச கட்டணத்தை குறைத்தல்.

வினா எண். 5772—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வால்பாறைத் தொகுதி குரங்கு நீர்வீழ்ச்சிக்கு வருகை தரும் உல்லாச பயணிகளுக்கு ரூ. 5 வீதம் கட்டணம் வசூலிப்பது மிகவும் அதிகம் என்று பொது மக்கள் கருதுவதால் இந்த கட்டணத்தை குறைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி குரங்கு நீர்வீழ்ச்சிக்கு வருகைதரும் உல்லாச பயணிகளிடமிருந்து தற்போது வசூலிக்கப்படும் கட்டணம் ரூ. 5 மட்டுமே. இக்கட்டணம் மிகவும் சாதாரணமாக இருப்பதால் இதனை மேலும் குறைக்க வேண்டியது அவசியமில்லை.

767—

பேருந்து விடுதல்.

வினா எண். 8181—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதி காரைக்காட்டு சாவடி கிராமத்திற்கு பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



1992 செப்டம்பர் 25]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் தற்பொழுது சிதம்பரம் — காரைக்காட்டு சாவடி தடத்தில் நாளொன்றுக்கு 4 நடைகள் வீதம் பேருந்தினை இயக்கி வருகிறது.

768—

மண்வாரிக் கப்பல்கள் வாங்குதல்.

வினா எண். 8294—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் சிறிய துறைமுகங்களில் மண் வாரும் பணிகளை மேற்கொள்ள மண்வாரிக் கப்பல்கள் வாங்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கடலூர் துறைமுகத்தில் மண்வாரும் பணிகளை மேற்கொள்ள திருவாளர்கள் டின்னி லிமிடெட், சென்னை நிறுவனத்தினரால் கட்டமைக்கப்பட்ட தூர்வாரி 1976-ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டது. நாகப்பட்டினம் துறைமுகத்தில் மண்வாரும் பணிகளை மேற்கொள்ள திருவாளர்கள் பாரதி ஷிப்யார்டு, பம்பாய் நிறுவனத்தினரால் கட்டமைக்கப்பட்ட தூர்வாரி ஒன்று திருவாளர்கள் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், சென்னை அவர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டது.

769—

## வீட்டுவசதி கடன் நிவாரணத் திட்டம் மூலம் தள்ளுபடி செய்தல்.

வினா எண். 5984—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவாளர்கள் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் பெற்றுள்ள கடன்களை விவசாயக் கடன் நிவாரணத் திட்டம் 1990-ன்கீழ் கடன் தள்ளுபடி செய்ய அத்திட்டத்தின் நெறிமுறைகளின் கீழ் இயலுமா ?

(ஆ) இனியேனும் அரசு பரிசீலித்து கைத்தறி நெசவாளர்களும் பயன்பெறும் வகையில் வழிவகை செய்ய முன் வருமா ?

விடை.—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் :—

(அ) இயலாது.

(ஆ) விவசாயிகள் மற்றும் கிராமப்புற கைவினைஞர்களுக்கு அளிக்கப்பட்ட கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் மேற்படி கைவினைஞர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக கணிக்கப்பட்ட கடன்களுக்கு மட்டுமே நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், கைத்தறி நெசவாளர் வீட்டு வசதி மற்றும் தொழிற்கூட திட்டம் அரசு மான்யம் மற்றும் ஹட்கோ கடன் உதவியுடன் செயற்படுத்தப்படுகிறது. எனவே, மேற்படி நிவாரணச் சட்டத்தின்கீழ் நெசவாளர்கள் வீடுகட்டும் திட்டத்தில் வழங்கப்பட்ட கடன்களை நிவாரண இயலாது.

770—

## சாலை பழுதுபார்த்து, தார்ச்சாலையாக்குதல்

வினா எண். 1876—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் மதுக்கூர் ஒன்றியம் கீழக்குறிச்சியிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் நெடுஞ்சாலைத்துறை சாலையைப் பழுதுபார்த்து தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

771—

## புயல் பாதுகாப்புக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 3143—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் மந்திரிப்பட்டினத்தில் ஒரு புயல் பாதுகாப்பு கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

772—

## காவிரியில் மின்சாரம் தயாரித்தல்.

வினா எண். 3373—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மோகனூர் நன்செய் இடையாறு அருகில் காவிரி ஆற்றில் சிறு தடுப்புக் கட்டி அதில் 20 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

773—

## சாலை செப்பனிடுதல்.

வினா எண். 4862—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்—ஆலங்குளம் ஒன்றியம் மாறாந்தை — செட்டிக்குறிச்சி சாலை செப்பனிடப்படாமலிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மேற்படி சாலை கி.மீ. 2/2-3/4 வரை சிறப்புத் தன்னிறைவு திட்டத்தின் கீழ் நிதிநிலைமைக்கேற்ப 1992-93 ஆம் ஆண்டு பட்டியலில் சேர்க்கப்படவுள்ளது.

774—

## குகை வழித்தடம் அமைத்தல்.

வினா எண். 8015—திரு. அ. ஸ்ரீதான் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வால்பாறை நகரியத்திற்கு வாகனம் செல்ல மலையைக் குடைந்து '' குகை வழித்தடம் '' அமைக்க அரசு பரிசீலிக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

திட்டம் எதுவுமில்லை. சட்டமன்றப் பேரவை வினாவில் கேட்டுக்கொண்டுள்ளவாறு குகைப்பாதை அமைக்க மிகப் பெருந்தொகை தேவைப்படும். தற்சமயம் உள்ள நெருக்கடியான நிதிநிலையில் இப்பணி மேற்கொள்ள இயலாது



775—

## குடிநீர் கொண்டு வருதல்.

வினா எண். 137—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், ஆத்தூர் நகரில் கடுமையான குடிநீர் பஞ்சம் இருப்பதால் ஆத்தூருக்கு மேட்டூரில் இருந்து குடிநீர் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மேட்டூரிலிருந்து குடிநீர் ஆத்தூருக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1992 ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவுபெற்று பயனுக்கு கொண்டு வரும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

776—

## பவானி ஆற்றில் இருந்து தண்ணீர் கொண்டுசெல்லுதல்.

வினா எண். 244—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் ஒன்றியத்திலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் சுத்தமான குடிநீர் கிடைக்க பவானி ஆற்றில் இருந்து தண்ணீர் கொண்டு செல்ல அரசு எடுத்த நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) பணி எப்போது தொடங்கி எப்போது முடிவடையும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) திட்ட மதிப்பீடு தயாரித்து நிர்வாக ஒப்புதல் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் பணிகள் மேற்கொள்ளப்படும்.

777—

## கூட்டுக்குடிநீர் திட்டத்தை விரைவில் முடித்தல்.

வினா எண். 547—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியத்தில் காவிரி ஆற்றில் அமைக்கப்பட்ட கூட்டுக்குடிநீர்த்திட்டம் பணி முடிவு பெறாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) இதனை விரைந்து முடிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) இது அரசின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) இதை விரைந்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

778—

## ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.

வினா எண். 708—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி, கருப்பட்டிக்காடு கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் திருவத்தேவன் ஊராட்சி கருப்பட்டி கிராமத்தில் 19[illegible] ஆம் ஆண்டில் ஒரு ஆழ்குழாய்கிணறு அமைக்கப்பட்டு தற்பொழுது நல்ல நிலையில் இயங்குகிறது. அங்கு புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்சமயம் இல்லை.





779 —

## ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.

வினா எண். 1871—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் மதுக்கூர் ஒன்றியம் கீழக்குறிச்சி மேலத் தெருவிற்கு ஒரு ஆழ்குழாய் கிணறு அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் மதுக்கூர் ஊராட்சி ஒன்றியம் கீழக் குறிச்சி மேலத்தெருவில் ஏற்கனவே ஒரு இந்தியா மார்க் 2 கைப் பம்பு நல்ல நிலையில் இயங்கி வருகிறது. அங்கு குடிநீர் பிரச் சினை ஏதுமில்லை. எனவே, மேற்படி தெருவில் மேற்கொண்டு ஒரு ஆழ்குழாய் கிணறு அமைத்திட திட்டம் ஏதுமில்லை.

780—

## நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 1973—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை(வ) ஆதிதிராவிடர்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருவோணம் ஒன்றியம் அதம்பை வடக்கில் 200 ஆதி திராவிட மக்கள் இருக்கிறார்கள். இங்கு ஒரு கையிறைப்பான் நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு இல்லை.

781—

## நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 1981—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சி வல்லம் கொல்லைக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை.—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சி, வல்லம் கொல்லையில் 900 மக்கள் தொகைக்கு ஒரு கையிறைப்பானும், 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு நீர்த்தேக்கத் தொட்டியும் நல்லமுறையில் இயங்கி வருவதால், ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் தற்போது செயற் குறிப்பு இல்லை.

782—

## நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 2720—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சின்ன பைங்காலுக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், சின்ன பைங்காலில் 2 கையிறைப்பான்கள் பயனில் உள்ளன. இவை போதுமானதாகும். எனவே, ஒரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டித்தர அரசிடம் தற்போது செயற் குறிப்பு இல்லை.



783—

## ஊராட்சிகளின் மேம்பாடு புதிய திட்டங்கள் அமுலாக்குதல்.

வினா எண் 3361—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வருமானமே இல்லாத ஊராட்சிகளின் மேம்பாட்டிற்கு வழிவகைகள் ஆராயப்படுமா ?

(ஆ) நிறுத்திவைக்கப்பட்டுள்ள உபரி நிதியை வழங்க (General Fund) புதிய திட்டங்களை அமுல்படுத்த அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) வருமானமே இல்லாத ஊராட்சிகள் ஏதும் இருக்க வாய்ப்பில்லை, நிதி வசதி குறைந்த ஊராட்சிகளே உள்ளன. அவைகளின் மேற்பாட்டிற்கு அவ்வப்போது ஏற்படும் தேவைகளை நிவர்த்திக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஊராட்சிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இல்லாமையால் தற்போதுள்ள தனி அலுவலர்கள், புதிய வேலைகளை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியஉபரி நிதியிலிருந்து செய்ய வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் பழைய வேலைகள் செய்யப்பட்டு வருகிறது.

784—

## நீர்த்தேக்கத் தொட்டியை பழுதுபார்த்தல்.

வினா எண். 3833—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதி வடக்கன்குளம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியை பழுது பார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ராதாபுரம் தொகுதி , வடக்கன்குளம் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் பழுது ஏதும் இல்லையாதலால் பழுது பார்க்க செயற் குறிப்பு அரசிடம் இல்லை.

785—

தொகுப்பு வீடு கட்டுதல்.

வினா எண். 4150— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியில் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பால்வார்த்துண்ணன் காலனிக்கு தொகுப்பு வீடு கட்டித்தர ஏற்பாடு செய்ய முடியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 1992-93 ஆம் ஆண்டுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஆண்டுத் திட்டம் தயாரிக்கும் பொழுது திட்டத்தில் சேர்த்து பால்வார்த்துண்ணன் ஆதி திராவிடர் காலனிக்கும் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க ஆவன செய்யப்படும்.

786—

தொகுப்பு வீடு கட்டுதல்.

வினா எண். 4157—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதியில் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வேளங்கிப்பட்டு காலனிக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?





விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆம். 1992-93 ஆம் ஆண்டிற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் ஆண்டுத் திட்டம் தயாரிக்கும்போது திட்டத்தில் சேர்த்து, வேளங்கப்பட்டு ஆதிதிராவிடர் காலனிக்கும் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யும்.

287—

குட்டையை அகலப்படுத்தி ஆழப்படுத்துதல்.

வினா எண். 4238—திரு. இரா. தங்கராசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆண்டிமடம் தொகுதி, கோவில் வாழ்க்கை கிராமத்தில் உள்ள தாந்தி அம்மன் குட்டையை அகலப்படுத்தி, ஆழப்படுத்தும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம் கோவில் வாழ்க்கை கிராமத்தில் உள்ள தாந்தி அம்மன் குட்டையை அகலப்படுத்தி, ஆழப்படுத்தத் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

788—

சாலை மேம்பாடு செய்தல்.

வினா எண். 5235—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு ஒன்றியத்தில் நீண்ட காலமாகவே செப்பனிடப்படாமல் உள்ள கோவில் பத்து பெரியக் குத்தகை சாலை மற்றும் கோவில்பத்து நாலுவேதபதி சாலையை நடப்பாண்டு திட்டத்தில் மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :—

வேதாரண்யம் தொகுதி தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத் தில் உள்ள கோவில்பத்து பெரிய குத்தகை சாலையின் நீளம் 6.4 கி.மீ. ஆகும். இதை தார்ச்சாலையாக மேம்படுத்தவும் நடுவில் 4/0 கி.மீ.-ல் ஒரு பாலம் கட்டவும் மொத்தச் செலவு ரூ. 15 இலட்சம் தேவைப்படும். எனவே, நிதிநிலைமை பற்றாக் குறையின் காரணமாக தற்போது இதுபற்றிய செயற் குறிப் பேதும் அரசிடம் இல்லை.

789—

குடிநீர் பிரச்சினையை போக்குதல்.

வினா எண். 5409—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

மங்களூர் தொகுதி, பெருமுளை கிராமத்தில் வசிக்கும் ஆதி திராவிடர் மக்களுக்கு நிரந்தரமாக குடிதண்ணீர் பிரச்சினையை போக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மங்களூர் தொகுதி, பெருமுளை கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களின் குடி தண்ணீர் பிரச்சனையை நிரந்தர மாகப் போக்க கழுநூர் மற்றும் 10 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பெருமுளை சேர்க்கப்பட்டு ஆய் வில் உள்ளது. இத்திட்டம் செயல்படும்போது பெருமுளை கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு குடிநீர்ப் பிரச்சினை நிரந்தரமாக தீர்ந்துவிடும்.

790—

கூட்டுக் குடிநீர் திட்டம்.

வினா எண். 5466—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா :

மங்களூர் தொகுதி, புதுகுளம் கிராமத்தில் எங்கு ஆழ் குழாய் போர் கிணறு அமைத்தாலும் அந்தப் பகுதியில் உப்புத்



தண்ணீர் கிடைப்பதால் அந்தக் கிராமத்திற்கு கூட்டுக்குடி நீர்த் திட்டம் மூலம் தண்ணீர் கொண்டு வர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆம். கழுதூர் மற்றும் 10 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் புதுக்குளம் கிராமம் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கிய பின் பணிகள் துவக்கப்படும்.

791—

பைப்லைன் மூலம் குடிநீர் கொண்டு வருதல்.

வினா எண். 5625—திரு எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா

(அ) நத்தம் பேரூராட்சிப்பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண அருகிலுள்ள கறந்தமலை அய்யனார் அருவி நீர்வீழ்ச்சியினின்று பைப்லைன் மூலம் குடிநீர் கொண்டுவர ஆய்வு மேற்கொள்ளப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆய்வின் விவரம் என்ன?

(இ) அந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) அய்யனார் அருவியில் நீர் வரத்து நத்தம் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்குப் போதுமானதாக இல்லாததால் மாற்று நீராதாரம் அமைக்க நிலநீர் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. தேவையான நீராதாரம் உருவாக்கப் பட்டதும் தேவையான மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.

792—

## தொலைக்காட்சி பெட்டி வழங்குதல்.

வினா எண் 5652—திரு ச. புரட்சிமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

கிராமத்திற்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் மலையனூர் கிராமத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மலையனூர் ஊராட்சியின் நிதியிலிருந்து மலையனூர் கிராமத்திற்கு 1992-93 —ஆம் ஆண்டில், தொலைக்காட்சிப் பெட்டி வாங்கி வழங்கிட ஏற்பாடு செய்யப்படும்.

793—

## இலவச வீடு கட்டுதல்.

வினா எண் 5657—திரு ச. புரட்சிமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

மங்களூர் தொகுதி புதுக்குளம் கிராமத்தில் அருந்ததியர் மக்கள் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதியில் இலவச வீடுகள் கட்டித்தரப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மங்களூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1991-92ஆம் ஆண்டில் 203 தொகுப்பு வீடுகள் எடுக்கப்பட்டு வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் மங்களூர் தொகுதி புதுக்குளம் கிராமத்திற்கு 1992-93ம் ஆண்டு வீடு கட்டும் திட்டம் மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.



794—

## கூட்டுறவுக் வங்கி கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 6870—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூரில் வேளாண்மை தொடக்கக் கூட்டுறவு வங்கிக்கு நிலம் கையகப்படுத்தி கட்டிடம் கட்ட அரசின் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போழுது?

விடை—

மாண்புமிகு திரு ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) போளூரில் வேளாண்மை தொடக்கக் கூட்டுறவு வங்கிக்கு ஊரகக் கிடங்கு கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்த அரசால் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1992-93 ஆம் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படலாம் என கருதப்படுகிறது.

795—

## மருத்துவமனையில் படுக்கைகளை உயர்த்துதல்.

வினா எண் 7783—திரு என். ஜி. வேணுகோபால்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) இராணிப்பேட்டை சிப்காட் பகுதியில் இயங்கிவரும் இ. எஸ். ஐ. மருத்துவமனையை 50 படுக்கை கொண்ட மருத்துவமனையாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்போது இராணிப்பேட்டையில் இயங்கிவரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்தும் திட்டம் அரசிடம் இல்லை. ஆயினும் இம் மருந்தகம் அப்படியே இருக்க தனியாக ஒரு 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை இராணிப்பேட்டையில் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

796—

பால் வழங்கும் சங்கம் அமைத்தல்.

வினா எண். 7166— திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் கீழ்ப்புன வாசலில் ஒரு கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியத்தில் புனவாசல் கிராமத்தில் ஏற்கனவே பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் ஒன்று சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் பால் உற்பத்தி செய்து உள்ளூர் தேவை போக 75 சதவீதத்துக்கும் அதிகமாகப் பாலைத் தஞ்சை மாவட்டக்கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பிவருகிறது. இச்சங்கத்திற்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்தில்தான் கீழ்ப்புனவாசல் கிராமம் இருக்கிறது. தற்போது கீழ்ப்புனவாசல் கிராம பால் கறவை உறுப்பினர்கள் புனவாசல் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் பால் ஊற்றிப் பயன்பெற்று வருகிறார்கள். அதனால் கீழ்ப்புனவாசல் கிராமத்திற்கென்று தனியாக ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.



797—

கழிவறை வசதி செய்தல்.

வினா எண் 7963 - திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

புதுக்கோட்டை தொகுதி எம். குளவாய்ப்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட மாத்தூர் கிராமத்தில் இருக்கும் மாணவர் இல்லத்திற்கு கழிவறை வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

புதுக்கோட்டை மாவட்டம், மாத்தூர் வள்ளலார் மாணவர் இல்லம் அரசு உணவு மானியம் மட்டும் பெறும் தனியார் விடுதியாகும். எனவே, இவ்விடுதிக்கு அரசால் கழிவறை வசதி செய்து கொடுக்க இயலாது.

798—

வக்பு வாரியத்திற்கு புதிய கட்டிடம்.

வினா எண் 5729— திரு. எம். எம். எஸ். அபுல்ஹாசன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வக்பு வாரியத்துறை அலுவலகத்திற்கு சென்னையில் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிடம் கட்டி முடிக்கப்படும்.

விடை—

மாண்புமிகு திரு எஸ். நாகூர்மீரான், ஊரகத் தொழில்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சென்னை, ஜார்ஜ் டவுன் கதவு எண் 6, ஜாபர் சிரங் தெருவில் 13,024 சதுர அடி பரப்பு நிலத்தை வக்பு வாரிய அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்காக தமிழ்நாடு அரசு வழங்கிய கடன் தொகையைப் பயன்படுத்தி சொந்த நிலம் 1982-ல் வாங்கியுள்ளது. ஆனால் வாரியத்தின் நிதிநிலை திருப்திகரமாக இல்லாததால் அலுவலகக் கட்டிடம் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்படவில்லை. நிதிநிலை மேம்பட்டதும் இதன் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

799—

வழக்கறிஞர்கள் ஓய்வு அறை கட்டுதல்.

வினா எண் 9311—திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை நகரில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்கள் ஓய்வு அறை (Lawyers rest room ) கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி சட்டத்துறை அமைச்சர் :

இப்பொருள் குறித்த செயற்குறிப்பு தற்போது அரசு மற்றும் உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இல்லை.

800—

வீட்டுமனைப் பட்டா வழங்கல்.

வினா எண் 3085—திரு ஆர்.சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசமுத்திரம் ஒன்றியம் பெருமகளூர் நகரம் ஆர். கே. நகரில் நீண்ட பல வருடங்களாக பஞ்சாயத்து புறம்போக்கில் குடியிருக்கும் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு சர்வே எண் 29ஏ-ல் 3 ஏக்கர் 4 சென்ட் இடத்தை குடிமனை பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?





விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், பெருமகளூர் கிராமம் முழுவதும் தடையாணைப் புத்தகத்தில பதிவு செய்யப்பட்டுள்ளதால் நில ஒப்படை மற்றும் வீட்டுமனை ஒப்படைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தடையை நீக்குவது சம்பந்தமாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அதன் மீது முடிவெடுக்கப்பட்டபின் வீட்டுமனைப்பட்டா வழங்குவது பரிசீலிக்கப்படும்.

801—

மலைவாழ் மக்களுக்கு இலவசமாக விளைநிலங்கள்.

வினா எண் 5079—திரு வே. பெரியசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெரியார் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்களுக்குட்பட்ட ஆதி திராவிடர்கள் மலைவாழ் மக்களுக்கு இலவசமாய் விளை நிலங்களை அரசு வழங்கியதை அரசின் முன் அனுமதியை பெறாமல் குறிப்பிட்ட நாட்களுக்குள் விலைக்கு விற்கக்கூடாது என அரசு ஆணை பிறப்பித்தும், அதனையும் மீறி விற்ற நிலங்களை மீண்டும் அரசு கையகப்படுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

ஆம்.

802—

வணிகவரித்துறை ஆணையர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 6095—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வணிகவரித்துறை ஆணையர் அலுவலகம் இடநெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு புதிய கட்டிடம் கட்டித்தரப் படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தற்போது எழிலகம் இணைப்புக் கட்டிடத்தில் இயங்கி வரும் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை மாற்றிய பின்னர், வணிகவரி அலுவலகத்தில் சில பிரிவுகளை மேற்படி காலியாகும் எழிலகம் இணைப்பு கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்து கொள்ளலாம் எனக் கருதப்பட்டுள்ளது.

803—

நூல் நிலையங்கள் மற்றும் வழங்கு முனைகளை அமைத்தல்.

வினா எண். 5745—திரு பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிராமப்பகுதி இளைஞர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு நூல் நிலையங்கள் மற்றும் வழங்கு முனைகளை அமைப்பதில் அரசு தெரிவித்துள்ள விதிமுறைகளை தளர்த்த முன் வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

நூல் நிலையங்கள் மற்றும் வழங்கு முனைகளை அமைப்பதில் தற்போது நடைமுறையில் பின்பற்றிவரும் விதிமுறைகளை தளர்த்த இயலாது.

804—

வேளாண்மையைக் கட்டாய பாடமாக்குதல்.

வினா எண் 8800—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பள்ளிப் பாடத்திட்டத்தில் வேளாண்மையை ஒரு கட்டாய பாடமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) பள்ளிப் பாடத்திட்டத்தில் வேளாண்மையை ஒரு கட்டாய பாடமாக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

805—

நூலகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 8834—திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியகுளம் நகரத்தின் மக்கள் தொகையின் அடிப்படையில் நூலகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் புதிய நூலகக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

பெரியகுளம் நகரில் இலவசமாகப் பெறப்பட்ட 4.599 சதுர அடி மனையில் 1200 சதுர அடி பரப்பில் ரூ. 2 இலட்சம் மதிப்பீட்டில் கிளை நூலகக் கட்டிடம் கட்ட 21—6—1991-ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டடப் பணி முடிக்கப்படும்.

806—

கிளை நூலகம் ஏற்படுத்துதல்.

வினா எண். 9682—திரு ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பழனி வட்டம் அ. சலையம்புத்தூர் கிராமத்திற்கு தற்போது நூலக வசதி இல்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு கிளை நூலகம் ஒன்று ஏற்படுத்தித் தரப்படுமா ?

விடை— 

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1990–91 ஆம் நிதியாண்டில் அரசாணை (நிலை) எண் 720, கல்வி, நாள் 29—5—1990-ல் அனுமதிக்கப் பட்டு, 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பழனி வட்டம் அ· கலையம்புத்தூர் கிராமத்தில் கிளை நூலகம் ஒன்று திறக்கப் பட்டு 25—10—1990 முதல் செயல்பட்டு வருகிறது.

807—

## எய்ட்ஸ் நோயை கட்டுப்படுத்த மத்திய அரசு உதவி.

வினா எண். 4278—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) எய்ட்ஸ் நோயை கட்டுப்படுத்துவதற்கு மத்திய அரசு சிறப்பு உதவிகளை மாநிலத்திற்கு அளிக்கிறதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

ஒரு விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை.

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு, மாநில அரசுக்கு எய்ட்ஸ் நோயை கட்டுப்படுத்த அளித்த உதவிகளின் விவரம் கீழே தரப்படு கின்றன :—

(1) இந்திய அரசு, தமிழ்நாட்டில் சென்னை மருத்துவக் கல்லூரி சென்னையில் எயிட்ஸ் செல் (Aids Cell) ஏற்படுத்துவதற்கு உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ. 10.00 இலட்சமும் மற்றும் இரத்த தானம் செய்வோரின் இரத்தத்தை ஸ்கிரீன் (Screen) செய்ய உபகரணங்கள் வாங்க ரூ. 5.30 லட்சமும் ஆக மொத்தம் ரூ. 15.30 இலட்சம் நிதி உதவி அளித் துள்ளது. இதற்கு தமிழ்நாடு அரசு அரசாணை எண் 1568, சுகாதாரம், நாள் 30—8—1990-ல் ஒப்புதல் ஆணை வழங்கி யுள்ளது.





(2) மத்திய அரசு 1990–91 ஆம் வருடம் தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 15.00 லட்சம் நிதியுதவி அளித்துள்ளது. இதற்கு தமிழ்நாடு அரசு அரசாணை எண் 332 சுகாதாரம், நாள் 7—3—1991-ல் கீழ்க்கண்ட பணிகளை நிறை வேற்ற ஒப்புதல் அளித்துள்ளது.

| | (ரூபாய் இலட்சம்.) |
|---|---|
| (1) 4 வீடியோ படங்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) (பொதுமக்கள் இரத்ததானம் செய் வோர் மற்றும் விலை மகளிர் ஆகியவர்களுக்கு வீடியோ படங்கள் தயாரிக்கவும்). .. | 4.5 |
| (2) கல்லூரி மாணவர்கள், பால்வினை நோய், மருத்துவப் பிரிவுக்கு வரும் பணியாளர்கள், விலை மகளிர், தொழிற்சாலைப் பணியாளர்கள் ஆகியவர்களுக்கு எச்.ஐ.வி. தொற்றுதல் மற்றும் தடுப்பது சம்பந்தமாக சுகாதாரத்தை கற்பிக்கும் நடவடிக்கைக்கு செலவிடவும் .. | 3.00 |
| (3) சில முக்கியமான மருத்துவமனை களில் உள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கு எச்.ஐ.வி- பணியாளர்களை கவனிக்கவும் மற்றும் தொற்று வதனை கட்டுப்படுத்தவும் விவரங்கள் குறித்து பயிற்சி அளிக்கவும் .. | 4.00 |
| (4) மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பால்வினை நோய்ப் பிரிவில் Health Education Couselling Course ஏற்படுத்தவும் | 3.50 |

3. மத்திய அரசு உலக சுகாதார நிறுவனம் மூலம் அளிக்கப் பட்ட 1991-92 ஆம் ஆண்டு எயிட்ஸ் கட்டுப்பாடு திட்டத் திற்காக வழங்கப்பட்ட ஒரு பகுதி நிதியுதவியாக ரூ. 1,53,100 அளித்துள்ளது. இந்த நிதியுதவியின் மூலம் பொதுமக்களுக்கு எயிட்ஸ் நோயின் கொடுமை குறித்து விழிப்புணர்வு பெற பல திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது. புரட்சித்தலைவி மருத்துவ நலத்திட்டத்தின் கீழ் நடைபெறும் முகாம்களில் இந்த நோய் சம்பந்தமாக பொதுமக்களுக்கு விரிவாக சொல்லித் தரப்படுகிறது.

808—

## புதிதாக நியமனம் செய்யப்பட்ட தொழுநோய் ஆய்வாளர் எண்ணிக்கை.

வினா எண். 5616—திரு எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடந்த 3 ஆண்டுகளில் புதிதாக நியமனம் செய்யப் பட்ட தொழுநோய் ஆய்வாளர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களில் பணிமுறை நியமனம் பற்றிய விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 1989-லிருந்து 1991 ஆம் ஆண்டு வரை 193 நபர்களுக்கு தொழுநோய் ஆய்வாளர் பயிற்சி அளிக்கப் பட்டது. அதில் 172 நபர்கள் பயிற்சியில் தேர்ச்சி பெற்றுள்ளார் கள். டிசம்பர் 1991-ல் மேலும் 20 நபர்கள் தேர்ச்சி பெற்றுள் ளார்கள். மொத்தம் 192 நபர்களில் 91 நபர்களுக்கு தொழுநோய் ஆய்வாளராக பணி நியமனம் பிப்ரவரி 92 வரை வழங்கப் பட்டது. மீதமுள்ள நபர்களுக்கு பணியிடங்கள் காலியாகும் போது நியமனம் அளிக்கப்படும்.

809—

குடும்பக் கட்டுப்பாடு.

வினா எண். 5678—திரு ம. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள மருத்துவ மனைக்கு செல்வோர் அந்தப் பகுதியில் வசிப்பதற்கான சான்றி தழ் வாங்கிக் கொடுத்தால்தான் அறுவை சிகிச்சை செய்ய வேண்டு மென்று விதி உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அவ்விதி ரத்து செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கே இடமில்லை.



810—

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கூடுதலாக மருத்துவர் நியமித்தல்.

வினா எண். 6195—திரு தா. வேடியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூர் களம்பூர் தொகுதி ஆரம்ப சுகாதார நிலை யங்களில் கூடுதலாக ஒரு ஆண் மருத்துவரும் ஒரு பெண் மருத்து வரும் ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) போளூர் களம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரண்டு மருத்துவ அலுவலர்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதற்குமேல் கூடுதலாக பணியாளர்கள் நியமனம் செய்ய செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

811—

ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவம் பயின்ற மருத்துவர்கள் நியமனம்.

வினா எண். 8796—திரு ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலை யங்களிலும் சித்த மருத்துவம் பயின்ற மருத்துவர்கள் நியமிக்கப் படுவார்களா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இதுபற்றிய செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

ஆ() இக்கேள்விக்கு இடமில்லை.

812—

## சித்த மருத்துவ வாரியத்தை மீண்டும் இயக்குதல்.

வினா எண். 8861—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடந்த இரண்டு ஆண்டுகளாக இயங்காமல் இருக்கும் சித்தமருத்துவ வாரியத்தை மீண்டும் உருவாக்க அரசின் செயற் குறிப்பு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது உருவாக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) செயற் குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

813—

## பேருந்து விடுதல்.

வினா எண். 5683—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேரன் மகாதேவி தொகுதி கடையம் ஊராட்சி ஒன்றியம் வழித்தடம் 120ஏ பேருந்தை கோவிலூற்றிலிருந்தும் லக்ஷ்மியூர், வடமலைப்பட்டி, வெங்கடாம்பட்டி வழியாக மாற்றி விடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) வழித்தடம் எண். 129 மூன்பு போல் செல்லப் பிள்ளையார்குளம் ஏ. பி. நாடானூர் வழியாக விட அரசிடம் செய்ற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) 1—1—1992 முதல் தடம் எண். 129, செல்லப் பிள்ளையார் குளம்—ஏ. பி. நாடானூர் வழியாக இயக்கப்பட்டு வருகிறது.



814—

## பேருந்து நிலையம் அமைத்தல்.

வினா எண். 7148—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் புனவாசலில் ஒரு பேருந்து நிலையம் ( stage ) அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

சோழன் போக்குவரத்துக் கழகத்தால் பேராவூரணி ஒன்றியம் புனவாசலில் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

815—

## சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.

வினா எண். 8382—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாகப்பட்டினம்–காயிதே மில்லத் மாவட்டத்தில் சோழன் போக்குவரத்துக் கழத்திற்குச் சொந்தமான பேருந்துகள் எத்தனை?

(ஆ) அதில் 1989–90 ஆம் ஆண்டிற்கான வருமானத்தின் விவரம் என்ன ?

(இ) மேலும் புதிய பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) நாகப்பட்டினம்–காயிதே மில்லத் மாவட்டத்தில் சோழன் போக்குவரத்துக் கழகத்துக்குச் சொந்தமான பேருந்துகள் 389 ஆகும்.

[1992 செப்டம்பர் 25

(ஆ) 1989—90-ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூ. 18,88,62,525.00.

(இ) சோழன் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டு பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை இயக்க உத்தேசித்துள்ளது. புதிய வழித்தடங்களில் தேவைக்கு ஏற்பவும் நிதி நிலைக்குத் தக்கவாறும் புதிய பேருந்துகள் விடப்படும்.

816—

## புதிய பேருந்துகள் விடுதல்.

வினா எண். 8838—திரு. எம். பெரியவீரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கொடைக்கானல் பகுதி பண்ணைக் காட்டிலிருந்து வத்தலக்குண்டுக்கு புதிய பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வத்தலக்குண்டிலிருந்து பண்ணைக் காட்டிற்கு ஊத்து வழியாக 2 அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலமாகவும் 3 தனியார் பேருந்துகளின் மூலமாகவும் 18 நடைகள் இயக்கப்படுகின்றன.

அதேபோன்று வத்தலக்குண்டிலிருந்து பண்ணைக்காட்டிற்கு அய்யம்பாளையம் வழியாக 2 அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலமாகவும், 2 தனியார் பேருந்துகள் மூலமாகவும் 10 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, தற்போது உள்ள பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது.

817—

## நெசவாளர்களுக்கு கூலி நிர்ணயச் சட்டம்.

வினா எண். 2258—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:



1992 செப்டம்பர் 25]

விலைவாசி அடிப்படையில் நெசவாளர்களுக்கு [illegible]றிக் கூலிகள் வழங்க குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டம் அமல் படுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:—

ஆம். நெசவாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி சட்டத்தின்படி, குறைந்தபட்சக் கூலி மற்றும் அகவிலைப்படி நிர்ணயிப்பது தொடர்பாக ஓர் துணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

818—

## கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றுதல்.

வினா எண் 3504—திரு. எஸ். எம். துரை: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நபார்ட் நிதியுதவியுடன் அடுத்த பத்து ஆண்டுகளில் 75,000 கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றுதல், நடப்பு ஆண்டில் ரூபாய் முப்பது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருத்தல் ஆகியவற்றில் கைத்தறித்தொழிலையே முழுமையாக நம்பியிருக்கும் சின்னாளப்பட்டிக்கு முன்னுரிமை கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைசசர்:

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் இத்திட்டம் செயலாக்கப்படும்போது, சின்னாளப்பட்டி பகுதிவாழ் கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தில், பயன்பெறும் வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

819—

## மேம்பாலம் கட்டுதல்.

வினா எண். 5188—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

[1992 செப்டம்பர் 25

(அ) செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், பூந்தமல்லி தொகுதி அணைக்கட்டு சேரி பகுதியில் பூந்தமல்லி, பட்டாபிராம் சாலையில் கூவம் ஆற்றிற்கு குறுக்கே மேம்பாலம் கட்டும் பணி தடைபட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப் பொறியாளரிடமிருந்து வரப்பெற்று, அரசு ஆணை எண் 579, பொதுப்பணித் துறை, நாள் : 9—4—1992-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் செயலாக்கப் படும்.

820—

சாலை அமைத்தல்.

வினா எண் 5251—திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியின் கல்லாத்தூர்-மீன் சுருட்டி 16 கி.மீ. (வழி வெட்டியார் வெட்டு) சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன ? எப்போது வேலை துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கல்லாத்தூர்-மீன்சுருட்டி சாலை கி.மீ. 0/0 - 16/0—நெடுஞ்சாலைத் துறை மூலம் உலகவங்கி உதவியுடன் தமிழக வேளாண்மை விரிவாக்கத்திட்டத்தில் செய்யப் படும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல் பணியில் சேர்க்கப்பட்டு மதிப்பீடு தயாரிக் கப்படுகின்றது. இச்சாலை 1992–93 ஆம் ஆண்டு பணியில் எடுத்துக்கொள்ளப்படும்.



1992 செப்டம்பர் 25]

821—

மாற்று வழிப்பாதை அமைத்தல்.

வினா எண். 6678—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குளித்தலை நகரில் மாற்றுப்பாதை (By pass) அமைத்துத் தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுவழிப்பாதை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

822—

போர்வெல் அமைத்தல்.

வினா எண் 2691—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் தெய்வங்க பெருமாள் கோவிலுக்கு போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியத்தைச் சேர்ந்த செங்கமலம் கிராமத்தை சேர்ந்தது தெய்வங்க பெருமாள் கோவில். கோவிலுக்கு அருகில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பொது மேடை அமைக்கப்பட்டுள்ளது. கோவிலுக்கென்று ஒரு தனி கையிரைப்பான் அமைக்க வாரிய விதிமுறைகள் இடமளிக்காது. எனவே, செங்கமங்கலம் தெய்வங்க பெருமாள் கோவிலுக்கு கையிறைப்பான் அமைத்துக் கொடுக்கும் திட்டம் எதுவுமில்லை,

823— [1992 செப்டம்பர் 25

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 4838—திரு. எம். தனபால் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய மேலையூர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் பணி துவக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மேலையூர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க திறந்தவெளிக் கிணற்றை நீர் ஆதாரமாகக் கொண்ட பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

824—

தண்ணீர் பற்றாக் குறையைப் போக்க நடவடிக்கை.

வினா எண். 5645—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மங்களூர் தொகுதி புலிவளம், ஏந்தல்கிராமங்களில் தண்ணீர் பற்றாக் குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மங்களூர் ஒன்றியத்திலுள்ள புலிவளம் குடியிருப்பு, கழுதூர் மற்றும் 10 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலும், மேற்படி ஒன்றியத்திலுள்ள



டி. ஏந்தல் குடியிருப்பு, ஆலம்பாடி மற்றும் 10 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலும் சேர்க்கப்பட்டு தண்ணீர் பற்றாக் குறையைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

825—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 6179—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூர் தேர்வுநிலை பேரூராட்சியில் அல்லிநகர் பகுதி, சிவராஜ நகர் பகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் , அது எப்பொழுது பரிசீலிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) போளூர் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஆய்வு மதிப்பீடு ரூ. 3.98 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஆய்வுப் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்படும். திட்ட மதிப்பீடு தயாரிக்கும் போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைப்பதற்கு வழிவகை செய்யப்படும்.

826—

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை.

வினா எண். 7622—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஒன்றியம், அகர ஆலம்பாடி குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அகர ஆலம்பாடியில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது இக்குடியிருப்பில் குடிநீர் பிரச்சினை எதுவும் இல்லை.

827—

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை:

வினா எண். 7639—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், சிலம்பிமங்கலத்தில் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆம். 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தின் பணிகள் சிலம்பிமங்கலத்தில் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. 9/92–ல் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டு வர ஆவன செய்யப்பட்டுள்ளது.

828—

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை

வினா எண். 7662—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதி, வயனாமூர் கிராம மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இந்நிதியாண்டில் (1992–93) புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து ஏற்கனவே கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியையும் பயன்படுத்தி நீர் விநியோகம் செய்ய ஆவன செய்யப்பட்டுள்ளது.

829—

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை

வினா எண். 7682—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஒன்றியம், பெரிய நற்குணம் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு , உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி ஒன்றியம், பெரிய நற்குணம் குடியிருப்பிற்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 6/92–க்குள் திட்டத்தை முடித்து பயனுக்குக் கொண்டு வர ஆவன செய்யப்பட்டுள்ளது.

830—

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை.

வினா எண். 7689—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி ஒன்றியம், பு. ஆதனூர் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு அவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் பு. ஆதனூர் குடியிருப்பில் இயங்குவதால் குடிநீர் பிரச்சினை ஏதும் இல்லை.

831—

புதுக்கோட்டைக்கு காவேரியிலிருந்து குடிநீர் கொண்டு செல்லும் திட்டம்.

வினா எண். 9223—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டைக்கு காவேரியிலிருந்து குடிநீர் கொண்டு செல்லும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த வழியாக, எத்தனை கிராமங்கள் பயன் பெறுகின்றன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு , உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) காவேரி நீரை ஆதாரமாகக் கொண்டு சுத்த நீர் கொணர் குழாய் குழுமணி, நெய்தலூர் காலனி, நெய்தலூர், ஆலத்தூர், காவல்காரன்பட்டி, வடசேரி, இனாம் குளத்தூர், சாலை மற்றும் விராலிமலை -புதுக்கோட்டை நெடுஞ்சாலை வழியாகச் செல்லும், இத்திட்டத்தின் மூலம் 3 பேரூராட்சிகள் மற்றும் 15 வழியோரக் கிராமங்கள் பயன் பெறும்.

832—

போதுமான அளவு மண்ணெண்ணெய் கிடைக்க நடவடிக்கை.

வினா எண். 8080—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



(அ) வால்பாறை மலைப்பகுதியில் மண்ணெண்ணெய் ( Kerosene ) போதுமான அளவு கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், போதுமான அளவு கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) வால்பாறை வட்டத்தில் மொத்தம் 26,354 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்குடும்ப அட்டைகளுக்கு மாதம் ஒன்றுக்கு 5 லிட்டர் வீதம் 132 கிலோ லிட்டர் அளவு மண்ணெண்ணெய் வீதம் ஒவ்வொரு மாதமும் இந்த வட்டத்திற்கு போதுமான அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

833—

பீடித் தொழிலாளர்களுக்கு ஊதிய நிர்ணயம்

வினா எண். 6237—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தோட்ட, கட்டிட மற்றும் பீடித் தொழிலாளர்களுக்கு பொதுவான குறைந்தபட்ச ஊதியம் அரசு நிர்ணயம் செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) தோட்ட, கட்டிட மற்றும் பீடித் தொழிலாளர்களுக்கென அரசால் பொதுவான குறைந்தபட்ச ஊதியம் ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. தனித்தனியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) கேள்வி எழவில்லை.

டி2 53-287—65

834—

**பிராவிடண்ட் நிதி பங்கினை செலுத்தாமல் நிலுவை வைத்துள்ள அரசு நிறுவனங்கள் மீது நடவடிக்கை.**

வினா எண். 6522 —திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் பிராவிடண்ட் நிதி பங்கினை செலுத்தாமல் நிலுவை வைத்துள்ள அரசு நிறுவனங்கள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

835—

**தரிசு நில மேம்பாட்டு வாரியம்.**

வினா எண். 3229—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழகத்தில் தரிசு நில மேம்பாட்டு வாரியம் ஏதாவது உள்ளதா ? ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

தமிழகத்தில் தரிசு நில மேம்பாட்டு வாரியம் ஏதுமில்லை.

836—

**ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்கள்.**

வினா எண். 4180—திரு. எஸ். அண்ணாமலை : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:



ஆலந்தூர் தொகுதி, கீழ்க்கட்டளை, வளசரவாக்கம் ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கையகப் படுத்தப்பட்ட நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து சொந்தமாக வீடுகள் கட்டிக் கொண்டுள்ள வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு ஆக்கிரமிப்பிலிருந்து விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

தனிப்பட்ட நிகழ்வுகளின் தன்மையினை ஆராய்ந்து 1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தல் சட்ட விதிகளின்படி ஒவ்வொரு கோரிக்கையையும் கவனித்து ஏற்கனவே அரசு ஆவன செய்து வருகின்றது.

837—

**ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள்.**

வினா எண். 6497—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் பொது அறக்கட்டளைகள், சமய அறக் கட்டளைகள், ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களில் குடிசைகள் அமைத்து வாழும் மக்கள் விவரம் அரசு சர்வே செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

(இ) அத்தகு நிலங்களை அரசு கையகப்படுத்தி அங்கு குடிசை அமைத்து வாழும் குடிசைவாசிகளுக்கே அந்த நிலங்களை உரிமையாக்கிட அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி , வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சென்னைப் பெருநகரத்தில் 192 குடிசைப் பகுதிகளில் 20,673 குடும்பங்களும், மதுரையில் 16 குடிசைப் பகுதிகளில் 812 வீடுகளும், கோவையில் 5 குடிசைப் பகுதிகளில் 1,750 296 வீடுகளும், திருச்சியில் 35 குடிசைப் பகுதிகளில் 1,750

வீடுகளும் மற்றும் சேலத்தில் 12 குடிசைப் பகுதிகளில் 1,387 வீடுகளும், கோயில், மசூதி (வக்ப்) மற்றும் சர்ச் ஆகிய ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களில் இருப்பதாக கணக் கிடப்பட்டுள்ளது.

(இ) ஆம்.

838—

## பிச்சை எடுப்போர் தடுப்புச் சட்டம்

வினா எண் 3198—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(a) Whether there is an inflow of child beggars in Madras City

(b) If so, the details thereof; and

(c) Whether any steps are taken by Government to check the same?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :

(அ) பிச்சை எடுக்கும் சிறுவர்களின் வரத்து இருப்பதாகத் தெரியவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) ஆம். தமிழ்நாடு பிச்சை எடுப்போர் தடுப்புச் சட்டம் 1945-ன் கீழ், தமிழ்நாடு காவல்துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

839—

## சத்துணவுக் கூடம் கட்டுதல்.

வினா எண். 7525—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதி, குமாரப்பேட்டை மடவாப்பள்ளம் கிராமத்திற்கு சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :



(அ) மற்றும் (ஆ) 1991-92-ஆம் ஆண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ. 9.98 கோடி மதிப்பீட்டில் 1,409 புதிய கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதுபோன்று ரூ. 1992-93-ஆம் ஆண்டிற்கும் மேற்படி திட்டத்திற்கு ரூ. 10.42 கோடி மதிப்பீட்டில் 1,470 புதிய மையக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. ஆகவே மாவட்ட ஆட்சியரால் தேவைகளின் அடிப்படையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும் பொழுது மேற்கூறிய மையத்திற்கான கட்டிடத்தின் தேவை குறித்தும் பரிசீலிக்கப்படும்.

840—

## ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு மின்வசதி.

வினா எண் 367—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை உளூர் ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு மின் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை உளூர் 20 ஆதிதிராவிடர் வீடுகளுக்கு 11-10-1991 தேதியன்று ஒற்றை மின் விளக்கு வழங்கப்பட்டுள்ளது.

841—

## பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டிடம்.

வினா எண் 6348—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நத்தம் தொகுதியில் இராஜக்காபட்டி கிராமதான சர்வோதய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

846—

## பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதிகள்.

வினா எண் 4959—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அந்தியூர் தொகுதியில் அந்தியூர் நகரில் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை மூலம் மாணவர் மற்றும் மாணவியர் இல்லங்கள் திறக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அந்தியூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் துவக்க தற்சமயம் சாத்தியக் கூறுகள் இல்லை.

847—

வினா எண் 6171— திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(ஆ) களம்பூரில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற் படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதிகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும்.

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அத்தகைய திட்டமேதும் தற்சமயம் இல்லை.

(வினாக்கள் விடைகள் முடிவுற்றன.)



## 2. அறிவிப்புகள்

### (அ) கைது செய்யப்பட்ட உறுப்பினர் விடுதலையானது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

காவல் துறையினரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி எனக்கு வரப்பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன். "Panrutti Thiru. S. Ramachandran, MLA (PMK) who was arrested in Cr.No.1899/92u/s 124(A), 120(B), 153 (A) (B), 505 (1) (B) IPC and 13(1) and 13(2) Unlawful Activities (Prevention) Act was released by the High Court on his Bail on 24–9–92 at 18.30 p.m.'

## 3. விதி 110-ன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்.

### (அ) பெட்ரோலியப் பொருள்கள் மற்றும் இரசாயன உர விலை உயர்வை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச் சர் அவர்கள் இன்றியமையாத பொருட்களான பெட்ரோலியப் பொருட்கள் விலையேற்றத்தைப் பற்றியும், உர விலையேற் றத்தைப் பற்றியும் பேரவைக்கு ஓர் அறிக்கை வெளியிட அனுமதி கோரி உள்ளார்கள். அவர்கள் இப்போது அந்த அறிக்கையைப் பேரவைக்கு வெளியிடுவார்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கடந்த செப்டம்பர் 16 ஆம் தேதி முதல் பெட்ரோலியப் பொருட்களின் விலையைக் கடுமையான அளவிற்கு உயர்த்தியுள்ளது. மேலும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து பெட் ரோலியப் பொருட்களின் விலையும் வெகுவாக உயர்த்தப்பட் டது. குறிப்பிட்டுச் சொன்னால், சென்ற ஆண்டு விலைக ளோடு ஒப்பிடும்போது, இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் அறி வித்த விலை உயர்வு, அதாவது டீசலுக்கு 3.43 சதவீதம் என்றும் ; பெட்ரோலுக்கு 3.87 சதவீதம் என்றும், சமையல் எரிவாயுவுக்கு 3.93 சதவீதம் என்ற அளவிலும் இருந்ததற்கே தமிழக அரசின் சார்பில் நான் நமது எதிர்ப்பைத் தெரிவித் திருந்தேன். அந்த விலை உயர்வை ஏழை எளிய மக்களால் தாங்க முடியாத சுமை என்றும் சுட்டிக் காட்டியிருந்தேன்.

விடை

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

842—

காலநடை மருத்துவமனை நிறுவுதல்.

வினா எண் 7801—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி காரைக்காட்டுசாவடிக்கு கால்நடை மருத்துவமனை ஒன்று நிறுவ அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் , எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து தீர்மானங்கள் வரப்பெற்றால் பரிசீலிக்கப்படும்.

843—

தாட்கோ ஆடு வளர்ப்புக் கடன்.

வினா எண் 8874—திரு. என். ஜி. வேணுகோபால், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராணிப்பேட்டை தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு அரசு வழங்கும் மான்யத்துடன் கூடிய தாட்கோ ஆடு வளர்ப்புக் கடன் தொகை வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இந்த ஆண்டிலாவது வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :



(அ) ஆம்.

(ஆ) 1992–93 ஆம் ஆண்டில் வழங்க ஆவன செய்யப்படும்.

844—

கால்நடை மருத்துவமனை துவங்குதல்.

வினா எண் 8884—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரியலூர் ஒன்றியம் புங்கங்குழி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஒன்று புதிதாகத் துவக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைசசர் :

(அ) மற்றும் (ஆ) சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து உரிய தீர்மானங்கள் வரப்பெற்றால் பரிசீலிக்கப்படும்.

845—

பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் இல்லம்.

வினா எண். 1109—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அவிநாசி தொகுதியில் அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் இல்லம் தொடங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 செப்டம்பர் 25

அப்படிப்பட்ட விலை உயர்வே தாங்க முடியாத ஒன்று என்று கருதப்பட்ட நிலையில், தற்போது திடீரென மேலும் அறிவிக்கப்பட்டுள்ள இந்த விலை உயர்வு ஐந்து, ஆறு மடங்கு அதிகமான அளவிற்கு, அதாவது, டீசலுக்கு 20.80 சதவீதமும்; பெட்ரோலுக்கு 7.04 சதவீதமும்; சமையல் எரிவாயுவுக்கு 21.84 சதவீதமும் என்கின்ற அளவில் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

இந்த விலை உயர்வின் காரணமாகத் தமிழகத்தில் ஒரு லிட்டர் டீசல் ரூ. 6.91 என்றும், ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ. 18.38 என்றும், சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்று ரூ. 86.58 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், இது மிகக் கடுமையான பொருளாதாரச் சுமையை சாதாரண மக்களின் மீது சுமத்தியுள்ளது என்கிற கருத்து எங்கும் நிலவி வருகிறது.

குறிப்பாக, சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை மட்டும் ரூ. 15.52 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது நடுத்தர மக்களுக்கும், தாய்மார்களுக்கும் தாங்கமுடியாத பெரிய சுமையாக இருப்பதாக உணரப்படுகிறது.

இந்த விலை உயர்வினால், சாதாரண மக்கள் பயன்படுத்தும் இன்றியமையாப் பொருட்களின் விலைகளும் உயர்ந்து, ஏழை எளிய மற்றும் நடுத்தர வர்க்க மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிற நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக, பேருந்துகளில் பயணம் செய்யும் பாமர மக்களும், இந்த விலையேற்றத்தினால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள். மேலும், தமிழ் நாட்டில் விவசாயிகள் கணிசமான அளவில், ஆயில் என்ஜின் பம்ப்செட்டுக்களைப் பயன்படுத்துவதால், இந்த விலை உயர்வு அவர்களின் பொருளாதார நிலையைப் பெரிதும் பாதிக்கும்.

இந்த விலை உயர்வின் விளைவாக, சமையல் எரிவாயு விலை மிக அதிக அளவுக்கு உயர்த்தப்பட்டிருப்பதால், கிராமப் பகுதிகள் முதல் நகரப் பகுதிகள் மற்றும் மாநகரப் பகுதிகள் வரை எல்லா இடங்களிலும், எல்லா மக்களுக்கும், இது செலவினத்தை அதிகரிக்கும். இந்த மிக அதிக அளவிலான திடீர் விலை உயர்வினால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இந்த விலை உயர்வினால், பொதுவாக விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்துவதற்கு தமிழக அரசு எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளும், பயன் அளிக்காமல் போய் விடுகிற சாத்தியக்கூறுகளும் உள்ளன.

[முற்பகல் 9.35]

இவ்வாறு சாதாரண மக்களைப் பாதிக்கும் வகையில் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்த்தப்பட்டுள்ள சூழ்நிலையில் விவசாயப் பெருமக்களின் அடிப்படைத் தேவையான



1992 செப்டம்பர் 25] [டாக்டர் ஜெ.ஜெயலலிதா]

இரசாயன உரங்களின் விலைகளும் மூன்று, நான்கு மடங்கு உயர்ந்திடும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

24–8–1992 அன்று மத்திய அரசு உரக் கட்டுப்பாட்டுக் கொள்கையினை மாற்றி அமைத்து 7 வகையான தழைச்சத்து உரங்களைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த தழைச்சத்து உரங்களின் விலை 10 சதவீத அளவு குறைந்துள்ளது. இதற்காக மத்திய அரசிற்கு நம்முடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளோம். இதர உரங்களான மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து உரங்களைக் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கியது. தற்போது கட்டுப்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட உரங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு தனிப்பட்ட முறையில் விவசாயிகளுக்குத் தாங்க முடியாத துயரினையும் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களிடம் அதிருப்தியையும் உருவாக்கி உள்ளது. குறிப்பாக கட்டுப்பாடு நீக்கப்பட்ட இரசாயன உரங்களின் விலை 90 சதவீதம் முதல் 260 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

குறிப்பிட்டுச் சொன்னால், 50 கிலோ எடையுள்ள டி.ஏ.பி. உரம் 241.71 ரூபாயிலிருந்து 454.60 ரூபாயாக உயர்ந்துள்ளது. 50 கிலோ எடையுள்ள சூபர் ஃபாஸ்ஃபேட் 64.13 ரூபாயிலிருந்து 155 ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. 50 கிலோ எடையுள்ள மூரியேட் ஆஃப் பொட்டாஷ் 87.85 ரூபாயிலிருந்து 315.15 ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. இந்த விலை ஏற்றமெல்லாம் தன்னிச்சையாக உர உற்பத்தியாளர்கள் நிர்ணயித்த விலை என்பதால், வெளிச் சந்தையில் இதற்கும் மேலும் இவற்றின் விலை பன்மடங்கு உயர்ந்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஏனெனில் அகில இந்திய அளவில் நமது மாநிலம் தான் அதிக அளவில் பொட்டாஷ் உரங்களை உபயோகித்து வரும் மாநிலமாகும். இந்த விலையேற்றத்தால் தமிழ்நாடு மற்றவர்களை விட அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இரசாயன உரங்களுக்காக 496 கோடி ரூபாய் அளவிற்கு செலவு செய்ய வேண்டிய தமிழக விவசாயிகள் தற்போது இந்த விலை உயர்வின் காரணமாக 846 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதாவது ஏறத்தாழ 350 கோடி ரூபாய் இரசாயன உரத்திற்காக கூடுதல் பளுவை சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது வேதனைக்குரியதாக உள்ளது. இவ்வளவு பெரும் சுமையை ஏற்கெனவே துயருற்றுள்ள தமிழக வேளாண் பெருமக்களால் எப்படித் தாங்க முடியும் என தமிழக அரசு பெரும் கவலை கொண்டுள்ளது. அவர்களது கவலைகளைப் போக்க தொடர்ந்து அவர்களுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே தான் தமிழக மக்களின் எண்ணத்தை, ஏக்கத்தை, துன்பத்தை மத்திய அரசுக்கு ஒருமித்த குரலில் எடுத்துரைக்கிற வகையில் மத்திய அரசு தற்போது அறிவித்துள்ள பெட்ரோலியப் பொருட்களின் மிக அதிகமான விலை உயர்வை மறு பரிசீலனை செய்து, இவ்விலை உயர்வினை முற்றிலுமாக அகற்ற வேண்டும் என்றும் இரசாயன உரங்களின் விலையை மீண்டும் ஒரு கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவர உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் இம்மாமன்றத்தின் மூலம் மத்திய அரசை தமிழக அரசின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. கவன ஈர்ப்பு

### (அ) அம்பாசமுத்திரம் பகுதியிலுள்ள இனாம்கோடாரங்குளம் கிராமம் சாகுபடியாளர்கள் நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். முருகையா பாண்டியன் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. ஆர். முருகையா பாண்டியன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், இனாம் கோடாரங்குளம் கிராமம் 1–10–1966 முதல் அரசினரால் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டும், பயிரிடும் சுமார் 450 விவசாயிகளுக்கு பட்டா வழங்கியும் உள்ளது. கடந்த 25 ஆண்டுக் காலமாக இனாம் ஒழிப்புச் சட்டத்தின் பயனை அடைய முடியாமல் பட்டா கிடைக்கப் பெற்ற விவசாயிகள் படும் அவல நிலை குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாழ்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கோடாரங்குளம் கிராமம் இனாம் ஒழிப்புச் சட்டம் 26/63-இன் கீழ் எடுக்க அறிவிக்கை செய்யப்பட்டது. கோடாரங்குளம் கிராமம் இனாம்





கிராமம் அல்ல என்றும் ஆகவே, இவ்வறிக்கையை நீக்க கோரி திருவாடுதுறை ஆதீனம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. மேற்படி அறிவிக்கையை வெளியிட அரசுக்கு அதிகாரம் இல்லை என இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து பயிரிடும் சாகுபடியாளர்கள் மேல்முறையீடு செய்தனர். இம் மேல்முறையீட்டை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம் மேற்படி கிராமத்தில் ஒரு பகுதியை இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுக்க அறிவிக்கை செய்ய அனுமதித்து ஆணை வழங்கியது. இதனை எதிர்த்து திருவாடுதுறை ஆதீனம் டில்லி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தது. இதனை ஏற்று உச்ச நீதிமன்றம் தடை ஆணை (Stay order) விதித்தது. இவ்வாணை (Stay order) வழங்கப்படுவதற்கு முன்னரே மேற்படி நிலத்தை அரசு இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டு விட்டதால், பயிரிடும் சாகுபடியாளர்களுக்கு பிரிவு 11-இன்கீழ் பட்டா வழங்குமாறு செட்டில்மென்ட் வட்டாட்சியர் அறிவுறுத்தப்பட்டார். இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்படாத நிலத்தில் பயிரிடும் சாகுபடியாளர் யாருக்கும் பட்டா வழங்கப்படவில்லை. இதனை எதிர்த்து திருவாடுதுறை ஆதீனம் திருநெல்வேலி இனாம் ஒழிப்பு தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடர்ந்தது. இவ்வழக்கை விசாரித்த தீர்ப்பாயம், புறம்போக்கு மற்றும் பொது உபயோகத்திற்கு அல்லாத மற்ற நிலங்களுக்கும் பட்டா வழங்கும்படி ஆணையிட்டு தீர்ப்பு வழங்கியது. இதனை எதிர்த்து பயிரிடும் சாகுபடியாளர்கள் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்தனர். இம் மேல்முறையீட்டு மனுவை தீர்ப்பாயம் தள்ளுபடி செய்தது. இதனை எதிர்த்து சாகுபடியாளர்கள் தனி மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தனர். இம்மேல் முறையீட்டு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனை எதிர்த்து சாகுபடியாளர்கள் டில்லி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இதுவும் உச்ச நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், ஏழை விவசாயிகளின் நலம் கருதி அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கில் அட்டர்னி ஜெனரல் ஆஜர் ஆவதற்கும் அரசு ஏற்பாடு செய்துள்ளது. மேலும் உயர் நீதிமன்ற ஆணையின் மீது தடை ஆணை (Stay order) உச்ச நீதிமன்றத்தில் பெற அரசு முடிவெடுத்துள்ளது.

முற்பகல் 9-40

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலை நான் பார்த்தேன். அதிலே விவசாயிகளுக்காக சுப்ரீம் கோர்ட்டில் தலைமை வழக்கறிஞரை வைத்து ஆர்ஜிதம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவித்து இருக்கிறார்கள். அதற்கு விவசாயிகள் சார்பாக

என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோடாரங்குளம் கிராமத்தைப் பொறுத்தவரையில் 1966-ல் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்படி அரசால் எடுக்கப்பட்டு அங்கேயிருக்கிற விவசாயிகளுக்காக, 450 விவசாயிகளுக்கு பட்டா வழங்கப்பட்டு விட்டது. ஆனால் பட்டா வாங்கிய பலனை அடையவிடாமல் திருவாடுதுறை ஆதீனம் பல கோர்ட்டுகளுக்கு பலவகையில் வழக்குகளைத் தொடர்ந்து அந்த விவசாயிகள் பலன் அடையாமல்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்கிற கருத்து எல்லாம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே இருக்கிறது. எனவே, கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : பலன் அடைய விடாமல் பல வழக்குகளைப் போட்டு விவசாயிகளை கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கடைசியாக அந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையாக உள்ளது. இருந்தாலும் சுப்ரீம் கோர்ட்டில் ஸ்டே வாங்குவதற்கு லிஸ்டில் வந்த பிறகு 2, 3 கோர்ட்டுகளுக்கு இந்த வழக்குகள் மாற்றப்பட்டு 17—7—1991 அன்று இறுதியாக ஒரு கோர்ட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இரண்டு வருடங்களாகியும் ஸ்டே வாங்குவதற்கு லிஸ்டில் வராமல் என்ன தடையாக உள்ளது என்பதைக் கவனித்து விரைவில் ஸ்டே வாங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி பல சங்கடங்கள் இருந்தாலும் இன்றைக்கு அங்கேகுத்தகைதாரர்களாக இருப்பவர்கள் 370 பேர்கள் மேல் தருமபுரம் திருவாடுதுறை ஆதீனங்கள்—அவர்கள்மேல் வழக்கு—போட்டிருந்தாலும் அதற்கு பிறகு சமாதானமாகக் கூப்பிட்டு பேசி அந்த வழக்குத் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. அந்த 370 பேர்கள் குத்தகைதாரர்கள் இன்றைக்கு பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள் தற்போது உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கை துரிதமாக முடிக்கவும், ஆதீனதாரர்களுக்கு சாதகமாக உயர் நீதிமன்றம் ஆணையிட்டதற்கு தடையுத்தரவு பெறுவதற்கும் விரைவில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயிகள் ஏழையெளியவர்களுக்காக ஆட்சி நடத்தும் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தங்களைக் காப்பாற்றுவார்கள் என்று இந்தப் பகுதி விவசாயிகள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனிக்கவனம் செலுத்தி விரைவில் தடையுத்தரவு வாங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தனிக் கவனமும், துரிதமான கவனமும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

(ஆ) நாகை - காயிதே மில்லத் மாவட்டத்தில் காலரா நோய் பரவியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஜி. பழனிசாமி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அஜெண்டாவில் இருப்பதைப் பார்த்தால் பதைப்படியுங்கள். நீங்கள் தேடிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் எதையோ படிப்பதற்குத் தேடுவதைப் போல இருக்கிறது.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் காலரா நோய் பரவியுள்ளது குறித்து''—நானே உங்கள் சார்பில் படித்து விட்டேன்.

திரு. ஜி. பழனிசாமி : சரி.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள 17 நகராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், 4 நகராட்சிப் பகுதிகளிலும் 23—7—1992 முதல் 28—8—92 வரை குடல் அழற்சி நோய் பரவலாகக் காணப்பட்டது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் 127. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 542. இறந்தவர்கள் 15. நாகப்பட்டினம், திருமருகல், திருவாரூர்

கொரடாச்சேரி மற்றும் கீவளூர் பகுதிகளில்தான் இந்நோய் பரவலாகக் காணப்பட்டது. திருமருகல் ஆரம்ப சுகாதார நிலைய எல்லைக்கு உட்பட்ட மேல்வாஞ்சூர் என்ற கிராமம் இந்நோயினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டது.

இந்நோயைப் பற்றிய தகவல் கிடைத்தவுடனே திருவாரூர் சுகாதாரப் பணி துணை இயக்குநர் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தன் நேரடிப் பார்வைக்குள் கொண்டுவந்து எல்லாவித தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகள் எடுத்தார். மருத்துவ அலுவலர், வட்டார சுகாதார ஆய்வாளர், சமுதாய சுகாதாரம் மற்றும் பகுதி சுகாதார செவிலியர்கள் கொண்ட மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுக்களை போதிய மருந்துகள், உப்பு கரைசல் பொட்டலங்கள், ஐ.வி. புளூயட்ஸ் பாட்டில்கள் மற்றும் வயிற்றுப்போக்கு நோய் தடுப்பதற்கான மருத்துவ உதவிகளுடன் உடனே பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டன. அண்டை மாவட்டமான புதுக்கோட்டையிலிருந்தும் போதிய மருந்துகளும் கிருமி நாசினிகளும் தருவிக்கப்பட்டன. இதனால் திருவாரூர், நாகப்பட்டினம் மருத்துவமனைகளில் இந்நோயினால் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு உடனுக்குடன் ஐ.வி. ப்ளூயட்ஸ் புட்டிகளிலுள்ள மருந்துகள் ஏற்றப்பட்டன. பாதிக்கப்பட்ட கிராமமான மேல்வாஞ்சூர், கீழ்வாஞ்சூர் காரைக்கால்-பாண்டிச்சேரிக்கு அருகாமையில் இருப்பதனால் பாண்டிச்சேரி சுகாதார துணை இயக்குநருக்கும் இக்குடற் அழற்சி நோய் பரவியுள்ளது. பற்றிய தகவல் கொடுக்கப்பட்டு, அவரும் போதிய மருந்துகள் மற்றும் சுகாதார அலுவலருடன் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று இந்நோய் பரவாவண்ணம் எல்லாவித தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

இப்பகுதிகளில், குட்டைநீர் பருகியதாலும், மேலும் உண்பதற்குத் தகுதியற்ற அழுகிய ஆடு/மாடு இறைச்சிகளை உட்கொண்டதாலும், காவிரி ஆற்றிலிருந்து புதிதாக விடப்பட்ட நீரைப் பருகியதாலும் மக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டதாகத் தெரிய வந்திருக்கிறது. இந்நிலையறிந்து, உட்கொள்ளுவதற்குத் தகுதியற்ற இறைச்சிகளை விற்பது தடை செய்யப்பட்டதுடன் சுத்தமான காய்ச்சிய நீரைப் பருகுதல், சுகாதாரத்தைப் பேணிக்காத்தல் போன்ற சுகாதாரக் கல்வி இப்பகுதியில் உள்ள மக்களுக்கு போதிக்கப்பட்டது. மேலும், ஆற்றுப் படுகைகள் அருகில் வாழும் மக்களுக்கு இந்நோய் பரவாவண்ணம் போதிய முன் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கும்படி அப்பகுதியில் உள்ள அலுவலர்களை உஷார் நிலையில் இருக்கச் செய்யப்பட்டுள்ளனர்.

தென்னாற்காடு மாவட்டத்தில் முகாமிட்டிருந்த தடுப்பூசி இணை இயக்குநர் இச்செய்தியினை அறிந்து, பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விரைந்து சென்று, இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைக் கண்காணிப்பு செய்ததுடன், அம்மாவட்ட ஆட்சித் தலைவருடன்





எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றி விவாதித்தார் மாவட்ட ஆட்சித் தலைவரிடம், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள் அவர்தம் சுகாதார அலுவலர்களுக்குப் போதிய மருந்துகள் கொடுத்து ஒத்துழைப்பு நல்குமாறு அறிவுரை வழங்கினார். இணை இயக்குநர் (கொள்ளை நோய்) இம்மாவட்டத்தில் இந்நோய் கட்டுக்குள் கொண்டுவரும் வரை முகாமிட்டு போதிய முன்தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதை மேற்பார்வை செய்தார். இப்பகுதிகளில் உள்ள எல்லா மருத்துவமனைகளிலும் போதிய மருந்துகள் கைவசம் இருந்தன. இந்நோய் பற்றிய தகவல் வந்தவுடன், 2,37,582 மக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. 2,037 வீடுகளுக்கு கிருமிநாசினிகள் போடப்பட்டன. குடிநீர் வழங்கும் ஆதாரங்களான 3,753 மேல்நிலை நீர்த்தொட்டிகள் 3,212 கிணறுகள் மற்றும் 2,037க்கும் மேற்பட்ட குடிநீர் நீர்நிலை ஆதாரங்களுக்குப் பாசிகை ஊட்டப்பட்டது. 3,035 நபர்களுக்கு உப்பு கரைசல் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. இம்மாவட்டத்தில் உள்ள சுகாதார அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் பணியாற்றும் அலுவலர்கள் போர்க்கால அடிப்படையில் பணிபுரிந்ததினால் இந்நோய் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பெரும் அளவில் கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவாக அண்மையில் இப்பகுதியில் நடந்து முடிந்த அன்னை வேளாங்கண்ணி திருவிழாவின் போது இந்நோயினால் எந்தவித அசம்பாவிதமும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

<u>திரு. ஜி. பழனிசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் இந்த மாதம், செப்டம்பர் மாதம் முதல் திருவாரூர், நன்னிலம், நாகப்பட்டினம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி பகுதிகளில் காலரா நோய் வந்து 50-க்கு மேற்பட்ட சாதாரண விவசாயத் தொழிலாளர்கள் இறந்து போனார்கள். அதே நேரத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் அந்த நோயால் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனைகளில் போதிய இட வசதி இல்லாததாலும், அதுபோன்று மருந்து வசதி போதிய அளவுக்கு இல்லாத காரணத்தாலும் இன்றைக்கு 50 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் இறந்து இருக்கிறார்கள். இன்றைய அறிக்கையில் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 15 பேர்களுக்கு மேல் இறந்து இருக்கிறார்கள் என்று இதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். இன்னும் பல்வேறு கிராமங்களில்....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : கவன ஈர்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். ஒரு அறிக்கையை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அமைச்சர் வைத்திருக்கிற அறிக்கையில் இறந்து போனவர்கள் 15 என்று கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கிடு) நீங்கள் 50-க்கு மேற்பட்டவர்கள் இறந்து போனார்கள். இறந்து போனார்கள் என்று பேசிக் கொண்டிருப்பதால் அறிக்கை வைப்பதிலேயே அர்த்தம் இல்லை என்பது போல் ஆகிவிடும்.

டி2 53-287—67

அது தவறு என்று வேண்டுமானால் நீங்கள் சொல்லுங்கள். 15 என்பது தவறு, கூடுதலாக இறந்திருக்கிறார்கள் என்று சொல்லுங்கள். அதற்கு உங்களிடம் ஏதாவது புள்ளிவிவரங்கள் இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு)

முற்பகல் 9.45

திரு. ஜி. பழனிசாமி : இது அரசாங்க மருத்துவமனையிலே இறந்தவர்கள். தனியார் மருத்துவமனையிலே இறந்தவர்களை நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு ஏதாவது ஆதாரம் இருந்தால், கொடுங்கள். 15 பேர்கள்தான் இறந் தார்கள் என்று அறிக்கை வைத்ததற்குப் பிறகு, வேறு ஆதாரம் இருந்தால் சொல்லலாம் (குறுக்கீடு) இறந்து போனவர்களுடைய விவரமே கூட இல்லாமல் இருக்குமா ? (குறுக்கீடு). நீங்கள் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் இறந்திருக்கிறார்கள் என்று சொன்னால், பிறகு இந்த அறிக்கையை வைக்க வேண்டியதே இல்லை. நீங்களே பேசி முடித்து விட்டு, உட்கார்ந்து விடலாம். (குறுக்கீடு). ஏதாவது உங்களிடம் சில ஆதாரங்கள் கூடுதலாக இருப்பதற்கு உரிய தகவல்கள் இருந்தால் அதைப்பற்றி சொன் னால், நடவடிக்கை எடுக்கலாம். ஏதோ போகிற போக்கிலே 50 பேருக்கு மேலே இறந்திருக்கிறார்கள் என்று பேசிவிட்டு போவது எவ்விதமான நடவடிக்கையும் வேண்டாம் என்பது மாதிரி அமையும். ஸ்பெசிபிக்காக உங்களிடம் விவரம் இருந்து சொன்னால், அரசாங்கம் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையாவது இந்த அவையிலே நான் தவறான தகவலைக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்திலே சொல்ல வில்லை. பொதுவாக அங்கே அரசு மருத்துவமனையிலே இறந்த வர்களைப்பற்றி நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். போதிய மருந்து களும், வசதிகளும் இல்லாததால் ,தனியார் மருத்துவமனை களிலே பல பேர் இருந்து இருக்கிறார்கள் என்கிற கொடுமை யான நிகழ்ச்சியை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி ஏதாவது இறந்த தகவல் இருந்தால், அமைச்சர் நடவடிக்கை எடுக்கலாம். இந்த 15 என்பதோடு, அரசாங்கத் தகவலையும், எண்ணிக் கையையும் கூட்டி அவர் பதில் உரையைச் சொல்லும்போது, சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். (குறுக்கீடு). அந்த மாதிரிக் கொடுத்தால், அவர்கள் பதில் சொல்வார்கள். உங்களுடைய பேச்சுக்கு ஒரு நடவடிக்கை வேண்டும் என்று தான் நான் நினைக்கிறேன்.



திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே இதுபோன்ற நோய்களைத் தடுப்பதற்கு சாதாரண கிராமப் புற மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக போதிய மருந்து வசதிகளை ஏற்பாடு செய்யவேண்டும். போதிய மருத்துவர்கள் உடனடியாக நடவடிக்கைகளிலே ஈடுபடாத தால், இதுபோன்ற உயிரிழப்புகள் ஏற்படுவதற்கு அது காரண மாக அமைந்திருக்கிறது.

அதேபோல், 10 ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றைக்கு காவிரி ஆற்றில் தண்ணீர் வந்த காரணத்தால், பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைக்காத காரணத்தால், இன்றைய தினம் அந்த மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே சுகா தார அலுவலகங்கள் மூலமாக, உள்ளாட்சித் துறை மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை வழங்குவதற்கும், கிணற்றி லேயிருந்து தண்ணீர் எடுத்துக் குடிப்பதைத் தடுப்பதற்கும், அவர்களுடைய உயிர்களைப் பாதுகாக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் 50 பேர்கள் இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட தகவல் நிச்சயமாக இல்லை. எனக்குக் கொடுக் கப்பட்ட தகவலின்படி, 15 பேர்கள்தான் இறந்திருக்கிறார்கள். அரசாங்கத்திலே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இறந்தவர் களுடைய எண்ணிக்கையை எடுக்கிறபோது, எந்த மருத்துவ மனையிலே இறந்தவர்கள் என்ற கணக்கை எடுப்பதில்லை மொத்தமாக இதிலே யார் யார் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் எத்தனை பேர் இறந்தார்கள் என்ற அந்தக் கணக்கைத்தான் எடுக்கிறார்கள். எனவே, மொத்தத்திலே அரசு மருத்துவ மனையிலே, தனியார் மருத்துவமனையிலே அத்தனையையும் சேர்த்து, 15 பேர்கள்தான் இறந்திருக்கிறார்கள். பாதிக்கப் பட்டவர்கள் 542 பேர்கள் என்று சொன்னார்கள். மருந்துகள் போதவில்லை என்று சொன்னார்கள். தேவையான அளவிற்கு மருந்துகள் அங்கே இருந்து இருக்கின்றன. அதற்கு மேல் தேவை என்று கருதியவுடன், பக்கத்தில் உள்ள புதுக்கோட்டை மாவட்டத்திலேயிருந்து தேவையான மருந்தைத் தருவித்திருக் கிறார்கள். மருத்துவர்கள் 24 மணி நேரமும் இருந்து அங்கே சிகிச்சை செய்திருக்கிறார்கள். எனவேதான் இது கட்டுப் படுத்தப்பட்டு இருக்கிறது. 127 கிராமங்களிலே இது பரவி இருக்கிறது. 127 கிராமங்களிலே பரவியிருந்த அந்த நோயை மருத்துவ அதிகாரிகள் உடனே போய்க் கவனித்த காரணத்தால் தான் பதினைந்தோடு இது நின்று இருக்கிறது.

அடுத்து, இங்கே பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். மருந்து தேவையான அள விற்கு இருக்கிறது. மருத்துவர்கள் தேவையான அளவிற்குப்,

போய் இருக்கிறார்கள். உரிய நேரத்திற்குப் போய் இருக்கிறார்
கள். எனவேதான், பிரச்சினையைத் தடுத்து நிறுத்த முடிந்
திருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரைப் பொறுத்த
வரையில், எனக்குக் கொடுக்கப்பட்ட குறிப்பின்படி, குட்டை
யில் தேங்கியிருந்த தண்ணீரை எடுத்துக் குடித்திருக்கிறார்கள்.
புதிதாக ஆற்றிலே தண்ணீர் வந்த காரணத்தாலே அந்தத்
தண்ணீரையும் எடுத்துக் குடித்து இருக்கிறார்கள். எனவே,
இந்த பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்றும். கெட்டுப் போன
இறைச்சியைப் சாப்பிட்ட காரணத்தால் இந்தப் பாதிப்பு ஏற்
பட்டு இருக்கிறது என்றும் சொல்லி, அங்கே போய் அதை ஒழுங்
காகப் பார்த்து, ஆய்வு செய்துதான் எனக்கு அனுப்பியிருக்
கிறார்கள். பொதுமக்களுக்கு எவ்வளவுதான் நாம் இப்படிப்
பட்ட நிலையைச் சொன்னாலும் கூட, அதைப் பார்த்த பின்
னாலும் கூட, அவர்கள் அந்தத் தண்ணீரை எடுத்துக் குடிப்பது
தான் வேதனையாக இருக்கிறது. அவர்கள் அதை எடுத்துக்
காய்ச்சிக் குடித்து விட்டால், இந்தப் பிரச்சினையே இருக்காது.
எனவே, காய்ச்சாமல் குடிக்கின்றபோதுதான், இந்தப் பிரச்
சினை ஏற்பட்டு விடுகிறது. இதற்கு பொதுமக்களையும் நாம்
தயார் செய்ய வேண்டுமே ஒழிய, அரசாங்கத்தின்மேல்
எந்தக் குறையும் இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள
வேண்டும்.

உதாரணமாக சென்னையை எடுத்துக் கொண்டால்
அண்ணா சாலையிலே சுரங்கப் பாதையை மக்கள் நடப்பதற்
காகப் போடப்பட்டு வைத்திருக்கிறோம். ஆனால் பிடிவாத
மாக சுரங்கப் பாதையிலே போகமாட்டோம், என்று சொல்லி,
ரோடிலேதான் போகிறார்கள். வண்டியிலே அடிபட்டு செத்து
போய்விடுகிறார்கள். இதற்கு அரசாங்கம் பொறுப்பல்ல.
பொதுமக்களை அதற்கு நாம் தயார் செய்ய வேண்டும்.
எனவே, தண்ணீர் வருகிறது என்று சொன்னால், அதைக்
காய்ச்சிக் குடியுங்கள் என்று சொன்னால், அதற்கு பொது
மக்கள் கொஞ்சம் ஒத்துழைப்பு கொடுத்தால், இந்தப் பிரச்
சினை தீர்க்கப்படும். எனவே, அரசு எந்தவிதத்திலும் கவனக்
குறைவாக இதிலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

முற்பகல் 9.50

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இப்போது பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு இந்த
அரசு நிவாரணம் வழங்க வேண்டுமென நான் கேட்டுக்
கொள்கிறேன். சாதாரண ஏழை எளிய மக்கள், பலபேர் இந்த
மாதிரி இறந்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கேட்டுக்
கொண்டது போல் இறந்தவர்களின் பட்டியலை வேண்டுமானால்,
2, 3 பேர்களைச் சொல்கிறேன். அப்படிப்பட்டவர்கள் அந்தப்



பட்டியலில் வந்திருந்தால், அதிகாரிகள் இறந்தவர்களின் ஊர்
கள், பெயர்களை கொடுத்திருந்தார்கள் என்று சொன்னால்,
அதிலும் நான் கொடுக்கிற பெயர்களும் இருந்து, அவர்கள்
இறந்தவர்களில் இருக்கிறார்கள் என்றால், யார் என்பது
உங்களுக்குத் தென்படும் என்று கருதி, அதற்குரிய
நடவடிக்கை எடுக்க வேண்டும், பாதிக்கப்பட்டவர்களுக்கு
நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 542 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
15 பேர் இறந்திருக்கிறார்கள். அவர்களுடைய பெயர், விலாசம்
எல்லாம் பிரிண்ட் பண்ணிக் கொடுக்க முடியாது. எனவேதான்
இதில் மொத்தமாக நாம் கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு
உறுப்பினரவர்கள் இறந்தவர்கள் இன்னின்னார் என்று விவரம்
கொடுத்தால், அதிலே சேராமல் இருந்தால், அது பற்றிய நட
வடிக்கை எடுக்கப்படும். இதிலே நஷ்ட ஈடு பற்றி, நிவாரணத்
தொகையைப் பற்றிச் சொன்னார்கள். இப்படிப்பட்ட சூழ்
நிலையில் நிவாரணம் கொடுத்ததாக அநேகமாக இல்லை. எனவே
இந்தச் சூழ்நிலையில் அதற்கு எந்த ஏற்பாடும் செய்யமுடியாது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (இ) கோவை மாவட்டத்தில் பஞ்சாலைத் தொழிலாளர்கள் போனஸ் கேட்டு போராட்டம் நடத்துவது குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்த கவனஈர்ப்பு.
திரு. கே. செல்வராஜ், திரு. சிங்கை கோவிந்தராசு ஆகியோரில்
ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக்
கொண்டுவருவார். திரு. கே. செல்வராஜ்.

<u>திரு. கே. செல்வராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, '' கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பஞ்சாலைத்
தொழிலாளர்கள் போனஸ் கேட்டு போராட்டம் நடத்துவது
குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சே. ரகுபதி :</u> மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இது பற்றிய விவர அறிக்கை ஒன்று அவை
யில் வைக்கப்பட்டிருக்கிறது.

### அறிக்கை

பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு 1991-92 ஆம் ஆண்டு
போனஸ் வழங்குவது குறித்து முறையான தொழில் தாவா ஏது
வும் தொழிற் சங்கங்களால் இதுவரை எழுப்பப்படவில்லை.

தொழிற் சங்கங்கள் சம்பந்தப்பட்ட நிர்வாகங்களுக்கு கடிதங்கள் கள் அனுப்பி போனஸ் பிரச்சினை குறித்து பேச்சு வார்த்தைகள் நடத்தக் கோரியுள்ளன. தொழிற் சங்கங்கள் 20 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை 1991-92 ஆம் ஆண்டுக்கு போனஸ் வழங்க வேண்டும் எனக் கோரியுள்ளன.

போனஸ் பிரச்சினையைப் பொறுத்தவரை 1965 ஆம் ஆண்டு போனஸ் வழங்கும் சட்டத்தின் சரத்துக்களின்படி கணக்கிட்டு வழங்கப்படும். குறைந்தபட்ச போனசாக 8.33 சதவிகிதம் முதல் அதிகபட்ச போனசாக 20 சதவிகிதம் வரை நிறுவனங்கள் ஈட்டிய இலாபங்களுக்கு ஏற்ப போனஸ் வழங்க போனஸ் சட்டத்தின் கீழ் கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது. தேவை ஏற்படுமானால் 1965 ஆம் ஆண்டு போனஸ் வழங்கும் சட்டத்தின் கீழோ, தொழிற் தகராறு சட்டத்தின் கீழோ தாவாக் கள் எழுப்பி தொழிலாளர்கள் நிவாரணம் காண மேற்குறிப்பிட்ட சட்டங்களில் வழிவகைகள் உள்ளன.

1991-92 ஆம் ஆண்டு போனஸ் பிரச்சினை குறித்து தொழிற் சங்கங்கள் முறையான தாவா ஏதும் எழுப்பாத போதிலும் கோவை தொழிலாளர் இணை ஆணையர் தென்னிந்திய ஆலைகள் சங்க பிரதிநிதிகளுடனும், ஏழு தலைமை தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுடனும் 17—9—1992 அன்று பேச்சு வார்த்தைகள் நடத்தி இரு சாராரின் கருத்துக்களைக் கேட்டறிந்துள்ளார். போனஸ் வழங்கும் சட்டத்தின் சரத்துக்களின்படி தொழிலாளர் களுக்கு போனஸ் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி தென்னிந்திய ஆலைகள் சங்கம் தன் உறுப்பினர் ஆலைகளைக் கேட்டுக் கொண் டிருப்பதாக பேச்சு வார்த்தையின்போது தெரிவித்துள்ளது. தொழிற் சங்கங்கள், தொழிலாளர்களுக்கு சென்ற ஆண்டைக் காட்டிலும் அதிகமான தொகை போனசாக வழங்க வேண்டும் என்றும், குறைந்தபட்சமாக 20 சதவிகிதம் போனஸ் கொடுக்கப் பட வேண்டும் என்றும், இதன் அடிப்படையில் தென்னிந்திய ஆலைகள் பேச்சு வார்த்தைகள் நடத்த முன்வரலாம் என்றும் தெரிவித்துள்ளன.

1991-92 ஆம் ஆண்டு போனஸ் பிரச்சினை குறித்து நிர் வாகங்களும், தொழிற் சங்கங்களும் பேச்சு வார்த்தைகள் நடத்துமாறும் கோவை தொழிலாளர் இணை ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தற்போது இந்தப் பிரச்சினை குறித்து போராட்டம் எதுவும் நடத்தப்படவில்லை. பதட்ட நிலையும் இல்லை.

தேவைப்பட்டால் தொழிலாளர் துறை இப்பிரச்சினையில் தலையிட்டு சுமுகமான முடிவு ஏற்பட நடவடிக்கை எடுக்கும். இப்பிரச்சினை குறித்து அரசு உன்னிப்பாகக் கவனித்துக் வருகிறது.





மாண்புமிகு பேரவைத் தலைவர்
**திரு. கே. செல்வராஜ் :** பெரிய, சிறிய பஞ்சாலைகள் சுமார்
அவர்களே, தமிழ் நாட்டில் பஞ்சாலைகள் உள்ளன. அதிலே கோவை
600-க்கும் மேற்பட்ட பஞ்சாலைகள் உள்ளன. அதிகமான பஞ்சாலைகள்
மாவட்டத்தில் மட்டும் சுமார் 400-க்கும் அதிகமான பஞ்சாலைகள் தொழி
உள்ளன. வருடந்தோறும் அந்தப் பஞ்சாலைகள் போனஸ் கொடுப்பது
லாளர்களுக்கு தீபாவளிப் பண்டிகைக்கு ஆண்டுகளாக போனஸ் கொடுப்
வழக்கம். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக போனஸ் கொடுப் அதிபர்கள் சங்கம், ஒவ்
பதில், தென்னிந்திய பஞ்சாலை பிரச்சினையில் மிகப் பிடிவாதமாக
வொரு ஆண்டும் போனஸ் பிரச்சினையில் தொழிலாளர்கள் போராட்டம்
இருந்து, போனஸ் கொடுக்காமல் தொழிலாளர்கள் செய்து போனஸ்
நடத்தி, 2, 3 மாத காலமாக வேலை நிறுத்தம் செய்து போனஸ் தீபாவளி
வாங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இந்த ஆண்டும் தீபாவளி போனஸ் பெறு
பண்டிகைக்கு முன்பாகவே தொழிலாளர்கள் சங்கத்தையும்,
வதற்கு தென்னிந்திய பஞ்சாலை அதிபர்கள் சங்கத்தையும், மாண்புமிகு
மில் தொழிலாளர்கள் சங்கத்தையும் அழைத்து, மாண்புமிகு நடத்தி,
தொழிலாளர் நலத் துறை அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தி, ஏற்படுத்த
இந்த போனஸ் பேச்சுவார்த்தையில் நல்ல முடிவை ஏற்படுத்த இதுவரையில்
வேண்டும். இதில் ஒரு சில சங்கங்களை மட்டுமே இதுவரையில் மாண்புமிகு
மில் அதிபர்கள் சங்கம் அழைத்துப் பேசி வந்துள்ளது. மாண்புமிகு பாகுபாடின்றி
அமைச்சர் அவர்கள் அனைத்து சங்கங்களையும் பாகுபாடின்றி போராட்டத்தை
அழைத்துப் பேசவேண்டும். தொழிலாளர்கள் போராட்டத்தை ஒவ்வொரு ஆண்
தவிர்க்க உடனடியாகப் பேசுவதோடு, இதுவரை ஒவ்வொரு ஆண் தொழிலாளர்
டும் போனஸ் பேச்சுவார்த்தைகள் நடக்கும் போது தொழிலாளர் சங்கப் பிரதி
கள் சங்கப் பிரதிநிதிகளும், மில் அதிபர்கள் சங்கப் பிரதி செய்துபோனஸ்
நிதிகளும் கலந்து பேசி, மில் வாரியாக உடன்பாடு செய்துபோனஸ் ஒவ்
வழங்கி வந்துள்ளது. இந்த ஆண்டு மில் அதிபர்கள் சங்கம் ஒவ் முடித்துக்கொள்ள
வொரு மில்லையும் தனியாக அழைத்துப்பேசி, முடித்துக்கொள்ள தொழிலாளர்கள்
அறிவித்துள்ளது. இந்த முடிவை மாற்றியும், தொழிலாளர்கள் பேராடி
ஆர்ப்பாட்டம், ஊர்வலம் தர்ணா என அறிவித்துப் பேராடி அன்று வேலை
வருகிறார்கள். இப்போது வரும் 14-10-1992 அன்று வேலை
நிறுத்தம் செய்யவும்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியாகக் கேளுங்கள். அனுமதிப்பதில்லை, கேள்வி
சப்ஜெக்டாக இந்த மாதிரியெல்லாம் அனுமதிப்பதில்லை, கேள்வி முக்கியத்துவம் வாய்ந்த
கேட்கத்தான் விதி 55-ன்கீழ் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த அதற்கு
நிகழ்வினை கவன ஈர்ப்பாக கொண்டுவரும்போது அதற்கு சப்
அறிக்கை அளிக்கிறார்கள். கேள்விதான் கேட்க முடியும். சப் இடமில்லை.
ஜெக்ட் பூராவும் கொண்டு வருவதற்கு விதி 55-ல் இடமில்லை.

வருகின்ற 14-10-1992 அன்று அவர்கள்
**திரு. கே. செல்வராஜ்:** செய்வதாக அறிவித்துள்ளார்கள். அந்த
வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்துள்ளார்கள். அந்த அமைச்
வேலை நிறுத்தத்தைத் தவிர்க்க உடனடியாக மாண்புமிகு அமைச் இரண்டு
சரவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் இரண்டு ஏற்
தரப்பாரையும் அழைத்துப் பேசி, இதிலே ஒரு சுமுக முடிவு ஏற்
படுத்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 செப்டம்பர் 25

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட 14-10-92 அன்று தொழிற் சங்கங்கள் போராட்டம் நடத்த இருப்பது குறித்து அதிகாரபூர்வமற்ற தகவல்கள் இப்போது இருக்கின்றன. ஆனால் நிச்சயமாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு தொழிலாளர் நலம் காக்கிற அரசு. இந்த அரசு நிச்சயமாக தொழிலாளர்கள் போனஸ் பிரச்சினை குறித்து, எந்தப் போராட்டத்திலும் இறங்க எந்தவிதமான வாய்ப்பையும் உருவாக்கித் தராமல் அனைத்து தரப்பினரையும் அழைத்துப் பேசி அதற்காக இப்போது தொழிலாளர் நல இணை ஆணையர் அவர்கள் 17-9-92 அன்று தொழிற் சங்கப் பிரதிநிதிகள், ஆலைகளின் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய தேவைகளெல்லாம் இன்றைக்கு என்ன என்பதை அறிந்து, அதற்குத் தகுந்தாற்போல் ஒவ்வொருவரும பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தப் பேச்சு வார்த்தையில் எந்த சுமுகமான முடிவும் ஏற்படவில்லை என்றால், நிச்சயமாக புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதிலே தலையிட்டு அவர்களுக்குரிய வழிவகைகளைச் செய்துதரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9.55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு.சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாலைத் தொழிலாளர்களின் தீபாவளி போனஸ் பிரச்சினை குறித்து சொல்லுகின்ற நேரத்திலே, மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பு ஏற்றவுடன் கடந்த ஆண்டு போனஸ் பிரச்சினைக்காக தென்னிந்திய மில் அதிபர்கள் சங்கத்தையும் தொழிலாளர்களுடைய தலைவர்களையும் அழைத்து, கடந்த ஆண்டுக்கு முந்தைய ஆண்டு கொடுக்கப்பட்ட போனசையே வழங்குமாறு அவர்களுக்கு அறிவுரை வழங்கி, தொழிலாளர்கள் உள்ளம் மகிழ்கின்ற வகையிலே போராட்டத்தைத் தவிர்த்துப் போனசைப் பெற்றுத் தந்த, தொழிலாளர்களுக்கு மகிழ்வினை ஏற்படுத்தித் தந்த தமிழக முதல்வர் தங்கத்தலைவி அவர்களுக்கு தொழிலாளர்களின் சார்பாக இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, மூடிக் கிடக்கின்ற ஆலைத் தொழிலாளர்களுக்கும் முதல்வர் நிவாரண நிதியிலிருந்து 400 ரூபாயை வழங்கி, அவர்களுக்கு மகிழ்ச்சியைப் பெற்றுத் தருகிற வகையிலே தாய் உள்ளத்தோடு உதவியதற்காக தொழிலாளர்கள் உலகம் தங்களின் நன்றியை, கோவை மாவட்டத்திலே இந்த அரசுக்கும் புரட்சித் தலைவி அவர்களுக்கும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேளுங்கள்.



1992 செப்டம்பர் 25]

திரு. சிங்கை கோவிந்தராசு : இந்த அண்டு போனஸ் பிரச்சினையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெளி வாக எடுத்து வைத்ததின் பேரிலே போனஸ் பிரச்சினையை —இன்னும் 25 நாட்கள் தான் இருக்கின்றன தீபாவளி வருவ தற்கு. தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் அவர்கள் போராட்டத்திலே ஈடுபடத் தயாராக இல்லை என்று என்னிடத்திலே நானும் ஒரு தொழிலாளி என்ற அடிப்படையிலே சட்டமன்றத்திற்கு வருகிற நேரத்திலே கூறியும் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படாத வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுத்து போனஸ் வழங்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புவதோடு மூடிய ஆலைத் தொழிலாளர்களுக்கு உதவ தமிழக முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடிய ஆலைகளைத் திறந்து வாடிய தொழிலாளர்களின் வாட்டம் போக்கிய தங்கத் தலைவியினுடைய பொற்கால ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக தொழிலாளர்களுடைய நலம் காக்கப்படும். அவர்களுக்குரிய கோரிக்கைகளை சுமுகமாக இந்த ஆண்டு தீபாவளிக்கு முன்னதாகத் தீர்த்து வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) லால்குடி வட்டம் குமுளூரில் உள்ள வேளாண்மைக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி ஜெ. லோகாம்பாள், திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திருமதி ரமணி நல்லதம்பி, திருமதி ஜீனத் ஷெர்புதீன், திருமதி இலதா பிரியகுமார் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திருமதி ஜெ. லோகாம்பாள்.

திருமதி ஜெ. லோகாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''லால்குடிவட்டம் குமுளூரில் உள்ள வேளாண்மைக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றப் போவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை.

16–12–1991-ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் வேளாண்மைப் பொறியியல் மற்றும் விவசாயப் பட்டப் படிப்பு படித்து வரும் மாணவர்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதால், கோயம்புத்தூரில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு ஏற்படுகிறது என்றும், அதனால் வேளாண் பொறியியல் பட்டம் படிக்கும் மாணவர்களை வேறிடத்திற்கு மாற்ற வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவினைத் தொடர்ந்து அரசு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திடம் கலந்தாலோசித்தது. பல்கலைக் கழக வளாகத்தில் அமைதியை நிலை நாட்டவும், கோயம்புத்தூரில் சட்டம் ஒழுங்கை ஏற்படுத்தவும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மைப் பொறியியல் படிக்கும் மாணவர்களை தற்பொழுது லால்குடி குமலூரில் இயங்கி வரும் வேளாண்மைக் கல்லூரிக்கு மாற்ற வேளாண்மை பல்கலைக் கழகம் இசைவு தெரிவித்ததின் பேரில், அரசு வேளாணமைப் பொறியியல் பட்டப் படிப்பினை 1992–93 கல்வியாண்டிலிருந்து லால்குடியில் உள்ள வேளாண்மைக் கல்லூரியில் துவங்க முடிவு எடுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. லால்குடியில் உள்ள வேளாண்மைக் கல்லூரியில் வேளாண்மைப் பட்டப் படிப்பு முதலாண்டு மாணவர்களை (1992–93) திருச்சியிலுள்ள நாவலூர் குட்டப்பட்டு என்ற இடத்தில் இயங்கி வரும் குமரப் பெருமாள் பண்ணை விஞ்ஞான நிலையத்திற்கு மாற்றுவதற்கும், மற்றும் 2-வது 3-வது ஆண்டு மாணவர்களை மதுரை, கிள்ளிகுளம் போன்ற இடங்களில் நடந்து வரும் வேளாண்மைக் கல்லூரிகளில் மாற்றவும் அரசு முடிவு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. லால்குடியில் இயங்கி வரும் வேளாண்மைக் கல்லூரிக்கு கோயம்புத்தூரில் பயின்று வரும் வேளாண்மைப் பொறியியல் பட்டப் படிப்பு மாணவர்களை மாற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டு அதற்காக செலவுத் தொகையும் ஒதுககப்பட்டுள்ளது.

லால்குடி குமுலூரில் தற்பொழுது நடந்து வரும் வேளாண்மைக் கல்லூரியில், வேளாண்மைப் பொறியியல் பட்டப் படிப்பினை, தொடர்ந்து நடத்த முடிவு செய்து ஆணை பிறப்பித்துள்ளதால், அங்கு தொடர்ந்து இயங்கி வரும் வேளாண்மைக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றும் எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள லால்குடியில் உள்ள குமுலூரில் எனது சொந்த கிராமத்தில் இருந்த வேளாண்மை பட்டப் படிப்புக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றுவதாக இந்தக் குறிப்பில் உள்ளது. அப்படி மாற்றாமல் அதுவும் தன்னுடைய தொகுதியிலேயே இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



* மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே பொறியியல் பட்டப் படிப்பு படிப்பவர்களுக்கும், வேளாண் பட்டப் படிப்பு படிப்பவர்களுக்கும் இடையிலே கடந்த பல ஆண்டுகளாக தகராறுகள் நடந்து வருகின்றன. அதனால் அந்தந்தப் பகுதியில் சட்டம் ஒழுங்கு சீர் குலையக் கூடிய நிலை ஏற்பட்டது. எனவேதான் கடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திலே வேளாண் பல்கலைக் கழகத்திலே பட்டப்படிப்பு படிக்கக்கூடிய மாணவர்களுக்கு தனிக் கல்லூரியும், பொறியியல் படிக்கக் கூடிய மாணவர்களுக்கு தனிக் கல்லூரியும் வைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டு லால்குடி குமுலூரிலே வேளாண்மைக் கல்லூரியில் பொறியியல் பட்டப் படிப்பும், இதர கல்லூரிகளிலே வேளாண் பட்டப் படிப்பும், கோவையிலே உள்ள பல்கலைக் கழகத்திலே முனைவர் பட்டப் படிப்பும் படிக்க பாடத் திட்டம் வகுப்பது என முடிவு செய்து அதன்படி அரசு முடிவு எடுத்து இருக்கிறது. எனவே கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றுகின்ற முடிவு ஏதும் அரசிடம் இல்லை.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே வேளாண்மை பட்டப் படிப்பும், வேளாண்மைப் பொறியியல் பட்டப் படிப்பும் ஒரே இடத்தில் இருந்ததை நாம் அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுவோமேயானால் அதனால் பிரச்சினைகள் ஏற்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறியவில்லையா? அப்படி என்றால் அங்கே ஏதாவது குழப்பம் ஏற்படும்போது, மீண்டும் அதே இடத்தில் வைக்க வேண்டும் என்று அந்த மக்களும் மாணவர்களும் விரும்பினால் அந்த அளவிற்கு, அதே இடத்திலே லால்குடியிலே வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முடிவு எடுப்பதற்கு முன்னாலே அரசு தீவிர பரிசீலனை செய்து தான் முடிவு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தொட்டால் தீட்டு நிழல் பட்டால் தோஷம் என்று இந்த அரசு எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் அத்தனையையுமே எதிர்த்துக் கொண்டிருப்பவர்கள் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால் அந்த குமுலூரில் உள்ள கல்லூரிக்கு அதனுடைய வளர்ச்சிக்கு அங்கே உள்ள மாணவர்கள் வல்லுநர் விதைக் கடலையை உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய

முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 2 கோடி ரூபாயை தேசிய பால் பெருக்குத் திட்டத்தின் வாயிலாக பெற்றுத் தந்திருக்கின்றார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அறிக்கை அளித்தல்.

### மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 12 ஆவது அறிக்கையினைப் பேரவைக்கு அளிக்கின்றேன். போதிய அவகாசம் இல்லாத காரணத்தால் அறிக்கையின் அச்சிட்ட பிரதிக்குப் பதிலாக படி எடுத்த பிரதி டம்மி ரிப்போர்ட் அளிக்கப்படுகிறது. இவ்வறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கை அச்சிடப்பட்டு கிடைக்கப்பெற்றவுடன் அவைகள் உறுப்பினர்களுக்குத் தனித் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

### (அ) திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1992). மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் தமதுதிருத்தத்தை மொழியலாம்.

(†) 21-9-1992, ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





திரு. மா. சுந்தரதாஸ் : Mr. Speaker Sir, I move the following amendment standing in my name :

"That the Tamil Nadu Open Places (Prevention of Disfigurement) Amendment Bill, 1992 L.A. Bill No. 49 of 1992 be referred to a Select Committee of the House consisting of .... members. (List of Members will be given later)."

பேரவைத் தலைவர் அவர்களே ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தைப் பொறுத்த வரையில் யாராவது இந்த இடத்திலே ஒரு போஸ்டர் ஒட்டக் கூடாது என்று அப்ஜெக்ட் செய்தால் ஒட்ட முடியாது. ஆனால் இந்தச் சட்டத்தின்படி சிட்டியிலே கமிஷனர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பெர்மிஷன் வாங்கித்தான் ஒட்ட வேண்டும் என்று சொல்லி, திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்போது பப்ளிசிட்டிக்காக ஒரு இடத்தில் ஒட்ட வேண்டும் என்று சொன்னால் கூட அவர்கள் பெர்மிஷன் வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகையினால்தான் செலக்ட் கமிட்டி போட வேண்டும் என்று நான் என்னுடைய அமெண்ட்மெண்டை கொடுத்திருக்கிறேன். குறிப்பாக இன்று எங்கள் பகுதியைப் பொறுத்த வரையிலும் சரி, பல்வேறு ஹைவேய்ஸ் ரோடுகளைப் பொறுத்த வரையில் இப்போது ஆயில் பெய்ண்டைப் போட்டு எழுதியிருக்கிறார்கள். பல்வேறு ஆபீஸ் சுவர்களில் தனியார் நிறுவனங்களுடைய அட்வர்ட்டைஸ்மெண்ட்கள் எழுதப்பட்டு இருக்கின்றன. அவை எல்லாம் அழிக்கப்படுமா? தேர்தல் காலங்களில் போஸ்டர் ஒட்டுவதற்கு இடம் இல்லாத அளவுக்கு இப்போது அவர்கள் அதிக விலையுள்ள ஆயில் பெயிண்டால் எழுதியிருக்கிறார்கள். இன்று நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும் போது, பொதுவான சமயத்தில் பிரச்சினை இல்லை. தேர்தல் காலத்திலே எந்த அளவிலே ஒட்ட முடியும்? எத்தனை கட்சிகள் தேர்தலிலே போட்டியிடுகிறார்கள் ? அவர்களுக்குள்ளே சண்டை வந்துவிடுமோ என்ற ஐயப்பாடு எனக்கு இருக்கிறது. ஆனால் போலீஸ் கமிஷனர் என்று சொல்லும் போது அவர்களாக தன்னிச்சையாகத் தீர்மானித்தால் நன்றாக இருக்குமா என்பது தான் என்னுடைய கேள்வி ஆகும். ஆகவே தான் ஒரு கமிட்டி கான்ஸ்ட்டிடியூட் செய்ய வேண்டும். ஏன் என்று சொன்னால் தன்னிச்சையாக சிட்டியில் கமிஷனர் என்று சொன்னால் லோக்கல் கான்ஸ்டேபிள் தான் வந்துடைரைக்ட் செய்வார். மாவட்ட கமிஷனர் நேரடியாக வந்து பார்க்க முடியாது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் என்று சொன்னால் ஏதோ ஒரு அதிகாரி தான் வந்து அதை ஒட்டக் கூடாது என்று சொன்னால் அவர்கள் ஒட்டுவார்கள், இவர்கள் கிழிப்பார்கள். இந்த மாதிரி பிரச்சினை வரும். ஏற்கனவே பிரச்சினைகள் இருந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே அதற்கென்று ஒரு இடம் ஒதுக்கப்பட்டு இருக்கிறதா என்று இதில் சொல்லப்படவில்லை. ஏன் என்றால் இந்த அரசியல் கட்சிகளுக்கு எல்லாம் இந்தப் பகுதி என்று ....

[1992 செப்டம்பர் 25

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு.லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு அலுவலகங்களில் பெயின்ட் அடித்து சில விளம்பரங்கள் செய்திருக்கிறார்கள் என்று சொல்லுவது சரியல்ல. தனியார் யாரும் செய்யவில்லை; அறிவொளி இயக்கம் சம்பந்தமாக அறிவொளி இயக்கத்தினைத் தீவிரப்படுத்துவதற்காக சில தனியார்கள் அரசை அணுகி செய்கிற நேரத்தில் அறிவொளி இயக்கத்தினுடைய விளம்பரத்தோடு தனியார் சிறியதாக சில விளம்பரங்களைச் செய்திருக்கிறார்களே ஒழிய அரசு அலுவலகங்களில் தனியார் யாரும் பெயின்ட் அடித்து அந்த மாதிரி விளம்பரங்கள் செய்யவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை முனிசிபாலிட்டி அலுவலகத்திலே தனியார் விளம்பரம் செய்திருக்கிறார்கள். என். டி. சியினுடைய பிரான்ஜ் அலுவலகமாக இருக்கின்ற பனந்தாலுமூடு என்று சொல்லக்கூடிய இடத்தில் தனியார் சாரி பேலஸ் என்று சொல்லக்கூடிய ஆர்.எம்.வி. பேலஸ் என்று திருநெல்வேலியில் இருக்கின்ற ஒரு நிறுவனத்தினுடைய விளம்பரத்திற்காக அந்த டிப்போவினுடைய முழு பகுதியையும் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் கூட கேட்டேன். யார்? எப்படி இதைச் செய்யமுடியும்? இங்கே பொது விளம்பரங்களுக்காகவோ, அரசியல் காரியங்களுக்காகவோ வேறு யாரும் பப்ளிசிட்டி செய்ய முடியாத அளவுக்கு முழுதும் என்பிளாக்காக அவர்கள் எடுத்து விளம்பரம் செய்திருக்கிறார்கள். இதற்கு சட்டத்திலே இடம் தரப்படவில்லை. அதற்கு ஏதாவது வழிவகை இருக்கிறதா?

இதில் என்னுடைய ஐயப்பாடு எல்லாம் தேர்தல் காலங்களிலே இது ஒரு பெரிய பிரச்சினையாக வரக்கூடும். ஏன் என்றால் இப்போது இருக்கக்கூடிய சட்டத்திலே ' those objected to நாம் ஒட்ட முடியாது. இதனால் தேர்தல் காலங்களில் பிரச்சினைகள் வரும். மேலும் இப்போது தேர்தல் காலங்களில் பலயிடங்களில் வீட்டு உரிமையாளரிடம் பர்மிஷன் எழுதி வாங்கி வாருங்கள், அப்போதுதான் ஒட்ட முடியும் என்று காவல் துறையைச் சேர்ந்தவர்கள் சொல்வார்கள். இப்போதுள்ள சட்டப்படி யார் என்ன சொன்னாலும் அவர்கள் ஒத்துக்கொண்டால்கூட இந்த அமெண்ட்மெண்ட் செய்வதன் மூலமாக ஒட்ட முடியாத நிலைமை வருகிறது. ஆகவே, பொதுவாக தேர்தல் காலங்களில் இது ஒரு பெரிய பிரச்சினையாக வரும். அப்ஜெக்ட்டட்-டுஎன்றகிளாஸ் எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, எல்லாமே சிட்டியில் காவல் துறைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ; மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் [illegible] தலைவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ' Those objected to ' என்று கிளாசில் வருகிறது. மேலும்





நேஷனல் ஹைவேஸ் என். எச் 47 என்று போட்டிருந்தால் அதிலே போஸ்டர் ஒட்டுகிறார்கள். இதையெல்லாம் கடுமையாகத் தடுத்தே ஆகவேண்டும். அது எந்த அரசியல் கட்சி போஸ்டராக இருந்தாலும் சரி, யாருடையதாக இருந்தாலும் சரி, தனியார் விளம்பரங்களாக இருந்தாலும் சரி அதைத் தடுக்கவேண்டும். அடுத்த பெட்ரோல் பங்க் இவ்வளவு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது என்ற போர்டின் மீதும், அடுத்த கெஸ்ட் அவுஸ் இவ்வளவு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது என்ற போர்டின் மீதும் மக்களுக்குத் தெரியக்கூடிய அந்த விளம்பரங்களின்மீது, அழித்து போஸ்ட்டர் ஒட்டிவிடுகிறார்கள். இதுவெல்லாம் நிச்சயமாகத், தண்டனைக்குரிய விஷயம் ஆகும். இத்தகைய பிரச்சினைகள் வரும்போது அதைத் தனி அதிகாரிகளிடம் விடாமல் செலக்ட் கமிட்டிக்கு விட்டு மக்களுடைய ஒப்பினியன் வாங்குவதற்கு கமிட்டி கான்ஸ்ட்டிடியூட் செய்யவேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காகத்தான் நான் கூட ஒரு அமெண்ட்மெண்ட் கொடுத்து இருக்கிறேன். அந்த அமெண்ட்மென்ட் வரும் போது அதைப்பற்றிப் பேசுகிறேன். ஏறத்தாழ Women community, persons from physically handicapped, persons from medical profession persons in legal profession, advertising agency, Trade Unions, Educational Institutions போன்றவர்கள் எல்லாம் வந்து ஆலோசனை சொல்வதற்காக ஒரு கமிட்டி போட்டால் அவர்கள் எல்லாம் வந்து அங்கே ஆலோசனையைச் சொல்லலாம். குறிப்பாக நம்முடைய நகரத்தை அழகுபடுத்துவதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை ; ஆகவே, இதிலே சிரமங்கள் வந்து விடுமோ என்று நான் நினைக்கிறேன். ஏன் என்றால் தனிப்பட்டவர்கள் ஒத்துக்கொண்டால் கூட நாம் ஒட்ட முடியாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு நம்முடைய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து ஒருவரைப் பிடிக்கவில்லை என்று சொன்னால் அவர்கள் வீட்டில் போய் ஒட்டுங்கள் என்று சொன்னால் என்ன ஆகும்.

இப்போது ' stiek no bills ' என்று சொன்னால் அங்கே ஒட்ட மாட்டார்கள். இப்போது வருகின்ற சட்டப்படி பார்த்தால் அவர்கள் ஒட்டாதே என்று சொன்னால்கூட அதிகாரிகள் ஒட்டு என்று சொல்லுவார்கள். நாம் என்ன செய்யமுடியும். இந்த மாதிரி ஒரு பெரிய பிரச்சினைக்குரிய There is an ambiguity clause. If it is objected to அதுதான் முக்கியமான விஷயம். அப்ஜெக்ட் செய்துவிட்டால், ஸ்டிரிக்டாக ஒட்டக்கூடாது, அதிகாரிகளுக்கு அதிகாரம் கிடையாது.

In a democratic country a man, an Officer cannot be compelled to do anything. அந்த அளவுக்கு இருக்கக்கூடாது. அந்த கிளாஸை எடுக்காமல் 'if it is objected' யாரும் ஒட்டக்கூடாது; ஒட்டவேண்டிய தேவையில்லை : அப்ஜெக்ஷன் இல்லாத இடங்களில் போஸ்ட்டர் ஒட்டலாம்.

மேலும் நகராட்சிகள், முனிசிபாலிட்டிகளின் அழகு குன்று கிறது என்று சொன்னால் அதற்கு ஒரு கமிட்டி கான்ஸ்டிட்யூட் செய்து அந்த கமிட்டியில் அதை விவாதிக்க வேண்டுமே தவிர, ஒரு தனிப்பட்ட அதிகாரி அதைப்பற்றி முடிவு எடுப்பது சரியாக இருக்காது. இப்போது சரியாக இருக்கலாம். ஆனால் தேர்தல் காலங்களில் நாம் எல்லாம் தேர்தலில் நிற்போம், அந்த சமயத் தில் அங்கே இருக்கிற பிரச்சினைகள் உங்களுக்கெல்லாம் தெரியும், நாம் தேர்தலில் ஓட்டு வாங்கப் போவதா ? எங்கே போஸ்ட்டர் ஒட்டுவது என்று அதிகாரிகளைப் போய்ப் பார்ப்பதா ? அங்கே இருக்கிற சண்டையைத் தீர்ப்பதா என்ற பிரச்சினை தான் வந்து விடும் என்ற காரணத்தால் 'அப்ஜெக்ட்டட் பிளேஸ்' என்ற கிளாஸை எடுக்கக்கூடாது என்றும் சொல்லிவிட்டு If it is not obj cted to let him paste. அதுபோல, இந்தப் பிரச்சினையில் போஸ்ட்டர்களை எங்கே ஒட்ட வேண்டுமென்று தீர்மானிக்கின்ற குழுவை, மாவட்ட அளவில் ஒரு கமிட்டியை போட வேண்டும். அதிலே எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்த்துக் கொள்ளலாம். சிட்டியைப் பொறுத்தவரையில்கூட ஒரு கமிட்டியை கான்ஸ்டிட யூட் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணமே தவிர மேலும் அழகுபடுத்துவதிலே இந்தச் சட்டத்தினால் ரொம்ப மேன்மை அடையும் என்று சொல்ல முடியாது. ஆனால், பொதுவாக நான் ஆதரவு தெரிவித்து, நல்ல எண்ணம் உள்ள வர்களைக் கொண்டு ஒரு குழுவை அமைத்து, இதைச் செய் தால் நன்றாக இருக்கும் என்று சொல்லி நான் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச் சந்திரன்.

*திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்தத் திருத்த சட்டமுன்வடிவை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் ஆளும் தரப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத் திருத்த முன்வடிவு தேவையற்றது. நடைமுறையிலே நிர்வாகம் செய்வதற்கு தகுதியற்றது. அதோடு மட்டுமல்ல, எத்தகைய நன்மையையும் ஈட்டித் தருவதும் அல்ல. போஸ்ட்டர்கள் என்பது பாமர மக்கள் நிறைந்த நாட்டில் தகவல்களைப் படத்தோடு தெரி விப்பதற்குக் கையாளப்படுகிற சாதனங்கள். போஸ்ட்டர்களா னாலும் கட்அவுட்டுகளானாலும் உருவத் தோற்றம் அல்லது உருவப் படம் அவற்றைப் பார்த்து நடைபெறுகின்ற நிகழ்ச்சி களை தெரிந்து கொள்கின்ற நிலையில் நம்முடைய நாட்டில் ஏராளமான பேர் இருக்கிறார்கள். ஆகையால் இவற்றைத் தடை செய்வதன் மூலம் அந்த வாய்ப்பினை அந்த மக்கள் பெறுவதற்கு இடையூறாக இருக்கிறது. இதில் போஸ்ட்டர்கள் மட்டும்தான் இருக்கிறது. கட்அவுட்டுகள் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. போஸ்ட்டர்கள் ஒட்டுவதற்கு அனுமதி





அளிக்கலாம் என்பதற்கு சென்னை மாநகரத்தில் ஆணையாளருக் கும் பிற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. அவர்கள் எத்தகைய முடிவை எடுக்கிறார்கள் என்பது ஒருபுறம் இருக்க, ஏற்கெனவே இருக் கின்ற பல பணிகளுக்கு இடையில், எங்கெங்கே என்னென்ன போஸ்ட்டர்கள் அடிக்கிறார்கள் எவ்வகையான போஸ்ட்டர் கள் ஒட்டப்படுகின்றன என்பதைக் கண்காணிக்கின்ற, மிகவும் சிக்கலான, நடைமுறைக்குச் சாத்தியமற்ற வேலைப்பளுவும் அவர்கள்மீது சுமத்தப்படுகிறது. அதனாலே அது சரியாக நிறைவேறுவதற்கு வழியில்லை.

அடுத்தபடியாக, நான் முன்பே தெரிவித்ததைப் போல இவை சாதாரண மக்களுக்கும் எளிதில் தெரிய வைக்கக்கூடிய சாதனங்கள் என்ற அடிப்படையினால் அவற்றை மறுக்கக் கூடாது. எப்படி கட்அவுட்டுகளுக்கு அனுமதி வழங்கப்படு கிறதோ அப்படி போஸ்ட்டர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அனுமதி வழங்குவதற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால், போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்குமானால் அனுமதி மறுப்பதற்கு மட்டும்தான் அதிகாரிகளுக்கு அதிகாரம் என்று இந்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படக் கூடும். அதிலேகூட டிராபிக் அஸார்ட்ஸ் என்று எடுத்துக் கொண்டால், வானளாவிய கட் அவுட்டுகளால் இன்றைக்கு அதிக டிராபிக் அஸார்ட்ஸ் உண்டு. நிச்சயமாக போஸ்ட்டர்களால் அத்தகைய நிலைமை ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை. ஆகவே, கட்அவுட்டுகளே கூடாது என்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போஸ்ட்டரினால் ஆபத்து இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது அவ்வளவு பொருத்தமாக இல்லை. காரணம், பலவிதமான போஸ்ட்டர்கள் அடிக்கப்படுகின்றன. வாகனங்களிலே போகக்கூடியவர்கள் அதைப் பார்த்து படித்துக் கொண்டு போகிறார்கள். அதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், டிரான்ஸ்போர்ட் மினிஸ்ட்டராக இருந்தபோது, பேசியிருக்கிறார்கள். அது அவர்களேகூட இதையெல்லாம் பேசியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் சொன்னதைப் போல, எங்காவது ஒரு இடத்திற்குப் போய், எந்த வழியாகப் போகவேண்டும் என்று பார்த்தால் அதிலே போஸ்ட்டர் ஒட்டப்பட்டிருக்கிறது. ஒரு 5 நிமிடம் ஒரே இடத்தில் நின்று நீங்கள் பேசிக்கொண்டிருந்தால் உங்களுடைய முதுகிலேகூட போஸ்ட்டர் ஒட்டப்படும். அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதைத் தடுக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. எனவே, இதை ஒழுங்கு

படுத்துவது தேவையானது. எனவே கட்டவுட்டையும் இதையும் ஒன்றுபடுத்தி அவர் பேசுவது என்பது அவ்வளவு சரியாகப் படவில்லை. போஸ்டர்கள் பொறுத்தவரை என்ன பிரச்சினை இருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்லுவதுதான் நன்றாக இருக்கும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். போஸ்ட்டர் ஒட்டியது பற்றிய ஒரு கிளாரிபிகேஷன்.

மரண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்

முற்பகல் 10-15

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பண்ருட்டி அவர்களிடம் நான் கிளாரிஃபிகேஷன் கேட்க ஆசைப்படுகிறேன். சமீபத்திலே நடந்த பாட்டாளி மக்கள் கட்சி ஊர்வலத்தில் அதற்காகப் போடப்பட்ட வால்போஸ்டர் சம்பந்தமாக கிளாரிஃபிகேஷன். அந்த வால்போஸ்டரில் தனித் தமிழ்நாடு படைப்போம்; தனி ஈழம் படைப்போம் என்றெல்லாம் வால்போஸ்டர் அச்சடித்து எங்கு பார்த்தாலும் ஒட்டியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் மேலாக, இங்கே விடுதலைப் புலி இயக்கத்தை இந்தியாவிலேயே தடை செய்திருக்கிறோம். விடுதலைப் புலி இயக்கத்தை இந்தியாவிலே தடை செய்த பிறகு, அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களை இங்கே பிரபாகரனைச் சார்ந்த தானு, சிவராஜன் போன்றவர்கள் கொலை செய்து கொலைப்பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இங்கே தடை செய்யப்பட்ட இயக்கத்தை, அதனுடைய தலைவரை வாழ்க வாழ்க என்று கோஷம் போடுவதும், அங்கே போஸ்டர் ஒட்டுவதும், வன்முறையைத் தூண்டுகின்ற அளவில் இந்த நாட்டுக்கும், இந்தச் சட்ட திட்டங்களுக்கும் எதிர்ப்பான கோஷங்களைப் போடுவதும், பிரபாகரன் வாழ்க என்று கோஷம் போடுவதும் நியாயம் தானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போஸ்டருக்கு வாருங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : பிரபாகரன் போஸ்டரைப் போட்டுச் செய்திருக்கிறார்கள். இது சட்டத்திற்கு உட்பட்டதா ? இதே பண்ருட்டியை நான் கேள்வி கேட்கிறேன். தடை செய்யப்பட்ட இயக்கத்தைப் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஆதரிக்கிறார்களா, தடை செய்யப்பட்ட இயக்கத்ினுடைய தலைவர் பிரபாகரன் அவர்களை நம்முடைய பண்ருட்டி இராமச்சந்திரன் ஆதரிக்கிறாரா என்பதை அவர்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.





திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இந்தச் சட்ட முன் வடிவில் (குறுக்கீடு) சட்ட முன் வடிவில்தான் பேச வேண்டும். அதைத் தனியாக
* *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் என்ன கேட்கிறார் என்றால், அப்படிப்பட்ட போஸ்டர்கள் ஒட்டுவதைப் பற்றிக் கேட்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவிலே தடை செய்யப்பட்டிருக்கிறது. தடை செய்யப்பட்ட இயக்கத்தைப் பாராட்டி, போற்றி போஸ்டர் போட்டிருக்கிறார்கள். இவர்கள் தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரிக்கிறார்களா என்று பகிரங்கமாக வெளியிட வேண்டுமென்று உறுப்பினர் கேட்கிறார். அதற்குப் பதில் சொல்லட்டும் அவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போஸ்டரைப் பற்றித்தான் கேட்கிறார்கள். அப்படிப் போஸ்டர் போட்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நீங்கள் குறுக்கே வராதீர்கள். அவர் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் நீங்கள் சொல்வதைத்தான் சொல்கிறேன். விடுதலைப் புலிகளை ஆதரித்து....

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : விடுதலைப் புலியை ஆதரிக்கிறாரா இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதரிக்கிறாரா, இல்லையா என்று கேட்கிறார்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன் வடிவின்மீது தாங்கள் பேசச் சொல்லப் போகிறீர்களா அல்லது வேறு விவாதம் வைத்துக் கொள்ள தாங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா ? அதைச் சொல்லுங்கள். நான் ரெடி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சிங்காரம் கேட்பது, அப்படி போஸ்டர் ஒட்டப்பட்டதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ? அப்படிப்பட்ட அந்தக் கோஷத்தை எழுப்பி போஸ்டர் ஒட்டியிருக்கிறீர்களே, அந்தக் கோஷத்தை ஆதரிக்கிறீர்களா என்று தான் கேட்கிறார்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தச் சட்ட
முன்வடிவு, விடுதலைப் புலிகளைப் பற்றியது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த போஸ்டரில்
விடுதலைப் புலி என்றுதானே இருக்கிறது. மாண்புமிகு வீட்டு
வசதித் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
இந்தச் சட்டத்தை இந்த அவையிலே எதிர்க்கின்றார்கள்.
மாண்புமிகு சிங்காரம் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்
கின்றார்கள். தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு, இந்த
நாட்டைத் துண்டாடுகின்ற இயக்கத்திற்கு ஆதரவாகவும்,
இந்த நாட்டை ஆண்ட முன்னாள பிரதமரைக் கொலை
செய்தவர்களுக்கு ஆதரவாகவும் போஸ்டர்கள் அடிக்கப்பட்டிருக்
கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அப்படிப்பட்ட போஸ்டர்
களெல்லாம் அடிப்பதற்கும் ஒட்டுவதற்கும்தான் இந்தச்
சட்டத்தை எதிர்க்கிறாரா என்பதைத் தெரிவிக்க வேண்டும்.
மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அதைத் தடுப்பதற்கு ஏற்கனவே சட்டத்தில் இடம்
இருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தம் எல்லாப் போஸ்டர்
களையும் தடுக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, அவர் கேட்பது
எல்லாப் போஸ்டரையும் தடுப்பது போல இந்தப் போஸ்டரையும்
தடுக்கிறது. அந்தப் போஸ்டரை நீங்கள் ஒட்டியிருக்கிறீர்
களே, அந்தக் கோஷத்தை ஆதரிக்கிறீர்களா என்றுதான்
கேட்கிறார்கள். போஸ்டரை ஒட்டிய விவகாரத்தில் வருவது
தான் இது.

திரு. போளூர் வரதன்: தீவிரவாத இயக்கத்தைப்பற்றி
ஒட்டுவதை ஆதரிக்கிறார்களா ?

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்கு
வரத்துத துறை அமைச்சா.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
குறிப்பிடுகிறபோது அதற்கெல்லாம் தடை இருக்கிறது என்று
சொன்னார்கள். அப்படி தடையை மீறி ஊர்வலம் செய்பவர்களைக்
கைது செய்வது சரியா இல்லையா என்பதை நான் இந்த
நேரத்தில் கேட்க விரும்புகிறேன். அதே நேரத்தில், தடை
இருக்கிற நேரத்தில் தடையை மீறி தமிழகத்தில் ஒரு





குழப்பத்தை உருவாக்கி தமிழகத்தைத் துண்டாடுவதற்கு
இன்றைக்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிற அந்த இயக்கத்தைத்
தடை செய்வது சரிதானா இல்லையா என்பதை அவர்கள்
மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. அழகிரி.

திரு.ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டியார் அவர்கள் சட்ட
முன்வடிவில், போஸ்டரைப் பற்றி மட்டும்தான் இருக்கிறது;
எனவே, அதைப்பற்றி மட்டும்தான் பேசுவேன் என்று சொல்
கிறார்கள். அது நியாயமான வாதம். ஆனால், சட்டமுன்
வடிவில் கட்-அவுட்டைப் பற்றி இல்லாத போது, அதைப்பற்றிப்
பேசுவதற்கு அவர் விருப்பப்படுகிறாரே, அதில் என்ன நியாயம்
இருக்கிறது என்பதை நான் கேட்க விரும்புகிறேன். எனவே,
கட்-அவுட்டைப பற்றி பேசுகிற அவர், விடுதலைப் புலிகள்
விஷயத்தைப் பற்றியும் சொன்னால் அது அவருடைய தாராள
மனப்பான்மையைக் காட்டும்; அவருடைய நாகரீகப் பண்பைக்
காட்டும். எனவே, அவர் அதைப் பற்றியும் பேசினால் நன்றாக
இருக்கும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, கட்-அவுட் பற்றி நான் பேசுவதற்குக் காரணம்,
இரண்டும் பாமர மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கூடிய சாதனங்
கள் என்ற வகையில்தான் சொன்னேன் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இந்தப்
போஸ்டரைப் பற்றிக் கேட்கிறார். இப்படி போஸ்டர் ஒட்டி
இருக்கிறீர்கள்; இப்போது அந்த போஸ்டர் தடை சட்டம்தான்
வருகிறது. நீங்கள் ஒட்டியதையும் தடை செய்கிற சட்டம்தான்
இது. ஆகவே இதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா என்று கேட்கி
றார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் சொல்லட்டும்.
(குறுக்கீடுகள்) மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.
பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் தெளிவாகக் குழம்பியிருக்கி
றார்கள் என்றுதான் சொல்ல முடியும். காரணம், இந்தச்
சட்டமுன்வடிவைப் பொறுத்தவரை அவர் பாமரமக்களுக்கு
ஆதரவாகப் பேசுவதாகச் சொல்கிறார். பாமர மக்களைப்
பொறுத்த வரை ஜில்லாக்களிலே இருக்கிறார்கள்; கிராமங்களிலே
இருக்கிறார்கள். ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரை,
இது சென்னையைப் பொறுத்தது. சென்னை, 3 அர்பன்
ஏரியாக்களைப் பொறுத்தது. ஆகவே, இதைக்குழப்புவதற்காகத்

தான் பாமர மக்களைப்பற்றிப் பேசுகிறார் என்று கருத வேண்டியிருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், பாட்டாளி மக்கள் கட்சி இயக்கத்தினர் ஒரு பகுதிக்குச் செல்கிற போது அந்த சமுதாய மக்களைப் பார்த்து, நாங்கள் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறார்கள். அந்தச் சமுதாய மக்களே இல்லாத இடங்களுக்குப் போகிற போது அந்தச் சமுதாயத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறார்கள். கோஷம் போடுவது விடுதலைப் புலிகளின் இயக்கங்களை ஆதரிக்கிற வகையிலே. மருத்துவத் தொழிலைச் செய்கிறவர்கள் இந்த இயக்கங்களை ஆதரிக்கின்ற வகையிலே, இந்த நாட்டைக் கொலைக்களமாக மாற்றுகிற வகையிலே இந்த நாட்டில் ஒரு கலாச்சாரத்தை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள். அது வெளிப்படையாக நாட்டு மக்களுக்கும் தெரிகிறது. அந்த ஊர்வலத்தைப் பார்த்து அத்தனை மக்களும் தூற்றினார்கள். காறி உமிழ்ந்தார்கள். அந்தச் சூழ்நிலையிலே கூட, இதே மாண்புமிகு உறுப்பினர் அது எனககுத் தெரியாது என்று சொன்னார். நாங்கள் அதைக் கேட்கவில்லை என்று சொன்னார். கையசைத்து ஆரவாரம் செய்ததையும் எனக்குத் தெரியாது என்று சொன்னார். அப்படிப்பட்டவர்களிடமிருந்து இதற்கு முறையான பதிலை எதிர்பார்ப்பது, இந்தச்சபை எதிர்பார்ப்பது என்பது முடியாத காரியம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பண்ருட்டியார்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே விதி 4-ஏ (2)-இல் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் எழுப்பிய பிரச்சினை, அதைத் தொடர்ந்து எதிர்க் கட்சித் தலைவர் உங்களிடம் கேட்க விரும்புவது, இந்த போஸ்டர் தடைச் சட்டத்தை எதிர்க்கிறீர்கள்; நீங்களே தற்போது அண்மையில் போஸ்டர் ஒட்டியதில் பிரிவினை இயக்கங்களை ஆதரித்தும், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தை ஆதரித்தும் போஸ்டர் ஒட்டினீர்களே, அதை இப்போது ஆதரிக்கிறீர்களா என்றுதான் நேரடியாகக் கேட்டார்கள்.

திருமதி ரமணி நல்லதம்பி : சென்னை நகரத்திலே ஒட்டினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒட்டினார்கள் என்று பேசியதைத் தான் (குறுக்கீடுகள்) மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார வேண்டும்.





திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி என்ற பெயரில் இந்த போஸ்டர்கள் ஒட்டியிருந்தால், அதற்கு நான் முழு பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன். அதிலே எந்தவிதமான ஐயத்திற்கும் இடமே இல்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் அவர்கள், உங்கள் ஊர்வலத்தை ஒட்டி, ஒட்டப்பட்ட போஸ்டர் என்று சொன்னார் (குறுக்கீடுகள்) மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-25.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள், போற்றுதற்குரிய இராஜீவ் காந்தி கொலை வழக்கில் முதல் எதிரியாகக் குற்றம் சாட்டப்பட்டு ''ப்ரொக்ளெய்ம்டு அஃபண்டர்'' என்று உலகத்திற்கு அறிவிக்கப் பட்டு விளங்குகின்ற பிரபாகரனுடைய படத்தை, இவர்கள் நடத்திய பாட்டாளி மக்கள் கட்சி ஊர்வலம் அண்ணாசாலையில் வந்தபொழுது ஒரு நூறு ஆண்டுகளுக்கு மேலாகக் கீர்த்தியோடு விளங்குகின்ற இந்துப் பத்திரிகை படம் எடுத்து, அடுத்த நாள் வெளியிட்டிருக்கிறது. அதற்கு மாண்புமிகு உறுப்பினர் பண் ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் என்ன விளக்கம் அளிக்கிறார் கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப்பற்றி அடி முதல் நுனி வரை நன்கு தெரிந்தவர்கள். இந்த தேசத்தினுடைய முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களால் ஐ. நா. சபைக்கு இந்தியப் பேரரசின் நிலையினை விளக்க அனுப்பப் பட்டவர், அமரர் எம். ஜி. ஆர். அவர்கள் சார்பிலே. மறைந்த மாபெரும் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் தன்னுடைய வாயால் ஜூனியர் இராமச்சந்திரன் என்று அழைக்கப்படக்கூடிய அளவுக்கு அவர் மேல் நம்பிக்கை வைத்திருந்தார்கள். (குறுக்கீடு கள்). அப்படிப்பட்ட உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் இன்றையதினம்—அந்த ரோஜாப்பூ இந்த மண்ணிலே நார் நாராகப் கிழிக்கப்பட்டதை—அமரர் எம்.ஜி. ஆர். அவர்கள் சாட்சியாகப் பார்த்து, பழக அனுமதிக்கப்பட்ட அவர்கள், இவரைக் கொன்றவர்கள், இந்த மண்ணிலே வாழ்க, வாழ்க

என்று கோஷம் போட்டு, அந்த ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கக்கூடிய அளவுக்கு அவர்களுடைய நெஞ்சம் கொடூரமான நெஞ்சமாக இருக்கும் என்றுசொன்னால் நான் அதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. ஆனால் ஒன்று தோன்றுகிறது. அவர் நெஞ்சமே இன்று வருத்தப்படுகிறது. அதனால் தான் சொல்வதற்கு வாய் கூசுகிறது. அந்த வார்த்தையைச் சொல்ல மனம் வரவில்லை. அதைத் தான் நான் கேட்கிறேன். இந்த அவையிலே உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள், முன்னாள் அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களிடம் நேரிடையாக வினாவை எழுப்பினார்கள். அந்த வினாவுக்குப் பதில் சொல்வதை விடுத்து ஒரே வார்த்தையில் சொல்லலாம். ஆனால் இவர் கும்பகோணத்திற்கு வழி கேட்டால் கொரடாச்சேரிக்கு வழி சொல்லுகிறார். ஆகவே, நாங்கள் இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஒரு ஆணித்தரமான கேள்வியை உங்கள் மூலமாக அவர்களுக்கு வைக்கிறோம். ஏனென்றால் இந்த மன்றத்திலே ஒவ்வொருவரும் இங்கே உள்ளே பேசுகின்ற வார்த்தைகளுக்கு வெளியே பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள். வெளியே நாம் செய்கிற நடவடிக்கைகளுக்கு உள்ளே பிரதிபலிக்கக் கடமைப்பட்டவர்கள். நாம் வெளியே ஒரு விதமாகவும், உள்ளே ஒரு விதமாகவும் நடப்பது என்பது இந்த அவையினுடைய கண்ணியத்திற்கும் மரபிற்கும் கட்டுப்பாடாகாது. ஆகவே, முன்னாள் அமைச்சர் ஒரு கருத்தைச் தெளிவாகச் சொல்ல வேண்டும். வெளியிலே சொல்லுகிறார்களே அந்தக் கருத்தை இந்த மாமன்றத்திலே ஆணித்தரமாக அவர்கள் சொல்ல வேண்டும். அவர்கள் இந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிக்கிறார்களா? பிரபாகரன் செய்த கொலையை நியாயம் என்று ஒப்புக் கொள்கிறார்களா என்பதை இந்த மன்றத்தில் சொல்ல வேண்டுமென்பதை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தலைமைக் கொறடா அவர் ஏதோ ஆதாரம் இருக்கிறது என்று சொல்லுகிறார்.

*<u>திரு. கா. ப. பட்டாபிராமன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சியின் சார்பாக முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களிடம் நறுக்குத் தெரித்தாற் போல் இந்த அவையிலே கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி—பிரபாகரனை ஆதரித்து சுவரொட்டிகள்-போஸ்டர்கள் கொண்டு வந்தீர்களே அதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா? இல்லையா? இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதில் ஒப்புக் கொள்கிறேன் என்றால் ஒப்புக் கொள்ளட்டும். அதை இந்த அவை ஏற்றுக் கொள்கிறது. ஒப்புக் கொள்ளவில்லை என்றால் அதற்கும் பதில் சொல்லட்டும். இந்த அவை அதையும் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் விடுதலைப் புலிகளை எந்த அளவிலே அவர் சார்ந்து





இருக்கின்ற இயக்கத்தைச் சேர்ந்த தலைவர் எந்த எந்த நேரங்
களிலே விடுதலைப் புலிகளை ஆதரித்துத் தமிழகத்திலே பேசி
இருக்கிறார் என்பதற்கு, அந்த இயக்கத்தினுடைய தலைவர்
18—5—1992 ஆம் நாளிட்டு சென்னையிலே இருந்து வெளி
வருகின்ற ஒரு நாளேட்டில் அவர் சொல்லியிருக்கிறார். ''சட்டம்
ஒழுங்கு கெடும் நிலை வரப் போகிறது. தமிழக மக்கள்
கொதித்து எழுவார்கள். நாங்கள் ஜெயலலிதாவுக்கு நன்றி
சொல்கிறோம். ஏனென்றால், நாங்கள் தூங்கிக் கொண்டிருந்
தோம். இப்போது விழித்துக் கொண்டோம். விடுதலைப்
புலிகளின் இயக்கத்திற்குத் தடை விதித்ததைத் தொடர்ந்து நாங்
கள் விழித்துக் கொண்டோம். நம் மக்களுக்கு இன்னும் ஈழ
விடுதலைப் புலிகள் போராட்டம், பிரபாகரனைப் பற்றி சரியாகச்
சொல்லப்படவில்லை. விடுதலைப் புலிகளை ஆதரித்தால் இப்
பொழுதெல்லாம் 7 வருடம் ஜெயில் என்கிறார்கள். 7 வருடம்
என்ன, 70 வருடம் போட்டாலும் சரி, நான் போனால் என்ன, என்
மகன் வருவான், என் பேரன வருவான் என்று பேசியுள்ளார்
மேலும் அந்தத் தலைவர் சொல்லியிருக்கிறார். விடுதலைப் புலி
இயக்கத்திற்கு எத்தனைத் தடை வந்தாலும் அவர்களை ஆதரிப்
பதிலிருந்து மாறமாட்டோம். எங்கள் ஒட்டுமொத்த ஆதரவு
அவர்களுக்கு எப்பொழுதும் உண்டு என்று சொல்லியிருக்கிறார்.
மேலும் அவர் சொல்கிறார் அதனால் வரும் விளைவுகளைச்
சந்திக்கத் தயார், இலட்சக்கணக்கான தமிழ் இளைஞர்களும்
இருக்கிறார்கள் என்று

முற்பகல் 10-30

அது மட்டுமல்ல. அடுத்து ஒரு பத்திரிகையிலே அவர்களுடைய
தலைவர் கொடுத்த அந்த ''இன்டர்வியூ''-ஐ நான் உங்களுக்குச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புலிகளை ஆதரிக்கிறீர்களா
என்று ஒரு நிருபர் கேட்டிருக்கிறார் ஆம் ஆதரிக்கிறோம்,
ஒரு முறை என்ன ஐந்து முறை சொல்கிறேன் ஆதரிக்கிறோம்,
தடாச்சட்டத்திற்கு பாட்டாளி மக்கள் கட்சி பயந்தவர்கள் அல்ல.
தடாவில் பண்ருட்டி இராமச்சந்திரனை கைது செய்யத் தக்க
நேரத்தில் ஜெயலலிதா முடிவு எடுப்பாராம். யார் கொடுத்தது
தைரியம், உங்களால் முடியுமா, தடாவைப் பயன்படுத்தி பார்
என்று கூறியிருக்கிறார். அவர் முதல் அமைச்சருடைய சொந்த
ஊரைச் சொல்லி, விரட்டுவோம் என்று கூறியுள்ளார். இம்
மாதிரி பேச்சுக்கு முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். இப்படிப்பட்ட பேச்சுக்களை எல்லாம் வைத்துப்
பார்க்கின்ற போது இந்த பெரு நாட்டையே ஏதோ 21 ஆம்
நூற்றாண்டுக்கு அழைத்து செல்ல வேண்டுமென்று இந்த நாட்
டிலே தமிழகத்திலே வந்த, என்னுடைய சொந்தத் தொகுதிக்கு
40 கிலோமீட்டர் தொலைவிலே இருக்கிற ஸ்ரீபெரும்புதூரிலே
இந்தப் பெரும் நாட்டினுடைய தலைவர் இராஜீவ் காந்தி
அவர்கள் உருவத்தையே பார்க்க முடியாமல் சாகடிக்கப்பட்டு
அந்த சதையை இந்திய பெரும் தாய்க்கு நைவேத்தியமாக்

அவருடைய இரத்தத்தை தீர்த்தமாக, வைத்து, இந்த நாட்டை வாழ வைத்தாரே அவரைக்கொலை செய்த இந்த இயக்கத்திற்கு இவர் சார்ந்திருக்கின்ற தலைவர் அவர்கள் பேசியிருக்கிறார் என்பதை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆக அவர்கள் போஸ்டரை ஒட்டியிருக்கிறார்கள். தமிழகம் எங்கும் ஒட்டப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்லாமல் பிரபாகரனுடைய பெரிய போஸ்ட்டரை அவர்கள் ஊர்வலமாக, அந்த ஊர்வலத்தில் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இதை எல்லாம் பார்க்கின்ற போது, அவருக்கே இருக்கின்ற இந்த அரசியல் அனுபவத்தின் அடிப்படையிலே நான் கேட்கிறேன் நீங்கள் இதை ஒப்புக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் திட்டவட்டமாக மறுக்க வேண்டும். அதற்கு நீங்கள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். இந்த நாடும் உங்களுடைய பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்று இந்த அவைக்குச் சொல்ல விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அரசுக் கொறடா அவர்கள் தெரிவித்த கருத்தையொட்டி மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்தவர்கள், அந்தக் கட்சியைச் சார்ந்த தலைவர் இப்படிப் பேசியிருக்கிறார், அறிக்கை வந்திருக்கிறது, அந்தக் கட்சியினுடைய உறுப்பினர் என்ற முறையிலே இதை மறுக்கிறாரா அல்லது ஏற்றுக்கொள்கிறாரா என்பதைத் தெளிவாக இந்த அவைக்குத் தெரிவித்தாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்பு இருப்பது நகரத்தினுடைய அழகைக் குலைக்கின்ற அந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான ஒரு சட்ட முன்வடிவு, அதைப் பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் எதிர்க்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் கேட்பது, பிரபாகரன் போன்ற அன்னியச் சக்திகள், பிரிவினைச் சக்திகளை ஆதரிக்கின்ற விதத்திலே போஸ்டர்கள் அச்சடித்து ஒட்டினார்களே என்ற குற்றச்சாட்டை அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது நான் சுருக்கமாகக் கேட்பது அந்தப் போஸ்டர்களிலே மிச்சம் மீதி ஏதாவது வைத்திருக்கிறீர்களா? (சிரிப்பு) (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.



திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சாசனச் சட்டத்தை மதித்து உறுதி மொழிகள் எடுத்து அதன் அடிப்படையில் இந்தச் சபையில் அனைவரும் அமர்ந்திருக்கிறோம். அந்த அரசியல் சட்டத்தினுடைய அடிப்படையில் இந்தியப் பேரரசு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பேரரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்திருக்கின்றது. தடை செய்யப்பட்ட பின் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற ராமதாசை தலைமையாகக் கொண்டிருக்கிற பாட்டாளி மக்கள் கட்சி விடுதலைப் புலி இயக்கத்தை ஆதரிக்கின்ற வகையில் சமீபத்தில் நடத்திய ஊர்வலத்தில் இந்தத் தலைவருடைய ஆலோசனையின்படி பிரபாகரனை ஆதரிக்கின்ற கோஷங்கள் எழுதப்பட்டன. இந்தத் தலைவருடைய ஆலோசனையின் பேரில் சிவராசன், கொலையாளி தாணு ஆகியோர்களையும் பாராட்டிக் கோஷங்கள் எழுப்பியதோடு, போஸ்டர்களாசக் கையில் ஏந்தி, தட்டிகளை ஏந்தி அவர்களுடைய தொண்டர்கள் அவர்களுடைய ஆலோசனையின் பேரில் ஊர்வலத்தில் கொண்டு வந்திருக்கின்றார்கள். நாட்டில் பிரிவினை வாதத்தைத் தூண்டுகின்ற வகையில் "அகன்ற தமிழீழம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தி அவர்கள் உள்நோக்கில் கருதியது "தமிழகத்தை உள்ளடக்கிய அகன்ற தமிழீழம்" என்ற பெயரில் அவர்கள் பிரச்சாரம் செய்திருக்கின்றார்கள். தன்னாட்சி என்ற பெயரிலே சுய நிர்ணயம் என்ற பெயரிலே இங்கே பிரிவினை வாதத்தைத் தூண்டுகின்ற சட்டவிரோத நடவடிக்கைகளை— பிரிவினைவாதத்தை விலை கொடுத்து வாங்கி தமிழகத்தில் விதைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் அரசியல் சாசன சட்டத்தை மதிக்கின்றாரா? விடுதலைப் புலிகளின் இயக்கத்தை ஆதரிக்கவில்லை என்று அவர்கள் அவைக்கு உடனடியாக நேரடியாகத் தெரிவிக்க வேண்டும்.

முற்பகல் 10.35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள், இன்று கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திருத்தச் சட்டத்தை முழுவதுமாக எதிர்த்து இந்தத் திருத்தச் சட்டம் வேண்டாம் என்று சொல்லி அவர்கள் சில பல விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் பெரு மக்கள் பிறகும் வினாக்களை எழுப்பி இதற்கு என்ன விடை என்று கேட்கிறார்கள். அதையொட்டி பல்வேறு விவாதங்கள் நடைபெற்றன. இந்த வினாவைப் பொறுத்து

அவர்கள் ஒப்புக்கொண்டாலும் சரி, ஒப்புக்கொள்ளாவிட்டாலும் சரி, இந்த திருத்தச் சட்டம் எவ்வளவு அவசியம் என்பது இங்கே நடைபெற்ற விவாதங்களிலே இருந்தே தெரிந்துகொள்ளலாம். இந்த திருத்தச் சட்டம் கொண்டு வந்து தீர வேண்டும் என்பதும் சுவரொட்டிகளைத் தடுப்பதில் எவ்வளவு அவசியம் இருக்கிறது என்பதற்கான காரணங்கள் விவாதங்களிலேயே தென்பட்டன. இந்தக் காரணத்தினாலேயே நமக்கு ஓர் அளவுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டாலும் சரி, ஒப்புக் கொள்ளாவிட்டாலும் சரி இந்த திருத்தச் சட்டம் அவசியம் என்பது மட்டும் தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் அப்போதிருந்தே கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது, பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் ஒட்டப்பட்ட போஸ்டர்களுக்கு எல்லாம் பொறுப்பு ஏற்றுக்கொள்வதாகச் சொன்னார்கள். அந்த ஊர்வலம் இந்த மாதம் 12-ம் தேதி மாலை 5 மணிக்கு நடக்கின்றது. தேனாம்பேட்டை காவல் நிலையத்திற்கு எதிரிலே என்னுடைய கார் நிறுத்தப்பட்டது. நான்—என்னுடைய அலுவலகம், தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் இருக்கிறது—அங்கே நடந்து செல்கிறபோது அந்த ஊர்வலத்திலே முதலிலே வந்தவர்கள் விடுதலைப் புலிகளைப் போன்று உடையணிந்து வந்தார்கள். பிரபாகரன் கட்-அவுட்-ஐ அங்கே ஏந்தி வந்தார்கள். ஊர்வலத்திலே வந்தவர்களுடைய தலைகளிலே பிரபாகரனுடைய தலை அச்சடிக்கப்பட்டு போஸ்டரிலும் அடிக்கப்பட்டு நெற்றியிலேயும் ஒட்டிக்கொண்டு, ஆடிக்கொண்டு வந்தார்கள். அங்கே இருந்த, ஸ்டார் ஓட்டலிலே இருந்த மேடையிலே அந்த கட்சியினுடைய நிறுவனர் கையாட்டிக் கொண்டு இருந்தார். 10 அடி தூரத்திலே இருக்கின்ற காங்கிரஸ் மைதானத்திலே இருந்த கூட்டம் கற்களை எறிந்தது. சோடா பாட்டில் அடித்தார்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். காரணங்களை சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் 'போஸ்டர்' பற்றி சொல்வதுடன் நில்லுங்கள். அங்கே நடந்த வன்முறைகளுக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. அந்த போஸ்டர்கள் ஒட்டப்பட்டது என்பதற்காகச் சொல்கிறார்கள். அதோடு சரி. விடுங்கள்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வருகின்றபோது, காங்கிரஸ் கட்சியினுடைய, எஸ்.பி.பி. அலுவலகம் இருக்கின்றது. அதிலே வந்து நின்று



கொண்டு, "விட மாட்டோம், விட மாட்டோம்,"—ஒரு தரங்கெட்ட வார்த்தையை என்னால் சொல்ல முடியாது—"ஜெயலலிதாவை கொல்லாமல் விடமாட்டோம்"-ஒரு வாசகம், "விட மாட்டோம், விட மாட்டோம், வாழப்பாடியைக் கொல்லாமல் விட மாட்டோம்" 'தேசத் துரோகி ராஜீவ் காந்தி ஒழிக, வீரப் பெண்மணி தாணு வாழ்க, சிவராசன் வாழ்க" என்று கோஷமிட்டார்கள். அருகாமையில் இருந்த ஊழியர்களைப் பார்த்து, இப்படி நடக்கிறதே, நியாயம்தானா என்று கேட்கிறபோது, அவர்கள் சொன்னார்கள், "நீங்கள் யார் என்பது அவர்களுக்குத் தெரியும், அங்கே செல்லாதீர்கள்" என்று சொல்லி அங்கே என்னை நிறுத்தி வைத்து விட்டார்கள். அலுவலகத்தில் இருந்தவர்கள், அலுவலகத்தை மூடிவிட்டார்கள். இப்படி தரங்கெட்ட ஒரு ஊர்வலத்தை நடத்தி முதலமைச்சரையும், காங்கிரஸ் தலைவரையும் கொல்வோம் என்று அந்த ஊர்வலத்திலே கோஷம் இட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போஸ்டர் பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. போளூர் வரதன் : மன்னிக்கவும். இன்றைக்கு இந்திய நாட்டால், இந்திய அரசாங்கத்தால் 'ஹிட் லிஸ்ட்'-ல் உள்ளவர் என்று கருதப்பட்டு, பாதுகாப்பு நல்கப்பட்டுக் கொண்டு இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உயிர் இந்த நாட்டிற்குத் தேவை. எங்கள் அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் உயிரைப் பறித்த கூட்டத்திற்கு, இந்தக் கூட்டங்கள், இங்கே இன்றைக்குக் காவலாக இருந்து கொண்டிருக்கின்றன. இப்படி இருக்கின்ற இந்தக் கூட்டம், போஸ்டர் ஒட்டுவது ஏழையெளிய மக்கள், பாமர மக்கள் படிக்க வேண்டும், பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் இப்படி வந்தவர்கள் முதலமைச்சரையும், வாழப்பாடியையும் கொல்வோம் என்று சொல்லி விளம்பரப்படுத்திக்கொண்டு வருகிறார்களே, அதற்கு இந்த நாட்டிலே போஸ்டர் ஒட்டவேண்டுமா என்பதை பண்ருட்டி விளக்க வேண்டும்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது இந்த வால்போஸ்டருக்கும் பாட்டாளி மக்கள் கட்சிக்கும் சம்பந்தம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அரசிடத்திலே, பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய அந்த ஊர்வலத்திலே பிரபாகரன் படத்தை வைத்துக்கொண்டு, அதுபோல

சிவராஜன் படத்தை வைத்துக்கொண்டு சென்றதற்கான அத்
தனை ஆதாரங்களும் இருக்கின்றன. அதுபோல பல்வேறு
தடை செயயப்பட்ட இயக்கங்களின் ஈழத் தலைவர்களுடைய
புகழ் பாடிக்கொண்டு வந்தார்கள் என்பதற்கும் ஆதாரம் இருக்
கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாட்டாளி மக்கள்
கட்சியைத் தடை செய்வார்களோ என்ற ஐயத்தின் காரணமாக
இன்றைக்கு அவர்கள் அஞ்சுகிறார்கள் போல இருக்கிறது. ஆனால்
தன்னுடைய பதவியைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டுமென்ற
நிலையில்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டியார்
அவர்கள் இன்றைக்கு பாட்டாளி மக்கள் கட்சி
இதுபோன்ற வால்போஸ்டர்களை அடிக்கவில்லையென்று குறிப்
பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல சட்டத்தின் பிடி
யிலே சிக்கிவிடக்கூடாது என்ற அடிப்படையில் அவர் இப்படிப்
பேசுகிறார். ஆனால் அந்த ஊர்வலம் நடத்துகிறபோது இந்த
அரசைப் பயமுறுத்தவும், நம்முடைய தமிழகத்தினுடைய முதல்
வர் புரட்சித் தலைவி அவர்களைப் பயமுறுத்துவதற்காகவும்
அவர்களுடையப் உயிருக்கு பாதகம் ஏற்படுகின்ற வகையிலேயும்
பல்வேறு கோஷங்களை இட்டவர்கள் இன்றைக்கு இதுபோன்ற
கருத்துக்களைச் சொல்வது சரிதானா? உண்மையை ஏற்றுக்
கொள்ளாத......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். இதிலே
பிரச்சினை என்னவென்றால், வெளியே ஒரு தேச விரோதமான
காரியம் நடந்துகொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையில் மாண்புமிகு
உறுப்பினர் திரு. பண்ருட்டியார் அவர்கள் ஒரு பிரச்சினையை
எழுப்பி, அந்தப் பிரச்சினையில் வெளியிலே நடைபெற்றுக்
கொண்டிருக்கிற, பாட்டாளி மக்கள் கட்சி ஈடுபட்டிருக்கிறது
என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சுட்டிக்காட்டுகிற
பிரச்சினையும் வருகிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் நேரடியாக அதற்குப் பதில் சொல்வது நல்லது.

திரு. ச. இராமச்சந்திரன்: பாட்டாளி மக்கள் கட்சி அச்
சிட்டு வெளியிட்ட போஸ்டரில் உள்ள வாசகங்களுக்கு நான்
பொறுப்பேற்றுக்கொள்கிறேன். அதை முதலில் தெரிவித்துக்
கொள்கிறேன். (குறுக்கீடு) நான் முதலில் பேசிவிடுகிறேன்.
அதற்குப் பிறகு யார் வேண்டுமானாலும் என்ன விளக்கம்
வேண்டுமானாலும் கேட்கலாம். நானும் இருந்து அமைதியாக
விளக்கம் அளிக்க தயாராகத் இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை.
சிங்காரம் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும்
எழுப்பியதைத் தொடர்ந்து இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள்,
அமைச்சர்கள் மற்றும் அரசு தலைமை கொறடா எழுப்பி வைத்
திருக்கிற ஆதாரங்களின் அடிப்படையில் நீங்கள் முதலில் ஆரம்
பித்தது அந்த போஸ்டர்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தம்





இல்லை என்பது. ஆனால் அப்படி ஆரம்பித்தபோது சம்
பந்தம் இருக்கிறது என்று அவர்கள் அத்தனைபேரும் ஆதாரங்
களை எல்லாம் காட்டியிருக்கிறார்கள் (குறுக்கீடு) அதிலே
வந்த விவகாரம்தான் இது. அவர்கள் எழுப்பியபோது அந்த
போஸ்டர்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லையென்று
சொல்கிறீர்கள். சம்பந்தம் இருக்கிறது என்பதற்கு இவ்வளவு
ஆதாரம் இருக்கிறது என்று இவர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லி
யிருக்கிறார்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: நான் பேசி முடித்து
விடுகிறேன். அதற்குப் பிறகு விளக்கங்களைக் கேட்கலாம்.
நான் ஒரு வார்த்தை சொல்வதற்குள்ளே விளக்கம் கேட்க ஆரம்
பித்துவிட்டீர்கள் என்றால் நான் பேசமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரடியாகப் பிரச்சினைக்
குப் பதில் சொல்லிவிட்டால் முடிந்து விடுகிறது. அந்தப் பிரச்
சினைக்குப் பதில் சொல்லுங்கள். இவ்வளவுபேரும் உங்களிட
மிருந்து விளக்கம் கேட்க விரும்புவது ஒரே ஒரு பிரச்சினைக்குத்
தான். அதற்கு விளக்கம் கேட்கிறார்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: இலங்கைத் தமிழர்களைப்
பொறுத்தவரையில்......

Thiru POLUR VARADHAN: Ask him to come to the point
straight away.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விடுதலைப் புலிகளைப்
பற்றியது இந்தப் பிரச்சினை. இலங்கைத் தமிழர்களைப்
பற்றியது அல்ல பிரச்சினை. இலங்கைத் தமிழர்கள் என்று ஒரு
வார்த்தை கூட யாருமே இங்கே பேசவில்லை. இங்கே பேசிய
அத்தனை உறுப்பினர்களிலும் ஒருவர் கூட இலங்கைத் தமிழர்கள்
என்று குறிப்பிடவேயில்லை. விடுதலைப் புலிகள் ராஜீவ்
காந்தியினுடைய கொலையாளிகள் என்பதுதான் இங்கே விவா
தத்திலே இருந்தது.

திரு. ச. இராமச்சந்திரன்: இலங்கையில் நடக்கக்கூடிய
தமிழ் இனப் படுகொலையைத் தவிர்ப்பதற்கு............
(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பிரச்சினைகள்.
இலங்கைத் தமிழர்கள் என்பது ஒரு பிரச்சினை. விடுதலைப்
புலிகள் இராஜீவ் காந்தியினுடைய கொலையாளிகள் என்பது
இன்னொரு பிரச்சினை. இப்பொழுது இரண்டாவது பிரச்சினை
தான் விவாதத்திலே இருக்கிறது. நீங்கள் முதல் பிரச்சினைக்குப்
போகிறீர்கள். (குறுக்கீடு) நானே சொல்லிவிட்டேன். மாண்புமிகு
வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10.45

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பதில் சொல்ல விரும்பவில்லை. தெளிவாக ஒன்றை அவர்கள் இந்த அவையிலே குறிப்பிட வேண்டும். தமிழர்கள் வாழ்வுரிமை மாநாட்டு ஊர்வலத்திலே இவ்வளவு பிரச்சினைகளும் நடந்திருக்கின்றன. அந்த மாநாடு பாட்டாளி மக்கள் கட்சியினரால் நடத்தப்பட்டது. அந்த ஊர்வலம் பாட்டாளி மக்கள் கட்சியினரால் நடத்தப்பட்டிருக்கிறது. அந்வத சுவரொட்டிகளில் பாட்டாளி மக்கள் கட்சி என்று அச்சிடாமல், அதாவது அவர்கள் பெயரை வெளியிடாமல், அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே, அந்த தைரியத்திலே பாட்டாளி மக்கள் கட்சியால் அச்சடிக்கப்பட்டிருந்தால் பொறுப்பு ஏற்கிறேன் என்று சொல்லுகிறார்கள். இந்த மாநாடு அவர்களால் நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் அந்தச் சுவரொட்டிகள் எடுத்து வரப்பட்டன. அவை ஒட்டப்பட்டிருந்தன. இப்படிப்பட்ட தேச விரோத ஸ்லோகங்கள் வெளியிடப்பட்டிருந்தன. அதைத் தொண்டர்கள் செய்தாலும், கட்சி செய்தாலும் தலைவர்கள் அதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் இங்கே தன்னுடைய விவாதத்தைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள். இலங்கைத் தமிழர்கள் பற்றி இங்கே பேச வேண்டிய அவசியமில்லை. திரு. ராஜீவ் காந்தி அவர்களைக் கொலை செய்த விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறார்களா, இல்லயா என்பதைத் திட்டவட்டமாக அவர்கள் சொல்ல வேண்டுமே ஒழிய இலங்கைக்குப் போகக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானே அதைத்தான் நேரடியாகக் கேட்டேன். இதிலே 2 பிரச்சினைகள் இங்கே எழுப்பப்பட்டன. 2-வது பிரச்சினை பற்றிய விவாதம். (குறுக்கீடுகள்) அவர் பேசட்டும், உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் அடிக்கடி இடையூறு செய்ய வேண்டாம். அவர் பேசட்டும்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய அரசு தடை செய்ததை நாங்கள் ஏற்கவில்லை. அந்தத் தடை கூடாது என்று இந்திய அரசினுடைய நடுவர் மன்றத்தின் முன்பு நாங்கள்



வழக்குத் தொடுத்துள்ளோம். அதே நேரத்தில் முன்னாள் பிரதமர் இராஜிவ் காந்தி அவர்கள் கொலையில் விடுதலைப் புலிகள் குற்றம் இழைத்திருக்கிறார்கள் என்று, இந்த மண்ணில் இழைத்த குற்றத்திற்காக எந்த நடவடிக்கையை அரசு எடுத்தாலும் அதைப் பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொல்லி முடிக்கட்டும். அவர் ஆதரிக்கின்றாரா, இல்லையா என்பதற்கு வருவார். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் is a proclaimed offender but not a proved criminal குற்றம் சாட்டப்பட்டவரே தவிர, குற்றவாளி அல்ல. அதுதான் எங்களுடைய நிலை. ஆகையினால் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரையில் அதுதான் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிலை..... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர். (குறுக்கீடு) அமைச்சர்கள் நிற்கிறார்கள். திரு. சத்தியமூர்த்தி, உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். பேசி இருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர்கள் உட்காருங்கள். அவர் பேசட்டும்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையில் எங்களுக்கு எந்தத் தண்டனை வந்தாலும் நாங்கள் ஏற்கத் தயார். ஆகையால் எம்.எல்.ஏ. பதவி, பாட்டாளி மக்கள் கட்சிப் பதவி என்பதல்ல. நாங்கள் சரி என்று நினைப்பதைச் சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி என்று எதைச் சொல்கிறீர்கள்? அதைத்தான் கேட்கிறார்கள், (குறுக்கீடு).

திரு. ச. இராமச்சந்திரன்: அதைத்தான் சொல்கிறேன்,— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2, 3 அமைச்சர்கள் எழுந்து நிற்கக் கூடாது; உட்காருங்கள் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

முற்பகல் 10.50

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு உறுப்பினர் பன்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள், ராஜிவ்காந்தி

கொலை செய்யப்பட்டது சரியென்று சொல்கிறாரா? (குறுக்கீடுகள்) மக்களுடைய ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கேட்டது நேரடியான கேள்வி. இராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதை சரியென்று உறுப்பினர் சொல்கிறாரா என்று கேட்டால், நிரூபிக்கப்படவில்லை என்று சொன்னால், எப்படி நிரூபிக்கப்பட வேண்டும்? Rajiv Gandhi has been murdered. It is a proved fact. That need not be proved again. சட்டத்தின் இண்டு இடுக்குகளில் நுழைந்து தப்பித்து கொள்ளலாம் என்று நினைக்கிறாரே தவிர, சதிக் குற்றம் சாட்டப்பட்டு பிரபாகரனும் அதில் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார். போதிய முகாந்திரம் இருக்கிற காரணத்தால்தான் he has been proclaimed as an offender. It is not without any evidence. There is sufficient evidence. The Court has accepted that there is sufficient evidence.
போதிய முகாந்திரம் இருக்கிறது. போதிய தடயம் இருக்கிறது. போதிய சாட்சியம் இருக்கிறது. அவர்கள் கொலை செய்வதற்காகப் பயன்படுத்திய முறை, விதம், அத்தனையும் விடுதலைப் புலிகளால் செய்யப்பட்டதுதான். பிரபாகரன் தூண்டுதலின் பேரில், பிரபாகரன் சொல்லிய காரணத்தால்தான் பொட்டு அம்மன் அனுப்பிய நபர்கள் சிவராசன், தாணு ஆகிய அத்தனை பேரும் ஒன்று சேர்ந்துதான் இந்தக்கொலையைச் செய்திருக்கிறார்கள். அதை உலகமே இன்றைய தினம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவர் இன்னும் குற்றவாளி என்று நிரூபிக்கப்படவில்லை என்று. சட்டத்தின் இண்டு இடுக்குகளில் நுழைந்து தப்பிக்க நினைப்பது சரியல்ல. சிவராசனைப் பாராட்டி அங்கே கோஷம் போடலாமா? தாணுவைப் பாராட்டி அங்கே போஸ்டர் போடலாமா? பிரபாகரனை ஆதரித்து இங்கே இயக்கம் நடத்தலாமா? The movement has been banned. He is trying to say. Here he has not said that word. But what he has said outside is அது இன்னும் கன்பர்ம் ஆகவில்லை, அதை இன்னும் டிரிபியூனல் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்கிறார். The Order clearly says 'subject to confirmation' But till the tribunal gives a decision, the order is in effect. It is a banned organisation. The organisation has been banned in India. The organisation has been banned throughout India—in Tamil Nadu also: The banned organisation— தடை செய்யப்பட்ட இயக்கத்தை நீங்கள் ஆதரித்து இங்கே இயக்கம் நடத்துவதை எந்த அரசாங்கமும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்றுக்கொள்ளக் கூடாது. கடுமையான நடவடிக்கை



எடுக்க வேண்டும். நீங்கள் எங்கெங்கோ ஆதரவு திரட்டிக் கொண்டிருக்கிறீர்கள். தவறான இடங்களில் எல்லாம் ஆதரவைத் திரட்டிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்காக பிறப்பிக்கப்பட்டிருக்கின்ற உத்தரவைப் பற்றிப் பேசினால், ஒருவேளை சபாநாயகர் ஏற்றுக்கொள்கிறாரா இல்லையா என்று தெரியவில்லை. (குறுக்கீடு) அதைப் பற்றி வேண்டுமானாலும் பேசுகிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் இங்கே 'devious arguments—ஐ எடுத்து வைத்திருக்கிறார். அவருடைய வாதம் என்னவென்றால் Prabhakaran has been declared as a proclaimed Offender. But the trial has not yet taken place and it has not yet been proved that Prabhakaran is a criminal'....

பிரபாகரன் குற்றவாளி என்று வழக்கு நடைபெற்று இன்னும் நிரூபிக்கப்படவில்லை என்று அவர் சொல்கிறார். ஒரு வாதத்திற்காக அதை ஒரு புறம் வைத்தாலும், மரியாதைக்குரிய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்டது எப்படி? தாணு என்ற பெண் தனது உடலில் இணைத்திருந்த 'பெல்ட் பாம்-ஐ இயக்கி அதன் மூலம்தான் அவர் உடல் சுக்கு நூறாகச் சிதறி போனது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மை. அதை பண்ருட்டி ராமச்சந்திரனாலும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட தாணு தான் நேரடியாக ராஜீவ்காந்தியின் கொலைக்கு காரணமானவள் என்று அனைவருக்கும் தெரிந்த போதும் அந்த தாணுவின் படத்தை, பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய ஊர்வலத்தில் அவர்கள் சுமந்து சென்றார்களா இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத்தாணுவின் படம் போடப்பட்ட தலைப்பாகையை ஊர்வலத்தில் சென்றவர்கள் தலையில் அணிந்து சென்றார்களா, இல்லையா? அந்தக் கொலைகாரி தாணு வாழ்க என்று அவர்கள் நடத்திய ஊர்வலத்தில் கோஷங்கள் எழுப்பினார்களா, இல்லையா? அதற்கு பண்ருட்டி ராமச்சந்திரன் என்ன பதில் சொல்கிறார்? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் நேரடியாகக் கேட்கிறார்கள். அதற்குப் பதில் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது நேரடியாகவே மூன்று கேள்விகளைக் கேட்டி

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

ருக்கிறார்கள். அதற்கு அவர் பதில் சொல்லாமல் இருக்க முடியாது. ஆகவே அவர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) அவர் பதில் சொல்ல அனுமதியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சிங்காரம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்). மாண்புமிகு நிதி அமைச்சர்.

முற்பகல் 10.55

மாண்புமிகு டாக்டர் இரா: நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில கேள்விகளைக் கேட்டு இருக்கிறார்கள். அதற்கு என்ன பதில் சொல்கிறார் என்று கவனிக்க வேண்டுமே தவிர மறுபடியும் ஒவ்வொருவரும் பேசிக்கொண்டு இருந்தால் சரியாகாது அவர் பேசட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது தெளிவாகக் கேட்டதற்கு மட்டும் நீங்கள் விடை அளித்தால் போதும்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுப்பிய பிரச்சினை, முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் எவ்வாறு கொலை செய்யப்பட்டார், எப்படி என்பதெல்லாம் நீதி மன்றத்தின் முன்னாலே இருக்கிறது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் கேட்டது, கண்ணுக்கு நேரே இருந்த குற்றவாளி தாணு என்கிறவர் பற்றி. அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் கேட்டார்; அதை மறுக்கிறீர்களா ?

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் பேசியதானாலும் மாண்புமிகு முதலமைச்சர் பேசியதானாலும்— அவ்வளவும் நீதி மன்றத்தின் முன்னாலே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை, கண்ணுக்கு நேரே இருந்த தாணு என்ற பெண்ணைப் பற்றிக் கேட்கிறார்கள். (குறுக்கீடுகள்) இது இந்தியா முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் (குறுக்கீடுகள்) இப்போது நீங்கள் பேசுவதைப் பார்த்தால், தாணுவுக்கே நீங்கள் வக்காலத்து வாங்குகிறீர்கள் என்று அமைந்துவிடும். தாணுவும் நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னர்தான் கொலையாளி என்று முடிவு செய்யப்பட வேண்டியவர் என்று நீங்கள் சொல்வதைப் போல் அமைகிறது; அந்த தாணுவுக்கே வக்காலத்து வாங்குவதுபோல் அமைகிறது.



திருமதி ரமணி நல்லதம்பி : தாணுவுக்கும் அவருக்கும் என்ன உறவு ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு பிரச்சினைபற்றி எழுப்பினார்கள். மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் பதில் சொல்கின்றபோது இது வழக்கிலே இருக்கிறது. அது தீர்ப்பு வந்ததற்குப் பிறகுதான் முடிவு ஏற்படும் என்று சொல்கிறார். ஆனால், இப்போது இன்றைய நிலையில் அவர் விடுதலைப்புலி இயக்கத்தை ஆதரிக்கிறாரா ? இன்றைய நிலையில் தாணுவை ஆதரிக்கிறாரா ? (குறுக்கீடுகள்) நாளைக்கு வருவது இருக்கட்டும். சிவராசனை ஆதரிக்கிறாரா ? பிரபாகரனை ஆதரிக்கிறாரா? என்பதற்கு மட்டும் பதில் கொடுத்தால் போதும்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப்புலிகள் இயக்கத்தை நாங்கள் முழு மனதோடு, இலங்கையில் அவர்கள் ஆற்றுகின்ற டனிக்காக ஆதரிக்கிறோம். ஆதரிக்கிறோம். (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே அவர்கள் செய்த, (குறுக்கீடுகள்) இங்கே அவர்கள் எத்தகைய குற்றத்தில் (குறுக்கீடுகள்) இங்கே எத்தகைய குற்றத்தில் அவர்கள் ஈடுபட்டு இருந்தாலும் இந்த மண்ணிலே உள்ள சட்டங்களின்படி எடுக்கின்ற நடவடிக்கையையும் நாங்கள் ஆதரிக்கின்றோம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடவடிக்கைகளை, நீங்கள் எல்லாம் நாளைக்கு தீர்ப்பு வருகிறபோது ஆதரிக்கிறோம் என்பதற்கு அர்த்தமே இல்லை. இன்றைய நிலையில் தாணுவை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ? உங்களுடைய ஊர்வலத்தில் அந்தப் படத்தைக்கொண்டு சென்றது தவறா ? இல்லையா என்பதுதான் மாண்புமிகு முதலமைச்சருடைய கேள்வி. (குறுக்கீடுகள்.) அப்புறம் பேசுங்கள். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேரடியாகவே மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்களிடத்திலே ஒரு விவரத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு சட்டப்படி எல்.டி.டி.ஈ. தடை செய்யப்பட்ட இயக்கம். ஆனால், அவர் ஒரு புதிய விளக்கத்தைச் சொல்லி, டிரிபியூனலிலே நாங்கள் அப்பீல் செய்து

இருக்கிறோம்; அது வருகிறவரையில் எங்களுக்கு தேச விரோத நடவடிக்கையிலே ஈடுபட உரிமை உண்டு: எல்.டி.டி.ஈ.-யை ஆதரிக்க எங்களுக்கு உரிமை உண்டு என்றெல்லாம் வாதிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு எல்.டி.டி.ஈ. இயக்கம் பேன்' செய்யப்பட்டது. அன்-லாபுல் ஆக்ட்டிவிடீஸ் பிரிவென்ஷன் ஆக்ட், 1967-1967-வது ஆண்டு சட்ட விரோத நடவடிக்கையினுடைய சட்டத்தின்படி தான் மத்திய அரசு இந்தியா முழுவதும் எல்.டி.டி.ஈ. என்ற அராஜக இயக்கத்தைத் தடை செய்து இருக்கிறது. அதில் மூன்றாவது செக்ஷன்— அதில் proviso

"Provided the Central Government is of the opinion that circumstances exist which render it necessary for the Government to declare an association to be unlawful with immidiate effect, it may, for reasons to be stated in writing, direct that he notification shall, subject to any order that may be made under section 4, have effect from the date of its publication in the Official Gazette" என்று மத்திய அரசு உள்துறை என்றைக்கு கெஜட்டில்வெளியிடுகிறதோ அன்றிலிருந்தே இது அமலுக்கு வந்து விட்டது. எல்.டி.டி.ஈ. என்பது—It is an unlawful organisation, என்று சொல்லி, அது சம்பந்தமாக பேசுபவர்களோ, அதற்கு உதவுபவர்களோ, அதற்கு உற்சாகம் ஊட்டுபவர்களோ அத்தனை பேரும் anti-nationlas தேச துரோகிகள்.

முற்பகல் 11.00

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: ஒரே ஒரு கிளாரிபிகேஷன்.

The LTTE itself has not challenged that order. It has been set ex-parte by the Tribunal.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொல்லட்டும். நேரிடையான சில கேள்விகளை அவரிடம் கேட்டிருக்கிறார்கள். அதற்குப் பதில் சொல்லவில்லை. புதுப்புது விவாதமாகப் போய்க் கொண்டிருக்கக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இரண்டு பேரும் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி விட்டார். (குறுக்கீடு)

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைச் செய்யலாம். அதற்கான காரணங்களை தெரிவித்து கைது செய்யலாம். அதாவது கவர்ன்மெண்டிற்கு அந்த அதிகாரம் இருக்கிறது. நான் இல்லையென்று சொல்லவில்லை.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, என்ன காரணம் என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் ஏராளமான காரணங்களைச் சொன்னார்கள். இந்த வாரம் 'அசைட்' என்ற பத்திரிகை வந்திருக்கிறது. அந்தப் பத்திரிகையில் மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி அவர்கள் ஒரு பக்கம், இந்த நாடு பிரிய வேண்டும்— எப்படி பாகிஸ்தான் பிரிந்ததோ, அதைப்போல இன்னும் ஒரு பாகிஸ்தானாக விரைவில் தமிழகம் பிரிய வேண்டும் என்பதற்கு அவர்கள் Moving with the times காலத்தோடு தமிழகம் சென்று கொண்டிருக்கிறதாம். "Follow global trend Says Panruty" இது 'அசைட்' என்ற பத்திரிக்கையில் வந்திருப்பது. பிரிவினையைக் கேட்கிறார். தனித் தமிழ் நாடு கேட்கிறார். பாகிஸ்தானைப் போல கேட்கிறார். இவைகளை எல்லாம் கேட்டுவிட்டுத்தான் இன்றைக்கு இந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமை, இந்திய தேசியம் என்றால் இதற்கு என்ன பதில் சொல்கிறார்? 'அசைட்' இந்த வாரப் பத்திரிகையைப் படியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரிடையாக பதில் சொல்லுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, right to self-determination is aninternational phenomenon அதைத்தான் கால ஓட்டம் என்று சொல்லி இருக்கிறேன். அதிலே என்ன தவறு? தனித் தமிழ்நாடு எங்கே கேட்டிருக்கிறோம் அதிலே?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரும் நானும் 40 ஆண்டுகளாக திராவிட இயக்கத்திலே இருப்பவர்கள். அவருடைய அசைவு எனக்குத் தெரியும். என்னுடைய அசைவு அவருக்குத் தெரியும். நாங்கள் எல்லாம் தி.மு.க.வில் இருக்கிறபோது..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு எங்கெங்கோ போக வேண்டாம். நேரிடையாக இரண்டு கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அவரிடமிருந்து அதற்குப் பதில் வரட்டும்.

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்தை வேறு எங்கெங்கோ கொண்டு செல்ல வேண்டாம். (குறுக்கீடு) இல்லை, விவாதம் வேறு எங்கெங்கோ போய்க் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தி.மு.க. தலைவர் அன்றைக்கு ‘ ஸ்டேட் அட்டானமி ’ என்று சொல்லி, பிரவினையை வற்புறுத்தினார். இன்றைக்கு பண்ருட்டி ‘ செல்ப் டிட்டர்மினேஷன் ’ என்று சொல்லி பிரிவினையை—பழைய கள், புதிய மொந்தை. old wine in new bottle அதைத்தான், அந்த துரோகச் செயலைத்தான் இவர் செய்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருக்கிற பிரச்சினை மாண்புமிகு முதல்வர் கேட்ட இரண்டு கேள்விகள் (குறுக்கீடு) மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் உட்காருங்கள் இது பிரச்சினை அல்ல. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் கேட்டது தான் பிரச்சினை. (குறுக்கீடு) ‘ அசைட் ’ பத்திரிகை விவாதங்களுக்கு பதில் சொல்ல வேண்டாம். கேட்டதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களைத் திருத்த முடியாது. (சிரிப்பு) திருத்துகிற வேலையைச் செய்ய முடியாது (குறுக்கீடுகள்) திருத்துகிற முயற்சியில் ஈடுபட்டால் இந்த சட்டசபையை நான்கு மாதக் காலத்திற்கு நீடித்துக் கொண்டு இருக்க வேண்டியது தான். ஆகவே, இப்போது ஒன்று மட்டும் அவர்கள் மூலமாகப் பெறப்பட்டது. அவர் பேசவில்லை. பெறப்பட்டது என்னவென்றால் இன்றைய நிலையில் அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிக்கிறார்கள். அவர்களுடைய செயல்கள் அத்தனையையும் ஆதரிக்கிறார்கள். வழக்கு மன்றத்தினுடைய தீர்ப்பு வருகிற காலம் வரையிலும் ஆதரிப்பார்கள். ஆதரித்துக் கொண்டே இருப்பார்கள். அதற்கு என்ன தண்டனை வந்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். அதைச் சந்திக்கவும் தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டார்கள். அவர்களுடைய நிலை விளக்கப்பட்டுவிட்டது. பெறப்பட்டு விட்டது. மேலே போவதுதான் நல்லது. (குறுக்கீடு).

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவை உங்களிடமிருந்து தெரிய விரும்புவது, முதலமைச்சர் அவர்கள் கேட்ட அந்த 2, 3, கேள்விகளுக்கு உரிய பதில். அதற்கு நேரடியாகப் பதில் சொல்லி , உங்களுடைய விவாதத்தைத் தொடரலாம்.





திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில், பாட்டாளி மக்கள் கட்சி மட்டுமல்லாமல் பல்வேறு இயக்கங்களும் கலந்து கொண்டன. ஒரு குறிப்பிட்ட ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரடியாகச் சொல்லுங்கள், திரு. வி. பி. சிங் அவர்களும் வந்தார்கள் என்று. (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : என்னைப் பேசவே விடவில்லை (குறுக்கீடு). பல்வேறு இயக்கங்களும் கலந்து கொண்டன. (குறுக்கீடுகள்), சரி, வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் தேச பக்தர்கள், நாங்கள் தேசத்துரோகிள், அதனால் என்ன ? (குறுக்கீடு) நீங்கள் தேச பக்தர்களாகவே இருங்கள். (குறுக்கீடுகள்). ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அவர்களையோ அல்லது மற்றவர்களையோ ஆதரித்து கோஷம் எழுப்ப வேண்டுமென்றோ, அல்லது அவருடைய உருவப்படத்தைக் கொண்டு வரவேண்டும் என்றோ (குறுக்கீடு) பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் அறிக்கை வெளியிடப்படவில்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அறிக்கை விட்டீர்களா, இல்லையா என்று கேட்கவில்லை. கொண்டு வந்தார்களா இல்லையா, அதை ஆதரிக்கிறீர்களா, இல்லையா என்று கேட்டார்கள். கொண்டு வந்தார்கள் என்பதுதான் இங்கே இருக்கிற பிரச்சினை. (குறுக்கீடு

திரு. ச. இராமச்சந்திரன் : நான் பேசி விடுகிறேன். இன்று தமிழ்நாட்டில் பல இயக்கங்கள் இருக்கின்றன. குறிப்பாக கர்நாடகத்திலே ..... —

திரு. துரை ராமசாமி : கேட்ட கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: கர்நாடகத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களும் கலந்து கொண்டார்கள். ஆகவே ஒரு சிலர் அத்தகைய செயல்களைச் செய்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஊர்வலத்திலே நடந்ததைப்பற்றிக் கேட்டால், நீங்கள் கர்நாடகத் தமிழர்களை இழுத்துக்கொண்டு இருந்தால், அங்கே எல்லாம் போய்

விசாரித்துக் கொண்டு இருக்க முடியாது. (குறுக்கீடு). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது நேரடியாகக் கேட்டது ராஜீவ் காந்தி கொலையில் நேரடியாக ஈடுபட்ட தாணுவின் உருவப்படத்தை ஏந்தி வந்ததும், அந்த தாணுவை இயக்கிய பிரபாகரன் படத்தைத் தாங்கி வந்ததும், அவர்களுக்கு ஆதர வாக போஸ்டர் போட்டு கோஷம் எழுப்பியதும், நியாயம்தானா என்றுதான் கேட்டார். (குறுக்கீடு). அதற்கு நேரடியாக உங்களுடைய பதில் இருந்தால் நன்றாக இருக்கும். நான் அப்போதிருந்து, மற்ற உறுப்பினர்களை எல்லாம் அமரச் சொல்லி கொண்டிருப்பதும், இதற்குத்தான், நேரடியாக உங்களிடமிருந்து பதில் வந்துவிட்டால், வேறு விவாதத்திற்கு போய் விடலாம்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நாங்கள் ஆதரிக்கவில்லை. அதே நேரத் தில் குற்றவாளிகள் என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட வேண்டுமே தவிர, வேறு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ.ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது, இதுதான். உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் இலங்கையில் உள்ள தமிழர்களுக்காக விடுதலைப் புலிகள் இயக்கத்தை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்கிறார். இந்தியாவில், அவர்கள் என்ன குற்றம் செய்திருந்தாலும், அதற்கு அவர் களுக்கு எந்த தண்டனை அளிக்கப்பட்டாலும், அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்கிறார். அதே நேரத்தில், அவர்கள் என்ன சொல்கிறார், பிரபாகரன், மறைந்த பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் கொலையிலே சம்பந்தப்பட்டார் என்பது இன்னும் நிரூபிக்கப்படவில்லை. அதற்கு இன்னும் ட்ரையல் நடைபெறவில்லை என்று அவர் சொல்கிறார். ஆனால் நான் கேட்ட கேள்வி? பிரபாகரன் இதில் சம்பந்தப்பட்டு இருக்கிறாரா, இல்லையா? பொட்டு அம்மன் இதில் சம்பந்தப் பட்டு இருக்கிறாரா, இல்லையா ? அதெல்லாம் நீதிமன்றத்தின் முன்பு, ட்ரையல் நடைபெறும்போது நிரூபிக்கப்படட்டும், ஆனால்..ஊரும் உலகமும், ஏன் இந்த பண்ருட்டி இராமச் சந்திரனும் அறிந்த அளவு, எல்லோருக்கும் தெரிந்த உண்மை. கொலைகாரி தாணுதான் நேரடியாக இராஜீவ் காந்தி அவர் களின் கொலைக்குக் காரணமாக இருந்தவள் யாராலும் மறுக்கப்படமுடியாத உண்மை. அந்தத் தாணு, இடுப்பில் அணிந்திருந்த பெல்ட்பாம் தான் இராஜீவ் காந்தி அவர்களின் கோரமான படுகொலைக்குக் காரணம். அந்தத் தாணு விடுதலைப் புலிகள் இயக்கத்தில், ஒரு





உறுப்பினராக இருந்தாள் என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் ஏற்கனவே வெளிவந்துவிட்டன. ஆகவே, நேரடியாக இராஜீவ் காந்தி அவர்களைக் கொலை செய்த தாணு, விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவள்தான் என்பது திட்ட வட்டமாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. அப்படிபட்ட நிலையில் இவர்களுடைய கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய ஒரு ஊர்வலத்தில், இவர்களுடைய தலைவர்கள் அந்த மேடையில் நின்று கொண்டு அந்தப் பேரணியைப்பார் வையிட்டு, பேரணியில் வந்தவர்களைப் பார்த்து, கையசைத்து ரசித்துக் கொண்டிருந்த நேரத்தில்,ராஜீவ் காந்தி அவர்களின் கொலைக்குக் காரணமாக இருந்த தாணுவின் படங்களை அந்த ஊர்வலத்தில் ஏந்தி வந்தார்களா, இல்லையா? அந்த தாணுவின் படம் போட்ட தலைப்பாகையைத் தலையில் அணிந்துக் கொண் டிருந்தார்களா, இல்லையா? அந்த கொலைகாரி, தாணு வாழ்க என்று ஊர்வலத்தில் வந்தவர்கள் கோஷங்கள் எழுப்பினார்களா, இல்லையா? இதை எல்லாம் பார்த்துக் கொண்டு, இவருடைய கட்சியின் தலைவரும் மற்றவர்களும் அந்த மேடையில் நின்று அந்த ஊர்வலத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்களா இல்லையா? அப்படி அந்த நடவடிக்கைகள் இவர்களுக்கு ஏற்பு டையது அல்ல என்றால், அங்கேயே ஏன் தடுக்கவில்லை? தாணு வின் படங்களை ஏந்தி வந்தவர்களை ஏன் இவர்களேபிடித்துக் காவலர்களிடம் ஒப்படைக்கவில்லை? அப்படிப்பட்ட கோஷங் களை எழுப்பியவர்களை இவர்களே ஏன் பிடித்து காவல்துறை யினரிடம் ஒப்படைக்கவில்லை? அதையெல்லாம் பார்த்து, ரசித்துக் கொண்டுதானே இருந்தார்கள். அதற்கு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களின் விளக்கம் என்ன? அவருடைய கட்சி யின் கொள்கை என்ன? ராஜீவ் காந்தி அவர்களின் கொலைக்கு நேரடியாகக் காரணமாக இருந்த தாணுவை இவர்கள் ஆதரிக் கிறார்களா, இல்லையா? அப்படியென்றால் ராஜிவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டது நியாயம் என்று அவர்கள் சொல்கிறார்களா? அதை இவர் விளக்க வேண்டும் .

முற்பகல் 11.10

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, தாணுவின் படத்தைக் கொண்டு வந்ததை நாங்கள் ஆதரிக்கவில்லை. அது பற்றி எனக்குத் தெரியாது. அதுதான் உண்மை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொண்டு வந்தார்கள், அதற்குரிய ஆதாரத்தை இங்கே வைத்திருக்கிறார்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : நான் என்ன பண்ணமுடியும்? எனக்கு தெரியாததைப் பற்றி நான் சொல்ல முடியாது. எனக்குத் தெரிந்ததற்கு மட்டும்தான் நான் பதில் சொல்லமுடி யும் எனக்கு தெரியாததற்கு நான் பதில் சொல்ல முடியாது.

ஆனால் ஒரு இயக்கத்தை ஆதரிப்பதோ, எதிர்ப்பதோ, அதனுடைய செயலை வைத்துத்தான் நாங்கள் மேற்கொள்கிறோமே தவிர, வேறு அல்ல. விடுதலைப் புலிகளின் இயக்கமானாலும் சரி, அல்லது வேறு இயக்கமானாலும் சரி, அவர்கள் தவறு இழைத்தால் அல்லது குற்றம் இழைத்தால், கண்டிப்பாக நாங்கள் எதிர்க்கிறோம். ஆனால் ஆதேநேரத்தில் அவர்களால் ஒரு நல்ல காரியம் நடக்கிறது. என்றால், அதை நாங்கள் ஏற்போம். வரவேற்கத் தயாராக இருப்போம் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாணபுமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே 8, 9, 10 ஆண்டுகாலத்திலே கொல்லப்பட்ட தமிழர்களில் மிகப் பெரும்பான்மையான தமிழர்கள் சிங்கள இராணுவம் கொன்றதைவிட இந்த விடுதலைப் புலிகளால்தான் கொல்லப்பட்டருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அது அமிர்தலிங்கமாக இருந்தாலும் சரி சாம் தம்பி முத்துவாக இருந்தாலும் சரி, ஆலால சுந்தரமாக இருந்தாலும் சரி, அது யாராக இருந்தாலும் கொன்றவர்கள் இந்த விடுதலைப் புலிகள்தான். இன்றும் இந்த விடுதலைப் புலிகள் தான் தமிழர்களுக்கு அங்கே ஆபத்தாக, கொலைகாரர்களாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இவர்கள் இருந்தால்தான் பாதுகாப்பு என்பது சொத்தையான வாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்றை மட்டும் நான் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களிடத்தில் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதையொட்டி, இந்திய அரசாங்கம் விடுதலைப் புலிகளின் இயக்கத்தை தடை செய்துவிட்டது. தடை செய்த பின்னால் இந்திய துணைக் கண்டத்திற்குள்ளே எந்த மூலையிலே இருந்து கொண்டும் நாம் இலங்கையில் அவர்களை ஆதரிக்கிறோம் என்று கூட சொல்ல முடியாது. நீங்கள் வேண்டுமானால் இலங்கைக்குக் குடியேறி நீங்கள் ஆதரிக்கலாம். அதை யாரும் கேட்க முடியாது ஆனால் இந்தியத் துணைக் கண்டத்திற்குள்ளே இருந்து கொண்டு, இலங்கையில் நடக்கின்ற அந்த நடவடிக்கைகளை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்லி, அதற்காக வக்காலத்து வாங்குவதோ, அதற்காக எந்தக் காரியங்களைச் செய்வதோ, தடைக்கு உரிய ஒன்று அது அத்து மீறிய ஒன்று. அந்தத்தடையை மீறுவதாகத்தான் கருதப்படுமே தவிர தமிழகத்தில் இருந்து கொண்டு நீங்கள் அதைச் சொல்ல முடியாது. ஆனால் இலங்



கைக்குப் போய் நீங்கள் சொல்லலாம். அதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் இங்கே இருந்து கொண்டு சொல்ல முடியாது. அதைச் சொல்கிறீர்களா? இங்கே இருந்துகொண்டு, அவர்களை ஆதரிக்கிறீர்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இலங்கையிலே இருந்து வந்த ஒரு உறுப்பினர் இங்கே இருக்கிறார். நடேசன் பால்ராஜ் அவர்கள் அப்போதிருந்தே கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறார்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலுள்ள தமிழர்களுக்காகவே பாடுபடுகிறேன் என்று நம்முடைய மதிப்பிற்குரிய பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் சொல்கிறார்கள். ஒன்றை மட்டும் விளக்கமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1949-லே இலங்கை அரசியல் சட்டத்தை அமைக்கும்போது அங்குள்ள தமிழர்கள்தான் இதை வைத்தார்கள். அதற்கு முன்பு தமிழர்கள் என்றுதான் இருந்தது. இவர்கள் அரசியல் சட்டத்தை வகுத்த பிறகு இந்தியத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள் என்று பிரிக்கப்பட்டு, வஞ்சகமாக ஏறத்தாழ 15 இலட்சம் குடும்பத்தினரை யாழ்பாணத் தமிழர்களை அனுப்பினார்கள். யாழ்ப்பாண தமிழர்களை அனுப்பியது மட்டும் அல்ல, இங்கே உள்ள தமிழர்களையும் படுகொலை செய்யச் சொல்லுகிறார்கள். தமிழர்கள் தான் தமிழர்களைப் படுகொலை செய்கிறார்கள். இங்கு உள்ள ஒரு இயக்கம் அரசியல் தலைவர்களையெல்லாம் கொன்று விட வேண்டும் என்று கட்டளை இட்டு, லிஸ்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கொலைகாரக் கும்பல்களுக்கு இவர்கள் ஏஜெண்டாக இருக்கிறார்கள் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி உட்காருங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர் 'நீயுமா புருட்டஸ்' என்று ஒரு நாடகத்தில் சொன்னார். அதற்கு முன்னாலே இன்றைய தினம் இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களை சட்டப் பேரவையில் அமைச்சராக்கி அழகு பார்த்தவர். டெல்லியில் இருந்தபோதும் 'நீயுமா புருட்டஸ்' என்று கேட்கிற நிலை இருக்கிறது. புரட்சித் தலைவர் காலத்திலே கூட..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது இருக்கிற பிரச்சினை வேறு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஸ்பெசிபிக்காக

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1992 செப்டம்பர் 25

2, 3 கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு அவரிடமிருந்து பதில் கேட்போம். உட்காருங்கள். திரு. பண்ருட்டி ராமச்சந்திரன். அதாவது முதல்வருடைய கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லி விவாதத்தை ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். அல்லது அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகளுக்கு உங்களால் பதில் சொல்ல முடியவில்லை என்றுதான் பொருள்படும்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய கொடுமைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற வகையிலே தான் நாங்கள் அந்த மாநாட்டிலே எல்லோரும் சேர்ந்து ஒரு தீர்மானமே போட்டோம். அந்தத் தீர்மானத்திலே கூட....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எது கொடுமை? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதா கொடுமை? அவர்கள் நேரிடையாக சில கொடுமைகளைச் சொல்லி அந்தக் கொடுமைகளைச் செய்பவர்களை ஆதரிக்கிறீர்களா என்று கேட்டார்கள். அதற்குப் பதில் சொல்லாமல் இப்படிப்பட்ட கொடுமைகளுக்கு எல்லாம் தான் தீர்மானம் போட்டோம் என்று சொல்வது எப்படிச் சரியாகும்? கேட்டதற்கு நேரிடையாகப் பதில் வந்தால் நாம் மேற்கொண்டு விவாதத்திற்கு போகலாம்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அந்தக்கொலை குற்றத்திலே குற்றம் சுமத்தப்பட்ட தாணுவை ஆதரிக்கவில்லை. அதிலே அவரது படத்தை கொண்டுவந்தார்களா என்பதை பற்றிப் என் நெஞ்சார சொல்கிறேன். நான் பார்க்கவில்லை. மற்றவர்களைப் பற்றி நான் சொல்ல முடியாது. (குறுக்கீடு) என்னை பேசவிட்டால் தானே. ஊர்வலம் செல்லுகிற போது பாட்டாளி மக்கள் கட்சி மட்டுமல்லாமல் பல்வேறு இயக்கங்களும் மற்ற கட்சிகளும் கூட கலந்து கொண்டார்கள். அவர்கள் கொண்டு வந்திருக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொண்டு வந்ததே தெரியாது என்று சொல்லிவிட்டு, கொண்டு வந்திருக்கலாம் என்று இப்போது கூறுகிறீர்களே.

திரு. ச. இராமச்சந்திரன் : மாநாட்டில் நாங்கள் போட்டிருக்கிற தீர்மானத்தில்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானத்தைப் பற்றி இப்போது இங்கு விவாதமே வரவில்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.



[1992 செப்டம்பர் 25

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அழைத்திருக்கிற அரசியல் கட்சிகள், இயக்கங்கள் அனைத்துமே பகிரங்கமாக விடுதலைப்புலிகளை ஆதரிக்கிறோம் என்று சொன்னார்கள். விடுதலை குயில்கள், நெடுமாறன் போன்ற அத்தனை பேரும் பகிரங்கமாக விடுதலைப் புலிகளையும் பிரபாகரனையும் ஆதரிக்கிறோம் என்று இங்கே பேசிக் கொண்டிருப்பவர்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு நேரம் திருப்பித் திருப்பி கேட்டாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பதில் சொல்ல மாட்டார்கள். முதலமைச்சருடைய நேரிடையான கேள்விக்கு பதில் வராது. மௌனமே அவர் குற்றவாளி என்று ஒத்துக் கொண்டதாக எடுத்துக் கொள்ளவேண்டும். மௌனம் சம்மதம் என்று அர்த்தம் எடுத்துக்கொள்ள வேண்டும். எத்தனையோ தீர்மானம் போடலாம். நாளைக்கு ஆட்டோ சங்கரைப் பற்றி மேடையில் பேசுவார்கள். கேட்டால் நாங்கள் ஆட்டோ சங்கரைப் பற்றி சாதகமாக தீர்மானம் போடவில்லை என்று சொல்வது போல இருக்கிறது. இந்த நிகழ்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் அந்த ஊர்வலத்தை நான் பார்க்கவில்லை, அதிலே அது போன்ற படங்கள் எல்லாம் கொண்டு வந்ததை நான் பார்க்கவில்லை என்று சொல்கிறார். மறுநாள் காலையிலே அத்தனை பத்திரிக்கையிலேயும் வந்திருக்கிறது. இதுவரையில் ஏதாவது மறுப்பு அறிக்கை அந்தக் கட்சியின் சார்பிலோ அல்லது உறுப்பினரின் சார்பிலோ வெளியிட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல எங்களைப் பொறுத்தவரையில் இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்புக்கு ஒரு ஏற்பாடு வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாங்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரிக்கிறோம். (குறுக்கீடு).

தலைவர் அவர்களே, இரண்டு சென்டன்ஸ் பேசவிட்டால் தானே? விடுதலைப் புலிகள் இயக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, பத்மநாபா கொலை நடந்த பிறகும் கூட அவர்களை விட்டால் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு ஆபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எங்கோ சுற்றி வளைத்துக் கொண்டே போகக்கூடாது.

திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை, போகவில்லை சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரடியாகப் பதில் கேட்டார். அவர்கள் கேட்டது தா ணுவைப் பற்றி நேரடியாகக் கேட்டது ; அதற்கு நீங்கள் பதிலே சொல்லவில்லையே. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். அங்கே இருக்கின்ற தமிழர்களுக்கு சிங்களவர்களைக் காட்டிலும், சிங்களவர் ரா ணுவத்தைக் காட்டிலும் விடுதலைப் புலிகள் தான் ஆபத்தானவர்கள், விடுதலைப் புலிகள் தான் நிறைய தமிழர்களைக் கொலை செய்து இருக்கிறார்கள் என்பதை நான் சொல்வதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள் நாரதகான சபாவிலே நடைபெற்ற கூட்டத்திலே, அவரே சொல்லியிருக்கிறார். எனவே விடுதலைப் புலிகளை யாரும் ஆதரிக்கக்கூடாது. விடுதலைப் புலிகளை இந்த நாட்டை விட்டே விரட்ட வேண்டும் என்று முதன்முதலிலே குரல் எழுப்பியவர் இந்த இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : அப்போது நம்முடைய இந்திய இராணுவம் அங்கே பாதுகாப்பாக இருந்தது. ஆனால் இன்றைக்கு அங்கு பாதுகாப்பு இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பத்மநாபா கொலை வழக்கு நடந்த பிறகு இதே விடுதலைப் புலிகள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் நேரடியாக ஒரு கேள்வியைக் கேட்டால் நீங்கள் இப்போது, வேறு பிரச்சினைக்குப் போவது சரியல்ல.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது, விடுதலைப் புலிகள் இயக்கத்தை அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆதரித்தது. இல்லை என்று மறுக்கவில்லை. அதே போல புரட்சித்தலைவர் மறைவுக்குப் பிறகு சில காலம் நாங்களும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்தோம். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் பத்மநாபாவும் அவரது சகாக்களும் கொலை செய்யப்பட்டபோது பகிரங்கமாக நான் அதற்குக் கண்டனம் தெரிவித்தேன் அதை யாரும் மறந்திருக்க முடியாது பத்திரிகைகளிலேயே ஆதாரம் இருக்கிறது. அதற்குப்பின்னால் விடுதலைப்புலிகள் இயக்கம் மறைந்த பிரதமர் இராஜீவ் காந்தி



அவர்களைப் படுகொலை செய்து விட்டார்கள் என்பதை அறிந்த பிறகு, அவர்கள் தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்த பிறகு, தமிழகத்தையே இந்தியாவிலிருந்து துண்டாட அவர்கள் சதி செய்கிறார்கள் என்பதை அறிந்த பிறகு, நான் விடுதலைப் புலிகள் இயக்கத்தை எதிர்க்கத் தொடங்கினேன். அன்று முதல் இன்று வரை என்னுடைய கொள்கையில் மாற்றம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபா கொலை நடந்தபிறகுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டால் இலங்கைத் தமிழர்களுக்கு என்ன பாதுகாப்பு என்று கேட்டார்கள். நாங்களும் இப்போது கேட்பது அதுதான் அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தை எல்லோரும் சேர்ந்து சுத்தமாக ஒழித்து விடுவோம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குப் பிறகு இராஜீவ் காந்தி கொலை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது சொன்னது அதுதான். நீங்கள் அந்த ஒரு பகுதியை மட்டும் வைத்துக்கொண்டே பேசக்கூடாது. இராஜீவ் காந்தியினுடைய படுகொலைக்குப் பின்னர் அவர்களுடைய தேசவிரோத நடவடிக்கைகளை எல்லாம் அறிந்து நான் இப்போது வெளியிட்ட அந்த கருத்துக்குப் பிறகு எத்தகைய மாற்றமும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை . நீங்கள் விவாதத்தை எங்கெங்கோ கொண்டு போனால் இப்போது நான் விவாதத்தை இத்தோடு முடிக்க வேண்டி வரும். நீங்கள் நேரடியாகப் பதில் சொன்னால் விவாதம் இருக்கலாம். (குறுக்கீடுகள்).

திரு. ச. இராமச்சந்திரன் : அடுத்த முறை அந்த இலங்கைத் தமிழர்களுக்கு என்ன பாதுகாப்பு?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபா கொலை வழக்கைப் பொறுத்தவரை அதையும் ராஜீவ் காந்தி கொலையையும் ஒன்றாகச்சேர்க்கிறாரா? அது அவர்களுக்குள்ளே இருந்த பிரச்சினை. இரண்டு குரூப்பாக இருந்தார்கள், அவர்களுக்குள்ளே இருந்த பிரச்சினை. எனவே அதிலே நாம் தலையிட முடியாது. அதற்கு கண்டனம் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நம்முடைய நாட்டிலே இருக்கின்ற ஒரு தலைவரை கொன்று பின்னாலே நம்முடைய நாட்டைத் துண்டாட முயற்சி எடுத்த பின்னாலே அந்த இயக்கத்தை புரட்சித் தலைவி அவர்கள் எதிர்த்தார்கள். தடை செய்ய வேண்டுமென்று கருதினார்கள். இன்றைக்கு மத்திய அர

சாங்கம் தடை செய்திருக்கிறது. எனவே இன்றைய நிலையிலே நீங்கள் ஆதரிக்கிறீர்கள். இந்திய அரசியல் சட்டத்தையே நீங்கள் மீறுகிறீர்கள் என்று தான் நாங்கள் சொல்கிறோம். எனவே மீறுவது உண்மையா, இல்லையா என்பதுதான் எங்களுடைய கேள்வி.

திரு. ச. இராமச்சந்திரன் : நாம், இந்தியாவில் உள்ள அத்தனை பேரும் சேர்ந்து நம்முடைய முப்படையைக் கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்து விடுவோம், அதற்குப் பிறகு அங்கே உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு யார் பாதுகாப்பு ? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அவர் நேரடியாக விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறேன் என்று சொல்லி விட்டார். அதற்குக் காரண காரிய விளக்கம் ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இங்கே இருக்கின்ற தமிழர்களுக்கு யார் பதில் சொல்வது? (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே இருக்கின்ற தமிழர்களுக்கும், இங்கே இருக்கின்ற தலைவர்களுக்கும் . . . .

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களைப் பற்றி அவர் பேசிக் கொண்டிருக்கிறார். இங்கேயிருக்கின்ற தமிழர்களைப் பற்றி யார் பேசுவது? (குறுக்கீடுகள்.)

திரு. ச. இராமச்சந்திரன் : கர்நாடக தமிழர்கள் விஷயத்தில் (குறுக்கீடுகள்) * *

முற்பகல் 11.25.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அப்படி எல்லாம் பேசாதீர்கள் * * என்று சொல்லுவது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அப்படி நீங்கள் பேசுவது சரியல்ல. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். இது சரியல்ல, நேரடியாகப் பேசுவது சரியல்ல, ஆத்திரப்படுகிறீர்கள் (குறுக்கீடு) நேரடியாகப் பேசுவது சரியல்ல, உட்காருங்கள் (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைவாழ் தமிழர்கள் என்ற முறையில் அவர்களுக்கு முழு பாதுகாப்பும், வாழும் உரிமையும் மற்ற உரிமையும் தர வேண்டும் என்பதில் இந்தியாவில் உள்ள அவ்வளவு மக்களும் தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை பேரும் சரி என்றைக்கும் மாறுபடவில்லை நாம் மறுப்பது எல் லாம் விடுதலைப் புலிகளுடைய போக்கைத்தான், அவர்களுடைய நடவடிக்கைகளை எதிர்க்கிறோம், தவிர என்றைக்கும் இலங்கைவாழ் தமிழர்களுக்கு என்னென்ன வசதிகள் தேவைப்படுகின்றனவோ அவை களை நாம் தருகிறோம். அங்கிருந்து அவர்கள் வந்தால் யார் ஆதரிப் பார்கள் என்கிறார்கள். நாம் அத்தனை பேரும் சேர்ந்து ஆத ரித்துக்கொண்டே இருப்போம். இன்றைக்கும் ஆதரித்துக் கொண்டு இருக்கிறோம். நாம் எதிர்ப்பது விடுதலைப் புலி களை. போராளிகள் 8 குழுவினர் இருக்கிறார்கள் மற்ற குழு வினரைப் பற்றி கவலையில்லை. 8 குழுவினரில் விடுதலைப் புலிகள் ஒரு குழுவினர். அவர்களுடைய செயல்கள் கண்டிக்கத் தக்கவை, ஏற்றுக்கொள்ளத் தக்கவை அல்ல என்ற முறையில் அவர்களை எதிர்க்கிறோமே தவிர இலங்கைவாழ் தமிழர்களுக்கு எந்த எந்த வகையில் எந்த முறையில் சட்டப்படி ஒரு அன்னிய நாட்டில்இருக்கின்றவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியுமோ அந்த முறையில் மத்திய அரசு இன்றைக்கும் அளித்துக் கொண்டிருக்கிறது, அதிலே கவலை கொண்டிருக்கிறது, அவர்களுக்கு முழு ஆதரவும் மாநில அரசு தந்து கொண்டிருக்கிறது. [குறுக்கீடு]

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இன் றைக்கு அந்த இலங்கைத் தமிழ் மக்களிடையே வேறு எந்த இயக்கமும் இல்லை. (குறுக்கீடு) அதுதான் உண்மையான நிலைமை. ஆகவே நீங்கள் இருக்கிறவர்களை எல்லாம் தீர்த்துவிட்டால் குளோஸ். நேராக சிங்கள அரசு எல்லோரையும் குளோஸ் செய்துவிட்டு இலங்கை முழுவதையும் எடுத் துக்கொண்டு போகப் போகிறார்கள். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அவர்கள் எல்லோ ரையும் இவர்கள் தான் குளோஸ் செய்தார்கள். (குறுக்கீடு)

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இல்லை இல்லை ; முதலமைச்சர் கேள்விக்கு இன்னும் பதில் சொல்ல வில்லை ; தாணு பற்றிச் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். தாணுவைப் பற்றியோ, சிவராசனைப் பற்றியோ நாங்கள் ஆதரிக்கவில்லை. ஆனால்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1992 செப்டம்பர் 25

இந்த நாட்டில் (குறுக்கீடு) அதுவே நீதிமன்றத்தால் நிரூபிக்
கப்படவேண்டும். பாண்டியம்மாள் கொலை வழக்கில் என்ன
ஆயிற்று ? கொலை செய்யப்பட்ட பாண்டியம்மாள் நேராக
வருகிறார். ஆகவே (குறுக்கீடு) அது அல்ல (குறுக்கீடு-
கூச்சல்-குழப்பம்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பாண்டியம்மாள்
கொலை வழக்கையும், இராஜீவ் காந்தி கொலையையும் நீங்கள்
இணைத்துப் பேசுவது என்பது மன்னிக்க முடியாத குற்றம்
என்பதை மட்டும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) தயவுசெய்து உட்
காருங்கள், நீங்கள் பாண்டியம்மாள் கொலையையும், இராஜீவ்
காந்தி கொலையையும் ஒன்று என்று பேசினால் என்ன
அர்த்தம் ? தயவுசெய்து அது மன்னிக்க முடியாத குற்றம்
(குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு நேரம் நடந்த
பல்வேறு உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினைகள்; கொடுத்த
விளக்கங்கள் மற்றைய தன்மைகள். அதற்கு மாண்புமிகு உறுப்
பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் சொன்னது
எல்லாவற்றையும் பார்க்கின்றபோது நமக்கு மிக தெளிவாக
பாட்டாளி மக்கள் கட்சியின் போக்கு, தெரிந்து விட்டது ;
பண்ருட்டி இராமச்சந்திரன் போக்கும் தெரிந்து விட்டது. ஆகவே,
அந்த வகையில் நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்
கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க நாம் வற்புறுத்தி
கொண்டிருக்கிறோம். ஆக இந்தப் பிரச்சினையை இனிமேல்
நீட்டித்துக் கொண்டு போவதில் எந்த பலனும் ஏற்படப் போவது
இல்லை. அடுத்தவர் இருந்தால் பேசட்டும்; இல்லாவிட்டால்
நான் பதில் சொல்லுகிறேன். (குறுக்கீடு.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முத
லமைச்சர் அவர்கள் நேரடியாகக் கேட்டதற்குப் பின்னாலும்
உங்களிடமிருந்து அதற்கு நேரடியான பதில் இல்லை. உங்க
ளுடைய பேச்சிலிருந்து நீங்கள் ஆதரிக்கிறீர்கள்; இராஜீவ்
காந்தி கொலையாளிகளை நீங்கள் ஆதரிக்கிறீர்கள்; இந்த
நாட்டைத் துண்டாட விரும்புகிற எல்.டி.டி—யினரை நீங்கள்
ஆதரிக்கிறீர்கள்; அதற்கான காரண காரிய விளக்கங்கள்
எல்லாம் இப்போது தேவையில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவர்.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> தலைவர் அவர்களே,
ராஜீவ் காந்தி கொல்லப்பட்டாரா; இல்லையா ? என்பதே
ரூபிக்கப்படவேண்டிய ஒன்று என்று சொல்லுகிறார். அது
என்ன முறை ? (குறுக்கீடு).



1992 செப்டம்பர் 25]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> எனவே இதற்கு நேரடி
யாக உங்களிடமிருந்து பதில் வராத காரணத்தால் இந்தப்
பிரச்சினை இத்தோடு இருக்கட்டும். அடுத்து திரு. ஜி. பழனி
சாமி நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) வேறு எங்கோ போகி
றீர்கள். உங்களிடம் நேரடியாகக் கேட்டதற்கு உங்களிட
மிருந்து பதில் வரமாட்டேன் என்கிறது. (குறுக்கீடு) நீங்கள்
இறுதியாகத் தெரிவித்த கருத்துக்குப் பிறகு மேற்கொண்டு
இந்த கருத்தை இந்த அவையில் எப்படி அனுமதிக்க முடியும்.
இராஜீவ் காந்தி கொலையைப் பற்றிப் பேசுகின்றபோது நீங்கள்
அதை இங்கே ஒரு சாதாரண பாண்டியம்மாள் என்பவர் கொலை
செய்யப்பட்டு, பின் வந்து விட்டார் என்பதோடு ஒப்பிட்டுப் பேசிக்
கொண்டு இருந்தால் அதை எப்படி அனுமதிக்க முடியும்?
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

பிற்பகல் 11-30.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
இராமச்சந்திரன் அவர்களையும், மற்றவர்களையும் (குறுக்கீடு)
நேற்றைய தினம் உயர்நீதிமன்றம் விடுதலை செய்திருக்கிறது
அந்தத் தீர்ப்பில் இருக்கின்ற விவரங்களையெல்லாம் மாண்பு
மிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இந்த
அரசும் அதிலே ஒன்றுகிறது. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்
இராமச்சந்திரன் அவர்களையும் மற்றவர்களையும், தேச
விரோத கருத்துக் ளையெல்லாம் உயர்நீதிமன்றம் கணக்கில்
எடுத்துக்கொள்ளாமல் தீர்ப்பு அளித்திருக்கின்ற காரணத்
தினாலே இந்த வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச்
செல்ல தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. அங்கு நிச்சய
மாக நீதி கிடைக்கும் என்று மனதார நம்புகிறோம். (குறுக்கீடு.)

<u>மாண்புமிகு பேரவைத்</u> தலைவர் : அடுத்து திரு.
ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) திரு. இராமச்சந்திரன் நீங்கள் உட்
காருங்கள். அதாவது 10-10-க்கு ஆரம்பித்து இப்போது 11-30
மணி. 1 மணி 20 நிமிடம் ஆகிறது. (குறுக்கீடு) நீங்கள் அந்தக்
கருத்தைப் பற்றிப்பேசினீர்கள். அதற்குமேலே உங்களிடத்திலே
யிருந்து எந்தப் பதிலும் பெற முடியாமல், இந்த அவையில் சில
தேச விரோத கும்பலுக்கு வக்காலத்து வாங்குவதற்கு இன்னும்
விவாதத்தை நீட்டிக் கொண்டு போக நான் விரும்பவில்லை.
(குறுக்கீடு) தயவு செய்து உட்காருங்கள். அடுத்து, திரு. ஜி.
பழனிசாமி. (குறுக்கீடு) இல்லை. நீங்கள் உட்காருங்கள்.
ஒரு மணி 20 நிமிடம் ஆகிறது. (குறுக்கீடு) உங்களிடத்திலே
யிருந்து "நான் அதை ஆதரிக்கிறேன்" என்கிற பதிலை வாங்கு
வதற்கு ஒரு மணி 20 நிமிடம் ஆகிறது. கடைசியாக நீங்கள்
சொல்லி விட்டீர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.
இதிலே மேற்கொண்டு பேசுவதற்கு எதுவும் இல்லை. உட்

காருங்கள். அடுத்து, திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) இதிலே வேண்டாம். திரு. ஜி. பழனிசாமி பேசுங்கள். மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்களும் உட்காருங்கள் நீங்கள் பேசி முடித்து, திரு. பழனிசாமியைப் பேச அழைத்தாகி விட்டது. நீங்கள் இந்த பில்லை எதிர்க்கிறேன், காரணம் தாணுவுக்கும் பிரபாகரனுக்கும் நான் போஸ்டர் ஒட்ட வேண்டும், அதற்காக எதிர்க்கிறேன் என்று சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். அடுத்து திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) உங்களுடைய வாதம் அதுவாகத்தான் இருக்கிறது. (குறுக்கீடு) விவாதம் ஆரம்பித்தவுடன் திரு. ஆர். சிங்காரமும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நேரடியாகக் கேட்டது. இதிலே போஸ்டர்களெல்லாம் ஒட்டுவதற்குத்தானே இதை எதிர்க்கிறீர்கள் என்று கேட்டார்கள். கடைசியாக உங்களிடத்திலே இருந்து வந்த விளக்கம், தாணுவுக்கும், பிரபாகரனுக்கும் நான் சென்னை நகரத்திலேயும் மற்ற பெரிய நகரங்களிலேயும் போஸ்டர் ஒட்ட வேண்டும்; அதற்கு அந்தச் சட்டம் தடை செய்கிறது. எனவே எதிர்க்கிறேன் என்று பேசி முடித்து விட்டீர்கள். உட்காருங்கள். அடுத்து, திரு. ஜி. பழனிசாமி, (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி பேசுங்கள். மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் உட்கார வேண்டும். (குறுக்கீடு) உங்கள் ஒருவருக்காக $1\frac{1}{2}$ மணி நேரம் செலவழிக்க முடியாது. (குறுக்கீடு) நான் சொன்னதைப் போல, தேசத்துரோகக் காரியங்களுக்காக வக்காலத்து வாங்க செலவழிக்க முடியாது. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) கடைசியாக நான் வழங்கியிருக்கிற தீர்ப்பு இதுதான். தேசத்துரோகக் குற்றங்களுக்கு வக்காலத்து வாங்குவதற்கு இந்த அவையின் நேரத்தை இதற்கு மேலும் நீட்டிக்க முடியாது. திரு. ஜி. பழனிசாமி, நீங்கள் பேசுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராமச்சந்திரன் நீங்கள் உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி பேசிக்கொண்டு இருக்கிறார். (குறுக்கீடு) திரு. பழனிசாமி பேசுவதற்கு குறுக்கிடாதீர்கள். திரு. பழனிசாமி பேசுங்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். இது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. திரு. ஜி. பழனிசாமி, ஏதாவது பேசினால் அவைக் குறிப்பிலே ஏறும். திரு. ஜி. பழனிசாமி பேசலாம். (குறுக்கீடு) அது வேறு. அது அரசாங்கத்தின் சார்பில் ஒரு அறிவிப்பு. (குறுக்கீடு) இதிலே எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. எல்லோரும் உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி பேசுங்கள்.





திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் 1992-ஆம் ஆண்டு திறந்தவெளி இடங்களில் அழகைக் கெடுக்கிற தடுப்புச் சட்டதின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் முன்னுக்கு வருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோ. காளன்.

முற்பகல் 11-35

திரு. கோ. காளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் உள்ள தமிழர்களுக்காக வாதாடுகின்ற இயக்கம் எதுவும் இல்லை என்று அவர் சொல்கிறார். தோட்டத் தொழிலாளர் நலனுக்காக காங்கிரஸ்தான் அங்கேயிருந்து தமிழர்களுக்காக குரல் கொடுத்து வருகிறது. இப்படிப்பட்ட கயவர்கள் இருப்பது நல்லதல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காளன், உட்காருங்கள். அவர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் ஆத்திரப்படுவதைப் பார்த்தால் பழனிசாமியைப் பார்த்து ஆத்திரப்படுவதைப் போல இருக்கிறது, உட்காருங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : தனியார் இடங்களில் அல்லது பொது இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டுவதைத் தடை செய்கின்ற சட்டம் தமிழக அரசால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தின் மூலமாகப் பல்வேறு விவரங்கள் இந்த சட்டமுன்வடிவிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக வாகனப் போக்குவரத்து அதிலே ஓட்டுனர்கள்—தங்களுடைய கவனத்தை திசை திருப்புகின்ற, அதன் மூலமாக ஏற்படுகின்ற விபத்துக்கள், இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கண்ணைக் கூசக் கூடிய விளம்பர போர்டுகள், கண்ணை மறைக்கின்ற போர்டுகள். அஃத போன்று இன்றைக்கு இருக்கக்கூடிய ஆபாசமான போஸ்டர்கள் எல்லாம் இன்றைக்கு ஓட்டுநர்களுடைய கவனத்தைத் திசை திருப்புகிறது; ஆகையால் இது அழகைக் கெடுக்கிறது, திறந்தவெளி அழகைக் கெடுக்கிறது என்று சொல்லி, சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த மட்டில், இது ஒரு சாத்தியமில்லாத சட்டம், இது நடைமுறையில் அமல்படுத்த முடியாத சட்டம். இதுபோன்ற பல்வேறு சட்டங்களை, தேவையற்ற சட்டங்களை இயற்றினால் நாட்டு மக்களுக்கும், ஓட்டுநர்களுக்கும், மற்றவர்களுக்கும் இது நன்மை அளிக்கக்கூடிய சட்டமாக அமையாது. ஏனென்றால் ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டு இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள் நாட்டிலே தன்னுடைய கட்சிகளினுடைய தீர்மானங்களை, கோரிக்கைகளை ஒரு ஜனநாயகபூர்வமாக, சுதந்திரம் பெற்ற பின்னால் மத்தியிலேயும், மாநிலத்திலேயும் இருக்கிற

அரசியல் கட்சிகள் இன்றைக்கு ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற, அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டி ருக்கிற கட்சிகள், இதுவரையிலும் இல்லாத வகையிலே ஒரு சட்டத்தைத் தமிழ்நாட்டிலே இயற்ற வேண்டாம் என்பதைத்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சொல்கி றோம். இன்றைக்குத் தேர்தலாக இருந்தாலும் சரி அல்லது பொதுக்கூட்டமாக இருந்தாலும் சரி, இன்னும் பல்வேறு இயக்கங்கள் நடத்த வேண்டுமென்று சொன்னாலும் இதுபோன்ற சுவரொட்டிகள் மூலமாகத்தான் விளம்பரப் படுத்தப்படுகின்றன.

இன்றைக்கு இந்த சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தபட்ட பின்னாலும்கூட தமிழகத்தில் பல்வேறு இடங்களில் சுவரொட் டிகள் ஒட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இதைக் கட்டுப்படுத்த முடியாது. இன்னமும் கூடச் சாலை வளைவு கள் இருக்கின்றன. மிகப்பெரிய விளம்பர போர்டுகள் அரசு மூலமாகப் பெரிய தொழிற்சாலையினுடைய நிறுவனம் மூலமாக இன்றைக்கு கட்-அவுட்கள் பல்வேறு இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால் சாலை ஓரங்களில் சாலை ஓரப் பூங்கா என்ற பெயரால் மரங்கள் வளர்க்கப்பட்டு இருக்கின்றன. எதிரே வருகின்ற வாகனங்கள் தெரியாமல் இருக்கின்றன. ஹாரன் அடிக்க முடியாமல் பஸ்களும் லாரிகளும் மோதுகின்ற,விபத்து நடக்கின்ற இடங்களைப் பார்க்கின்றோம். அப்படி என்று சொன்னால் மரங்களையெல்லாம் வெட்டித் தீர்க்கப் போகிறோமா? இன்னும் தமிழ்நாட்டிலே எங்கே எடுத்துக் கொண்டாலும் பல்வேறு வளைவுகளில் கோயில்கள் கட்டப் பட்டிருக்கிறது, எதிரே வருகிற வாகனங்கள் தெரியவில்லை. போகிற வாகனங்களுக்குத் தெரியவில்லை. டிரைவருடைய முகங்களைப் பார்க்க முடியவில்லை. ஒலி எழுப்பிச் செல்ல முடியவில்லை. அப்படியென்று சொன்னால்,அந்தக் கோயிலை நாம் இடிக்கப்போகிறோமா இந்தச் சட்டத்தின் மூலமாக என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் பின்னாடி விளக்கம் அளிப்பார் என்று நான் நம்புகிறேன். ஆகவே, அதைப் போன்ற (குறுக்கீடு) எல்லாம் போஸ்டர்தான். அதிலே வருகிறது இது. இதுவும் வருகிறது. சட்ட முன்வடிவிலே வருகிறது. படியுங்கள். ஆகையால் இதையெல்லாம் கொண்டுவருகிறபொழுது (குறுக்கீடு) திசை திருப்பி விடாதீர்கள். இது ஒரு தேவை யில்லாத சட்டம். ஆக, இந்தச் சட்டத்தை நான் ஆதரிக்க வில்லை, எதிர்க்கிறேன். ஆகையால்தான் இன்றைக்குச் சட்டத்தின் மூலமாக முதலிலே இன்றைக்கு இருக்கிற ஆளுங்கட்சியாக இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதை நடைமுறைப்படுத்துவதற்கு நீங்களே ஒத்துக் கொள்ள முடியாத அளவிலே இன்றைய தினத்தில் நடை பெறும். காரணம் நான் இன்றைக்குச் சொல்கிறேன். இன்றைக்கு நம்முடைய அமைச்சர் பெருமக்கள் வருகிறார்



கள். சில ஊர்களில் சில கட்டிடங்கள் திறக்கப்படு
கின்றன. அரசு நலத்திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன
என்று சொன்னால் யார் மூலமாக எப்படித் தெரிவிக்கப்
போகிறீர்கள்? ஆக, ஏழை எளிய மக்கள், கிராமப்புற
மக்கள், அதேபோன்ற, படிக்காத மக்கள் அத்தனை
பேரும் இன்றைக்கு இருக்கிற பத்திரிக்கைகளைப் படித்துக்
கொண்டு இன்றைக்கு என்ன நடக்கிறது என்று தெரியப் போகி
றார்களா? பார்க்க முடியாது. இதையெல்லாம் சிந்தித்துப்
பார்க்க வேண்டும் பொதுவாக, இதுபோன்று..............
(குறுக்கீடு).

முற்பகல் 11-40.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழி லாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, போஸ்டர்களே ஒட்டக்கூடாது
என்று எந்தச் சட்டமும் கொண்டுவரவில்லை. மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் அதைப்படித்துவிட்டுப் பேசினால் நன்றாக
இருக்கும். குறிப்பிட்ட இடங்களில்தான் அதைப் பற்றி
சொல்கிறோமே தவிர, போஸ்டரே ஒட்டக் கூடாது என்று
சொல்லவில்லை............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா அமைச்சர்களும் எழுந்திருக்க வேண்டாம்; நேரம் ஆகிறது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : நேற்றே என்
னுடைய பதிலை நான் ஒழுங்காகச் சொல்ல முடியவில்லை,
திரு. பீட்டர் அல்போன்ஸ் கேட்டதற்கு. அது பாதிதான்
பேப்பரிலே வந்திருக்கிறது. எனவே எனக்குப் பேச
சந்தர்ப்பம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, சட்டங்களை நடைமுறைப்
படுத்தும்போது இதற்கு எல்லாம் ஒரு முன்னுதாரணம்
இல்லை என்று சொன்னார்கள். நம்முடைய மேம்
பாலத்தைப் பார்த்தாலே தெரியும். நெடுஞ்சாலைத்
துறையின் மூலம் இன்றைக்கு அந்த சட்டமுன்வடிவு வந்த
வுடனேயே அதை அமல்படுத்தியிருக்கின்றோம். அதை
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்த்தாலே தெரியும். சட்டங்
களைக் கொண்டு வருகிறபோது. நடைமுறைப்படுத்துகிற
போது, சில பிரச்சினைகள் இருக்கின்றன. இதை முழு

வதுமாக இந்த அரசு நிறைவேற்றுகிறபோதுதான் அதனுடைய பலனை எதிர்பார்க்க முடியும். அதற்கு உதாரணமாக நம்முடைய மவுண்ட் ரோடிலே இருக்கிற மேம்பாலத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நானும் மாநகராட்சி, நகராட்சியைத் தான் சொல்கிறேன். இங்கேயும் கிராமப்புறங்கள் இருக்கின்றன. ஏழை, எளிய மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல திட்டங்களை நாம் அறிவித்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாநகராட்சியிலேதான் இது வரும். கிராமப்புறங்களுக்கு எங்கே போகப் போகிறது?

திரு. ஜி. பழனிசாமி : அதிலேயும் சில குடிசைப்பகுதிகள் இருக்கின்றன. மாநகராட்சியிலும் சில குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. ஆகையால், இந்த போஸ்டர் ஒட்டுகிற சட்டம் என்பது, சுவரொட்டி ஒட்டுகிற சட்டம் எனபது தமிழ்நாட்டிற்கு சாத்தியமற்ற ஒரு சட்டம்; அது தேவை யற்றது; அதை நடைமுறைப்படுத்த முடியாது. ஆகவே, இதை நான் எதிர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரிதி இளம்வழுதி.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்குக் கிடைத்திருக்கிற வாய்ப்பிற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டங்கள் போடாமல் எந்த அரசாங்கமும் நடத்த முடியாது. சட்டம் போடுகிற காரணத்தினாலே அது அரசாங்கம் ஆகிவிடாது. (சிரிப்பு) அதாவது, உங்களுடைய சிரிப்பலையிலே நான் சொன்னதை நீங்கள் மறந்துவிடக்கூடாது என்பதற்காக மீண்டும் சொல்கிறேன். சட்டம் போடாமல் எந்த அரசாங்கத்தையும் நடத்த முடியாது. சட்டம் போடுகிற காரணத்தினாலேயே அது அரசாங்கம் ஆகிவிடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி அரசாங்கம்தான் சட்டம் போட முடியுமே தவிர, ஆர்த்தம் இல்லாமல் நீங்கள் விவாதத்தை ஆரம்பிக்கக் கூடாது.



திரு. இளம்வழுதி : இவ்வளவு நேரம் சொன்னேனே, அதைவிட இது பரவாயில்லை, இந்தச் சட்டம் ஜனநாயகத் திலே அரசியல் சட்டம் வழங்கியிருக்கிற அடிப்படை உரிமைகளைச் சவக்குழிக்கு அனுப்புகிற சட்டமாகும். ஒரு நாட்டிலே எதிர்க்கட்சிகள், மாநாடோ அல்லது பொதுக்கூட்டங் களோ நடத்துகிறபோது, நாட்டுமக்களுக்கு சுவரொட்டி மூலம் அதைத் தெரிவிப்பார்கள். அப்படி எதிர்க்கட்சிகள் தெரிவிக்கிற கருத்துக்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது எதிர்க்கட்சிகளுக்கு மட்டும் அது சொந்தமல்ல; ஆளுங்கட்சிக்கும் அது இருக்கிறது. வால் போஸ்டர்கள் ஒட்டக் கூடாது என்றால், ஆளுங்கட்சிக்கும் தான் அது இருக்கிறது; அது பொருந்தும். ஆகவே அதைப்பற்றிக் குறிப்பிடுவது தவறான கருத்து; அதை அவர் இங்கே குறிப்பிடுகிறார்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுவதையும் பேசவிட்டால், கடைசியாக அவர் சொல்வதற்கு நான் பதில் சொல்ல இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எதிர்க்கட்சிக்கு மட்டும் என்கிறீர்கள். இது ஆளுங்கட்சிக்கும் பொருந்தும் என்பதைத் தான் அவர் சொல்கிறார்.

திரு. இளம்வழுதி : ஆளுங்கட்சிக்கும்தான் பொருந்தும். அதை நான் பின்னாடி பேசும்போது சொல்கிறேன்.

அதாவது எதிர்க்கட்சிகள் சொல்கிற செய்திகள் நாட்டு மக்களின் கவனத்திற்குப் போய்ச் சேரக் கூடாது என்பதற் காகக் கொண்டு வரப்பட்ட அதிகார துஷ்பிரயோகம்தான் இந்த அவசரச் சட்டம் என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் பாதிக்கப்படுபவர்கள் யார்? அச்சகத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள்தான். அச்சகத் தில் பணிபுரியும் அச்சகத் தொழிலாளிகள், இன்னும் சொல்ல வேண்டுமானால் போஸ்டர் ஒட்டுவதை மட்டுமே தொழிலாகக் கொண்டு குடிசையிலேயும், பிளாட்பாரத்திலேயும் வாழ்ந்துகொண்டிருக்கிற ஏழை, எளிய மக்களின் வாழ்வுதான் பாதிக்கப்படுகிறது. எதிர்க்கட்சிகளைப் பழி தீர்ப்பதாக நினைத்துக்கொண்டு, குடிசையிலேயும் பிளாட்பாரத்திலேயும் வாழ்கிற ஏழை, எளிய மக்களின் வாழ்வோடும் வயிற்றோடும்

தான் விளையாடுகிறீர்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோதுதான் எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாராய வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக சாராயக் கடையைத் திறந்தார்கள். அதை போல இதையும் பார்க்க வேண்டுமென்று கருதக் கூடாது. சாராய வியாபாரம் நிறைய செய்து கொண்டிருக்கிறார்கள் என்கிற காரணத்திற்காகவே, பாக்கெட் சாராயம், மலிவுவிலை மது எல்லாம் கொண்டுவந்தார்களா என்பது எனக்குப் புரியவில்லை. எனவே, இது அப்படிப் பட்டதல்ல. இந்த நாட்டு மக்களுடைய ஒட்டு மொத்தமான நன்மையைக் கருதித்தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, வேறொன்றும் நோக்கம் அல்ல.

முற்பகல் 11-45.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டம் என்பது எல்லோருக்கும் பொதுவானது என்று சொல்லுகிறார்கள். அதையே தான் நானும் சொல்கிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தைப் படித்துப்பார்க்கின்ற பொழுது எந்த இடத்திலேயும் விதி விலக்கோ, அல்லது இம்யூனிட்டி எதுவும் கிடையாது. அப்படி இருக்கும்போது சட்டம் போட்டு விட்டால் மட்டும் போதுமா? அதை நாமே மீறினால் என்ன ஆகும் என்பதைத்தான் எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன். (குறுக்கீடு) நான் சொன்னால், உடனே எங்கே அப்படி ஒட்டப்பட்டிருக்கிறது, காட்டுங்கள் என்று சொல்வீர்கள்; நான் இப்பொழுது சொல்லுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரே ஒருமுறை என்னோடு வருவார்களேயானால் சென்னை நகர் முழுவதையும் நான் சுற்றிக் காட்டுகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில், நகரை அழகுப்படுத்த வேண்டுமென்பதற்காகப் போஸ்டர்கள் ஒட்டக்கூடாது என்று தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது எல்லாக் கட்சிகளுக்கும் பொருந்தும். அதற்கு ஆளுங்கட்சி ஒன்றும் விதிவிலக்கல்ல, திரு. பரிதி இளம்வழுதி



அவர்களுடன் நான் எங்கும் வரத் தயாராக இல்லை. ஆனால் சென்னை மாநகரத்தில் என்னுடைய போஸ்டர்கள் ஒட்டப்பட்டு இருப்பதாக, அவர் கூறுவது உண்மையானால், நான் உடனடியாக அந்தப் போஸ்டர்களை அகற்றும்படி உத்தரவிடுகிறேன். அந்தப் போஸ்டர்களை ஒட்டியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க நான் ஆவன செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைச் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி, வேண்டுமானால் திரு. தாமரைக்கனி அவர்களை உங்களுடன் அனுப்புகிறேன். அவரைத் திருப்திப்படுத்துங்கள் அது போதும்.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்ன சொன்னீர்கள் என்பதை நான் கவனிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களோடு ஒரு ஆள் சாட்சிக்கு வேண்டுமானால் திரு. தாமரைக்கனி அவர்களைக் கூட அனுப்பி வைக்கிறேன் என்று சொன்னேன்.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, சாட்சிக்காரர்களை விட சண்டைக்காரர் மேல், ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அப்படி ஏதாவது ஒட்டப்பட்டிருந்தால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று 16-6-1992 முதல் இந்தச் சட்டம் அமலுக்கு வந்திருக்கிறது. இதுவரை எத்தனை பேர்கள் இந்தச் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்? ஆயிரம் ரூபாய் என்றிருந்த அபராதத்தை ஐயாயிரம் ஆக உயர்த்தியிருக்கிறீர்கள். இதுவரை எவ்வளவு ரூபாய் வசூல் செய்து அரசாங்கக் கருவூலத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது? அதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இன்றைக்குச் சென்னை நகரம் முழுவதும் ஒட்டப்பட்டிருக்கிறது. போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருக்கிறது. யாரும் கோபித்துக் கொள்ளக் கூடாது, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் ஒட்டுகிறார்கள். அதே நேரத்தில் நாங்கள் கட்சிக் கூட்டம் நடத்த போஸ்டர்கள் ஒட்ட வேண்டுமென்றால் அதைப் போலீஸ் தடுக்கிறார்கள் இதற்கு நானே ஒரு உதாரணம். நானே சாட்சி, ஒருமுறை போஸ்டர்கள் ஒட்டுவதற்கு யாருமே வரவில்லை ஆட்கள் வரமாட்டேன் என்கிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சட்டம் இருக்கின்றபொழுது அதை மீறி ஒட்டியிருக்கிறீர்கள் என்பது தான் அதனுடைய பொருள் (குறுக்கீடு) . மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின்படி சென்னை மாநகரத்தில் போஸ்டர்கள் ஒட்டக்கூடாது என்றுதான் இருக்கிறதே தவிர, காவல் துறையினரின் அனுமதி பெற்று தட்டி போர்டுகளில் போஸ்டர்களை ஒட்டி, அவற்றை மரங்களிலிருந்தும் லேம்ப் போஸ்டுகளிலிருந்தும் காண்பிக்கலாம் என்று அதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, சில ஸ்டாண்டுகளில் அவற்றை வைத்து, இந்தத் தட்டி போர்டுகளை டிஸ்பிளே செய்யலாம் என்றும் இருக்கிறது. அதுபோல இவர் சார்ந்திருக்கிற கட்சி நடத்திய ஊர்வலத்தின் போது, மாநாட்டின் போது அனுமதி பெறப்பட்டு, அவர்களுடைய கட்சித் தலைவரின் படங்களும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றை நானே கண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆள் இல்லாத காரணத்தால் போஸ்டர் ஒட்ட. வரவில்லை என்று சொல்கிறார்கள். ஒட்டுகின்றவர்களைப் போலீஸ் பிடிக்கின்ற காரணத்தினால் தான் அந்தக் கூலித் தொழிலாளர்கள் வரவில்லை. அதன் பிறகு நானே போஸ்டர்களை ஒட்டினேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. இளம்வழுதி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்திலே போஸ்டர்கள் ஒட்டுவதற்குத் தொண்டர்கள் இல்லை என்றும், ஒட்டுவதற்கு கூலிக்கு ஆள் வைத்துத்தான் ஒட்டுகிறார்கள் என்பதை ஒப்புக்கொண்டதற்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கீடுகளுக்கு இடமில்லாமல் பேசினால் பரவாயில்லை.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொகுதியிலே கூட்டம் நடைபெறுகிறது என்றால் எங்கள் கட்சியின் சார்பாக அதற்கு ஆயிரம் போஸ்டர்கள் ஒட்டுகிறார்கள். அதைப் பகுதி பகுதியாகப் பிரித்துக் கொள்வோம். நாங்கள் திடீரென்று சில பேச்சாளர்களிடம் தேதி வாங்குவோம். அது அடுத்த நாள் கூட்டத்திற்கு ஒட்டியாக வேண்டும். அப்படி இருக்கின்ற பொழுது





சிலவற்றை நாங்கள் ஒட்டுவோம் அல்லது அந்த நண்பர்களிடம் கொடுத்து ஒட்டச் சொல்வோம். அப்படிக் கொடுக்கப்பட்ட நேரத்திலே யாரும் ஒட்டுவதற்கு வரவில்லை. அப்போது நானே ஒட்டினேன். அதனால் போலீஸ் என்னைக் கைது செய்து, போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். நான் கேட்பதெல்லாம் — முதல் அமைச்சர் சொல்கிறார், ஆட்சேபனைக்குரிய இடத்தில் ஒட்டாமல் அனுமதி பெற்று அந்த இடத்திலே ஒட்டுங்கள் என்று, அப்படியானால் இன்றைக்கு ஆளுங்கட்சியினர் ஒட்டுகின்ற போஸ்டர்கள், வைக்கின்ற கட் அவுட்டுகள் எல்லாம் போலீஸ்காரர்களின் அனுமதி பெற்று வைக்கிறார்களா என்பதை (குறுக்கீடுகள்)

முற்பகல் 11.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்அவுட் என்றவுடன் யாரும் இங்கே பயப்படவில்லை, பயப்படவேண்டிய அவசியமும் இல்லை. இவர்கள் எல்லோரும் கட்அவுட், கட்அவுட் என்று எதை நினைத்துப் பேசுகிறார்கள் என்று நன்றாகப் புரிகிறது. வேண்டுமானால் என்னுடைய கட்அவுட்டுகளை இனி தமிழ் நாட்டில் வைக்கக்கூடாது என்று நான் சட்டம் போடுவதற்கே தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் மாண்புமிகு பொது பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த உடனேயே மாண்புமிகு முன்னாள் முதல்வர் கருணாநிதியினுடைய கட்அவுட்டை, முதன் முதலிலேயே வைத்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான். அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனேயே கட்அவுட் வைத்ததே அவர்கள் தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் கட்அவுட் வைத்தோம், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அந்த கட்அவுட்டால் யாருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. (குறுக்கீடுகள்) அந்தக் கட்அவுட் யார் மீதும் விழவும் இல்லை, அதனால் யாருக்கும் எந்த ஆபத்தும் இல்லை. (குறுக்கீடுகள்) கட்அவுட்டால் யாருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : கட்அவுட்டை நினைத்தாலே நீங்கள் பயப்படுகிறீர்கள். அந்தக் கட்அவுட்டால் உங்கள் கட்சிக்கே ஆபத்து வந்துவிட்டது என்று கூட இந்த நாடு நிரூபித்துக்காட்டியிருக்கிறது. எனவே நேரிடையாகக்கூடப் போகத் தேவையில்லை. ஊருக்கு ஒரு கட்அவுட் வைத்தாலே போதும் உங்களுடைய கட்சி அவ்வளவுதான். என்பதை நீங்களே ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். நன்றி.

திரு. இளம்வழுதி. * * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவையெல்லாம் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன. விவாதத்திற்கு வரவும்.

திரு. இளம்வழுதி : ஸ்பீக்கர் சார், நான் உங்களையே கேட்கிறேன், இரண்டு நாளைக்கு முன்னாடி சபாநாயகர் கூட்டம் டில்லியிலே நடந்தது. அந்தக் கூட்டத்தை துவக்கிய மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே சொல்லியிருக்கிறார் சபாநாயகருக்கு உரிய மரியாதை கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய உணர்வுகளை மதித்து அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கூறினார். இங்கே நான் என்ன பேசவருகிறேன் என்பதற்கு அனுமதிக்கமாட்டேன் என்கிறீர்கள் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கு நடந்த மாநாடு என்ன தெரியுமா, சட்ட மன்றங்களில், சட்டமன்றத்தினுடைய கண்ணியத்தைக் குலைக்கின்ற வகையில் நடைபெறுகின்ற சில சம்பவங்களைத் தடுப்பதற்காக நடைபெற்ற மாநாடு. கண்ணியத்தைக் குலைக்கின்ற வகையில் நடந்துகொள்கிற உறுப்பினர் யார் என்பதை நான் சொல்லவேண்டி வரும். நீங்கள் சொன்ன சபாநாயகர் என்ற காரணத்தாலேயே நான் பேசாமலிருக்கிறேன். நடந்த மாநாடு அது, அதை நினைவிலே வைத்துக்கொள்ளுங்கள்.

திரு. இளம்வழுதி : நான் கேட்பது எல்லாம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேவையற்ற விவாதங்களைக் கிளப்பி [illegible]ண்ணியத்தைக் குலைக்கின்ற வகையில் சில உறுப்பினர்[illegible] நடந்து இருக்கிறார்கள். சட்டமன்றத்திற் சில

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



களங்கங்களை உண்டாக்கி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சம்பவங்களைத் தடுப்பதற்காக என்னென்ன யோசனைகள் என்பது பற்றி ஆராய்வதற்காக அந்த மாநாடு நடந்தது. இந்தச் சட்டத்திருத்தத்தில் என்ன சொல்கிறீர்கள், என்று சொல்லுங்கள்.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, பேசவிட்டால்தானே சொல்ல முடியும். இந்த மாதிரி குறுக்கிட்டால் என்ன செய்வது. (குறுக்கீடுகள்). பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால் இங்கு, எதிர்க் கட்சிகள் ஒரு சிலர் இருக்கிறோம். எண்ணிக்கையில் ரொம்பக் குறைவாக இருக்கிறோம். நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை நீங்கள் கேட்டு, அதற்கு மதிப்பு அளித்து பேசுவதற்கு வாய்ப்பு கொடுங்கள் (குறுக்கீடுகள்) இது ரொம்ப கண்ணியமா? (குறுக்கீடுகள்) அதே நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது கட்அவுட் பற்றி பேசக்கூடாது (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டி வரும். 10 நிமிடத்திற்கு மேல் ஆகிவிட்டது.

திரு. இளம்வழுதி : அதில் சொற்களோ, குறியீடுகளோ அல்லது கண்ணுக்கு புலனாகும் உருவப்படங்களோ அடங்கிய சுவரொட்டி எதுவும் அல்லது மாதிரி உருவம் என்று இருக்கிறது. மாதிரி உருவம் என்றால், என்ன? தட் இஸ் கட்அவுட். கட்அவுட் அதைப்பற்றிதான்....

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் முதல் கட்அவுட் வைத்தவர் யார் * * தலைவருக்குத்தானே வைத்தீர்கள் என்பதை மாண்புமிகு தலைவர் வாயிலாக தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத். தலைவர் : ** என்பது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் அமைச்சர்

மாண்புமிகு திரு.இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் கூறுகிறார் மரியாதையைப் பற்றி**

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1992 செப்டம்பர் 25

முற்பகல் 11.55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருடைய தந்தையார் பற்றி வருகிற கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய காரணத்தினால் நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எல்லாம் அவை, குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இது எல்லாம் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. நேரடியாகப் பேச்சுக்கு வரலாம் நீங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அவர் பேசுகிறபோது உங்களுக்கு இருக்கக்கூடிய, நடைமுறைப் பேச்சுப்படி ** என்று சொன்னதைக்கூட நான் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கியிருக்கிறேன். நீங்கள் பழையபடி * * என்றெல்லாம் சொல்லி ஆரம்பிக்கிறபோது அதையெல்லாம் அவைக் குறிப்பிலே இருக்கவிடலாம் போல் இருக்கிறது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, இந்தியாவிலேயே முதன்முதலிலே யாருடைய கட்-அவுட் வைக்கப்பட்டது என்றால், எங்களுடைய கட்-அவுட் வைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அதனால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. அது யார் மேலேயும் விழவில்லை. அதற்காக நாங்கள் போலீஸ்காரர்களை காவலுக்கு நிறுத்தி வைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருக்கலாம். உங்கள் தலைவருக்காக (குறுக்கீடுகள்) அந்த அளவோடு இருக்கலாம். (குறுக்கீடுகள்).

திரு. இளம்வழுதி : காவல் வைக்கவில்லை நாங்கள் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. நீங்கள் பேசி முடியுங்கள். இந்த பில்லிலே நீங்கள் பேசுகின்றீர்கள். ஆதரிக்கின்றீர்களா, எதிர்க்கின்றீர்களா என்பது பற்றி மட்டும்சொல்லி முடியுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1992 செப்டம்பர் 25]

திரு. இளம்வழுதி : * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பில்-லிலே நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.'

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவதைத் தயவுசெய்து கொஞ்சம் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது வீண் விவாதங்களுக்குப் போகக் கூடாது. (குறுக்கீடுகள்) இது எல்லாம் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

திரு. இளம்வழுதி : பேசவிடாததால் அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் தொடங்கி கடைசி நாளான இன்றைக்காவது எனக்கு முன்னால் இருக்கின்ற ஒலிபெருக்கிக்கு இணைப்பு கொடுத்ததற்கு நன்றி. (குறுக்கீடு) இப்போது தான் முதல் தடவையாக ஒலிபெருக்கியிலே பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு முதல் நாளே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன். தொடர்ந்து மறு நாளும் பேசினீர்கள். நீங்கள் பேசுகிறபோது ... ...

திரு. எஸ். திருநாவுக்கரசு : முதல் வாய்ப்புத் தரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதிக்கும் உட்படாமல் பேசிய காரணத்தினாலே, அன்றைக்கு நீங்கள் மேற்கொண்டு பிறகு பேச அனுமதிக்கப்படாமல் நிறுத்தப்பட்டீர்களே தவிர, அதற்குப் பிறகு இரண்டொரு நாட்கள், நீங்கள் முறைகேடாக நடந்த காரணத்தினால், வெளியேற்றப்பட்டீர்களே தவிர......

திரு. எஸ். திருநாவுக்கரசு : அது சரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு முறைகள் வெளியேற்றப்பட்டது உங்களுடைய முறைகேட்டின் காரண

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாக நடந்ததே தவிர வேறல்ல. வெளியேற்றப்பட்டதற்கு பிறகு உள்ளே வந்து இரண்டாவது முறையும் வெளியேற்றப் பட்டீர்களே தவிர, அது உங்களுடைய முறைகேட்டின், காரணமாக நடந்ததே தவிர ஒலி பெருக்கி கொடுப்பதில் இணைப்புக் கொடுப்பதில் எந்த பிரச்சினையும் என்றைக்கும் ஏற்படவில்லை. பேசுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை, நான் வெளிநடப்பு செய்தேன் அல்லது நீங்கள் வெளியேற்றினீர்களா என்பது பற்றி எல்லாம் நான் பேசவில்லை. இங்கே இன்றைக்குவரை முதல் தடவை யாக ஒலி பெருக்கி வேலை செய்கிறது என்று சொன்னேன். அதற்குத்தான் நான் நன்றி சொன்னேன். நீங்கள் முறையோடு மேலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட திருத்தம் அரசியல் சட்டத்திற்கு புறம்பான வகையில் மிகவும் நெருக்கமான, இறுக்கமான பிரிவுகளைக் கொண்டதாக இருக்கிறது. அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு இந்த போஸ்ட்டர் அடிப்பவர்கள், ஒட்டுபவர்கள் யாராக இருந்தாலும் 5 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் ஓராண்டு ஜெயில். போஸ்ட்டர்கள் அடிப்பவர்கள் மட்டுமல்ல அடிப்பவர்கள், ஒட்டுபவர்கள், அதற்கு உதவியதாக இருப்பவர்கள், தூண்டியவர்கள் என்று இப்படி யார் மீது நினைத்தாலும் வழக்குப் போட முடியும். இதற்கு அனுமதி பெறவேண்டியவர்கள்—ஆளுங்கட்சியினருக்கும், எதிர்க்கட்சி யினருக்கும் எல்லோருக்கும் பொதுவான ஒரு சட்டம்தான். இந்தச் சட்டம் எல்லோருக்கும் பொதுவானதுதான். அந்தச் சட்டம், பொதுவானதுதான. அது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் அனுமதி வழங்குகிறபோது மாநகராட்சி என்றால் ஆணையாளரும், நகராட்சி என்றால், அந்தந்த மாவட்டத்தி னுடைய ஆட்சித்தலைவரும் அனுமதி வழங்க வேண்டியவர்களாக சட்டத்தின்மூலம் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே, போஸ்ட்டர் மட்டுமல்ல, போஸ்ட்டர்கள், பதாகைகள், விளம்பரத் தட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், இருக்கின்றன. பிட் நோட்டீஸ், இந்த பிட் நோட்டீஸ் ஒட்டுவதாக இருந் தாலும், அந்த பிட் நோட்டீஸ் அடிப்பதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே அனுமதி வாங்கவேண்டும். அல்லது கார்ப்பரேஷன் என்று சொன்னால், கமிஷனரிடத் திலே சென்று அனுமதி வாங்க வேண்டும். இது பேச்சுரிமை எழுத்துரிமை, அதுவும் படிப்பறிவு இல்லாத ஜனங்கள் நிரம்பி இருக்கிற நாட்டில் வேறு எந்த மாநிலத்திலேயும் இதுபோன்ற சட்டம் இருப்பதாகவே தெரியவில்லை. தமிழ் நாட்டிலேதான் முதல் முதலாக இது வந்திருக்கிறது. படிப்பறிவு இல்லாத மக்களிடத்திலே நீங்கள் அரசின் சார்பிலேகூட அரசினுடைய



சாதனைகளை விளம்பரப்படுத்துகிறபோது, பல்வேறுவிதமான விளம்பரங்களை துண்டு பிரசுரங்களை போஸ்டர்களை எல்லாம் எல்லா இடங்களிலும் ஒட்டுகிறபோது அவற்றையெல்லாம் பார்த்து படங்கள் வாயிலாகக் தெரிந்துகொள்ள போஸ்டர்களில் ஒட்டப்படுகிற உருவங்கள் வாயிலாக தெரிந்துகொள்ள, படிப்பவர்களுக்கு படித்துத் தெரிந்துகொள்ள, இப்படி பல்வேறு விதமான வாய்ப்புகளை இது தடுக்கிறது.

இதில் அப்பல்லேட் அதாரிட்டி யார் என்று சொன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர். அவர் துண்டுப் பிரசுரம் வெளியிட ஒட்ட அனுமதிக்கவில்லையென்று சொன்னால், அரசாங்கத்திற்கு வரவேண்டும். அரசாங்கம் என்று சொன்னால், யார் என்று குறிப்பாகப் போடவில்லை. ஒரு வேளை சீப் செகரட்டரியா, அல்லது அந்த இலாகா செயலாளரா அல்லது முதலமைச் சரா அல்லது இலாகா அமைச்சரா? பொதுவாக சட்ட முன் வடிவிலே என்ன போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், கார்ப்பரேஷன் என்றால், போலீஸ் கமிஷனர் என்றும். டிஸ்ட்ரிக்ட் என்றால், கலெக்டர். இவர்கள் இல்லையென்றால் அரசாங்கத்திற்கு அப்பீல் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அரசாங்கம் என்கிறபோது....

நண்டகல் 12.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : அரசாங்கம் என்றால் தனி யாக அவருக்கு விளக்கம் வேண்டுமா? பல வருடங்கள் அமைச்சராக இருந்தவர். இதுகூட தெரியவில்லை. அரசாங்கம் என்றால் அரசாங்கம்தான்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் சொல்ல வந்தது, சட்ட முன்வடிவிலே குறிப்பிடுகிறபோது போஸ்டரோ அல்லது விளம்பர பிட் நோட்டிசோ அடிக்கிறபோது மாவட்டத்திலே இருக்கிற அதிகாரி என்று போடவில்லை. மாவட்டத்தில் பல்வேறு அதிகாரிகள் இருந்தாலும் ஸ்பெசிபிக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் என்று போட்டிருக்கிறார்கள். அதுபோல கார்ப்பரேஷன் என்றால் கமிஷனர் ஆப் போலீஸ் என்று போட்டிருக்கிறார்கள். அது போல தமிழக அரசுக்கு அப்பீலுக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எந்த டிபார்ட்மெண்ட் அதற்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று இல்லை.

அதோடு, இதனால், சிறு சிறு அச்சகங்களை நடத்து கிறார்களே, ஒரு நகராட்சி என்று சொன்னால் நூற்றுக்கு மேல் சிறு சிறு அச்சகங்கள் இருக்கின்றன. அதிலே, ஒவ் வொன்றிலும் 10, 20 பேர் வேலை பார்ப்பார்கள்,

எனவே, சிறு சிறு அச்சகத்தை நடத்திப் பிழைப்பவர்கள். அதிலே தொழிலாளர்களாக பணியாற்றுபவர்கள், போஸ்டர் ஒட்டி வாழ்க்கை நடத்துபவர்கள், இப்படி பல்லாயிரக்கணக்கில் இருக்கிற சாதாரண ஏழையெளியவர்கள் வேலை இழக்கிற சூழ்நிலையும், அதனால் அவர்கள் வறுமை நிலைக்கு தள்ளப்படுகின்ற சூழ்நிலையும், அவர்களுடைய வயிற்றிலே அடிக்கிற சூழ்நிலையும் இந்த சட்டத் திருத்தத்தினால் ஏற்படும், அரசாங்கம் வேலைவாய்ப்புகளை உருவாக்கு கிறதோ இல்லையோ, ஆனால் இருக்கிற வேலைவாய்ப்பு களையும் கெடுக்கிற வகையிலே அரசாங்கத்தின் சட்டங்கள் வரக்கூடாது. எனவே, இந்தச் சட்டத் திருத்தத்தைப் பற்றிச் சொல்கிறபோது பேச்சுரிமை, எழுத்துரிமை, கருத்துரிமை போஸ்டர்கள் ஒட்டுகிற உரிமை, இன்னும் சொல்லப்போனால் பத்திரிகைச் சுதந்திரத்தைக்கூட பாதிக்கும் அளவுக்கு ஒவ்வொரு பத்திரிகையிலும் போஸ்டர் அடித்து ஒட்டு கிறார்கள். சுவற்றில் ஒட்டுகிறார்கள். ஆங்காங்கே பெட்டிக் கடைகளில் தொங்க விடுகிறார்களே, இனிமேல் பத்திரிகைகள் காலை பத்திரிகைகள் ஆகட்டும், மாலை பத்திரிகைகள் ஆகட்டும் அல்லது வாரப் பத்திரிகைகள் ஆகட்டும் அவ்வாறு போஸ்டர் அடித்து ஒட்ட அனுமதிக்கப் பட போகிறார்களா இல்லையா? அப்படி இல்லையென்றால் அது பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிப்பதாகாதா? (குறுக்கீடு) தாங்கள் எல்லா சட்டங்களும் தெரிந்தவரா? ஏதாவது இருந்தால் தலைவர் சொல்லுவார்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கராஜன் பேசுங்கள்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற போது இந்தப் பத்திரிக்கைகள் எல்லாம் தங்கள் செய்திகளை எல்லாம் தொங்க விடலாமா கூடாதா என்று கேட்கிறார். அவர் இந்த சட்ட முன்வடிவை சரியாக படிக்கவில்லையோ என்று நினைக்கிறேன். செக்சன்4(ஏ), புரவிஷன் (1) (i)

"Any posert or advertisement relating to the profession trade or business carried on with in the land......."

என்று சொல்லப்பட்டு, இவைகள் எல்லாம் அனுமதிக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே, அவர் சட்டமுன்வடிவை சரியாக படிக்காமல் இங்கே வந்து இந்த அவைக்கு தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.



திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் முழுவதும் படித்துவிட்டு
தான் பேசுகிறேன். தவறாக ஒன்றும் பேசவில்லை. அதிலே
குறிப்பிட்டு எந்தவிதமான விளக்கமும் இல்லை என்பதைத்
தான் நான் சுட்டிக்காட்டினேன். 4(ஏ) 4(1), அல்லது 4(2)
போன்ற எல்லா செக்சன்களையும் படித்துவிட்டுத்தான்
பேசுகிறேன். நூற்றுக்கணக்கான பக்கங்கள்கூட இல்லை இரண்டே
இரண்டுப் பக்கங்கள்தான். எனவே, எங்காவது ஆபாச
மாக போஸ்டர்கள் ஒட்டுகின்றார்கள் என்றாலோ அல்லது
சட்டத்திற்கு புறம்பாக போஸ்டர்கள் ஒட்டுகிறார்கள் என்
றாலோ ஏற்கெனவே இருக்கிற சட்டங்களின் கீழ், சட்ட
சரத்துகளின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு
இருக்கிறது. இதுபோன்ற கடினமான, கஷ்டம் தருகிற
சட்டத்தை கொண்டு வந்து இதன் கீழ்தான் நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்றில்லை. கடந்த காலங்களில்
போஸ்டர்கள், பேனர்ஸ் போன்றவை பொது மக்களுக்கு
எரிச்சல் ஊட்டுகிற வகையிலோ அல்லது ஆபாசமான முறை
யிலோ போஸ்டர் ஒட்டப்படுகிறது. என்றாலோ அல்லது
பிட் நோட்டீஸ் விளம்பரப்படுத்தப்படுகிறது என்று சொன்
னாலோ வழக்கை தொடர முடியும் ஏற்கெனவே இருக்கிற
பல்வேறு சட்டங்களின்கீழ். அப்படி இருக்கிறபோது இப்படி
ஒரு சட்டம் கொண்டு வந்திருப்பது சரியா? அதுவும்
முதலில் சொல்லும்போது மாநகராட்சி என்று மட்டும்தான்
சொல்லப்பட்டது. மாநகராட்சி என்று சொன்னால் கூட
ஓரளவுக்கு புரிந்துகொள்ளலாம்.

பிற்பகல் 12.05

சென்னை, மதுரை கார்ப்பரேஷன் போன்ற இடங்களுக்கு
வெளிநாட்டுக்காரர்கள் வருகிறார்கள். ஆங்காங்கே போஸ்டர்
கள் எல்லாம் இருக்கின்றன, அதையெல்லாம் தவிர்க்கப்
இதைச் செய்திருக்கிறோம். என்று சொல்லலாம்.
நகராட்சியிலும் கொண்டு வருகிறார்கள். 100 நகராட்சிகள்
இருக்கின்றன. அதாவது முனிசிபாலிடி. முனிசிபல்
டவுனிலும் ஒட்டக் கூடாது. (மணி அடிக்கப்பெற்றது)
மாநகராட்சி, நகராட்சி எல்லாம் வருகிறது. இங்கேயெல்
லாம் இதை அமுல்படுத்துகிறபோது எந்த எதிர்க்கட்சியும்
எந்தவிதமான துண்டுப் பிரச்சுரமும் ஒட்ட முடியாது.
எதிர்க்கட்சிகளை விடுங்கள். ஒரு அசோசியேஷன், கட்சி
களுக்கு அப்பாற்பட்ட அசோசியேஷன்கூட தன்னுடைய
அபிப்ராயங்களை எழுத்து வடிவமாக, பிட் நோட்டீஸ்சுகள்
மூலமாக வெளியிடுவதற்கான அனுமதி தமிழ்நாட்டிலே
இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அனுமதி
என்கிறபோது எந்த ஆளும் கட்சியாக இருந்தாலும். அதற்கு
வசதியாக இருக்கும் . அவர்கள் கார்ப்பரேஷன் கமிஷன
ரிடம் அனுமதி வாங்க வேண்டியதில்லை, கலெக்டரிடமும்
அனுமதி வாங்க வேண்டாம். யார் போய் வெரிபை
பண்ணுவது? ஒரு போஸ்டர் ஆளும் கட்சியால் ஒட்டப்

பட்டிருந்தால் யார் போய் அதைப்பற்றி புகார் கொடுப்பது புகார் கொடுத்தால் என்ன சொல்லுவார்கள்? ஏற்கெனவே அனுமதி வாங்கியிருக்கிறார்கள். என்று சொல்லுவார் கள். எந்தக் கலெக்டர் சொல்லுவார். அமைச்சர் பங்க்ஷனுக்கு அனுமதி வாங்கவில்லை என்று? எந்தப் போலீஸ் கமிஷனர் சொல்லுவார். சி. எம். பங்க்ஷனுக்கு அனுமதி வாங்காமல் ஒட்டி இருக்கிறார்கள். நீங்கள் போய் கம்ப்ளெயின்ட் கொடுங்கள் என்று? அதே நேரத்தில் எதிர்க் கட்சி ஒட்டப்போனால் அனுமதி இருக்கிறதா, அனுமதி இருந்தால்தான் ஒட்டலாம் என்று போலீஸ் மறுப்பார்கள். அல்லது ஒரு அசோசியேஷன் மூலமாக அதை ஒட்டுகிற போது பெர்மிஷன் இருக்கிறதா, இருந் தால்தான் ஒட்டவிடுவோம் என்று சொல்லி கைது செய்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது முதலமைச்சர் நிகழ்ச்சியாக இருந்தாலும் அல்லது வேறு கட்சியினரின் நிகழ்ச்சியாக இருந்தாலும் யாருக்கும் போஸ்டர்கள் ஒட்ட அனுமதியில்லை. அது ஆளுங்கட்சியினர் நடத்துகின்ற நிகழ்ச்சியாக இருந்தாலும்கூட போஸ்டர்களை ஒட்ட அனுமதிக்க முடியாது. ஆனால் போஸ்டர்களுக்குப் பதிலாக தட்டி போர்டில் அவற்றை ஒட்டி, சில இடங்களில் வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். அது எல்லோருக்கும் பொதுவான ஒரு வசதி. யார் வேண்டு மானாலும் இதற்கு விண்ணப்பித்து அனுமதி பெற்று தட்டி போர்டில் போஸ்டர்களை ஒட்டிக் காண்பிக்கலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்கிறேன். இது ஆளுங்கட்சிக்கு வசதியானது. ஆளுங் கட்சி அனுமதி வாங்க வேண்டியதில்லை. ஆளுங் கட்சி அனுமதி வாங்கவில்லை என்று எந்த கலெக்டரும் சொல்ல மாட்டார்கள். அந்த அளவுக்கு தைரியம் வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முத லமைச்சர் அவர்கள் சொன்னது, பெர்மிஷன் வாங்கி, ஒட்டலாம் என்று ஷரத்து இல்லை என்பதுதான்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : அதைத்தான் சொல்கிறேன். அனுமதி பற்றித்தா'ர் சொல்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி தர வேண்டும், கார்ப்பரேஷன் கமிஷனர் அனுமதி தர வேண்டும். யார் ஆட்சியிலே



இருந்தாலும் ஆட்சியிலே இருப்பவர்களுக்கு அது வசதி. ஒட்டுமொத்தமாக எல்லா எதிர்க் கட்சிகளும் எதிர்க் கட்சி களைத் தாண்டியிருக்கிற சங்கங்களும் தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட கருத்துச் சுதந்திரத்தை, தங்களுடைய, அபிப்பிராயங்களை வெளியிடும் சுதந்திரம் இல்லாமல் ஆக்குகிற சட்டத் திருத்தம் இது. அரசாங்கம் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இது அரசியல் சட்டத் திற்கு விரோதமாக இருக்கிறது என்று உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றத்திற்குப் போனால் இந்தச் சட்டத் திருத்தம் நிச்சயமாக அடிபடும். எனவே இதை அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராம சுவாமி.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தமத் தாய், உன்னதத் தாய், சத்தியத் தாய், தெய்வத் தாய், அன்னை சந்தியா ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வி, அஷ்டலட்சுமியின் அவதாரம், ஆதிலட்சுமியின் திருவுருவம், காவல் தெய்வம், தமிழகத்தை வாழ வைக்கின்ற கண்கண்ட தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதங்களில் விழுந்து வணங்கி பேச்சைத் துவக்குகிறேன். திறந்த வெளி அரங்கு களின் அழகு கெடுக்கப்படுவதைத் தடுக்கும் திருத்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிறேன். இன்று நாட்டில் எந்த இடம் காலியாக இருந்தாலும் அதிலே சுவரொட்டி களை ஒட்டி நாசப்படுத்துகிறார்கள். அதைத் தடுக்கும் சட்டத்தை வரவேற்கிறேன். சென்னை நகரிலே அண்ணா மேம்பாலம் போன்ற இடங்களிலும், பொது இடங்களிலும் சுவரொட்டிகளை ஒட்டி நகரத்தினுடைய அழகைக் கெடுக் கிறார்கள். இந்த நாட்டில் வந்த எந்த முதலமைச்சரும் செய்ய முடியாத ஒரு நல்ல காரியத்தை இன்று தமிழக முதல்வரவர்கள் இந்தச் சட்டத்தின் மூலமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : ** என்று சொல்லுவது எந்த விதத்திலே பொருந்தும் என்று சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பொதுவாக சிலர் போஸ்டர்களை ஒட்டுகிறார்கள் என்று சொல்லுகிறார்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. வே. தம்புசாமி. **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே வந்துள்ள உறுப்பினர்கள்பற்றிக் குறிப்பிடுகிற காரணத்தால், அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. சி. இராமசுவாமி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே வந்திருப்பவர்களைப் பற்றி நீங்கள் குறிப்பிடக் கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. வே. தம்புசாமி : **

பிற்பகல் 12-10

திரு. சி. இராமசுவாமி : எதற்காக இந்தச் சட்டத்தைப் புறக்கணிக்கிறார்கள் ? மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அவர்கள் இன்று தமிழகத்திலே ஏழை எளிய மக்களுக்கும், வாழ வழியில்லாதவர்களுக்கும் அள்ளிக் கொடுக்கும் வள்ளலாகத் திகழ்கிறார்கள். எங்கே பார்த்தாலும் புரட்சித் தலைவி செல்கின்ற இடங்களில் எல்லாம் மக்கள் கூட்டம் அலை மோதுகிறது. இங்கே பேசிய உறுப்பினர் ஒருவர் சொன்னார். கட்-அவுட் வைப்பதைப் பற்றி சொல்கிறார். தமிழகத்தின் தேர்தல் களில் நாங்கள் எந்தவொரு கொள்கையையும் சொல்ல வேண்டியது இல்லை. எங்கள் இதயதெய்வம் அவர்களின் கட்-அவுட்டை ஊர் ஊராக வைத்தால் நாங்கள் தேர்தலில் சுலபமாக ஜெயித்துவிடுவோம். அந்த அளவுக்கு மக்கள் புரட்சித் தலைவி மீது அன்பும் பாசமும் கொண்டிருக்கிறார்கள். முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி வள்ளலை விட, கடையேழு வள்ளல்களை விட சிறந்த கொடை வள்ளலாக, ஏழை எளியவர்களுக்கு அள்ளிக் கொடுக்கும் வள்ளலாக இன்று திகழ்கிறார்கள்.

இந்தச் சட்டத்தை எதற்காக எதிர்க்கிறார்கள் என்றால் தங்கள் சுயநலத்திற்காகத்தான் எதிர்க்கிறார்கள். விச்சஸ் என்று சொல்வார்களே, அதுபோல், What is good is bad to witches; What is bad is good to witches என்று சொல்வார்கள். அதைப் போன்றவர்கள்தான் இந்தச் சட்டத்தை எதிர்ப்பார்கள். மக்களுக்கு நல்லது செய்வதற்காக, நகரை அழகுபடுத்தி மேம்படுத்தும் திட்டங்களைக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கொண்டுவருவதற்காக, பொதுமக்களுக்கு இடைஞ்சலாக நகரத்தை அசுத்தப் படுத்துபவர்களைத் தடுப்பதற்காக, அந்தப் போக்கை மாற்றுவதற்காக தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை எதிர்ப்பவர்கள், அரசு எந்த நல்லதைச் செய்தாலும் தலைவி அவர்களை இல்லை என்று சொல்பவர்கள், நாணயம் கெட்டவர்கள், மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள். ஒரு சட்டத்தை அரசாங்கம் கொண்டுவரும்போது, அதில் உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லவேண்டும். ஆனால் இந்தச் சட்டத்தில் குறைபாடுகளே இல்லை. மக்களுக்காக, மக்களின் நன்மைக்காக, நகரை அழகு படுத்த வேண்டுமென்பதற்காக, நல்லெண்ணத்தோடு கொண்டுவரப்பட்ட சட்டம் இது. எந்தவொரு நாட்டிலும் இல்லாமல், அதாவது சிங்கப்பூரை எடுத்துக் கொள்ளுங்கள். தெருவில் ஒரு அழுக்கு பட முடியாது. நகரத்தில் எந்தவொரு இடத்திலும் அழுக்கு பட முடியாது. அப்படிப்பட்ட ஒரு நகரம் அது. ஒருவன் தெருவில் எச்சில் துப்பினால் தண்டனை கொடுப்பார்கள், காகிதத்தை போட்டால் தண்டனை கொடுப்பார்கள். சுவரொட்டி ஒட்டினால் நடமாடும் நீதிமன்றம் அங்கங்கே அவனைப் பிடித்து தண்டனை கொடுக்கும். சிறியதொரு நாட்டிலே இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டுவரும் போது, நமது நாட்டிலே நமது இதயதெய்வம் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரக்கூடாதா ? மக்கள் நலனுக்காக இதைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். நகரத்தை அழகு படுத்த வேண்டும், தூய்மைப் படுத்த வேண்டுமென்ற நோக்குடன் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளதை நான் வரவேற்று, " செங்கொடுமைச் சாக் காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள், கங்கை போல் காவிரிபோல் கருத்துக்கள் ஊறும் எங்கள் உள்ளம் ; பொங்குதமிழ் புரட்சித் தலைவிக்கு இன்னலென்றால் சங்காரத் தமிழே, மங்காத தமிழே முழங்கு " என்று எழுவோம் என்று கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பேசுகிறபோது, அப்பல்லேட் அத்தாரிட்டி என்றால் யார், அப்பீல் செய்வது என்றால் யாருக்குச் செய்யவேண்டுமென்று கேள்வியை, இங்கே எழுப்பினார். அதற்கு பதில், Government is the Appellate Authority. Government என்றால் Home Department தான். எப்பொழுதுமே ஒரு " ஆக்ட் "டில் மேற்கண்டவாரியாகத்தான்

சொல்லி, 'கவர்ன்மென்ட்' என்றுதான் கூறுவது வழக்கம். தேவைப்படும்போது, ரூல்ஸ்பிரேம் பண்ணும்போது விபரங்களைச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு விளக்கமாக இது மாநகராட்சிக்கும் மட்டும் பொருந்தும் என்று சொன்னாலும், அனுமதி பெறவேண்டு மென்று சொன்னாலும், எதிர்காலத்தில் எந்த சாத்தியக் கூறும் இல்லாத நிலையில் இருக்கிறதே தவிர, நிச்சயமாக அனுமதியோ அல்லது ஒப்புதலோ பெற வாய்ப்பில்லை. இது எந்தவிதத்திலும் பொருத்தமானதல்ல. பொதுவாக இன்றையதினம் அரசுக்கு தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக பலதரப்பட்ட மக்கள் பல இயக்கங் களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளை அரசுக்கு வலியுறுத்து வதற்காக சென்னையில் உண்ணாவிரதம் இருக்கவேண்டு மென்று கேட்டால் நிச்சயமாக அதற்கு அனுமதி கிடைக்காது. போஸ்டர் ஒட்டவும் அனுமதி அச்சடிக்கவும் போஸ்டர் அடிக்கவும் அனுமதி கிடைக்காது. அதுபோன்று விவசாயத் தொழிலாளர்கள் மட்டுமின்றி, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மத்திய அரசுப் பணி யாளர்கள், பொறியாளர்கள், டாக்டர்கள், மாணவர்கள் என்று இருப்பவர்கள் எல்லாம் தங்கள் கோரிக்கைகளை அரசுக்கு எடுத்துச் சொல்லி வலியுறுத்த தங்களுக்கு என்று ஒரு அமைப்புகளை இயக்கங்களை நடத்திக் கொண்டு வருகிறார்கள். தாங்கள் எப்படிப்பட்ட இயக்கத்தை நடத்துகிறோம் என்பதை நாட்டு மக்களுக்கு அறிவிப்பதற் காக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரே சுதந்திரம், இப்படி போஸ்டர்களை ஒட்டி மக்கள் மத்தியில் தங்கள் குறைகளை விளம்பரப்படுத்தும் சுதந்திரம் தான். இந்த சுதந்திரத்தை இப்போது தடை செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பது எந்தவிதத்திலும் நியாயமானதாக இல்லை. எனவேதான், இது மக்க ளுக்குக் கிடைத்திருக்கக்கூடிய, தங்களுடைய கோரிக் கையை அரசுக்கு வலியுறுத்தக் கூடிய, தொடர்ந்து தங்க ளுடைய கோரிக்கைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கிற அனைத்து இயக்கங்களுக்கும், அந்த இயக்கங்களைத் தடை செய்வதற்காகக் கொண்டுவரக் கூடிய ஒரு சட்டமே தவிர நிச்சயமாக அவர்கள் போராடுவதற்கு அல்லது அந்த இயக்கங்கள் தங்களுடைய கோரிக்கையை அரசுக்குக் கொண்டு வருவதற்கு அளிக்கக்கூடிய சலுகைகள் அல்ல



எனவேதான், எதிர்காலத்தில் ஜனநாயகத்திற்குக் கிடைத் திருக்கிற நீண்ட நெடுங்காலமாக ஜனநாயகத்திற்குக் கிடைத்திருக்கிற இந்த உரிமைகூட இப்போது தடைபடுத்தப் படுவது, தடை செய்வது, இது எதிர்காலத்திலே நிச்சய மாக ஜனநாயகத்திற்குச் செய்யக்கூடிய உதவியாகாது என்ற முறையிலேதான் இருக்கிறது என்று சொல்லி தமிழக அரசு இந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நான் கேட்டுக். கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தை வரவேற்று என் னுடைய ஒருசில கருத்துக்களை நான் சொல்ல ஆசைப் படுகிறேன். 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி இடங்களில் அழகு கெடுவதைத் தவிர்ப்பதற்காக இந்த ஆண்டு கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டம் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் ஒருசில தேச விரோத சக்திகள் இன்றைக்கு நாட்டில் தேவை இல்லாத பிரசுரங்களைப் பரப்பும் உடந்தையாளர்களுக்கு தண்டனை என்று 5 ஆம் பிரிவில் கொடுத்துள்ள, 3 (எ) என்ற பிரிவிலும், 4 (1) என்ற பிரிவிலும் அல்லது 4 (எ) என்ற பிரிவின்படியும் குற்றச் செயல் எதையும் எவ்வகையிலேயும் செய்கின்ற, செய்யப் போகின்ற, செய்ய வருகின்ற, செய்வதற்கு அறிவுரை கூறுகிற, உதவுகிற, உடந்தையாக இருக்கிற அல்லது உறுதுணையாக இருக்கிற எவர் ஒருவரும் குற்றச் செயல்களுக்கு வகை செய்யப்பட்டுள்ள தண்டனை, தண்டிக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது! ஆனால், அப்படிப்பட்ட பிரசுரங்களை ஒட்டுவதற்கு உடந்தையாக இருப்பவர்களுக்கு, இன்றைக்கு தேசவிரோத சக்திகளாக செயல்படுபவர்களுக்கு தேசிய தடுப்புக் காவல் சட்டத் திலேயே கைது செய்கின்ற சட்டத்தைக்கூட இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவர வேண்டுமென்று இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். திறந்தவெளி இடங்களில் அழகு கெடுக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என்பதில் ஒருசில குறைபாடுகளும் உள்ளன.

இன்றைக்கு அரசினிடத்தில் அனுமதி பெற்று விளம்பரப் பலகைகளை சில கம்பெனிகள் பணம் கட்டி வைத்துள் ளார்கள். அந்த விளம்பரப் பலகைகள் கூட, அவர் களுக்கும் நஷ்டத்தை ஏற்படுத்தி, அந்த கம்பெனியின் போர்டுகளிலேகூட போஸ்டர் ஒட்டுகிறார்கள். அதைத் தடுப்பதற்கும், அவர்களுடைய விளம்பரப் பலகைகளை வைப்பதற்கும், அப்படி அனுமதிக்கப்பட்ட இடங்களைப்

போல நாமும் அரசியல் கட்சிகளைச் சார்ந்த சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு, அரசியல் கட்சிகளினுடைய விளம்பரங்களை வைப்பதற்கு ஒருசில குறிப்பிட்ட இடங்களில் அந்த விளம்பரப் பலகைகளை வைப்பதற்கு அனுமதி வழங்கினால் மற்ற இடங்கள் அசிங்கப்படுத்தப்படுவதையும் சுவர்களில் போஸ்டர்களை ஒட்டி நகரங்களின் அழகைக்கெடுப்பதைத் தடுப்பதற்கும் வசதியாக இருக்கும் என்று கூறிக்கொள்கின்றேன்.

அதேபோல் மாவட்டத் தலைநகரங்களில் ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள்—இப்படிப்பட்ட அலுவலகங்களின் மதில் சுவர்களிலேயும் அலுவலகங்களின் உட்புறங்களிலேயும் சில அரசியல் கட்சிகள் சுவரொட்டிகளை ஒட்டி—அரசு அதிகாரிகளுக்கு எதிர்ப்பாக இருக்கின்ற சுவரொட்டிகளைக் கூட ஒட்டுகிறார்கள்—இப்படிப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்படுவதைத் தடுப்பதற்கும், எந்த நேரத்திலும் ஒட்டாமல் இருப்பதற்கும் நிச்சயம் இந்தச் சட்டம் வழிவகை செய்ய இருக்கிறது என்பதை வரவேற்று உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகர், பிற மாநகர்கள் மற்றும் உள்ள நகரங்கள் ஆகியவை அழகுபடுத்தப்பட வேண்டும் என்ற கொள்கையையும், சென்னை மாநகர் போன்ற மாநகர்ப் பகுதிகள் உள்ளபடியே தூய்மையாக வைக்கப்பட வேண்டும், பசுமையாக வைக்கப்பட வேண்டும், போக்குவரத்து ஒழுங்குபடுத்தப்பட்டதாக அமைய வேண்டும், கட்டிடங்கள் எல்லாம் கட்டுக்கோப்பாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற முறையிலே தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். அந்த முயற்சியிலே ஒன்றுதான் சென்னை மாநகர், கோவை மாநகர், மதுரை மாநகர் போன்ற மாநகரங்களையும், மற்றைய நகரங்களையும் அழகுபடுத்தும் நேர்த்தியில் ஈடுபட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இந்த மாநிலத்திலுள்ள மாநகர்கள், நகரங்கள் ஆகியவற்றின் எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் கண்டகண்ட இடங்களில் கண்டகண்டபடி சுவரொட்டிகளை ஒட்டுகிறார்கள் : நாளுக்கு நாள் அந்தப் பழக்கம் பெருகிக் கொண்டு வருகிறது சென்னையினுடைய அழகு கெடுகிறது. எனவே, இதை அழகான நகராக ஆக்க வேண்டுமென்ற ஒரு முயற்சியை



அடிப்படையாக வைத்துத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கருதுகிறார்கள். 1959-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சட்டத்திற்கு திருத்தமாகத்தான் இந்தச் சட்டம் வருகிறது. 1959-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அந்தச் சட்டம் ஆபாச சுவரொட்டிகள் எங்கும் ஒட்டக்கூடாது என்பதற்காக, அதைத் தடுப்பதற்கும், அதிகாரபூர்வமற்ற முறையில் ஒட்டப்படுகிற சுவரொட்டிகளைத் தடுப்பதற்கும் வழிவகை செய்திருந்தது அதை மேலும் விரிவான முறையில் வழிவகை செய்கிற அளவுக்கு இந்தச் சுவரொட்டிகள் பலவற்றையும் கண்ட கண்டபடி ஒட்டக்கூடாது என்ற நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் தான் இந்தத் திருத்தச் சட்டம் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொதுவாக, பொதுக் கட்டடங்கள், தனியார் கட்டடங்கள், கட்டட முகப்புகள், கட்டடச் சுவர்கள், பெயர் பலகைகள், வழிகாட்டும் பலகைகள், ஊர்ப் பெயர், இடப்பெயர், தெருப்பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடும் பலகைகள், சீரிய மக்களுடைய சிலைகள், கலைச் சின்னங்கள், கல்விச் சாலைகள், மருத்துவமனைகள், கோவில்கள், மசூதிகள், சர்ச்சுகள் போன்ற இடங்களைப் பாழ்படுத்தும் முறையில் இப்போது சுவரொட்டிகள் கண்ட கண்டபடி ஒட்டப்படுகிற காட்சிகளை நாம் பார்க்கிறோம். அவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தி ஒரு ஒழுங்குமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற நோக்கத்தினுடைய அடிப்படையில் தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, யாரையும் தடுக்க வேண்டுமென்பதோ, எந்தக் கொள்கையையும் முறியடிக்க வேண்டுமென்ற எண்ணமோ இந்தச் சட்டத்தின் நோக்கமல்ல என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12·20

நகரை அழகுபடுத்த வேண்டும், தூய்மைப்படுத்த வேண்டும் என்பதற்கு பிற பிற நாடுகளை நாம் பார்ப்போமானால் கடுமையான சட்டங்கள் இருக்கின்றன. இப்போது சிங்கப்பூரை எடுத்துக்கொண்டாலும் சரி, அல்லது அமெரிக்காவில் இருக்கிற பல்வேறு நகரங்களை எடுத்துக் கொண்டாலும் சரி, மேலைநாடுகளில் இருக்கிற பல்வேறு நகரங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, இப்படிப்பட்ட சட்டங்களின் மூலமாகவே கண்ட கண்டபடி சுவரொட்டிகள் ஒட்டுவது தடுக்கப்பட்டிருக்கின்றது. உதாரணமாக பக்கத்தில் இருக்கிற சிங்கப்பூரில் சுவரொட்டிகள் ஒட்டவே கூடாது. அப்படி ஒட்டினால்100 சிங்கப்பூர் டாலர் ''ஃபைன்''. அது மட்டுமல்லாமல் கீழே ஒரு குப்பையை போட்டாலும் கூட 100 டாலர் அபராதம் என்றெல்லாம் வைத்திருக்கிறார்கள். அதைப்போல அமெரிக்காவில் கூட இப்படிப்பட்ட சட்டத்தின் மூலமாக தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

யாரும் கண்ட கண்டபடி கண்ட இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டக் கூடாது. சுவரொட்டிகள் ஒட்டக் கூடாது என்பது மட்டுமல்ல, தூய்மையாக நகரங்களை வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்குக் கூட கடுமையான சட்டங்கள் இருக்கின்றன. இப்படி சாதாரணமாக ஏராளமான பேர்கள் அந்த நாடுகளில் நாய்களை வளர்க்கிறார்கள் நாய்களை அழைத்துக் கொண்டு உலா போகிறபோது கூட ஒவ்வொருவரும் கையில் ஒரு பையும், துடுப்பும் கூட எடுத்துக் கொண்டு போகிறார்கள். ஏனென்று கேட்டால் அந்த நாய்கள் கழிப்பு ஏதாவது செய்து விடுமேயானால் அவர்களே அந்த பையில் எடுத்து போட்டுக் கொண்டு போகவேண்டுமே தவிர, நாயும் அவர்களும் கழிப்பை அப்படியே விட்டுவிட்டு நம்முடைய நாட்டில் போவது மாதிரி கூடாது. இது ஜனநாயகம்—இங்கே தடுக்கக் கூடாது என்கிறார்கள். ஜனநாயகத்திலே அப்படித்தான் இருந்து கொண்டு இருக்கும் என்று வாதாடக்கூடாது. அதுமட்டுமல்லாமல் காவல்துறையைச் சேர்ந்த குதிரை வீரர்கள் கூட அமெரிக்காவில் குதிரையில் ஏறிச் செல்கிறபோது ஒரு பையும், துடுப்பும் வைத்திருக்கிறார்கள். அந்தக் குதிரை எங்கேயாவது எதிர்பாராதவிதமாக நடு ரோட்டிலே கழிப்பு ஏற்படுத்தி விடுமானால் உடனே கீழே இறங்குகிறார்கள். இறங்கி அவர்களே அந்தப் பையிலே எடுத்து போட்டுக் கொண்டு குதிரை மேலே ஏறுகிறார்கள். அப்படி செய்யாவிட்டால் அந்த காவலர்களுக்கே தண்டனை உண்டு என்று வைத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு நாம் போகவில்லை. இப்போது நாம் போட்டிருப்பது கண்ட கண்ட இடங்களில் சுவர்களில், வேறு பல இடங்களில் கண்ட கண்டபடி சுவரொட்டிகளை ஒட்டுவதன் மூலமாக அழகு கெடுகிறது என்பதற்காகத் தான். இதனை ஒரு முறைப்படுத்த வேண்டுமென்பதற்காக கொண்டு வந்திருக்கிறோமே தவிர கடுமைப்படுத்தவே இல்லை. இதை உடனடியாகக் கொண்டு வர முடியும் என்று நான் கருதவும் இல்லை. ஆனால் சட்டம் ஒன்று இருந்தால் தான் படிப்படியாக மெல்ல மெல்ல முறைப்படுத்த முடியும். இதிலே பல சிரமங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்த மாதிரி இதை நடைமுறைப்படுத்துவதில் பல சிரமங்கள் இருக்கின்றன என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனாலும் இந்தச் சட்டத்தை நாம் கொண்டு வந்தால் தான் நாளடைவில் இதை ஒழுங்குபடுத்தும் வழிவகைகளும் ஏற்படக்கூடும்.

அதுமட்டுமல்ல, இந்தச் சட்டத்தில் போஸ்டர்கள், விளம்பரங்கள் வைக்கவே கூடாது என்று சொல்லவில்லை. அதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. தம் தொழில், வியாபாரம் பற்றிய போஸ்டர்கள் ஒட்டலாம். டாக்டர்கள், வக்கீல்கள் போர்டுகளை வைக்கலாம். தமது நிலம், கட்டடம் விற்கப்படும் என்று விளம்பரத்தைச் சொல்வதற்கு இந்தச் சட்டத்தில் இடமுண்டு. விளம்பர



திற்கென குறிப்பிட்ட இடங்களை காவல் துறை ஆணையார் கலெக்டர்கள் ஒதுக்கலாம். ஆக, பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற மாதிரி குறிப்பிட்ட இடங்களை கேட்டு, அதை மாவட்ட ஆட்சித் தலைவரோ, ஆணையரோ, அந்தந்தப் பகுதிகளில் மட்டும் பொதுமக்கள் அல்லது அரசியல் கட்சிகள், மற்றவைகள் சுவரொட்டிகள் ஒட்டலாம் என்று இடத்தை ஒதுக்கித் தருகிற உரிமை, ஆணையருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அவர்களாக பார்த்து ஒதுக்கியும் தரலாம். அரசுக்கு சொந்தமான, லோக்கல் பாடிஸ்க்கு சொந்தமான விளக்கு கம்பங்கள், மரங்கள் போன்றவற்றில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து தெரிவித்த மாதிரி தட்டிகளில் ஒட்டி வைக்கலாம், கட்டலாம். முக்கியமான காலங்களில் கம்பங்களில், தூண்களில், தட்டி, போர்டு போன்றவற்றை அனுமதியோடு வைக்கலாம். இல்லையென்றால் அனுமதி பெற்று வைக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறமாதிரி, அரசியல் கட்சிகளினுடைய விளம்பரங்கள், கூட்டங்களினுடைய விளம்பரங்கள், பொது கூட்டங்களினுடைய விளம்பரங்கள் செய்யலாம். செய்யக்கூடாது என்பதல்ல. அதற்கு என்று ஒரு குறிப்பிட்ட இடத்தை குறிப்பிட்டுவிட்டால், அசனால் யாருக்கும் பாதகம் ஏற்படாது. அதனால் அழகு கெடாது என்ற அளவிற்கு சில பல இடங்களை ஒதுக்கித் தருவார்களானால், அந்த இடங்களிலே சுவரொட்டிகளை ஒட்டுவதற்கும், வாய்ப்பும் ஏற்பட்டுவிடும்.

பிற்பகல் 12-25

அதுமட்டுமல்ல, இங்கே எடுத்துச் சொல்கின்றபோது, இதை நடைமுறைப்படுத்துவீர்களா என்றார்கள். கிட்டத்தட்ட 16—6—1992-லிருந்து இது நடைமுறைப்படுத்தப்பட்டு 3 மாத காலத்திற்கு மேல் ஆகிறது என்றாலும் கூட, அதிலே அதிகமான எத்தனை நடவடிக்கை எடுத்தீர்கள், எவ்வளவு பேரைக் கைதுசெய்தீர்கள் என்று எல்லாம் கேட்டார்கள். இதிலே அதிகமான கடுமை இருக்கக் கூடாது என்ற ஓர் அளவுக்குத்தான் இப்போதும் நாம் இருந்து வருகிறோம். பெரிய அளவிலே பெரிய கடுமையான நடவடிக்கை எல்லாம் எடுக்கவில்லை. ஆனால், ஏதாவது செய்வீர்களா என்று மாண்புமிகு உறுப்பினர் இளம்வழுதி அவர்கள் கேட்டார்கள். 16—6—1992 தொடங்கி 21—9—1992 வரையிலும் கூட, தென் சென்னையைப் பொறுத்த வரையில் 78 வழக்குகள் தண்டிக்கப்பட்டு, 3,360 ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டு இருக்கிறது. மத்திய சென்னையைப் பொறுத்த வரையிலும், 93 வழக்குகளுக்கு தண்டனை அளிக்கப்பட்டு, 26 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்பட்டு இருக்கிறது. வட சென்னையைப் பொறுத்தவரையில், 33 வழக்குகள் தொடுக்கப்பட்டு, 1,360 ரூபாய் வசூலிக்கப்பட்டு இருக்கினறது. இதிலே

நிதானமாகப் போகின்ற அளவிலேதான் இருக்கிறோமே தவிர, மிகக் கடுமையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற புள்ளி விவரத்தைச் சொன்னார்கள். அவர்கள் எல்லாம் யார் ? எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ? அதில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அடங்கியிருக்கிறார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு நாளைக்கு வரைக்கும் சட்டப பேரவையை நடத்திக் கொண்டிருக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாராவது விடுபட்டு இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆணையருக்கு அதைச் சுட்டிக் காட்டுவார்களானால், தக்க நடவடிக்கைகளை எடுப்பார்கள். இந்த அரசு அதற்கான தண்டனையைத் தரும். அதில் எவ்வளவு பேர்கள் ஆளும் கட்சியினர் இருக்கிறார்கள், மற்றவர்கள் இருக்கிறார்கள் என்று தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிய வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு பேசியது, மற்றவர்கள் பேசியது, இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் நிரந்தரமாக ஆளும் கட்சியாக இருந்தே தீரும், அந்த வசதிக்காகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்ற பயத்திலேயே பேசுகின்றபோது, அவர்களுக்கு நம்பிக்கையே இல்லை, எந்த ஒரு காலத்திலாவது தாம் திரும்ப ஆட்சிக்கு வரப்போகிறோம், அது தமக்கும் பயன்படுமே என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லை என்று தெளிவாகத் தெரிவதற்கு மகிழ்ச்சி.

திரு. இளம் வழுதி : * * (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வேலை எல்லாம் வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு). மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்வது, இவ்வாறு பேசுவது இதுதான் ஆளும் கட்சியாக இருக்கும் என்பது

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



போல நீங்கள் பேசுகிறீர்கள் என்கிறார்கள். அதற்கு வேறு வேறு உதாரணத்திற்குப் போவதற்கு அனுமதிக்க முடியாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அதற்குப் பிறகு அதைப் பற்றி நாம் கவலைப்படுவது தேவையில்லை. இது ஜனநாயகம். பண்பு படைத்தவர்கள், நெறிமுறை படைத்தவர்கள் நாட்டை இப்போது ஆண்டுகொண்டிருக்கிற போது, அப்படிப்பட்ட ஆபத்து எதுவும் வராது. மாண்புமிகு உறுப்பினர் அதைப்பற்றிக் கவலைப்படவே வேண்டாம். ஜனநாயகப் பண்புகள் கொண்ட, நெறிமுறைகள் கொண்ட வழிமுறைகளைக் கொண்ட, ஆட்சிதான் தொடர்ந்து நடைபெறும். அந்த அளவுக்கு நாங்கள் காப்பாற்றி வருவோம் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சிலபல நடைமுறைகள், சிலபல சிக்கல்கள் இதிலே வரக்கூடும். அப்படி வருகின்றபோது கூட, இந்தச் சட்டத்தை நாம் திருத்திக் கொள்வதற்கு, மறுபடியும் பார்த்து, திருத்திக் கொள்வதற்கு வழிவகைகள் இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் இதை ஒரு பொதுக் குழுவிற்கு விடவேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். இது 16-6-1992-லிருந்து அவசரச் சட்டத்தின் மூலமாக நடைமுறைக்கு வந்துவிட்டது. இப்போது பொறுக்கு குழுவிற்கு விடுவோமானால், காலம் கடந்துதான் பொறுக்குக் குழுவினுடைய அறிக்கை வரும். அந்த அறிக்கை வருவதற்குள்ளாக, 6 மாதத்திற்குள்ளாக அவசரச் சட்டத்திற்கு சட்ட வடிவு கொடுக்காவிட்டால், உள்ளபடியே இது காலாவதியாகிவிடும். பிறகு நடைமுறைக்கு வர முடியாமல் போய்விடும். இதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன.

பிற்பகல் 12-30

மற்றொரு கருத்தையும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள், இதற்கு என்று ஒரு ஆலோசனைக் குழு அமைக்கலாம் என்று. இந்த ஆலோசனைக் குழுவை இந்தச் சட்டத்திலே சேர்க்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் அவர் கூறிய அந்தக் கருத்தை நான் கூட ஏற்றுக் கொள்கிறேன். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவரைப் பொறுத்து, மாநகரைப் பொறுத்து, ஒரு ஆலோசனைக் குழுவை வைத்து அவர்கள் கொள்கைகளை வகுத்து ஆணையாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் கொடுப்பார்களானால், வசதி வாய்ப்புகளின்படி ஆணையாளர்கள், அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடந்து கொள்வதற்கு வசதி ஏற்படும். இதைச் சட்டத்தில

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சேர்த்து, இவர்களை கேட்டுக்கொண்டுதான் இதைச் செய்ய வேண்டுமென்று வைத்து விடுவோமேயானால், நடைமுறைப் படுத்துகின்ற போது ஆணையருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் பல சங்கடங்கள் வரும். அவ்வப்போது இந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் கூட்டப்பெற்று முடிவு எடுக்கின்ற தன்மைகள் வரா. எந்த வகைகளில் முடிவு எடுக்கலாம் என்று அதை ஆணையருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் சொல்லி இருக்கிறோம் அல்லவா ? எந்தெந்த இடங்களில் பொது போஸ்டர்கள் ஒட்டலாம் என்பதை எல்லாம் எடுத்துச் சொல்வதற்கு இப்படி ஒரு குழு அமைவது கூட நல்லதுதான். ஆகவே இச்சட்டத்தில் 'ரூல்ஸ்' வகுக்கும்போது ஒரு ஆலோசனைக் குழு அமைத்து வழிவகை செய்யலாம். இந்த ஆலோசனைக் குழு எந்தெந்த இடங்களைக் சுட்டிக் காட்டுகிறதோ, அதை மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றவர்களும் ஏற்றுக் கொண்டு, அந்த இடங்களில் போஸ்டர்கள் ஒட்டுவதற் குரிய இடம் என்று சொல்லி, அதைச் செய்வதற்கு இது மிகமிகப் பயன்படும். அதைச் சட்டத்தில் சேர்க்க வேண்டாம். ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் தந்திருக்கிற அந்தக் கருத்தை இந்த அவையிலே சொல்வ தன் காரணமாக 'ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்ஸிலே' அதைச் சேர்த்து, அதை நடைமுறைப்படுத்தலாம். அந்த நோக்கத்தை நிறைவேற்றலாம். அதை நடைமுறைப் படுத்துகின்றபோது, வேறு பல சங்கடங்கள் ஏற்படுமே யானால், அந்தச் சங்கடங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு நாம் திருத்தங்கள் கொண்டுவருவதற்கு வாய்ப்புகள், முறைகள் எல்லாம் இருக்கின்றன. ஏனென்றால் முதன்மை யாக இருக்கின்ற காரணத்தாலே இப்படிப்பட்ட சட்டங் களை எடுத்த எடுப்பிலே நாம் நிறைவேற்றிவிட முடியாது. இதிலே பல சிரமங்கள் இருக்கத்தான் செய்யும். நாளடைவில் காணுகின்றபோது இதனுடைய முக்கிய நோக்கம், அழகுபடுத்த வேண்டுமென்பது தெரியவரும். இப்போது இந்த முயற்சிகளை எடுத்தால்தான், இன்னும் 10 ஆண்டு, 15 ஆண்டு, 20 ஆண்டுகள் கழித்து, மக்களுக்கு ஒரு நம்பிக்கையும், பழக்கமும், பயிற்சியும் ஏற்படுகின்றபோது நாம் எதிர்பார்க்கின்ற விளைவுகள், பின்னர் ஏற்படும். இப்போது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் இங்கே எடுத்துக் குறிப்பிட்டார் கள். இச்சட்டம் வந்ததன் காரணமாக அண்ணா சாலை யிலுள்ள அண்ணா மேம்பாலத்தை எல்லாம் தூய்மைப் படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள்.

இது மெல்ல மெல்ல பல்வேறு இடங்களில் வரும்போது, இப்போது உடனடியாக நமக்கு அதனுடைய பலன் தெரியாவிட்டாலும், 15, 20, 25 ஆண்டுகள் கழித்து ஒரு அழகான நகரம் சென்னை, பசுமையான நகரம் சென்னை,



ஒரு தூய்மையான நகரம் சென்னை, ஒரு பொலிவுமிக்க நகரம் சென்னை என்று ஆகும். அத்தனை பேருடைய ஒத்துழைப்பையும் பயன்படுத்துகின்ற வகையில், இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக் கிறது. இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று மாண்பு மிகு உறுப்பினர் பெருமக்கள் அத்தனை பேரையும் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடி வுற்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் தனது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தர தாஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவை யின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 7

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பிரிவு 7, திரு. மா. சுந்தர தாஸ் அவர்கள் தன் திருத்தத்தை முன்மொழியலாம்.

THIRU. M. SUNDARADOSS: Hon. Speaker, Sir, I move that--

"In move Clause 7, in the proposed new Section 4-A in Sub-clause (ii), *add* the following between the words 'Order;' and 'or':-

'and in exercising the right, the Commissioner of police or such other officers shall constitute an Advisory Committee consisting of--

(a) a person from women community;

(b) a person from handicapped;

(c) a person from Medical Professionals:

(d) a person from Legal Professionals;

(e) a person from Cine Field;

(f) a person from Adver isers;

(g) a person from any Trade Union;

(h) a person from Educational Institution; and

(i) a person from Social Welfare Organisation.

Such recommendation of the Advisory Board shall be binding on the authority permitting the advertisement.' "

The amendment was duly seconded.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இதிலே வேறு ஏதாவது கருத்துச் சொல்ல விரும்புகிறீர்களா?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்கள் எடுத்து வைத்த அந்தக் கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அந்தக் கருத்தினால் பலன் உள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இதை நான் முதலிலே சொல்லியபடி இந்தச் சட்டத்திலே சேர்க்காமல் விதிமுறைகளில் சேர்ப்பதற்கு இடத்



தைக் கொடுத்து, ஒரு ஆலோசனைக் குழு அமைக்க வேண்டுமென்ற வகையில் ஏற்படுத்தலாம் என்ற அளவிற்கு செய்து விடலாம். செய்து விட்டால், சுவரொட்டிகள் ஒட்டுவதற்கான வாய்ப்புகள், வசதிகள், அதற்கான நோக்கங்களைக் கொண்டிருப்பவர்களை பிரதிநிதிகளாக வைத்து, இந்தக் குழு அமைத்தால் தான் சரியாக வரும். அதாவது ஊனமுற்றவராக இருப்பவர் ஒருவர் வரவேண்டும் அப்படி வேண்டும். இப்படி வேண்டுமென்றோ கேட்பதைவிட, இதிலே அதிகமான அளவிற்கு விளம்பரம் செய்கிறவர்கள், சினிமா விளம்பரம் செய்கிறவர்கள், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், இப்படிப்பட்டவர்கள் ,பொதுவாக இருக்கிறவர்களை சென்னை மாநகரிலிருந்தும், பிற இடங்களிலிருந்தும் சேர்த்துக் கொண்டால், அவர்கள் என்னென்ன சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதை எடுத்துச் சொல்வார்கள்.

எந்த முறையிலே மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது ஆணையரோ நடந்துகொள்ள வேண்டும் என்று எடுத்துச்சொல்வார்கள். அதற்கு ஏற்றபடி இவ்வளவு பேர்கள் என்று கூட கணக்கு போட வேண்டிய அவசியம் இல்லை. பத்தோ பதினொன்றோ பதினைந்தோ இவ்வளவு பேர்கள் என்று போட்டுக் கொண்டு ஒரு அட்வைசரி பாடி என்று வைத்துக் கொண்டு, அவர்கள் உருவாக்கித் தருகிற பாலிசி, கொள்கையினுடைய அடிப்படையில் ஆணையரோ மாவட்ட ஆட்சித் தலைவரோ இயங்க வேண்டும் என்று ரூலே போட்டு விடலாம். அந்த வகையிலே ஏற்படுத்தினால் இந்த திருத்தத்தை கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.35

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு நிதியமைச்சரின் விளக்கத்திற்குப் பின்னரும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன் திருத்தத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

<u>திரு. மா. சுந்தரதாஸ்:</u> இல்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பிரிவு 7 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

[1992 செப்டம்பர் 25

பிரிவுகள் 8 முதல் 10 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 8 முதல் 10 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்றும தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1992) நிறை வேற்றப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்.)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



1992 செப்டம்பர் 25]

## (ஆ) நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1992

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5)சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 60/1992). மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 60/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவல் எடுத்த முடிவின்படி இந்தச் சட்டமுன்வடிவு விவாதம் இன்றி வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்.)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும்.

என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்.)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்.)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 60/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்.)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

<u>(இ) எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 50/1992). மாண்புமிகு நிதியமைச்சர்.





<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1992) @ ஆய்வுக்குப் எடுத்துக் கொள்ள பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர்.

*<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்டமுன் வடிவாக இந்த சட்ட முன்வடிவு இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த சட்டமுன்வடிவை இங்கே அறிமுகம் செய்வதற்கு முன்பாக சென்ற ஆகஸ்டு மாதத்தில் இதை ஆளுநர் அவர்கள் அவசரச் சட்டமாக பிறப்பித்திருக்கிறார்கள். நேற்றைய தினம் நிதியமைச்சர் அவர்கள் துணை மானிய கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இன்றைய தினம் இதற்கு முன்பாக நிதி ஒதுக்க சட்டமுன்வடிவினை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

பிற்பகல் 12.40

சட்டப் பேரவையைப் பொறுத்தவரையில் அரசாங்கம் எந்த மானியத்திற்காக செலவிட வேண்டும் என்று விரும்புகிறதோ அதனுடைய மதிப்பீடுகளை சட்டப் பேரவை முன்னாலே வைத்து சட்டப்பேரவையினுடைய சம்மதத்தைப் பெற்றதற்குப் பின்னால் அந்தத் தொகையினை கன்சாலிடேட்டட் ஃபண்ட், அதிலேயிருந்து வழங்க வேண்டும் என்பதற்காக நிதி ஒதுக்கச் சட்டத்தையும் இங்கே நிறைவேற்றியாக வேண்டும். ஆக அரசாங்கம் கோரிய தொகையை வழங்குவதற்கும் இந்த சபைக்குத்தான் அதிகாரம் உண்டு, அப்படி வழங்கிய தொகையை கன்சாலிடேட்டட் ஃபண்ட், அதிலே இருந்து பெறுவதற்கும் அனுமதிப்பதற்கு இந்தச் சட்டப் பேரவைக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. ஆனால், இந்த எதிர்பாராத செலவு நிதியம் என்பது சட்டப் பேரவையிலே சம்மதம் பெற்றதைத் தவிர திடீரென்று எதிர்பாராதச் செலவுகள் வந்து விட்டால் என்ன செய்வது? அந்தச் செலவுகளுக்காக ஒரு சிறிய தொகையை ஒரு நிதியமாக ஏற்படுத்தி

---

@21-9-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்] [1992 செப்டம்பர் 25

இருக்கிறோம். கன்டின்ஜென்சி ஃபண்ட்; கன்சாலிடேட்டட் ஃபண்டுக்கு பதிலாக இங்கு ஒரு கன்டின்ஜென்சி ஃபண்ட். அந்த கண்டின்ஜென்சி ஃபண்ட், எதிர்பாராத செலவு நிதியத்திலிருந்து எப்போதாவது தொகை பெற வேண்டும் என்றால், ஆளுநர் அவர்களுடைய அனுமதியின் பேரில் அந்தத் தொகையை எடுத்துச் செலவு செய்யலாம். அதைப் போல 75 கோடி ரூபாய் இங்கே இருக்கிறது. இந்தத் தொகையினை எடுத்துச் செலவு செய்வதில் தவறு கிடையாது. பின்னர் இதே சட்டப்பேரவைக்கு முன்னாலே வந்து அதற்கு சம்மதம் பெற்றாக வேண்டும், அங்கீகாரம் பெற்றாக வேண்டும். அங்கீகாரம் பெற்றதற்குப் பின்னாலே மீண்டும் அந்தத் தொகை அந்த எதிர்பாராத செலவு நிதியத்திற்கு போய் விடுகிறது. ஆக ஆண்டு முடிவில் மீண்டும் அதே 75 கோடி ரூபாய் அங்கே நிதியத்திலே இருக்கும். ஆனால், இப்போது முயற்சிகள் மேற்கொள்ள இருப்பது எதற்கு என்று சொன்னால் அந்த 75 கோடி ரூபாயை 150 கோடி ரூபாயாக மாற்ற வேண்டும், அதிகரிக்க வேண்டும் என்று ஒரு குறுகிய காலத்திற்காக இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகஸ்ட் மாதம் 10-ஆம் தேதியிலிருந்து 1993-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதி முடிய 75 கோடி ரூபாயாக இருக்கின்ற நிதியம் 150 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட வேண்டும். "The corpus of the Contingency Fund should be enhanced from Rupees seventy five crores to Rupees one hundred and fifty crores" என்று கேட்டிருக்கிறார்கள். இது நல்ல நிதி நிர்வாகம் ஆகுமா என்றால் நிச்சயமாக நல்ல நிதி நிர்வாகம் ஆகாது. ஏனென்றால், செலவழிக்கப்படுகின்ற ஒவ்வொரு பைசாவுக்கும் இந்தச் சபையின் அங்கீகாரம் பெறாமல் செலவழிக்கக் கூடாது. அவசரமான செலவுகளுக்கு மட்டுமே எவ்வளவு தொகை தேவை? 75 கோடி ரூபாய் போதும் என்று சொல்லி அதை இங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை அதிகரிக்க வேண்டும், வேறு வழியில்லை என்று சொன்னால் இந்தச் சபைக்கு முன்னாலே வரவேண்டுமே தவிர அதற்குப் பதிலாக குறுக்கு வழியாக ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க முடியாது.

இது போன்ற சட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசியல் சட்டத்திலே தெளிவாக விதி முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இது மணி பில்லிலே வரும். மணி பில் என்று சொன்னால், அரசு முதன் முதலாக சட்டப்பேரவையிலேதான் நிறைவேற்ற வேண்டுமே தவிர ஆளுநருடைய விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது. மேலவை இருந்தால் மேலவையிலே கூட அதைக் கொண்டுவர முடியாது. முதலிலே இங்கே கொண்டு வந்து அதை நிறைவேற்றியாக வேண்டும். இந்த கன்சாலிடேட்டட் ஃபண்டும், கன்டின்ஜென்சி ஃபண்டும் அரசியல் சட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரே பிரிவிலே வருகிறது என்று 199 (1) (சி) யிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இதே பிரிவு பாராளுமன்றத்திலே உண்டு. அதிலே, கௌல் அண்டு ஷக்தரில் பார்த்தீர்



1992 செப்டம்பர் 25] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்]

களானால் அதிலேயே தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். "The custody of the Consolidated Fund or the Contingency Fund of India, the payment of monies into or the withdrawal of money from any such fund." Not only that. "The appropriation of monies out of the Consolidated Fund of India..." எனவே அதை அவசரச் சட்டமாகப் பிறப்பிக்க முடியாது என்பதை மிகத்தெளிவாக பின்னர் வேறொரு இடத்திலே கூட அவர் குறிப்பிட்டிருக்கிறார். எந்தக் காரணத்தைக் கொண்டும், அதை அவசரச் சட்டமாக ஆளுநரோ அல்லது ஜனாதிபதியோ பிறப்பிக்க முடியாது.

சென்ற ஆண்டு கூட நம்முடைய சபை கலைக்கப்பட்டிருந்த நேரத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டிய ஒரு அவசர நிலைமை ஏற்பட்டபோது ஜனாதிபதி அவர்களை கேட்டுக்கொண்டார்கள். அனைத்து கட்சிகளையும் கேட்டுக் கொண்டார்கள். 'நிறைவேற்றித்தராவிட்டால் சம்பளம் கொடுக்க முடியாது. அரசு அலுவலர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாது. எனவே நீங்கள் சிறப்பாக இதற்காக இன்னொரு நாள் கூடியிருந்து நிறைவேற்றித்தர வேண்டும்' என்று கேட்டுக் கொண்டபோது மக்களவை நிறைவேற்றிக் கொடுத்தது.

Ordinance for appropriation of the Consolidated Fund: "An Ordinance for the appropriation of any money out of the Consolidated Fund is invalid if the relative demand for the grants have not been placed before, considered and assented to by Lok Sabha." மக்களவை இல்லாத நேரத்தில், மக்களவை கலைக்கப்பட்டிருக்குமானால் ஒரு மாநிலத்தைப் பொறுத்த வரையில் மாநிலங்கள் அவை நிறைவேற்றலாம். மாநிலங்கள் அவைக் கூட்டம் இல்லாவிட்டால் அதற்காக தனியாக மாநிலங்கள் அவையைக் கூட்ட வேண்டும் என்று மிகத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

"For the appropriation of money for a State the administration of which has been taken over by the President under a Proclamation issued by him, the budget for that State according to existing practice, is not certified by Ordinance, the underlying principle being that no money can be spent out of the Consolidated Fund without the sanction of Parliament. Hence, if a contingency arises for passing an Appropriation Bill regarding such a State and Rajya Sabha is not in session, that House is specifically summoned for this purpose" என்று மிகத் தெளிவாக கௌவுல் அண்டு சக்தரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12.45

*<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இங்கே கண்டின்ஜென்சி பண்டை

அதிகப்படுத்துவது குறித்து சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஒரு விளக்கத்தைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கண்டின்ஜென்சி பண்டை அதிகப்படுத்தவேண்டுமென்று இந்த அரசு ஏன் கருதுகிறது? குறுக்கு வழியில் எதையும் சாதிக்க வேண்டுமென்று இந்த அரசுக்கு எண்ணம் கிடையாது. அந்த வார்த்தையை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பயன்படுத்தியதால் அதற்கு இந்த விளக்கத்தைக் கூறுகிறேன். ஆனால், இந்த கண்டின்ஜென்சி பண்டு எதற்காக பயன்படுத்தப்படுகிறது? சில சமயங்களில் நேச்சுரல் கலாமிட்டீஸ் ஏற்படுகின்றன. புயல்கள் ஏற்படுகின்றன. அதனால் எத்தனையோ சேதாரங்கள் ஏற்படுகின்றன. அப்போது பாதிக்கப்பட்ட மக்கள் எல்லாம் மாநில அரசிடம்தான் நிவாரணம் கோருகிறார்கள். உதவி கோருகிறார்கள். இதற்காக, 'நோ டவுட்' மத்திய அரசு கலாமிட்டி ரிலீப் பண்டு என்ற ஒன்றை ஏற்படுத்தி இருக்கிறது. அதில் ஒரு மிகச் சிறிய அளவு தொகைதான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்திற்கு அப்படி 39 கோடி ரூபாயோ என்னவோதான் கலாமிட்டி ரிலீப் பண்டாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு 1991 ஆம் ஆண்டு புயல் வீசிய போது இங்கே பலத்த சேதம் ஏற்பட்டது. மத்திய அரசிலிருந்து கூட இங்கே ஒரு குழுவினர் வந்தார்கள். அவர்களும் சேதத்தைப் பார்த்தார்கள். தமிழக அரசும் ஒரு அறிக்கையை தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியது. அதில் இங்கே ஏற்பட்ட சேதம் ஏறத்தாழ 500 கோடி ரூபாய் அளவுக்கு இருந்தது என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. குறைந்தபட்சம் 300 கோடி ரூபாயாவது மத்திய அரசாங்கம் தமிழகத்திற்கு புயல் நிவாரண நிதியாக வழங்க வேண்டுமென்று கேட்டோம். ஆனால் மத்திய அரசு எதுவுமே கொடுக்கவில்லை. அவர்கள் அனுமதித்தது வெறும் 40 லட்சம் ரூபாய்தான். அதுவும் எதற்காக என்று அவர்களாகவே கணக்கிட்டு இத்தனை பேர் இந்தப் புயலில் இறந்து போனார்கள் அவர்களுடைய குடும்பங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் கொடுக்க வேண்டுமென்று சொல்லி அந்த பர்ப்பசையும் அவர்கள் ஸ்பெசிபை செய்து வெறும் 40 லட்சம் ரூபாயை மட்டும் கொடுத்தார்கள். அப்படியானால் எத்தனையோ எலக்ட்ரிக் கனெக்ஷன் துண்டிக்கப்பட்டன; கேபில்கள் துண்டிக்கப்பட்டன; சாலைகள் பழுதடைந்தன; எத்தனையோ கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. இதற்கான நஷ்ட ஈட்டிற்கு எங்கே போவது? அப்போது மாநில மக்கள் மாநில அரசை அணுகி எங்களுக்கு உதவி தாருங்கள் என்று கேட்கும்போது உதவி செய்யவேண்டிய கடமை மாநில அரசுக்கு இருக்கிறது. அந்தப் பணத்தை எங்கிருந்து எடுப்பது, அதற்குத்தான் இந்த கண்டின்ஜென்சி பண்டு வேண்டும்; அதை அதிகப்படுத்த வேண்டும் என்று கருதினோம். ஒவ்வொரு முறையும் இப்படி ஒரு நேட்சுரல் கலாமிட்டி ஏற்படும் போதெல்லாம் சட்டசபையைக் கூட்டவேண்டும், சட்டசபையின் அனுமதியைப் பெற்றுதான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி அளிக்க வேண்டும் என்றால், அது நடைமுறையில் சாத்தியமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்க வந்த நேரத்தில் குறுக்கு வழி என்கிற சொல்லை நான் பயன்படுத்தினேன் என்று சொன்னார்கள். அதை நான் தவறான நோக்கத்தில் பயன்படுத்தவில்லை. பொதுவாக ஜனநாயகத்தின் தொட்டில் என்று வர்ணிக்கப்படுகின்ற இங்கிலாந்தில்கூட சட்டப் பேரவை சம்மதம் பெறாமல், நாடாளுமன்றத்தினுடைய சம்மதம் பெறாமல் எந்த வரியையும் விதிக்க முடியாது; விதித்த வரியிலிருந்து எடுத்து செலவு செய்ய முடியாது என்பது ஜனநாயகத்தினுடைய ஆரம்பப் பாடங்களில் ஒன்று. அதே போல் நம்முடைய நாட்டில் நாம் அதை ஏற்றுக்கொள்கிறோம். நாம் விதிக்கின்ற வரியாக இருந்தாலும், விதிக்கப்பட்ட வரி கன்சாலிடேட் பண்டுக்கு போய் அதை எடுத்து செலவு செய்ய வேண்டும் என்று சொன்னாலும், நிச்சயமாக இந்த அவையின் சம்மதம் நாம் பெற்று ஆக வேண்டும். அதைத்தான் நான் நினைவுபடுத்தினேன். இந்த வகையில் திடீரென்று செலவுகள் ஏற்படுகின்றன என்றால் என்ன செய்ய வேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக ஒரு வழிதான். இந்த 75 கோடி ரூபாயில் முடியவில்லை என்று சொன்னால், இந்தப் பேரவையைக் கூட்டி ஆக வேண்டும். இல்லாவிட்டால் நம்முடைய மதிப்பீடுகள் முதலில் போடுகிறோம் அல்லவா, அந்த மதிப்பீடுகளிலேயே அதிகரிக்கலாம்.

உதாரணமாக, இதிலே எடுத்துக்கொண்டால் எந்த செலவினத்தையும் நான் ஆட்சேபிக்கவில்லை. அனைத்து செலவினங்களையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், 2, 3 செலவினங்களை நிச்சயமாக முதல் துணை மதிப்பீடுகள் வைத்தோம் அல்லவா ஏப்ரல் மாதத்தில், அதிலேயே சேர்த்து இருக்க முடியும். வேட்டி சேலைகளை அதிலே சேர்த்து இருக்க முடியும். அதேபோல் விவசாயிகளுக்கு தரப்படுகின்ற நிவாரணத்தையும் முதல் துணை மதிப்பீட்டிலேயே சேர்த்து இருக்க முடியும். இந்த இரண்டையும் முதல் துணை மதிப்பீட்டில் சேர்த்து இருப்பீர்களானால் நிச்சயம் நீங்கள் இதற்கு போய் கண்டின்ஜென்சி பண்டில், எதிர்பாராத செலவு நிதியத்திலிருந்து எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்காது. அதைத்தான் நான் சொல்லுகிறேன். சட்ட சம்மதம் பெற்றுதான் செய்யவேண்டும் என்பது விதி. அந்த விதியை நினைவூட்டுகிறேன். நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; எப்போது வேண்டுமானாலும் நாம் நிதியை அதிகரித்துக் கொள்ளலாம், அதற்கு அவசரச் சட்டம் பிறப்பிக்கலாம் என்றால், இன்று நாம் ஆட்சி பீடத்தில் இருந்தாலும்கூட என்ன ஏற்படும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். 75 கோடி ரூபாய் என்பது ஒரு நிர்ணயிக்கப்பட்ட தொகை. அந்தத் தொகையை எப்போது வேண்டுமானாலும் அவசரச் சட்டத்தின் மூலம் அதிகரித்துக் கொள்ளலாம் என்கிற வாதம் நல்ல வாதம் ஆகாது; அது முறையும் ஆகாது; அதை நிச்சயமாக யாரும் ஏற்றுக்கொள்ள

முடியாது. அது தவறான ஒரு வாதம். ஏனென்றால், 'மணி பில்' என்று சொல்லிவிட்டு, அந்த 'மணி பில்லை' எப்படி நிறைவேற்றவேண்டுமென்று அரசியல் அமைப்புச் சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய அவை விதிகளிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய அவை விதிகளுக்கு முரணாக, அரசியல் சட்டத்திற்கு முரணாக ஆளுநர் அவசரச் சட்டம் பிறப்பித்து இருக்கிறார் என்பதுதான் என்னுடைய வாதம். அது தவறு, அதைத் தவிர்த்து இருக்கலாம். ஆகஸ்ட்டிலேயே இந்தச் சபையைக் கூட்டி இருக்கலாம். அதிலே தவறு கிடையாது. ஜூலை மாதத்திலே இந்தச் சபையைக் கூட்டியிருக்கலாம். தவறு இல்லை. துணை மானியக் கோரிக்கையின்போது, முதல் துணை மானியக் கோரிக்கையிலே இன்னும் எங்களுக்கு அதிகத் தொகை வேண்டும் என்றும், இந்தத் தொகை போதாது என்றும் சொல்லலாம்.

பிற்பகல் 12-50

ஆனால், நம்முடைய செலவினமே இப்போது அதிகமாகி விட்டது. முன்பிருந்தது 75 கோடி; முதல் சட்டம் 50 லட்சம் தானே. 50 லட்சத்திலே இருந்து 75 கோடிக்கு வரமுடியுமேயானால், இந்த 75 கோடியிலே தானே இருக்க வேண்டும். நிரந்தரமாக இப்போது 7 மாதத்திற்கு, 60 மாதத்திற்கு என்று கேட்டு இருக்கிறீர்கள். நிரந்தரமாகவே இந்த நிதியத்தினை அதிகப்படுத்த வேண்டும். 75 கோடி என்பது போதாது. 100 கோடியாக்க வேண்டும் அல்லது 150 கோடியாக்க வேண்டும் என்று சொல்லி இந்தச் சபையினுடைய சம்மதம் பெற்று ஒரு புதிய சட்டத்தையே நீங்கள் கொண்டு வரலாம். புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரலாம். அதை நான் ஆட்சேபிக்க மாட்டேன்; ஆட்சேபிக்கவில்லை. ஏனென்று சொன்னால் இதே வாதத்தினை நம்முடைய இரண்டு கட்சிகளும், முன்பு நாம் இதே சபையில் வைத்திருக்கிறோம். கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டின்ஜென்சி ஃபண்டை அதிகப்படுத்துவதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கொள்கை அளவிலே எதிர்க்கிறாரா என்று அறிய விரும்புகிறேன். அப்படி எதிர்க்கிறார் என்றால், அண்டை மாநிலமான கர்நாடகத்திலே அவர்கள் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சிதான் இப்போது ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. அந்த கர்நாடக மாநிலத்தில் உள்ள காங்கிரஸ் ஆட்சி பன்மடங்கு கண்டின்ஜென்சி ஃபண்டை ஏற்றியிருக்கிறது. சரியான விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் நான் அறிந்தவரை





ஏறத்தாழ 300 கோடி ரூபாய் அளவிற்கு அதை உயர்த்தியிருக்கிறார்கள். அப்படியானால், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அதையும் எதிர்க்கிறாரா?

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, கண்டின்ஜென்சி ஃபண்டை அவசரச் சட்டம் கொண்டு வந்து அதிகரிப்பது என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இதை எந்த மாநிலம் கொண்டு வந்தாலும் அதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இந்தச் சட்டத்தினை இந்த அவையிலே கொண்டு வந்து நிறைவேற்றிய அந்த பெரியவரிடத்திலேயே நான் பேசியிருக்கிறேன். இப்போது அல்ல, இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னாலே, அவர் இன்னும் பெரிய பதவிக்குப் போனதற்குப் பின்னாலே நான் அவரிடத்திலே கேட்டேன். "To enhance the corpus of the Contingency Fund, is it fair on the part of the Governor to promulgate an ordinance" என்று அவரிடத்திலே கேட்டேன். அவருடைய பெயரை இங்கே குறிப்பிடுவது முறையல்ல என்று நான் நினைக்கிறேன். அவரும் இப்போது ஒரு ஆளுநராக இருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டதைப்போல, இதே கேள்வியைத்தான் என்னையும் அவர் கேட்டார். அந்தத் தொகையினையே அதிகரிக்கக்கூடாதா என்று. நிதியத்தினை அதிகரிக்கக் கூடாது என்று சொல்கிறாயா என்று கேட்டார். நான் அப்படிச் சொல்லவில்லை. நிதியத்தை அதிகரிக்கலாம். நிதியத்தை அதிகரிப்பதற்கு சபைக்கு முன்னாலே வந்து சபையினருடைய சம்மதம் பெற்று நிதியத்தை அதிகரிப்பதை நான் எதிர்க்கவில்லை. அதை தாராளமாகச் செய்யலாம். ஆனால், ஆளுநர் நிதியத்தை அதிகப்படுத்த அவசரச் சட்டம் பிறப்பிக்க முடியுமா என்று நான் அவரை கேட்டபோது அவர் சொன்னார், நீ சொல்லுகின்ற நிலை சரி என்று. அதையேதான் நான் இன்னமும் வைத்திருக்கிறேன். இப்போதும் சொல்கிறேன், நிதியத்தை அதிகரிக்கக்கூடாது. நிதியத்தை அதிகரிப்பதே தவறு என்று நான் சொல்லவில்லை. நிதியத்தை தாராளமாக அதிகரித்துக்கொள்ளுங்கள். புதிய சட்டம் கொண்டு வாருங்கள். 75 கோடி என்பதற்குப் பதிலாக 150 கோடி என்று இந்தச் சபையினுடைய சம்மதம் பெற்று நீங்கள் அதை நிறைவேற்றுங்கள். நான் உங்களுக்கு ஆதரவு தருகிறேன். ஆனால் நிதியத்தை அதிகரிப்பதற்காக, "To enhance the corpus of the Contingency Fund". அதற்காக அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்காதீர்கள். அவசரச் சட்டம் பிறப்பிப்பது தவறு. அதை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. அது நல்ல நிதி நிர்வாகம் ஆகாது. கண்டிப்பாக, வருங்காலத்திலாவது இதைத் தவிர்க்கவேண்டுமென்று கோரி, அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரிதி இளம்வழுதி சுருக்கமாக இந்தப் பிரச்சினையின்மீது மட்டும் நீங்கள் பேசி முடிக்க வேண்டும். நேரம் ஆகி விட்டது.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவினங்களின் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்டமுன்வடிவின் மீது நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு தாங்கள் அளித்திருக்கின்ற வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நேரம் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் அதிகமாக இல்லை.

திரு. இளம்வழுதி: நேரம் அதிகமாக இல்லாத காரணத்தால், விவாதத்தை நீட்டிக்காமல் சுருக்கமாகவே நான் சொல்ல விரும்புகிறேன். 75 கோடியாக இருந்ததை 150 கோடியாக மாற்றுவதற்கு ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்தை சட்டமாக்குவதற்கு இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். 75 கோடி என்று இருந்ததை ஒரேயடியாக 100 சதவீதம் உயர்த்தி 150 கோடியாக ஆக்கியிருக்கிறீர்கள். இது வரவேற்கக்கூடிய செயல் அல்ல. அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடிய வருமானமெல்லாம் கன்சாலிடேட்டட் பண்ட் என்று சென்றுவிடும். அதிலிருந்து செலவினங்களுக்கு பணம் எடுக்கவேண்டுமென்றால், அதற்கான காரணத்தைச் சொல்லி இந்த மன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும். அதற்குப் பிறகு தான் நீங்கள் பணம் பெற முடியும். ஆனால், எதிர்பாராச் செலவு நிதிக்கு ஒதுக்கியிருக்கிற தொகையை இரட்டிப்பு ஆக்குவதன்மூலம் நீங்கள் நினைத்த செலவுகளையெல்லாம் இந்த மன்றத்தின் அனுமதியைப் பெறாமல் செய்ததற்குப் பிறகு தகவல் தருவதற்கு வேண்டுமானால் வசதியாக இருக்கும்.

பிற்பகல் 12-55

எதிர்பாராத செலவு என்றால் என்ன? நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட இங்கே பேசுகிறபோது சொன்னார்கள். எதிர்பாராத செலவு என்றால், என்னவென்றால் புயலால், வெள்ளத்தால், நெருப்பால், வறட்சியால், பஞ்சத்தால், பருவமழை பொய்த்த காரணத்தால், இயற்கையின் சீற்றத்தால், வாந்தி பேதி, காலரா போன்ற கடுமையான நோய்களால் மக்கள் பாதிக்கப்படுகிற நேரத்தில் அரசாங்கம் ஓடிவந்து உதவி செய்வதற்கு தேவைப்படுவது தான் எதிர்பாராத செலவு நிதி. ஆனால் இங்கே என்ன குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்றால் எதற்காகச் செலவிடப் போகிறார்கள் என்றால் நேரு விளையாட்டு அரங்கத்தைப்





புதிதாக மாற்றியமைப்பதற்கும், திரைப்பட நகரை உருவாக்குவதற்கும், சிறைச்சாலைகளை நவீனப்படுத்துவதற்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். சிறைச்சாலைகளை நவீனப்படுத்துவது வேண்டுமானால் இந்த அரசுக்கு அவசியமானதாக இருக்கலாம். ஏனென்றால் எதிர்த்துப் போராடுகிற எதிர்க்கட்சிகளை எல்லாம் உள்ளே அடைத்து, தற்போது இடம் இல்லாத காரணத்தால் சிறைச்சாலைகளை நவீனப் படுத்தவேண்டியது அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சிகளை ஒடுக்குகிற எண்ணம் இந்த அரசுக்கு எப்போதும் கிடையாது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் இன்றைக்கும் செல்வாக்கு மிக்க தலைவராக சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களைப்போல் அல்ல, நீங்கள் ஆளும் கட்சியில் இருக்கும்போது கட்சிகளை இரண்டாக உடைத்து, உங்களுக்குத் துதிபாடியவர்கள் இருந்தார்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரு விளையாட்டு அரங்கத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்கு இந்த தொகையை இப்போது அவசரமாக செலவிடுவது தேவைதானா என்ற கேள்வி இங்கே எழுப்பப்பட்டது. அதற்கு நான் விளக்கம் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நேரு விளையாட்டு அரங்கம் எதற்காக இப்போது புதுப்பித்துக் கட்டப்படுகிறது என்றால் ஒரு 'இன்டர்நேஷனல் ஃபுட்பால் டோர்னமெண்ட்' ஜனவரி மாதத்தில் நடைபெற உள்ளது. முன்பு பலமுறை இந்த இன்டர்நேஷனல் டோர்னமெண்ட் விளையாட்டுப் போட்டி நடத்துகிற வாய்ப்பு தமிழகத்திற்குக் கிடைத்தும்கூட இன்டர்நேஷனல் ஸ்டாண்டர்ட்-க்கு ஒரு ஸ்டேடியம் இங்கே இல்லாத காரணத்தால் வாய்ப்பை விட்டுக்கொடுக்க வேண்டிய அவசியம், நிர்ப்பந்தம் பல சந்தர்ப்பங்களில் தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிறது. முதல் முறையாக ஒரு இன்டர்நேஷனல் டோர்னமெண்ட் தமிழகத்தில் நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான் அவசரம், அவசரமாக இந்த நேரு விளையாட்டு அரங்கத்தைப் புதுப்பித்துக் கட்டும் பணி இப்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த விளையாட்டுப் போட்டிக்கான தேதி ஜனவரி மாதத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்திற்காகவும் விளையாட்டுப் போட்டியின் தேதி

மாற்றப்படாது. எனவே அந்தத் தேதிக்குள் அங்கே கட்டி முடித்து ஆக வேண்டும். இதற்காக மத்திய அரசாங்கத்திடம் உதவி கோரினோம். ஆனால் மத்திய அரசாங்கம் மிகவும் குறைந்த தொகையைத்தான் அனுமதித்து இருக்கிறது. 2 கோடி ரூபாய் மட்டுமே அனுமதித்து இருக்கிறது. ஆனால் விளையாட்டு அரங்கம் கட்ட 30 கோடி ரூபாய் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் என்ன கூற வருகிறார்? தமிழகத்தில் ஒரு சரித்திரம் படைப்பதுபோல் முதல் முறையாக ஒரு இன்டர்நேஷனல் லெவல் டோர்னமெண்ட், ஒரு ப்ரெஸ்டிஜியஸ் டோர்னமெண்ட் நடைபெறக்கூடாது என்று கூறுகிறாரா? எனவே அதற்காகத்தான் அவசரமாக இந்த கன்டின்ஜென்சி ஃபன்ட்-ஐப் பயன்படுத்தி நிதி எடுத்தோமே தவிர வேறு எந்தத் தவறான காரியத்திற்காவும் அல்ல என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம் வழுதி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதைப் போல் இந்த கன்டின்ஜென்சி பில் (குறுக்கீடு) இல்லை. அதன் உள்ளே போய் ஒவ்வொன்றுக்கும் நீங்கள் விளக்கம் கேட்டுக் கொண்டு போனால் அது இந்த நேரத்தில் முடியாது. (குறுக்கீடு) நீங்கள் எதிர்க்கிறீர்களா அல்லது ஆதரிக்கிறீர்களா? அதைச் சொல்லுங்கள்.

திரு. இளம்வழுதி : அப்படி என்றால் நான் பேசவேண்டியதே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியில்லை. எல்லாவற்றையும் பேசுவதற்கு இப்போது நேரம் இல்லை.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுப் போட்டி நடத்தக் கூடாது என்ற நோக்கத்தில் நான் சொல்லவில்லை, இதுபோன்ற முக்கியமான திட்டங்களைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே திட்டங்கள் தீட்டி பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் கொண்டு வந்து இருக்கலாம். ஆனால் எதிர் பாராத செலவு என்றால் புயல், இயற்கையின் சீற்றம், பஞ்சம், வறட்சி போன்றவற்றிற்காகச் செலவிடுவதுதான். அதைத்தான் நான் சொன்னேனே தவிர வேறல்ல. மேலும் நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது எதிர்க்கட்சிகளை நாங்கள் ஒடுக்கவில்லை என்று சொன்னார்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைபெற்ற பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் இந்த நிதித்



தேவையை ஏன் சேர்க்கவில்லை என்று உறுப்பினர் கேள்வி கேட்டு இருக்கிறார். காரணம், மத்திய அரசு உதவும் என்று எதிர்பார்த்துக் காத்து இருந்தோம். நானும் மத்திய கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. அர்ஜுன்சிங் அவர்களிடம் இதைப்பற்றிப் பலமுறை பேசி இருக்கிறேன். எனவே மத்துய அரசு நிச்சயமாக இந்த உதவி செய்யும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தோம. முடிவாக இப் போது முடியாது என்று அவர்கள் சொல்லிவிட்ட பிறகு நாம் என்ன செய்வது? எப்படியாவது தமிழ்நாட்டிலே இண்டர்நேஷனல் லெவலில் ஒரு டோர்னமெண்ட் நடத்தி னோம் என்ற பெயர் கிடைக்க வேண்டும், புகழ் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் செய்துகொண்டிருக் கிறோம். எனவே அரசாங்கம் என்கிறபோது We have to take into consiceration all a pects. We cannot say that wc should reglect the arena of sports. எனவே தவறான செலவினம் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி நீங்கள் இதனை எதிர்க்கிறீர்களா, ஆதரிக்கிறீர்களா என்று சொல்லி முடியுங்கள்.

பிற்பகல் 1-00

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுப் போட்டி ஆரம்பிக்கக்கூடாது என்ற நோக்கத்தில் நான் சொல்லவில்லை. மீண்டும் சொல்கிறேன். மத்திய அரசாங்கம் தரும் என்று எதிர்பார்த்தோம். அது தரவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அது உங்களுக்கும் உங்களுடைய தோழமைக் கட்சிக்கும் இருக்கிற நிலையை எடுத்துக் காட்டுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தேவை இல்லை. இது மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையிலே (குறுக்கீடு) நீங்கள் இதிலே விவாதத்தை நீட்டிக் கொண்டிருப்பது நல்லதல்ல. ஒரே நிமிஷத்தில் முடியுங்கள்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இறுதியாகக் குறிப்பிட விரும்புவது, நேரு விளையாட்டரங்கம் கட்டுங்கள், அதில் நல்ல போட்டிகளை நடத்துங்கள், அதற்குத் தமிழ்நாட்டிற்குப் பரிசுகள் கிடைக்க வேண்டுமென்று நான் என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அந்த நேரு விளையாட்டரங்கம் கட்டுவதற்கு முறைப்படி டென்டர் கோராமல்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் இந்த விவாதத்தில் வராது.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்கும் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். நேரு விளையாட்டரங்கத்தைப் புதுப்பித்துக் கட்டுவது என்பது இது ஒரு (Time-bound-Programme) டெண்டர்களை (Filoat) செய்வதற்கெல்லாம் நேரமில்லை. இதற்காக நாம் (Lowest tender) என்று பார்க்கப் போனோமானால் அவர்களால் (International Specificatons)-க்கு இந்த மாதிரி ஒரு சிறந்த விளையாட்டரங்கத்தைக் கட்டி முடிக்க முடியும் என்பதற்கு என்ன ஆதாரம்? Larsen and Toubro Company ஒரு பெயர் பெற்ற நிறுவனம் ஆகும். இது போன்ற பல பணிகளை பல நாடுகளில், அயல் நாடுகளில் கூட நிறைவேற்றி முடித்துக் காட்டியவர்கள். எனவேதான் பணி தரமாக அமையவேண்டும். It should be finished within the specified time என்பதற்காகத்தான் Larsen and Toubro நிறுவனத்திற்கு இது கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறு எந்தவிதமான முறைகேடோ, தவறோ இதில் நடைபெறவில்லை என்பதைத் திட்டவட்டமாகக் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பொது விவாதத்திலே பேச வேண்டிய பிரச்சினை இது. இதற்குப் பதில் வந்துவிட்டது. எனவே, பில்லுக்கு வாருங்கள்.

திரு. இளம்வழுதி : கட்டுகின்ற கட்டிடம் தரமாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொது விவாதத்தில் பேச வேண்டியது. இந்த கன்டின்ஜென்சி பில் ஒதுக்கீட்டை உயர்த்துவதை நீங்கள் எதிர்க்கிறீர்களா அல்லது ஆதரிக்கிறீர்களா, எதிர்ப்பதற்கும் இந்தக் காரணம் என்று சொல்லி முடியுங்கள்.

திரு. இளம்வழுதி : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. இதைக் கண்டிக்க வேண்டி வரும். இதெல்லாம் பில்லிலே பேசக் கூடியதல்ல. அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் பதிலுரை.

திரு. இளம்வழுதி : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. நீக்கப்பட்டதற்குப் பிறகு நீங்கள் எதுவும் பேசுவதற்கு அனுமதி இல்லை. உட்காருங்கள்,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





நீக்கப்பட்டதைப் பேசக் கூடாது. இதை நீங்கள் பொது விவாதத்திலே பேசியிருப்பீர்களேயானால் அரசுத் தரப்பிலேயிருந்து உங்களுக்குச் சுடச்சுட அதற்குப் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். இது கன்டின்ஜென்சி பில் பற்றியது. ஆர்டினன்ஸ் மூலம் போட்டு இங்கே கொண்டு வருவது சரியா? தவறா, என்பதைப்பற்றிய விவாதம்தான் இருக்கலாம். இதில் நீங்கள் ஏதாவது வாய்க்கு வந்தபடி பேசிவிட்டுப் போவதற்கு இது ஒன்றும் வேறு ஏதோ ஒரு இடம் அல்ல, உட்காருங்கள். நேற்றையதினம் பொது விவாதத்திலே பேசுவதற்கு வாய்ப்பு இருந்தது. அதைப் பயன்படுத்தி கொண்டு பேசியிருக்கலாம். நீங்கள் பொது விவாதத்தில் பேசுவதற்குப் பெயரே கொடுக்கவில்லை. அதை விட்டுவிட்டு இப்பொழுது ஏதோ, யாரோ கொடுத்துவிட்ட காகிதத்தை இங்கே வந்து படித்துக் கொண்டிருப்பது என்றால் அனுமதிப்பதற்கு இல்லை. நீங்கள் பேசிய எதுவும் அவைக்குறிப்பில் ஏறவில்லை. மாண்புமிகு நிதியமைச்சரவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே.....

திரு. இளம்வழுதி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்கார வேண்டும். நிதியமைச்சருக்கு இடையூறு செய்யக் கூடாது. உங்களைப் பேச அனுமதித்தேன். நீங்கள் பேசியிருக்கிறீர்கள். பத்து நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். அதற்குப் பிறகு நீங்கள் இந்த மாதிரி இடையூறு செய்யக்கூடாது. அதாவது இடையூறு செய்தால் பத்திரிக்கையிலே பெயர் வரும் என்பதெல்லாம் தவறான முன்னுதாரணம். உட்காருங்கள்.

திரு. இளம்வழுதி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அனுமதி இல்லாமல், நான் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கியதிலேயிருந்து இளம்வழுதி பேசியஎதுவும் அவைக்குறிப்பில் இடம் பெறவில்லை. உட்கார வேண்டும். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள், பதிலுரை.

பிற்பகல் 1-05

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஜெயகுமார் உட்காரவும், உறுப்பினர்கள் உட்கார வேண்டும். அவர் முறைகேடாகப் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) திரு. ராஜூ உட்கார வேண்டும். அவர் முறைகேடாகப் பேசுவதற்கு பதில் சொல்ல வேண்டியதில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) தவறுதான். சொல்லியது முழு தவறுதான்; நான் காரணம் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. இளம்வழுதி உட்காரவேண்டும். எல்லா உறுப்பினர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள், நீங்கள் அவைக்கு இடையூறு செய்வதால் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். உட்காரவும்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. இளம்வழுதி, நீங்கள் கண்ட நேரத்தில் பேசுவதற்கு இது ஏதோ ஒரு இடம் என்று நினைக்காதீர்கள். உங்களுடைய தலைவர் வீட்டிலேயே போய் பேசலாம்; அல்லது உங்கள் கட்சிக் கூட்டங்களிலே பேசலாம். இது பேரவை, உங்கள் கட்சிக் கூட்டம் அல்ல. எதை எதைப் பேசலாமோ அதைத்தான் பேச முடியும். (குறுக்கீடு) திரு. இளம்வழுதி இன்றைக்கு இரண்டு பில்லில் பேச பெயர் கொடுத்திருந்தீர்கள். இரண்டு பில்லிலேயும் பேசியாகிவிட்டது. இன்று என்னைப் பேச அனுமதிக்க வில்லை என்று உங்கள் பத்திரிக்கையிலே செய்தி வர வேண்டும்; அதற்கு ஏதோ விவகாரத்தை இழுக்க வேண்டும் என்றால் பேசிக் கொண்டிருக்கலாம். உட்காரவும். பேசுவதற்கு இரண்டு பில்லிலும் இன்றைக்கு உங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் இப்படிச் செய்யக் கூடாது. (குறுக்கீடு) உட்காரவும். (குறுக்கீடு). **

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> அவரை வெளியேற்ற வேண்டும்; அல்லது உட்கார வைக்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இளம்வழுதி, உங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். இந்தப் பேரவையினுடைய நேரத்தை, இந்தப் பேரவையினுடைய அலுவல்களை திட்டமிட்டு இப்படி ஏதாவது பத்திரிகையில் பெயர் வரவேண்டும்; அல்லது இந்தப் பேரவையிலே போய் ஏதாவது விவகாரத்தை இழுத்துவிட்டு வா என்று உங்கள் தலைவர் அனுப்பிவிட்டதாகத் தான் இதைக் கருத வேண்டியிருக்கும். திட்டமிட்டு, ஒரே உறுப்பினராக இருந்தாலும் முறையாக இந்தப் பேரவை நடப்பதைத் தடுக்க வேண்டும் என்று உங்கள் கட்சித் தலைவர், தமிழ்நாட்டைக் கெடுத்தது மட்டுமல்லாமல்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இந்த பேரவையின் கண்ணியத்தையும் கெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உங்களை அனுப்பி செய்கிற வேலை. (குறுக்கீடு) முதலில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்குப் பிறகு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டு, உங்களுடைய தலைவருடைய தவறான எண்ணத்தை இங்கே நிறைவேற்ற முயற்சிப்பதை அனுமதிக்க முடியாது. அவையைவிட்டு வெளியேறவும். அவையை விட்டு வெளியேறவும். பேரவையின் நடவடிக்கைகளில் குந்தகம் செய்து, அவையை நடக்க விடாமல் தடுப்பதால், அவைக் காவலர்கள் அவரை அப்புறப்படுத்தவும்.

(திரு. இளம்வழுதி பேரவைக் காவலர்களால் பேரவையினின்றும் வெளியேற்றப்பட்டார்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இது அந்தக் கட்சித் தலைவர், தான் நாட்டைக் கெடுத்தது மட்டுமல்ல; அவையின் கண்ணியத்தையும் கெடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் தம் கட்சியிலே இருக்கிற ஒரு உறுப்பினரை அனுப்பிச் செய்கிற வேலை என்றே நான் கருதுகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எதிர்பாரா செலவு நிதியத்தில் நிரந்தரமாக இருந்து வருகிற 75 கோடியை, எதிர்பாராமல் ஏற்படுகிற செலவை ஈடுகட்டுவதற்காக, 1993 மார்ச் 31 ஆம் தேதி வரையில் ரூ 150 கோடியாக நிதியத்தை ஆக்க வேண்டும் என்கிற நோக்கத்தை, இந்த அவையினுடைய அனுமதியோடு நிறைவேற்றுவதற்காகத்தான் இந்ததிருத்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள், இங்கே இந்தத் திருத்தச் சட்டத்திற்குப் பொருத்தம் இல்லாத கருத்துக்களையெல்லாம் எடுத்துப் பேசியிருக்கிறார்கள். ஆக, பாராளுமன்ற ஜனநாயகத்தை திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவுக்கு மதிக்கிறது, எந்த அளவுக்கு நடைமுறைப் படுத்துகிறது; அப்படியெல்லாம் அவர்கள் மதித்ததன் காரணமாக எந்த அளவுக்கு ஆளானார்கள் என்பதற்கும் எடுத்துக் காட்டாகத்தான் பரிதி இளம்வழுதி அவர்கள் இங்கே நடந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த எதிர்பாரா செலவு ஏற்படுவதை அரசியல் அமைப்புச் சட்டம் அனுமதிக்கிறது. ஆகவே, நாட்டிலே ஏற்படுகிற சிக்கலைத் தீர்ப்பதற்காகத்தான் இந்த நிலைமை வருகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னக் கருத்தை நான் உணர்வேன்; நான் ஒப்புக் கொள்கிறேன். ஆக, கூடிய வரையிலும், அவையினுடைய அனுமதி பெற்று செலவினம் செய்ய வேண்டுமென்ற ஒரு பொது கருத்து இருக்கிறது. ஆனால் அதை மட்டும் வைத்துக் கொண்டு ஆட்சியை நடத்த முடியாது; சட்டமன்ற மூலம், பாராளுமன்ற [illegible]

ஆட்சியை நடத்த முடியாது என்ற காரணத்தினுடைய அடிப்படையிலேதான் எதிர்பாராத நிதியம் என்ற ஒன்றை ஏற்படுத்தி, அதை செலவழிப்பதும், போதுமான அளவிற்கு இல்லாவிட்டால் அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் அதை நிறைவேற்ற முடியும் என்ற தன்மையின் அடிப்படையிலும்தான் இது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-10.

அதாவது இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 213 (1)-ன் கீழ் ஆளுநர் இதற்கான அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கலாம் என்ற அனுமதியை தருகிறது அதைக் கொண்டுதான் இதை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். இது இப்பொழுது மட்டுமல்ல. 1954, 1959, 1965, 1969, 1975, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1990 இந்த ஆண்டுகளில் கூட இந்த நிதியத்தைக் கூட்டுவதற்கென வழிவகைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆனால், இது அரசமைப்புச் சட்டத்திற்கு மாறுபாடான ஒன்றல்ல. மாறுபாடான ஒன்றாக இருக்குமேயானால் இதைச் சட்டப்படி தடுத்திருப்பார்கள். அக்கவுண்ட்டெண்ட் ஜெனரலும் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்கள். கணக்கு வழி பார்க்கின்றவர்களும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அரசமைப்புச் சட்டத்தில் இடம் இருப்பதன் காரணமாகவும், இதற்கு முன்னால் பல ஆண்டு காலம் இதை நீட்டித்திருப்பதன் காரணமாகவும்தான் இது செய்யப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. இதற்கு முன்னாலே பல தடவை பல ஆண்டுகளில் எல்லா ஆட்சிக்காலத்திலும் இந்த எதிர்பாராச் செலவினத்தைக் கூட்டுவது என்கின்ற முறை இருந்து கொண்டுதான் வந்து இருக்கிறது. அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் இளம்வழுதி பேசும்போது கூடச் சொன்னார்கள். இந்த நிலைமை கூடாது என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்த போது 26—7—1989 முதல் 25—12—1989 வரை ரூ. 75 கோடியாக இருந்த நிதியத்தை ரூ. 200 கோடியாக அவசரச் சட்டத்தின் மூலம் கொண்டுவந்து நிறைவேற்றியவர்கள். அத்தோடு நிற்கவில்லை. அதே ஆண்டிலே 26—12—1989 முதல் 31—3—1990 வரையில் ரூ. 300 கோடி அளவுக்குக்கூட அதைக் கொண்டு போனவர்கள் அவர்கள். அவர்கள் இங்கே வந்து அவசரச் சட்டத்திலே இதைச் சேர்த்தது தப்பு என்கிறார். நாங்களாவது ரூ 150 கோடியோடு நிற்கிறோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ரூ. 300 கோடி வரையில் போயிருக்கிறது. இன்னும் கொஞ்சம் நாள் ஆளவிட்டிருந்தால் ரூ 600 கோடி அளவுக்குப் போய் இருக்கும். ஆனால் இது நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல. வேறு பல மாநிலங்களையும் எடுத்துக் கொண்டால் மகாராஷ்டிராவில் கூட நிரந்தரத் தன்மையும் நிரந்தர நிதியமும் ஏற்கெனவே 50 கோடியாக இருந்து அதற்குப் பிறகு 80 கோடியாக இருந்தது. இப்பொழுது



150 கோடிக்கு உயர்த்தி வைத்திருக்கிறார்கள், இப்படிப்பட்ட எதிர்பாராச் செலவுகளை ஈடுகட்ட வேண்டி வரும் என்றுதான் உத்தரப்பிரதேசம் ரூ 200 கோடியாக இருந்ததை பிறகு ரூ 400 கோடியாக இப்போது நிதியத்திற்கு அவர்கள் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். ரூ. 600 கோடி அளவுக்கு செலவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. என்று ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள் கூடுமான வரையில் சட்டமன்றத்திலே வைத்து அனுமதி பெற்று நடைமுறைப்படுத்தலாம் என்று. நாங்கள் சட்டமன்றத்திற்குத்தான் வருகின்றோம். ஆனால் எதிர்பாரரத சில பல இனங்கள் ஏற்படுமானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்திக் காட்டியது மாதிரி உடனடியாகச் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் இந்த எதிர்பாராச் செலவின நிதியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது·

பொது வரவு-செலவுக் கணக்குகள் விவாதத்தில் இருக்கின்றபொழுது அதற்கு வரவுக் கணக்கையும் வைத்துவிடுகிறோம். செலவுக் கணக்கையும் வைத்து விடுகிறோம். நிதி ஒதுக்கீட்டையும் வைத்து விடுகிறோம். ஆனால் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் சரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சரி, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுச் சில பல திட்டங்களை அறிவிக்க வேண்டிய அவசியம் வந்து விடுகின்றது. அப்படி அறிவிக்கப்படுகின்றபோது அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பணம் வேண்டும் என்கிற போது நாம் ஒப்புக்கொள்ளப்பட்டபோது பொது விவாதத்தில் வருகின்ற நிதி ஒதுக்கீடுக்கு அப்பால் செலவுகள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிற போது, இந்த எதிர்பாராச் செலவிலேதான் செய்ய வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்கு, ஆகஸ்டு 15 ஆம் நாள் சுதந்திர தின விழா நடைபெற்றது. அதை நாம் வெற்றி விழா நாளாகக் கொண்டாடினோம். அப்படிக் கொண்டாடுகிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேடையிலே அறிவித்தார்கள். எல்லா விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் ஓய்வு ஊதியம் ரூ. 400 லிருந்து ரூ 1000 ஆக உயர்த்தப்படும் என்று அப்படி உயர்த்தப்படும் போது எதிர்பாராமல் ரூ 4, 5 கோடி செலவாகிறது என்று சொன்னால் சட்டசபையைக் கேட்டுச் செய்ய வேண்டுமென்று சொன்னால் அன்றைக்கு அதை அவர்கள் அறிவித்திருக்க முடியாது. அப்படிப்பட்ட சில சமயங்களில் அறிவிக்கப்பட்ட தன்மையின் அடிப்படையில்தான்-கூட்டுறவுக் கடன் அப்படி அறிவிக்கப்பட்ட ஒன்றுதான். ஏற்கெனவே 1992–93 பொது வரவு-செலவுக் கணக்கிலே நாம் சேர்க்கவில்லை. அதற்குப் பிறகு பதிலுரை கூறுகின்ற பொழுதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அதை ஏற்றுக் கொண்டார்கள். அதன் காரணமாக 69 கோடி ரூபாய் செலவை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசி

யம் வந்தது. அது மாதிரி சென்ற ஆண்டு கொடுத்த மாதிரி பொங்கலுக்கு இலவச வேட்டி, சேலை தரவேண்டும் என்கிற எண்ணம் சட்டசபை நடந்து முடிந்ததற்குப் பிறகு ஏற்பட்டு, அந்த ஆண்டு கொடுக்கலாமா, வேண்டாமா என்ற அளவுக்கு யோசித்து, கொடுக்க வேண்டும் என்கிற அளவுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு செய்ததன் காரணமாக அதற்கு ரூ. 45 கோடி ஒதுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. இப்படி இருக்கக் கூடிய செலவுகளுக்கு கூட்டுறவுக் கடன்களைக் குறித்த காலத்தில் செலுத்துவதற்கு வழங்கப்படும் போனஸ், நேரு விளையாட்டு அரங்கப் பணிக்கான செலவுகள், திரைப்பட நகர் ஒன்று உருவாக்குதல் — அது பின்னால்தான் அறிவிக்கப்பட்ட ஒரு செய்தி என்பதனால் அதற்குச் செலவு பண்ணுவதற்கு இதிலே ஒதுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்திற்கு கூடுதல் சம உரிமைப் பங்கு கொடுப்பது போன்ற திட்டங்களுக்குச் செலவழிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இதில் தவறு ஒன்றும் இல்லை. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது மாதிரி காலம் போகிற போக்கில், நிதி, வருமானம், செலவினங்கள் வளர்கின்ற தன்மையினை வைத்து, இதனுடைய நிதியத்தின் அளவை ரூ. 75 கோடி இருக்கிறது என்பதை ஒரு தனிச் சட்டம் கொண்டு வந்து ரூ.150 கோடியாக உயர்த்தினால் நல்லது என்று நிதியமைச்சர் என்ற முறையில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1.15

அதை நான் செய்யலாம். ஏனென்றால் வழக்கமாக ஆண்டுக்காண்டு இதே நிலைதான் வருகிறது என்ற நிலைமை வருகின்றபோது, நம்முடைய நாட்டினுடைய வரவு செலவுத் திட்டத்தையும், நம்முடைய நாட்டில் எதிர்பாராமல் ஏற்படுகிற செலவுகளைக் கண்காணிக்கும்போது, உத்திரப்பிரதேசத்திலே ரூ. 600 கோடி அளவுக்குப் போனது மாதிரி இல்லாவிட்டாலும், வேறு பல மாநிலங்களில் ரூ. 300 கோடிக்கு போனது மாதிரி இல்லாவிட்டாலும், ரூ. 150 கோடி அளவுக்காவது கொண்டுவருவதற்கு ஒரு தனிச் சட்டம் செய்யலாம். எல்லாம் வேண்டுமென்றே செய்யப்படவில்லை. எப்படியிருந்தாலும் அவையினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் நடைமுறைக்கு வருகிறது. அப்படி செய்தாலும் இங்கே அவையின் உறுப்பினர்களுடைய அனுமதியைப் பெறவேண்டுமென்ற சட்டங்கள் இருக்கின்றன. அந்த அடிப்படையிலே இருக்கிறதே தவிர இதிலே சட்டப்படி எந்தக் குற்றமும் இல்லை. இது இல்லாவிட்டாலும் நிதி அமைச்சர் என்ற வகையில் எனக்கு மிகவும் மகிழ்ச்சிதான். அடுத்தச் சட்டசபைக் கூடுகிற வரையில் இந்தச் செலவுகள் எல்லாம் வராது, நான் அந்த ஆதாிக்க வேண்டிய அவசியம் இருக்காது. என்னைப் பொறுத்தவரைக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் ஆட்சி நடக்கும்போது



மக்களுடைய நன்மையைப் பொறுத்து இந்த எதிர்பாராச் செலவு நிதியம் இருந்தே தீரவேண்டும். நிதி அமைச்சர் என்று எடுத்துக் கொள்வார்களேயானால் இது வேண்டாம் என்று நான் சொல்லிவிடுவேன். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு வாய்ப்புகள் கூட ஏற்பட்டுவிடும். ஆனால் பொது மக்களுடைய நன்மையைக் கருதி, அரசு ஆட்சியினுடைய நன்மையைக் கருதி இது இருக்க வேண்டுமென்று சொல்லி இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராச் செலவு நிதியத்தை அதிகரிக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. தாராளமாக அது இருக்கலாம். ஆனால் எதிர்பாராச் செலவு நிதியத்தை அதிகரிப்பதற்காக அவசரச் சட்டம் கொண்டுவரக் கூடாது என்பதுதான் என்னுடைய நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)
மறுப்போர் இல்லை என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)
மறுப்போர் இல்லை என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியறு.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் எனும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)
மறுப்போர் இல்லை என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி, அமைச்சர் .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 50/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)
மறுப்போர் இல்லை என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) அடகு பிடிப்போர் (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுபிடிப்போர் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண். 54/1992), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுபிடிப்போர் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 54/1992) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்,' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ராமசுப்பு.

(பேரவைத் துணைத்தலைவர் தலைமை).

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடகுபிடிப்பவர்களுடைய சட்டத்தைத் திருத்துவதற்கு இந்தச் சட்டத்திருத்தத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தை வரவேற்றுப் பேசும் இந்த நேரத்தில் இந்தச் சட்டத்தின் மூலமாக 1979-ஆம் ஆண்டு இந்தச் சட்டத்திலே இந்த அடகுபிடிப்போருக்காக 12 சதவீதம் வட்டி விகிதம் வைக்கப்பட்டிருகின்றது. அது தனி வட்டியாக கொடுக்கப்பட்டது. அதாவது சிம்பிள் இன்டரஸ்ட் என்று சொல்வார்கள். அந்த சிம்பிள் இன்டரஸ்ட் 12 சதவீதம் என்று வைக்கப்பட்டிருந்தது. இந்த வட்டி, இந்த அடகுபிடிப்பவர்கள், இந்த வட்டி விகிதத்தை, ரிசர்வ் பேங்கினுடைய அந்த வட்டி விகிதத்தைக் கூட்டிக்கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் இன்றைக்கு மாற்றப்படுவதாக பில்லிலே

*22-9-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





சொல்லப்படுகிறது. 12 சதவீதமாக இருந்த வட்டியானது இன்றைக்கு ரிசர்வ் வங்கியானது குறிப்பிட்ட வட்டி விகிதத்திற்கு மேலாக ஒரு 5 சதவீதம் கூட்டிவிடலாமென்று சொல்லக் கூடிய அளவிலே இந்த விகிதத்தை கூட்டி இந்தச் சட்டத்திருத்தத்திலே இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1.20

இந்த லேவாதேவிக்காரர்களுடைய, இந்த அடகு பிடிப்பவர்
களுடைய இந்தத் திருத்தத்தை இங்கே கொண்டு வந்தாலும்
கூட, இதை ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும், இன்றைக்கு
ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா நிர்ணயம் செய்திருக்கின்ற வட்டி
விகிதத்தைவிட ஐந்து மடங்கு கூட்டியிருப்பது, இது சிம்பிள்
இன்ட்ரஸ்டா, காம்பவுண்ட் இன்ட்ரஸ்ட்டா என்பதைப்பற்றி
மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சரியாகச் சொல்ல
வேண்டும். ஏனென்றால், அது சிம்ப்பிள் இன்ட்ரஸ்டா அல்லது
காம்பவுண்ட் இன்ட்ரஸ்டா என்பது இதிலே தெளிவாகச்
சொல்லப்படவில்லை. ஏனென்றால், ஏற்கனவே அவர்கள்
அதிகமான வட்டி விகிதங்களைச் சில இடங்களிலே பொது
மக்கள் மத்தியிலே இந்த வட்டிக் கடை வைத்து நடத்துபவர்
கள் அதிகமான வட்டி விகிதத்தை வாங்குகிறார்கள். அது
மட்டுமல்ல, அவர்கள் போடுவது ஒன்றாகவும், அதே போல
அங்கே தனியாக சிம்ப்பிள் இன்ட்ரஸ்ட்டாக போட்டுவிட்டு,
காம்பவுண்ட் இன்ட்ரஸ்டாக வாங்கக்கூடிய சூழ்நிலை
இருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல,
சில இடங்களிலே இந்த அடகு பிடிப்பவர்கள் லைசென்ஸ்கூட
வாங்காமல் கடைகளை நடத்தி வருகிறார்கள். அந்த
லைசென்ஸ் வாங்காமல் நடத்துகின்றவர்களை முறைப்படுத்து
வதற்கு சட்டம் இருக்கின்றபோதிலுங்கூட அந்தச் சட்டம்,
சில இடங்களிலே முறையாக செயல்படுத்தாதனாலே, இன்
றைக்கு அதே போன்று பல்வேறு அடகுக் கடைக்காரர்கள்
பல்வேறு வட்டிக்கடைக்காரர்கள் வட்டி வாங்குவதால் ஏழை
மக்களை நலிவுறச் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது.
அதை எல்லாம் தவிர்ப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை
எடுக்க வேண்டும்.

இந்தச் சட்டத்தின் மூலமாக இன்றைக்கு இந்த வட்டி
விகிதமானது கூட்டப்பட்டு இருப்பது-இந்த வட்டி விகிதத்தின்
மூலமாக அவர்கள் காம்பவுண்ட் இன்ட்ரஸ்ட் போட்டார்கள்
என்றால்-சுமார் 45 சதவிகிதம் வரை அதாவது ரூ. 4 வட்டி
என்று சொல்வார்கள். நூற்றுக்கு 4 ரூபாய் மாதம் என்று
கட்டக்கூடிய ஒரு சூழ்நிலை ஏழை மக்களுக்கு வந்துவிடும்.
ஆதலால், அந்த வகையிலே இந்த விகிதத்தை நீங்கள்
சரியாக நிர்ணயித்து செய்ய வேண்டும். மேலும், இது சம்
பந்தமாக சொல்ல விரும்புவது நகையைக் கொண்டு அடகு
வைக்கிறார்கள். நகையைக் கொண்டுபோய் ஏழைகள் அடகு
வைக்கும்போது அந்த நகையானது கடைசியிலே மூழ்கக்கூடிய
அளவிலே வந்து, அது அங்கேயே அவர்கள் கையிலேயே மாட்டி

விடுகிறது. அவர்கள் அதை ஏலம் விட்டு அதற்கானப் பணத்தையெல்லாம் எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை எல்லாம் இருக்கின்றது. இதையெல்லாம் சற்று முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். நான் வேண்டுகோள் வைத்துக் கொள்கிறேன். இந்த சட்டத்தை வரவேற்றாலும், இதிலுள்ள சில குறைகளை நீங்கள் கடுமையாக பார்ப்பீர்களேயானால் நல்லது. ஏனென்றால், இது பல்வேறு இடங்களிலே நகரமாக இருந்தாலும் சரி, கிராமங்களாக இருந்தாலும் சரி, இந்த அடகு பிடிப்பவர்கள் கையிலே சிக்கிக்கொள்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அதற்காக நான் எல்லோரையும் சொல்லவில்லை. சிலர் லைசன்ஸ் வைத்து சிறப்பாக நடத்துகிறார்கள். அதே போல லைசென்ஸ் இல்லாமல் நடத்துபவர்களும் இருக்கிறார்கள். ஆதலால் இது போன்று அடகு பிடிப்பவர்களுடைய இந்த சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, லைசென்சை முறைப்படுத்தவும் வேண்டும். ஏதாவது கோளாறுகள் இருந்தால், அதை நீங்கள் திருத்திக் கொள்ள வேண்டும். அதே போன்று ஏதாவது தவறுகளை செய்பவர்களை திருத்தவும் செய்யவேண்டும் என்பதை இங்கே கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

*திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட்டிக் கடையில் நகைகளை அடகு வைக்கிறபோது அதனுடைய வட்டி விகிதத்தை பாங்கு வட்டி மற்ற வட்டிகளை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு அரசே நிர்ணயிக்கலாம் என்பது ஏற்கனவே உள்ளது. ஆனால், இந்த, இப்போது வந்திருக்கிற, சட்ட திருத்தம் பாங்குகள் போடுகிற வட்டி விகிதத்தோடு மேலும் 5 சதவிகிதம் வரை, அதற்குள் இப்போது அந்த அளவிலே வட்டியை நிர்ணயம் பண்ணலாம் என்று அரசாங்கத்தினுடைய கைகளை கட்டுவது போல இந்த திருத்தம் வந்திருக்கிறது. ஏற்கனவே வட்டி விகிதங்கள் என்ன என்று பார்த்து என்ன நிதி அடிப்படையில் ஏழைகளுக்கு நன்மை செய்யக்கூடிய அளவுக்கு இத்தகைய வட்டி விகிதம் என்று நிர்ணயிக்கலாம். ஆனால், இனிமேல் பாங்க் லெண்டிங் அதற்கு மேலே 5 பர்செண்ட் வரையிலே நிர்ணயிக்கலாம் என்று வருகிறது.

ஆகையினால் ஏற்கனவே எவ்வாறு வட்டி விகிதம் நிர்ணயிக்கப்பட்டது, இப்போது இந்த புதிய பார்முலாபடி வட்டி விகிதம் நிர்ணயிக்கப்பட்டால் அது வறுமை காலங்களிலே அடகு வைக்கின்ற ஏழைகளை பாதிக்கின்ற வகையிலே அமையுமா என்பதைப்பற்றி கடந்த கால புள்ளி விவரங்களைப் பார்த்து மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-25

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அடகுக் கடைக்காரர்கள் சட்டம் என்பது முதன் முதலாக 1943 ஆம் ஆண்டு நடைமுறைக்கு அமுலுக்கு வந்தது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தச் சட்டத்தின்படி 31—12—1991 ஆம் ஆண்டு நிலவரப்படி தமிழ்நாடு எங்கும் 11,343 கடைகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு கடைக்கு 100 ரூபாய் என வசூலிக்கப்படுகிறது. இதன் காரணமாக அரசுக்கு வருவாயாக 11 லட்சத்து 34 ஆயிரத்து 300 ரூபாய் உரிமத் தொகையாக அரசுக்கு வந்துகொண்டிருக்கிறது.

இங்கே பேசிய மாண்புமிகு திரு. ராமசுப்பு அவர்களும் திரு. இராமச்சந்திரன் அவர்களும் தெரிவித்ததைப்போல 1943 ஆம் ஆண்டு ஆண்டுக்கு 6 சதவிகிதம் மட்டுமே வட்டி வசூல் செய்து வந்தார்கள். ஆனால், 1961 ஆவது ஆண்டில் இந்த வட்டி விகிதத்தை 6 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்துவதற்கு சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது. பின்னர் 1973 ஆம் ஆண்டு வங்கிகளில் வசூலிக்கும் வட்டி விகிதம் அதிகமானதால், அறிக்கை மூலம், நோட்டிபிக்கேஷன் மூலம் அரசு வட்டி வீதத்தை நிர்ணயம் செய்ய சட்டத் திருத்தம் செய்யப்பட்டது. ஆனால், இதுவரை வட்டி வீதத்தை அரசு உயர்த்தவில்லை.

எனவே, இந்தக் குறைபாட்டை போக்குவதற்காக இந்தச் சட்ட முன்வடிவு இங்கே வருகிறது. ஆனால், அதற்கு முன்பாக இந்தத் தொழிலில் இருக்கிற பான்புரோக்கர்ஸ் சென்னை நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார்கள். அந்த வழக்கு அங்கே நடைபெற்று, மாண்புமிகு நீதிபதி அவர்கள் மேல்முறையீடுகளை பரிசீலித்து ஒரு உத்திரவு மூலம் 24—9—1992-க்குள் பிறப்பிக்குமாறு அன்று உத்திரவு பிறப்பித்துள்ளார். அதனையொட்டிதான் இன்றைய தினம் வங்கிகளில் வசூலிக்கப்படும் வட்டி விகிதத்தைவிட 5 சதவிகிதத்திற்கு மேற்படாமல் அடகுக்கடைக்காரர்கள் வசூலிக்கலாம் என்று நிர்ணயித்து ஆளுநர் அவர்களால் 11—9—1992 அன்று ஒரு (ஆர்டினன்ஸ்) அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அந்த அவசரச் சட்டம் இன்றைக்கு சட்டமாக அனுமதி கோரி உங்கள் முன்பு விவாதத்திற்கு வந்திருக்கிறது.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1992 செப்டம்பர் 25

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசுப்பு அவர்களும், திரு. இராமச்சந்திரன் அவர்களும் பல ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக ஏழையெளிய மக்களுக்குச் சமூக நீதி கிடைக்கவும், அவர்களுக்கு எளிதாகக் கடன் கிடைக்கின்ற வகையிலும், சிம்பிள் இண்ட்ரஸ்ட் வசூலிக்கப்பட வேண்டுமென்றும், லைசென்ஸ்கள் முறைகேடாக நடக்கக் கூடாது என்றும், எபெக்டிவ் இம்ப்ளிமெண்டேசன் எல்லாம் சட்டத்திலே வர வேண்டுமென்றும் எல்லாம் பல்வேறு நல்ல ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் ஆலோசித்து இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதையும் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் குறுக்கிட்டு நான் பேசிய பகுதிகளில் நீதிமன்றத் தீர்ப்பினைப் பற்றி இரண்டொரு வாக்கியங்களைச் சொல்லியிருந்தேன். அவைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீதிமன்றத் தீர்ப்புப் பற்றி வருகிற விமர்சனமாக இருக்கிற காரணத்தால் அவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



1992 செப்டம்பர் 25] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகு பிடிப்போர் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 54/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்.'' எனக் கோருகிறேன்.

பிற்பகல் 13-0

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/1992), மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த)
சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு
எண் 59/1992)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச்
சட்டத்தினை மேலும் திருத்துவதற்காகக் கொண்டுவரப்
பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவு மீதான விவாதத்தில்
இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேச வாய்ப்பு
அளித்த தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்
கையாக்கி என் உரையைத் துவங்குகிறேன்.

தமிழகத்தில் உள்ள கிராமப்புற, நகர்ப்புற ஏழை, எளிய
நடுத்தர மக்களின் ஒரே பொழுதுபோக்கு சினிமா என்று
சொன்னால் அது மிகையாகாது. இன்று தமிழகத்தில்
உள்ள பல சினிமா தியேட்டர்களில் தியேட்டர் உரிமையாளர்
கள் அரசுக்குச் சேர வேண்டிய கேளிக்கை வரியைச் செலுத்
தாமல் எப்படியெல்லாம் அரசை ஏமாற்ற முடியுமோ அவ்
வாறெல்லாம் அரசை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.
சினிமாவுக்குச் செல்பவர்களுக்கு பல தியேட்டர்காரர்கள் டிக்
கட் தராமல் 15 ரூபாய், 10 ரூபாய் என்று அடையாள
டோக்கன்களைக் கொடுத்து பொதுமக்களை உள்ளே அனுமதிக்
கின்றார்கள். குறைந்த கட்டணத்தில் சினிமா பார்க்க தியேட்
டருக்கு வருபவர்கள் முழுக்க முழுக்க ஏமாற்றப்பட்டு 10
ரூபாய் இருந்தால்தான் சினிமா பார்க்க முடியும் என்று
சொல்லி அவர்களை 10 ரூபாய் டோக்கன் வாங்க வற்புறுத்து
கிறார்கள். இதனால், அரசுக்கு வரவேண்டிய கேளிக்கை வரி
கோடிக்கணக்கில் வரி ஏய்ப்பு என்ற போர்வையில் வராமல்
போய்விடுகிறது. நிதி நெருக்கடியால் கஷ்டப்படும் இந்த
அரசு கேளிக்கை வரி ஏய்ப்பைத் தடுக்க தகுந்த சட்ட
திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று பணிவோடு இந்த
மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் நகராட்சிக்கு இவ்வாண்டு தொடக்கத்தில் முதல்
மூன்று மாதங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராம
சுந்தரம், பயிற்சி உதவி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.
உமாசங்கர் போன்றவர்களிடம் நான் மனு கொடுத்து,
அடிக்கடி சோதனையிட்டு 17 இலட்சம் ரூபாய் நகராட்சிக்கு
வருவாய் கேளிக்கை வரியாக வந்தது. அடுத்து வந்த 3
மாதங்களில் சோதனைகள் நடைபெறாததால் நகராட்சிக்கு

---

@24—9—1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு
அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





7 இலட்சம் ரூபாயாக வருவாய் குறைந்தது. வணிக வரித்
துறையைச் சேர்ந்த அதிகாரிகள் தியேட்டர் உரிமையாளர்
களோடு சேர்ந்துகொண்டு சதி செய்து, சோதனைக்கே
போவதில்லை. போனாலும், தனி அறையில் அமர்ந்து,
தனியாகப் பேசி, மாமூல் பெற்றுக்கொண்டு, தியேட்டர்
களை சோதனையிடாமல் வந்துவிடுகின்றனர். இதனால்
நகராட்சிக்கு வரவேண்டிய பேரூராட்சி, ஊராட்சிகளுக்கு வர
வேண்டிய கேளிக்கை வரி வருவாய் போவதோடு, அரசாங்
கத்திற்கும் பெரிய அளவில் கோடிக் கணக்கில் கேளிக்கை வரி
வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே, அவ்வப்போது
சினிமா தியேட்டர்களைச் சென்று சோதனையிட முனிசிபல்
கமிஷனர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஞானசேகரன்,
பில் என்ன? வட ஆற்காடு மாவட்டம் பற்றி அதிலே வரவில்லை.

திரு. சி. ஞானசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,
அரசுக்கு வருவாய் ஈட்டித் தருகின்ற வழிமுறைகளைச் சொல்
கிறேன். அவ்வப்போது சினிமா தியேட்டர்களைச் சென்று
சோதனையிட முனிசிபல் கமிஷனர், பேரூராட்சி நிர்வாக
அலுவலர், தாசில்தார், வணிகவரி அதிகாரிகள், ஆர்.டி.ஓ.
போன்றோர் இணைந்து சோதனையிட சட்டத்தில் வழிவகை
செய்யவேண்டும். தனிப்பட்ட முறையில் சோதனையிட்டு
வரி ஏய்ப்பு இருக்குமிடத்தில் உடனடி நடவடிக்கை எடுக்க
சட்டதிருத்தத்தில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். வணிகவரி அதிகாரிகள் தியேட்டர் உரிமை
யாளர்களோடு சேர்ந்து மோசடியில் ஈடுபட்டு வரி ஏய்ப்புக்கு
துணை போகிறவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சினிமாக் கட்டணம் சமீபத்தில் உயர்த்தப்பட்டுள்ளதால்
ஏழை எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே
அதை மறுபரிசீலனை செய்து சினிமாக் கட்டணத்தை குறைப்
பார்களானால் ஏழை எளியவர்களின் உள்ளம் வாழ்த்தும்
என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று முடிக்
கிறேன் நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த்
துறை அமைச்சர்.

பிற்பகல் 1–35

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் தவறுகள்
நடப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்.
அப்படி திரையரங்குகளில் தவறுகள் நடக்காமல், அரசு

வரிப்பணம் ஏமாற்றப்படாமல் பார்த்துக்கொள்வதற்கு இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று சொல்லி இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்', எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஊ) கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்ட முன்வடிவு 1992.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1992). மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1992)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''

எனக்கோருகிறேன்.

தலைவர் அவர்களே, கல்வி நிலையங்களில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக கட்டாய நன்கொடை வசூலிக்கிற பழக்கம் மாநிலத்தில் மிகவும் பரவலாக இருந்து வருகிறது. விரும்பத் தகாத இந்தப் பழக்கமானது கல்வி கற்பிப்பதில் வணிகத் தன்மையை உருவாக்க உதவுகிறது என்பதோடு, கல்வித் தரத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கும்

@21-9-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

உகந்ததாகவும் இல்லை. எனவே கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்வதன் மூலமாக பொதுநலம் கருதி விரும்பத்தகாத இந்தப் பழக்கத்தைத் தடை செய்து தடுத்து நிறுத்துவது தேவை என்று அரசால் கருதப்பட்டு இச் சட்டமுன் வடிவு இயற்றப்பட்டது. சட்டமுன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி நிலையங்களில் கட்டாய நன்கொடையைத் தடை செய்வதற்கான தமிழக அரசின் சட்டமுன் வடிவை மிகுந்த மன மகிழ்ச்சியோடு காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாக நாங்கள் எல்லாம் வரவேற்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் [illegible]ணைத் தலைவர் தலைமை.)

கல்வியின் தரம் இன்றைக்கு மிகப் பெரிய அளவிலே குறைந்துபோய் இருப்பதற்குக் காரணமே இரண்டு வகையான கல்வி நிலையங்கள் இன்றைக்கு தமிழகத்திலே இயங்கி வருவதுதான். வசதியானவர்கள், வாய்ப்புள்ளவர்கள் படிப்பதற்காக ஒரு வகை கல்விக் கூடங்களும், வசதியற்றவர்கள், ஏழ்மையானவர்கள், தாழ்ந்த நிலையிலே இருப்பவர்கள் படிப்பதற்காக சில கல்வி நிலையங்களும் என்று இரண்டு வகைக் கல்வி நிலையங்களை இங்கே தெரிந்தோ தெரியாமலோ தமிழகத்தில் நாம் இன்றைக்கு உருவாக்கியிருக்கிறோம். மாநகராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும், படிக்கின்ற மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு உணவு உண்பதற்காகத்தான் செல்கிறார்கள் என்ற நிலை இருக்கிறதேயொழிய, படிப்பதற்காகச் செல்கிறார்கள் என்ற நிலை இல்லை. ஆனால், வசதியானவர்கள் நகரங்களுக்குச் சென்று ஆங்கிலக் கல்வி படிப்பதன் மூலமாக சமுதாயத்தினுடைய அடிமட்டத்திலிருந்தே இரண்டு வகை சமூகப் பிரிவுகளை நாம் உருவாக்கியிருக்கிறோம். இது வருங்காலத்தில் நம்முடைய சமூகத்தை எப்படிப் பாதிக்கும் என்பதை கல்வியாளர்கள் உணர்ந்து பார்க்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 1-40

கல்வி வியாபார ரீதியாகத் தொடங்கி ஒரு தலைமுறையையே இன்றைக்கு அழித்து இருக்கிறது என்பதை கல்வி அமைச்சர் அவர்கள் தன்னுடைய சட்ட முன்வடிவில் ஒத்துக்கொண்டிருப்பதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். பன்னெடுங்காலமாகவே ஏழை எளியவர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் கல்வி பெறுகின்ற உரிமை மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. மனு தர்மம் என்று ஒரு காலத்தில் சொல்லப்



பட்ட மனுவினுடைய நீதி, ஒரு புலையன் குருகுலம் பக்கம் தன்னிச்சையாகச் சென்று விடுவானேயானால், அவனை மொட்டை அடிக்க வேண்டுமென்று அந்த நீதியிலே சொல்லியிருக்கிறார்கள். அவன் வேண்டுமென்றே குருகுலம் பக்கம் செல்வானேயானால், மொட்டையடிப்பதோடு அவனுக்கு 10 கசையடிகளும் கொடுக்க வேண்டுமென்று அந்த மனு தர்மத்தில் சொல்லப்படுகிறது. ஆனால் இவைகளை எல்லாம் தாண்டி அந்த சமூகக் கொடுமைகளையெல்லாம் தாண்டி அம்பேத்காரிலிருந்து இராஜாராம் மோகன்ராயிலிருந்து மகாத்மா காந்தியடிகளிலிருந்து தந்தை பெரியார் வரை சாதாரண— மக்கள் கல்வி பயில்வதற்காக பல்வேறு போராட்டங்களை நடத்தி சமுதாயத்திலே ஒரு உயர்ந்த நிலையை நாம் பெற்று இருக்கிறோம். ஆனால், ஒன்று மட்டும் நமக்குப் புரிகிறது. எல்லாக் காலங்களிலும், சாதாரண மக்கள் கல்வி பயில்வதற்கான ஒரு தடை இந்த சமூகத்திலே இருந்து வந்திருக்கிறது என்பது நமக்கு நன்றாகப் புரிகிறது. ஆனால், இன்றைக்கு இந்த நிலைமைகள் எல்லாம் மாறி, இப்போது ஒரு புதிய தடை ஏற்பட்டு இருக்கிறது. அதுதான் பணம் பறிக்கிற தடை. இன்று யாருக்காவது அதிகமாக சம்பாதிக்க வேண்டுமென்ற உணர்வு ஏற்படுமானால், அவர்கள் ஒரு ஆசிரியர் கல்வி நிலையத்தை பயிற்சி நிலையத்தை வாங்கி விடுவார்களேயானால் அதைவிட லாபம் சம்பாதிக்கிற ஒரு தொழில் இங்கே கிடையாது என்பது இன்றைக்கு நிரூபணமாகி இருக்கிறது. எனவே அதைப்போன்ற சமூகக் கொடுமைகளை வேறோடு அழிப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த தடைச் சட்டத்தை கொஞ்சம் முன்பாகவே நாம் கொண்டு வந்திருக்கலாம். அப்படி கொண்டுவந்து இருப்போமேயானால் இந்தக் கல்வியாண்டில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்படாமல் அவர்களை நாம் காப்பாற்றி இருக்க முடியும். ஆனால், அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள், அந்த நேரத்திலே சட்டப்பேரவையைக் கூட்ட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதன் காரணத்தினால் அப்போது அதை நாம் அனுமதித்து விட்டதாக சொல்லியிருக்கிறார்கள். இந்த நல்ல நோக்கத்திற்காக சட்டப்பேரவையை நாம் அப்போதே கூட்டியிருந்தால் கூட அது ஒரு சமுதாயத்தைக் காப்பாற்றி இருக்கும் என்பதனை நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்கு மேலாக சட்டம் என்றாலே அதிலே சில சந்துகள் இருக்க வேண்டும் என்பது நீண்ட காலமாகவே இருந்துவந்திருக்கிற பழக்கமாக இருக்கிறது. அந்த சட்டப் பிரிவிலே சொல்கிறபோது இரண்டுவிதமாக சொல்கிறார்கள். ஒன்று. இந்த நன்கொடையை வாங்குகிறவர்கள் அந்த குற்றச் செயலானது தமக்குத் தெரியாமலே செய்யப்பட்டு இருக்கிறது என்றோ,

அல்லது அந்தக் குற்றச் செயல் செய்யப்படுவதை தடுப்பதற்கான உரிய முயற்சி அனைத்தையும் தாம் மேற்கொண்டார் என்றோ மெய்ப்பிப்பாராயின் தண்டனை எதற்கும் அவர் ஆளாக மாட்டார் எனச் சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு மருத்துவக் கல்லூரிக்கு 10 இலட்சம் ரூபாய் கேட்கிறார்கள், ஆசிரியர் பயிற்சிக்கு சேருவதற்கு 10 ஆயிரமும் 20 ஆயிரமும் என ரூபாய் கேட்கிறார்கள். அப்படி வாங்குகிற எவரும் தான் வாங்கவில்லை என்பதை நீரூபிப்பதற்கான எல்லா முயற்சிகளிலும் ஈடுபடுவார்களேயொழிய நாங்கள் வாங்கியிருக்கிறோம் என்று அவர்கள் ஒத்துக்கொள்வதற்கான வாய்ப்பே கிடையாது. டிரஸ்ட் பேரால் அவர்கள் வாங்க முடியும்; வேறு நபர்களின் பேரால் அவர்கள் வாங்க முடியும்; அதற்கான வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. எனவே, அவர்கள், தாங்கள் வாங்கவில்லை என்பதை மெய்ப்பித்து விட்டார்களேயானால் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்வார்கள் என்ற அந்த உட்கருத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு முறை பரிசீலனை செய்து அதை மாற்ற முடியுமேயானால் இந்தச் சட்டம் கொண்டுவந்ததினுடைய நோக்கம், உண்மையான நோக்கமாக ஈடேறக்கூடிய நோக்கமாக இருக்கும் என்பதை நான் கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அதேபோல, 11 ஆவது உட்பிரிவிலே அவர்கள் சொல்கிறார்கள், நீதிமன்றம் எதுவும் அரசின் அல்லது இதன் பொருட்டு அரசு அதிகாரம் அளிக்கக்கூடிய அலுவலரின் ஒப்புதல் இல்லாமல் இந்தக் குற்றச் செயல் புரிந்தவர் மீது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அப்படிச் செய்வதும் சரியாக இருக்காது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். ஏனென்றால், அவர்கள் தவறு செய்கிறார்கள் என்றால், அந்தத் தவறால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக நீதிமன்றம் செல்வதற்கான ஒரு வாய்ப்பை நீங்கள் அளிக்க வேண்டும். தவறு செய்து இருக்கிறார், நீதிமன்றத்திற்கு செல்வதற்கு முன்பாக அரசினுடைய அனுமதியைப் பெற வேண்டும் அல்லது அரசினுடைய அங்கீகாரம் பெற்ற ஒருவருடைய அனுமதியைப்பெற வேண்டும் என்று நாம் சொல்வோமேயானால், நீதி அவருக்குக் கிடைக்காது என்பதைத் தான் அது காட்டுகிறது என்பதனை நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனவே இந்த இரண்டு பிரிவுகளையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொஞ்சம் உயரிய நோக்கத்தோடு பார்த்து, குற்றவாளிகள் இந்தத் திசையிலிருந்து தப்பிவிடாமல் அவர்கள் பார்த்துகொள்வாரேயானால் அது சிறப்புடையதாக இருக்கும் என்பதனை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நேற்று



பேசுகிறபோது
எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிறுவனங்களுக்கு அனுமதி
140 ஆசிரியர் பயிற்சி பேசுகிறபோது கல்வி அமைச்சர்
அளித்தது சம்பந்தமாக சொன்னார்கள், சிறுபான்மை மக்களுக்கு
அவர்கள் குறுக்கிட்டு இருக்கின்றன. எனவே அவர்கள்
சில உரிமைகள் கல்வி நிலையங்களைப் பெற்றிருக்கி
சட்டத்தின் வாயிலாக இருக்கிற பெரும்பான்மை
றார்கள். ஆனால் தமிழகத்தில் வழங்கப்பட வேண்டாமா?
யான மக்களுக்கு அந்த உரிமை நிலையங்களை அவர்களுக்கு
எனவே தான் நாங்கள் அந்தக் கல்வி சொன்னார்கள்.
வழங்கி இருக்கிறோம் என்று அவர்கள்

பிற்பகல் 1-45

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு கல்வி அமைச்சருடைய கூற்று எனக்கு மிகுந்த
மனவருத்தத்தை அளித்தது. ஏனென்றால், தந்தை பெரியார்
அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் நடத்திய ஒரு
இயக்கத்தினுடைய வாரிசாக வந்திருக்கிற இந்த அரசு, தேசியக்
கட்சியோடு ஒரு நல்ல உறவை வைத்திருக்கிற இந்த அரசு
பெரும்பான்மை மக்களுக்கும் சிறுபான்மை மக்களுக்கும் உள்ள
வித்தியாசத்தை இந்த வகையில் புரிந்துகொண்டு, நாங்கள்
கல்வி நிலையங்களை வழங்கி இருக்கிறோம் என்று சொல்வது
நம்முடைய சமூக அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் ஒரு
நிகழ்ச்சியாக இருக்கும் என்பதைக் கோடிட்டு காட்ட ஆசைப்
படுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> ; மாண்புமிகு கல்வி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் அன்றைக்கு சொன்னதும்,
இன்றைக்குச் சொல்ல விரும்புவதும், இங்கேயும் அல்லது
வேறெங்கு வேண்டுமானாலும சொல்ல விரும்புவதும் அரசாங்கத்
திற்கு இருக்கிற அதிகாரம் என்பது இந்துக்கள் ஆரம்பிக்கிற
கல்வி நிலையங்களைத் தடை செய்ய மட்டும்தானே தவிர
சிறுபான்மை இனத்தவருடைய, அவர்கள் ஆரம்பிக்கின்ற
கல்வி நிலையங்களைத் தடைசெய்கிற அதிகாரம் எந்த அரசுக்கும்
கிடையாது. இந்தியா முழுமைக்கும் நான் சொல்கிறேன்.

<u>திரு. ச. அழகிரி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நானும் அந்தக் கருத்தைத்தான் சொல்ல விரும்பு
கிறேன். நேற்றைக்கு நீங்கள் பதில் சொன்னபோது சிறு
பான்மையினருக்கு இருக்கிற அதிகாரத்தை எங்களால் தடை
செய்ய முடியவில்லை. எனவே, பெரும்பான்மை மக்களுக்கு

ஒரு சுதந்திரத்தை அளிப்போமே என்பதற்காகத்தான் இந்த கல்வி நிலையங்களை நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்று நீங்கள் சொன்னீர்கள். அந்தக் கருத்தைத்தான் நான் சொல்ல வருகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் பட்டியலே இருக்கிறது. எது எதிலே ஹைகோர்ட் அவர்களுக்கு அனுமதி தந்திருக்கிறது என்பதையெல்லாம் அவர்கள் வாங்கி நடத்துகிறார்கள். சிறுபான்மை இனத்தவர் மட்டும் அந்த ட்ரெயினிங் ஸ்கூல் நடத்துகிறபோது இந்துக்கள் வந்து என்னிடத்தில் கேட்கிறபோது அதைத் தரக்கூடாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து என்றால் நான் அதற்கு மேல் பேசவில்லை.

<u>திரு. ச. அழகிரி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தரக்கூடாது என்று சொல்லவில்லை. நீங்கள் தந்திருப்பதற்கு சொல்லியிருக்கிற காரணங்கள் சரியில்லை என்றுதான் நான் சொல்ல வருகிறேன். ஏனென்றால் இதே மன்றத்தில் நீங்கள் சென்ற நிதியாண்டில் கல்வி மானியத்தில், பேசுகிறபோது படித்துவிட்டு வேலை இல்லாமல் ஏராளமானவர்கள் இருக்கிறபோது, மேலும் மேலும் ஆசிரியர் பயிற்சி நிலையங்களைத் தருவதில் பொருள் இல்லையென்று கூறி இருக்கிறீர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்னாலே 7, 8 ஆண்டுக் காலம் கல்வி அமைச்சராக இருந்திருக்கிறேன். அப்போது இந்தப் பிரச்சினை தலை தூக்கிய நேரத்தில் நான்தான் 'வொகேஷனல் கோர்ஸ்' —ஆக ஹையர் செகண்டரி ஸ்கூல்சில் கொண்டு வந்து, 500 பள்ளிகளில் இந்த ஆசிரியர் பயிற்சியைக் கொண்டு வந்தேன். அப்போது இது கொஞ்சம் குறைவாக இருந்தது. அதற்குப் பின்னால் வந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த முறையை ரத்து செய்து விட்டார்கள். அதற்குப் பிறகு இந்த பிரைவேட் டிரெயினிங் ஸ்கூல்ஸ் எல்லாம் வருவதற்கான நிலைமைகள் ஏற்பட்டு, கோர்ட்டுகளுக்கு போய் எல்லாம் வாங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் நான் மறுபடியும் கல்வி அமைச்சராக வந்தபோது, ஒரு பெரிய சமுதாயத்தினுடைய கோரிக்கையை இல்லையென்று சொல்ல முடியாத நிலையில் நான் இருந்து கொண்டிருக்கிறேன். அப்போதுதான் தருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> எதிர்க்கட்சித் தலைவர்.



<u>*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசும்பொழுது சென்ற ஆண்டு நவம்பர் மாதம் அரசு கொள்கைப் பிரகடனமாக வெளியிட்டிருக்கிறது, ஏற்கனவே 45,000 பேர் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஒரு ஆண்டு ஒன்றுக்கு இப்போது இருக்கிற பள்ளிகளிலிருந்து 4,000 பேர் படித்துவிட்டு வெளியே வருகிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக வேலை கொடுத்தால் 5,000 பேருக்குதான் வேலை கொடுக்க முடியும். எனவே, புதியதாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் திறக்க மாட்டோம் என்று நவம்பர் மாதத்தில் சொல்லிவிட்டு, மீண்டும் ஏப்ரல் மாதத்தில் அதே மானியக் கோரிக்கையை வைக்கிற நேரத்தில், கொள்கை விளக்கத்தில் மீண்டும் அதையே சொல்லி இருக்கிறார்கள். புதியதாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை அரசு திறக்காது என்று சொல்லிவிட்டு, இப்போது புதியதாக தனியாருக்கு 140, அதுபோக அரசுப் பள்ளிகளில் 60, 70—மொத்தம் 210, 220 பள்ளிகளுக்குக் கொடுத்திருக்கிறீர்களே, இந்தக் கொள்கையிலே மாற்றத்திற்கு என்ன காரணம் என்றுதான் கேட்டேனே தவிர, —ஒரு 2, 3 இடங்களில் மைனாரிட்டிக்கு கொடுத்திருக்கலாம். எனவே, 200 பள்ளிகளைத் திறந்து விட்டேன் என்று சொல்வது நல்ல வாதம் ஆகுமா என்று அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2, 3 அல்ல. பெயர்களை வேண்டுமானாலும் படிக்கத் தயாராக இருக்கிறேன். ஹைகோர்ட் பெட்டிஷன் நம்பரோடு எத்தனை மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன்களுக்குக் கொடுத்திருக்கிறேன் என்ற விவரம் என்னிடத்திலே இருக்கிறது. ஆகவே, இவர்களுக்கு எல்லாம் தந்ததற்குப் பிறகு மேலும் இது அதிகமாகிறது என்ற நிலைமையில் நான் அரசு பள்ளிகளிலே 86 பள்ளிகளுக்கு மேலே நாங்கள் தந்திருக்கிறோம். அதைத் தடை செய்ய வேண்டுமென்ற எண்ணம்தான் எங்களுக்கும் இருக்கிறது. முடியாத நிலையில் நாங்கள் தர வேண்டியதாக இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. பீட்டர் அல்போன்ஸ்.

<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் பள்ளிகளைத் தொடங்குவதற்கு அனுமதி தேவையில்லை. ஆகவே

பெரும்பான்மை மக்கள் கேட்கிறபோது, அதை அரசு நிராகரிப்பதற்கு மனம் இடம் தராத காரணத்தால்தான் 140 பள்ளிகளுக்கு அனுமதி கொடுத்தேன் என்று சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரை, எங்கள் மாவட்டத்திலே, 10-க்கும் அதிகமான பள்ளிகளுக்கு அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதிலே இப்போது புதிதாக அங்கீகாரம் கொடுத்ததிலே கூட, கிருத்துவப் பள்ளிக்கும் இஸ்லாமியப் பள்ளிக்கும்தான் கொடுத்து இருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் அவைகளைப் பெயர்விட்டுச் சொல்லக் காத்து இருக்கிறோம். இந்த 140 பள்ளிகளிலே நீங்கள் எத்தனை கிருத்துவர்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு). நான் கேள்வியைக் கேட்டு விடுகிறேன். இப்போது புதிதாகக் கொடுத்திருக்கிற பள்ளிகளிலே எத்தனை கிருத்துவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. எத்தனை இஸ்லாமியர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. எத்தனை இந்துக்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்ற அந்த கணக்கைச் சொல்லுங்கள்.

பிற்பகல் 1-50

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருத்துவர்களுக்கும் தந்திருக்கிறோம், முஸ்லீம்களுக்கும் தந்திருக்கிறோம், இந்துக்களுக்கும் தந்திருக்கிறோம். ஏன் தந்திருக்கிறோம் என்றால், உயர்நீதிமன்றத்தினுடைய ஆணையின் பேரிலே தந்திருக்கிறோம். அவர்களுடைய டைரக்சன் பேரிலே நாங்கள் தந்திருக்கிறோம். எவ்வளவு பள்ளிகளுக்கு தந்திருக்கிறோம் என்ற விவரம் என்னிடத்திலே இருக்கிறது. தனியாக அதை வேண்டுமானாலும் தருகிறேன். இப்போதே, இதே சட்டத்திலே கூட, சிறுபான்மை இனத்தவர்களுக்கு நாம் விலக்கு அளித்திருக்கிறோம். இப்போது, அவைமுன் விவாதத்தில் இருக்கிற இதே சட்டத்தில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எந்த அளவிற்கு விதிவிலக்குத் தரமுடியுமோ, அந்த விதிவிலக்குத் தந்திருப்பதாக நாமே இந்தச் சட்டத்திலே சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எண்ணிக்கையைக் கேட்கிறீர்கள். அந்த எண்ணிக்கையைத்தான் இப்போது....

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பெரும்பான்மையாகக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிற reason is not acceptable to us. We are fighting for a cause. நீங்கள் போன வாரம் 2 ஸ்கூல்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த இரண்டுமே, மைனாரிட்டி, ஒன்று முஸ்லீம், ஒன்று கிரிஸ்டியன் (குறுக்கீடு).





திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற விவாதத்தைச் சொல்வது அரசியல் அமைப்புச் சட்டத்திலே அவர்களுக்கு என்று, மைனாரிட்டி சமூகத்திற்கு என்று சில பாதுகாப்புகளும் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. வேண்டுமென்றே, அவர்களுடைய உணர்வுகளைப் புண்படுத்துகிறோம் என்ற எண்ணம் அவர்கள் மத்தியிலே வரக்கூடாது. சில பள்ளிகளை, உயர்நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாகக் கொடுக்க வேண்டி வந்த காரணத்தால் மட்டுமே, 226 பள்ளிகள் புதிதாக திறக்கப்படவேண்டுமா ? ஆண்டு ஒன்றுக்கு ஏற்கனவே 4 ஆயிரம் பேர்கள் வெளியே வந்து கொண்டு இருக்கிறார்கள். இன்னும் ஒரு 10 ஆயிரம் பேர்கள் சேர்ந்தால், 14 ஆயிரம் பேர்கள் வெளியே வரவேண்டுமா? இது அவசியம்தானா ? அவர்கள் எல்லோருக்கும் நம்மாலே வேலை கொடுக்க முடியுமா ? அப்படி இருக்கும்போது, அரசின் கொள்கை நிலை மாற்றத்திற்கு என்ன காரணம் ? அதைத்தான் நான் கேட்டேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை இனத்தவர்களுக்கு, அவர்கள் அனுமதி கேட்கிறபோது, இல்லை என்று சொல்கிற அதிகாரம் எனக்கு இருக்கிறதா, அல்லது இந்த அரசுக்கு இருக்கிறதா என்பதுதான் கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அரசினுடைய கொள்கை மாறியதா என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் உள்ளே இருக்கிறபோது, ஒரு கருத்தை நாங்கள் சொல்கிறோம். வெளியிலே சென்ற பிறகு அதைவிட நல்ல கருத்து ஏற்பட்டால், மாற்றிக்கொள்கிற உரிமை ஜனநாயகத்தில் இருக்கிறது. ஆகையால், முன்பே நீங்கள் கொடுக்கவில்லை என்று சொல்லிவிட்டு, இப்போது கொடுக்கிறீர்களே என்று கேட்டால், இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது ஒன்று. இரண்டாவது, நாங்கள் கல்வியை படிப்பதற்கு, பயிற்சி நிலையங்களைத் திறந்த பிறகு, நீங்கள் எல்லாம் அதிலே போய்ச் சேரவேண்டும் என்று யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. ஆனால் படித்தவர்கள், பயிற்சி நிலையத்தில் படிக்கவேண்டும் என்று ஆயிரக் கணக்கில், பல்லாயிரக்கணக்கில் அமைச்சர்களையும், மற்றவர்களையும் பார்க்கிறபோது, வேறு வழி இல்லாமல்தான், புதிதாக பயிற்சி நிலையங்களைக் கொடுத்து

இருக்கிறோம். அப்படிக் கொடுக்கும்போது கூட, என்னிடத்திலே ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இடம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அரசு அதிலே தலையிடவில்லை. அரசினுடைய விதிமுறைகளின்படி பயிற்சி நிலையங்கள் இன்றைக்கு துவக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் இன்றைக்குக் கொடுத்த பிறகும் கூட, பல்லாயிரக் கணக்கான பேர்களுக்கு பயிற்சி நிலையங்களில் இடம் இல்லை என்று வெளியிலே வந்திருக்கிறார்கள். படித்தவர்களுக்கு எல்லாம், வேலை கொடுக்கவேண்டும் என்பது மட்டுமல்ல, படித்தவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்க வேண்டும் அல்லது அவர்கள் எல்லாம் படித்துவிட்டார்களே என்பதற்காக இருக்கிற கல்லூரிகளை மூடுவதில்லை. புதிய கல்லூரிகளை நாம் திறந்து கொண்டுதான் இருக்கிறோம். ஆகையினாலே, வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும், அவர்கள் பயிற்சி நிலையங்களிலே பிள்ளைகளைச் சேர்ப்பதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி, அதையெல்லாம் நான் கேட்கவில்லை. ஏற்கனவே ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். அறிவிப்பு கொடுக்கின்ற நேரத்தில், இந்த புதிய சூழ்நிலை உங்களுக்குத் தெரியாதா ? ஒன்று. இரண்டாவது, அறிவிப்பு கொடுக்கின்றபோதே, அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி மைனாரிட்டி சமூகத்தினர் கேட்கிற நேரத்திலே, கொடுத்துத்தான் தீரவேண்டும் என்று தெரியாதா ? தெரிந்தும், அன்றைய தினம் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அறிவிப்புக் கொடுத்ததற்குப் பின்னாலே ஏன் கொள்கை நிலையிலே மாற்றம் ஏற்பட்டது ? என்ன புதிய சூழ்நிலை என்றுதான் நான் கேள்வி கேட்டேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹைகோர்ட்டின் மூலமாக 1989 ஏப்ரலிலே 78, டீச்சர் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட்ஸ். ஏப்ரல் 1990-லே 38, ஏப்ரல் 1991-லே 27, ஏப்ரல் 1992-லே 30. இவர்கள் எல்லாம் பரிட்சை எழுதுவதற்கு அனுமதி வாங்கி பரிட்சை எழுதியிருக்கிறார்கள். ஹைகோர்ட்டுக்குப் போனவுடன் அவர்கள் உடனே ஆர்டர் தருகிறார்கள். ஆர்டர் தருவது மட்டுமல்ல. இப்படியெல்லாம் இருந்தால் தரவேண்டுமென்று எங்களுக்கு 'டைரக்ஷன்' தந்திருக்கிறார்கள். இன்றைக்கு இந்தியா முழுவதிலும் நடக்கின்ற எந்த வழக்கானாலும், 'எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன்ஸ்' பொறுத்தவரைக்கும் இந்துக்கள் நடத்துகின்ற அந்த இன்ஸ்டிடியூஷனைப்



பொறுத்துத்தான் தடையே. இந்த கேபிடேஷன் ஃபீ என்றால்கூட, இந்துக்களுடைய நிறுவனங்களைத்தான் அது கட்டுப்படுத்துகிறது. அது இதே சட்டத்திலே இருக்கிறது. (குறுக்கீடு) இதை வெளிப்படையாகப் பேசுவதற்கு நாம் வெட்கப்படத் தேவையில்லை. அரசியல் சட்டத்திலே இருக்கின்ற ஒரு நிலைமை பற்றி நாம் தெளிவாகத் தெரிந்து கொள்வது நல்லது.

பிற்பகல் 1-55

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை கல்வியிலே எங்களுக்கு கல்வி அமைச்சர் வழங்கியிருக்கிற உரிமைகளை நான் மறுக்கவில்லை. ஆனால் நான் இப்போது வாதிட விரும்புவது சிறுபான்மை அல்லாத இந்துக்களுக்கு நீங்கள் வழங்கியிருக்கின்ற அந்தக் கல்லூரியிலே எங்களுக்கு நீங்கள் அதிகாரம் வழங்கியிருப்பதற்கான, புதிய சூழ்நிலை என்ன என்பதுதான் என்னுடைய கேள்வி. (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : இதை நான் முடித்து விடுகிறேன். புதிய சூழ்நிலை ஒன்றும் கிடையாது. மற்றவர்களுக்கு தந்திருக்கிறதால்தான் இவர்கள் வந்து கேட்கிறார்கள். நாம் தர வேண்டியிருக்கிறது. அதுதான் புதிய சூழ்நிலை. ஆகவே நீங்கள் எதிர்ப்பது என்பது அல்லது நாங்கள் தர வேண்டாம் என்று நீங்கள் விரும்புவது, பெரிய சமுதாயமாக இருக்கிற இந்துக்கள் நடத்துகிற பள்ளிகள் தானே தவிர, வேறு அல்ல.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அப்படியானால், சிறுபான்மை சமுதாயத்தினர் நடத்துகின்ற பள்ளிக்கூடங்களில் இந்துக்களை அனுமதிப்பதில்லை என்பது அமைச்சருடைய வாதமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் இப்போது ஒரு புதிய உத்தரவை போட்டிருக்கிறோம், 50 சதவீதம் நடத்த வேண்டுமென்று. அதையும் முடியாது என்று நேற்றையதினம் அவர்கள் ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலேயே மிகப் பெரிய கல்விச் சேவை செய்கிற ஒரு சமுதாயம் இருக்குமென்றால், அது சிறுபான்மைச் சமுதாயம். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் அது கிருஸ்துவச் சமுதாயம்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் மறுக்கவில்லை. அதை நான் ஒவ்வொரு கூட்டத்திலும், அவர்கள் நடத்துகின்ற பள்ளிகளிலே கலந்து கொள்கிற ஒவ்வொரு நிகழ்ச்சியிலேயும் பாராட்டி, புகழ்ந்து பேசி வருகிறேன். இப்போதுள்ள பிரச்சினை இந்துக்கள் நடத்துகிற நிறுவனங்களைப் பற்றியது.

<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :</u> மைனாரிட்டி என்பதற்கு நான் ஒரு வார்த்தை சொல்லியாக வேண்டும். (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் உட்காருங்கள். திரு. அழகிரி, நீங்கள் சொன்னதற்கு அவாகள் பதில் சொல்லிவிட்டார்கள். விவாதம் வேண்டாம்.

<u>Thiru S. Peter Alphones :</u> Hon. Speaker Sir, do not distinguish between minority and non-minority. Taking advantage and exploiting the employed youth is common for both minorities and non-minorities. இதை மைனாரிட்டி செய்தாலும் தவறு, நான்—மைனாரிட்டி செய்தாலும் தவறு. Capitation fee, even if received by a minority educational institution it is wrong. Under the pretext of minority they cannot rob any unemployed youngster and cau e anxiety to the parents. நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், நீங்கள் மெஜாரிட்டி, மைனாரிட்டி என்பதற்காகக் கொடுக்கவில்லை. (குறுக்கீடு)

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் பேசிய அந்த பாயின்டிற்கு நான் சொல்கிறேன். இந்த கேபிடேஷன் ஃபீ, நம் முன்னால் இருக்கிற இதே பில்லில் கேபிடேஷன் ஃபீ அவர்கள் வாங்கினாலும் எதிர்ப்பேன் என்று சொல்கிறார்கள். கேபிடேஷன் ஃபீ-இல் அவர்களுக்கு விதிவிலக்கு தரப்பட்டிருக்கிறது.

<u>திரு. ச. அழகிரி :</u> நான் இங்கே வாதிட வந்த விஷயம், நேற்று கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகிறபோது சிறுபான்மை மக்கள், சட்டத்தில் இருக்கிற சலுகையைப் பயன்படுத்தி ஏராளமான ஆசிரியர் கல்வி நிலையங்களைத் திறந்திருக்கிறார்கள். அதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்திருக்கிறது. அப்படியிருக்கும்போது பெரும்பான்மை மக்கள் ஏமாந்தவர்களா ? எனவே அவர்களுக்கும் நாங்கள் வழங்கியிருக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள்.



என்னுடைய கருத்து, சிறுபான்மை மக்களுக்கு அரசியல் சட்டத்திலே பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. பெரும்பான்மை மக்கள் என்பவர்கள் இப்போது நீங்கள் கொடுத்திருக்கிறவர்கள். நீங்கள் யாருக்கு அனுமதி அளித்திருக்கிறீர்களோ, அவர்கள் பெரும்பான்மை சமுதாயத்தினுடைய பிரதிநிதிகளா ? அப்படி அவர்களுக்கு அந்த அனுமதி வழங்கப்பட்டதன் மூலமாக பெரும்பான்மை சமுதாய மக்களுக்கு ஏதாவது நன்மை கிடைத்திருக்கிறதா ? அவர்கள் இலவசமாக இவர்களுக்கு அந்தக் கல்வி நிலையங்களிலே கல்வியைக் கற்றுத் தருகிறார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

இரண்டாவதாக நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்கள் பேசுகிறபோது இதைப்போன்று கல்வி நிலையங்களை ஆரம்பித்தால் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று சட்டமில்லை என்று சொன்னார்கள், அவசியமில்லை என்று சொன்னார்கள். அது புரொஃபஷனல் கோர்சிற்குச் செல்லாது. ஆசிரியர் பயிற்சி என்பது படித்துவிட்டு வந்தால் வேலை கிடைக்குமென்ற நோக்கத்தோடு தான் அவர்கள் வருகிறார்கள். 'ஆர்ட்ஸ்' என்பது வேறு. 'புரஃபஷனல் கோர்ஸ்' என்பது வேறு என்பதை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், தயவுசெய்து உட்காருங்கள். அவர் முடிக்கட்டுமே.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு யாருக்கும் நீங்கள் கொடுக்காத உரிமையை மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ்சிற்கு மட்டும் எப்படிக் கொடுக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அவர் மட்டும் மீண்டும் மீண்டும் எழுந்து பேசுகிறார். எங்கள் அமைச்சர்கள் பேச வேண்டுமென்றால், நீங்கள் ஏன் அனுமதிக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 2-00

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர் பேச எழுந்திருக்கும்போதும் அதையேதான் நான் தெரிவித்தேன். அழகிரி பேசி முடிக்கட்டும் என்று நான் அவருக்கும் அப்போது சொன்னேன். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் என்ஜினியரிங் காலேஜ் வைத்திருக்கிறோம். என்ஜினீயரிங் காலேஜிலே படித்தவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டும் என்ற உத்தரவு அரசிடம் இல்லை. மெடிக்கல் கல்லூரி நடக்கிறது. அதிலே படித்தவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்க வேண்டும் என்று அரசிடம் உத்திரவு இல்லை. அதேபோல நன்றாக படித்துவிட்டு, பட்டம் படித்து விட்டு அல்லது எஸ்.எஸ்.எல்.சி., படித்து விட்டு அல்லது பி.யு.சி. படித்து விட்டு வருபவர்களுக்கு விவரம் தெரிகிறது. இவ்வளவு ஆயிரம் பேர்கள் நாட்டிலே வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று தெரிந்த பிறகுதான் இது போன்ற பயிற்சிப் பள்ளிகளுக்கு வருகிறார்கள். விவரம் தெரியாமல் கட்டாயமாக நான் கல்லூரியைத் திறந்து விட்டேன். அதில் படித்தாக வேண்டும் என்று யாரையும் கட்டாயப் படுத்துவதில்லை. நான் முதலிலே சொன்னபடி கொள்கைகளை மாற்றிக் கொள்ளலாம். இன்றைக்கு நான் உள்ளே வந்து ஒரு கருத்தைச் சொல்லி விட்டு, பிறகு வேண்டாத விவரங்களுக்குப் போய்விட்டு, திரும்ப உள்ளே வருகிறபோது அந்தக் கருத்து நல்ல கருத்து என்று அதை மாற்றிச் சொல்வதற்கு அதிகாரம் இருக்கிறது, உரிமை இருக்கிறது. அதேபோலத்தான் இந்த அரசு பயிற்சிப் பள்ளிகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம் என்று முதலிலே முடிவு எடுத்திருந்தாலும் இன்றைக்கு இருக்கிற கால சூழ்நிலையில் எந்த அளவுக்கு கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறார்களோ அதற்கு ஏற்றவாறு தான் இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் முதலிலே சொன்னபடி பயிற்சிக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை, இடம் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். இன்றைக்கு மைனாரிட்டிக்கு சட்டத்திலே பாதுகாப்பு இருக்கிறது. மெஜாரிட்டிக்கு பாதுகாப்பு இல்லை. ஆனால் பாதுகாப்பு இருக்கிறதா இல்லையா என்பது அல்ல. கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி கொடுப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே குழப்பம் தேவையில்லை. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தெளிவுபட கூறிவிட்டார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையிலும் மேற்கொண்டு ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் தேவையில்லை என்ற கருத்தின் அடிப்படையிலேதான் புதிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் தேவை இல்லை என்று



ஒரு முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் சிறுபான்மையோர் வழக்கு மன்றம் சென்று வழக்கு மன்றத்தின் மூலமாக ஆசிரியர் பயிற்சி நிலையம் நடத்துவதற்கு இடத்தை வாங்கிக் கொண்டு வந்து விட்டார்கள். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசுக்கு உரிமை இல்லை. இந்த நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அழகிரி போன்றவர்களுடைய எண்ணம் என்னவென்றால் நீதிமன்றத்தின் மூலமாக சிறு பான்மையோர் போய் வாங்கிக் கொண்டு வந்தாலும் வரட்டும், அவர்கள் நடத்திக் கொள்வது என்றாலும் நடத்திக் கொள்ளட்டும். பெரும்பான்மையோர் கேட்டால் கொடுக்க வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். அது தானே. (குறுக்கீடு) அந்தக் கட்டத்தை அப்படியே வைத்துக் கொள்ளலாம் என்பதுதான் உங்களுடைய எண்ணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகிரி, ஒரு நிமிடத்திலே முடியுங்கள்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கு அப்படி என்ன சலுகை என்று கேட்டார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே நீங்கள் தயவுசெய்து குறுக்கிடக் கூடாது. அவர் என்னிடத்திலே கேட்டார். என்னுடைய வரம்புக்குள்ளே அவர் கேட்டது. நீங்கள் விவாதத்தின் மீது வரவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இந்த அவையிலே நடப்பதை மிகவும் பொறுமையோடுதான் பார்த்துக் கொண்டிருக் கிறேன். எதிர்க்கட்சியிலே உள்ளவர்களுக்கு ஆளும் கட்சியில் உள்ளவர்களைவிட அதிகமான வாய்ப்புகளும் உரிமைகளும் தரவேண்டும் என்பதில் எனக்கு இரண்டாவது கருத்து இல்லை. ஆனால் நேற்றுகூட பேசுகிறபோது உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பொதுப்பணித் துறை குறித்து ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நான் சொல் வதைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு முழுமையாக விளக்கம் தர இங்கே அனுமதி தரப்படவில்லை. அனுமதி மறுக்கப் பட்டது. எனவே நடுநிலையோடு சொல்கிறேன். எதிர்த் தரப்பிலே உள்ளவர்களுக்கு பேசுவதற்கு தாங்கள் அளிக் கின்ற அதே வாய்ப்புகளை ஆளும் தரப்பிலே உள்ளவர் க்கும் தாங்கள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்தை முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். இங்கே இருக்கிற எல்லா உறுப்பினர்களுக்கும் நான் சம வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். சில நேரங்களில் எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று கொள்ளுகிறபோது, எனக்கு ஏற்படுகிற சங்கடம்——யார் முந்திக்கொள்கிறார்களோ அவர்கள் அந்த வாய்ப்பை எடுத்துக் கொள்கிறார்கள். சில நேரங்களில் குழப்பமான சூழ்நிலையில் முழுமையாகச் சிலருடைய கருத்தைச் சொல்ல அனுமதிக்க முடியாமல் போய் விடுகிறது. எனவே அந்தக் குழப்பமான சூழ்நிலை அதாவது ஒருவிதமான சப்தமான சூழ்நிலை இல்லாமல் இருப்பதற்கு எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திரு. அழகிரி பேசி முடியுங்கள்.

<u>திரு. ச. அழகிரி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதையும் தவறாகச் சொல்ல வரவில்லை. அரசியல் சட்டத்திலே சிறுபான்மை மக்களுக்கு இருக்கிற உரிமையை இந்த சட்டமன்றத்திலேயும் ஒரு வேளை பேரவைத் தலைவர் அவர்களும் பீட்டர் அல்போன்ஸ்-ஸுக்கு வழங்கியிருக்கிறார்களோ என்றுதான் நினைக்கிறேன்.

பிற்பகல் 2.05

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இல்லை, இல்லை. அந்த உரிமை என்பது எல்லா உறுப்பினர்களுக்கும் சம உரிமை தான்.

<u>திரு. ச. அழகிரி :</u> தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய கூற்றுக்கு நான் மறுப்பாக அதைத் தெரிவிக்கவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

<u>திரு. ச. அழகிரி</u> ; தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது சிறுபான்மை மக்களுக்கு நீங்கள் அளித்திருக்கின்ற அந்த உரிமையிலே நான் குறை சொல்லவில்லை. நேற்று அமைச்சர் . அவர்கள் பேசுகின்றபோது சிறுபான்மை மக்களுக்குச் சட்டத்திலே அந்த உரிமை வழங்கப்பட்டு இருக்கின்றபோது பெரும்பான்மை மக்களுக்கு நாம் வழங்கக் கூடாதா என்று அவர்கள் அரசியல் சட்டத்திலே ஒரு கேள்வியைக் கேட்டார்கள். இந்த வாதத்தை நீங்கள் அனுமதிப்பீர்களேயானால்——நான் சமீபமாக 2, 3 நிமிடமாக நான் பார்த்துக் கொண்டிருந்தேன். பண்ருட்டியார் அவர்கள் இதிலே ரொம்ப ஆர்வம் காட்டிக் கொண்டு இருந்தார்கள். (குறுக்கீடு).



<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இல்லை. நீங்கள் ஆர்வமாக கவனித்துக் கொண்டிருந்தீர்கள் என்றார்கள். அதிலே ஒன்றும் தவறு இல்லையே.

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்களே, அரசு ஒரு கொள்கையை வகுக்கிறது. அந்தக் கொள்கையை சிறுபான்மையினர் நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று உயர் நீதி மன்றம் தீர்ப்பு அளித்து....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இல்லை. அவர் குறிப்பிட்டது வேறு. இது முடியட்டும். விவாதம் முடிந்து மாலையில் அவை பழையபடி கூட வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) உங்களைப் பற்றிச் சொன்னதற்கு நானே உங்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தேன். அவர் 'உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு' என்று அவ்வளவுதான் சொன்னார். உட்காருங்கள். அழகிரி பேசட்டும். நேரம் ஆகிறது. (குறுக்கீடு) உங்களைப் பற்றி வந்ததற்கு நானே சொல்லிவிட்டேனே. உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு தான் இருக்கிறார் என்று நானே சொல்லிவிட்டேனே. அதிலே ஒன்றும் இல்லை.

<u>திரு. ச. அழகிரி :</u> பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கடைசிக் கருத்தாகச் சொல்ல விரும்புவது இந்தச் சட்டம் நல்ல சட்டம். ஆனால், இந்தச் சட்டமுன்வடிவு, குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளாமல் நாம் பாதுகாக்க வேண்டும். இப்பொழுது லஞ்ச ஒழிப்புச் சட்டம் நாம் வைத்திருக்கிறோம். இந்தியா முழுவதும் வைத்திருக்கிறோம். ஆனால் லஞ்சம் வாங்குகின்றவர்களை அதிலிருந்து நாம் அதிகப்படியாகத் தண்டிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே ஒருவர் தாம் நன்கொடை பெறவில்லை என்பதை மெய்ப்பிப்பாரேயானால், அவர் தண்டனைக்கு உள்ளாக மாட்டார் என்று அந்த ஒரு உட்பிரிவையும், பாதிக்கப்பட்டவர்கள் நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் அரசோ அல்லது அரசினுடைய ஒப்புதல் பெற்றவர்களுடைய அனுமதியின் பேரிலேதான் செல்ல வேண்டும் என்கின்ற அந்த இரண்டு உட்பிரிவுகளையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொஞ்சம் திருத்தி இந்தச் சட்டத்தை வேறுவிதமாகக் கொண்டு வருவார்களேயானால் இந்தச் சட்டம் மிகவும் செல்லுபடியாகக் கூடியதாகவும், இதன் மூலமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்மை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கும் என்பதை நான் கூறிக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுறுகின்றன. மீண்டும் பேரவை இன்று மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-07 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-30

பிற்பகல் 4-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. முத்தையா** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவின் மீது விவாதம்—தொடர்ச்சி டாக்டர் பீட்ரிக் டிசோசா.

**Dr. Beatrix D. Souza :** Honourable Speaker, Sir, in supporting the Bill which has been brought to prohibit the collection of capitation fee, for admission to educational institutions in the State, I want to make just three points.

In the recent 'Mohini Jain Case', in a Supreme Court Judgment, it has been ruled that the right to education is a fundamental right and can be enforced even against private educational institutions.

Article 21 of the Constitution ensures 'personal liberty to the citizen and it also includes the right to livelihood and by extension provides for dignity in living. Literacy enhances dignity and therefore, this fundamental right to education should be made available at all levels. Article 14 provides for 'equality' of all citizens. Article 30 affords Minorities, the right to establish and administer institutions for the benefit of their communities. By implication of Article 30, it further enhances the excellence in education, as this is the avowed aim of the Minority Institutions. But Article 30 does not negate Article 14, the equality of all citizens. The provisions of this Bill which ensure equality for all and the fundamental right to education are not therefore inconsistent with the right guaranteed under Article 30 of the Constitution. It is a sad fact that even after 45 years of Independence, the minority right have deteriorated into Management rights and property rights. Our Christian Institutions which were started with the spirit of self-service and sacrifice have now become financial institutions by collecting fees in different ways. In the name of Minority rights, the human rights are often isolated.



Capitation fees are collected from poor minority students in their own Minority institutions under the guise of admission fees, Miscellaneous fees, Building Fund, Parent Teacher Association subscription. etc. The School Teachers are compelled and forced to sell highly priced tickets for Benefit Performances and the children are forced to buy these tickets.' It is a well known fact that human rights and fundamental rights should always have precedence over Minority rights. It will be naive for us to support that because the children are either forced to sell the tickets or buy tickets. It will also be naive for us to support that because education is a fundamental right and it should be either free or subsidized by the Government or even nationalised. Education especially professional education like Medical and Engineering Colleges is a costly affair. It is reasonable and just if enhancement is called for a low fees as in Government colleges can be, however, we see nowadays a seat in educational institutions is sold to the highest bidder, the criterion being affordability and not merit, with the result the standard and quality in Professional Colleges like Engineering will come down and the institution itself will be nothing more than a commercial and profiteering venture.

Secondly, Clause 2 of the proposed Bill states that ' No Court shall take cognizance of any offence under this Act except with the sanction of the Court. When legislation once makes the collection of capitation fees an offence punishable under the law like any other offence, for example, theft under the Penal Code, even where the State does not want to prosecute the aggrieved individual and should still be allowed to pursue a private complaint.

பிற்பகல் 4-30

This right has been taken away by the Government sanction process and this may lead, in future, to arbitrary exercise of power.

Finally, it is not enough if the Government prohibits the collection of Capitation fees. The Government should control the admission procedure itself.

The University Acts do not have specific provisions to control admissions. The original G.O. Ms. No. 1196, dated 24th July 1985 giving permission to start three private Medical Colleges in the State, included a clause (Cl. 12) that no Capitation Fee would be permitted to be collected. However, this clause has never been adhered to. The Rajah Muthiah Medical College at Annamalai Nagar challenged the condition laid down in the G.O. It claimed autonomous status as it came under a separate University.

Therefore, Universities must, have power to regulate admission. Special provisions should be made in the University Act itself.

The proposed Bill framed along the lines of the Karnataka Bill by incorporating the above suggestions and removing anomalies may become a Bill of the Tamil Nadu Government in its own right. Thank you.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனி சாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கல்வி நிலையங்களில் மாணவர் களைச் சேர்த்துக் கொள்ளும்போது கட்டாய நன்கொடை வசூலிக்கக் கூடாது எனற தடைச் சட்டத்தின்மீது என்னுடைய சுருக்கமான கருத்தை இந்த அவையிலே முன் வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சட்டத் திருத்தத்தினுடைய முன்வடிவில் 9/1-இல் கொண்டு வந்திருக்கிற, கல்வி நிலையங்களில் சோதனையிடுவதற் கான அதிகாரத்தில் கல்வி நிலையம் ஏதாவது ஒன்றில், ஏதுவான பணி நேரங்களில், எந்தச் சமயத்திலும் என்பதை நீக்கிவிட்டு, அதேபோன்று கட்டாய நன்கொடை வசூல் செய்கிற, பயன்படுத்தப்படுகின்ற இடத்தில் என்று, அந்தச் சட்டத் திருத்தத்திலே மாண்புமிகு அமைச்சர் மாற்றிக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று இதிலே இருக்கக்கூடிய அந்த பதினோராவது பிரிவு முற்றிலும் நீக்கப்படவேண்டும். காரணம், முழுமை யாக தனியார், நன்கொடை, சுயநிதி பெற்று கல்லூரி நடத்தக் கூடிய நிறுவனங்கள், அவர்கள் தவறு செய்தால் தப்பித்துக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பை அளிக்கின்ற வகையில் அதனுடைய பதினோராவது பிரிவிலே கொடுக்கப் பட்டிருக்கிறது. அதற்கு மாறாக, இதில் குற்றம் புரிபவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு காவல் துறைக்கும் அதிலே அதிகாரம் அளிக்கவேண்டுமென்று, அதிலே திருத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். அதேபோன்று, தனியார் கல்லூரிகளில் இன்றைக்கு இருக்கக்கூடிய அந்த கட்டாய நன்கொடை என்பது இன்றைக்கு ஒரு கொடூரமான நிலைகளுக்குச் சென்று கொண்டிருக்கிறது. காலையில் இங்கே நடந்திருக்கின்ற இந்த விவாதத்தில் முன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பல்வேறு உறுப்பினர்களுக்கு பதிலுரையில் விளக் கங்களை அளித்து இருக்கிறார்கள். ஆனால் நான் சுருக்க மாகச் சொல்வது என்பது, இன்றைக்கு தமிழ்நாட்டிலே துவங்கியிருக்கக்கூடிய ஆசிரியர் பயிற்சிக் கல்வி அநேகமாக எல்லா இடங்களிலும் துவக்கப்பட்டு இருக்கிறது. அரசாங்





கத்தின் மூலமாக 100-க்கும் மேற்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்து இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு சில இடங்களில் தொடங்கப்படவில்லை. உடனடியாக என்னிடத்திலே ஆதாரம் கேட்பார்கள். இன்றைக்கு ஒரே உத்தரவிலே, ஒரே நம்பரிலே அதுபோன்று இரண்டு கல்வி நிலையங்கள் பல இடங்களில் போலித்தனமாக நடைபெற்றுக்கொண்டிருக் கின்றன. அதையெல்லாம்கூட கட்டுப்படுத்த வேண்டும். ஏனென்று சொன்னால், இதிலேயும் கூட அந்தப் பயிற்சிக் கல்வி, இன்றைக்கு ஆசிரியர் பயிற்சிக் கல்வியில் மாணவர்கள், மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னால் அவர்கள் பள்ளி நடத்துவதில்லை. நீங்கள் வேண்டுமென்று சொன்னால் உங்களுடைய பரீட்சையை எழுதக்கூடிய நேரத்திற்கு வந்தால் போதும், இங்கே கல்வியைப் படிப்பதற்கு வரவேண்டியதில்லை என்று சொல்லக் கூடிய அளவிற்கு இன்றைக்கு அந்தப் பயிற்சிக் கல்வி நிலையங்கள் தமிழ்நாட்டில் தொடங்கியிருக்கின்றன என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-40

இதிலே நான் கொடுத்திருக்கிற அந்தக் திருத்தங்களை இதிலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்பேரிலே குடியரசுக் கட்சியின் சார்பிலே கருத்துக்களை வழங்க வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி நிலையங்களிலே கட்டாய நன்கொடையைத் தடுத்து நிறுத்துவதற்காக இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது. இதை நான் மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இதை எந்த அளவிற்கு முழுமையாகச் செயல்படுத்த முடியுமென்பதிலே எனக்குச் சந்தேகம் உண்டு. நன்கொடை வசூலிப்பவர்கள் யாரும் நாங்கள் நன்கொடை வசூலிக்கிறோம் என்று சொல்லி வசூலிக்கப் போவதில்லை. நம்முடைய அரசியல் சட்டம் மிகத் தெளிவாக ஏழை எளிய மக்களுக்கு, ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்களுக்கு இலவசமாக கட்டாயக் கல்வி வழங்கவேண்டும், அதை நோக்கி நம்முடைய அரசு போக வேண்டும் என வலியுறுத்துகிறது. ஆனால் இன்றைக்கு

தனியார் கல்விக் கூடங்களைத் தொடங்குவது என்பது ஒரு நல்ல சுலபமான வியாபாரமாக, ஒரு கௌரவமான வியாபாரமாக மாறி, பரவி வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

சில கல்லூரிகளிலே இலட்சம், ஐம்பதாயிரம் என்று இப்படி இடங்களை விற்பதை—தனியார் கல்லூரிகளை நான் சொல்கிறேன்—பார்க்கிறபொழுது இதில் எல்லாம் சாதாரண, ஏழை எளிய மக்கள் சேர்ந்து படிக்க முடியுமா என்ற ஐயம் எழுகிறது.

நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், துப்புரவுத் தொழிலாளியின் மகன்கூட டாக்டராகவோ, என்ஜினியராகவோ வர வேண்டுமென்ற பெரு நோக்கோடு அப்படிப்பட்ட புதிய திட்டங்களையெல்லாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தனியார் கல்லூரிகளிலே அவர்கள் சேர்ந்து படிப்பதற்கு வழியே இல்லாமல் போகிறது.

இது ஒருபுறம் இருந்தாலும்கூட, அங்கே டியூஷன் பீஸ், கல்லூரிக் கட்டணம், பயிற்சிக் கட்டணம் என்று சொல்லப்படுகின்ற கட்டணங்களை அவர்கள் வசூலிப் பதைப் பார்த்தால் அது மிக வேதனையாக இருக்கிறது. நம் முடைய அரசின் சார்பிலேயே, தனியார் கல்லூரிகளுக்கு என்று நாம் சில கோட்டாவைப் போடுகிறோம். ''டோட்'' என்று சொல்லப்படுகின்ற அந்த ஒதுக்கீடுகளைத் தனியார் கல்லூரி களுக்கு நாம் போடுகிறோம். அந்தத் தனியார் கல்லூரிகளிலே நம்முடைய அரசு கோட்டாவின்படியே அந்த மாணவர்களை நாம் சேர்க்க அனுப்புகிறோம். ஆனால் அங்கே போகிற பொழுது அவர்கள் டியூஷன் பீஸ் 25,000 ரூபாய், அதற்குப் பின்னாலே கல்லூரிக் கட்டணம் 15,000, லேபரேட்டரி பீஸ், ஸ்போர்ட்ஸ் பீஸ் என்று நிறைய என்னென்னமோ போட்டு 40,000 ரூபாய், 50,000 ரூபாய் வசூலிக்கிறார்கள்.

நான் வருத்தத்தோடு ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம் முடைய ஏழை எளிய மக்களுக்காகவே தன்னுடைய கடைசி உயிர் மூச்சு வரை வாழ்ந்து மறைந்த மக்கள் தலைவர் புரட்சித் தலைவர் பெயரால் ஒரு கல்லூரி இருக்கிறது. அதை எதிர்த்து இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மாணவர்களே ஒரு வழக்கைப் போட்டிருக்கிறார்கள். தனியார் வைத்திருக்கிறார்கள். அதிலே அவ்வளவு வசூலிக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மாணவர் களுக்கு அங்கேயெல்லாம் கல்லூரிக் கட்டணமோ, பயிற்சிக் கட்டணமோ வசூலிக்கக்கூடாது என்கிற சட்டம் இருக்கிறது. பலமுறை கல்வியமைச்சரவர்கள் இதைத் தெளிவுபட அறிவித் திருக்கிறார்கள். இந்த மன்றத்திலேகூட பலமுறை கல்வி





யமைச்சரும் தெரிவித்து பத்திரிகைகளிலேகூட வந்திருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களிடமிருந்து இந்தக் கல்லூரிக் கட்டணத்தைத் தவிர மற்றக் கட்டணங்களை வாங்கக்கூடாது என்று. ஆனால் அவர்கள் போடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையெல்லாம் இருக்கின்றது. அதையும் இந்தச் சட்டத் திருத்தத்திலே சேர்த்து கொஞ்சம் கடுமையாக்க வேண்டுமென்பதை மட்டும் நான் கூறி அமர்கிறேன். நன்றி.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. ச. இராமச்சந்திரன்.

<u>*திரு. ச இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உயர் கல்வியை இன்றைய சமுதாய அமைப்பில் அரசே தருவது என்பது மிகக் கடினமான காரியம்தான் ஆனால், அதே நேரத்தில் தனியார் இந்த உயர் கல்வியைத் தர வருகிற பொழுது அதை முறைப்படுத்துவது மிகவும் இன்றியமையாதது ஆகும். அந்த வகையில் இந்தச் சட்டம் பயன்படும் என்று நம்புகிறேன்.

ஆனால், அதே நேரத்தில் அண்மையிலே உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, தனியார்கள் கல்விப் பணியைச் செய்கிற பொழுது அவர்கள் அரசின் முகவர்களாக, அங்கீகரிக்கப் பட்ட ஏஜண்டுகளாக நின்று செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அது மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். சுய நிதிக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், மனுக்கள் போட மார்க் இருந்தால் போதும்; அந்தக் கல்லூரியில் பணம் கட்டினால், இடம் பெறலாம் என்ற நிலை இருந்தது. அதன் விளைவாக, படித்து நல்ல மார்க்குகள் வாங்கினாலும்கூட, ஏழை என்ற காரணத்தினால் அவனால் இடம் பெற முடியவில்லை. மனு போடுகிற அளவுக்கு மார்க்குகள் இருந்தாலும், பணக்காரன் என்ற காரணத்தினால் அவனுக்கு அங்கே இடம் கிடைக்கிறது. ஆகவே, சமவாய்ப்பு இல்லாமல் ஆக்கப்படுகிறது.

பிற்பகல் 4-45

அடுத்து, அரசு கல்வி நிறுவனங்களை நடத்துகிறபோது சமூக நீதியின் அடிப்படையிலேயும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு என தனி ஒதுக்கீடு செய்து அவர்களை அந்தக் கல்லூரிகளில் சேர்க்கிறது. தனியார் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், சமூக நீதியைப் பின்பற்ற வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஆகவே, தனியார் கல்லூரிகளை முறைப்படுத்துகிறபோது, தனியார் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்குகிறபோது, தனியார் கல்லூரிகளுக்கு அரசு அங்கீகாரம் அளிக்கிறபோது, யார் யார், எந்தெந்த நிறுவனங்கள், அரசு அல்லது இந்த மன்றம்—சட்ட மன்றம்—சமத்துவ அடிப்படையி

லேயும், சமூக நீதியின் அடிப்படையிலேயும் வகுக்கின்ற கொள்கைகளை நிறைவேற்றுகிறார்களோ, அத்தகைய அமைப்புகளுக்கு மட்டும்தான் அங்கீகாரம் அளிக்கிற வகையிலே அந்தக் கொள்கை உருவாக வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இதே சட்டத்திலேகூட குறிப்பிடப்பட்டிருக்கிறது சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்று.

சிறுபான்மை மக்களுக்கு உரிய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் தமிழ்நாடு என்று எடுத்துக் கொண்டால், தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மக்கள் நலனையும் அடிப்படையாக வைத்து இந்த மன்றம் கொள்கைகளை உருவாக்குகிறபோது, அந்தக் கொள்கைகளைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்கிற முறையில் சிறுபான்மை சமுதாயத்தினர் நடத்துகிற கல்வி நிறுவனங்கள் இயங்குமானால் அவற்றுக்கு அரசியல் சட்டப் அங்கீகாரம் தருகிறது என்றால் அந்த அரசியல் சட்டப் பிரிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நிச்சயமாக தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க வேண்டும். இப்பொழுதே ஒரு வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறது. எல்லோருக்கும் பொதுவாக சமவாய்ப்பு அளிக்கிற வகையில், எல்லோருக்கும் சமூகநீதி கிடைக்கிற வகையிலே ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றம் அல்லது ஒரு பொது நிறுவனம் ஒரு கொள்கையை உருவாக்குகிறபோது அதை அரசின் சார்பாக அதாவது அரசினுடைய ஏஜண்டுகள் என்கிற முறையிலேதான் தனியார் நடத்தினாலும் சரி, சிறுபான்மை சமுதாயத்தினர் நடத்தினாலும் சரி, நடத்த வேண்டுமென்று அண்மையிலே அளிக்கப்பட்ட சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை அடிப்படையாக வைத்து சிறுபான்மையினருக்கு என்று இருக்கக் கூடிய அந்த அரசியல் சட்டத்திலே, பிரிவிலே கூட அது பொது நலனுக்கு அல்லது சமுதாயத்திற்கு, சம வாய்ப்புக்கும், சமநீதிக்கும் முரணாக இருக்கிறபோது, அந்த இடத்திலே அதற்கு உரிய அதிகாரம் இல்லை என்கிற அளவிற்கு நிச்சயமாக உச்சநீதிமன்றத்திலே அதற்கான ஆதாரங்களோடு எடுத்துச் சொல்ல வேண்டும். ஏனென்றால் ஒரு சமத்துவ சமுதாயத்தை சமநீதி அடிப்படையிலே ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்கிறபோது, அதுதான் பொருத்தமானது என்று நான் கருதுகிறேன்.

இங்கே காலையிலே நடந்த விவாதத்திலேகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் பேசுகின்றபோது என்னுடைய பெயரை இழுத்தார்கள். அதிலே ஒன்றைத்தான் நான் என் மனத்திலே வைத்துக்கொண்டு கூர்ந்து கவனித்தேன். அதாவது ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளே கூடாது என்று முடிவு



எடுத்து ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை நடத்துவதற்கு சிறுபான்மை சமுதாயத்தினருக்கு அனுமதி கொடுத்துவிட்டால் 5 வருடம், 6 வருடம் கழித்து ஆசிரியர் வேலைக்கு வந்தால், அந்தப் பள்ளியிலிருந்துதான் ஆசிரியர் வேலைக்கு வருவார்களே தவிர, மற்றவற்றிலிருந்து வருவதற்கு வாய்ப்பு இருக்காது. இதர சமுதாயத்தினருக்கு சமவாய்ப்பு இல்லாமல் போகிறதே என்று சிந்தித்துக் கொண்டிருந்தேனே தவிர வேறு கருத்தின் அடிப்படையில் அல்ல. ஆகையால் எதை எடுத்தாலும் அதிலே equality before law-equal oppunity இங்கே ஆர்ட்டிகிள் 21-லே சொன்னதைப்போல, இன்றைக்கு கல்வி உரிமை அடிப்படை உரிமை. அந்த உரிமையை அடிப்படை உரிமையாக வைத்து அரசுதான் கொடுக்க வேண்டும். அரசுக்கு பணம் இல்லை; ஆகையினால் தனியார் கல்லூரிகள் மூலம் தரலாம். ஆனால் அந்தத் தனியார் கல்லூரிகள் அரசினுடைய எஜெண்டுகளாக இருக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிறது. இந்தச் சட்டத்தில் மேலும ஒரு பிரிவைச் சேர்த்திருந்தால் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 4-50

ஒரு கொள்கையை நான் சொல்லுகின்ற சம வாய்ப்புக் கொள்கையோ அல்லது சம நீதிக் கொள்கையோ, அதற்கு மாறாக ஒரு நிறுவனம் கல்வி நிறுவனம் நடக்கிற போது அந்த கல்வி நிறுவனத்தினுடைய நிர்வாகத்தை எடுக்கக் கூடிய அதிகாரத்தை இந்தச் சட்டத்திலே போட்டு இருக்க வேண்டும். சாதாரணமாக ஒரு தொழிற்சாலையிலேகூட Industries (Regulation) Act என்று இருக்கிறது. ஒரு தொழிற்சாலை மோசமாக நடக்கிறது என்றால், அந்த நிர்வாகத்தை மட்டும் எடுப்பதற்கு உரிமை இருக்கிறது. ஆனால், இந்தச் சட்டத்தில் அத்தகைய உரிமை இல்லை. அந்தப் பிரிவு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர். திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மூன்று விதமான கல்லூரிகள் இருக்கின்றன. ஒன்று, அரசு நடத்தும் கல்லூரிகள், இன்னொன்று un-aided private colleges, இன்னொன்று Aided private Colleges. அரசு நடத்தும் கல்லூரிகளிலே மாணவர்களை கம்யூனல் ரிசர்வேஷன்படி தேர்ந் வகுப்பு அடிப்படையிலே தெடுப்பது முறை. அப்படி செய்யப்பட்டு வருகிறது. அதே போல உதவி பெறும் பல கல்வி நிறுவனங்களிலேயும், அதே அரசு கல்லூரிகளைப் போல, பள்ளிகளைப்போல, அதே முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் உதவி பெறாத கல்வி நிறுவனங்களிலே அது கடைப்பிடிக்கப்பெறுவதில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திரு. வி. கே. லட்சுமணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு கருத்துதான்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி நிறுவனங்களிலே உதவி பெறும் தனியார் நிறுவனங்களிலே இந்த கம்யூனல் ரிசர்வேசன் கடைபிடிக்கப்படுவதில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அதைத்தான் நான் மறுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி.

திரு. ச. இராமச்சந்திரன் : நான் எய்டெட், அன்-எய்டெட் என்று வரவில்லை. சுப்ரீம் கோர்ட்டினுடைய அண்மைத் தீர்ப்பு என்னவென்றால், இந்தக் கல்வி உரிமை என்பது அடிப்படை உரிமை, அதை அரசுதான் அளிக்க வேண்டும். அரசு தன்னால் அளிக்க முடியாதபோது தனியார் களுக்கு அதிகாரத்தை, தன்னுடைய ஏஜெண்டாகத் தருகிறது. அந்த ஏஜெண்ட் அரசு எப்படி அதை நடத்தவேண்டுமோ அதைப்போல, அந்த தனியார்கள் நடத்த வேண்டுமென்று குறிப்பிடுகிறது. அரசு இருந்தால் எப்படி நடத்துவார்களோ, சமூக நீதி அடிப்படையிலே நடத்துவார்களோ' சம வாய்ப்பு அடிப்படையிலே நடத்துவார்களோ, அதைப்போல அந்த நிறுவனங்கள் நடத்த வேண்டும். அவர்களுக்கு வேண்டிய முதலீடு ஒரு எண்டோன்மெண்ட் மூலம் ஏற்படுத்திக் கொள்ளலாம். நடைமுறைச் செலவுகளுக்கு வேண்டிய செலவுகள் எவ்வளவு, சம்பளம், போக்குவரத்து என்ன என்பதை நிபுணர்கள் குழு மூலம் அதை நிர்ணயித்துக் கொள்ளலாம். இப்படி என்று அந்தக் கல்வித் திட்டத்திலே தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் குறிப்பிட்டேன். கொள்கையை நிறைவேற்றாத கல்வி நிறுவனங்களுடைய நிர்வாகத்தை எடுத்து நடத்துவதற்கு உரிய பிரிவை இதிலே சேர்க்க வேண்டும்.

எனக்கு நினைவு சரியாக இருக்குமேயானால், ஏற்கனவே தமிழக அரசு ஒரு ஆணையை அந்த அடிப்படையிலே பிறப்பித்திருந்தது. மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி கொடுக்கிறபோது அந்த நிருவாகத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று ஆணை பிறப்பித்திருந்தது. அதை ஏன் இந்தச் சட்டத்திலே



சேர்க்கவில்லை என்று தெரியவில்லை. அந்தப் பிரிவையும் இந்தச் சட்டத்திலே சேர்க்க வேண்டும். அதன் மூலம் ஒரு நிறுவனம் மோசமாக நடக்கிறது என்றால் அதனுடைய நிர்வாகத்தை எடுத்து நடத்த நாம் அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதற்குப் பயன்படும் என்று கூறி அமைகிறேன்.

## 3. விதி 110-ன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்.

### வட சென்னை அனல் மின் நிலையத்திற்கு கருவிகள் வாங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட நடைமுறை குறித்து பொதுப்பணித்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-ன் கீழ் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை வெளியிட அனுமதிகோரி உள்ளார். அவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த அறிக்கையை அமைச்சர் வெளியிடுவார். மாண்புமிகு பொதுப்பணி துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110-ன் கீழ் ஒரு அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

பிற்பகல் 4-55

வட சென்னை அனல் மின் நிலையத்தில் உபயோகப் படுத்தப்படும், நிலக்கரி, மின்சார உற்பத்திக்காக கொதிகலனில் எரிக்கப்பட்டு நிலக்கரி அதன் சாம்பலை அப்புறப் படுத்தக் கூடிய இயந்திரக் கருவிகள் தயாரிப்பதற்கான 'ஆஷ் ஹேண்டிலிங் சிஸ்டம்' என்ற திட்டத்திற்கு 14—12—1990 அன்று பகிரங்க ஏல ஒப்பந்தங்கள் முறையாகக் கோரப்பட்டு 10 நிறுவனங்கள் இந்த ஒப்பந்தத்திலே பங்கேற்றன. இந்த ஒப்பந்தங்கள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு, இத்திட்டம் சம்பந்தமாக தொழில் நுட்ப ஆலோசனை பெறப்பட்டு தீவிர பரிசீலனைக்குப் பிறகு 30—10—1991 அன்று தமிழ்நாடு மின்சார வாரியம் குறைந்தபட்சத் தொகைக்கு கோரி 10 டெக்கான் மெக்கானிக்கல் வொர்க்ஸ்' பூனா என்ற நிறுவனத்திற்கு கொடுக்கலாம் என்று முடிவு எடுத்து, 31-10-1991 அன்று மேற்கண்ட கம்பெனிக்குத் தகவல் வழங்கப்பட்டது. இதற்கான பர்ச்சேஸ் ஆர்டர் 23—1—1992 அன்று தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கண்ட கம்பெனிக்கு வழங்கியது. பர்ச்சேஸ் ஆர்டரின் மதிப்பீட்டின் மொத்தத் தொகை ரூ. 33.70 கோடியாகும். இதற்கிடையில் அந்த நிறுவனம்

விலைவாசி ஏற்றத்தினால் அதாவது இரும்பு, எஃகு, தொழி லாளர்கள் கூலி உயர்வு, வங்கிக் கடன் கட்டுப்பாடு, ரூபாயின் மதிப்புக் குறைவு போன்ற பல காரணங்களால் விலையை உயர்த்தக் கோரியுள்ளது. இது சம்பந்தமாக தொழில் நுட்ப நிறுவனமான டாட்டா கன்சல்டன்ட்டின் கருத்துப் பெற்று தமிழ்நாடு மின்சார வாரியம் ஆய்வு செய்து வருகிறது. இந்த ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த பட்ச ஏலம் கேட்ட டெக்கான் மெக்கானிக்கல் கம்பெனிக்கும், அடுத்தபடியாக கோரிய இன்டோர் கம்பெனிக்கும் உள்ள வித்தியாசம் ரூ. 20.86 கோடியாகும். அதுவும் இல்லாமல் மறு ஏலம் விட்டால் மேலும் 20 கோடிக்கு மேல் தேவைப்படும் என்று தொழில் நுட்ப வல்லுநர்களால் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் மறு ஒப்பந்தம் கோரினால் வட சென்னை அனல் மின் நிறுவனம் நிறுவுவதில் ஓராண்டு காலத்திற்குமேல் கால தாமதம் ஆகும். அவ்வாறு காலதாமதம் ஆகின்றபோது, ஆசிய வளர்ச்சி வங்கி அதாவது ஏ.டி.பி. ஏசியன் டெவலப்மெண்ட் பேங்க், வங்கியில் கடன் பெற்று இந்த வட சென்னை அனல் மின் நிலையத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதால் அதற்குரிய வட்டித் தொகையும் அதிகமாக மின்சார வாரியம் செலுத்து வதுடன் பெருமளவில் மின்சார உற்பத்தியும் பாதிக்கப்படும் என்பதும் தொழில் நுட்ப வல்லுநர்களால் கூறப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வாரியம் ஏற்கனவே என்னென்ன நடைமுறைகளை தமிழ்நாடு மின்சார வாரியச் சட்டத்திட்டங்களுக்குட்பட்டு பின்பற்றி வருகிறதோ அதுபோன்ற நடைமுறைதான் இந்தத் திட்டத்திலும் பின் பற்றப்பட்டு வருகிறது. ஆகவே, ஒப்பந்தப்புள்ளி வழங்கு வதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 110 ஸ்டேட்மெண்டின் மேல் டிஸ்கசன் இல்லை. திரு. வி. கே. லட்சுமணன்.

<u>6. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) —தொடர்ச்சி.</u>

<u>(ஊ) கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலை தடை செய்தல்) சட்ட முன்வடிவு, 1992 —தொடர்ச்சி.</u>

*<u>திரு. வி. கே. லட்சுமணன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கல்வி நிறுவனங்களில் கட்டாய நன் கொடை வசூல் செய்வதை தடை செய்ய வேண்டுமென்ற இந்தச் சட்ட முன்வடிவின் கொள்கையளவிலே நான் வர வேற்றாலும்கூட, இதை நல்ல முறையிலே அமுல்படுத்த முடியுமா என்பதிலே எனக்குள்ள சில சந்தேகங்களை இங்கே வெளியிடாமல் இருக்க முடியவில்லை. நான் ஏற்கனவே





சொன்னதுபோல் தமிழ்நாட்டிலும் மூன்று விதமான கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. ஒன்று அரசு நடத்தும் கல்வி நிறுவனங்கள், இன்னொன்று உதவி பெற்று தனியார் நடத்தும் கல்வி நிறுவனங்கள், இன்னொன்று உதவி பெறாமல் தனியார் நடத்தும் கல்வி நிறுவனங்கள். இந்த உதவி பெறாமல் தனியார் நடத்தும் கல்வி நிறுவனங்கள்தான் சுயநிதி நிறு வனங்கள் என்று சொல்லப்படுகிறது. இவை ஏன் தோன்றின என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய மாணவர்கள் பொறியியல் கல்லூரியிலும் மருத்துவக் கல்லூரியிலும் அதிக அளவில் சேரும் நிலை வந்த போது அண்டை மாநிலங்களுக்குச் சென்று அதிகமான நன்கொடை கொடுத்து படிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இதைத் தவிர்க்கும் முறையிலே தமிழ்நாட்டிலேயே அவ்வாறு நன்கொடைகள் கொடுத்து படிக் கலாமென்று நம்முடைய மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக இந்தக் கல்வி நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவைப் பார்க்கிறபோது, வெறும் கட்டாய நன்கொடை மட்டுமல்ல, நன்கொடையே வசூலிக்க முடியாது என்கிற நிலைமையைத்தான் இது உருவாக்கியிருக்கிறது. நன் கொடை வசூலிப்பதை நிறுத்துவது மட்டுமல்லாமல், அந்த நிறுவனங்கள் கல்விக் கட்டணத்தைக் கூட உயர்த்த முடியாது என்கிற நிலைமையைத்தான் இந்தப் பிரிவுகளைப் பார்க் கின்றபோது நமக்கு தோன்றுகிறது. இந்தச் சட்டமுன்வடிவு முழுமையாக அமுல்படுத்தப்படுமா என்று சொன்னால் இன்று எல்லா கல்வி நிறுவனங்களையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம். இல்லையென்றால் தனியார் நடத்தும் சுயநிதி கல்வி நிறுவனங்களை மூடிவிடலாம். இது இரண்டும் நடை பெறவில்லையென்று சொன்னால், ஏற்கனவே இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு இருப்பதைப்போல் சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு இதிலே விதிவிலக்கு இருப்பதால். அவைகள் எவ்வளவு வேண்டுமானாலும் நன்கொடை வசூலிக்கலாம் என்ற நிலைமைதான் இருக்கிறது. ஏற்கனவே சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அந்தச் சலுகையை அதாவது 50 சதவீத மாணவர்களைத்தான் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். மீதி 50 சதவீதம் மாணவர்களை, சிறுபான்மை அல்லாத மாணவர்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நிலைமைக்குக்கூட அவர்கள் மறுப்பு தெரிவித்திருக்கிறார்கள். அரசும் அதைப் பரிசீலிக்கும் என்று நான் நினைக்கிறேன். அப்படிப் பரிசீலிக்கின்றபோது எதிர் காலத்திலே தமிழ்நாட்டிலே சிறுபான்மை நிறுவனங்கள்தான் இருக்கும். ஒன்று அரசு நிறுவனங்கள் இருக்கும் அல்லது சிறுபான்மை நிறுவனங்கள் இருக்கும். இதைத்தவிர வேறு கல்வி நிறுவனங்களே இருக்க முடியாது என்கிற நிலைமை ஏற்பட்டு இருப்பதை நான் மிகுந்த அச்சத்தோடும், கவலை யோடும் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இந்த நன்கொடை வசூலிக்கின்ற பிரச்சினையானது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று அதனுடைய பரிசீலனையில் இருக்கிறது. வரப்போகிற அக்டோபர் மாதம் 13 ஆம் தேதி அன்றைக்கு உச்ச நீதி மன்றம் அதைப் பரிசீலித்து தீர்ப்பினை வழங்க இருக்கிறது. குறைந்த பட்சம் அந்தத் தீர்ப்பு வரும் வரையிலாவது நாம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதை தள்ளிப்போடுவோம் என்று சொன்னால் அது பயனுடையதாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நன்கொடையை வசூல் பண்ணுவதிலேகூட கட்டாய நன்கொடைகூடாது என்றால், மனம் உவந்து கொடுக்கப்படுகின்ற நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளலாமா, வேண்டாமா, அதைப் பற்றி இங்கே தெளிவாகச் சொல்லப்படவில்லை. நன்கொடைக்குப் பதிலாக பொருள்களாக வாங்கிக் கொள்ளலாமா, நன்கொடைக்குப் பதிலாக ஒரு கல்லூரிக்கு சிமெண்ட் தேவைப்படலாம்.

பிற்பகல் 5.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லட்சுமணன் அவர்கள் இதிலே என்ன என்ன ஓட்டை உடைசல் இருக்கிறது. எப்படி எப்படி வசூலிக்கலாம் என்பதற்குச் சொல்கிறார்கள். தேடி, அவர்களுக்குச் செய்திகள் கொடுக்கிற வக்கீல் போல இருக்கிறது.

திரு. வி. கே. லட்சுமணன் : இல்லை, இல்லை. குறைபாடுகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினாலேயே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கல்லூரிக்கு தலைமை ஏற்று நடத்துகிறார் என்று கருதுகிறேன். ஆகவே அவருடைய கல்லூரியில் இப்படிப்பட்ட நிலைமைகள் உள்ளதா எனவும், யார், யார் நன்கொடை அப்படி அளித்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி அறிவிப்பாரா எனவும் அறிய விரும்புகிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு கல்லூரியை நடத்துவது உண்மை. மறுக்கவில்லை. ஆனால், அந்தக் கல்லூரி தனியார் உதவி பெறும் கல்லூரியே ஒழிய சுய நிதிக் கல்லூரி அல்ல. ஆகையினால், நன்கொடை வசூலிக்கிற பிரச்சனை அங்கே எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல உதவி பெறும் கல்லூரிகளிலேயே பெறுகிறார்கள் என்பது தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அச்சம்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குப் பிறகு இந்தப் பிரச்சினை உச்ச நீதி மன்றத்திலே இருக்கின்றபோது, தயவு செய்து இதைப் பரிசீலிப்பதை அக்டோபர் மாதம் 13 ஆம் தேதி வரை ஒத்திப்போட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆந்திர மாநிலத்திலே இந்தப் பிரச்சனை விஸ்வரூபம் எடுத்து, முதலமைச்சர் அவர்களே விலகுகின்ற அளவுக்கு அந்த பிரச்சினை போய் இருந்தாலுங்கூட இது நடந்துகொண்டிருக்கின்றபோதே கர்நாடக மாநிலத்திலே பங்காரப்பா அவர்கள் 9 தனியார் கல்லூரிகளுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆக இதையெல்லாம் கருத்திலே கொண்டு எதிர்காலத்திலே நாம் அதையும் நல்ல முறையிலே பரிசிலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசினுடைய கல்விக் கொள்கை, எவ்வளவு பணம் இருந்தாலும் அந்தப் பணத்தை ஆரம்பக் கல்விக்குச் செலவிட வேண்டும் என்றுதான் அரசு கருதுகிறதே ஒழிய உயர் கல்விக்காக அல்ல. காந்தியடிகள்கூட உயர்கல்வியை இலவசம் ஆக்கக் கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆக உயர் கல்வியை இனிமேல் யார் நடத்துவது? அரசாங்கமா, இல்லை தனியாரா என்பதைப்பற்றி நாம் திட்டவட்டமாக முடிவெடுத்தாக வேண்டும்.

இன்றைக்கு சுய நிதி தொழில் கல்லூரிகளிலே 50 சதவிகிதம் மாணவர்களுக்கு, அரசாங்கம் தேர்ந்தெடுத்து, அனுப்புகிற மாணவர்களுக்கு அந்தக் கல்வி நிறுவனங்கள் பாடம் சொல்லிக் கொடுத்து அரசின் பெரிய சுமையில் பாதி சுமையை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆக இந்தக் கல்வி நிறுவனங்களை ''வணிகத் தன்மையோடு'' என்று சொல்வதுக்கூட என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சுய நிதிக் கல்லூரிகள் பணம் வசூலிக்கவில்லை என்று சொன்னால், ஆசிரியர்களுக்கு யார் சம்பளம் கொடுப்பார்கள்? கட்டடம் யார் கட்டிக் கொடுப்பார்கள், கருவிகள் யார் வாங்குவார்கள்? ஆக இந்தக் கட்டடம் கட்டுவதையும், ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பதையும், லெபாரட்டரிக்கு வேண்டிய பொருள்களை வாங்குவதையும் வணிகவரித் தன்மை என்று சொன்னால் அதை என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றுதான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவேதான் இதை மீண்டும் பரிசிலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி. கே. லட்சுமணன்] [1992 செப்டம்பர் 25

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, தமிழ்நாட்டிலே 29 மேல் நிலைப் பள்ளிகளை தனியார் துவக்க அனுமதி அளித்தார்கள். அது எந்த அடிப்படையில் என்று சொன்னால், 3 ஆண்டு காலத்திற்கு அவர்கள் எந்த உதவியும் அரசிடமிருந்து எதிர்பார்க்கக் கூடாது என்ற ஒரு நிபந்தனையின் பேரில் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இன்றைக்கு 3 ஆண்டுகள் சென்ற பின்னாலே அந்த பள்ளிகளுக்கு இனியும்கூட நாங்கள் ஆசிரியர்களுக்கு பணம் தர மாட்டோம், நீங்கள் அரசிடம் இருந்து பெற்றுக்கொள்ளுங்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். இதிலே அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அந்த ஆசிரியர்களுக்கு அரசாங்கமே பணம் அளிக்கப்போகிறதா ? இல்லை, தனியார் பள்ளிகளே கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தப் போகிறார்களா? என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதையெல்லாம் கருத்திலே கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவினை அக்டோபர் மாதம் 13 ஆம்தேதி வரை ஒத்தி வைப்பது நல்லது என நான் என் கருத்தைத் தெரிவித்து அமைகிறேன்.

பிற்பகல் 5-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை இனத்தவர் நடத்துகிற கல்வி நிறுவனங்களுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது என்று நான் காலையில் கூறியிருந்தேன். அதிலே ஒரு சின்ன திருத்தம். 'அது அரசியல் சட்டத்திலே இருக்கிற 30 ஆவது விதிக்கு உட்பட்டு விலக்கு அளிக்கப்பட்டிக்கிறது' என்று எடுத்துக்கொள்ள வேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே, இந்தச் சட்டமுன்வடிவு மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த பல்வேறுவிதமான கருத்துக்களை எல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்கிறது. அவற்றை நன்கு ஆய்ந்து எதிர்காலத்தில் அந்த அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், பொதுவாக இந்தச் சட்டமுன்வடிவுக்கு ஏகோபித்த ஆதரவு தந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், பேசுகிறபோது பல்வேறு பிரச்சினைகள் எழுப்பப்பட்டன. சிலவற்றுக்கு அப்போதே நான் பதில் கூறியிருக்கிறேன். சிலவற்றுக்கு சில விளக்கங்களை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



1992 செப்டம்பர் 25] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

இன்றைக்கு இந்திய நாட்டில் கல்விக் கொள்கை என்பது இங்கே வகுக்கப்படுவதல்ல. தேசிய அளவில் மத்திய அரசினுடைய தலைமையில் வகுக்கப்படுவது நமது கல்விக் கொள்கையாகும். இன்றைக்கு நடைமுறையில் இருக்கிற கல்விக் கொள்கையானது 1986-ல் மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தி இருந்த அரசின் சார்பில் வகுக்கப்பட்ட கல்விக் கொள்கையாகும். அதிலே எல்லோருமே சம்பந்தப்பட்டிருக்கிறோம்.

அதற்குப் பிறகு ஒவ்வொரு அரசு வந்திருந்தாலும், கட்சி மாறி வந்திருந்தாலும், அந்தக் கொள்கை அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு பொதுவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அதற்குக் காரணம் கட்சி அடிப்படையிலே தேசிய கல்விக் கொள்கை வகுக்கப்படுவதில்லை. கல்வி நிபுணர்களினுடைய ஆலோசனையின் பேரில் அந்தக் கொள்கை வகுக்கப்படுகிறது. ஆகவே, இன்றைய தினம் அந்தக் கல்விக் கொள்கை தான் நடைமுறையில் இருந்து வருகிறது.

இப்பொழுது முக்கியமான பிரச்சினை உயர் கல்வி பற்றியதாகும். இதிலே தனிப்பட்டவர்கள் கல்வியை ஆரம்பிக்கிறார்கள். பல்வேறு மாநிலங்களிலும் ஆரம்பிக்கிறார்கள். முதன் முதலில் தமிழ்நாட்டில் சுயநிதிக் கல்லூரி ஆரம்பித்தபோது மகாராஷ்டிரா மாநிலத்தில் 46 கல்லூரிகளுக்கு அனுமதி தந்திருந்தார்கள். அப்போதுதான் நாம் ஒன்றிரண்டு என்று அனுமதி தந்திருக்கிறோம். பிறகு அது இங்கே பரவலாக தரப்பட்டு இன்றைய தினம் ஒரு நிலையை அதில் நாம் அடைந்திருக்கிறோம்.

இப்பொழுது தனியார் கல்வி நிலையங்கள், உயர் கல்வி நிலையிலே தேவைதானா என்று கேட்டால், குறிப்பாக கல்விக் கொள்கையின் அடிப்படையிலே நான் சொல்லவேண்டுமானால் அது அனுமதிக்கப்பட வேண்டும். அது தேவை. அரசே உயர் கல்வி நிலையங்கள் அத்தனையையும் நடத்த முடியாது. என்கிற இந்தக் கருத்துத்தான் தேசிய கல்விக் கொள்கையின் கருத்து என்ற அடிப்படையில் நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில்கூட மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருந்த நேரத்தில் மத்திய அமைச்சர் பொத்தேதார் அவர்கள் மிக விளக்கமாக ஒன்றைச் சொன்னார்கள். இனிமேல் உயர் கல்வி என்பது தனியார் துறையைச் சார்ந்ததுதான். அதுதான் தேசிய கல்விக் கொள்கை என்று சொல்லியது பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அதோடு இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, வங்காளத்தில் நடைபெற்று வருவது கம்யூனிஸ்ட் கட்சியி

னுடைய ஆட்சி ஆகும். அங்கே முன்னர் நிதியமைச்சராக இருந்த டாக்டர் அசோக்மித்ரா தலைமையில் கல்வி பற்றி ஆராய ஒரு குழு அமைத்திருந்தார்கள். அவர் ஒரு பரிந்துரை செய்திருக்கிறார். என்ன அந்தப் பரிந்துரை என்றால் "Ideological hands should not stop the entry of private Schools in education,, கல்வித் துறையில் தனியார் நுழைவதை இந்தத் தத்வார்த் தங்கள் தடுத்து நிறுத்த முடியாது என்பதுதான் அசோக மித்ரா கமிட்டியினுடைய அறிக்கையாகும். அந்த அடிப்படையில், தனியார் துறையினர் கல்வித் துறையில் நுழைவதைத் தடுக்க முடியாது என்று நாம் இவைகளை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும் இதே நேரத்தில் கடந்த ஓராண்டு காலமாக பொருளாதாரத் துறையில் ஏற்பட்டுவரும் மாறுதல்களை. பொதுத் துறையிலிருந்து அரசு பின்வாங்கிச் செல்வதும், தனியார் துறையின்கீழ் பல்வேறு தொழில் நிறுவனங்கள் வருகின்ற முறைகளை எல்லாம் பார்க்கும்போது தனியார் துறை என்பது கல்வித் துறையிலே இருக்கும். இருக்கத்தான் செய்யும். நான் காலையிலே குறிப்பிட்டதைப்போல, பெரும்பான்மை சமுதாயத்தைச் சார்ந்த இந்துக்களைத்தான் தடுத்து நிறுத்தக்கூடிய நிலை இருக்கிறதே தவிர சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு 'அப்சலியூட் ரைட்ஸ்'யே கொடுக்கக்பட்டிருக்கிறது. அவர்கள் ஆரம்பிக்கலாம். ஆரம்பிக்கக்கூடாது என்று நாங்கள் சொல்ல முடியாது. அவர்கள் அனுமதி கேட்கிறபோது அதைத் தடுக்க முடியாது. அதை நாங்கள் தந்துதான் தீர வேண்டுமென்ற நிலை இருக்கிறது.

**பிற்பகல் 5-10**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு **எதிர்க் கட்சித் தலைவர்.**

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் சிறுபான்மை சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அரசமைப்புச் சட்டத்தில் சிறுபான்மை சமுதாயத்திற்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. சிறுபான்மை சமுதாயம் என்று சொன்னால் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு தனி நபர் துவக்கினாலும் அதே பாதுகாப்பு உண்டா? சிறுபான்மை சமுதாயத்திற்கு என்று தரப்பட்டிருக்கிற பாதுகாப்புக்கு என்ன விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதை நடத்துகிற ஒருவர் சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவராக இருந்தாலே அந்த நிறுவனம் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்த நிறுவனம் என்று





நீதிமன்றங்களிலே சொல்லுகிறார்கள். நானே சென்ற தடவை கல்வி அமைச்சராக இருந்தபோது, இந்துக்கள் நடத்திய ஒரு கல்வி நிறுவனத்தின்மீது நடவடிக்கை எடுத்தபோது, அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு ரிடையர்டு டெபுடி தாசில்தார் அவர் கிருத்துவ மதத்தைச் சார்ந்தவர்—ஒருவரை செக்ரட்டரியாகப் போட்டு, அதை வைத்தே என்னுடைய நடவடிக்கைகளைத் தடுத்துவிட்டார்கள். இந்த ஊர் அறிந்த உண்மையை ஒத்துக்கொள்வதிலே தவறு ஒன்றுமில்லை. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால் இந்த ஒரே ஒரு பிரச்சினையை வைத்துதான் பாரதிய ஜனதா கட்சி என்ற கட்சி வளர்ந்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அந்த அடிப்படையில் தனியார் துறையை முழுமையாகத் தடுக்க முடியாது என்கிற என்னுடைய நிலைமையை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நீங்கள் தடை செய்யுங்கள் என்று சொல்லலாம். தடுங்கள் என்று சொல்லலாம். ஆனால் எல்லோரையும் தடுக்க முடியாது. நான் அமைச்சராக இருந்தபோது, பொது உடமைக் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் எல்லாம் எல்லா கல்வி நிறுவனங்களையும் தேசியமயமாக்க வேண்டுமென்றுகூடச் சொன்னார்கள். நான் அப்போதும் இதே கருத்தைத்தான் சொல்லியிருக்கிறேன். இப்போது இருக்கும் இந்த நிலைமையை அடிப்படையாக வைத்துப் பார்க்கின்றபோது, தேசிய கல்விக் கொள்கை என்று வைத்துப் பார்க்கின்றபோது தனியார் துறையினர் உயர் கல்வி நிலையங்களிலேயும், மற்ற இடங்களிலேயும் இருக்கத்தான் செய்வார்கள் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த முறையிலே அவர்களை கட்டுப்படுத்த வேண்டும், நெறிப்படுத்த வேண்டும் என்ற அந்த அடிப்படையிலேதான் இந்தச் சட்டமுன்வடிவு உங்களுடைய ஆய்வுக்கு வந்திருக்கிறது. நீங்கள் எல்லாம் உங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறீர்கள். தனியார் கல்லூரிகளில், குறிப்பாக சுய நிதிக் கல்லூரிகளில் 50 சதவிகிதத்தை அரசாங்கம்தான் நிரப்புகிறது. அதை ஏன் ஒருவரும் சொல்லவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. சுய நிதிக் கல்லூரி பற்றி கருத்துக்கள் சொன்னது சரி. ஆனால் 50 சதவித இடங்களை, இன்ஜினியரிங் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், நாமே சென்னையிலே தேர்ந்தெடுத்து அனுப்பிக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.கே. லட்சுமணன்

திரு. வி.கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதி தொழிற் கல்லூரிகளிலே 50 சதவிகித இடங்களை அரசு நிரப்புகிறது. ஆனால் சுய நிதி கலை, அறிவியல் கல்லூரிகளில் அவர்களே முழுவதுமாக நிரப்புகிற நிலைமைதான் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிற நிபந்தனையிலே அது இருக்கிறது. நாம் அவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை. அந்த வேலையையும் நாம் எடுத்து வைத்துக்கொண்டு செய்ய முடியாது. இந்த நிபந்தனையை மீறினால் நடவடிக்கை எடுக்க அதிலே இடம் இருக்கிறது. ஆகவே இந்த முறையிலே இப்போது கேப்பிடேஷன் ஃபீவாங்குவதைத் தடை செய்ய இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதைத் தடுக்கின்ற முறையிலே, அதை மீறுபவர்கள்மீது எப்படி எல்லாம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டு அமுலுக்கு வரும்போது நமக்கு ஏற்படும் அனுபவங்களை வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் வேண்டிய திருத்தங்களை நம்மால் செய்துகொள்ளமுடியும் என்று கூறி இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே பொதுவாக அரசிடம் அனுமதி பெற்றுத்தான் வழக்கைத் தொடரமுடியும் என்று நீங்கள் திருத்தம் கொண்டு வந்திருக்கிறீர்கள். அரசிடமிருந்து அனுமதி, சாங்ஷன் பெற்றுத்தான் பிராசிகியூஷன் செய்ய வேண்டுமென்றால் ஆண்டுக் கணக்கிலே ஆகும். அரசு என்று சொல்கிற போது, பேப்பர் மீண்டும் அவர்களுக்குக் கிடைக்குமென்று சொன்னால் குறைந்தபட்சம் ஒரு வருடம் ஆகுமென்று நினைக்கிறேன். இந்த நிலைமையை மாற்ற அந்தந்தக் காவல் நிலையங்களிலேயே புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க முடியும் என்கிற வகையில் இதை மாற்ற முடியுமா என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவது மிகவும் எளிது. கல்வி சம்பந்தப்பட்ட பிரச்சனையை போலீசாரிடம் தரமுடியாது.

பிற்பகல் 5-15

*திரு. வி. கே. லட்சுமணன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பினேன். சுயநிதிக் கல்லூரிகள் நன்கொடை பெறாத நிலையில், ஆசிரியர்களுக்கு யார் சம்பளம் கொடுப்பார்கள், கட்டிடங்கள் எல்லாம் யார் கட்டுவார்கள் என்ற கேள்விகளை எழுப்பியிருந்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால் நன்றியுடையவனாக இருப்பேன்.



மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'கேபிடேஷன் பீஸ்,
என்றாலும், சுயநிதி என்றாலும், மத்திய அரசின் சார்பில் அதை
ஆராய்ந்து வருகிறார்கள். பல்கலைக் கழக மானியக்
குழுவும் அதை ஆராய்ந்து வருகிறது. அதன் முடிவு எப்படி
யிருக்கும் என்றால், அதை மாணவர்களிடமிருந்து பெற்றுக்
கொள்ளலாம் என்பதாகத்தான் இருக்கமுடியும். ஆனால்
லாப நோக்கத்தோடு கல்லூரிகளை நடத்தக் கூடாது என்று
தான் இந்தச் சட்டத்திலும் இருக்கிறது. எல்லோரும் ஏற்கக்
கூடிய வகையில்தான், அந்த அடிப்படையில்தான் இந்தத்
தடை வருகிறது. ஏற்படுகின்ற செலவுக்கேற்ற தொகையை
மாணவர்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம் என்று கருதித்
தான் டெல்லியில் இது தொடர்பான பேச்சுக்கள், விவாதங்
கள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 15 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 15 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1992 செப்டம்பர் 25

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பரவைத் தலைவரே அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
**சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.**

<u>(எ) நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு, 1992.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1992). மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1992)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

---

@2—9—1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1992 செப்டம்பர் 25]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> விவாதத்தில் பங்கு பெறுகின்ற உறுப்பினர்கள், அடுத்து வருகிற சட்டத் திருத் தங்கள் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி மன்றங்கள் பற்றியும் இருப்பதால், அவற்றைப் பற்றியும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம். பிறகு வாக்கெடுப்பின் போது இரண்டு சட்டத்திருத்தங்களும் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறை வேற்றப்படும். திரு. ப. ரங்கநாதன்.

<u>திரு. ப. ரங்கநாதன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகராட்சி மனறங்கள், ஊராட்சி மன்றங்களுடைய சட்டப் பிரிவின் இரண்டாம் உட்பிரிவின்படி, பதவிக்காலம் நீட்டிக்கக் கோரி இங்கே சட்டமுன்வடிவை உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு சென்னை மாநகரத்திலே மட்டுமல்லாமல், கோவை மதுரை போன்ற மாநகரங்களிலும், ஏன் தமிழ்நாடு முழு வதும் கடந்த சட்டமன்றத் தேர்தலிலே அனைத்து தொகுதி களிலும் நமது காங்கிரஸ்—அண்ணா தி.மு.க. கூட்டணிதான் அமோக வெற்றியைப் பெற்றது.

இருந்தும், கடந்த முறை தனி அலுவலர்களுடைய பதவிக் கால நீட்டிப்புச் சட்டம் இங்கே கொண்டு வந்தபோது, அடுத்த முறை தேர்தலை நடத்துகிறோம் என்று இந்த மாமன்றத் திலே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை. உள்ளாட்சி அமைப்புகளுக்கு, குறிப்பாக சென்னை மாநகராட்சிக்கு 1973 ஆம் ஆண்டி லிருந்து 19 ஆண்டுகள் முடிந்து 20 ஆம் ஆண்டு தொடங்குகிற காலகட்டத்தில், சென்னை மாநகராட்சி மன்றத்திற்குத் தேர்தல் நடத்தத் தயங்குகிறார்கள். அதேபோன்று மதுரைக்கும் தேர்தல் நடத்தத் தயங்குகிறார்கள். அனைத்து உள்ளாட்சி மன்றங் களுக்கும் தேர்தல் நடத்துவதற்கு எதற்காகத் தயங்குகிறார் கள் என்று எங்களுக்குப் புரியவில்லை. ஆகவே, நீங்கள் ஓராண்டு தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று சொல்வதைக்காட்டிலும் 6 மாதம் என்று வைத்து தேர்தலை நடத்துவதற்கு ஒரு தேதியை இந்த மாமன்றத்திலே அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம், ஒரு மாதத்திற்கு முன்பு சென்னை, மதுரை, கோயம்புத்தூர், மாநகராட்சிகளிலும், அனைத்து நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் தொழில் வரியினைப் புகுத்தி இந்திய அரசு 1939 ஆம் ஆண்டு சட்டப்படியும், இந்திய அரசு அமைப்புச் சட்டப்படியும் தொழில் வரி வரு மானத்தின் அடிப்படையில்தான் இருந்து வருகிறது; ஆனால், இந்த புதிய சட்டம் வருமான அடிப்படையை மாற்றி விடுகிறது. இது இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 208-க்கு புறம்பானது.........

பிற்பகல் 5-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது சட்ட மன்ற முன்வடிவினைப் பற்றியே தவிர தொழில் வரியைப்பற்றியது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாதத்திற்கு முன்பு மாநகராட்சிகளிலும், ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் இந்த தொழில் வரியைப் புகுத்தி 100 ரூபாய், 200 ரூபாய் என்று இருந்ததை மாற்றி 2,000 ரூபாய், 900 ரூபாய், 1,000 ரூபாய் என்று மிக அதிகப்படியான அளவிற்கு வரியை உயர்த்தியுள்ளார்கள். நான் அதைத் தான் குறிப்பிட்டேன். அதேபோன்று சென்னை மாநகராட்சியிலேயும், மற்ற மாநகராட்சியிலேயும் சொத்து வரியை ஒரு பங்கிற்கு 3 பங்காக உயர்த்தியுள்ளார்கள். இந்த அதிகாரிகளை நம்பி கடந்த 20 ஆண்டுகாலமாக சென்னை மாநகராட்சி இயங்கி வருகிறது. அங்கே அதிகாரிகள் பல முறைகேடான தவறுகளை—சாலைகள் போடுவதிலேயும், கொசுக்களை ஒழிப்பதிலேயும், நடைபாதை அமைப்பதிலேயும், கழிவுநீரை அகற்றுவதிலேயும், குடிநீர் வழங்குவதிலேயும், அனைத்துத் தொழில்களிலேயும் ஊழல்தான்-செய்து கொண்டிருக்கிறார்கள். இதைப் போக்க வேண்டுமென்றால். நீங்கள் தேர்தல் நடத்தினால் தான் இந்த அமைப்புகளுக்கெல்லாம் ஒரு நல்ல நியாயம் கிடைக்கும், மக்களுக்கு நியாயம் கிடைக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாநகராட்சி மன்றத்தில் இருந்த மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள்தான் மஸ்டர்ரோல் ஊழல் செய்தார்கள்; மஸ்டர்ரோல் ஊழல் நடந்தது என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்.





திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியானால் மாநகராட்சிக்கு தேர்தலே நடத்த வேண்டாம் என்று அமைச்சர் குறிப்பிடுகிறாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம்-புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் இந்த நல்லாட்சியை-நிறுவிய நேரத்திலேகூட தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் நடத்துவதைப் பற்றி மிகத் திட்டவட்டமாக சட்டமன்றத்திலே அறிவித்து இருக்கிறார்கள். தேர்தல் எதற்காக ஒத்திவைக்கப்பட்டு இருக்கிறது என்பதும் காங்கிரஸ் நண்பர்களுக்கு எல்லாம் மிக நன்றாகத் தெரியும். முதலிலே ஒத்திவைக்கப்பட்ட நேரத்திலே காவிரி நதிநீர்ப் பிரச்சினை வந்த காரணத்தினாலே ஒத்திவைக்கப் பட்டது. அதற்குப் பின்னாலே சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்த காரணத்தினாலே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இன்றையதினம்கூட தேர்தல் நடத்தலாம். என்றாலும்கூட, கந்தசாமி என்ற வழக்கறிஞர் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிக்கு 18 சதவீதம் ஒதுக்கீடு தர வேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்றத்திலே ஒரு தடையாணை பெற்று இருக்கிறார். அந்தத் தடையாணையை அரசின் மூலமாக, அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்த நேரத்திலே அந்தத் தடையாணை இருப்பதன் காரணத்தால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தேர்தல் நடத்த வேண்டாமா என்ற கேள்வியைக் கேட்டார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் கோடிட்டுக் காட்டியது 20 ஆண்டுகாலமாக அதிகாரிகள் ஊழல் செய்கிறார்கள் என்று கோடிட்டுக் காட்டினார்கள். அதற்காகத்தான் நான் கோடிட்டுக் காட்டினேனே தவிர, தேர்தலையொட்டி நான் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 செப்டம்பர் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாகத் தேர்தலை நடத்துவதில் ஏற்படும் சிரமங்களை நானும் அறிவேன். உடனடியாக நடத்த முடியாத காரணத்தை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், தேர்தலை நீண்ட ஆண்டுகளுக்கு நடத்தாமல் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாநகராட்சிகளில் நிர்வாகம் நடைபெறுமானால் மக்கள் நம்மிடத்திலே வருகிறார்கள், எம். எல். ஏ.-க்களிடத்திலே வந்து கேட்கிறார்கள். சாக்கடை இருக்கிறது. கொசு இருக்கிறது, பல்பு இல்லை என்று ஒவ்வொரு பிரச்சினைக்கும் எம். எல். ஏ-க்களிடத்திலே, எம். பி.க்களிடத்திலே மக்கள் வருகின்ற நிலைமை இருக்கின்றது. அந்த நிலைமை நீண்ட நாட்களுக்கு நீடிக்கக் கூடாது என்ற எண்ணத்திலேதான் தேர்தலை நடத்த வேண்டும் என்பதற்கான காரணங்களை உறுப்பினர் திரு. ரங்கநாதன் குறிப்பிடுகிறார்.

பிற்பகல் 5.25

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டுகளாகியும் தேர்தல் நடத்தவில்லை என்றுதான் குறுப்பிட்டேன். மஸ்டர் ரோல் ஊழல் முடிந்து 20 ஆண்டுகள் முடிந்து விட்டது. ஆனால், தேர்தல் நடத்தாததினால், 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் செய்த தவறைக் காட்டிலும்—முந்தைய ஆட்சி தி. மு. க. ஆட்சி சென்னை நகரத்தை சிங்கார சென்னையாக மாற்றுவோம் என்று சொன்னார்கள். உங்களுடைய ஆட்சியில் எழில்மிகு சென்னை—2000 ஆண்டுகள் என்று குறிப்பிட்டீர்கள். இன்றைக்கு 2000 ஆண்டுகளாகியும் ஒன்றும் நடக்கவில்லை. சிங்கார சென்னையாக இல்லாமல், சென்னை நகரம் நரகமாக மாறிவிட்டது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) காரணம் குப்பைகளை அள்ளவில்லை. எழில்மிகு சென்னை —2000 என்று சொன்னீர்கள் அதற்குப் பெயர் வைத்து குறிப்பிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கராஜன்

திரு. டி. எம். ரங்கராஜன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000 வருடத்திற்குள்ளாக செய்கிறோம் என்றுதான் சொன்னோம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திசை திருப்பப் பார்க்கிறார். அவைக்கு அவர் தவறான தகவலைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்.



1992 செப்டம்பர் 25]

திரு ப. ரங்கநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மூர்மார்கெட் அங்காடி திறக்கிற விழாவில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் இங்கே, சென்னை மாநகராட்சி நிர்வாகத்தைப் பற்றி பல்வேறு குற்றச்சாட்டுகளை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஓராண்டு காலத்தில் சென்னை மாநகராட்சியில் பல்வேறு நிர்வாகச் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதற்கு உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால், பல்வேறு நிலைமைகளில் 20 ஆண்டுக் காலமாக சீர்கெட்டிருந்த நிர்வாகத்தைச் சீர்படுத்துவதற்காக 5 துணை கமிஷனர்கள் நியமிக்கப்பட்டு, அந்தத் துணை கமிஷனர்கள் மூலமாக பல்வேறு துறைகளுடைய நிர்வாகத்தைச் சீர்செய்து கடந்த ஓராண்டு காலத்தில் 25 கோடி ரூபாயை வருவாயாகப் பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு துறைகளில், கல்வித் துறைக்கு கவர்னர் ஆட்சிக் காலத்தில் 15 லட்சம் ரூபாய் செலவிட்டு இருந்தார்கள். ஆனால் இன்றைய ஓராண்டு காலத்தில் 5 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் டாக்டர் [illegible] தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி துப்புரவுப் பணிகளாக இருக்கட்டும், கல்வித் துறையாக இருக்கட்டும், பல்வேறு நிர்வாகங்களாக இருந்தாலும் அதிலே, மாற்றங்கள் செய்திருக்கிறோம் என்பது உண்மையா, இல்லையா என்பதைச் சட்டமன்ற உறுப்பினர் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் 28,000 பேர் கொண்ட தொழிலாளர்களாக அலுவலர்களாக பணியாற்றுகிற சென்னை மாநகராட்சியில் பல்வேறு முறைகளில் நிர்வாகம் மாற்றியமைக்கப்பட்டு இருக்கிறது என்பதை பல்வேறு நேரங்களில் செய்தித்தாள்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்திருப்பார்கள். எந்த இடத்தில் ஊழல் நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டினால் அந்த அதிகாரிகளை தண்டிப்பதற்கு, அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கநாதன்.

திரு ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிர்வாகத்தின் அடிப்படையில் சென்னை மாநகராட்சியில் 5 துணை கமிஷனர்களை நியமித்து இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். சென்னை மாநகராட்சியில் அதிகாரிகள்தான் அதிகமாக இருக்கிறார்கள். கோட்டங்களில் பணியாற்றுவதற்கு அங்கே பணியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் கே. ஏ. கே. அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால், அவர் சென்னை நகர சட்டமன்ற உறுப்பினர்....

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 ஆண்டுக் காலமாக 28,000 தொழிலாளர்களை, அலுவலர்களைக் கொண்டிருக்கிற சென்னை மாநகராட்சியில் ஓராண்டு காலத்தில் முழுமையாக நிர்வாகத்தில் சீர்திருத்தம் செய்ய முடியுமா என்றால் முடியாது என்பதை ஒப்புக்கொள்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இந்த ஈராண்டு காலமாக பல்வேறு துறைகளில் கல்வித் துறையில், பொறியியல் துறையில் நாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதை மறுக்க முடியுமா என்பதைக் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

டாக்டர் மு. சீனியம்மாள் : தலைவர் அவர்களே, மூன்றாண்டு காலமாக கேட்காதவர்கள் இப்போது ஓராண்டு காலத்தில் கேட்கிறாரே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி சீனியம்மாள் உட்கார வேண்டும். திரு. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் பேசிய பிறகு குறுக்கிட்டால், நான் சொல்வதற்கு அவர்கள் பதில் சொல்வதற்கு நன்றாக இருக்கும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பட்டாபிராமன்.

திரு கா.ப பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் தான் பேசிய பிறகு குறுக்கிட்டால் நன்றாக இருக்கும் என்று சொல்கிறார்கள். பேசிய பிறகு எங்கே குறுக்கிடுவது (சிரிப்பு).



பிற்பகல் 5–30

திரு. ப. ரங்கநாதன் : பேரவைத தலைவா அவர்களே, மாநகராட்சியிலே, கடந்த ஓர் ஆண்டிலே 20 ஆண்டுகளாக நடக்காத பணிகள் நடந்தன என்று சொல்கிறார்கள். மறைந்த முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் காலத்தில் மாநகராட்சிக்கு என்று தனியாக ஆலோசனைக் குழுவை அமைத்து, சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து இருந்தார்கள். அந்த காலக்கட்டத்தில் இதைவிட அதிகமான பணிகள் நன்றாக நடந்து இருந்தன. இல்லை என்று பொதுமக்களும் சொல்லவில்லை, அதிகாரிகளும் சொல்லவில்லை. ஆனால், இன்றைய அளவில் 5 துணை கமிஷனர்கள் நியமித்த பிறகும் பணிகள் நடைபெறவில்லை. மாறாக சென்னை நகரத்து மக்கள் மீது சொத்து வரியைத்தான் உயர்த்தியிருக்கிறார்கள். இதுநாள் வரையில் தொழில் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் அங்கே அதிகாரிகள் செய்கின்ற தவறுகள், செய்கின்ற ஊழல்கள் முன்பைக் காட்டிலும் இப்போது அதிகமாக நடந்துகொண்டிருப்பதை நான் ஆதாரத்தோடு சொல்ல முடியும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத தலைவர் : திரு. ரங்கநாதன் நீங்கள் ஆதாரத்தோடு சொல்கிறேன் என்று சொன்னால் ஆதாரத்தை என்னிடம் கொடுத்துவிட வேண்டும் என்னிடம் கொடுத்துவிட்டு நீங்கள் பேச வேண்டும். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு அதிகாரிகளை எல்லாம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு பகுதியிலேயும் சென்று மிரட்டுவதும், உருட்டுவதும் என்ற செய்திகள் என்னிடத்திலே வந்திருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற காரணத்தினால், பல்வேறு முறைகளிலே நாங்கள் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறோம். (குறுக்கீடுகள்)* இதை எதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் ......

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் பேரவைத் தலைவர் அவர்களே**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத்தான் நான் வருகிறேன். அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1992 செப்டம்பர் 25

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அது நீக்கப்பட வேண்டும். அதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மக்களவை உறுப்பினர், (குறுக்கீடு) மக்கள் அவை உறுப்பினர் ஒருவரைப் பற்றி இந்த அவையிலே பேசியது நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அதைப்பற்றி பேசக்கூடாது என்று இருக்கிறது, (குறுக்கீடு) அதைத்தான் நான் கேட்டுக்கொண்டு இருக்கிறேன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது வேறு பாயிண்ட் (குறுக்கீடு). அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் ஒன்றைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். அவர் கருத்தைக் கேட்டதற்குப் பிறகு நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், அங்கே சென்று, நகரத்திலே பல்வேறு பணிகளைப் பற்றி கோரிக்கை எழுப்புவதும், அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்வதும் எல்லாம் ஜனநாயக முறையிலே உண்டு என்பதை நான் தெரிந்து வைத்திருக்கிறேன்.

அதே நேரத்திலே, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் சென்னை மாநகராட்சிக்கு 200, 300 பேர்களோடு சென்று, என்ன செய்தார்கள், என்ன நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்தன என்பது எல்லாம் செய்திப் பத்திரிகையிலே படித்திருப்பீர்கள். இதை எதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால்; அப்படி இருந்தும் மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர், ரங்கநாதன் அவர்கள் பல்வேறு அதிகாரிகளை மிரட்டி இருக்கிறார்கள் அந்த அதிகாரிகள் எல்லாம் என்னிடத்திலே வந்து சொன்னார்கள். காவல் துறையில் நாங்கள் வழக்கு தொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர் கோபத்தின் காரணமாக அப்படிப் பேசுகிறார், நீங்கள் அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம், அவர்கள் சொல்கிற கோரிக்கைகளை அவர்கள் கேட்டிருக்கிற பல்வேறு தேவைகளை செய்து கொடுக்க வேண்டும் என்று நாங்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறோம். இதை ஏன் நான் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் சென்னை மாநகரத்திலே எந்த அதிகாரி எந்த இடத்திலே, எந்த நிர்வாகத்திலே, ஊழல் செய்திருக்கிறார்கள் என்று என்னிடத்திலே சொன்னால், அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) ஊழல், ஊழல் என்று ஒட்டு மொத்தமாகக் குறிப்பிடுவது.....



1992 செப்டம்பர் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அதிகாரிகள் இதுவரையிலும் செய்யாத அளவிற்கு ஊழல் செய்திருக்கிறார்கள் மாநகராட்சியிலே என்று சொல்லுகிறபோது, அதற்குரிய ஆதாரங்கள் உங்களிடம் இருந்தால், என்னிடம் கொடுத்து நீங்கள் அனுமதி பெற்றுக் குறிப்பிடுவது நல்லது.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் கடந்த ஓர் ஆண்டுக் காலத்தில் என்னிடத்திலே திரு. ரங்கநாதன் அவர்கள் எந்தக் குற்றச்சாட்டுகளையாவது கொடுத்திருக்கிறார்களா? அப்படிக் கொடுத்திருந்தால், அதன்மீது நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லையா? என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். எந்தக் குற்றச்சாட்டையும் என்னிடத்திலே சொல்லவில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசும்போது உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் அதிகாரிகளை மிரட்டியிருப்பதாகச் சொன்னார்கள். எந்த ஆதாரத்தின் அடிப்படையில் அவர்கள் அப்படிச் சொன்னார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவர் தெரிவித்தார். (குறுக்கீடு), பல அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்று. (குறுக்கீடு) என்னிடம் சில அதிகாரிகள் வந்து அவர்கள் மிரட்டுகிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

Thiru S.R. BALASUBRAMANIAN: It is a personal charge against a member.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரையிலும் இல்லாத அளவிற்கு அதிகாரிகள் ஊழல் செய்திருக்கிறார்கள் என்று ரங்கநாதன் அவர்கள் சொல்கிறார்கள். அந்த அதிகாரிகள் என்னிடத்திலே வந்து இப்படி சொல்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 5—35

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூல் 92-ல் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. I will quote the rule, 92 (ii). "A member, while speaking must not make a personal charge against a member." This is a personal charge against a member, whether he is a member or

a minister, he is not entitled to level a charge against
member so, he is levelling a charge. That charge
should be withdrawn. It is a charge. (Interruption). It is a charge
section 92 (ii) is very clear. "A member, while speaking must not
make a personal charge against a member." He is making
personal charge against a member. That is what we object to.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேச எழுகிற
நேரத்திலேயே (குறுக்கீடு) திரு. ரங்கநாதன் சில அதிகாரிகள்
இதுவரையிலேயும் இல்லாத அளவிற்கு ஊழல் செய்தார்கள்
என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அந்த அதிகாரிகள் என்
னிடம் வந்து இந்த உறுப்பினர் இப்படிச் சொல்கிறார் என்று
சம்பந்தப்பட்ட அமைச்சர் சொல்கிறார் (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : சில அதிகாரிகள்.
பல அதிகாரிகள் ஊழல் செய்கிறார்கள் என்பது பொதுவான
குற்றச்சாட்டு. ஆனால், உறுப்பினர் சில அதிகாரிகளை
மிரட்டுகிறார்கள் என்பது தனிப்பட்ட முறையிலே சொல்லப்
படுகின்ற குற்றச்சாட்டு. இப்படி குற்றச்சாட்டு சொல்லக்
கூடாது என்று அவை விதி கூறுகிறது. அதற்குத்தான் நான்
உங்களிடத்திலே கேட்கிறேனே தவிர, அவை விதி மிகத்
தெளிவாக இருக்கிறது. எந்தத் காரணத்தைக் கொண்டும்,
ஒரு உறுப்பினர் மீது தனிப்பட்ட முறையில் குற்றம்
சொல்லக்கூடாது. அப்படி குற்றம் சொல்வதாக இருந்தால்
அதற்கு என்று சில வழிமுறைகள் இருக்கின்றன. அதை
நிறைவேற்றிவிட்டுத்தான் சொல்ல வேண்டுமே தவிர திடீர்
என்று நீங்கள் அதிகாரிகளை மிரட்டினீர்கள் என்று என்னிடத்
தில் குற்றம் சொல்லப்பட்டு இருக்கிறது. அதிகாரிகளை
நீங்கள் மிரட்டியிருக்கிறீர்கள் என்று குற்றச்சாட்டு சொல்ல
முடியாது. எனவே அமைச்சரவர்கள் பேசியதை
அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் கூடச்
சொன்னார்கள். அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். அதைப்
பெரிதுபடுத்த வேண்டியதில்லை என்று அவரே திரும்பச்
சொன்னார். ஏதாவது ஆத்திரத்தில் உங்களைத் திட்டியிருப்
பார், இதைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்று சொன்ன
தாக அமைச்சர் சொன்னார். அமைச்சருடைய பேச்சிலே
யும் இதை சார்ஜாக அவர் குறிப்பிடவில்லை. மாண்புமிகு
நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
ரங்கநாதன் அவர்கள் எடுத்துச்சொன்ன கருத்து, அவர்கள்



எழுப்பிய பிரச்சினைக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதிகாரிகள்
வந்து இவர் மிரட்டுவதாகச் சொன்னார்கள். ஆகவே அதை
நான் பொருட்படுத்தவில்லை. அவர் கூறிய புகார்களை செய்து
முடியுங்கள் என்று நான் சொன்னேன் என்று மாண்புமிகு
உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். உள்
ளாட்சித் துறை அமைச்சரவர்கள், ரங்கநாதன் அவர்களை
மிரட்டவில்லை. மிரட்டினார் என்று குற்றம் சாட்டவில்லை.
ரங்கநாதனை தண்டனைக்கும் உள்ளாக்கவில்லை. ரங்கநாதன்
மீது எந்தக் குற்றத்தையும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை
அமைச்சர் சொல்லவில்லை. அவர்கள் சொன்னார்கள்.
சொன்னதை நான் கேட்கவில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை
என்றுதான் சொன்னார். அதைப் பொருட்படுத்தவும் இல்லை.
அவரே புகார்களை நிவர்த்தி செய்யுங்கள் என்றுதான் சொன்
னேன் என்றார். ஒரு ஆண்டுகாலமாக ரங்கநாதன் தன்னிடத்
தில் வந்து எதையும் சொல்லவில்லை. எந்தக் கருத்தையும்
சொல்லவில்லை என்று சொன்னாரே தவிர, ரங்கநாதன் மீது
நேரடியாக எந்தக் குற்றச்சாட்டையும் மாண்புமிகு உள்ளாட்சித்
துறை அமைச்சர் சொல்லவில்லை என்பதை மட்டும் நான்
குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, அதைப் பெரிது
படுத்தவேண்டியதில்லை என்று சொனனார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அதைப் பற்றி
(குறுக்கீடு) உறுப்பினர்கள்
யெல்லாம் கேள்வி கேட்கவில்லை, விதி 92(2)-ல் உறுப்பினர்
கடைப்பிடிக்க வேண்டிய விதிகள். That is
எவரையும் தனிப்பட்ட முறையில் தாக்கக்கூடாது
a charge. தமிழ் புரியவில்லை என்றால் ஆங்கிலத்தில் இருக்கிறது.
It is more clear in English. I will read it in English. It is a charge
against a member.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சார்ஜ் இல்லை
யென்று நான் சொல்கிறேன். அவர் மீது குற்றச்சாட்டு
அமைச்சர் சொல்லவில்லை, அமைச்சர் இப்போதும் சொல்
கிறார். குற்றச்சாட்டாக இருந்தால், அவர் மிரட்டினார்
என்ற அளவில் இருந்தால், அத்தோடு அவர் நிறுத்தியிருப்பா
ரேயானால் அது குற்றச்சாட்டு, நான் ஒத்துக்கொள்கிறேன்.
'நான் அந்த அதிகாரி
மிரட்டியதாகத் தெரிவித்தார்கள். வேண்டாமென்று சொன்னேன்'
களிடத்தில், இதைப்பெரிதுபடுத்த
(குறுக்கீடு) சார்ஜாக இருந்தால்
என்றும் கூறியிருக்கிறார். எப்படி ரெஸ்பான்சிபிலிட்டி எடுத்துக்
அமைச்சரே இதற்கு
கொள்வார்?

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : It is is a charge. (Interruption). He repeated it. (Interruption) He repeated it. உறுப்பினர் ரங்கநாதன் மிரட்டினார், உறுப்பினர் ரங்கநாதன் மிரட்டினார் என்று சொன்னால், அது குற்றச்சாட்டு. That is a charge.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மிரட்டினார் என்று அவர் சொல்லவேயில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினராக இருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இப்போது மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் மீது குற்றச்சாட்டு சாட்டவில்லை. மற்றவர்கள் எடுத்துச்சொன்னார்கள் என்ற நிகழ்ச்சியை எடுத்துச் சொல்லிவிட்டு அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லியிருக்கும்பொழுது ....

பிற்பகல் 5-40

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அவை முன்னவர் சொல்கிறாரே தவிர அந்தச் சொல்லை அமைச்சர் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 92(2)-இன் கீழ் ஒரு உறுப்பினர்மீது இன்னொரு உறுப்பினர் குற்றச்சாட்டைக் கூறினார் என்று வருகிறபோது பேரவைத் தலைவர் அது குற்றச்சாட்டு இல்லை என்று முடிவு செய்ததற்குப் பிறகு இந்தப் பிரச்சினையே வரவில்லை. அவர் பேசியதை வைத்து நான் பார்த்ததில் குற்றச்சாட்டு இல்லை என்றே நான் முடிவு செய்கிறேன். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அதை நான் ஆட்சேபிக்கிறேன். I will convince you.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் வேண்டுமானால் அவருடைய பேச்சை எடுத்துப் பார்த்து உங்களுக்குச் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நான் அதை ஒத்துக் கொள்ள முடியாது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டா, இல்லையா என்பதை நான் முடிவு செய்யவேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் பேசிக்கொண்டிருக்கும் போது யாரும் நிற்கக்கூடாது. நான் ஒரு ரூலிங்கைச் சொல்லுகிறேன். ஒரு பிரச்சினையை நீங்கள் எழுப்பி நான் உங்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஒரு பிரச்சினையை நீங்கள் எழுப்பி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னொரு மாண்புமிகு உறுப்பினர் மீது குற்றச்சாட்டாகச் சொல்லுகிறார்கள், விதி 92(2)-ன்படி அந்த்க்க குற்றச்சாட்டு எதையும் கூறக்கூடாது என்று தெளிவாக இருக்கிறது என்று நீங்கள் ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறீர்கள். அமைச்சர் பேசிய அந்தப் பேச்சிலே இருந்து குற்றச்சாட்டு என்கிற தொணி இல்லாத காரணத்தால் இப்போது இந்த விதி92(2) எழவில்லை என்று நான் இப்போது தீர்ப்புச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) என்னுடைய தீர்ப்பின் மீது நீங்கள் பேசக் கூடாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : I am citing the previous ruling. அதைக்கூடச் சொல்லக்கூடாது என்றால் சொல்லுங்கள், விட்டு விடுகிறேன். இதே அவையிலே நான் ஒரு சட்ட முன்வடிவின் மீது பேசுகிற நேரத்திலே ஒரு அமைச்சர் சில அதிகாரிகளை மிரட்டினார் என்று சொன்னேன். அப்போது அவையிலே இருந்த ஆளும் கட்சியினரும் ஆளும் கட்சிக்கு ஆதரவான உறுப்பினர்களும் அவர்கள்கூட இங்கே இருக்கிறார்கள். —மிரட்டினார் என்ற சொல்லை எதிர்க்கட்சி கொறடா அவர்கள் பயன்படுத்தக் கூடாது என்று சொல்லி அது அப்போது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது, அன்றைய சபாநாயகர் அவர்களால். இப்போது ஒரு உறுப்பினர் மிரட்டினார் என்று அமைச்சரே சொல்லும்போது It is a charge. It is a charge under Rule 92(2) (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து கவனிக்க வேண்டும். நீங்கள் தெரிவித்த கருத்துக்கும் இதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. நீங்கள் அமைச்சர் மிரட்டினார் என்று சொன்னீர்கள். அதை அவைக்குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும் என்று விவகாரத்தைக் கிளப்பினார்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் இந்தப் பிரச்சினை அப்படி அல்ல அவர் சொன்னது மிரட்டினார் என்று சில அதிகாரிகள் என்னிடத்திலே வந்து சொன்னார்கள், நான் அந்த அதிகாரிகளிடத்திலே அதைப் பொருட்படுத்த வேண்டாம், அவர் கோபதாபத்திலே சொல்லியிருப்பார். அதைப் பொருட்படுத்த வேண்டாம் என்று சொல்லி அவர் கோரிக்கைகள் ஏதேனும் சொல்வாரேயானால் அதை ஏற்றுச் செய்யுங்கள் என்று அறிவுரை சொல்லி அனுப்பினேன் என்று சொல்வதற்கும் நீங்கள் சொல்வதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. (மேஜையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : கோபத்திலே சொன்னார் என்று சொல்லுகிறபோதே மிரட்டுகிறார் என்றுதான் வருகிறது. (குறுக்கீடுகள்) என்ன கஷ்டம் உங்களுக்கு? உறுப்பினரை மிரட்டினார் என்று சொல்கிற சொல் சட்டப்படி இதிலே இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது ஏன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. மிரட்டினார் என்ற சொல் அப்படியே நின்றால் அதை எடுத்து இருப்பேன். நான் தான் அது குறித்து உங்களுக்கு மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டேனே. அதிலே குற்றச்சாட்டு என்றே வரவில்லை. குற்றச்சாட்டு என்பது வேறு, அமைச்சர் தெரிவித்த கருத்து என்பது வேறு. இது எந்த வகையிலேயும் அந்த விதி 92(2)-க்குப் பொருந்தி வராது என்று என்னுடைய தீர்ப்பைச் சொல்லிவிட்டேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : He is levelling a personal charge against a member.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒரு தீர்ப்பு வழங்கி இருக்கிறேன். நீங்கள் கிளப்பிய வண்ணம் 92(2)-ன் கீழ் இந்தப் பிரச்சினை வரவில்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களே அதை தெளிவாக சொல்லி விட்டீர்கள். அதாவது அதிகாரிகள் என்னிடத்திலே வந்து சொன்னார்கள். நீங்கள் அதைப் பொருட்படுத்தாதீர்கள் கோபமாக அவர் பேசியிருக்கக்கூடும். அவர் சொல்லுகிற காரியங்களை நீங்கள் செய்து கொடுங்கள் என்று அவர் சொன்னதாகவும், காவல் நிலையத்திற்கு நாங்கள் போய் வழக்கு தொடுக்கிறோம் என்று அவர்கள் சொன்னதைக் கூட வேண்டாம் என்று அவரே தடுத்ததாகவும் சொன்னார்கள். இவ்வளவு சொன்ன பிறகும் இல்லை இல்லை அவர் என்னைத்தான் திட்டினார், கோபமாகப் பேசினார், என்மீது குற்றம் சொன்னார் என்று இல்லாத குற்றத்தை நீங்களே அவர் சொன்னதாக சொல்லிக்கொள்வது அவ்வளவு சரியாக இல்லை. அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதை வேண்டாம் என்று அவர் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த அதிகாரிகளை அவரும் ஒதுக்கித் தள்ளி இருந்தால், தவறு என்று அதிகாரிகளிடத்திலே சொல்லியிருந்தால் அவர்கள் வழக்கு மன்றத்திற்கோ, காவல் துறைக்கோ போய் இருப்பார்கள். அதைத் தடுத்ததற்கான தண்டனையை அவர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். இனிமேல் அவர் அவ்வாறு தடுக்காமல் இருக்க வேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).



திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : தலைவர் அவர்களே, நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு ஒரு பழக்கம் உண்டு. அவர் என்ன சொல்ல நினைக்கிறாரோ, அது மற்றவர்களுடைய வாயிலேயிருந்து வந்த சொற்களாக அவர் சொல்வார். நீங்கள் சொன்னீர்கள். நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்று நான் சொன்னதாகச் சொல்கிறார். அந்த மாதிரி எந்தச் சொல்லையும் நான் பயன்படுத்தவில்லை. ஒன்று இதிலே உங்களுக்கு என்ன கஷ்டம் ? தனிப்பட்ட முறையிலே ஒரு உறுப்பினர் மீது அவர் மிரட்டினார் என்று சொன்னதை அவைக் குறிப்பிலேயிருந்து அகற்றுவதிலே என்ன சிரமம் ? அது ஒரு சார்ஜ். அது ஒரு குற்றச்சாட்டு. (குறுக்கீடு).

பிற்பகல் 5—45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஏற்கனவே இந்தப் பிரச்சினையில் ஒரு தீர்ப்பை வழங்கிவிட்டீர்கள். அது குற்றச் சாட்டு அல்ல. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சொன்னது குற்றச்சாட்டு அல்ல என்ற தீர்ப்பை நீங்கள் வழங்கிவிட்டீர்கள். அது சம்பந்தப்பட்ட இருவருமே ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். மாண்புமிகு ரங்கநாதன் ஏற்றுக் கொண்டுவிட்டார். உள்ளாட்சித் துறை அமைச்சர் ஏற்றுக் கொண்டுவிட்டார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதிலே நுழைந்து குழப்பம் ஏற்படுத்த வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது என் மீது ஒரு குற்றச்சாட்டு சொல்லப் பட்டு இருக்கிறது. நான் எப்படி என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரே சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, என் மீது குற்றச்சாட்டை சுமந்து கொண்டு நான் வீட்டிற்குப் போவதற்குத் தயாராக இல்லை. அவருக்கு விளக்கம் சொல்லியே ஆக வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். எனக்கு ஒரு பழக்கம் இருக்கிறது. எதையாவது சொல்ல வேண்டுமென்று கருதினால் அவர் சொன்னார். இவர் சொன்னார் என்று சொல்வார் என்று சொன்னதால்.. —

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நீங்கள் நான் சொன்னதாகச் சொல்கிறீர்கள். அதைத்தான் நான் சொல் கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அப்படி என்றைக்கும் சொல்ல வில்லை. இப்பொழுது நான் சொன்னதிலே கூட, அப்படி ஒரு வார்த்தை கூட நீங்கள் சொன்னதாகவோ அல்லது திரு. ரங்கநாதன் சொன்னதாகவோ நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) நோ. நான் இப்பொழுது சொன்னது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தெளிவாகச் சொல்லி விட்டார்கள். எங்களுடைய அமைச்சர் அவர்கள், அந்த அதிகாரி கள் வந்து மாண்புமிகு ரங்கநாதன் எங்களை இப்படி மிரட்டு கிறார்.... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உட்கார்ந்திருக்கின்ற உறுப் பினர்கள் அமைதிகாக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு ரங்கநாதன் வந்து எங்களை மிரட்டினார் என்று சில அதிகாரிகள் அவரிடத் தில் வந்து சொன்னபோது (குறுக்கீடு) தயவு செய்து—எதிர்க் கட்சித் தலைவருக்கு உள்ள பழக்கம் சில நேரங்களிலே கொஞ்சம் கோபப்பட்டு எங்களை எல்லாம் அடக்க முயற்சி எடுக்கிறார்கள். அது அவ்வளவு சரியில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஒன்றும் மேற்கொண்டு வேண்டாம். விதி 92(2)-ன்படி இதிலே மேற் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கோ உரிய வகையில் அதைக் குற்றச் சாட்டு என்று நான் கருதவில்லை. எனவே இந்தப் பிரச்சி னையை இத்தோடு விட்டுவிட்டு விவாதத்திற்கு செல்லக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) உங்களுடைய பிரச்சினை யும் அப்படியே இருக்கிறது. அதுவும் அவைக் குறிப்பிலே அப்படியே இருக்கிறது. அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வில்லை. நீங்கள் சொன்னதும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதும் அவைக் குறிப்பிலே இருக்கிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : எனக்குத் தீர்ப்பு வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அதுவும் குற்றச்சாட்டு என்று வரவில்லை என்று சொன்னேன். மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கும்



தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இப்போது உங்களைப் பற்றிச் சொன்னதும் ஒரு குற்றச்சாட்டு என்று எடுத்துக்கொள்ள முடியாது. எனவே அதுவும் அவைக் குறிப்பில் இருக்கிறது. உட்கார்ந்து விடுங்கள்.

திரு. ப. ரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் என்னைப் பற்றி அதிகாரிகள் சொன்ன தாகக் குறிப்பிட்டார். உண்மையிலேயே சென்னை மாநக ராட்சியிலே தார் சாலை போடுகிறேன் என்று சொல்லி அங்கே போடாமல், போட்டேன் என்று கணக்கு எழுதி அங்கே காண்ட்ராக்ட்காரர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து ரங்க நாதன் அவர்களே, இதற்கு ஆதாரம் இருந்தால் என்னிடம் கொடுத்துவிடுங்கள்.

திரு. ப. ரங்கநாதன் : என்னைப் பேச விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முதலிலேயே உங்களைக் கேட்டேன்.

திரு. ப. ரங்கநாதன் : ஆபீசரை அனுப்புங்கள். நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுகின்ற போது முறைகேடுகளைப்பற்றி ஆதாரத்தோடு பேச வேண்டும். ஆதாரம் உங்களிடம் இருக்குமானால் அதை என்னிடம் கொடுத்து விட்டு நீங்கள் பேசுவதுதான் முறை. அனுப்புங்கள் நான் கேட் கிறேன் என்று (குறுக்கீடு) அப்படி நீங்கள் சொல்லவில்லை. ஸ்பெசி பிக்காகச் சொல்கின்றபோது அதை என்னிடத்தில் கொடுத்திருக்க வேண்டும். பிறகு நான் அதிகாரிகளை அனுப்புவது என்பது இரண்டாவது பிரச்சினை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர்.

பிற்பகல் 5–50

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே இருக்கின்ற அந்த பில்லின்மீது பேசவில்லை. வேண்டும் என்றே திடீர் திடீர் என்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதில் முதல் குற்றச்சாட்டு சொல்லுகிறபோது அந்த ஆதாரத்தைத் தேடுவது அவ்வளவு சுலபமானது அல்ல. எந்த இடத்தில் அது நடைபெற்றது என்பதை அவர்கள் விளக்கினால் பரவாயில்லை. வேண்டும்

என்றே முதலில் ஆரம்பிக்கும் போதே ஒரு தவறான கருத்தைச் சொன்னார்கள். இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு இன்றைக்கு சாக்கடையாக இருக்கிறது என்று பேசுகிறார்; இப்படி வேண்டும் என்றே கருததைச் சொல்லுவது சரியாக இருக்குமா ? இது ஒரு தோழமையோடு இருக்கிற இயக்கமா ? அல்லது எதிர்க்கட்சியில் எதிரிக்கட்சியாக அது பணியாற்று கிறதா என்பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதேபோன்ற கருத்துக்களை டெல்லியில் நாங்கள் பேசினால் நீங்கள் ஏற்றுக்கொளவீர்களா? என்பதை நான் இந்த நேரத்தில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, மாண்புமிகு உறுப்பினர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லியது மாதிரி ஆதாரம் இருந்தால் அவரிடத்தில் சொல்லிவிட்டு சொல்லுவதாக இருந்தால் இங்கே பேசலாம். ஆனால் அப்படிச் சொல்லுகின்ற குற்றச்சாட்டுக்கு உள்ளபடியே ஆதாரம் இருக் கிறது அல்லது நிலைமை இருக்கிறது என்று சொன்னால் இங்கே பேசாமல் அந்தக் குற்றச் சாட்டை எழுதி உரிய அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்தால் அதற்கான நடவடிக்கை எடுப் பதற்கு வழி வகை ஏற்படும். ஆக, இப்போது இந்தப் பிரச் சினையை இங்கே கிளப்பினால் அமைச்சரும் பதில் சொல்லமுடியாது இதற்கான தன்மைகளை நாங்களும் விளங்கிக்கொள்ள முடியாது போகும். அப்படிக் குற்றச்சாட்டு இருக்குமானால் இப்போது இல்லாவிட்டாலும் கூட. பிறகு கூட நீங்கள் எழுதிக் கொடுத்தால் அதன் மீது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆக இந்தப் பிரச்சினையை இத்துடன் விட்டுவிட்டு அடுத்து செய்யக்கூடிய காரியங்களாகச் சொன்னால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 7 பில்கள் இருக்கின்றன. 2 நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் மீது குற்றச்சாட்டு சொல்லவில்லை; அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் மீது தான் குற்றச்சாட்டு சொன்னேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு சொல்லுவதற்கும் சில வரன்முறைகள் இருக்கின்றன. நம்முடைய சட்டதிட்டங் களில் அவ்வாறு கொடுத்து இருக்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு ஆண்டு காலத்தில் தமிழகத்தில் இருக்கிற உள்ளாட்சித் துறையில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களாக இருந்தாலும், ஊராட்சிகளாக இருந்தாலும், நகரசபைகளாக இருந்தாலும், மாநகராட்சிகளாக இருந்தாலும் அங்கே எல்லாம் பணியாற்றுகின்ற மாண்புமிகு உறுப்பினர் கள் அந்தந்தப் பகுதிகளில் நடைபெறுகின்ற பல்வேறு திட்டங்கள் பற்றி தெரிந்துகொள்வதற்காக அவற்றைப்பற்றி ஆய்வு செய்வதற்காக அப்படி அவற்றைப் பற்றி ஆய்வு செய்ததற்குப் பின்னால் அதிலே இருக்கிற குறைபாடுகள் பற்றி அமைச்சர் இடத்திலே சொல்லுவதற்கு உங்களுக்கு முழுமையான சுதந்திரம், உரிமை இருக்கிறது. அப்படி எந்த ஒரு ஊராட்சி ஒன்றியத்திலாவது, எந்த ஒரு நகரசபையிலாவது இப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்து அமைச்சர் இடத்திலே எடுத்துச் சொல்லி, அதிகாரிகள் இடத்திலே எடுத்துச் சொல்லி நடவடிக்கை எடுக்கவில்லை என்று எந்தச் சட்டமன்ற உறுப்பின ராவது சொல்லுவார்களானால் அதற்கு இந்த அரசு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லி இந்த அமைச்சரவை மூலமாக நடவடிக்கை இல்லை என்று யாராவது என்னிடத்தில் சொன்னால் அதற்கு நட வடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன். அப்படி சுட்டிக் காட்டுவதை விடுத்து ஒட்டுமொத்தமாக ஊழல் நடைபெறு கிறது, மாநகராட்சியில் ஊழல் நடைபெறுகிறது, நகர சபையில் ஊழல் நடைபெறுகிறது; ஊராட்சி ஒன்றியங்களில் ஊழல் நடைபெறுகிறது என்று ஒட்டுமொத்த மாகச் சொல்லுவது சட்டமன்ற உறுப்பினருக்கு அழகல்ல என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டொரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. ப. ரங்கநாதன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதாவது சென்னை நகரத்தில் குப்பையை அள்ளவில்லை என்று சொன்னால் அங்கே 'கன்சர்வென்சி' இன்ஸ்பெக்டர்கள் லாரிகள் முறையாக வருவது இல்லை என்று கூறுகிறார்கள். லாரிகள் ஏன் வரவில்லை என்று கேட்டால் அதற்கு அதிகாரிகள்

பதில் சொல்வது இல்லை. அப்போது கொஞ்சம் சத்தம் போட்டுக் கேட்டால்தான் லாரிகள் இல்லை என்று சொல்லு கிறார்கள். (குறுக்கீடு, கூச்சல்—குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் .

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் சென்னை மாநகர சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார்கள். கடந்த ஒரு ஆண்டு காலமாக சட்டமன்ற உறுப்பினராக கடமைகளை, பணிகளை ஆற்றி வருகிறார்கள். அந்தத் தொகுதியில் எந்த இடத்தில் சாக்கடை தேங்கி இருக்கிறது; எந்த இடத்திலே தெரு விளக்குகள் எரியவில்லை; எந்த இடத்திலே சாலை பராமரிப்பு செய்ய வில்லை என்று எந்த காரியத்திற்காகவாவது என்னிடத்திலே வந்து—அதிகாரிகளிடத்திலே எடுத்துச் சொல்லி அதை அவர்கள் செய்யவில்லை என்றால் அமைச்சர் இடத்திலே சொல்லலாம். அப்படி என்னிடத்திலே—சொல்லியிருக்கிறாரா. எந்த அதிகாரி நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை மட்டும் குறிப்பிட்டால் அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அமைச்சரவை தயாராக இருக்கிறது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : திரு. ரங்கநாதன், நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் பேசுகிறேன் **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ** என்பது வேண்டாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் என்ற தகுதியோடு ஆயிரம் விளக்கு தொகுதியினுடைய ஒரு கண்ணியமிக்க சட்ட மன்ற உறுப்பினர் என்ற வகையில் இங்கே சில விவரங்களைச் சொல்லவேண்டும். தலைவர் அவர்களே, நம்முடைய மாண்பு மிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் பேசியதை மிகப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். நானும் ஒரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சட்டமன்ற உறுப்பினர்தான். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரிடத்திலே அவர் அந்தப் பொறுப்பை வகிக்கின்ற கார ணத்தால் நான் அமைச்சர் என்ற தகுதியோடு அல்ல ; ஒரு எம்.எல்.ஏ. என்ற தகுதியோடு ஒவ்வொரு நாளும் நான் அவருக்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் கடிதம் எழுதிக்கொண் டிருக்கிறேன். என் தொகுதியில் குறை வந்தால் உடனடியாக் அவருக்கு எண். போட்டு கடிதம் எழுதி ரிஜிஸ்டர் செய்து அங்கே கையெழுத்து வாங்கி, அதையும் ஃபைல் செய்து வைத்திருக் கிறேன். உங்களுக்குக் காட்டுகிறேன். அதுபோல் அவரை நேரில் பார்க்கிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்களே, இதோ அம்மையப்பன் தெருவில் இப்படி இருக்கிறது, மகாலிங்க புரத்தில் இப்படி இருக்கிறது என்ற விவரங்களை எல்லாம், அமைச்சர் என்ற தகுதியில் அல்ல, அவரிடத்திலே பொறுப்பு இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன்.

பிற்பகல் 5-55

நேற்றுகூட ஒரு மணிநேரம் நான் இங்கே என்னுடைய தொகுதிப் பிரச்சினையைச் சொன்னேன். இன்றைக்கு அவர் கள் உங்களிடத்தில் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்களே, என்னைச் சந்தித்தீர்களா, சந்தித்து விவரம் சொன்னீர்களா, சொன்னபிறகு அந்தக் காரி யங்கள் நடந்தனவா இல்லையா என்றெல்லாம் இன்றைக்குக் கேட்டார்கள். எனவே, தயவுசெய்து ஆக்கபூர்வமாக அணுக வேண்டும். இருக்கிற நேரம் குறைவு. எனவே, இந்த நேரத் தில் ஆக்கபூர்வமான வகையில் தயவுசெய்து சொல்லி, அதுவும் அவர் இளைஞர் ; நல்ல துடிதுடிப்பு மிக்க ஒரு அமைச்சர் இன்றைக்கு வேகமாக பணிகளைச் செய்துகொண்டு வருகிறார். (மேசையைத்தட்டும் ஒலி) ஆயிரம் விளக்கைப் பொறுத்தவரை யில் பல காரியங்களை, நான் அவரிடத்திலே அணுக்கமாக இருந்துகொண்டு, ஒரு அமைச்சர் என்ற வகையில், அன்பான வகையில், நான் அவருக்கு அண்ணனாக இருந்தாலும், ஒரு எம்.எல்.ஏ.-வாக இருந்துகொண்டு காரியங்களைச் சாதித் துக்கொண்டிருக்கிறேன். எனவே, நீங்களும் பொறுப்பாக இருந்துகொண்டு புரசைவாக்கத்திற்கு வேண்டியவற்றை எல் லாம் பெறுவதற்குரிய வகையில் அதுகுறித்த விவாதத்தைத் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புரசைவாக்கத்தில் என் னென்ன குறைபாடுகள் இருக்கின்றனவோ அவை பற்றி மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள், அவரைச் சந்திக்க வில்லை என்று சொன்னார். நான் சந்திக்கவில்லை. ஆனால்

அதிகாரிகளைச் சந்தித்து இருக்கிறேன். சென்னை மாநகராட்சி ஆணையாளரை, தனி அலுவலர்களை 6 முறை சந்தித்து நான் மகஜர் கொடுத்திருக்கிறேன். அதற்கான ஆதாரம் என்னிடம் இருக்கிறது. ஃபோட்டோ எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கநாதன், பேசுங்கள்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் வடசென்னைப் பகுதியில் குறிப்பாக திருப்பள்ளித் தெருவில் குப்பைகள் இருக்கின்றன. தானா தெருவில் குப்பைகள் இருக்கின்றன. சுந்தரம்பிள்ளை தெருவில் குப்பைகள் இருக்கின்றன. சரவணா தியேட்டர் அருகே எஸ்.எஸ். புரத்தில் குப்பைகள் இருக்கின்றன. வியாசர்பாடியில் குப்பைகள் இருக்கின்றன. மங்கலபுரத்தில் சாமி நாயக்கன் தெருவில் குப்பைகள் இருக்கின்றன. சந்தியப்பர் தெருவில் குப்பைகள் இருக்கின்றன. குன்னூர் ஹைரோட்டில் குப்பைகள் இருக்கின்றன. மேடவாக்கம் தேன்ஸ் சாலையில் குப்பைகள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பல இடங்களில் எல்லாம் குப்பைகள் இருக்கின்றன என்று சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள். கடந்த ஓராண்டு காலத்தில் இந்தக் குப்பைகளை பற்றி என்னிடத்தில் ஏதற்காகத் தெரிவிக்கவில்லை ? அதற்கான காரணத்தை அவர்கள் தெரிவிக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் ; பண்பாடு உள்ளவர். எனவே இந்த நேரத்தில் நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 20 ஆண்டு காலமாக பொது வாழ்வைப்பற்றி அது கிராமமாக இருந்தாலும், ஒன்றியமாக இருந்தாலும், நகரமாக இருந்தாலும், ஊராட்சி ஒன்றிய அமைப்புகளாக இருந்தாலும் அங்கேயுள்ள பல்வேறு நிலைகளைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பவர்கள் நாங்கள். குப்பைகளைப்பற்றியும், கூளங்களைப் பற்றியும் தெரிந்துகொண்டு, அவற்றைப் பார்த்துவிட்டுத்தான் இங்கே அமைச்சராக வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) குப்பைகளை அகற்றுவது எப்படி, நல்ல குடிதண்ணீர் வழங்குவது எப்படி, தெரு விளக்குகளைப் பராமரிப்பது எப்படி என்றெல்லாம் பார்த்துவிட்ட பிறகுதான்



20 ஆண்டு காலத்திற்குப் பின்னாலேதான் அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிறோம். நண்பர், சட்டமன்ற உறுப்பினர், திரு. ரங்கநாதன் போன்றவர்கள் எங்களுக்கு அறிவுரை கூறுவதற்காகவோ அல்லது ஆலோசனைகள் வழங்குவதற்காகவோ நாங்கள் அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. கடமையாற்றுவதற்காகத்தான் பொறுப்பேற்று இருக்கிறோம். பொறுப்போடு புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்த கடமையை ஆற்றுவதற்காகத்தான் நாங்கள் அமைச்சராக ஆகி இருக்கிறோம்.

திரு. ப. ரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரடியாகப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் சொல்வது மாதிரி குப்பைகளும் இருக்கின்றன ; கூட்டுவதற்கான ஆட்களும் இருக்கிறார்கள். அவர்கள் அந்த வேலைகளைச் செய்தார்களா என்பதுதான் இப்போது பிரச்சினை. செய்யவில்லை என்றால் அதை அதிகாரிகளிடம் சொல்லுங்கள். அவர்கள் கேட்கவில்லையென்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லுங்கள். அதோடு பிரச்சினை முடிந்து விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கநாதன், நீங்கள் 5-18-க்கு பேச ஆரம்பித்தீர்கள் ; இப்போது 5-59 ஆகிறது. நீங்கள் ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னைப்பற்றி குறை சொன்னார், "நான் அதிகாரிகளை மிரட்டுகிறேன் என்று. நான் அதிகாரிகளை மிரட்டவில்லை.

பிற்பகல் 6-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கநாதன், நீங்கள் அந்தப் பிரச்சினைக்கு பழையபடி போகாதீர்கள்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்களித்த பொதுமக்களுக்காக, அவர்களுடைய பிரச்சினைக்காகத்தான் நான் அதிகாரிகளைச் சந்தித்து அவர்களிடத்திலே கேட்கிறேன். அது தவறு என்று சொல்கிறாரா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கநாதன், நான் சொல்வதைக் கேளுங்கள். ஒரே பாயிண்டிலேயே போய்க் கொண்டிருப்பது நல்லதல்ல. மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர்,

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்பத்தில் இருந்தே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இந்த மிரட்டுவது என்ற பிரச்சினைக்கு நானும் எதிர்க்கட்சித் தலைவருமே பேச வேண்டியதாகப் போயிற்று. திரும்பவும் அந்தப் பிரச்சினைக்கே போனீர்களானால், என்ன அர்த்தம் ? மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை நீட்டிக் கொண்டு போகவேண்டிய அவசியமே இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, அதிகாரிகள் வந்து, மிரட்டினார்கள் என்று சொன்னதாகவும், அதைத்தான் பொருட்படுத்தவில்லை என்றும் சொல்லிவிட்டார்கள். அதற்குரிய உறுப்பினர் நீங்களே இங்கு இருக்கிறீர்கள். நான் மிரட்டாதவன் ; நான் அமைதியானவன் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த அவை ஏற்றுக்கொண்டு இருக்கிறது உங்களைப்பற்றி. உங்களைப்பற்றி சந்தேகமே படவில்லை. மேற்கொண்டு விவாதத்திற்குச் செல்லலாம். இதை விட்டுவிடலாம்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து தெருவிளக்குகளையும் எரிய வைக்க வேண்மென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சென்னை மாநகராட்சியிலே இருக்கின்ற மழைநீர்க் கால்வாய்களையும் சீரமைக்க வேண்டும். தனியார் சாலைகளில் கொசு ஒழிப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, நான் தோழமை உணர்வோடுதான் பேசுகிறேன் என்பதையும்தெரிவித்துக்கொண்டு ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கநாதன் முடித்துக்கொள்ளுங்கள். அடுத்து, திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை ஓராண்டுக்காலம் நீட்டித்து, கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை நான்



மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இந்தக் தேர்தலை ஓராண்டுக் காலம் நீட்டித்து வைப்பதற்கு, தனி அதிகாரிகளுடைய நியமனத்தை மேலும் ஓராண்டுக் காலம் நீடித்திருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. நம்முடைய மாநில அரசு இப்போது மக்கள் தொகையின் புள்ளிவிவரக் கணக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, தேர்தல் நடத்துவதற்கு தங்களுக்கு அவகாசம் தேவை என்கிற அளவிலே காரணத்தைச் சொல்லிஇந்தச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்

இது ஒருபுறம் இருந்தாலும்கூட, இங்கே மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இந்த உள்ளாட்சிகளுக்கு , இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு, 18 விழுக்காடு தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தராமல் தேர்தல் நடத்தப்படக்கூடாது என்கிற ஒரு கோரிக்கையை முன்வைத்து, கந்தசாமி சிங் என்கிற வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றத் திலே தடை பெற்றிருக்கிறார்கள். நான் இந்த மன்றத்திலே பலமுறை, பல ஆண்டுக்காலமாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறேன். என்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும் ; 18 வயது நிரம்பிய எல்லோரும் சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தலைப்போல நேரடியாக நகர மன்ற, ஒன்றியத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் முறையைக் கொண்டு வரவேண்டும் என்கிற நிலையை அரசு உருவாக்கியதோ அன்றிலிருந்து தொடர்ந்து நாங்கள் எங்கள் கருத்தை வலியுறுத்தி வருகிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 விழுக்காடு உள்ளாட்சியிலும் நகராட்சியிலும் நகர மன்றங்களிலும் தரப்பட வேண்டுமென்கிற கோரிக்கையை வலியுறுத்தி வருகிறோம். தமிழகத்திலே இருக்கிற நூற்றுக்கும் மேற்பட்ட நகர மன்றங்களிலே உள்ள மக்கள் தொகையிலே 15 விழுக்காடு இருக்கிற தாழ்த்தப்பட்டவர்கள் ஒரு நகர மன்றத்திற்குக்கூட கடந்த முறை வர முடியாத அவல நிலையைப் பார்த்தோம். தமிழகத்திலே இருக்கிற 374 ஒன்றியங்களிலே 2 ஒன்றியங்களைத் தவிர மற்ற ஒரு ஒன்றியத்திற்குக் கூட தாழ்த்தப்பட்டவர்கள் நேரடியாக வெற்றி பெற முடியாத அவலநிலையைப் பார்த்தோம். இந்த மக்கள் தொகையிலே ஐந்திலே ஒரு விழுக்காடு இருக்கிற, ஏறக்குறைய ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையை உள்ளடக்கிய தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு, அரசியல் சட்ட பாதுகாப்பு பெற்றிருக்கிற அந்தச் சமுதாயத்திற்கு இந்தத் தேர்தல்களிலே உரிய ஒதுக்கீடு கிடைக்கப்பட முடியாத அவல நிலையைப் பார்த்தோம்.

[பிற்பகல் 6-05]

நம்முடைய அரசியல் சட்டம் எல்லாவற்றிலும், கல்வியிலானாலும் வேலை வாய்ப்பிலாலும் ஆனாலும், எல்லாவற்றிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 விழுக்காடு தர வேண்டுமென்ற

[திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்] [1992 செப்டம்பர் 25

மிகைப்படுத்திக் கூறுவதாக தயவுசெய்து யாரும் எண்ண வேண்டாம்—ஒரு சிறிய பள்ளி இருக்கிறது; அந்தப் பள்ளியிலே இருக்கக்கூடிய குழந்தைகளை காலையிலே குளிப்பதற்கு ஒரு தாம்பாளத்தின் மீது அந்தக் குழந்தையை நிறுத்தி, அதன் தலையிலே தண்ணீரை ஊற்றுகிறார்கள். பிறகு, அந்தக் குழந்தையை எடுத்துவிட்டு, இன்னொரு தாம்பாளத்தின்மீது ஒரு குழந்தையை நிறுத்தி, மறுபடியும் அதே தண்ணீரை எடுத்து அந்தக் குழந்தையின் தலையிலே ஊற்றக்கூடிய நிலை இன்றைக்கு இருக்கிறது. (குறுக்கீடு) நான் பேசுவதற்கு நான் பொறுப்பேற்கிறேன். சிறிய தவறு இருந்தாலும், நான் ஏற்றுக் கொள்கிறேன் இப்போது அதுபோன்ற நிகழ்ச்சிகள் முள்ளிமலையிலும், காரங்காடு என்ற ஊரிலும் நடந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 6—10

கடற்கரைப் பகுதியில் குடிப்பதற்கு தண்ணீரே இல்லை. 5 கிலோ மீட்டர், 6 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து—இப்போது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நாங்கள் பேசி, டெம்பரரியாக லாரிகளில் தண்ணீர் கொடுக்கிறார்கள். அது போதுமான அளவுக்கு இல்லை. டெம்பரரியாக நான் பொறுப்பேற்றவுடன்—4 ஆண்டுகளாக நான் அந்தத் தொகுதியிலே, சென்ற முறையும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன்—அப்போதிருந்து, தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்போதுதான் லாரிகளிலேயிருந்து கொடுக்கிறார்கள். அங்கு பெர்மனன்டாக எந்தவிதமான 'சோர்சும்' செய்யவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> ; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே நானும் அருமைச் சகோதரர் திரு. கண்ணப்பன் அவர்களும் இராமநாதபுரம் மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோது குடிநீர் வடிகால் வாரியத்தைச் சார்ந்த பல்வேறு அதிகாரிகளை எல்லாம் அந்த மாவட்டத்திற்கு அனுப்பி, நிரந்தரமாக அங்கு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒரு திட்டத்தைத் தயாரிக்கச் சொல்லியிருக்கிறார்கள். கடல் நீரைக் குடிநீராக மாற்றுகிற திட்டம் சுமார் 52 கோடி ரூபாயில் பல்வேறு ஆய்வுப் பணிகள் எல்லாம் நடைபெற்று, அந்தத் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் விரைவில் அளிக்கப்பட இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



1992 செப்டம்பர் 25]

<u>திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்:</u> நன்றி. அநதததிட்டம நான் கூறிய எனது தொகுதியிலும் இருக்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, நகராட்சிகளிலே இன்றைக்கு குடி தண்ணீர் வழங்குவது மிகவும் குறைந்திருக்கிறது. அது தமிழகம் முழுவதிலேயும் இருக்கிறது. நகராட்சிகளிலே வசூலிக்கக்கூடிய 'சார்ஜ்' இன்றைக்கு இரட்டிப்பாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதை நமது அரசு கவனத்தில் கொண்டு, குடி தண்ணீர் வழங்குவதினுடைய செலவைக் குறைக்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது நமது அரசு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வழங்கி இருக்கிறது. நீங்கள் நல்ல எண்ணத்துடன்தான் அந்தப் பணத்தை வழங்கினீர்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால், அந்தத் திட்டம் நிச்சயமாகச் செயல்படவில்லை என்று நான் கருதுகிறேன். அந்தந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுடைய பிரதிநிதிகள் என்னென்ன வேலைகள் வேண்டுமென்று கூறினோமோ அவை அந்தந்தப் பகுதிகளிலே செய்யப்படவில்லை. அதை நான் அரசிடமும் எடுத்துக் கூறினேன். அதிகாரிகளிடமும் எடுத்துக் கூறினேன். ஆனால் இன்றுவரை அந்தத் திட்டங்கள் அதிகாரிகளினுடைய இஷ்டத்திற்குச் செயல்படுவனவாக உள்ளன. இன்றைக்கு நீங்கள் ஒரு கோடி ரூபாய் வழங்கியும் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் நல்ல பலனை அடைய முடியாத நிலை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, இப்போது பதவிக் காலத்தை ஓராண்டு நீங்கள் நீட்டித்து இருக்கிறீர்கள். முதலிலே இந்த அரசு பதவி ஏற்றவுடன், தேர்தலை நடத்துவதிலே நீங்கள் முனைப்பாகச் செயல்பட்டீர்கள். அதற்குப் பிறகு காவேரிப் பிரச்சினை என்று கூறி, தேர்தலைத் தள்ளி வைத்தீர்கள். இப்பொழுது ஏதோ சட்டச் சிக்கலைக் கூறியிருக்கிறீர்கள், அந்தச் சட்டச சிக்கல்கள் எல்லாம் எங்களுக்குத் தெரியாது, மக்களுக்கும் தெரியாது. அதை எல்லாம் சரி செய்ய வேண்டியது இந்த அரசினுடைய கடமை. நீங்கள் உடனடியாகச் செய்ய வேண்டும். ஏன் நீங்கள் தேர்தலைக் கண்டு அஞ்சுகிறீர்கள்? நீங்கள் நிச்சயமாக அஞ்ச வேண்டாம். உங்களுடன் காங்கிரஸ் பேரியக்கம் துணையாக இருக்கும் வரை நீங்கள் தேர்தலைக் கண்டு நிச்சயமாக அஞ்ச வேண்டாம். தேர்தலைக் கண்டு பயப்படவே வேண்டாம். காங்கிரஸ்காரர்கள், நாங்கள் இருக்கிறோம்.

டி2 53-287—90

ஒருநெறியைஒரு மரபைப் பின்பற்றி வருகிறது. அந்த மரபு, இதிலே கடைப்பிடிக்கப்பட முடியாமல் போனால் அது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, நாம் இழைக்கிற மிகப் பெரிய துரோகமாக அமைந்துவிடும். எனவேதான் இந்த இட ஒதுக்கீடு கிடைக்காத வரை எவ்வளவு காலமானாலும் சரி தேர்தலைத் தள்ளி வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இந்தச் சட்டமன்றத்திலும், இதற்கு முன்னால் இருந்த சட்டமன்றத்திலும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த நேரத்திலே நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இதற்காக அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டுமென்று மறைந்த அமரர் இராஜீவ்காந்தி அவர்கள் பஞ்சாயத்து ராஜ் பில் என்கிற ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அவர் இருந்தபொழுது அதை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. இன்றைக்கு மாண்புமிகு பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் அதற்கு ஒரு புது வடிவம் தந்து நகர்பாலிகா என்று பெயர் வைத்து, இந்த நகர்பாலிகா சட்ட முன்வடிவை நாடாளுமன்றத்திலே கொண்டு வருவதற்கு முன்னால் நாடாளுமன்றத்திலே பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு துணைக் குழுவை நியமித்து, அந்தத் துணைக் குழு இந்திய துணைக்கண்டம் முழுவதும் எல்லா மாநிலங்களுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, இட ஒதுக்கீடு உள்ளாட்சியிலே அவசியம் என வலியுறுத்தி, அது தன்னுடைய பரிந்துரையை இன்றைக்கு பிரதமரிடம் தந்திருக்கிறது. பிரதமர் அவர்களும் அந்தப் பரிந்துரையை ஏற்று, நடப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலே அதைச் சட்டமாக்க இருக்கிறார்கள். விரைவிலே சட்டபூர்வமாக அரசியல் சட்டத்திலே ஒரு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு எல்லா மாநிலங்களிலும் நிச்சயமாக இட ஒதுக்கீடு தந்து உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்கிற மரபு வர இருக்கிற நிலைமையிலே மேலும் ஓராண்டுக்காலம் இதைத் தள்ளி வைப்பதில் தவறு இல்லை என்றே நான் கருதுகிறேன். அதற்கு ஒரு வாய்ப்பு இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன் : மனித உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்கிற ஒரு நிலையிலே ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, அழுத்தப்பட்ட மக்களுக்கு வாய்ப்பு கிடைக்கிற உரிமைகளை நாம் பறிக்கக்கூடாது என்கிற வகையிலே தள்ளி வைக்க வேண் வேண்டும். நலிந்த மக்களுடைய முன்னேற்றம்தான் நாட்டின் முன்னேற்றம் என்று சொன்னார் பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள். ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா அவர்கள் . உழைப்புவுயர்ந்தவர் என்று சொன்னார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உற்ற தோழியராக இருந்து கொண்டிருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அதற்காகவே தன்னுடைய வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற அவர்கள் இதைப் பரிசீலித்து, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டு முறையைப் பெறுவதற்கான முறையிலே இதைத் தள்ளிவைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தி, இந்த மசோதாவை ஆதரித்து அமைகிறேன். நன்றி.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு கே. ஆர். இராமசாமி அம்பலம்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் தனி அதிகாரிகளினுடையபதவிக் காலத்தை ஓராண்டுக்கு நீட்டிப்பு கோரும் இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில் இன்றைக்குக் குடி தண்ணீர்ப் பிரச்சினை மிகமிக மோசமான நிலைமையிலே இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்திலே இன்றைக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றியிருக்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு உதிரிப்பாகங்கள்கூட வாங்குவதற்கு ஊராட்சி ஒன்றியத்திலே வழியில்லாத நிலையிலே பல கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூடப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக எனது தொகுதியிலே பலயிடங்களிலே இது போன்ற நிலைமை இருக்கிறது. இதை நான் பலமுறை சட்டமன்றத்திலும், அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளிடமும் எடுத்துக் கூறியும் இன்னும் அந்தப் பகுதியிலே குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நமது முதலமைச்சரவர்கள் தமிழகத்திலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் நிச்சயமாக எல்லாக் கிராமங்களுக்கும் கொடுப்பதாகக் கூறினார்கள். ஆனால் இன்றைக்கு மிக மிக மோசமான ஒரு நிலைமையிலே குடி தண்ணீர் கிடைக்காமல், கடற்கரை ஓரங்களிலே இருக்கக்கூடிய கிராமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே குடிப்பதற்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் இல்லாமல் ஒரு கிராமத்தில் உப்புத் தண்ணீரை அருந்தி சில குழந்தைகள் இறந்து இருக்கின்றன. சில இடங்களிலே—நான்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

பிற்பகல் 6–15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது தேர்தலைக் கண்டு அஞ்சுவதாகச் சொன்னார்கள். காங்கிரஸ் கூட இருக்கும் போது அஞ்சத் தேவையில்லை என்று சொன்னார்கள். காங்கிரஸ் கூட இருக்கும் போதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அஞ்சவில்லை. காங்கிரஸ் இல்லாது தனியாக இருக்கும்போதும் அஞ்சவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இப்போது கூட்டணியாக இருக்கும் போது அஞ்சுவதற்குக் காரணமே யில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி. அமைச்சர் அவர்கள் காங்கிரஸ் கட்சி எங்களுடன் கூட்டாக இருக்கும் போது நிச்சய மாக நாங்கள் அஞ்சமாட்டோம் என்று கூறியதில் நான் பெருமைப்படுகிறேன். அஞ்சாத நிலை வேண்டும் என்றுதான் நான் விரும்புகின்றேன். நீங்கள் அஞ்சமாட்டீர்கள். நாங்கள் இருக்கும் வரை நீங்கள் அஞ்சவே வேண்டாம். உடனடியாக நீங்கள் தேர்தலை நடத்துங்கள் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதற்கும் அஞ்ச வேண்டிய அவசியமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்: நமக்கு வாக்களித்து, நம்மையெல்லாம் அனுப்பிய மக்கள் தமிழகத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைய வேண்டும். மத்தி யிலே காங்கிரஸ் ஆட்சி அமைய வேண்டும் என்ற நல்ல நோக் குடன் வாக்களித்து நம்மை அனுப்பியிருக்கிறார்கள். அவர் களுடைய நல்ல எண்ணத்திற்கு நாம் நிச்சயமாக நம்பிக்கை உடையவர்களாக நாம் அனைவரும் நடக்க வேண்டும். அதற்குத் தான் இதை எடுத்துக் கூறுகிறேனே தவிர, வேறு ஒன்றும் தவறான எண்ணத்தில் நான் இங்கே பேசவில்லை. குறிப்பாக கண்ணங்குடி



ஊராட்சி ஒன்றியம் கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி இன்னும் அதற்கு டெண்டர் கோராமல் இருக்கிறது. ஊஞ்சனை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நீங்கள் உடனடியாகச் செயல் படுத்திட வேண்டும். அதற்கு அடுத்தாற்போல், வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பல ஆண்டுகளாகக் கிடைப்பில் இருக் கிறது. அதையும் நீங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, நாகப் பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில், தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு உடனேயே, கொள்ளிடத்திலிருந்து நாகப்பட்டினம், வேதாரண்யம் முத்துப்பேட்டை வரை உப்புநீர் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பகுதிகளுக்கு எல்லாம் தண்ணீர் கொண்டு வருகின்ற திட்டத்தை, புரட்சித் தலைவியின் ஆணையின் பேரிலே குடிநீர் வடிகால் வாரியம் ஆய்வு செய்து வருகிறது. விரைவிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன். (குறுக்கீடு)

திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன், கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றி மட்டும். வேறொன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பி.வி. இராஜேந்திரன்.

திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டி ருக்கிறேன். அதே சமயம், அமரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இருந்த நேரத்தில் 19 கோடி ரூபாய்க்குத் திட்டத்தைத் தீட்டி, அடிக்கல் நாட்டி, இன்றைக்கு அவைகளுக்கு 4 கோடி செலவு செய்து விட்டீர்கள். அந்தத் திட்டத்திற்கு குழாய்கள் வாங்கி அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. தற்போது மீண்டும் அரசால் அந்தத் திட்டம் செயலாக்கப்பட்டு, பட்டுக்கோட்டையிலிருந்து வேதாரண்யத்திற்குத் தண்ணீர் தரமுடியுமா? அத்திட்டம் பற்றிப் பரிசீலனை செய்ய பஞ்சநாதன் கமிட்டி என்று ஒரு கமிட்டியை அமைத்தது. அந்த பஞ்சநாதன் கமிட்டி இன்றைக்கு அதனுடைய

அறிக்கையைத் தந்திருக்கிறது. அதை நீங்கள் ஏற்றுக் கொண்டு பட்டுக்கோட்டைத் திட்டத்தைக் கைவிட்டு விட்டோம் என்று சொன்னால்தான் நீங்கள் புதிய திட்டத்தை ஏற்க முடியும். அதைத்தான் கேட்கிறேன். அந்தப் பட்டுக்கோட்டைத் திட்டத்தை கைவிட்டு விட்டீர்களா? புதிய திட்டம்தான் துவங்கப் போகிறீர்களா? அந்தப் பஞ்சநாதன் கமிட்டியின் ரிப்போர்ட்டை அசம்பிளியில் பிளேஸ் பண்ணுவீர்களா என்பதை பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த கமிட்டியின் ரிப்போர்ட் இன்னும் அரசாங்கத்திற்கு முழுமையாக வரவில்லை. வந்தவுடன் அது குறித்து ஆய்வு செய்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்.

பிற்பகல் 6–20

திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகாரிகளுடையப் பதவிக்காலத்தை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்க இந்தச் சட்டம் இங்கே வகை செய்கிறது. இதன் மூலம் ஓராண்டு காலத்திற்கு ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளுக்கு தேர்தல் இல்லையென்ற நிலை உருவாகியிருக்கிறது. சென்ற முறை காவேரிப் பிரச்சினையை காரணமாக காட்டி, தேர்தலை நடத்துவதற்கு உகந்த நேரம் இல்லையென்று சொல்லி தேர்தலைத் தள்ளி வைத்தோம். இப்பொழுது ஜனத்தொகை கணக்கெடுப்பு நடக்கிறது என்ற காரணத்திற்காக நாம் தேர்தலைத் தள்ளி வைத்திருக்கிறோம். இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, நாம் சொல்கின்ற காரணங்கள் சரியாகக்கூட இருக்கலாம், ஆனால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு, நகராட்சிகளுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லையென்றால் ஏராளமான பிரச்சினைகளை சட்டமன்ற உறுப்பினர்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது. ஒரு சாதாரண சராசரி மனிதன் தன்னுடைய காரியங்கள் எல்லாம் நடந்துவிடும் என்ற நம்பிக்கையோடு எடுத்துரைக்கின்ற இடமாக நகராட்சிகள், ஊராட்சிகள் இருக்கின்றன. இந்தத் தேர்தல் நடைபெறாது இருக்கின்ற காரணத்தினாலே அந்த வாய்ப்புகள் அவர்களுக்கு அங்கே மறுக்கப்பட்ட நிலைமை உருவாகியிருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.





ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் ஏராளமான
பிரச்சினைகள் இருப்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன். குறிப்பாக நான் சார்ந்திருக்கிற கடலூர்
சட்டமன்றத் தொகுதியிலே நகராட்சிப் பகுதியும்
இருக்கிறது, ஊராட்சி ஒன்றியங்களும் அங்கே வரு
கின்றன. இங்கே முன்பு பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அதிகாரிகளிடத்திலே ஆணித்தரமாக இங்கே கருத்துக்களை
நீங்கள் சொல்லியிருக்கிறீர்களா, சொல்லியிருந்து அங்கே
நடைபெறாமல் இருக்கிறதா என்ற கேள்வியை எனக்கு
முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினரிடத்திலே
கேட்டார்கள். நான் பல விஷயங்களை அதிகாரிகளுடைய
கவனத்திற்கு, ஆதாரத்தோடு எடுத்துரைத்திருக்கிறேன்.
குறிப்பாக பொதுப்பிரச்சினை பற்றி அதிகாரிகளிடத்திலே
பேசுகின்றபோது அதிலே ஆர்வம் அவர்களுக்குச் சற்று குறை
வாகத்தான் இருக்கிறது. உதாரணமாக சில விஷயங்களை நான்
சொல்லியாக வேண்டும். நான் சார்ந்து இருக்கின்ற பகுதி கடலூர்
ஒன்றியப் பகுதி, பாண்டிச்சேரி பகுதிகளுக்கும் தமிழ்நாட்டுப்
பகுதிகளுக்கும் இடையே வருகின்ற பகுதி, அந்தப் பகுதியிலே
தார் சாலை அமைத்தால்தான் போக்குவரத்து துவங்க முடியும்
என்று ஒரு நிலை இருந்து வருகிறது. நம்மிடையே போதிய நிதி
நிலைமை இல்லை என்பதை உணர்ந்து பாண்டிச்சேரியிலே ஆளும்
கட்சியாக இருக்கிறவர்களிடம் தொடர்பு கொண்டு, அந்த
ஒன்றியப் பகுதியிலே வருகின்ற தமிழ்நாட்டுக்குச் சொந்தமான
1 1/2 கிலோ மிட்டர் பகுதிகளுக்கு தார் சாலை அளிக்கின்ற
பணியை முழுமையாக பாண்டிச்சேரி அரசாங்கம் ஏற்றுக்கொள்ள
வேண்டுமென்று பேசி அதற்குண்டான தாக்கீதுகளாக நோ
அப்ஜக்ஷன் சர்டிபிகேட்-ஐ தமிழக அரசிடமிருந்து நீங்கள்
பெற்றுத் தருவீர்களேயானால் முழுத் தொகையையும் பாண்டிச்
சேரி அரசாங்கம் செலுத்தி நிறைவேற்றித் தரும் என்று சொன்
னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே இது பற்றி
சொன்னேன். மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட
அதிகாரிகளை அழைத்துப் பேசி அந்தப் பகுதிக்கு என். ஓ.சி.
வழங்குவதில் சட்டச் சிக்கல் ஏதாவது இருக்கிறதா, பிறகு பாண்டி
சேரி அரசாங்கம் சொந்தம் கொண்டாடுமா என்று எல்லாம்
சட்டப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து நாம் என்.ஓ.சி.
வழங்கலாமென்று சொல்லி இன்றைக்குக் கூட, நேற்றுவரையிலும்
கூட, அதிகாரிகள் அங்கே அந்தச் சான்றிதழை வழங்காத
நிலையிலே இருக்கிறார்கள்.

பிற்பகல் 6–25

அதே போலத்தான், அங்கே மத்தியிலே அதிகாரங்கள்
குவிந்து இருக்கின்றன, மத்தியிலே குவிந்திருக்கின்ற
அதிகாரத்தை பகிர்ந்தளிக்கவேண்டும் என்று வலிவாகச்
சொல்லி வருகிறோம். மதிப்பிற்குரிய அமைச்சர்
அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புவது கிராமங்களிலே

இருந்த அதிகாரத்தை தமிழகத்தின் தலைநகரமாக இருக்கின்ற சென்னைக்கு மாற்றி இருக்கிறார்கள். இந்த உதிரிப் பாகங்கள் வாங்குகின்ற விஷயத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன். ஓராண்டு காலமாக ஊராட்சிகளுக்கு உதிரி பாகங்கள் வரமுடியாத ஒரு நிலையால் சில சாதாரண விஷயங்களைக் கூட செய்யமுடிய வில்லை. ஏன் இதைச் செய்யவில்லை என்று அதிகாரிகளிடம் கேட்கிறோம். உதிரி பாகங்கள் இப்போது சென்னையிலே இருக் கிறது, எனவே காலதாமதம் ஆகிறது என்று சொல்கிறார்கள். எனவே இவற்றையெல்லாம் நீங்கள் மனதிலே கொண்டு செய்ய வேண்டும். நம் தமிழகத்தின் முதல்வர் அவர்களாக இருக்கின்ற வர்கள்—முதல்வர் அவர்கள் இங்கே பெருமையோடு உறுதி மொழியைத் தந்தார்கள். பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு குடிநீர் பிரச்சினையையும் தெருவிளக்குப் பிரச்சினையையும், சாலை வசதிகளையும் போர்க்கால அடிப்படையிலே நாங்கள் செய்து தருவோம் என்று சொன்னார்கள். ஆனால் ஓராண்டு காலத்திற்கு மேலாகியும் அந்த அன்றாட வாழ்க்கையில் மக்களுக்குத் தேவையான பிரச்சினைகள் இன்னும் கிராம அளவிலேயோ நகராட்சி அளவிலேயோ, வார்ட் அளவிலேயோ நடந்தபாடு இல்லை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்திலே நக ராட்சியைப் பொறுத்த வரையில் அதை எடுத்துக்கொண்டாலும் பணம் இல்லை. வருவாய்க்கு வாய்ப்பு இல்லை என்று சொல்கின் றார்கள். எனவே இந்த நேரத்திலே ஒரு சிறிய ஆலோசனையை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடலூர் நகராட்சியை ஒட்டிய இடங்களிலே நான் தொழிற் சாலைகள் உள்ள, சிப் காட்-டினுடைய தொழிற்சாலைப் பகுதி மிகவும் பரந்து விரிந்து கிடக்கிறது. எனவே அந்தப் பகுதியை கடலூர் நகராட்சியிலே சேர்ப்பதற்கு, அதிலே ஏதாவது சட்ட சிக்கல் இருக்கிறதா என்று பார்த்து, அதை நீக்கி, அதை எங்கள் பகுதியிலே சேர்ப்பதன் மூலம் கடலூர் நகராட்சிக்கு அதிக வருவாய் திரட்டித் தருகின்ற மிகப் பெரிய வாய்ப்பு இருக்கிறது. பல சிறிய ஒன்றியங்களுக்கு அந்த தொழிற்சாலைகள் வரியைச் செலுத்துகிறார்கள். ஆனால் எங்கள் நகராட்சிக்கு அந்த பகுதி சேர்த்தீர்களானால், அந்த கடலூர் நகராட்சிக்கு அதிக வருவாய் வர வாய்ப்பு இருக்கும். இதை மனதிலே கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடம். தொகுதி பற்றி பேசிவிடுகிறேன்.

வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எங்களுடைய கடலூர் நக ராட்சிப் பகுதியிலே உங்களுக்குத் தெரிந்த இடமாகிய தேவனாம்பட்டினம் ஆற்றங்கரையிலே உங்களுடைய துறையின் மூலம்



மணலை அடித்து வருகிறார்கள் ஏலத்தின் மூலம். அப்படி செய்வதன் வாயிலாக நிலத்தடி நீர் மிகவும் பாதிக்கப்படு கிறது. கடல் நீர் அங்கே அந்த பகுதியிலே எல்லாம் ஊடுருவி குடிநீர் உப்பு நீராக மாறுகின்ற நிலைமை அங்கே இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக தலையிட்டு எதிர்காலத்திலே மணல் அடிக்கிற பகுதியை 10 அல்லது 15 கிலோ மீட்டர் தள்ளி அமைக்க வேண்டும் என்று கேட்டு, இதை நான் வரவேற்று வாய்ப்பளித் தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத் தில் இப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள இந்தச் சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓராண்டு காலத்திற்கு தேர்தலைத் தள்ளி வைக்கிற இந்தச் சட்ட முன் வடிவு எதற்காகக் கொண்டு வருகிறோம் என்பதை உங்க ளிடத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ கத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனே தேர்தலைச் சந்திப்பதற்காக தேர்தல் தேதிகள் எல்லாம் அறிவிக்கப்பட்டதற்குப் பின்னால் காவிரி நதி நீர்ப் பிரச்சினை காரணமாக தமிழகத்தினுடைய மக்களுடைய ஒட்டு மொத்தமான கருத்துக்களை ஈர்க்க வேண்டும் என்பதற்காக தேர்தலை ஒத்தி வைத்தோம். அதற்குப் பின்னாலே சட்டமன்ற கூட்டத் தொடர் வந்தது. இன்றைய தினத்தில் இருந்து மத்திய அர்சாங்கத்தின் மூலமாக தமிழ்நாட்டில் இருக்கின்ற பல்வேறு சட்டமன்றத் தொகுதியி னுடைய வாக்காளர் பட்டியல்களை எல்லாம் திருத்தி அமைக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். அந்த வாக்காளர் பட்டியல்கள் எல்லாம் திருத்தி அமைத்ததற்குப் பின்னாலே 1992—93 ஆம் ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பிக்க இருக்கிறது என்ற காரணத்தினாலே ஓராண்டு காலத்திற்கு இந்தத் தேர்தலைத் தள்ளி வைக்கிற சட்டமுன்வடிவைக் கொண்டு வருகின்ற ஒரு இக்கட்டான சூழ்நிலையில் தமிழக அரசு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். அந்தவகையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்றையதினம் நல்லாட்சி செலுத்துகிற நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரை யிலும் தேர்தலைச் சந்திப்பதற்கு பயப்படுகிற சூழ்நிலையில் இல்லை என்று ஏற்கனவே அவர்கள் மீண்டும் மீண்டும் தெரி வித்தக் கருத்தை நானும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. அழகு திருநாவுக்கரசு] [1992 செப்டம்பர் 25
பிற்பகல் 6-30

அந்தவகையில், வாக்காளர் பட்டியல் எல்லாம் திருத்தியமைக்கப்பட்ட பின்னால், சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பின்னாலே தேர்தலைப் பற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆலோசனையைப் பெற்று நடத்துவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைக் கூறி இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.



1992 செப்டம்பர் 25]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 55/1992) நிறைவேற்றப்பட வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 56/1992) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 56/1972)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆய்வு முடிந்தது.

@22-9-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

டி2 53-287-91

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 56/1992) நிறைவேற்றப் பெறவேண்டும்." எனக் கோருகிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

### (ஐ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 58/1992). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 58/1992)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

---

@23-9-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்த விவாதத்தில் கலந்து கொள்ள என்னை அனுமதித்ததற்காக முதற்கண் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டம் தமிழ்நாடு டவுன் அன்ட் கன்ட்ரி பிளானிங் ஆக்டுக்கு நேர் விரோதமாக அரசு கொண்டு வந்திருக்கிறது என்பதை முதலில் நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–35

The Tamil Nadu Town and Country Planning Act-ன்படி Director of Town planning அவர்களிடமிருந்து பெர்மிஷன் பெற்ற பிறகுதான் எந்த ஒரு கட்டிடத்தையும் கட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தில் 111-வது பிரிவின்படி வேறு எந்தச் சட்டத்தையாவது அரசாங்கம் கொண்டு வருமேயானால் அதை அமுலுக்கு எடுத்துக்கொள்ள முடியாது, இந்தச் சட்டம்தான் அதற்கு முடிவான ஒன்று என்று 111-வது பிரிவின்கீழ் சொல்லப்பட்டிருக்கிறது.

(1) Save as otherwise provided in this Act, the provisions of this Act and the rules and regulations made thereunder shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law.

(2) Notwithstanding anything contained in any other law.

(a) When permission for development in respect of any land or building have been obtained under this Act, such development shall not be deemed to be unlawfully undertaken or carried out by reason only of the fact that permission, approval or sanction required under such other law for such development, has not been obtained.



நகரமைப்புச் சட்டத்தைப் பார்க்கிறபோது, அந்தச் சட்டம்தான் ஒரு முடிவான சட்டமாக அமைந்திருக்கிறது. இதற்கு முரணாக எந்த ஒரு சட்டம் இயற்றப்பட்டாலும் அது எடுத்துக்கொள்ளப் பெற மாட்டாது என்று அந்தச் சட்டத்திலேயே சொல்லப்படுகிறது. இதற்கு நேர் மாறாக நீங்கள் இப்போது கொண்டு வந்திருக்கிற Tamil Nadu District Municipalities Act-ல் இதுதான் முடிவானது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த இரண்டு சட்டங்களிலே எதை பொதுவாக அரசாங்க அதிகாரிகள் அந்த இடத்திலே பயன்படுத்துவார்கள் என்ற ஐயம் ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவில் உள்ள 217 (1)ன்படி நடைமுறையில் உள்ள ஏனைய சட்டங்களைவிட இது மேலோங்கி நிற்கும், இருப்பினும் நகர்மன்ற ஊரமைப்புச் சட்டத்திற்கு ஏதேனும் திருத்தம் தேவைப்பட்டால் அதனைக் கொண்டு வருவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 217-ஓ பிரகாரம்,

(1) The Provisions of this Chapter shall have effect notwithstanding anything inconsistent therewith contained in this Act or any other law, custom, usage or contract.

(2) Save as otherwise provided in sub-section (1), the provisions of this Chapter shall, be in addition to, and not in derogation of, any other provisions of this Act.

என்று சொல்லப்படுகிறது. இரண்டு சட்டங்களையும் பார்க்கும்போது அமைச்சரவர்கள் ஒன்றை இங்கே குறிப்பிட்டார்கள். இதற்குத் தகுந்த ஒரு சட்டமுன்வடிவைப் பின்னாலே கொண்டு வரலாமென்று இந்த இடத்திலே யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் நீங்கள் அப்படிச் சட்டம் கொண்டுவரும்வரை நிகழக்கூடிய அந்தக் குழப்பத்திற்கு யார் பதில் சொல்லப் போகிறார்கள்? எப்போது அதற்கு நாம் தீர்வு காணப் போகிறோம் என்பதை உடனடியாகச் சிந்திக்க வேண்டிய ஒரு காலகட்டத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே இது போன்ற நிலை வரும்போது, பொதுவாக நாம் சட்டம் இயற்றுகிறபோது இரண்டு சட்டங்

களுக்கும் முரண்பாடு வராத வகையில் இயற்றி இருக்க வேண்டும். ஆகவே இந்த இரண்டு சட்டங்களிலே Town and Country Planning Act நிலுவையில் இருக்கப் போகிறதா அல்லது District Municipalities Act நிலுவையில் இருக்கப் போகிறதா என்பதை அரசு உடனடியாகத் தீர்மானித்தாக வேண்டும். இந்தக் குறையை நிவர்த்திக்க உடனடியாகச் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக இன்னும் ஒன்றைக் குறிப்பாகச் சொல்ல வேண்டும். District Municipalities Act பற்றி இப்போது கொண்டு வந்துள்ள பில்லில் Hill stations மலைவாழ் இடங்கள் என்று சொல்லுகிறீர்கள். எந்தெந்த மலைவாழ் பகுதிகள் இந்தச் சட்டத்தின்கீழ் வரும் என்று நிர்ணயித்துச் சொல்லவில்லை. பொதுவாக ஊட்டியை மனதிலே வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தை இயற்றுகிறீர்கள். இது ஊட்டிக்கு மட்டும்தான் பொருந்துமா அல்லது வேறு மலைகளுக்கும் பொருந்துமா? Hill Stations என்று பொதுவான நோக்கத்தில் சொல்லியிருக்கிறீர்கள். அப்படிப் பார்த்தால் என்னுடைய மாவட்டத்தில் இருக்கக்கூடிய சின்னச் சின்ன மலைகள்—ஏலகிரி மலை, நக்கணா மலை, காவலூர், செங்காநத்தம், பாலமதி போன்ற மலைக் கிராமங்களில் எல்லாம்கூட அனுமதியைப் பெற்ற பின்தான் கட்டிடம் கட்ட வேண்டும், சிறு விவசாயிகள்கூட அரசுக்கு மனுப் போட வேண்டும் என்று சொன்னால் அது சற்றும் பொருந்தாத, இயலாத காரியமாக இருக்கும். ஆகவே இந்த சட்ட முன்வடிவை நீங்கள் கொண்டுவருகிறபோது, தமிழகத்தில் இருக்கிற எந்தெந்த மலைவாழ் இடங்களை இந்தச் சட்டத்திற்கு உட்படுத்துகிறீர்கள்? ஊட்டி, ஏலகிரி மலை, கொடைக்கானல் போன்ற மூன்றோடு இதை நிறுத்திக் கொள்கிறீர்களா, அல்லது சின்ன சின்ன மலைக் கிராமங்களுக்கும் இது பொருந்துமா, என்பதை நீங்கள் சொல்லவில்லை. இந்த சந்தேகச் சூழ்நிலை நிலவுகிற காரணத்தாலே, ஏழை எளிய மக்கள் எல்லாம் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் இந்த இடத்திலே சொல்லியாக வேண்டும்.

பிற்பகல் 6.40

இந்தச் சட்டம் கொண்டுவருகிறபோது, லைசன்ஸ் காலம் ஒரு ஆண்டுக்குத்தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு ஆண்டுக்கு லைசன்ஸ் கொடுத்தால் பொதுவாக அதற்குள் வீடுகள் கட்டிவிட முடியாது. ஆகவே லைசன்ஸ் காலவரை ஆண்டு என்று மாற்றியமைக்கப்பட வேண்டும்.



அடுத்து, சிவில் கோர்ட்டுக்கு இருக்கிற அதிகாரத்தை நீங்கள் முழுமையாக இதில் தடை செய்திருக்கிறீர்கள். இதில் யாராவது ஒருவர் பர்மிஷன் கேட்டு, அவருக்குக் கொடுக்கத் தவறினால் சிவில் கோர்ட்டுக்குச் சென்று ஆர்டர் வாங்கி விடுவார் என்ற காரணத்தாலோ என்னவோ ஐகோர்ட்டுக்குத் தான் வரவேண்டும், அல்லது அரசுக்குத்தான் அப்பீல் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அரசுக்கு ஒருவர் மனு போட்டு, ரெவயூ பெட்டிஷன் போட்டு அதற்குத் தீர்வு காண்பதற்குள் வேறு எங்காவது அந்தப் பணத்தைப் போட்டு வீடு கட்டி விடலாம். அரசுக்கு மனு போட்டு சடைசியாக நீங்கள் அனுமதி தருவதற்குள் சிறு சிறு ஏழைக் குடும்பங்கள், ஏழை விவசாயிகள் எல்லாம் கட்டமுடியாது. ஆகவே இந்தச் சட்டத்தைத் திருத்துகிறபோது ஓரளவுக்கு தளர்த்தினால் தான் ஏழை மக்கள் பிழைப்பதற்கு வழிவகை செய்யமுடியும்.

இந்தச் சட்டத்தில் இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும். இந்தச் சட்டம் கொண்டு வந்த பின்னால், நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற கூடலூரில் இருக்கிற பிரச்சினையையும் பார்க்க வேண்டும். அது மிகவும் தாழ்வான பகுதி. அந்தப் பகுதிக்கும் இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டு, அங்கேயிருக்கிற மக்கள் வீடுகளைக் கட்ட முடியாமல் இன்றைய தினம் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் அனுமதி கேட்டு அலைந்து அலைந்து போய், முடியாமல் போன காரணத்தினாலே போராட்டத்தில் ஈடுபட்டு, இன்றைய தினம் அங்கே பலபேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இந்தச் சட்டம் எந்தெந்த மலைப் பகுதிகளுக்குப் பொருந்தும் என அரசு தெளிவாகச் சொன்னால்தான் குழப்பம் தீரும். ஆகவே இதையெல்லாம் தவிர்த்து, இதற்குத் தகுந்த சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து, பிறகு முழுமையான சட்டமாக இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதிகளையும், சுற்றுப் புறச் சூழல்களையும் பாதுகாப்பதற்கு அவசர நடவடிக்கைகள் தேவை எனக் கருதி, இந்தச் சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்திருப்பதாக இதன் 'நோக்கங்களில்' குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இதில் உள்ள பல பிரிவுகளைப் பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக பெரிய மலைப் பகுதிகளுக்கு

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 செப்டம்பர் 25

மட்டும் பொருந்துமா, மற்றப் பகுதிகளுக்கும் பொருந்துமா என்ற கேள்வியைக் கேட்டார்கள். மலைகளில் வாழ்கிறவர்கள் வீடு கட்டுவது என்றால் இனிமேல் முன் அனுமதி இல்லாமல் வீடு கட்ட முடியாது என்பது பொதுவாக, Prohibition of construction or re-construction of buildings without Licence என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போதும் கூட தோற்றப்பொலிவைக் கெடுக்கின்ற நோக்கத்தோடு வீடுகள் கட்டப் படுமானால், அதைத் தடுப்பதற்குப் போதிய அதிகாரம் அங்கே இருக்கிற நிர்வாகத்திற்கு இருக்கிறது. அது மட்டுமல்ல. வீடுகளே கட்டக் கூடாது என்று சட்டம் வந்து விட்டது என்று அந்தப் பகுதி மக்கள் பயப்படுகிறார்கள். நீலகிரி என்பது நான்கு மலைகளைக் கொண்டது. நாகுபெட்டா என்று சொல்வார்கள். நீலகிரி மலையில் வாழ்கிற மக்கள் மத்தியில் இதனால் பெரிய பீதி உருவாகியிருக்கிறது. அவர்களுடைய குடும்பங்களில் இளைஞர்களுக்கு—எவ்வளவு இளைஞர்களாக இருந்தாலும் திருமணம் ஆனவுடனே தனித் தனியாகத்தான் அவர்கள் வீடு கட்டிக் கொண்டு வாழ்வார்கள். 10 ஏக்கர் பூமி உள்ளவர்கள், இரண்டு பையன்களுக்கு திருமணம்செய்வித்தால், தனித் தனியாகத்தான் வாழ்ந்தாக வேண்டும். தனித் தனியாகத்தான் வீடுகள் கட்டிக் கொள்வார்கள். இதனால் இன்றைய தினம் அவர்கள் வீடு கட்டிக் கொள்ள முடியாத. நிலை ஏற்பட்டிருக்கிறது என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

"No person other than a Central or a State Government or a local authority shall construct or reconstruct a building on any land or put to use any agricultural land to any non-agricultural purpose or carryout any engineering, . . . ." அதை வேண்டுமானால் விட்டு விடலாம்.

"Explanation:—For the purpose of the provisions of this chapter 'agriculture' includes horticulture, fruit-growing, seed-growing, animal husbandry, agriculture, pisciculture and sericulture and 'agricultural' shall be construed accordingly." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே 10 ஏக்கர் தேயிலைத் தோட்டம் இருந்தாலும், பழத்தோட்டம் 4 ஏக்கர் இருந்தாலும் அவர்கள் இரண்டு பேராக இருந்தாலும் கூட தனித் தனியாகத் தான் இருப்பார்களே தவிர, ஒன்றாக வாழ்கின்ற பழக்கம் மிகக் குறைவு. ஆகவே அந்த மலையில் இருக்கிற மக்கள் மத்தியில் பெரிய பீதி ஏற்பட்டிருக்கிறது. அங்கே வாழ்கிற மக்களில் பெரும்பாலானவர்கள் பழங்குடியினர். அடுத்து தாழ்த்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட [illegible] பின்தங்கிய சமுதாயத்தையும், பிற்பட்ட சமுதாயத்தையும் சேர்ந்தவர்கள் தான் வாழ்கிறார்கள். அவர்களோடு, கட்டிடத் தொழிலாளர்கள் ஏராளமாக கீழேயிருந்து மேலே போய்க் குடியேறியவர்கள் இருக்கிறார்கள். இதுபோல



1992 செப்டம்பர் 25] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

சென்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு ஒவ்வொரு வீடு கட்டும் போதும் முன் அனுமதி பெற்றுத்தான் கட்ட வேண்டும். எந்தவிதமான வியாபாரம் செய்வதாக இருந்தாலும் அதற்கு எந்தவிதமான கட்டிடமும் கட்டக்கூடாது என்பது அவ்வளவு ஏற்புடையதாக இருக்குமா என்று தெரியவில்லை. அந்தப் பகுதியில் வாழ்கிற மக்களுக்கு மட்டுமல்லாமல், அங்கே பெல்ட் ஏரியா என்ற பிரச்சினையும் வருகிறது. கூடலூரில் இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று உறுப்பினர் திரு. ஞானசேகரன் கூட குறிப்பிட்டார். முதுமலை வனவிலங்கு சரணாலயம் அங்கே இருக்கிற காரணத்தால் . . . .

பிற்பகல் 6-45.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. கே. ஆர். ராஜு.

*<u>திரு. கே. ஆர். ராஜு:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியில் பெல்ட் ஏரியா என்று கூடலூருக்கு எந்த விதமான சட்டமும் கொண்டு வரவில்லை. ** கூடலூரில் மொத்தம் 17 பஞ்சாயத்துக்கள் உள்ளன; அவற்றில் 3, 4 பஞ்சாயத்துக்களிலுள்ள** கூடலூரில் தங்கிக் கொண்டு வருகிறார்கள். ** என்பதையும் . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> **என்று கூறியவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதேபோல்** என்பதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மற்றபடி, பெல்ட் ஏரியா என்பது இருக்கிறது. பெல்ட் ஏரியாவைப்பற்றி நீங்கள் சொல்லுங்கள்; அது உங்கள் பகுதி; அதைப்பற்றிச் சொல்லுங்கள்.

*<u>திரு. கே. ஆர். ராஜு:</u> 17 பஞ்சாயத்துக்களிலும் அந்த மாதிரி தகராறு பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்:</u> அதாவது அந்த வனவிலங்கு சரணாலயம், முதுமலை வனவிலங்கு சரணாலயம் தமிழ்நாட்டில் இருக்கிறது. அதையொட்டி பண்டிபூர் வனவிலங்கு சரணாலயம் ஒன்று இருக்கிறது. அது கர்நாடகாவில் இருக்கிறது. இன்னொரு வனவிலங்கு சரணாலயம் வயநாடு. அது கேரளாவில் இருக்கிறது. மூன்றும் ஒரே இடத்திலே சந்திக்கிறது. அந்த இரண்டு வனவிலங்கு சரணாலயங்களிலும் இல்லாத பிரச்சினை

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

முதுமலையிலே இருக்கிறது. அங்கே பெல்ட் ஏரியா என்பதே கிடையாது. தாராளமாக நீங்கள் எது வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டால் யாரும் அங்கே பதட்டம் அடையப் போவதில்லை. பீதி அடையப் போவதில்லை. ஆனால் இன்றைய தினம் அங்கே பீதி நிலவுகிறது. வீடுகள் கட்ட முடியாது; ஏற்கெனவே வீடுகள் கட்டி இருந்தாலும் அதற்கு மின்சாரம் வாங்க முடியாது. இதுபோன்ற பதட்டங்கள் எல்லாம் இருக்கின்றது. அந்தப் பதட்டத்தைத் தணிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சொல்கிறேன். அதுமட்டுமல்ல. குன்னூர் கோத்தகிரி....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, முதுமலை போன்ற சரணாலயங்களில் பெல்ட் ஏரியா என்று அங்கே அறிவிக்கப்படவில்லை. அங்கே கேரள மாநிலத்திலே இருந்து ஆயிரக்கணக்கான பேர் வந்து வனத்துறையில் இருக்கின்ற இடங்களை, அங்கே இருக்கின்ற பல்வேறு வனத்துறையைச் சார்ந்த நிலங்களை எல்லாம் என்க்ரோச் செய்து விட்டு அவர்கள் அங்கே வீடுகள் கட்டுவதன் வாயிலாகவும், அங்கே தேயிலைத் தோட்டங்கள் போடுவதன் வாயிலாகவும் அங்கே பல்வேறு பதட்டங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்களே தவிர அதுபோன்ற கருத்துக்களை அவர்கள்தான் மக்களிடத்திலே ஒரு பீதி ஏற்படுகின்ற அளவுக்கு உருவாக்கிக்கொண்டு இருக்கிறார்களே தவிர, இந்த அரசு இதுவரையிலேயும் எந்தவிதமான நடவடிக்கையும் அந்தப் பகுதியிலே எடுக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள்; அதையே நானும் குறிப்பிடுகிறேன்.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> வனங்களை அழிக்கக் கூடாது என்று செல்லுங்கள்; நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் ஏற்கனவே அங்கே அந்தப் பகுதியிலே குடியேறி வேளாண்மை செய்து கொண்டிருப்பவர்களை அந்த கேட்டகரியில் சேர்க்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேரளாவிலிருந்து வருகிறார்கள் என்று சொன்னால், கேரளாவினுடைய பார்டர் அது. அது நிலாம்பூர் ஜமீனுக்கு சொந்தமான பூமி. நீங்கள் சொல்கின்ற பகுதி எல்லாம் முன்பு நிலாம்பூர் என்று கேரளாவிலே இருக்கிறது. நிலாம்பூர் ஜமீனுக்கு சொந்தமான பூமிகளாகத்தான் அந்த பூமிகள் இருந்தன. அதனாலேதான் அந்தப் பகுதியிலே கேரளாவைச் சார்ந்தவர்கள் நிறைய பேர் வாழ்கிறார்கள்; அதிலே ஒன்றும் தவறு கிடையாது. அதுமட்டுமல்ல, பழைய வரி வசூல் ரசீதை



வாங்கி பார்ப்பீர்களேயானால் மலையாளத்தில் இருக்கும்; தமிழிலே இருக்காது. அதனால் அவர்கள் மலையாளிகள், கேரளாத்துக்காரர்கள் என்று அர்த்தமல்ல; மலையாளம் பேசுவார்களை என்றாலும்கூட.......

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவதற்கும் நான் குறிப்பிடுவதற்கும் சிறு சிறு மாற்றங்கள் தான் இருக்கின்றன. அவர்கள் தொடர்ந்து அங்கே கேரள மாநிலத்திலே இருந்து வந்து கொண்டே இருக்கிறார்கள். அது நிறுத்தப்படவில்லை. தொடர்ந்து வனத்துறையைச் சேர்ந்த நிலங்கள், அது போல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அங்கே ஜன்மம் லேண்ட்ஸ் என்று சொல்லப்படுகின்ற அந்த நிலங்களில் எல்லாம் வந்து தொடர்ந்து ஆக்கிரமித்துக் கொண்டே இருக்கிறார்கள். இன்றைக்கு 5 ஏக்கர் ஆக்ரமித்தார்கள் என்றால் ஒரு வாரகாலம் கழித்துப் பார்த்தால் 25 ஏக்கர், 30 ஏக்கரை ஒருவரே பிடித்து தேயிலைத் தோட்டங்கள் போட்டுக்கொண்டு இருக்கின்ற காரணத்தினாலே. அதைத் தடை செய்வதன் வாயிலாக ஆயிரக்கணக்கான மக்களைச் சேர்த்து ஊர்வலம் நடத்தி. இது போன்று மக்களிடத்திலே ஒரு தவறான கருத்தை இந்த அரசுக்கு களங்கம் விளைவிக்கின்ற வகையில் உருவாக்கிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6—50

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> அந்த ஜன்ம பூமிகள் பிரச்சனை நீண்டகாலமாக இருக்கிற பிரச்சனை. 1971ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இருக்கிற பிரச்சனை. இன்னும் சொல்லப்போனால் 1969 ஆம் ஆண்டில் வந்த பிரச்சனை. 1971 ஆம் ஆண்டு பூதாகரமான பிரச்சினையாக உருவெடுத்து இன்னும் இருந்து கொண்டிருக்கிற பிரச்சனை. கருணாநிதியுடைய ஆட்சிக் காலத்திலேயும்சரி, பிறகு எம்.ஜி.ஆர் அவர்கள் இருந்த நேரத்திலேயும்சரி, ஏற்கெனவே அங்கே வாழ்ந்துகொண்டு இருப்பவர்கள் ஏற்கெனவே அங்கே வேளாண்மையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள்—அவர்களுக்கெல்லாம் பட்டா கொடுக்கப்படும், எங்களுக்கு பட்டா கொடுக்கப்படும் என்றுதான் அவர்கள் உறுதி அளித்து இருக்கிறார்கள். எனவே, அந்தப் பிரச்சனை எனக்கும் தெரியும். (குறுக்கீடு) முன்பு இருந்தவர்கள் ஏதோ. . (குறுக்கீடு) ஒரு கட்—ஆஃப் டேட் வேண்டுமானால் வையுங்கள், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. புதிதாக வருபவர்களை வரவேண்டாம் என்று நாம் சொல்ல முடியாது. வந்து வனங்களை ஆக்கிரமிக்கக் கூடாது என்று சொல்லுங்கள். அதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்தியாவிலே எந்த மாநிலத்திலே வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் போய் வாழ்வதற்கு வழி தேடிப் போகலாம்,

யாரும் வேண்டாம் என்று சொல்ல முடியாது. வருபவர்களை நீங்கள் வேண்டுமானால் புதியதாக நிலத்தை ஆக்கிரமிக்கக்கூடாது, வனத்தை ஆக்கிரமிக்கக் கூடாது, வனத்தை அழிக்கக்கூடாது என்று அதற்கெல்லாம் தடை விதியுங்கள்—நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் ஏற்கனவே 20 ஆண்டுக்காலமாக 30 ஆண்டுக்காலமாக, பல ஆண்டுக்காலமாக இங்கே வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு நாங்கள் பட்டா கொடுப்போம் என்று கருணாநிதி வாக்கு அளித்திருக்கிறார். எம். ஜி. ஆர். அவர்கள் காலத்தில் வாக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டும். எனவே, அங்கேயிருக்கிற பீதியைப் போக்குகிற வகையில் இந்தச் சட்ட முன்வடிவை நீங்கள் முறையாக அமைப்பதற்கு ஏதுவாக, இப்போது இதை நிறைவேற்றாமல், இதிலே இருக்கிற குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து நிறைவேற்றுவதற்கு, இந்தச் சட்டமுன்வடிவை இந்தக் கட்டத்தில் திரும்பப் பெற்றுக் கொண்டு அல்லது ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்புவதன் மூலமாக, இந்தச் சட்டமுன்வடிவின் காரணமாக அங்கேயிருக்கிற பீதியைப் போக்க முடியும் என்று தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் என்னுடைய விளக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தற்போது உள்ளாட்சி அமைப்புகளில் தனியாரால் கட்டப்படும் கட்டடங்களுக்கு அந்தந்த அமைப்புகளின் நிர்வாக அலுவலர்களால் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. இவைகளை முறைப்படுத்துவதற்கு நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் தனித்தனி சட்ட விதிகள் உள்ளன. தற்போது நடைமுறையில் உள்ள மலைப்பிரதேச சிறப்புக் கட்டட விதிகளைக் கடைபிடிக்காமலும், திட்டமிடாமலும் காளான்களைப் போல கட்டடங்கள் திடீரென்று கட்டப்படுகின்றன. இதனால் மலைகளின் இயற்கை எழிலும், சுற்றுப்புறச் சூழலும் பாதிக்கப்படுகின்றன. இவ்வாறு மலைப்பிரதேசங்களின் இயற்கை எழில் பாதிக்கப்படுவதால் நாட்டின் சமவெளிப் பகுதிகளில் மழை பெய்வது பொய்த்து விடுகிறது. இதனால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படுகிறது; குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது, தமிழ்நாட்டில் மலைப் பிரதேசங்களில் உயிரின வாழ்க்கைச் சூழ்நிலை அனைத்தும் பாதிக்காத வகையில் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய





நடவடிக்கை மிகவும் தேவை என்று தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விரும்புகிறார்கள். இந்த நோக்கத்தை நிறைவேற்ற மலைவாழ் இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கும், மாற்றிக் கட்டுவதற்கும் மற்றும் நிலத்தை பயன் படுத்துவதற்கும் தேவையான உரிமங்கள் அரசு அளவில் மட்டும் வழங்கப்படவேண்டும் என்பதற்காக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டமுன்வடிவு 1920ஆம் ஆண்டு தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் மலைப் பிரதேசங்களில் கட்டடங்கள் கட்டுவதை முறைப்படுத்த XA எனும் புதிய அத்தியாயத்தை இணைக்கிறது. இதன்படி மலைப்பிரதேசங்களில் அமைந்துள்ள நிலத்தில் கட்டடம் கட்டுவதற்கும் பழைய கட்டடத்தை மாற்றிக் கட்டுவதற்கும், நிலத்தை விவசாயம் அல்லாத செயல்களுக்குப் பயன்படுத்துவதற்கும் வருகிற விண்ணப் பங்களை பரிசீலனை செய்து அரசுக்கு பரிந்துரை செய்வதற்காக கட்டடக்கலை மற்றும் அழகுணர்ச்சிக் கூறுகள் காப்புக் குழு ஒன்று அமைக்கப்படும். இந்தக் குழுவில் அலுவலர்கள் அலுவல் சாரா உறுப்பினர்கள் இடம் பெறுவார்கள். தனியாரிடமிருந்து வருகிற விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு நிர்வாக அலுவலர்களால் பரிசீலிக்கப்பட்டு இந்தக் குழுவிற்கு அனுப்பப்படும் அந்த விண்ணப்பங்கள் மலைப் பிரதேசங்கள் சுற்றுச் சூழ்நிலை பாதிக்காதவாறு இருப்பின் இந்தக் குழு அவை களை அரசுக்குப் பரிந்துரைக்கும். அதன் மீது அரசு முடிவு எடுக்கும். இந்தச் சட்டம் தனியார் கட்டடங்களுக்கு மட்டும் அல்லாமல் மத்திய அல்லது மாநில அரசு துறைக் கட்டடங் களுக்கும் இந்தக் குழுவின் பரிசீலனைக்குப் பிறகு தான் அரசால் அனுமதி வழங்கப்படும். குழுவின் பரிந்துரையின்படி விண்ணப் பங்கள் மறுக்கப்பட்டால் அதை மறுபரிசீலனை செய்யும்படி அரசிடம் மறு ஆய்வு 'ரெவியூ' செய்வதற்கும் சட்டத் திருத்தத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மாநில அரசின் மறு ஆய்வு ஆணையை உயர்நீதிமன்றம் சீராய்வு செய்யவும் திருத்தத்தில் வழி செய்யப்பட்டிருக்கிறது உலகமே சுற்றுபுறச் சூழலை பாதுகாப்பதற்கு மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டுள்ள இந்த வேளையில் நமது நாட்டின் இயற்கை எழிலைப் பாதுகாப்பதற்காக தமிழ் நாட்டின் முதல்வர் இன்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவின்படி இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது எனவே, இந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு.

*திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி சட்டத்தை திருத்தினால் மட்டும் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாது. Section III of the Town and Country planning Act should also be amended அந்தவகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை எடுத்துக் கொண்டு வந்தால் நல்லது. ஏனென்றால் Over riding III of the Town and Country Planning Act என்பது ordering செக்ஷனாக இருக்கிறது. நகராட்சி சட்டத்தை மட்டும் திருத்தினால் போதாது. இதையும் திருத்தியாக வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் உள்ள 217(O) படி இது நடைமுறையில் உள்ள ஏனைய சட்டத்தை விட மேலோங்கி இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும் நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தில் ஏதாவது திருத்தம் தேவைப்பட்டால் அரசு அதைக் கொண்டு வருவதைப் பற்றி பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 6·55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம். என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.





பிரிவு 1, முப்புரை மற்றும் நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவயின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஒ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச்சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1992), மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட

மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/1992) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் ''

எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ஜி. பழனிசாமி.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தனி அலுவலர்களை நியமிக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்திருக்கிற தங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். மூன்று மாத காலத்திற்கு தனி அலுவலர்களை நியமிக்க வேண்டும் என்பதற்காக, இந்தச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது. கூட்டுறவுத் தேர்தல்களை நடத்துவதில் முன்னாலே இருந்த அரசு முறைகேடாக நடந்துகொண்டது என்ற பெயரால், இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், நேர்மையான முறையிலே கூட்டுறவுத் தேர்தல்களை நடத்துவோம் என்றுதான் கூறினார்கள். ஆனால் அந்தத் தேர்தலை இன்றைக்கு முறையாக இந்த அரசு நடத்த முடியாத காரணத்தால், இன்றைக்கு நீதிமன்றத்திற்கு.............. (குறுக்கீடு). அது தப்பு. (குறுக்கீடு) ஸ்டே வாங்கியது யார் என்று சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு). நான் சொல்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர் பேசி முடிக்கட்டும்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, இந்த 3 மாத காலத்தில் — தனி அலுவலர்களுடைய பதவியை நீட்டிப்பதற்கான காரணம் என்ன என்று சொன்னால்—பழைய முறையிலே நடந்திருக்கிற தவறுகளை நீக்கி, புதிய மெம்பர்களை சேர்க்காமல் இருந்திருந்தால் நிச்சயமாக இந்தத் தேர்தல் நடந்து முடிந்து இருக்கும். அது தான் கோர்ட் தீர்ப்பும். (குறுக்கீடு). கோர்ட் தீர்ப்பு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய தீர்ப்பிலே கூட நீதிமன்றத்திலே இதுதான் வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகையாலே புதிய மெம்பர்களை சேர்க்கக்கூடாது என்ற உத்தரவு நீதிமன்றத்திலே வழங்கப்பட்டு இருக்கிறது. மே மாதம் 31 ஆம் தேதிக்குள் இந்தத் தேர்தலை நடத்தவேண்டும் என்று அந்தத் தீர்ப்பிலே வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகையாலே, இன்றைக்குக் கூட கூட்டுறவுத்துறையில் புதிய மெம்பர்களைச் சேர்க்கிறபோது, பொதுவாக கூட்டுறவுச் சங்கங்களிலே, அல்லது நாணயச சங்கங்களிலே மெம்பராகச் சேர்க்கிறபோது, இந்தத் தெருவிலே இருக்கக்கூடியவர், அவர் நிலம் வைத்திருக்கிறார், தெருவிலே வசிக்கிறார், வாக்காளர் பட்டியலிலே பெயர் இருக்கிறது, என்று

---

@ 21—9—1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



சொல்லி அவர் மெம்பராகச் சேர்கிறபோது, பணத்தைக் கட்டி கையெழுத்துப் போடவேண்டும் ஆனால், இன்றைய தினத்திலே கூட்டுறவுச் சங்கங்களிலே மெம்பர்களைச் சேர்க்கிறபோது எந்த வார்டைச் சேர்ந்தவர், எந்த ஊரைச் சேர்ந்தவர், எந்தப் பஞ்சாயத்தைச் சேர்ந்தவர் என்ற விவரம் எல்லாம் இல்லாமல் குத்தகை முறையிலே கூட்டுறவுச் சங்கங்களிலே மெம்பர்களைச் சேர்ப்பதோடு மட்டுமல்லாமல், கையெழுத்துப் போடாததினுடைய விளைவாகத்தான் இன்றைக்கு அது கோர்ட்டுக்குப் போய் இருக்கிறது இன்றைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற ஒரு நிர்வாக அமைப்பு இல்லாமல் இருக்கிறது. (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு பழனிசாமி, பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார், முனிவெங்கடப்பன்.

<u>திரு கே. முனிவெங்கடப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசும் போது, உறுப்பினர்களைச் சேர்த்தார்கள் என்று சொல்கிறார்கள். உறுப்பினர்களை யாரும் சேர்க்கவில்லை உறுப்பினர்கள், அவர்களாகவே வந்து, அந்தந்தச் சங்கங்களிலே அவரவர்கள் கட்டவேண்டிய கட்டணத்தைக் கட்டிவிட்டு, உறுப்பினர்களாகச் சேர்ந்தார்களேயொழிய யாரும் அவர்களைச் சேர்க்கவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் (குறுக்கீடு).

<u>திரு ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் மனசாட்சிப்படி சொல்லட்டும் அதேபோல், மாண்புமிகு....

பிற்பகல் 1-00

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அமைச்சரே மனசாட்சிப்படி ஒன்று சொல்வார். அதை இப்போது நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

<u>மாண்புமிகு திரு ஜி. விசுவநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்கள் மனசாட்சியைப் பற்றி பேசுகிறார்கள். மனசாட்சி உள்ளவர்களாக இருந்தால் 1990 ஆம் ஆண்டு தில்லுமுல்லுகள் நடந்தபோது அந்தக் கூட்டுறவுத் தேர்தலின்போது இவர்கள் அந்தக் கட்சியின் தோழமையை விட்டு வெளியேறி இருக்க வேண்டும் தி.மு.க.-வைக் கண்டித்திருக்க வேண்டும். அந்தக் கூட்டணியை விட்டு வெளியேறி இருக்க வேண்டும் அப்போது அந்தத் தில்லுமுல்லுகளைத் தாங்கிக் கொண்டவர்கள் இன்று மனசாட்சியைப்பற்றிப் பேசலாமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடந்தபோது எங்களுடைய கூட்டுறவுச் சங்கத்திலே 8 உறுப்பினர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வெற்றி பெற்ற நேரத்திலே கூட, 4 நியமன உறுப்பினர்கள் வெற்றி பெற்றார்கள் என்று அறிவித்ததுதான் இந்த தி.மு.க. ஆட்சி, அப்படிப்பட்ட அந்தத் தில்லுமுல்லுகள் நடந்த அந்த ஆட்சியில் கூட்டணியாக இருக்கின்றபோது நம்முடைய நண்பர் பழனிசாமி அவர்கள் இப்போது எப்படி மனசாட்சிப்படி பேசுகிறார்கள் என்பதைக் கொஞ்சம் சிந்திக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கூட்டுறவுத் தேர்தலில் பல்வேறு தவறுகள் நடந்திருக்கின்றன. பல்வேறு இடங்களில் முறைகேடுகள் நடந்திருக்கின்றன. இல்லையென்று சொல்லவில்லை. அதை மறுக்கமுடியாது. அதிலேயும்கூட அந்தத் தேர்தலில் எங்களுடைய கட்சி பல இடங்களில் எதிர்த்து நின்று இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், பல்வேறு பஞ்சாயத்துக்களில், பல்வேறு அமைப்புகளில், கம்யூனிஸ்டு கட்சிகள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டு சேர்ந்துகூட அந்தத் தேர்தலில் நின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம், ஏதோ அன்று நடந்ததைச் சொல்ல வேண்டுமென்று சொல்கிறார். திரு. சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் அன்று திராவிட முன்னேற்றக் கழக உடன்பாடு இருந்தபோது இதே சட்டமன்றத்தில் முறைகேடாக வேறு எந்தக் கட்சியிலிருந்தும் உறுப்பினர்களைச் சேர்க்க முடியாத அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகம் நடந்து கொண்டிருக்கிறது என்று பேசுகின்ற போது, இதே மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசாமல் ** இருந்தார்கள்

ஒரு லெட்ஜரைக் கூட நாங்கள் பார்க்க முடியவில்லை. (குறுக்கீடு).

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தை வேண்டாம். பேசாமல் இருந்தார் என்று மட்டும் இருக்கலாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு). திரு. தம்புசாமி இங்கே பார்த்துப் பேசுங்கள். நீங்கள் திசையையே அந்தப் பக்கத்திற்கு திரும்பிவிட்டீர்கள். (குறுக்கீடு). அவர் சொல்கிறார் அன்று நடந்தது என்று. அன்று அவரும் உறுப்பினராக இருந்தார். நீங்களும் இருந்தீர்கள். அதைப்பற்றிப் பேசும்போது கேட்க வேண்டியதாகத்தான் இருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசாமல் இருந்தார் என்றுதான் சொன்னேன். அதே நேரத்தில், காங்கிரஸ்காரர்களையும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களையும் அல்லது வேறு எந்தக் கட்சியிலேயிருந்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர, வேறு யாருமே சேர்க்கப்படவில்லை. அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே சென்று உறுப்பினர்கள் சேர்க்கவேண்டுமென்று நாங்கள் கேட்டால், ஒன்றியச் செயலாளருடைய வீட்டிலே அந்த லெட்ஜர்கள், ரிஜிஸ்டர்கள் மற்றும் புத்தகங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆக அவர்கள் கையெழுத்து போட்டு எல்லோரையும் சேர்த்துவிட்டு, கடைசியில் தேர்தல் நேரம் அந்த நோடிபிகேஷன் டைம் முடிந்த பிறகுதான் அந்த உறுப்பினர் சீட்டுகள், பட்டியல் எல்லாம் அங்கு வந்தது. அப்படிப்பட்ட கொடுமையான நேரங்களில்கூட நாங்கள் பல இடங்களில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருந்தோம். ஆக இப்படிப் பட்ட கொடுமை இந்த நாட்டில், உலகத்தில் எங்கேயுமே நடந்தது கிடையாது. அப்படிப்பட்ட கொடுமைகளைப்பார்த்து இருந்தவர்கள் இன்று ஆட்சியைக் குறை சொல்வது நியாயமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆகவே, பழனிசாமி கொஞ்சம் மனசாட்சியோடு இதிலே பேசுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது இப்போது ஏதோ குற்றம் சுமத்த வேண்டுமென்பதற்காக அல்ல. இது ஏதோ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடைய அமைப்பாக இருந்தால் தான் இந்த நிர்வாகம் முழுமையாக, செம்மையாக, மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். இல்லையென்றால் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் இதுபோன்ற அவையிலே விவாதிக்க வேண்டிய நிலையிலே, அங்கே விட்டுவிட்டு, இங்கே விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அதே போல்தான் உள்ளாட்சி அமைப்புகளிலேயும், நான் சொல்வது இந்தச் சட்டமன்றக் கூட்டத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக ஒரு கமிஷனையே அமையுங்கள். இங்கே இருக்கின்ற

சட்ட மன்ற உறுப்பினர்கள், அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களையும், மாண்புமிகு உறுப்பினர் சிங்காரத்தையும் சேர்த்து ஒரு கமிஷனை அமையுங்கள். ஒரு சட்டமன்றக் குழுவை அமையுங்கள். வேண்டுமென்று சொன்னால், ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு நேரடியாக வந்திருக்கிற, பதிவு செய்யப்பட்டிருக்கின்ற, சேர்க்கப்பட்டிருக்கின்ற அங்கத்தினரை, ஏதாவது ஒரு வார்டிலே, ஒரு பஞ்சாயத்திலே இருக்கிறார்களா என்பதைப் பாருங்கள். ஆண்டாண்டுகாலமாக பல இடங்களில் இந்தப் பஞ்சாயத்திலே இருக்கின்ற ஒரேயொரு நபர் பெயர் 10 கூட்டுறவுச் சங்கங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த நிலைகளில் நான் இதை ஆதாரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இன்னொன்றையும் சொல்லி முடிக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பாயிண்ட் ஆப் ஆர்டர். திரு. இராமநாதன்.

<u>திரு. இராம. இராமநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைத் தெளிவாக நினைவுகூற விரும்புகிறேன். நான் முன்பே இதே கேள்வியைக் கேட்டபோது பேரறிஞர் அண்ணா பட்டு சொசைட்டி என்கின்ற பட்டு நெசவாளர் சொசைட்டியிலே முன்னாள் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அங்கே இடம் வகித்தார்கள். ஆனால் அவர்கள் செய்கின்ற தொழில் அந்த பட்டு நெசவுத் தொழில் இல்லை. இதைப்போன்றவர்கள் இங்கே உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்று நான் சொன்னபோது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், என்னுடைய தொகுதியிலே ஒரு பாராளுமன்ற உறுப்பினர், வழக்கறிஞர், ரொட்டி கடையிலே ரொட்டி வியாபாரம் செய்கிற அந்த தொழிற்சங்கத்திலே உறுப்பினராக இருக்கிறார் என்று அன்றைக்கு திட்டவட்டமாக சொன்னார்கள். அப்படி அவர்கள் எல்லாம் சேர்ந்துதான் — முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, இப்போது பேசிக்கொண்டிருக்கக்கூடிய அந்த உறுப்பினரும் சேர்ந்து அன்றைக்கு இதுபோன்ற நிலைமைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள் என்பதை தெளிவாக சொல்ல விரும்புகிறேன். இதைவிட இப்போது எந்தக் காரியமும் அதிகமாக செய்துவிடவில்லை என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 7-05

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ஜி. பழனிசாமி.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய முறையிலே புதிய உறுப்பினர்களை சேர்த்ததை நீக்கி நீங்கள் தேர்தல் நடத்துவதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.





<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. சோ பாலகிருஷ்ணன்.

<u>திரு. சோ. பாலகிருஷ்ணன்:</u> பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சட்ட திருத்தத்தில் தனி அதிகாரிகளுடைய காலத்தை நீடிப்பதற்காக கொண்டு வரப்படுகிற இந்தச் சட்டத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் என்பது ஒரு உயிர்நாடியான ஏழை எளியவர்களுடைய வாழ்வில் அவர்களுடைய அன்றாட தேவைகளை பூர்த்தி செய்கின்ற ஒரு நல்ல இயக்கம் கூட்டுறவு இயக்கம். இன்று தமிழகத்தைப் பொறுத்தவரையில், 10, 15 ஆண்டுகளாக கூட்டுறவு தேர்தலே நடைபெறாமல் இருந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலே, கூட்டுறவுக்கு ஒரு தேர்தல் நடத்தினார்கள். அந்த தேர்தலில் கூட்டுறவுத் துறையில்— கூட்டுறவு என்றாலே அதில் ஓட்டு போட கடன்காரர்களாக இருக்கக்கூடாது என்பது அதனுடைய அடிப்படைத் தத்துவம். ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எவ்வளவு கடன் இருந்தாலும், அவர்கள் வாக்கு அளிக்கலாம் என்ற ஒரு சட்டத்தைப் போட்டு ஒரு ரூபாய் மெம்பர், 5 ரூபாய் மெம்பர் எல்லாம் ஓட்டுப் போடலாம் என்ற சூழ்நிலையை உருவாக்கி தேர்தலை நடத்தினார்கள். ஆனால் தேர்தல் நடந்த முறை மிக ஒழுக்கக் கேடாக, இந்த நாடே கண்டு சிரிக்கின்ற அளவுக்கு அவர்கள் நடத்தினார்கள்.

என்னுடைய தொகுதியில் ஒரு கூட்டுறவு தேர்தல் அதிகாரி, ஏற்கெனவே இருந்த சட்டமன்ற உறுப்பினருடைய சொல்லைக் கேட்டு, சட்டப்படி தேர்ந்து எடுக்கப்பட்ட கூட்டுறவுத் தலைவரை செல்லாது என்று வெளியிலே வந்து அறிவித்தார்கள். அது மட்டும் அல்லாமல் ஒரு தொகுதியில், ஒரு கூட்டுறவு சங்கத்தில் தேர்ந்து எடுக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒரு உறுப்பினருடைய ஓட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்குத் தேவைப்பட்டது. அவர் நான் நிச்சயமாக உங்களுக்கு வாக்களிக்க மாட்டேன் என்று உறுதியாக சொல்லிவிட்டார். உடனே அவருடைய மனைவியைக் கடத்திக் கொண்டு போய் ஒரு இடத்திலே வைத்து விட்டார்கள். அவர் வேறு வழி இல்லாமல்— அந்த நேரத்தில் நாங்கள் பரமக்குடி நகரத்தில் ஒரு பெரிய மாநாடு நடத்திக் கொண்டிருந்தோம். அதற்கு எங்களுடைய தலைவர் மூப்பனார் அவர்கள் வந்திருந்தார்கள். அவரிடம் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வந்து, எங்களுடைய குடும்பத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டது. கூட்டுறவுத் துறையில் எங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் தி.மு.க.விற்கு ஓட்டு போடுகிறேன் என்று உறுதி சொன்னால் ஒழிய அவருடைய மனைவியை விட மாட்டோம் என்று ஒளித்து வைத்திருக்கிறார்கள். இதற்கு

நீங்கள் வழி காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். தலைவர் மூப்பனார் அவர்கள் அந்தக் கூட்டத்திலேயே அறிவித்தார்கள். நான் சென்னை திரும்புவதற்குள்ளாக அந்த அம்மையாரை விடுதலை செய்யாவிட்டால், நான் சென்னையில் என்ன செய்வேன் என்று தெரியாது என ஒரு போர்க் கொடியை எழுப்பினார்கள். அதன் காரணமாக மறுநாளே போலீஸ் தலையிட்டு அந்தப் பெண்ணை விடுதலை செய்தார்கள். இவையெல்லாம் தமிழகத்தில் கூட்டுறவுத் தேர்தலிலே நடந்த அக்கிரமங்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுகள். நம்முடைய அண்ணா தி.மு.க.வினரும் சமீபத்தில் கூட்டுறவுத் தேர்தலை அறிவித்தார்கள்.

நாங்கள் எல்லாம் நியாயமாக நேர்மையாக தேர்தல் நடக்கும் என்று ஆர்வத்தோடு கூட்டுறவுத் தேர்தலுக்கு தயாராக இருந்த நேரத்தில், தேர்தல் அதிகாரிகளைச் சந்தித்தால், அந்த பிரவேச புஸ்தகம், பில் புஸ்தகம் எல்லாம் நாங்கள் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வினுடைய ஒன்றியச் செயலாளரிடத்திலே கொடுத்து விட்டோம் என்று சொல்லி விட்டார்கள். அப்படி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லாத சூழ்நிலையை இந்த கூட்டுறவுத் தேர்தலில் உருவாக்கி விட்டார்கள் என்பதை நான் மிகப் பெரிய குற்றச்சாட்டாக கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

பிற்பகல் 7–10

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்கள், அவர் ஒரு சங்கத்திற்குச் சென்றபோது அங்கே உறுப்பினரைச் சேர்க்க முடியாமல் திரும்ப வந்ததாகச் சொல்கிறார். பில் புத்தகத்தை யாரோ எடுத்துக்கொண்டு போனதாகச் சொல்கிறார். இதுவரை அப்படிப்பட்ட புகார் எங்கும் வரவில்லை. கோர்ட்டுக்குச் சென்றவர்கள் கூட அப்படிப்பட்ட புகாரைச் சொல்லவில்லை. உண்மையிலேயே அப்படிப்பட்ட புகார் வந்திருந்தால் உறுப்பினர் அன்றே அங்கே சம்பந்தப்பட்ட டி.ஆர்., ஜே.ஆர். இருக்கிறார்களே அவர்களிடத்தில் சொல்லியிருக்கலாம். என்னிடத்திலும் சொல்லியிருக்கலாம். இதுவரை அப்படிப்பட்ட புகாரை யாரிடத்திலும் சொல்லவில்லை. எந்த ஊரில் நடந்தது என்பதை இப்பொழுதாவது சொல்லட்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் கேட்டிருக்கிறார்கள். அதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. கோவிந்தராசு உட்காருங்கள். அமைச்சர் கேட்டிருக்கிறார். அதற்கு அவர் பதில் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுங்கள்.



திரு. சோ. பாலகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிறந்த கிராமமான என்னுடைய செம்மங்குடி கூட்டுறவுச் சங்கத்தில் நானே உறுப்பினராகச் சேர்வதற்கு முயற்சி செய்த நேரத்தில் அங்கே இருக்கின்ற செயலாளர் உங்களைக் கூட உறுப்பினராக சேர்க்கின்ற வழியை என்னால் செய்ய முடியவில்லை என்று ஆதங்கத்தோடு சொன்னதை நான் எந்த இடத்திலும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். இதெல்லாம் நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் இப்போது தேர்தல் நின்று விட்டது. நான் உங்களுக்குச் சொல்கின்ற ஒரு கோரிக்கை. . . . . .

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உறுப்பினராகச் சேர்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இவர் உறுப்பினராக இருந்தாரா, இல்லையா என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே. இந்தக் கூட்டுறவுத் தேர்தல் என்பது தயவு செய்து நீங்கள் இதில் கட்சியைப் புகுத்தாதீர்கள். ஏன் என்றால் நாங்கள் எல்லாம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே 20 ஆண்டுக் காலம் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். திரு சோ. பாலகிருஷ்ணன் பேசுங்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: கூட்டுறவுத் தேர்தல் என்பது இந்த நாட்டு மக்களுக்கு அத்தியாவசிய பண்டங்கள் எல்லாம் கிடைக்கின்ற வகையிலும் நம்முடைய அரசாங்கம் போடுகின்ற, மத்திய மாநில அரசாங்கம் போடுகின்ற ஐந்தாண்டுத் திட்டங்கள் அத்தனையும் மக்களுக்குச் சேர வேண்டுமானால் அது கூட்டுறவுச் சங்கம் மூலமாகத்தான் சேர்ந்தாக வேண்டும். ஆகவே தயவு செய்து இதில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், தி.மு.க. என்ற சூழ்நிலையை எல்லாம் உருவாக்காமல் உண்மையான பொதுமக்கள், உண்மையான நல்லவர்கள், பெருந்தனக்காரர்கள் எல்லாம் சேர்த்து, ஏனென்றால் இதில் பணம் புழங்குகின்ற காரியம் என்ற சூழ்நிலையில் ஊரில் இருக்கின்ற பெரிய மனிதர்கள் தரமானவர்கள். நாணயமானவர்கள் எல்லாம் கூட்டுறவுச் சங்கத் தலைவராக எடுக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமெறு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அதோடு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் . . . . . . . . (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்கார்ந்து கொண்டே பேசக்கூடாது. திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொலகின்றபோது நாணயமானவர்களை கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினராகச் சேர்க்க வேண்டுமென்று சொன்னார். ஆனால் கட்சியிலே இருப்பவர்கள் நாணயம் இல்லாதவர்கள் என்று சொல்ல விருப்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கட்சியிலே அதாவது கூட்டுறவுச் சங்கத்தில் சேர்க்க வேண்டுமென்றால், அவர்கள் தலைவராக வரவேண்டுமென்றால் 100 பேர் மேலே கடனைப் போட்டு எடுத்துக்கொண்டு கடைசியில் இது அவ்வளவும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று விரும்புகிறார்களே அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஆகையினால் தான் அவர் கட்சியைப் பற்றி எல்லாம் சொல்லாமல் நாணயமானவர்களை—நாணயமானவர்கள் என்றால் பல பேருடைய பேரை போட்டு அவர்கள் பேரில் கடனை வாங்கி தானே எடுத்துக் கொண்டு கடைசியிலே அரசாங்கத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்களே அப்படி எத்தனையோ பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அதைத்தான் அவர் குறிப்பிடுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவா: மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே சேர்கின்ற உறுப்பினர்கள் எப்படிப்பட்ட இயல்புடையவர்களாக இலக்கணம் உடையவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதிலே குற்றச்சாட்டு ஒன்றும் இல்லை. அவர்கள் எப்படிப்பட்டவர்கள் வரவேண்டுமென்று எண்ணங்களைச் சொல்கின்றார். எண்ணங்களைச் சொல்கின்றபோது மறுக்க வேண்டிய அவசியம் இல்லை. நாணயமானவர்கள் தான் இருக்க வேண்டும். நேர்மையானவர்கள் தான் இருக்க வேண்டும். உண்மையானவர்கள் தான் இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் தான் இருப்பார்கள்.

பிற்பகல் 7-15

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிக அருமையாக என்னுடைய கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதிலே அரசியல் கட்சிக்காரர்களும் நாணயமாக இருப்பவர்களும் அதிலே வருவதற்கு நான் எந்தவிதமான இடைஞ்சலாக சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உணவுத் துறை அமைச்சராகவும் இருப்பதால் நான் சில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். நேற்று கூட எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் நம்முடைய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு பெரிய பாராட்டைத் தெரிவித்தார்கள். உணவுத் துறையில் ஒரு புதிய முறையை உருவாக்கியிருக்கிறார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்த உணவுப் பண்டங்கள் எல்லாம் போய்ச் சேருவதற்கு மிக கவனமாக அந்த உணவு பண்டங்கள் அத்தனையும் கூட்டுறவுக் கடைகளுக்குப் போய்ச் சேருகிற வரை மிக அருமையாக ஏற்பாடுகளை எல்லாம் செய்திருக்கிறார்கள். ஆனால் அங்கே போய்ச் சேர்ந்த பிறகு பல ஊழல்கள் நடக்கின்றன; அங்கே ஒழுங்காக மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. இதையெல்லாம் நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தடுக்க வேண்டும். இந்த கூட்டுறவுத் துறையைப் பற்றி நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். அந்த பகிர்வு முறை; கூட்டுறவுத் துறைகளில் நம்முடைய அத்தியாவசியப் பண்டங்களை பகிர்ந்து கொடுப்பது மட்டும் வெற்றிகரமாக நடந்து விட்டால் இந்த நாட்டிற்கு அது ஒரு மிகப் பெரிய சாதனை என்று கூட சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த உணவு பண்டங்கள், அத்தியாவசிய பண்டங்கள் அனைத்தும் மக்களுக்கு நேரடியாக செல்லுகின்ற அளவுக்கு அதை ஒரு செம்மைப்படுத்தி செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவில் 3 மாத காலம் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். அதற்கான காரணத்தையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். கூட்டுறவுத் தேர்தல்களை உடனடியாக நடத்தி முடிக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு அதற்கான தேதி குறிக்கப்பட்டு நாமினேஷன் கூட போட்டு விட்டோம். ஆகஸ்டு மாதம் 7 ஆம் தேதி நாமினேஷன் முடிந்து சிலயிடங்களில் போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கூட பல மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். ஆனால் அன்றைக்கு சில பேர் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று ஒரு தடை உத்தரவு பெற்றார்கள். அவர்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியும்.

டி.8 53-287—94

1990 ஆம் ஆண்டு தேர்தல் என்ற பெயரால் ஒரு நாடகத்தை நடத்தி பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களைக் கைப்பற்றியவர்கள் தான் இன்றைக்கு அப்படிப்பட்ட அளவுக்கு நூற்றுக்கு 90 சதவீதம், 95 சதவீதம் வெற்றி பெற முடியாது என்ற பயத்தின் காரணமாக ஒன்று தேர்தல் நடந்தால் அவர்கள் வெற்றி பெற வேண்டும் இல்லை என்றால் தேர்தலே நடக்கக் கூடாது என்று நினைக்கின்ற அன்றைய ஆட்சியாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கோர்ட்டுக்குச் சென்று தடை உத்தரவு பெற்ற காரணத்தால் இன்றைக்கு நின்று இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டில் இன்றைக்குக்கூட வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்மை பொறுத்தவரையில் எவ்வளவு விரைவில் தேர்தலை நடத்த முடியுமோ அந்த அளவுக்கு விரைவாக நடத்துவதற்கு தயாராக இருக்கிறோம். வாடிக்கையாக மாநில அரசு தேர்தலை நடத்த மாட்டோம் என்று சொல்லும், எதிர்க்கட்சிக்காரர்கள் தேர்தல் வேண்டும் என்று போராட்டம் நடத்துவார்கள். ஆனால் இங்கே தலைகீழாக நடந்துகொண்டிருக்கிறது. நாங்கள் தேர்தலை நடத்த வேண்டுமென்று, வேகமாக நடத்த வேண்டுமென்று கோருகிறோம்; மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கோருகிறார்கள். ஆனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் நீதிமன்றத்திற்குப் போய் ஓடி ஒளிந்து கொண்டு தேர்தலைச் சந்திக்கப் பயப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட சூழ்நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

இங்கே பேசிய நமது மாண்புமிகு உறுப்பினர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. பழனிசாமி அவர்கள் இன்று தேர்தலை முறையாக நடத்த முடியாத காரணத்தால் நின்று போய் விட்டது என்று சொன்னார்கள். தேர்தல் அறிவித்து நடக்கவே ஆரம்பிக்கவில்லை. அவர்கள் மேலும் ஒரு குற்றச்சாட்டை இங்கே சொன்னார்கள், உறுப்பினர்களைச் சேர்ப்பது பற்றி. நான் உங்களுக்கு தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சென்ற முறைக்கும் இப்போதைக்கும் 2 முக்கியமான மாறுதல்களைச் செய்தோம். ஒன்று அன்றைக்கு பல சங்கங்களில் தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெறாமல் மைனாரிட்டியாக இருந்த இடத்திலே நாமினேஷன் என்ற பெயரால் அவர்களை மெஜாரிட்டியாக மாற்றி ஜனநாயகத்தை தலைகீழாகப் புரட்டி எல்லா சங்கங்களையும் கைப்பற்றினார்கள். அதை இப்போது அடியோடு நீக்கிவிட்டோம். நாமினேஷன் கிடையாது, கோ-ஆப்ஷன்தான் உண்டு என்று சொல்லியிருக்கிறோம். இரண்டாவது பெண்களுக்கு 30 சதவீதம், ஆதி திராவிடர்களுக்கு 18 சதவீதம் வெறும் போர்டில் மட்டும் மேனேஜ்மெண்டு போர்டு என்று சொன்னார்களே தவிர உறுப்பினர்களைச் சேர்க்கவில்லை. உறுப்பினர்கள் சேர்ப்பதிலே எல்லோரும் கவனம் செலுத்த வேண்டுமென்று வெளிப்படையாக சொல்லியிருக்கிறோம்,



ஆகவே, 18 லட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு இருக்கிறார்
கள். இதிலே பெரும்பாலும் ஆதி திராவிடர்கள், பெண்கள்
அடங்குவர். அன்றைக்கு 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற
தேர்தலின் போது போலியான உறுப்பினர்கள் தகுதியில்லாத
உறுப்பினர்கள் ஆங்கிலத்தில் 'போகஸ் மெம்பர்' என்று
சொல்லுவோம்.

பிற்பகல் 7-20

அவர்கள் சேர்க்கப்பட்டார்கள். அவர்களுடைய
எண்ணிக்கை 14 லட்சத்து 50 ஆயிரம் ; கிட்டத்
தட்ட 14½ இலட்சம் பேர். அவர்களை நீக்கி இருக்கின்றோம்.
இப்போது கோர்ட்டுக்குச் சென்றவர்கள், அதில் யாரும் தவ
றான உறுப்பினர்கள், தகுதியில்லாத உறுப்பினர்களைச் சேர்த்
தார்கள் என்ற குற்றச்சாட்டே கிடையாது. அதே போல,
நீக்கினோமே 14½ இலட்சம் பேர், அதிலே, நாங்கள் நியாய
மான உறுப்பினர்கள், தகுதியான உறுப்பினர்கள், எங்களை
நீக்கி விட்டார்கள் என்று எங்கள்மீது எந்தக் குற்றச்சாட்டும்
கிடையாது, அவர்களுடைய ஒரே குற்றச்சாட்டு நிறைய
உறுப்பினர்களைச் சேர்த்து விட்டார்கள் என்பது உங்க
ளுக்குத் தெரியும், ஜனநாயக நாட்டில் எப்போது தேர்தலை
அறிவிக்கிறோமோ அப்போதுதான் உறுப்பினர்களைச் சேர்க்
கின்றோம். இது வாடிக்கை. அது பொதுத் தேர்தலாக
இருந்தாலும்; உள்ளாட்சி மன்றத் தேர்தலாக இருந்தாலும்,
கூட்டுறவுத் தேர்தலாக இருந்தாலும் எப்போது தேர்தல் வரு
கிறதோ அப்போதுதான் உறுப்பினர்களைச் சேர்க்கின்றோம்.
அப்படித்தான் இப்போதும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதிலே
இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது. இங்கே அருமை
நண்பர், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்
ணன் அவர்கள் சொன்னதைப் போல இந்த கூட்டுறவு இயக்கம்
கட்சிகளுக்கு அப்பாற்பட்டு வளர்க்கப்பட வேண்டும் என்று
இந்த அரசு விரும்புகிறது. இந்தியாவிலேயே மூன்று மாநிலங்
களில் கூட்டுறவு நல்ல முறையில் இருக்கிறது. அதிலே
ஒன்று தமிழ்நாடு. மராட்டிய மாநிலம், குஜராத், அடுத்து
தமிழ்நாடு இருக்கிறது. ஆக, இந்த மூன்றாவது இடம்
அல்லது இரண்டாவது இடத்திலே சில துறைகளிலே இருக்கின்
றோம். இதை மீறி முதல் இடத்திற்கு நாம் வர வேண்டும்.
அந்த அளவிற்கு கூட்டுறவு இயக்கம் பலப்படுத்தப்பட வேண்டும்.
கட்சிகளுக்கு அப்பாற்பட்டு நல்லவர்கள் இதிலே தேர்ந்தெடுக்
கப்பட வேண்டும் என்பதிலே நாம் அக்கறையாக இருக்கின்
றோம். ஆனால் அதே நேரத்தில் தவறு புரிந்தவர்கள் மீண்டும்
இதை அவர்களே கைப்பற்ற வேண்டும்; இல்லையானால்
தேர்தலே நடத்தக் கூடாது என்று சொல்கிறார்களே அவர்
களுக்கு உடந்தையாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.
பழனிசாமி போன்றவர்கள் இன்னும் இருக்கக் கூடாது என்
பதைத்தான் நான் வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.
ஏற்கெனவே தவறு நடந்து விட்டது என்பதை அவர்கள் ஒப்புக்

கொண்டு விட்டார்கள். அப்படி இருந்தும் ஏன் இன்னும் அவர்களை ஆதரித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்ற கேள்வியைத்தான் நான் முன் வைக்க விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் எவ்வளவு விரைவாக, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை வழங்குகிறதோ அவ்வளவு விரைவாக தேர்தலை நடத்துவதற்கு தயாராக இருக்கின்றோம். இதிலே எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் உறுப்பினராகச் சேரலாம். இன்னொன்றைக் கூட சொன்னார்கள். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கத்திலே உறுப்பினராகச் சேர்கிறார் என்று. அப்படிச் சேருவதற்குத் தடை கிடையாது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே உறுப்பினராக இருக்கின்ற திரு. பழனிசாமி அவர்கள் மார்க்கெட்டிங் சொசைட்டியிலே சேர வேண்டுமென்று சொன்னால், சேரலாம். அர்பன் வங்கியிலே சேர வேண்டுமென்றால், சேரலாம். யாரும் அதைத் தடுக்க முடியாது. அப்படிப்பட்ட தடையும் இந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, உறுப்பினர்களைச் சேர்ப்பதில், யாரையும் சேர்க்கக் கூடாது என்று அரசு நிச்சயமாகச் சொல்லவில்லை. நான் ஒன்றைக் கூட அப்போதே சொன்னேன், எந்த இடத்திலாவது யாராவது உறுப்பினர்களைச் சேர்க்கவில்லை என்று புகார் வருமானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயார் என்று. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் நான் செய்தித் தாளிலே ஒரு முறை படித்தேன். எங்களுடைய ஊரைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் ஒரு இடத்திலே பேசி பத்திரிகையிலே பார்த்தேன். எங்களால் உறுப்பினர்களைச் சேர்க்க முடியவில்லை என்று பேசியிருக்கிறார் என்று. உடனே நான் அவரைக் கூப்பிட்டு எந்த இடத்தில் இப்படிப்பட்ட புகார் வந்தது என்று கேட்டபோது, சொசைட்டியில சொன்னார்கள் என்று சொன்னார். என்ன நடவடிக்கை என்று கேட்டார். நான் தொலைபேசியிலே கூப்பிட்டு அதிகாரியிடம் சொன்னேன். சேர்த்து விட்டார்கள் என்று சொன்னார்கள். ஆகவே எங்கு தவறு நடந்தாலும் உடனடியாக அதை நிவர்த்தி செய்வதற்கு, நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். அதற்கு இந்த அரசு எப்போதும் பின்வாங்கப் போவதில்லை. 27 ஆயிரம் சங்கங்கள் இருக்கின்றன. இதற்கு நிர்வாகிகள் நிறைய பேர் இருக்கிறார்கள். அது உங்களுக்குத் தெரியும்.

தி. மு. க. ஆட்சியின் போது, நான் அதை குறையாகச் சொல்லவில்லை. அப்போது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் ஆங்காங்கே செயலாளர்களாக இருக்கின்றார்கள். அமைச்சரே உத்தரவு போட்டால் கூட அதை மீறி செயல்படுகின்ற தி. மு. க. செயலாளர்கள் இன்னும் சொசைட்டியிலே இருந்து கொண்டு இருக்கின்றார்கள். இன்னும் நான் உதாரணத்திற்குச் சொல்ல





வேண்டுமானால் அண்மையிலே நான் நீலகிரி மாவட்டத்திற்குப் போயிருந்தேன். அங்கே அன்றைக்கு ஒரு ஆர்ப்பாட்டம்; தி.மு.க. ஆர்ப்பாட்டம் நடத்துகிறது. அன்றைக்கு அதிகாரிகளெல்லாம் என்னோடு இருக்கிறார்கள். கலெக்டர் இருக்கிறார்; எஸ்.பி. இருக்கிறார். திடீரென்று ஒருவர் வந்து சொன்னார், உங்களுடைய இலாக்காவைச் சார்ந்த இரண்டு பேர் போராட்டத்திலே கலந்து கொள்ளப் போகிறார்கள் என்று என்னிடத்திலே சொன்னார். வந்து சொன்னவர் கட்சிக்காரர். நான் சொன்னேன், அதை நான் நம்பமாட்டேன் என்று; நிச்சயமாக இருக்காது என்று சொன்னேன். அவர் அடித்துச் சொன்னார், இல்லை நான் இப்போது அவர்களைப் பார்த்தேன், கொடி பிடித்துக் கொண்டு சாலையிலே போய்க் கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னார். நான் நம்பா விட்டாலும், எதற்கும் அதிகாரியைக் கூப்பிட்டு, போய் பாருங்கள் என்று சொன்னேன். பார்த்தவர் உண்மை என்று சொல்லி, அவர்கள் கைது செய்யப்பட்டு, அன்றைக்கு அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் கட்சியிலே தீவிரவாதிகள் பல பேர் இருக்கிறார்கள். வேண்டுமென்றே இந்த அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்று, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னதைப் போல சில இடத்தில் நடந்திருந்தாலும் அதை உடனடியாக அரசினுடைய கவனத்திற்கோ அல்லது மேலதிகாரிகளுடைய கவனத்திற்கோ கொண்டு வந்தால் நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதிலே கட்சி ஆதிக்கம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடந்ததைப்போல எப்படியாவது எல்லா சங்கங்களையும் அண்ணா தி.மு.க. கைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் இல்லை. யார் யார் உறுப்பினராகச் சேர்த்து முறையாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ அவர்கள் தான் அந்தச் சங்கத்திலே தலைவராக வர முடியும். நாங்கள் மெஜாரிட்டியாக ஆட்களைக் கொண்டு வந்து நாமினேஷன் செய்யமாட்டோம். அப்படிப்பட்ட எண்ணமும் இல்லை. முறையாகப் பெண்களும் வரவேண்டும். உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட வேண்டும்.

ஆதி திராவிட மக்களும் 18 சதவீதம் வர வேண்டுமென்பதற்காக இந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கு தடையுத்தரவு இருப்பதற்கான காரணம் உங்களுக்குத் தெரியும். உங்களுடைய தோழமைக் கட்சிகளைச் சார்ந்தவர்கள் தான் டெல்லியிலே போய் உட்கார்ந்துகொண்டு, பெரிய பெரிய வழக்கறிஞர்களை வைத்து, முன்னாள் அமைச்சரே போய் சுப்ரீம் கோர்ட்டிலே உட்கார்ந்து இந்த வழக்கை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் உங்களுக்குத் தோழமை இருக்குமானால் அவர்களுக்குத் தயவுசெய்து எடுத்துச் சொல்லி, அந்த வழக்கை வாபஸ் வாங்கச் சொல்லுங்கள். உடனடியாகத் தேர்தல் நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 7-25

இன்னொன்றையும் அவர்கள் சொன்னார்கள். உறுப்பினர் கள் சேர்க்காமல் இருந்தால் நல்லது என்று. அப்படி அல்ல. சட்டம் சொல்வது, என்றைக்குத் தேர்தல் நடைபெறுகிறதோ அதற்கு முப்பது நாள் முன்னாலே வரை உறுப்பினர்களைச் சேர்க்கலாம் என்று இருக்கிறது. அதைத்தான் இன்றைக்கு இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. புதிதாகக் கூட்டுறவிலே நிறைய உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும். கிட்டத்தட்ட நமக்கு 1¼ கோடி, 1½ கோடி உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அது போதாது. இன்னும் அதிகமாக உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுமென்று விரும்புகிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களோ தம்புசாமி அவர்களோ நிறைய உறுப்பினர்களைக் கொண்டு வந்து சேர்ப்பதை நான் வரவேற்கிறேன். எந்தச் சங்கத்தி லாவது சேர்க்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சி மட்டுமல்ல, அனைத்துக் கட்சியினரும் அதிலே மெம்பர்களாகச் சேர வேண்டுமென்பதைத்தான் நாங்கள் விரும்புகிறோம் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். நானே சென்று திருத்துறைப்பூண்டியிலே இருக்கிற நிலவள வங்கியிலே மெம்பர் சேர வேண்டுமென்பதற்காக ''பாரம்'' கேட்ட பொழுது, என்னிடத்திலே இல்லை என்று சொன்னார்கள். (குறுக்கீடு) நானே போய்க் கேட்டிருக்கிறேன். கொடுக்கப் படவில்லை. இதையெல்லாம் புகாருக்காகச் சொல்லவில்லை. அதேபோன்று பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலே நாங்கள் மெம்பர்களாகச் சேர்வதற்குக்கூட அனுமதிக்கப்பட வில்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தது. ஆதாரம் கேட்பீர்கள். இந்த நிலையை நம்முடைய கூட்டுறவு அமைச்சரவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதத்தை நான் இப் பொழுது எடுத்து வரவில்லை. (குறுக்கீடு) நீங்கள் கேட்பீர்கள், ஆதாரம் இருந்தால் கொடுங்கள் என்று. உங்களுக்கு நான் அனுப்பி வைத்திருக்கிறேன். அமைச்சருக்குக் கடிதம் எழுதி யிருக்கிறேன். இந்தக் கடிதத்தை மீண்டும் உங்களிடத்திலே கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு கடிதத்தை எழுதியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்றார்கள். இதுவரை எனக்குக் கடிதம் வந்து சேரவில்லை. இல்லையானால் எனக்குக் கொடுத்திருக்க லாம்; நாள்தோறும் சந்திக்கிறோம்; விவகாரங்களைப் பேசுகிறோம்; இப்படி ஒன்று நடந்ததாக இதுவரை அவர்கள் சொன்னதில்லை. இந்த விவாதத்திலே மாண்புமிகு பேரவைத்





தலைவரவர்கள் கூப்பிட்ட காரணத்தாலே ஏதாவது சொல்ல வேண்டுமே என்ற நோக்கத்தோடு சொல்வதற்காகவே சொல் கிறாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது இதுவரை, இந்த 3 மாத காலத்தில், எப்பொழுதாவது இப்படி நடை பெற்றது என்று சொல்லவில்லை. அப்படியே இருந்தாலும், எந்தச் சங்கத்திலாவது சேரவேண்டுமென்று விரும்பினால் நிச்சயமாக அவரைச் சேர்த்துக்கொள்வோம். தி.மு.க. மாதிரி அவரைச் சேர்க்காமல் விட்டுவிட மாட்டோம். நாங்கள் என்றைக்கும் அவரை அழைத்துக்கொண்டே இருக்கிறோம். அவர்தான் நம்மிடம் வந்து சேராமல் இருக்கிறார் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

இங்கே காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்கள் முக்கியமான ஒரு பிரச் சினையைச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறைதான் பொது விநியோக முறையில் இன்றைக்கு விற்பனையைச் செய்துகொண் டிருக்கிறது. தமிழ்நாட்டிலே இருக்கிற 22,000 கடைகளில்— நியாயவிலைக் கடைகளில் 21,000 கடைகளை கூட்டுறவுத் துறை ஏற்றிருக்கிறது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத மாபெரும் பெருமையைக் கூட்டுறவுத் துறை பெற்றி ருக்கிறது என்றால் தமிழ்நாடுதான் கூட்டுறவுத் துறை பொது விநியோக முறையை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இரண்டு நாட்களாக மூன்று அமைச்சர்கள் வந்து இங்கே கூட்டுறவுத் துறையின் மூலமாக விநியோகம் எப்படி நடைபெறு கிறது என்பதை இன்றைக்கு மேற்கு வங்க அமைச்சர் வந்து சந்தித்துப் பேசிவிட்டுப் போனார்கள். நேற்றைக்கு மராட்டிய மாநிலத்தினுடைய அமைச்சர்—உணவு அமைச்சர் வந்துவிட்டுப் போனார். அதற்கு முன்னால் கூட்டுறவு அமைச்சர் மேற்கு வங்காளத்திலிருந்து வந்துவிட்டுப் போனார்கள். அந்த அளவிற்கு இன்றைக்குத் தமிழ்நாடு முன்னோடியாக இருந்து கொண்டிருக்கிறது.

நான் ஒன்றை மட்டும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவுத் துறையில் இதுவரை எந்தக் காலத்திலும் எடுக்காத கடுமையான நடவடிக்கைகளை இன்றைக்கு எடுத்து, உணவுப் பொருள் ஒழுங்காகப் போய் சேரவேண்டியதற்கு என்னென்ன குடும்பக் கார்டுகளுக்கு உண்டோ கிட்டத்தட்ட ஒரு மிலிட்டரி ரூல் மாதிரி இன்றைக்குக் கூட்டுறவுத் துறையை நடத்திக்கொண்டிருக்கிறோம். அதையும் மீறி எங்கேயாவது தவறு நடக்குமானால் அவர்களுக்கு எவ்வளவு கடுமையான தண்டனை வழங்க முடியுமோ அதை வழங்கி கொண்டு இருக்கிறோம்.

முன்பெல்லாம் சஸ்பென்ட் செய்வார்கள். மூன்று நாள் கழித்து வேலைக்கு வந்து விடுவார்கள். இப்பொழுது நிலைமை அப்படி அல்ல. அந்தப் பொருளைக் கிடங்கிலேயிருந்து கொண்டு போய்க் கடையிலே சேர்ப்பதற்கே தனியாக ஜூனியர் இன்ஸ்பெக்டர்ஸ் நியமித்திருக்கிறோம். அந்த லாரியிலே வருகின்ற பொழுது மூட்டைகளில் குறைவு ஏற்படுமானால், சம்பந்தப் பட்ட சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அந்த கோடவுனுடைய சூப்பரிண்டென்டையே நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். கடைகளுக்கு வந்து சேர்கின்றபொழுது ஜூனியர் இன்ஸ்பெக்டர் பொறுப்பேற்க வேண்டும். அதற்குப் பிறகு கடையிலே சரியாக நடைபெறவில்லை என்று சொன்னால் 'விழிப்புக் குழு''க்களை அமைத்திருக்கின்றோம்; அதற்கு ஆங்காங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து அந்தக் குழுக்களைப் போட்டிருக்கிறோம். பலபேர் குழுக்களிலே இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களே தவிர, குழுவிலே வந்த பிறகு அதைப் பற்றிக் கவலைப்படாமல் விட்டு விடுகிறார்கள். ஆகவே, விழிப்புக் குழுக்கள் ஆங்காங்கு பணியாற்றுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் இவர்களும் விழிப்போடு இருந்து அந்தக் குழுக்களைக் கவனிக்க வேண்டும். எங்கே பணியாற்ற. வில்லையோ அதை ஆங்காங்கு இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது அங்கேயிருக்கிற டி.எஸ்.ஓ.-க்கோ எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், பொது விநியோக முறை சரியாக நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு காரணமாகக் கூட்டுறவுத் துறை அமைந்திருக்கிறது. ஆகவே, இந்தத் துறையில் அனைவரும் அக்கறையெடுத்துக் கொள்வதை நான் வரவேற்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு இந்தக் கூட்டுறவு இயக்கம் பலப்படுத்தப்பட வேண்டும்; அனைவரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்ற வேண்டுமென்று கோருகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 7-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், விவசாயிகளுடைய பயிர்க் கடன்களைக் கொடுப்பவர்களுக்கு, ஊக்கத் தொகை — 31—9—1992-க்குள் பணம் கட்டினால்— ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். விவசாயிகள் இன்னும் பாதி பேருக்குமேல்



பணம் கட்ட முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் காலக்கெடுவை 31—12—1992 வரை அரசு நீட்டிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு, அவர்கள் 3 மாத காலம் அவகாசம் கொடுத்து விட்டார்கள். அது இந்த 30-ஆம் தேதி முடிவடைய இருக்கிறது. இருக்கிற இன்னும் கட்டாத விவசாயிகள் உடனடியாக அந்தக் கடனைச் செலுத்த வேண்டும். எவ்வளவு நாட்கள் தள்ளிக் கொடுத்தாலும், கட்டாதவர்கள் கட்டப் போவதில்லை. அரசாங்கம் ஏற்கெனவே 40 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கி இருக்கிறது. அதிலே இன்னும் கொஞ்சம் பணம் செலவழிக்கப் படாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்வது, இதுவரை கடன் கட்டாத விவசாயிகள் அசலைக் கட்டி விடுவார்களானால், வட்டியையும், அபராத வட்டியையும் அரசே ஏற்றுக் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மான்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் ....

*மான்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க 3 மாதத்திற்கு முன்னாலே அது முடிய வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால் எல்லோருடைய வேண்டுகோளையும் ஏற்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 3 மாதம் தள்ளி 30—9—1992-உடன் முடியுமென்று சொன்னார்கள். இதற்கு மேலும் நீட்டினால், எந்த வகையிலும் நாங்கள் உதவி செய்யப்போவதில்லை என்று 'நாபார்டி' டமிருந்து 10 நாட்களுக்கு முன்னால் ஓர் அறிவிப்பு வந்திருக்கிறது. ஆகவே, 30-ஆம் தேதிக்குப் பிறகு எக்காரணத்தை முன்னிட்டும் நீட்டிக்கக் கூடாது; நீட்டினால், 'நாபார்டு'-னுடைய உதவிகள் கிடைக்கா; இனிமேல் கொடுக்கவே மாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். ஆகவே, அதற்குப் பிறகு நம்மால் வாங்க முடியாது. 30-ஆம் தேதி வரையிலும் எவ்வளவு நீட்டினாலும் கொடுப்பவர்கள் தான் கொடுப்பார்கள். கொடுக்காதவர்கள் கொடுக்கமாட்டார்கள். ஆகவே, இவ்வளவு நீட்டினது போதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடனைக் கொடுக்கிறபோது, வட்டி, அபராத வட்டி, அசல் இவை முழுவதையும் சேர்த்து வங்கியில் கட்டி

விட்ட பிறகு, ஒன்றியத்தில் வாங்கிக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. இதனால் இவ்வளவு தொகையையும் சேர்த்து கட்டுவது என்பது, விவசாயிகளால் முடியாது. ஆகவே வட்டி அபராத வட்டியைக் கழித்துக் கொண்டு, அசலை மட்டும் வாங்குவதற்கு அமைச்சர் அவர்கள் அனுமதித்தால், இந்தக் கடன் விரைவில் கொடுப்பதற்கு அது உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நாம் கொடுத்திருக்கிற அறிவிப்பின்படி, இப்போது நடந்து கொண்டிருப்பது, பணத்தை பி.டி.ஓ. அலுவலகத்திலே கமிஷனரிடத்திலே கொடுத்து வருகிறார்கள். அங்கே இருக்கிற விவசாயிகள் அசலை மட்டும் கட்டினால் போதும். வட்டிக்கும், அபராத வட்டிக்கும் உண்டான 'செக்' அங்கே இருக்கிற பி.டி.ஓ. , ஈ.ஓ.சி. மூலமாக அது அனுப்பப்பட்டு விடும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு அனுப்பப்பட்டு விடும். இதிலே வேறு எங்காவது வித்தியாசமாக இருந்தால் உடனடியாக அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து அசலை மட்டும் விவசாயிகள் கட்டினால் போதும் ; வட்டியை அரசாங்கம் கட்டிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா.சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அசலை மட்டும் கட்டினால் வட்டியையும் அபராத வட்டியையும் அரசாங்கம் ஆணையாளர்களுக்குக் கொடுத்து விடுகிறார்கள் என்பது உண்மை. அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட, இப்போது வட்டியைக்கூட பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் உள்ளவர்கள்கூட, அதை ஒரேயடியாகக் கட்ட இயலாத நிலையில், கடன் வாங்கிக் கட்ட வேண்டிய நிலையிலே இருக்கிற காரணத்தினால், இன்னும் கட்ட முடியாதவர்களுக்கு முழுமையாகக் கடனைக் கொடுக்க முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. 69 கோடி ரூபாயை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்திற்காகக் கொடுத்திருக்கிறார்கள். இதை முழுவதையும் விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளும் வண்ணம், கொஞ்சம் கால அவகாசம் கொடுத்து, அந்தச் சந்தர்ப்பத்தை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே கூட,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, இதை நிதியமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லி விட்டார்கள். நிதியமைச்சர் சொன்ன பிறகு, திரும்பத் திரும்ப அதையே கேட்பது சரியல்ல.



மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3க்கு திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (சட்ட (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமுன்வடிவு எண். 52/1992) நிறைவேற்றப் மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 52/1992) நிறைவேற்றப் பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

[1992 செப்டம்பர் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 7-35

## (ஓ) வேளாண்மைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 53/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கோருவார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 53/1992)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த சட்டமுன்வடிவும் (1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 57/1992) இதை ஒட்டியதாகவே உள்ளது. இரண்டும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தருடைய பதவிக் காலத்தையும், அவர்கள் பதவிக்குத் தேர்வு செய்ய வேண்டிய முறையையும் பற்றியது. எனவே, இரண்டும் சேர்த்தே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பேசுகிற உறுப்பினர்கள் இரண்டு சட்ட முன்வடிவுகள் மீதும் தங்களுடைய கருத்துக்களைக் கூறலாம். திரு. எச். எம். ராஜு.

---

@ 21—9—1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1992 செப்டம்பர் 25]

*திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/1992) மற்றும் 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1992) ஆகியவற்றில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப் பளித்த தங்களுக்கு நன்றியைக் கூறிக்கொண்டு, ஒரு சில கருத்துக் களைக் கூற முன் வருகின்றேன்.

நம் மாநிலத்தில் இரண்டு வகையான பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. தொழில் கல்வியை மையமாகக் கொண்ட பல் கலைக் கழகங்களான அண்ணா பல்கலைக் கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் மற்றும் வேளாண்மைப் பல்கலைக் கழகம் என்றும் ஏனைய பல்கலைக் கழகங்கள் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம் இந்த இரண்டு விதமான பல்கலைக் கழகங்களுக்கும் பல்வேறு வேறுபாடுகள் உள்ளன. வேளாண்மைக் பல்கலைக் கழகத்தை எடுத்துக் கொண்டால் இந்தப் பல்கலைக் கழகம் பல்வகை ஆராய்ச்சிகளில், முக்கியமாக நாட்டில் விளையும் பலவகை விவசாய மற்றும் உணவுப் பொருள்களைத் தீவிரமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருக் கிறார்கள். மேற்கண்ட ஆராய்ச்சிகளின் மூலமாகப் பல நன்மை யான பலன்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். இம்மாதிரி பல நல்ல திட்டங்கள் தீட்டுவதற்கும், நல்ல பல ஆராய்ச்சிகளைச் செய்து பலனைப் பெறும் வகையில், இந்தப் பல்கலைக் கழக துணை வேந்தர் அவர்களின் பதவிக் காலத்தினை 5 ஆண்டுகளிலிருந்து 3 ஆண்டுகளாகக் குறைக்காமல் அவர் பதவி காலம் தற்போது இருக்கும் 5 ஆண்டுகளாக இருப்ப தில் தவறு ஒன்றும் இல்லை என்ற என்னுடைய தாழ்மையான கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு துணை வேந்தருடைய பதவிக் காலம் 5 ஆண்டுகளாக இருந்தால், அந்த 5 ஆண்டுகளில் பல நல்ல திட்டங்கள், பல நல்ல ஆராய்ச்சிகள், பல நல்ல சாதனைகளைச் செய்து முடிக்க உதவியாக இருக்கும். இந்தப் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாக இருந்தால் மேற்படி ஆராய்ச்சிகள் தரம் குறைய சாத்தியமான நிலை ஏற்படும். நல்ல திட்டங்கள் முடிவடையாத நிலையில் இருக்கும். நல்ல பல சாதனைகள் நிறைவேறாமல், தேங்கிவிடக் கூடிய நிலை ஏற்படலாம். ஆகவே, இந்த சட்ட முன்வடிவின் மூலம் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அவர்களின் பதவிக்காலத்தை குறைக்க வேண்டாம் என்று கேட்டு, அடுத்த சட்டமுன்வடிவு எண் 57/1992-க் குறித்தும் ஓரிரண்டுக் கருத்துக்களைக் கூற விழை கிறேன்.

இந்தச் சட்டமானது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. அரசால் ஏற்படுத்தப்பட்ட குழுவின் முதல் 'பேனல்' பரிந்துரை செய்யும் 3 பேர்களில், வேந்தர் அவர்களுக்கு விருப்பம் இல்லையென்றால், அதன் பேரில் இரண்டாவது பேனல் தேர்வுக்கு வரும்போது, அவர்கள், குழு பரிந்துரைக்கும் 3 பேர்களும் ஒருவரைக் கட்டாயமாகத் தேர்ந்தெடுத்து ஆக வேண்டும் என்றிருக்கிறது. இது ஒரு Mandatory Section ஆகும். இதை வரவேற்று, இந்தச் சந்தர்ப்பத்தை எனக்குக் கொடுத்த தங்களுக்கு நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா.சா. பழனிசாமி.

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தருடைய பதவிக் காலத்தைத் தற்போது 5 ஆண்டுகளாக இருப்பதை, மூன்று ஆண்டுகளாகக் குறைத்திடவும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தரைத் தேர்வு செய்கிற அந்தக் குழுவிலே 3 பேரைத் தேர்வு செய்கின்றபோது அந்த மூன்று பேரையும் வேந்த்ர் அவர்கள் விருப்பப்படாவிடில் இன்னொரு மூன்று பேரை வைத்து அதிலே தேர்ந்து எடுக்கின்ற அந்தத் திருத்தத்தையும் நான் இங்கே முழுமையாக வரவேற்கின்றேன்.

பிற்பகல் 7-40

இந்த வேளாண்மை பல்கலைக்கழகம் பழமையும் பெருமையும் வாய்ந்தது. அப்படிப்பட்ட பல்கலைக்கழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது விரும்பத்தகாத ஒரு பெயர் மாற்றத்தைச் செய்தும், வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தருடைய பதவிக் காலத்தை, அந்தத் துணை வேந்தர் அன்றைய முதல்வர் கருணாநிதி அவர்களுடைய மருமகனுக்கு என்று உருவாக்கினார் என்கிற காரணத்திற்காகவும் அதுவரை மூன்று ஆண்டுகளாக இருந்த பதவி காலத்தை இரண்டு ஆண்டுகள் நீட்டித்து 5 ஆண்டுகளாகச் செய்து அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய பெருமையைக் குறைத்து இருக்கிறார்கள். அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு தொழில் மேதை ஜி. டி. நாயுடு பெயரை யாரும் எதிர்பார்க்காத சூழ்நிலையில் அங்கே திடீரென அறிவித்து அந்த வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே மிகப் பெரிய போராட்டங்களை எல்லாம் அமைதியின்மை எல்லாம் உருவாக்கினார்கள். அந்தத்தொழில்மேதையினுடைய நட்புகளுககுக்கூட அங்கே களங்கத்தை உருவாக்கினார்கள். அப்படிப்பட்ட அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே மற்றப் பல்கலைக் கழகங்களைப் போல் துணை வேந்தர்களுடைய பதவிக்காலத்தை மூன்று ஆண்டுகளாக கொண்டு வருவதிலே எந்தவிதமான தவறும் இல்லை இன்றைய வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இருக்கின்ற நிலை. இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆசியோடு, இந்தச் சட்டமன்றத்தினுடைய உறுப்பினர் என்கின்ற முறையிலே, அதனுடைய நிலைக் குழுவின்



உறுப்பினர் என்கின்ற முறையிலும், நான் இங்கே பல தவறுகளைக் காண்கின்ற சந்தர்ப்பம் இருக்கின்றது. வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர் அவர்கள், அந்தத் துணை வேந்தர் அவர்களுடைய பதவிக் காலம் அதிகமாக இருக்கின்றபோது அந்த துணை வேந்தர் பொதுவாக பல்கலைக் கழகத்திலே சுய ஆதிக்கம் பெற்றவர்களாக இருக்கின்ற காரணத்தினாலே, அதுவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 34 கோடி ரூபாய் அளவுக்கு அவர்கள் பட்ஜெட் போட்டு செலவிடுகின்ற பெரிய ஒரு சமஸ்தானத்தை போல இருக்கின்ற அந்தப் பல்கலைக் கழகத்திலே, பல்கலைக் கழக துணை வேந்தர் அவர்கள், தன்னுடைய பதவியைப் பயன்படுத்தி பலரையும் பழிவாங்குகின்ற சந்தர்ப்பங்கள் எல்லாம் அங்கே ஏற்பட்டிருக்கின்றன. அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மூன்று கல்லூரிகள் இருக்கின்றன. 49-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்கள் இருக்கின்றன. எனவே, அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருப்பவர்கள், அங்கே வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஜாதி பிரச்சினைகளை எல்லாம் ஏற்படுத்தி தமக்கு விரும்பாதவர்களை வேறு இடத்திற்கு மாற்றுகின்ற, மாற்றி அவர்களை தண்டிக்கின்ற வேலைகள் எல்லாம் அங்கே நடைபெறுகின்றன. ஒரு பேராசிரியர் அவர்கள் துணை வேந்தர் அவர்களுக்கு ஒத்துழைக்கவில்லை என்றால், அவர்களை தண்ணீர் இல்லாத காட்டுக்கு மாற்றுகின்ற சந்தர்ப்பங்கள் அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே இருக்கின்றன. மற்றத் துறைகளிலும் மாற்றுகின்றனர். ஏதோ ஒரு நகருக்குத்தான் மாற்ற முடியும்.

பிற்பகல் 7–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஐந்து ஆண்டுகளை மூன்று ஆண்டுகளாக ஆக்குவதும், அந்தப் பேனல் இல்லையென்றால், இன்னொரு பேனல் போடுவதும் மட்டும்தான் இதில் வரும். நீங்கள் அந்தப் பல்கலைக் கழகத்தில் உறுப்பினராக இருக்கின்றீர்கள். இந்தப் பேரவையின் சார்பில், இந்த விவரங்கள் எல்லாம் அங்கே பார்த்துக் கொள்ளுங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி: வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே இந்த துணை வேந்தர்களுடைய பதவிக் காலம் 5 ஆண்டுகள் என்று இருப்பதை 3 ஆண்டுகளாக குறைப்பதை வரவேற்று பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தரை தேர்ந்தெடுக்கின்ற அந்தப் பேனலிலே 3 பேரை வேந்தர் அவர்கள் விரும்பவில்லையென்றால் இன்னும் ஒரு 3 பேரை அவர்கள் தேர்ந்தெடுக்கின்ற அந்த அதிகாரத்தையும் கொண்டு வந்த அந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று அமைகின்றேன், வணக்கம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 8/71) 11-வது பிரிவின் 3-வது உட்பிரிவில் துணை வேந்தர் ஆனவர் தாம் எந்தத் தேதியில் பதவியை மேற்கொள்கிறாரோ அந்தத் தேதியிலிருந்து 5 ஆண்டு காலத்திற்குப் பதவி வகிப்பார் என வகை செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தின் பிற பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரின் பதவிக் கால அளவோ மூன்று ஆண்டுகள் மட்டுமேயாம். இந்த மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகத் துணை வேந்தர்களுடைய பதவிக் கால அளவில் ஒரு சீர் அமைப்பு வேண்டும் என்னும் பொருட்டே இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். எம். ராஜு அவர்கள் பேசுகின்றபோது வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர்கள் பல்வேறு ஆராய்ச்சிகளிலே ஈடுபட வேண்டும் பல்வேறு புதிய ரகங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். எனவே, அவர்களுடைய பதவிக் காலம் 5 ஆண்டுகள் வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி ஒரு கருத்து இந்தியத் துணைக் கண்டத்திலே எங்கும் நிலவுவதாக எனக்குத் தெரியவில்லை, ஏனென்று சொன்னால் வல்லுநர்கள் தங்களுடைய பணிகளைச்சிறப்பாக ஆற்றுகின்றார்கள். அது மட்டுமல்லாமல் இந்தியாவிலுள்ள அனைத்து வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலும் ஆந்திர மாநிலம், உத்திரபிரதேசம், பஞ்சாப், ஹரியானா, குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா, பீகார் ஆகிய மாநிலங்களிலுள்ள அனைத்து அரசு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர்கள் பதவிக் காலம் 3 ஆண்டுகளே ஆகும் என்று குறிப்பிட்டு, வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய இரண்டு திருத்தச் சட்டமுன்வடிவுகளையும் ஏற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போம் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.



பிரிவு 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போம் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

பிற்பகல் 7-45

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/1992) நிறைவேற்றப் பெற வேண்டும் "

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

டி.பி 53-287—96

1992 செப்டம்பர் 25]

(ஔ) வேளாண் பல்கலைக் கழக (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1992). மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1992) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2. சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

*22—9—1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1992 செப்டம்பர் 25] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. பஹாமாவில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பார்லியமெண்டரி மாநாட்டில் கலந்துகொள்ளச் செல்லும் பேரவைத் தலைவருக்குப் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் கூட்டம் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் இந்த அவையை ஒத்தி வைக்கலாம் என்கின்ற தீர்மானத்தை முன் மொழிவதற்கு முன்னால் ஒரு கருத்தை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் பேரவையினுடைய அவைத் தலைவராக இயங்குகின்ற தாங்கள் பஹாமா-விலே நடைபெறுகின்ற காமன்வெல்த் பார்லிமெண்டரி மகாநாட்டிலே சென்று கலந்து கொள்ள இருக்கிறீர்கள் என்பதை அறிவோம். ஆகவே. தாங்கள் அந்த மகாநாட்டிலே பங்குகொள்வது இந்த நாட்டிற்கும் இந்த மாநிலத்திற்கும் இந்தப் பேரவைக்கும் பெருமை சேர்க்கக் கூடிய ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி.)

தாங்கள் நீண்ட பல நாட்களாக இந்த சட்டமன்றப் பேரவையிலே இடம் பெற்றிருந்து சிறப்பான பணிகளைச் செம்மையாக முடித்ததோடு மட்டுமல்லாமல் நாடாளுமன்றத்திலே இடம் பெற்று இப்பணிகள் பல ஆற்றி நாடாளுமன்ற நடப்புகள் ஆகியவற்றை எல்லாம் தெள்ளத் தெளிவுற அறிந்திருக்கின்ற காரணத்தினாலேயே அந்த காமன்வெல்த் பார்லிமெண்டரி மகாநாட்டிலே கலந்து கொள்வதன் மூலம் தாங்கள் மூலமாக எடுத்து வைக்கப்படுகின்ற கருத்துக்கள் மிகச் சிறப்பாக உள்ளவையாக அமையும் என்ற நம்பிக்கையும் அவைக்கு இருக்கிறது. எனவே தான் 29 ஆம் தேதி இங்கிருந்து புறப்பட்டு அந்த மகாநாட்டிலே கலந்துகொள்ளச் செல்ல இருக்கின்றீர்கள். எங்களுக்கெல்லாம் பெரு மகிழ்ச்சிக்குரிய ஒன்று இது. ஆகவே தங்களுடைய பயணம் மிகச் சிறப்பான முறையில் அமையவும், அந்த மகாநாட்டிலே கலந்து கொள்வதன் மூலமாக இந்த மாநிலம் பெருமை பெறவும், இந்த நாடு புகழ் பெறவும் பாராளுமன்றத்தினுடைய ஜனநாயக நெறி முறைகள் சிறப்பாக துலங்கவும் வழிவகை வகுக்கும் என்ற முறையில் இந்தப் பேரவையின் உறுப்பினர்கள் அனைவரின் சார்பாகவும் எங்களுடைய உளமார்ந்த வாழ்த்துக்கள் அத்தனையும் தங்களுக்குத் தெரிவித்து, தங்களுடைய பயணம் சிறப்பாக அமைய வேண்டும், தாங்கள் நல்லபடியாகத் திரும்பி வந்து இந்த ஜனநாயக நெறிமுறைக்கு உட்பட்டிருக்கின்ற பேரவையை என்றும் புகழ்பெறத்தக்க அளவு தொடர்ந்து நடத்த வேண்டும். அதற்கு எங்களுடைய முழு ஒத்துழைப்பும் தங்களுக்கு என்றும் உண்டு என்பதைக் கூறி தங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





எடுத்துரைத்தார்கள். நம் நாட்டினுடைய சார்பிலே பஹாமாவில் நடைபெறுகின்ற காமன்வெல்த் பார்லிமெண்டரி மகாநாட்டிலே கலந்துகொள்ளச் செல்கின்ற தங்களுக்கு எதிர்க்கட்சியின் சார்பில் எங்களுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்களுடைய பயணம் சிறப்பான முறையில் அமையவும், வெற்றிகரமாக நீங்கள் திரும்ப வேண்டும் என்றும் நான் நல்வாழ்த்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நன்றி. வணக்கம்.

பிற்பகல் 7-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் சார்பில் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பகாமாஸ் நாட்டின் தலைநகர் நாசோரில் வருகிற 6 ஆம் தேதியிலிருந்து 15 ஆம் தேதிவரை நடைபெற இருக்கின்ற காமன்வெல்த் பாராளுமன்ற சங்கத்தின் மாநாட்டில் நான் கலந்துகொள்ள இருக்கும் செய்தியைத் தெரிவித்து, உங்கள் அனைவரின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கும் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வருகிற 29 ஆம் தேதி மாலையில் புறப்பட்டு, போகிற வழியில் பாரிஸ், லண்டன் ஆகிய நகரங்களுக்குச் சென்று, பகாமாஸ் நாட்டில் நடைபெறுகின்ற அந்த மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு, அருகிலே இருக்கிற அமெரிக்க நாட்டின் நியூயார்க், வாஷிங்டன் முதலிய நகரங்களுக்குச் சென்று, திரும்பி வருகிறபோது டோக்கியோ வழியாக சிங்கப்பூர் வந்து, உங்களை எல்லாம் சந்திக்கத் திரும்ப வர இருக்கிறேன். இவ்வளவுதான் அந்தச்சுற்றுப்பயண ஏற்பாடு என்பது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சுற்றுப் பயணத்திலே கலந்து கொண்டு, பாராளுமன்ற சங்கத்தின் மாநாட்டிலே கலந்துகொள்வதை நானாகச் சென்று கலந்து கொள்கிறேன் என்று நான் கருதவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் அனைவருடைய பிரதிநிதியாக, உங்கள் அனைவருடைய நல்லெண்ணத்தையும், கருத்துக்களையும் எடுத்துச் செல்கிற ஒரு பிரதிநிதியாகக் கலந்துகொள்கிறேன் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, இதைப் போன்ற வெளிநாடுகளுக்குச் செல்கிற பழக்கம் என்பதை இது வரையிலும் நான் கொண்டதில்லை. நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காலத்தில் 50, 60 சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்கிற வாய்ப்பைப் பெற்றோம். அப்போது கூட நான் அதில் கலந்துகொள்ள

வில்லை. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது கட்சியின்
நாடாளுமன்ற குழுத் தலைவராக இருந்த நேரத்தில் இரண்டு
முறை வெளிநாடு போவதற்குரிய அழைப்பு வந்தது. அப்
பொழுதும் கூட நான் செல்லவில்லையென்று கூறிவிட்டு ஏனைய
இரண்டு உறுப்பினர்களை அனுப்புகிற வாய்ப்பைத்தான் அப்
போதும் பெற்றேன். இப்பொழுதும் இந்த அழைப்பு வந்த
நேரத்தில் உங்களில் யாரையாவது ஒருவரை அனுப்ப வேண்டு
மென்றுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்களிடத்திலே இதைத் தெரிவித்த போது, இல்லை,
இல்லை, இந்த முறை நீங்கள் தான் சென்று வரவேண்டுமென்று
அவர்கள் அன்பொழுக, ஆசி தெரிவித்து, அவர்கள் ''சென்று வர
வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க உங்களில்
யாருக்கேனும் ஒருவருக்கு கிடைக்க இருந்த வாய்ப்பை மாண்புமிகு
புரட்சித் தலைவி அவர்களுடைய அன்புக் கட்டளையால் நான்
எடுத்துக் கொண்டு உங்கள் சார்பில் சென்று வருகிறேன். அத்
தகைய வாழ்த்துத் தெரிவித்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்
வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய
இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

பாராளுமன்ற சங்க மாநாட்டிலே கலந்துகொள்வதோடு நான்
தெரிவித்த ஏனைய நாடுகளின் தலைநகரங்களில் இருக்கிற
பாராளுமன்ற அமைப்பு முறைகளையும், அங்கே நடைபெற்ற
சில நடைமுறைகளையும், குறிப்பாக ஒவ்வொரு பாராளுமன்றத்
திலும் அந்தந்த நாட்டின் நிதிநிலை அறிக்கையின் மீது, பட்ஜெட்
டின் மீது பாராளுமன்ற குழுக்கள் சில அமைந்து, அவை எப்படி
மிகத் திண்மையாகவும், திட்பமாகவும் தன்னுடைய மேலாண்
மையை செலுத்துகின்றன என்பதைத் தெரிந்து அது போன்று
சில பல நடைமுறைகளை நம்முடைய சட்டமன்றத்திலேயும்
செயல்படுத்த முடியுமா என்பதை அறிந்துவரத் திட்டமிட்டு
இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல, அந்தப் பாராளுமன்ற முறையில், நடைமுறை
யில் இருக்கக் கூடிய சில பல வரவேற்கக் கூடிய புதுமைகளையும்
அறிந்து வந்து அதை நடைமுறையில் நாமும் செயல்படுத்தலாம்
என்பதையும், உங்களோடு கலந்தாலோசித்து முடிவு எடுக்கலாம்
என்றும் இருக்கிறேன். இது போன்ற பல பணிகளைச் செய்
வதற்காக வருகிற 29 ஆம் தேதி உங்கள் அனைவருடைய நல்லு
ணர்வுகளோடும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாசிகளையும் பெற்றுச்
சென்று வருகிறேன்.



பிற்பகல் 7-55

அங்கே முடிந்த அளவுக்கு நான் சொன்ன வகையில் சிலவற்றைக்
கண்டு வருகிறேன். கண்டவற்றை உங்களுக்காகக் கொண்டு
வருகிறேன் என்று தெரிவித்து, அந்த வகையில் எனக்கு உங்கள்
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தமைக்காக மீண்டும் பேரவை
முன்னவர் அவர்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்
கும், இந்த வாழ்த்தொலிகளைத் தெரிவித்திருக்கிற மாண்புமிகு
அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும்
என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து அமை
கிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு
பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு
உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் கூர்ந்து கவனிப்பதைப் பார்த்
தால் தம்மையும் அவருடன் அழைத்துக் கொண்டு போவாரோ
என்று எண்ணுகின்ற மாதிரி இருக்கிறது. மத்திய அரசு அன்னியச்
செலாவணி நெருக்கடியில் அது நடக்காது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதோடு, விரைவில்
நம்முடைய தமிழக பாராளுமன்றச் சங்கக் கிளையின் மூலமாக
மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரை இதைப் போன்ற சுற்றுப்
பயணங்களுக்கு அனுப்பலாமென்ற ஒரு குறிப்பு மாண்புமிகு நிதி
அமைச்சர் அவர்களின் மேலான அனுமதிக்காக அனுப்பப்படு
கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக்கொள்
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடத்திலே ஏற்
கனவே தெரிவித்திருக்கிறேன். ஒரு குழு ஐரோப்பா கண்டத்
திற்குப் போய் வரலாம். ஒரு குழு ஜப்பான் பகுதிக்குப் போய்
விட்டு வரலாம். அதற்கான விவரங்களை எல்லாம்
சேகரிக்கும்படியாகக் கேட்டிருக்கிறேன் என்ற மகிழ்ச்சி
கரமான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசை
யைத் தட்டும் ஒலி).

## <u>8. அரசினர் தீர்மானம்.</u>

### <u>மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் பேரவையை ஒத்தி வைத்தல்.</u>

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

''பேரவையின் 25(1)-வது விதியின்படி, பேரவையை
மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கலாம்''
என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1992 செப்டம்பர் 2

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய (25—9—1992) அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 7–57 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

92 தமிழ்நாடு 1990ஆம் ஆண்டு நாட்டு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளை 16—7—1991 முதல் தள்ளுபடி செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 27—6—1991–ஆம் நாளிட்ட 174 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

93 தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10—6—1992 ஆம் நாளிட்ட 213 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]



1992 செப்டம்பர் 25]

94. சென்னை, திருவாளர்கள் மெட்ராஸ் பெட்ரோ செம் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை 1—4—1991 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளி வைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—12—1991 ஆம் நாளிட்ட 495 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

95. கோவை, திருவாளர்கள் பவானி நூற்பாலையினால் செலுத்தப்பட வேண்டிய வரியை மூன்றாண்டு காலத்திற்கு தள்ளி வைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 19—12—1991 ஆம் நாளிட்ட 14 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

96. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

97. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

98. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

99. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

[1992 செப்டம்பர் 25

100. தமிழ்நாடு கைத்தறிகள் வளர்ச்சிக் கழகத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான இருபத்தாறாவது ஆண்டறிக்கை. [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

101. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான இருபத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

102. தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் 1989–90 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

32. மனுக்கள் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை, 1992–93.

33. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

34. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

35. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

36. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

37. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

38. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் பதினோறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

39. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பன்னிரெண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 (வரை).



1992 செப்டம்பர் 25]

40. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதிமூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

41. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

42. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினைந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

43. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினாறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

44. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினேழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

45. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினெட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

46. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பத்தொன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

47. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (இருபதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

48. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (இருபத்தொன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

49. பேரவை விதிகள் குழுவின் முதல் அறிக்கை, 1992–93.

50. மேற்காணப்பெறும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள எ[illegible]து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 27—8—1969–ஆம்

தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப் பெற்றது) :—

31-3-1992 அன்று உள்ளவாறு அளித்துள்ளார்கள்.

1. டாக்டர் சு. மணிமேகலை.
2. திரு. சி. ஞானசேகரன்.
3. திரு. எ. சம்பத்.
4. திரு. செ. து. வரதராஜன்.
5. திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.
6. திரு. கே. ஏ. மனோகரன்.
7. டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

164978
சென்னை-600 008
D

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Mad
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirum Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egn Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1
11 S. M. Jeganhatham Book House, 35, Nanthi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore 1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.